# சங்ககால அரசர்வரிசை

## இரண்டாம் பகுதி

★

கழக வெளியீடு

கழக வெளியீடு: எஙிகூ

# சங்ககால அரசர் வரிசை

## தொகுதி - உ

MADURAI UNIVERSITY LIBRARY
25 NOV 1969
MADURAI.

ஆசிரியர்:

புலவர், கா. கோவிந்தன், எம். ஏ.

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை - 1.

First Edition: Jan., 1955.

# SANGA KALA ARASAR VARISAI

## Vol. II.

[All Rights Reserved]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS - 1.

*Head Office*:

24, EAST CAR STREET, THIRUNELVELI

42901
V21:21:C
K1·2;3

Appar Achakam, 2/140, Broadway, Madras - 1.—C. 500.

# பதிப்புரை

பண்டைக் காலத்தே நம் தமிழகத்தை அரசியல்முறை பிறழாது ஆண்ட முடியுடை வேந்தர்கள் மூவரும், வள்ளல்களும், குறுநில மன்னர்களும் பற்பலராவர்.

பழந்தமிழக மாண்பை நம் தமிழ்மக்கள் அகக்கண் முன் நிறுவியுணர்த்த எண்ணி, எம்மால் **சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை**யாக க முதல் **கசு** வரை தனித்தனி நூலாகவும், அவைகளைத் தொகுத்த தொகை நூலாகவும் ஆக்கி வெளியிட்டுள்ளோம்.

அம்முறையைப் பின்பற்றிச் சங்ககால அரசர்களின் வரலாற்றை உணர்த்த எண்ணிச் **சங்ககால அரசர் வரிசை**யென **க** முதல் **சு** வரை தனித்தனி நூலாக ஆக்கி வெளிவந்துள்ளன.

அவற்றுள் **சேர, சோழ, பாண்டியர்** தம் வரலாறு கூறும் பகுதிகள் மூன்றையும் ஒரு தொகுதியாகவும், **வள்ளல்கள், அதுதை முதலிய நாற்பத்துநால்வர், திரையன் முதலிய இருபத்தொன்பது பேர்** அடங்கிய மூன்று தனித்தனி நூல்களையும் ஒரு தொகுதியாகவும் தொகுத்து, **சங்ககால அரசர் வரிசை தொகுதி க, சங்ககால அரசர் வரிசை தொகுதி உ** என்னும் பெயர் அமைத்து அழகிய கட்டடஞ் செய்து வெளியிட்டுள்ளோம். அவற்றுள் இது இரண்டாம் தொகுதியாகும்.

சங்கத் தமிழ்ப்புலவர் வரிசை நூல்களை வாங்கிக் கற்று அருஞ்சுவை யுணர்ந்த நந்தமிழ் மக்கள், இவ்விரு தொகுதிகளையும் வாங்கிக் கற்று நற்பேறு பெறுவார்களென நம்புகின்றோம்.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI.

# உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| க. | வள்ளல்கள் | 1—100 |
| உ. | அகுதை முதலிய சச பேர்கள் | 1—119 |
| ங. | திரையன் முதலிய உகூ பேர்கள் | 1—128 |

கழக வெளியீடு : எடுக

சங்ககால அரசர் வரிசை - ச.

# வள்ளல்கள்

ஆசிரியர்

புலவர் கா கோவிந்தன் எம் ஏ

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.
திருநெல்வேலி-6 சென்னை-1.

1961

காங்கேய முதலியார் கோவிந்தன் (1917)

© THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.

Ed 1 Dec 1954
Reprint Mar 1961

V211,1:67 "C
K1

'விநோதன்' அச்சகம், 33, ஜோன்ஸ் தெரு, சென்னை-1—C. 800

# பதிப்புரை

'உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன் றீவார்மேல் நிற்கும் புகழ்' என்பது வள்ளுவர் காட்டும் உண்மை. இவ்வாறு இல்லையென் றிரப்பார்க்கும், இரவாது வாட்டங்கண்டு ஏழைகட்கும் ஈந்து புகழ்பெற்றோர் நம் தமிழக வள்ளல்கள் ஆவர்.

பூந்தலை அருப் புனைகொடி முல்லையின் வாட்டங்கண்டு பொறாத ஈரநெஞ்சுடையான் வள்ளல் பாரியாவன்; இவனை யொத்த நன்னெஞ்சப் பாங்குகொண்ட ஓரி, காரி, பேகன் போன்றவர் ஏனைய வள்ளல்களாவர்.

இவ்வள்ளல்கள் எழுவர் எனப் பண்டையோர் வகுத் தமைத்தனர். அவர்கட்குப்பின் வாழ்ந்த குமணன், ஓய் மானாட்டு நல்லியக்கோடன் ஆகிய இருவரையும் ஏனைய எழுவரோடு சேர்த்து வள்ளல் ஒன்பதின்மராக ஆக்கித் திரு. புலவர் கா. கோவிந்தன் அவர்கள் இந்நூலை உதவி யுள்ளார்கள்.

இதனைச் சங்ககால அரசியல் வரிசையில் நான்காவ தாக நன்முறையில் செப்பஞ்செய்து வெளியிட்டுள்ளோம்.

வளமைசெறிந்த இந்நூல், நம் தமிழ் மாந்தர்கள் கையகத்தும் நாவகத்தும் சென்றேறிப் பரவி நாட்டுக்கு நலம்பல பயக்குமென நம்புகிறோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

MADURAI UNIVERSITY LIBRARY

# உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| | தோற்றுவாய் | | 1 |
| க. | அஞ்சி | ... | 5 |
| உ. | ஆய் | ... | 18 |
| ௩. | ஓரி | ... | 22 |
| ச. | காரி | ... | 36 |
| ரு. | நள்ளி | ... | 46 |
| சு. | பாரி | ... | 52 |
| எ. | பேகன் | ... | 74 |
| அ. | ஓய்மான் நல்லியக்கோடன் | ... | 86 |
| கூ. | குமணன் | ... | 92 |

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI.

# வள்ளல்கள்

## தோற்றுவாய்

"பொப்பண்ண காங்கெயர் கோன்அளித்த
சோற்றுச் செருக்கல்லவோ தமிழ்மூன்று உரைசொல்வித்ததே."
(சிலப், அடி, வரலாறு)

என்று கூறுகிறார் புலவர் ஒருவர்: ஒல்காப் புகழ்கொண்ட தொல்காப்பியம் உடையது எங்கள் தமிழ்; எட்டுத்தொகை உடைமையால் ஈடிலாப் புகழ்கொண்டது எங்கள் தமிழ்; பத்துப் பாட்டால் பாரோர் புகழ் கொண்டது எங்கள் பைந் தமிழ்; வள்ளுவன் வழங்கிய வான்குறள் உடையது எங்கள் தமிழ்; நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணி யாரங்கொண்டது எங்கள் தமிழ்; முச்சங்கம் கண்டது எங் கள் தமிழ்; இயல் உடையது; இசையுடையது; இனிய கூத் துடையது எங்கள் தமிழ் என்றெல்லாம் இன்று பெருமை பாராட்டுகிறோம் நாம்.

அப் பெருமையை இன்று நாம் அடைய, அன்று அவற்றை ஆக்கி அளித்தார்கள் புலவர் பெருமக்கள் பல் லோர்; அப் புலவர்கள் ஆன்றவிந்தடங்கிய அறிவுடைய ராய், அருந்தமிழ்ப் பாக்களை ஆக்கி அளித்த அப்பணியினை, அன்று மேற்கொண்டமையினாலேயே, இன்று நாம் பெருமை கொள்கிறோம்; அவர்கள் அருந்தமிழ்ப் பாக்களை ஆக்கி அளிக்கும் அப்பணியைக் கைவிட்டு, எல்லோரையும் போன்று, தம் வயிற்று வாழ்விற்காவனவே தேடி அலையும் அப்பணியை மேற்கொண்டிருப்பரேல் அன்று அருந் தமிழ்ப் பாக்கள் தோன்றியிரா, இன்று நாமும் பெருமை கொண்டிருத்தல் இயலாது; அப் புலவர் பெருமக்கள் தம் வாழ்விற்காம் வகைதேடி உழலாது அமிழ்தினும் இனிய

அருந்தமிழ்ப் பாக்களைப் பாடிக் கிடக்கும் பணியினராக அன்று வழிசெய்து தந்தவர், அன்று நாடாண்ட அரசர்களும் அவ்வரசர்களே போலும் சீருடைச் செல்வர் சிலருமே யாவர். அவர்கள், அப்புலவர்கள் வேண்டும்போதெல்லாம், வேண்டிய பொருளை விரும்பி அளித்து வந்தனர்; அரசரும், பிறரும் பொருள் அளித்துப் பேணிப் புரந்தமையால், புலவர்கள் பொருள் தேடியலையும் பணியற்றவராயினர்; வாழ்வு பற்றிய கவலை அவர்க்கு இலதாயிற்று; அதனால் அவர்கள் உள்ளத்தே அமைதி நிலவிற்று; அவ்வமைதி நிறைந்த உள்ளத்தோடு உலகத்தை ஊன்றி ஊன்றி நோக்கினார்கள்; உலகம் அவர் உள்ளத்தே உருப்பெற்றது; ஆண்டு உருப்பெற்ற உலகம், அவர் உரையில் இடம் பெற்றது; உயிரோவியமாக வெளிப் போந்தது; உலகியல் உணர்த்தும் பாக்கள் பலப்பல உண்டாயின.

ஆகவே, அரிய பாக்களைப் பாடி அன்று மொழி வளர்த்தவர், அவ் அருந்தமிழ்ப் புலவர்களே எனினும், உண்மையில் தமிழ் வளர்த்தோர், அப் புலவர்களுக்குப் பொருள் அளித்துப் பேணிய புரவலர்களே ஆவர். ஆகவே இன்று அம்மொழிகொண்டு பெருமைகொள்ளும் நாம் அனைவரும், அன்று வரையாது வழங்கித், தமிழ் வளரத் துணைபுரிந்த அவ்வள்ளியோர்க்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டவராவோம்.

பண்டு பைந்தமிழ் நாடாண்ட பேரரசர் சிற்றரசர் ஆய அனைவரும் அவ்வாறு வழங்கி வாழ்வுபெற்றவரே எனினும், வள்ளல்கள் என, அக்காலப் புலவர்களாலேயே வாழ்த்தப் பெற்றவர், அதியமான் நெடுமானஞ்சி, ஆய் அண்டிரன், வல்வில் ஓரி, மலையமான் திருமுடிக்காரி, கண்டீரக் கோப்பெருநள்ளி, பறம்பிற்கோமான் பாரி, வையாவிக் கோப்பெரும் பேகன் எனும் எழுவருமே யாவர்:

“ வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகனும், சுரும்புண

நறுவீ உறைக்கும் நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்கு வெள்ளருவி வீழும் சாரல்
பறம்பிற் கோமான் **பாரியும்**, கறங்குமணி
வாலுளைப் புரவியொடு வையகம் மருள
ஈர நன்மொழி இரவலர்க் கீந்த
அழல்திகழ்ந் திமைக்கும் அஞ்சுவரு நெடுவேல்
கழல்தொடித் தடக்கைக் **காரியும்**, நிழல்திகழ்
நீல நாகம் நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி **ஆயும்**, மால்வரைக்
கமழ்பூஞ் சாரல் கவினிய நெல்லி
அமிழ்துவிளை தீங்கனி ஔவைக்கு ஈந்த
உரவுச்சினம் கனலும் ஒளிதிகழ் நெடுவேல்
அரவக் கடல்தானை **அதிகனும்**, கரவாது
நட்டோர் உவப்ப நடைப்பரி காரம்
முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத்
துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு
நளிமலை நாடன் **நள்ளியும்**, நளிசினை
நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க் கீந்த
காரிக் குதிரை காரியொடு மலைந்த
ஓரிக் குதிரை **ஓரியும்** எனவாங்கு,
எழுசமம் கடந்த எழுவுறழ் திணிதோள்
எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க."

(சிறுபாண் : ௮௪-௧௧௪)

என, இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனாரும்,

"முரசுகடிப்பு இகுப்பவும், வால்வளை துவைப்பவும்
அரசுடன் பொருத அண்ணல் நெடுவரைக்
கறங்கு வெள்ளருவி கல்லலைத்து ஒழுகும்
பறம்பிற் கோமான் **பாரியும்**, பிறங்கு மிசைக்
கொல்லியாண்ட வல்வில் **ஓரியும்**,
காரி யூர்ந்து பேரமர்க் கடந்த
மாரி யீகை மறப்போர் **மலையனும்**,
ஊராது ஏந்திய குதிரைக் கூர்வேல்
கூவிளங் கண்ணிக் கொடும்பூண் **எழினியும்**
ஈர்ந்தண் சிலம்பின் இருள்தூங்கு நளிமுழை

அருந்திறல் கடவுள் காக்கும், உயர்சிமைப்
பெருங்கல் நாடன் பேகனும், திருந்துமொழி
மோசி பாடிய ஆயும், ஆர்வமுற்று
உள்ளி வருநர் உலைவு நனிதீரத்
தள்ளாது ஈயும் தகைசால் வண்மைக்
கொள்ளார் ஓட்டிய நள்ளியும், எனவாங்கு
எழுவர் மாய்ந்த பின்றை.'' (புறம் : கடுஅ)

எனப் பெருஞ்சித்திரனாரும், அவ்வெழுவரையும் எடுத்தோதிப் பாராட்டியிருத்தலின், சங்ககால வள்ளல்கள் என வாழ்த்தப் பெறுவோர் அவ்வெழுவரே ஆவர். ஆகவே, அவ்வள்ளல்கள் எழுவர் வரலாற்றினை, அவரைப் பாடிய புலவர்களின் பாக்கள் துணைகொண்டு இயன்ற அளவு எடுத்துரைக்கிறது இந்நூல்; இவ்வெழுவர் வரலாற்றோடு, ஓய்மானாட்டு நல்லியக்கோடன், குமணன் ஆக இருவர் வரலாறும் உடன் உரைக்கப்படுகிறது; இவ்விருவரும், வள்ளல்கள் வரிசையில் வைத்து வாழ்த்தப் பெறவில்லையெனினும், அவ்வெழுவர் அளித்த கொடைப் பொருள் அனைத்தையும் ஒருவனே அளித்தவன் எனவும், அவ்வெழுவரும் மறைந்த பின்னர், அவரேபோல் கொடைத் தொழிலாற்றிய கோன் எனவும் முறையே பாராட்டப் பெறுதலின், அவ்விருவர் வரலாறும் ஈண்டே உரைக்கப்படுகிறது.

'' எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்.''
(சிறுபாண் : கக௩-கரு)

'' எழுவர் மாய்ந்த பின்றை, அழிவரப்
பாடி வருநரும், பிறரும் கூடி
இரந்தோர் அற்றம் தீர்க்கு என, விரைந்திவண்
உள்ளி வந்தனென்.'' (புறம் : கடுஅ)

என, அவ்விருவரையும் பாராட்டிக் கூறுதலறிக.

## க. அஞ்சி

சேலம் மாவட்டத்துத் தர்மபுரி, பண்டு தகடூர் எனும் பெயர்கொண்டு விளங்கிற்று; தகடூரைத் தலைநகராகக் கொண்டு, சேலம் மாவட்டத்தின் வட பகுதியை ஆண்டு வந்தனர் அதியர் என்ற குறுநில அரசர்கள். அவ்வதியர் சேர மரபினரோடு உறவுடையவர்; அதனால், "போந்தை, வேம்பே, ஆர் எனவரூஉம் மா பெருந்தானை மலைந்தபூவும்" எனக் கூறியவாறு, அச்சேரர்க்கு உரித்தெனப்பட்ட பனந் தோட்டையே இவர்களும் மாலையாகப் பெற்றிருந்தனர்; கொல்லிக் கூற்றமும், குதிரை மலையும் இவர்க்கு உரியவாய் இருந்தன. கி. பி. இரண்டாம் நூற்றாண்டு எனப்படும் சங்ககாலத்தே வாழ்ந்த இவர்கள், கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டிலும், விசயாலயன் வழிவந்த பிற்காலச் சோழர் களுக்குத் துணைவர்களாக விளங்கினர் என அறியப்படுத லால், இவர்களும் மூவேந்தர்களைப் போன்றே நெடி தாண்ட பெருமரபினர் என்பது புலனாம்; பெறற்கரும் பெருமை வாய்ந்த கரும்பைப் பிற நாட்டினின்றும் முதற்கண் இவண் கொணர்ந்த பெருமை, இவ்வதியர்க்கே உரித்து எனப் புலவர்கள் பாராட்டுவர்:

"அமரர்ப் பேணியும் ஆவுதி அருத்தியும்
அரும்பெறல் மரபின் கரும்புஇவண் தந்தும்
நீரக இருக்கை ஆழி சூட்டிய
தொன்னிலை மரபின் நின் முன்னோர்." (புறம்: கூகூ)

தகடூர், போரிடை வெற்றியல்லது தோல்வி காணாப் பேராண்மையொன்றையே பெறற்கரும் பேறாகக் கருதும் வீரர் பலர் வில்லேந்திக் காத்து நிற்கும் காவற் காட்டான் சூழப்பெற்று; அந்நகருள் அரசர் புகழ் பாடிவரும் இரவலர் நுழைதல் இயலுமேயல்லால், பகைகொண்டு வரு வார் எவரும் கனவிலும் நுழைய நினையார்; அத்துணைக் காவல் அமைந்தது அந்நகர்; காட்டிற் சென்று மேயும் ஆனிரைகள், ஆங்கே தமக்கு ஊறுசெய்யும் பகை விலங்கு

கள் இல்லாமையால், மேய்ந்து மாலை வந்ததும், வீடுநோக்கி வருவதொழிந்து தம் கன்றுகளோடு அக் காட்டிலேயே தங்கும்; நடந்து நடந்து, வெந்த காலுடைய வழிப் போவார், வழி, ஆறலை கள்வர் அற்றது ஆதலின், அவர் அலைப்பரே என அஞ்சி அரண் அமைந்த இடம் தேடி ஓடி ஒளியாமல், தாம் விரும்பும் இடங்களிலே இருந்து இளைப் பாறுவர்; நாடு கள்வர் அற்றது ஆதலின் நெல் முதலாம் பொருட் குவியல்கள், காப்பார் எவரையும் பெறுமல், களங்களில் தனித்தே கிடக்கும்; அத்துணைக் காவல்நலம் சிறந்தது அந்நாடு.

"பல்பயன் நிலைஇய கடறுடை வைப்பின்
வெல்போர் ஆடவர் மறம்புரிந்து காக்கும்
வில்பயில் இறும்பின் தகடூர்." (பதிற்று : எஅ)

"ஆர்வலர் குறுகி னல்லது காவலர்
கனவினும் குறுகாக் கடியுடை வியனகர்."
(புறம் : ௩௯0)

"கன்றமர் ஆயம் கானத்து அல்கவும்
வெங்கால் வம்பலர் வேண்டுபுலத்து உறையவும்,
களமலி குப்பை காப்பில வைகவும்
விலங்குபகை கடிந்த கலங்காச் செங்கோல்."
(புறம் : உ௩0)

இத்துணை வாழ்வும், வனப்பும் மிக்க நாட்டிலே, அத் துணைப் பீடும் பெருமையும் மிக்க மரபிலே, அஞ்சி என்பா னொருவன் இருந்தான்; அவன், அதியர் மரபிலே வந்த பல்லோருள்ளும் சிறந்தோனாதலின், கிழார் என்ற வேளாளர் குடியிலே பிறந்து சிறந்தமையால், பெரிய புராண ஆசிரியர், இயற்பெயரான் அன்றி, சேக்கிழார் எனக் குலப்பெயரான் அழைக்கப்படுதலேபோல், இவனும் இயற்பெயரான் அன்றிக் குலப்பெயரால் அதியமான் எனவும், அதியர் மரபிலே வந்த அரசருள் சிறந்தோன் என்ற பொருளில் அதியமான் நெடுமான் எனவும், அச் சிறப்புப் பெயர்களோடு இயற்பெயர் இணைய அதியமான்

நெடுமானஞ்சி எனவும் குலப்பெயர் தொடராது, சிறப் படை ஒன்றே தொடர நெடுமானஞ்சி எனவும் இயற் பெயர் ஒன்றே தோன்ற அஞ்சி எனவும் அழைக்கப் பெறுவன். ஓரோவழி, அவன் எழினி எனவும் அழைக்கப் பெறுதலும் உண்டு; ஆய்க்குக் கவிரமும், ஓரிக்குக் கொல்லி யும், காரிக்கு முள்ளூரும் பாரிக்குப் பறம்பும், பேகனுக்குப் பொதினியும் உரிமையுடையவாதலைப் போன்றே, அஞ் சிக்குக் குதிரை எனும் பெயருடையதொரு பெருமலை உரிமையுடைத்தாம்:

"நெடுநெறிக் குதிரைக் கூர்வேல் அஞ்சி." (அகம்: ௩௭௨)

"ஊராது ஏந்திய குதிரைக் கூர்வேல்
கூவிளங் கண்ணிக் கொடும்பூண் எழினி." (புறம்: ௧௫௮)

அஞ்சி, குணங்களால் நிறைந்த கொற்றவனாவன்; பாவலர் பரவும் பண்புகள் பல அவன்பால் பொருந்தி யிருந்தன; உலகம் வாழ வாழும் பெரியோர், 'புகழ் எனின் உயிரும் கொடுப்பர்; பழி எனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்' என்றார் பெரியார் ஒருவர்; 'நல்லாறெனினும் கொளல் தீது' என்றார் வள்ளுவர்; இதனால், 'கொள்' எனக் கொடுப்பதின்றி, 'ஈ' என இரத்தல் இழிவுடைத் தாதல் பெறப்படும்; இவ்விழிபண்பினை அஞ்சிபால் காணல் அரிதினும் அரிதாம்; அதியமான், ஏழரசர் ஆட்சியை எள்ளளவும் வழுவின்றி எய்தியும் அமைதிகொள்ளா ஆசை உடையனே யெனினும், நாடுகளைப் போரில் வென்று கொள்வதல்லது, பிறர் கொடுக்க ஏற்றுக்கொள் ளும் இழிகுணத்தை அவன்பால் காணல் இயலாது; உயர்ந்த உச்சிகளை யுடைமையால் வளம் நிறைந்த மலை நாடேயாயினும், கொள் எனக் கொடுக்க ஏற்றுக்கொள்ளா உயர்பேர் பண்பாளன் எனப் புலவர்கள் அவனைப் பாராட்டுவர்:

"கோடுயர் பிறங்குமலை கெழீஇய
நாடுடன் கொடுப்பவும் கொள்ளா தோனே."

(புறம்: ௨௩௨)

அதியமான்பால், பாராட்டத்தக்க மற்றொரு பண்பும் உண்டு; ஓடுமீன் ஓட, உறுமீன் வருமளவும் வாடியிருக்கும் கொக்கேபோல் ஏற்றகாலத்தை எதிர்நோக்கியிருப்பன்; அக்காலம் வரும்வரை, இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்பதைப்போல் ஏதும் அறியாதான்போல் அடங்கியிருந்து, காலம் வந்தவிடத்துப் புலியெனப் பாய்ந்து காரியத்தை முடிப்பன்; "கொக்கொக்க கூம்பும் பருவத்து; மற்றதன், குத்தொக்க சீர்த்த விடத்து" என்பது வள்ளுவர் கண்ட போர்முறை; அதியமான் நெடுமானஞ்சி, இப்போர்முறையுணர்ந்த பேரறிவாளனவன்; அவன், தன் ஆற்றலை வெளியிடுதற்காம் காலம் வருதற்கு முன்னர்த் தன்பால் அவ்வாற்றல் இருப்பதாகவே காட்டிக் கொள்ளான்; ஆனல் அக்காலம் வந்துவிட்டது எனிலோ, தன் ஆற்றல் அவ்வளவையும் வெளியாக்கி வெற்றி பெறுவன்; மக்கள் தமக்கு வேண்டும் நெருப்பினை உண்டாக்கப் பண்டு மேற்கொண்ட முறைகளுள், தீக்கடைகோல் கொண்டு தீ உண்டாக்குவதும் ஒன்றும்; கடைந்தவழிப் பெரு நெருப்பை வெளியிடும் ஆற்றல் வாய்ந்த அத் தீக்கடைகோல், தொழில்படுதற்கு முன்னர், சிறிதும் தீங்கற்ற சிறந்த பொருளாகக் கருதப்பட்டு, வீட்டுக் கூரைகளிலும் செருகி வைக்கப்பெறும்; அத்தீக்கடை கோலைப்போன்றே தன் ஆற்றலைக் காட்டவேண்டிய இடம் வந்தவிடத்துத் தீக்கடை கோலினின்றும் வெளியாம் தீ, கொடுமைகளுக்கெல்லாம் நிலைக்களமாய் மாறுவதேபோல், சினங்கொண்டு பகைவரைக் கொன்று குவிப்பதில், கூற்றுவன் போலும் கொடுமையுடையனும் அதியமான், மற்றக் காலங்களில் எவரிடத்தும் இனியனாய்ப் பழகும் பண்புடையனுவன்:

"நெடுமான் அஞ்சி,
இல்லிறைச் செரீஇய ஞெலிகோல் போலத்
தோன்ருது இருக்கவும் வல்லன்; மற்றதன்
கான்றுபடு கனையெரி போலத்
தோன்றவும் வல்லன்தான் தோன்றுங் காலே."
(புறம்: ௩௧௫)

சிறந்த பல பண்புகட்கு நிலைக்களனுய அதியமான், தன் புகழ் பரவும் புலவர் பெருமக்களைப் புரக்கும் பேருள்ளமும் கொண்டிருந்தான் எனக்கூறல் வேண்டாவன்றே; அஞ்சி, சிறிது நேரமும் ஒழியாமல், மாரிபோல் ஈயும் வண்மையுடையான்; அகமும், முகமும் மலர அரசவையமர்ந்து அண்டி வருவார்க்குத் தேரும் பிறவும் பல வழங்கி மகிழ்ந்த நாட்கள், அவன் வாழ்நாளில் பலவாம். ஒருநாள் அல்ல; இருநாள் அல்ல; பலநாள் தொடர்ந்து பலரோடு சென்று இரப்பினும், அவ்விரவலர்பால், முதல்நாள் கொண்ட அன்பிற் சிறிதும் குறையாத பேரன்பே காட்டும் பேருட் கொடையாளனுவன்; பரிசில் அளிக்குங்கால், அவன் ஒரோவழி காலங் கடத்துவன் எனினும், பரிசில் அளிப்பது தவருது; அளித்தே அனுப்புவான்; யானையின் கையால் பற்றுண்டு, அதன் இரு கொம்புகளுக்கிடையே கிடக்கும் உணவுப் பொருள், அதன் வாயுட் புகுதல் எத்துணை உறுதியோ, அத்துணை உறுதியாம், அதியன் வாயில் வந்து நின்ருேர், அவன்பால் பரிசில் பெறுவது; ஆகவே, அவன்பால் சென்ருல், அவன் புகழ் பாடினல், பரிசில் அளிப்பனே, மறுப்பனே என மயங்கார் புலவர். அதியமான் நெடுமானஞ்சி, இத்தகைய பெருந் தகையாய்ப் புகழ்பரவ வாழ்ந்த காரணத்தால், பரணர் பாடினர்; பெருஞ்சித்திரனர் புகழ்ந்தார்; அவன் அத்தை மகள் நாகையார் என்ற நல்லிசைப் புலமை மெல்லியலாரும் பாராட்டினர்; கடையெழு வள்ளல்களுள் ஒருவனுவன் என உயர்த்திக் கூறினர், இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனர்.

"ஓவாது ஈயும் மாரி வண்கைக்
கடும்பகட்டு யானை நெடுந்தேர் அஞ்சி." (குறுந் : கக)

"கடும்பகட்டு யானை நெடுமான் அஞ்சி
ஈர நெஞ்சம் ஓடிச்சேண் விளங்கத்
தேர் வீசிருக்கை." (நற் : ந௨அக)

"ஒருநாள் செல்லலம்; இருநாள் செல்லலம்;
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ!

அணிபூண் அணிந்த யானை இயல்தேர்
அதியமான் பரிசில் பெறூஉம் காலம்
நீட்டினும், நீட்டா தாயினும், யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுவது பொய்யா காதே." (புறம் : ௧0௧)

நீண்ட பெரிய தேர்; தலை உயர்த்தி நடக்கும் மதம் மிக்க களிறு; விரைந்து செல்லும் குதிரை; வேலேந்திய வீரர் ஆகிய நால்வகைப் படைகளாலும் நிறைந்தது அதியமான் பெரும்படை; இந் நாற் படைகளே அன்றி, வாழ்வின் துணையென வில்லையல்லாமல்வேறு காணுதவரும், எதிர்த்து வருவார் எத்துணை ஆற்றல் வாய்ந்தோராயினும், இன்னல் விளைத்து இயற்கையோடு இரண்டறக் கலக்கச் செய்யாது விடாத இயல்பினரும் ஆகிய மழவர் என்ற ஒருவகைப் போர்வீரர் குழுவையும் பெற்றிருந்தான்; இவ்வாறு பெரும்படைத் தலைவனாய் விளங்கியதோடு, அப் பெரும் படையைப் பணிகொள்ளும் பெருவீரனாய், அதற்கேற்ற ஆற்றலும், ஆண்மையும், முழவெனப் பருத்த தோளும், முழங்கால் அளவும் நீண்ட கைகளும், அகன்ற வலிய மார்பும் கொண்ட உறுதி மிக்க உடலமைப்பும் உடையனுவன்; தான் பெற்றிருந்த பெரும்படைத் துணையால், தன் நாட்டைச் சூழ ஆண்டிருந்த அரசர் அனைவரையும் வென்று திறைகொண்டு வாழ்வானாயினன்; அவன் படை வீரர், பகைவர் நாட்டுட் புக்குப் போரிட்டுக் கைப்பற்றிக் கொணர்ந்த அவர் நாட்டு ஆனிரைகள் அளவிறந்தனவாம்.

" சில்பரிக் குதிரைப் பல்வேல் எழினி
கெடலருந் துப்பின் விடுதொழில் முடிமார்
கனையெரி நடந்த கல்காய் கானத்து
வினைவல் அம்பின் விழுத்தொடை மறவர்
தேம்பிழி நறுங்கல் மகிழின் முனைகடந்து
வீங்குமென் சுரைய ஏற்றினம் தரூஉம்.'' (அகம் : ௧0௫)

" நெடுநெறிக் குதிரைக் கூர்வேல் அஞ்சி
கடுமுனை யலைத்த கொடுவில் ஆடவர்
ஆகொள் பூசல்.'' (அகம் : ௩௭௨)

" நுகம்படக் கடக்கும் பல்வேல் எழினி
முனையான் பெருநிரை." (குறுந் : அ0)

அதியமான், இவ்வாறு பெரும்படையும், பேரரசும் பெற்றிருந்தும் சிறந்த அரசுரிமையைப் பெற்றுள்ளோம் எனப் பெருமைகொண்டு, அதுவே போதும் என அமைதி கொள்ளும் உள்ளத்தானல்லன்; தன் காலத்தில் தன்னினும் சிறந்தானாக ஓர் அரசன் வாழ்தலை வெறுத்தது அவன் உள்ளம்; அவன் காலத்தே, தென்னார்க்காடு மாவட்டம் திருக்கோவலூர்க்கண் மலையமான் வழிவந்த அரசன் ஒருவன் ஆண்டு வந்தான்; அவன், அவன் முன்னோர்களைப் போன்றே ஆற்றல் மிக்கோனாவன்; தமிழ் வேந்தர் மூவரும், அவனைத் தன் படைத்துணையாகப் பெறுவதைப் பெரிதும் விரும்புவர். மூவேந்தரிடையே மூளும் போரில், அவன் யார்க்குப் படைத்துணை புரிவனோ அவரே வெற்றி பெறுவர்; அத்துணைப் போர்ப் பயிற்சி யுடையானவன். இது, அதியமானுக்கு அளவிலாப் பொறாமையை உண்டாக்கிற்று; உடனே பெரும் படைகொண்டு, கோவலூரைத் தாக்கினான்; கோவலூர் முற்றும் அழிந்தது; மலையமானும் தோற்றான்; ஆங்கு அதியன் பெற்ற வெற்றியைப் பரணர் பாராட்டினார்; அதியமான் போர் வேட்கை அதன் பின்னரே ஓர் அளவு தணிந்தது :

" எழுபொறி நாட்டத்து எழாஅத் தாயம்
வழுவின் றெய்தியும் அமையாய், செருவேட்டு
இமிழ்குரல் முரசின் எழுவரொடு முரணிச்
சென்றமர் கடந்துநின் ஆற்றல் தோற்றிய
அன்றும் பாடுநர்க்கு அரியை.; இன்றும்
பரணன் பாடினன் மற்கொல் மற்றுநீ
முரண்மிகு கோவலூர் நூறிநின்
அரணடு திகிரி ஏந்திய தோளே." (புறம் : கூகூ)

அதியமான், இவ்வாறு ஆண்மையும், அருளும் ஒருங்கே பெற்று உயர்ந்தோர் வாழ்த்த வாழ்கிறான் என்பதறிந்த ஔவையார், அவன்பால் சென்று, அவனைக் கண்டு பாராட்டி, அவன் அளிக்கும் பரிசில் பெற விரும்பினார்.

காடும் மலையும் பல கடந்து, தகடூர் சென்று சேர்ந்தார்; அரண்மனைவாயில் அடைந்து, ஔவை வந்துள்ளாள் அதியமானைத் தேடி என அறிவித்துச் சிறிது இருந்தனர்; அதியமான், ஆண்டு விரைந்து வந்தானல்லன்; ஔவைக்கு ஆற்றெணுச் சினம் மூண்டது; உடனே காவலனை விளித்து, "வாயிலோயே! உங்கள் அரசன் வாயிற்கண் வந்து நிற்கும் எம் போலும் புலவர்கள் பொருளால் வறியரே ஆயினும், புலமையால் வறியர் அல்லர்; அவர்கள் பாடிப் பிழைப்பர் எனினும், வழியில் போவார் எவரையும் பாடிப் பரவும் இழிவுடையாரல்லர்; வண்மையுடையாரை வரிசையான் அறிந்தே பாடுவர்; அவர் பாடிய பாடல் பயனற்றுப் போனது இது வரையில்லை; வள்ளல்களைப் பாடிய பாடல்கள், அப் புலவர்கள், உள்ளத்தே உள்ளியதை முடித்துத் தருவதில் ஒருபோதும் தவறியது இல்லை; அத்தகைய இரவலர் தமக்கு இல்லை என்று கூறி அடைக்கும் வாயில் அன்று உங்கள் அரசன் வாயில் என அறிந்தே யானும் இங்கு வந்தேன்; ஆனல், அதியமான் அன்புடன் வரவேற்றான் இல்லை; என் உண்மை யுயர்வை உள்ளவாறு உணரும் அறிவு அவன்பால் இல்லையோ? அல்லது, அவன் தான், தன் உண்மை நிலையினை உயர்த்தி மதிப்பிட்டு விட்டனனோ அறியேன்; எவ்வாறாயினும் ஆகுக; புலவர் தம் உயர்வை உள்ளவாறுணரும் அறிவும், அவரை அன்புடன் ஏற்றுப், போற்றிப் புரப்பதால் பெறும் புகழும் உடையார் அனைவரும் அழிய, உலகம் வறுமை எய்திவிடவில்லை; ஆகவே, புறப்படுகிறேன் வந்த வழி நோக்கி; மரத்தொழிலை மாண்புறக் கற்றார், ஏற்ற கருவிகளுடன், எந்தக் காட்டிற்குள் சென்றாலும், அவர்க்கு அக் காடு முற்றும் பயன் அளிப்பதே போன்று, நாங்கள் எங்குச் செல்லினும், மங்காது எங்கள் புகழ்; கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு," என்று சினந்து கூறித் திரும்பினர்.

"வாயிலோயே! வாயிலோயே!!
வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித், தாம்
உள்ளியது முடிக்கும், உரனுடை யுள்ளத்து

வரிசைக்கு வருந்தும் இப்பரிசில் வாழ்க்கைப்
பரிசிலர்க்கு அடையா வாயி லோயே!!!
கடுமான் தோன்றல், நெடுமான் அஞ்சி,
தன்அறி யலன்கொல்? என்அறி யலன்கொல்?
அறிவும், புகழும் உடையோர் மாய்ந்தென
வறுந்தலை உலகமும் அன்றே; அதனால்
காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;
மரங்கொல் தச்சன் கைவல் சிறுஅர்
மழுவுடைக் காட்டகத் தற்றே!
எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே."

(புறம் : உ0சு)

அதியமான் காதிற்கு எட்டியது இச் செய்தி; விரைந்தான் ஔவையார் இருந்த வாயில் நோக்கி; அகமும், முகமும் மலர அன்புமொழி கூறி வரவேற்றான்; அவர்க்கும், அவர் உடன் வரும் சுற்றத்தார்க்கும் வேண்டுவன அளித்து வழிபட்டான். அதியமான் வழிபட, அவன் அரசவைப் புலவராய் அமர்ந்திருந்தார் ஔவையார்; ஒருநாள் அதியமானுக்கு அருமையான நெல்லிக்கனியொன்று கிடைத்தது; தகடூர்க் கண்மையில் ஒரு பெருமலை; அம் மலை முடி, அடைதற்கரிய உயரமும் அருமையும் உடையது; அங்கேயுளது ஓர் அருமையான நெல்லி மரம்; அதிலுள்ள கனி, உண்டார் உடலை ஊறுஇன்றி நெடுநாள் வாழச்செய்யும் ஆற்றல் வாய்ந்தது; அக்கனியில் ஒன்றை அரும்பாடுபட்டுக் கொணர்ந்தான் அதியமான்; அக்கனியுடன் அரண்மனை நுழைந்த அதியமான், ஆங்கு ஔவையார் இருப்பது உணர்ந்தான்; அவன் எண்ணம் மாறிற்று; தன்னினும், உலகில் வாழத் தக்கார் அவரே; தான் வாழ்வதினும், அவர் வாழின் உலகிற்குப் பெரும்பயன் உண்டாம் என எண்ணினான்: ஆகவே, அந் நெல்லிக்கனியினை ஔவைக்கே அளித்தல் வேண்டும் எனத்துணிந்தான்; ஆனால், ஔவையார் அக்கனியின் அருமை அறியின், அதை அவர் உண்ண மறுப்பார்; தன்னையே உண்ண வற்புறுத்துவர் என்பதையும் உணர்ந்த அவன், அக்கனியின் அருமை பெருமைகளை அவர்க்கு முன் கூட்டி அறிவியாதே அளித்தான்; ஔவையாரும், அதை

வாங்கி வாயிலிட்டு உண்டார்; அவர், அதை உண்டுவிட்டார் என்பது உணர்ந்த ஔவையாரை நோக்கி, "அறிவு சான்ற ஔவையே! தாங்கள் இப்போது உண்ட நெல்லிக்கனி, ஏனைய கனிகளைப் போன்றதன்று; உண்டார், கேடின்றி இந்நிலவுலகில் நீண்டநாள் வாழ்வர்; அத்துணை அருமை யுடையது அது; மேலும் எளிதில் கிடைக்கக் கூடியது மன்று; நானும் இவ்வுலகமும் வாழ்வது, தங்கள் அறிவுடைமையால்; தங்களைப் போலும் பெரியோர்கள் வாழ்வதாலேயே உலகம் வாழ்கிறது; ஆகவே, தாங்கள் வாழவேண்டும் பல்லாண்டு என விரும்பினேன்; ஆகவே, தங்களுக் களித்தேன் இக்கனியினை; கனியின் சிறப்பைத் தங்கட்கு முன்னரே அறிவிப்பின், அதைத் தாங்கள் உண்ண மறுப்பீர்; என்பால்கொண்ட அன்பின் மிகுதியால் என்னையே உண்ணவேண்டுவீர் என்று அறிந்தே அதை முன்னர் அறிவியேனாயினேன்," என்று கூறினான்.

அதியமானின் இச் செயல், ஔவையார் உள்ளத்தே, அளவிலா மகிழ்வெழச் செய்தது; எவரும் முதற்கண் தாம் வாழவே விரும்புவர்; தாம் வாழ்ந்த பின்னரே, பிறர் நல் வாழ்வு குறித்து நாட்டம் கொள்வர்; இதுவே உலகியல்; ஆனால், அதியமான் செயல், உலகியற் போக்கையே மாற்றி விட்டது கண்டார்; தன் வாழ்வு குறித்துக் கவலைகொள் ளாது, பிறர் நல்வாழ்வில் நாட்டம் கொண்ட அதியமான் செயல், சிவபெருமான் செயல் ஒன்றை நினைவூட்டுவதா யிற்று; சாவா மருந்தாகிய அமிழ்தினைப்பெறத் தேவர்கள், பாற்கடலைக் கடைந்த காலத்தில் முதற்கண் அதில், அமிழ் தத்திற்குப் பதிலாக, ஆலகாலப் பெருநஞ்சு தோன்றிற்று; அதுகண்டு அஞ்சினர் அனைவரும்; சிவன் அவர்களுக்கு நேர இருந்த கேட்டைப் போக்க, அவ் வாலகால நஞ்சைத் தான் உண்டு, சாவா மருந்தாகிய அமிழ்தை அவர்களுக்கு அளித்தான்; அதனாலேயே நஞ்சுண்ட நீலகண்டன் என்பதும் அவனுக்குப் பெயராயிற்று; இவ்வாறு கேட்டினைத் தான் கொண்டு வாழ்வைப் பிறர்க்களித்தான் அவனும்.

அதியமானும், நீடிய வாழ்வு தான் பெறுவதை வெறுத்து ஔவையார்க்கு அவ்வாழ்வளித்தான்; ஆகவே, அதியமான் நீலகண்டனுக்கு நிகராயினன்; அதைப்போன்றே, நெடுநாள் வாழ்வதை அதியமான் வெறுத்தானாயினும், அவன் நெடுநாள் வாழ்வன்; அவன் வாழவேண்டும் என அவனுக்கு நல்வாழ்த்துக் கூறினர் ஔவையார்; அதியமானின் செயற்கரும் இச்செயல், ஔவையாராலேயே யல்லாமல் வேறு பலர்ரும் பாராட்டும் பெருமை பெற்றது:

"போரடு திருவின் பொலந்தார் அஞ்சி!
பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீலமணி மிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது,
ஆதல் நின்னகத்து அடக்கிச்
சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே." (புறம்: ௯௧)

"மால்வரைக்
கமழ் பூஞ்சாரல் கவினிய நெல்லி
அமிழ்துவிளை தீங்கனி ஔவைக்கு ஈந்த
உரவுச்சினம் கனலும் ஒளிதிகழ் நெடுவேல்
அரவக்கடல் தானை அதிகன்." (சிறுபாண்: ௯௯-௧0௩)

"இனிய கனிகள் என்றது, ஔவையுண்ட நெல்லிக் கனிபோல அமிழ்தாவனவற்றை."
(குறள்: ௧00, பரிமேலழகர்)

அதியமான் போர்வேட்கைமிக்க பெருவீரனாய் விளங்கினான்; அதனால் அவனுக்குப் பகைவர் பலராயினர்; அதியமான் அளித்த அருநெல்லிக் கனியுண்டுஅவன் அரசவையில் வாழ்ந்திருந்த ஔவையார், அவன் பகைவர் கைப்பட்டுப் பாழுறுவண்ணம் காத்தல் தம்கடன் என உணர்ந்தார்; அதியமானுக்கும், அவன் பகைவர்க்கும் அறிவுரை பலகூறிப் போர் ஒழிக்க முயன்றார் ஔவையார்; அதியமான் பகை

வருள் ஒருவனும், தொண்டையர்குலத்தோன்றலும், பெரும் படையுடையானும் ஆய தொண்டைமான் என்னும் அரசன் பால் தூதுசென்று அவனிடத்தே, அதியமான் பீடும் பெரு மையும் தோன்றக்கூறி, அத் தொண்டைமான், அதியமா னேடு போரிட அஞ்சுமாறு பண்ணியும் மீண்டார்; ஆனல், அந்தோ! அமரைத் தடுத்தல் அவரால் இயலாது போயிற்று; அதியமான் போர்வேட்கை, அவனுக்குப் பார்க்குமிடமெங் கும் பகைவர்களைத் தோன்றச்செய்துவிட்டது; அவன் பகைவர் அனைவரும், யானைப்படையாலும், குதிரைப் படை யாலும் சிறந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்ற சேர அரசன் தலைமையில் ஒன்றுகூடி அதியமானை எதிர்க்கத் துணிந்தனர்; பகைவர் பலரும் ஒன்று சேர்ந்துவிட்டமை யால். அவர் வலிமை, தன் வலியினும் பெரிதாகிவிட்டது தெரிந்த அதியமான், அப் பகைவரை எதிர்சென்று தாக்கு வது ஒழித்துத் தகடூர்க் கோட்டையின் உள்ளே தங்கியிருந் தான்; அஞ்சி, பகைவர்க்கு அஞ்சித் தகடூர்க்கண் அடங்கி யது கண்டும், அடங்கினரல்லர் அவன் பகைவர்; அழிக்க லாகா அரண்பலஅமைந்தது அவன் தகடூர்க்கோட்டை என் பதையும் எண்ணினரல்லர்; அரண்மிக்க அக்கோட்டையை அழித்து, அவனையும் கொன்றனர்.

அமர்க்களத்தில் அல்லலுறும் அந்நிலையிலும், தம்பால் வந்து இரந்தாரைப் புரக்கவல்ல அதியமான் அந்தோ! மறைந்துவிட்டான்; அருநெல்லிக்கனியினை ஔவைபார்க்கு ஈந்த அதியமான், அந்தோ! மறைந்துவிட்டான்; அரும் பெறற் கரும்பை இவண் கொணர்ந்த அதியர்குலத் தோன் றல் அதியமான், அந்தோ! மறைந்துவிட்டான்; அவன் உடலை ஈமத்தீயிட்டு எரித்து, எரித்த அவ்விடத்தில் அவன் பீடும், பெருமையும் பொறித்த கல்லைநட்டு, அக்கல்லிற்குப் பீலியும், மாலையும் சூட்டி வழிபட்டுக் கல்நாட்டு விழாவும் செய்து முடித்தனர். அதியமான் அரசவை அமர்ந்து, அவன் அளித்த அருநெல்லிக் கனி அருந்திய ஔவையாரே யல்லாமல் அவன் பகைவனும், அவனை

அழித்து வெற்றியுற்ற வேந்தனாய பெருஞ்சேரல் இரும்பொறையின் பேரவைப் புலவராய், அவன் புகழ்பாடும் அரிசில் கிழாரும், அதியமான் அழிவுகண்டு வருந்தி, அவன் ஆருயிரைக் கொள்ளைகொண்ட கூற்றுவனைப் பழித்துரைப்பர் எனின், அதியன் புகழை அவன் பெருமையை அளவிட்டுக் கூறலும் இயலுமோ!

## உ. ஆய்

மேலைக் கடற்கரையை அடுத்துப், பொதியில் மலையைச் சூழ அமைந்துள்ள நாடு வேணாடு எனும் பெயருடைய தாகும்; வடக்கே சேரர்க்குரிய குட்டநாடும், தெற்கே பாண்டியர்க்குரிய தென்பாண்டி நாடும் கிடக்க, இடைப்பட்ட வேணாடு, வேளிர் இருந்து ஆண்ட நாடுகளுள் ஒன்றாம்; தமிழக மலைகளுள் தலை சிறந்ததாகக் கருதப்படும் பொதிய மலையும், அதைச் சூழ உள்ள சிறு நாடும், ஆய்நாடு என்ற பெயரானும் வழங்கப் பெறும்; இற்றைக்கு 1800 ஆண்டு கட்கு முன்னர்த் தமிழகம் போந்து, அந்நாடு முழுதும் சுற்றி, அக்காலத்து நில இயல்புகளையும், அரசியல் நிலை களையும் பற்றிய நீண்ட குறிப்பொன்று எழுதி வைத்த நில நூல் பேராசிரியராய **தாலமி** எனும் யவனாசிரியர் ஆய் நாட்டையும், அந் நாட்டகத்து ஐந்து துறைமுகங்களையும் குறிப்பிட்டுள்ளார்; ஆய்குடி என்ற பெயரானும் வழங்கப் பெறும் ஆய்நாடு, கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரையி லும், தமிழ்நாட்டு அரசியலில் தலை சிறந்த இடம் பெற்றுத் திகழ்ந்தது.

கடையெழுவள்ளல்களுள் ஒருவனை ஆய் அண்டிரனால் தோற்றுவிக்கப்பட்ட ஆய்குடி, நன்மை பல செறிந் தது; தமிழகத்தின் தென்பாற்கண் உளது; அந்நாட்டு மலைகள் தெய்வ அருட்டன்மை உடையன; அம்மலையின் பக்கமலைகளுள் கவிரம் எனும் பெயருடையதொரு குன்றும் உண்டு: அணுகுதற்காகா அருமையுடையது அக் குன்று; அம் மலைக்கண் மலிந்து கிடக்கும் மலர்நிறை சுனைகளில் சூரர மகளிர் மகிழ்ந்து ஆடுவர்; வானவர் உறையும் இமயம் வடக்கண் உளதாயினும், தென்திசைக் கண்ணதாய ஆய் குடி இன்றாயின், உலகியலே கீழ்மேலாகத் தடுமாறும் எனக் கூறப்படுமாயின் ஆய்நாட்டின் பெருமையினை என் னென்பது!

"தெனுஅது
ஆஅய் நன்னட்டு அணங்குடைச் சிலம்பில்
கவிரம் பெயரிய உருகெழு கவாஅன்
நேர்மலர் நிறைசுனை உறையும்
சூர் மகள்.''
(அகம்: ககஅ)

"வடதிசை யதுவே வான்தோய் இமயம் ;
தென்திசை ஆஅய்குடி இன்ருயின்
பிறழ்வது மன்னே இம்மலர்தலை உலகே." (புறம்: கஉ)

ஆய் நாட்டிற்குரியோனுகிய ஆய், வேளிர் வழி வந்தவனுவன்; அவன், "மாவேள் ஆய்" எனவும், "தேர்வேள் ஆய்" எனவும் அழைக்கப் பெறுதலால் விளங்குவது காண்க. ஆய், ஆய் அண்டிரன் எனவும் அழைக்கப் பெறுவன்; அண்டிரன் என்பது, ஆந்திரன் என்னும் தெலுங்குச் சொல்லின் திரிபாம் எனக்கொண்டு, இவன் தெலுங்கு நாட்டினன்; அகத்திய முனிவர், தமிழ்நாடு போந்தகாலை உடன் கொணர்ந்த பதினெண்குடி வேளிருள் ஒருவன் என்றெல்லாம் ஆராய்ச்சியாளர் கூறுவர்:

ஆய் ஆற்றல் மிக்க பெருவீரனுவன்; அவனுக்குரிய பொதியில் மலைக்கண், ஆடியும், பாடியும் பரிசில் பெற்றுப் பிழைக்கும் ஆடல் மகளிர் அணுகுதல் இயலுமே யல்லால், படைப் பெருமையால் பீடுற்றேம் எனப் பெருக வாழும் பேரரசர் அணுகுதல் இயலாது; அத்துணை அரண் செறிந்தது ஆய்குடி ;

" கழல்தொடி ஆஅய் மழைதவழ் பொதியில்
ஆடுமகள் குறுகி னல்லது
பீடுகெழு மன்னர் குறுகலோ அரிதே." (புறம்: கஉஅ)

பகைவர் அணுகற்கும் அஞ்சும் அரண் அமையப் பெற்ற ஆய், பகைவர்க்குரிய அரண் பலவற்றையும் வென்று பாழ்செய்து, ஆங்குக் கிடக்கும் அரிய பெரிய பொருள்களை வாரிக்கொணரும் வன்மையும், அவ்வன்மைக்கு ஆக்கந்தரும் ஆற்றல் மிக்க வீரரையும் பெற்றிருந்தான்.

" அம்புடைக் கையர் ; அரண்பல நூறி
நன்கலம் தரூஉம் வயவர் பெருமகன்
சுடர் மணிப் பெரும்பூண் ஆஅய்.'' (அகம் : ருரு)

நாடோடி வாழ்வினரும், வில்லாண்மை மிக்காரும் ஆய கொங்கர் எனும் கூட்டத்தார், தமிழகத்துட் புகுந்து, ஆங்காங்கு இருந்த அரசுகளுக்கு அழிவு பல தந்து வந்தனர்; அவர் தரும் தொல்லையினைத் தாங்க மாட்டாத வேந்தர் மூவரும், அவர்களைத் தங்கள் தங்கள் நாடுகளினின்றும் துரத்துவதில் கருத்துடையராயினர்; கொங்கரை வென்று அவர் நாட்டை அகப்படுத்தினன் பல்யானைச் செல்கெழு குட்டுவன் எனும் சேரவேந்தன்; கொங்கரை வென்று புறங்கண்டான் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன், கொங்கரைப் பணிவித்த சோழர்க்குப் படைத்துணை நின்றான் பழையன் எனும் பெருவீரன்; கொங்கரை ஓட்டி நாடு பல தந்தான் பசும்பூட் பாண்டியன்; அப்போரில், பாண்டியர் படைக்குத் தலைமை பூண்டு பெரும் பணிபுரிந்தான் அதிகன் எனும் ஆற்றல்சால் மறவன் என்றெல்லாம் தமிழ் நூல்கள் கூறுகின்றன; இவ்வாறு பேரரசர்க்கும் பேரச்சம் தந்து வந்த கொங்கரைக் குடகடல்வரை துரத்தி வெற்றி கண்டான் ஆய்; அவனுக்குத் தோற்று ஓடிய கொங்கர் கைவிட்டுச் சென்ற வேற்படைகள் மிகப் பலவாகும் :

" கொங்கர்க்
குடகடல் ஓட்டிய ஞான்றைத்
தலைப்பெயர்த் திட்ட வேலினும் பலவே." (புறம்: கஉ0)

கடையெழு வள்ளல்களுள் ஒருவனாய ஆயை, இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார், உமட்டூர்கிழார் மகனார் பரங்கொற்றனார், உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், காரிக் கண்ணனார், குட்டுவன் கீரனார், துறையூர் ஓடைகிழார், பரணர், பெருஞ்சித்திரனார் முதலாம் புலவர் எண்மர் பாராட்டியுள்ளனர்; அவனைப் பாடிய புலவர் அனைவரும் அவன் கொடைப்பெருமையினையே பாராட்டியுள்ளனர் ; ஆயின் வள்ளல்தன்மையை வியந்து பாராட்ட, ஆய், தனக்கு நாகம் நல்கிய நீலநிற நல்லாடையினை ஆலமர் நீல

கண்டனுக்கு அளித்து மகிழ்ந்தான் என்ற ஒருகதையினை யும் அக்கால மக்கள் கட்டிவிட்டிருந்தனர் :

"நீல நாகம் நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த
சாவங் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி ஆய்." (சிறுபாண் : கூகூ-கூ)

கார்காலத் தொடக்கத்தே, உலகத்து உயிர்ப்பன்மை கள் எல்லாம் உள்ளம் உவக்குமாறு பலபல உருவத்தோடு எழுகின்ற மேகத்திரளைக் கண்ட புலவர் காரிக் கண்ணனார், அக்காட்சி, இரவலர் வருகையை எதிர்நோக்கி அவர்க்கு, அளித்தற் பொருட்டுத் தன் மனைமுன்றிற்கண் சேர்த்து வைக்கும் யானைத்திரள்போல் தோன்றுகிறது எனக்கூறி, ஆயின் வள்ளன்மையினை வாயார வாழ்த்தி யுள்ளார் :

"இரவலர் வரூஉம் அளவை அண்டிரன்
புரவெதிர்ந்து தொகுத்த யானை போல
உலகம் உவப்ப வோதரு
வேறுபல் உருவின் ஏர்தரு மழையே" (நற் : உஙௗ)

ஆய் அண்டிரன் தன் வாயில் முன் வந்து வாழ்த்தி நிற்கும் இரவலர்க்கு அவர் வேண்டுவனவற்றை ஆரவழங் கும் அருள் உள்ளம் உடையனுவன்; தன்னைப் பாடி வரு வார்க்கு அவன், ஆடியும் அசைந்தும் நடைபோடும் அழகிய குதிரைகளைக் கொடுப்பன்; களிறுகள் கணக்கில கொடுப்பன்; நெடிய பலதேர் தருவன்; வற்றாது வளங் கொழிக்கும் தன் நாட்டை நல்குவன்; தான் இருந்து வாழும் ஊரையே விரும்பினும் உவந்து தருவன் என உளம் மகிழ்ந்து பாராட்டி யுள்ளார், அவன் நாட்டிற்கு அண்டை நாட்டுப் புலவராய குட்டுவன் கீரனார்.

"ஆடுநடைப் புரவியும், களிறும், தேரும்
வாடா யாணர் நாடும் ஊரும்
பாடுநர்க்கு அருகா ஆஅய் அண்டிரன்." (புறம் : உசo)

கிழிந்த உடையின் தையலுக்கிடையே வாழும் பேன் ஒருபால் துன்புறுத்த, தம்மையும், தம் சுற்றத்தையும்

வாட்டும் பசிநோய் ஒரு சார் துன்புறுத்த, யாண்டேனும் சென்று பொருள் பெற்று மீளின், வழியில் அப் பொருளை யும் பறித்துக் கொள்ளும் ஆறலைகள்வர் அளிக்கும் கொடுமை பெருந்துயர்தர வருந்தும் புலவர்கள் தம் வறுமைவாழ்வின் துயரெலாம் அறிந்து போக்கி அருள் புரிய வல்லான் ஆய் அண்டிரனே எனக் கண்ட துறையூர் ஓடைகிழார், அவனை அடைந்து, "ஆய், இங்ஙனம் வறுமை யால் வருந்தும் எம்போல்வார்க்குக் கொடுப்பதே கொடை; எமக்கு வழங்குவோரே, உண்மை வள்ளல்களாவர்; எம்போல்வாரல்லார்க்குக் கொடுத்தல் கொடையாகாது; அது, யாதோ ஒரு பயன் கருதிக் கொடுப்பதாகுமாகை யால், அவ்வாறு அளிப்பார், பிறர்க்குக் கொடுத்தோராகார்; தமக்கே கொடுத்துக்கொண்டவராவர்; ஆகவே அன்னார் வள்ளல்கள் என வாழ்த்துப் பெறார்; ஆகவே, ஆய்! நின் தகுதிக்கு ஏற்கும் வகை எமக்கு வழங்கி வாழ்வளிப்பா யாக!" என அவன்பால் தாம் கொண்ட உரிமை தோன்றப் பொருள் வேண்டியுள்ளார்:

" ஆஅங்கு, எனைப்பகையும் அறியுநன் ஆய்
எனக் கருதிப், பெயரேத்தி
வாயார, நின் இசைநம்பிச்
சுடர்சுட்ட சுரத்தேறி
இவண்வந்த பெருநசையேம்;
எமக்கு ஈவோர், பிறர்க்குஈவோர்;
பிறர்க்குஈவோர் தமக்குஈபஎன
அனைத்துரைத்தனன் யானாக
நினக்கொத்தது நீநாடி
நல்கினை விடுமதி பரிசில்." (புறம்: கஙௌ)

ஆய், தன்பால் வந்து பொருள் வேண்டி நிற்போர், அப் பொருள் பெறும் தகுதியுடையராயினும், அல்லராயி னும் அவர்கள் அனைவர்க்கும், மிடாக்களில் ஆக்கிவைத் திருக்கும் சோற்றை, அவர்கள் கையிற் கொணரும் உண் கலன் நிறையக் கொடுப்பன்; அவன் காடு, யானைகள் நிறைந்தது; அக்காடுகளுக்கிடையே, அவனுக்கு உரிமை

யாய் இருந்தது தலையாறு என்னும் ஊர் என, அவன் கொடையையும், நாட்டையும் பாராட்டினர் பரணர்.

“ வல்லினும், வல்லா ராயினும் சென்றோர்க்குச்
சாலவிழ் நெடுங்குழி நிறைய வீசும்
மாஅல் யானை ஆஅய் கானத்துத்
தலையாற்று நிலைஇய சேயுயர் பிறங்கல்.”

(அகம் : கஙஉ)

ஆய் அண்டிரனைப் பாடிய புலவர் பலராயினும், அவன் புகழெலாம் தோன்றப் பாடிய புலவர், உறையூர் ஏணிச் சேரி முடமோசியார் ஒருவரே; ஆயைப் பாராட்டும் பெருஞ் சித்திரனர் எனும் புலவர், அவர் மோசியார் பாராட்டிய பெருமையுடையான் என்று பாராட்டியுள்ளமை யுணர்க. “ திருந்துமொழி, மோசி பாடிய ஆயும்” (புறம்: கஙஅ) அதியமான் நெடுமானஞ்சிக்கு ஒளவையார் போலவும், பாரிவேட்குக் கபிலர் போலவும், ஆய் அண்டிரனுக்கு அவைக்களப் புலவராய் இருந்து பாராட்டியவர்‘ உறையூர் ஏணிச்சேரி முடமோசியாரே யாவர்.

ஆய், தன்னைப் பாடிவரும் பாணர், பொருநர், புலவர், கூத்தர் முதலாயினோர்க் கெல்லாம் யானை பல அளித்து மகிழும் இயல்புடையன்; அவன் இவ்வாறு யானைகளையே பரிசாக அளிப்பதைக் கண்ட புலவர் முடமோசியார்க்கு ஓர் ஐயம் உண்டாயிற்று; உடனே அவனை அடைந்து “ஆய்! நின்னைப் பாடிவருநகர்க்கு நீ பரிசாக அளிக்கும் யானைகளை எண்ணக் காணல் இயலவில்லை; இவ்வாறு வருவார்க் கெல்லாம் யானைகளையே அளிக்கின்றனையே; அத்தனை யானைகளை நீ யாங்குப் பெறுகின்றனை; நின் நாட்டுப் பெண் யானைகள், ஒரு முறை கருவுற்றவழிப் பத்துக் கன்று களைப் பெற்றுத் தருகின்றனவோ?” எனத் தன் ஐயமும், வியப்பும் ஒருங்கே தோன்ற அவனை வினவுவாராயினர்.

“ விளங்குமணிக் கொடும்பூண் ஆஅய் நின்னாட்டு
இளம்பிடி ஒருசூல் பத்து ஈனும்மோ !” (புறம் : கஙப)

யானைகள் நிறைந்த காடொன்றைக் கண்டார் புலவர் முடமோசியார்; ஆயைப் பாடிப் பரிசில் பெறும் இரவலரிடத்து மட்டுமே யானைகள் மிகுதியாகக் காணப்படுமென அறிவேன்; ஆனால், இக் காடும் எண்ணற்ற யானைகளைக் கொண்டுள்ளது; இவ்வாறு யானைகளை மிகப் பலவாகப் பெற்றுள்ள இக் காடும் ஒரு கால் ஆயைப் பாடிப் பரிசில் பெற்றிருக்கும் போலும் என்று எண்ணி அமைதி கொண்டார்.

" அண்டிரன்
குன்றம் பாடின கொல்லோ?
களிறு மிகவுடைய இக்கவின்பெறு காடே."

(புறம் : கஙக)

ஆய், பரிசாக அளித்த யானைகளின் எண்ணிக்கையோடு வானத்து மீன்களின் எண்ணற்றொகையினை ஒருங்கு வைத்துக் காணல் இயலாது; வானத்து மீனினும் அவன் அளித்த யானைகள் அதிகமாம்; விண்மீன்கள், வானத்தின் இடையிடையே வெற்றிடம் தோன்ற இடம் பெற்றுளது போலன்றி, வானிடமெல்லாம் வெண்ணிறமே விளங்குமாறு, வான் முழுதுமே இடம் பெறுவதாயினும், அக் காலைய அவற்றின் எண்ணிக்கையும் ஆய் அளித்த யானைகளின் எண்ணிக்கையொடு நிகராகாது எனக் கூறி, அவன் யானைக் கொடையை மேலும் பாராட்டினர் புலவர்:

" ஆஅய் அண்டிரன் அடுபோரண்ணல்,
இரவலர்க் கீத்த யானையிற், கரவின்று
வானம் மீன்பல பூப்பின் ஆனது,
ஒருவழிக் கருவழி யின்றிப்
பெருவெள் ளென்னிற் பிழையாது மன்னே."

(புறம் : கஉகூ)

ஆய்அண்டிரன் யானைப் பரிசிலைச் சிறப்பித்துப் பாராட்டிய புலவர் மோசியார், அவன் பாணர் முதலாம் இரவலரைத் தன்னின் வேறாகக் கருதானாய்த், தன் பொருள் எல்லாம் அவர் பொருளே எனக் கருதும் இனிய உள்ளமும் உடையனும் பண்பினைப் பாணரும், புலவரும், பொரு

நரும் அவனுக்குரிய யானை, குதிரை, தேர் ஆய இவற்றையே யன்றி, அவன் பொருளனைத்தினையும் தம்முடையவாக் கருதி வளைத்துக் கொள்வராயின், ஆய் அப் பொருளை எனது எனத் தான் கவர்ந்துகொள்வானல்லன்; அவர் வளைத்துக் கொண்டன அனைத்தையும் அவர்க்கே அளித்து மகிழும் மாண்புடையனவன் எனக் கூறிப் பாராட்டி யுள்ளார் :

"களிறும் அன்றே; மாவும் அன்றே;
ஒளிறுபடைப் புரவிய தேரும் அன்றே;
பாணர் பாடுநர் பரிசிலர் ஆங்கவர்
தமதெனத் தொடுக்குவ ராயின், எமதெனப்
பற்றல் தேற்றாப் பயங்கெழு தாயம்." (புறம் : கடுரு)

ஆயின் கொடைப் புகழை எத்துணைதான் புகழினும், புகழ்வார் உள்ளம் அமைதியுறாது; அவன் கொடைச் சிறப் பினையும், கொடாதே சேர்த்து வைக்கும் செல்வர் தம் சீரின்மையும் ஒருங்கே கூறின் ஓரளவு அவர் உள்ளம் அமைதியுறும்; இவ்வுண்மை யுணர்ந்த உறையூர் ஏணிச் சேரி முடமோசியார், "உண்டற்கினிய அறுசுவையோடு கூடிய உணவினைப் பிறர்க்கு அளித்து உண்ண எண்ணு ராய்த் தாமே தனித்து உண்டு கொழுத்தும், உயர்ந்தோ ரால் உயர்த்திக் கூறப்பெறும் புகழினைப் பெறுதலன்றிப் பெருஞ் செல்வத்தை வறிதே சேர்த்து வைத்தும் வாழும் செல்வர்தம் சீரிலா மன்றம், தன்னைப் பாடி வந்தார்க்கு வழங்கிவிட்டமையால், கன்றுகள் இல்லாமையால், கான மயில்கள் களித்து ஆடும் கட்டுத்தறிகளையும், அணிகளை யெல்லாம் அவர்க்கே அளித்துவிட்டமையால், எடுத்துப் பிறர்க்கு வழங்கலாகா அணியாகிய மங்கல அணியன்றிப் பிறிதணி எதுவும் இல்லாத அவன் உரிமை மகளிரையும் கொண்டுள்ளமையால் பொலிவிழந்து தோன்றுகிறது எனப் பிறராற் கூறப்பெறும் ஆய் அண்டிரனின் அரண் மனை முன்றிலொடு நிகருடையதாகாது" என்று கூறிக் கொடுத்து வறியனாய ஆயைப் போற்றியும் புகழ்ந்தும் பாராட்டினர்.

“பாடின் பனுவல் பாணர் உய்த்தெனக்
களிறு இலவாகிய புல்லரை நெடுவெளில்
கான மஞ்ஞை கணனொடு சேப்ப,
ஈகை அரிய இழையணி மகளிரொடு
சாயின்று என்ப ஆஅய் கோயில்.
சுவைக்கு இனிதாகிய குய்யுடை அடிசில்
பிறர்க்கு ஈவின்றித் தம்வயிறு அருத்தி
உரைசால் ஓங்குபுகழ் ஓரீஇய
முரைசுகெழு செல்வர் நகர் போலாதே.”

(புறம் : கஉஎ)

உலகத்தில் அறம் செய்வார் இருவகையராவர்; அருள் ஒன்றே கருதி அறம் செய்வார் ஒருசிலர்; இப் பிறப்பில் நல்லன செய்யின், மறு பிறப்பில் நல்லன பெற்று நன்கு வாழலாம் என்ற எண்ணமுடையாராய் அறம் செய்வார் ஒரு சிலர்; இவற்றுள், முன்னரதே அறம் எனச் சிறப்பிக்கப் பெறும்; ஆய், “வறியார்க்கொன்று ஈவதே ஈகை” என்ற அறிவுடையனுய்ப், பொருளின்றி வந்தார்க்கே வழங்கும் வள்ளியோனுவன்; அவ்வாறு வழங்குமிடத்தும், இம்மை யில் வழங்கின், மறுமையில் வளமுடன் வாழலாம் என்ற வாணிக உள்ளங்கொண்டு வழங்குவானல்லன்; வறியார்க்கு வழங்குவது ஆன்றோர் கண்ட அறவழி; ஆகவே வழங்கு கின்றேன் என்றே வழங்கும் வழக்கம் உடையனுவன். ஆயின், இவ்வருள் உள்ளத்தையும் உணர்ந்து பாடியுள் ளார் உறையூர்ப் புலவர் முடமோசியார் :

“இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்
அறவிலை வணிகன் ஆய் அலன்; பிறரும்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன்று அவன்கை வண்மையே.”

(புறம் : கங௪)

உலகிற் பிறந்தார் ஒவ்வொருவரும் புகழ்பெற்றுத் திகழ்தல் வேண்டும்; புகழ் பலவழியானும் வரும் எனினும், வறியார்க்கு ஈந்து, அதனுல் வரும் புகழ் உடைமையே உண்மைப் புகழாம்; உயர்வுடைப் புகழாம்;

"உரைப்பார் உரைப்பவையெல்லாம் இரப்பார்க் கொன்று ஈவார்மேல் நிற்கும் புகழ்"! என்ப. ஞாயிறு உலகிற்கு உயர்ந்த இடத்தே இருந்து உலகெலாம் காண விளங்குகிறது ஆயினும், அதன் காட்சி, வருவார்க்கெலாம் வழங்கும் வள்ளியோனை ஆயின் புகழ்க்காட்சிபோல் உயர்வுடையதாகாது என்று கூறுகிறார் முடமோசியார்:

"கழல்தொடி ஆஅய் அண்டிரன் போல
வண்மையும் உடையையோ? ஞாயிறு!
கொன்விளங் குதியால் விசும்பி னோனே."

(புறம்: ௩௭௪)

இமயம் சேர்ந்த காக்கையும் பொன்னிறம்பெறும்; மலரொடு சேர்ந்த நாரும் மணம்பெறும் என்றெல்லாம் கூறுவர்; ஆய், அருட்பெரும் வள்ளல்; ஆகவே, அவன் நாட்டு வாழ்வார்பாலும் அவ்வருள் உள்ளம் குடிகொண்டு விட்டது: அவன் நாட்டுக் குறவர்கள், பாணர் முதலாம் இரவலரை எதிரே காணின், உடனே, தம் வில்லால் வீழ்த்திய முள்ளம்பன்றியின் கொழுத்த ஊனையும், தம் மலையகத்தே கிளைத்துவளரும் சந்தனக் கட்டையையும், யானைக் கோடுகளையும் புலித்தோலில் வைத்து வழங்கி வழிபடுபவர் எனின், வருவார்க்கு வழங்கும் ஆயையும், அவன் நாட்டையும் வாழ்த்தாதார் உளரோ:

"சிலைப்பாற் பட்ட முளவுமான் கொழுங்குறை
விடர்முகை அடுக்கத்துச் சினைமுதிர் சாந்தம்
புகர்முக வேழத்து மருப்பொடு மூன்றும்
இருங்கேழ் வயப்புலி வரியதட் குவைஇ
விருந்திறை நல்கும் நாடன் எங்கோன்
கழல்தொடி ஆஅய் அண்டிரன்." (புறம்: ௩௭௪)

ஆய் அண்டிரன், தன் அரசவை அமர்ந்து, ஆங்கு வரும் இரவலர்க்கெல்லாம் வழங்கும் நெடியபல தேர்களையும், அத் தேரிற் கட்டிய மணிகளின் ஒலியையும் கண்டும், கேட்டும், அவன் நாளோலக்கச் சிறப்பினை நனிமிகப் பாராட்டியுள்ளார் நற்றிணைப் புலவர் ஒருவர்.

" ஆஅய்,
வண்மகிழ் நாளவைப் பரிசில் பெற்ற
பண்ணமை நெடுந்தேர்ப் பாணியின் ஒலிக்கும்"
(நற்: கசூள)

இவ்வாறு கொடையாற் சிறந்த குன்றென நின்ற ஆய் அண்டிரன் இறந்துவிட்டான்; வருவார்க்கெல்லாம் வாரி வழங்கிய வள்ளலாய ஆய், இம்மையில் இறப்ப உயர்ந்த வாழ்வுடையனைதைப் போன்றே, மறுமையிலும் வாழ்வாங்கு வாழ்தல்வேண்டும் என விரும்பினர் அக்கால மக்கள் எல்லாம்; அவர் உள்ள வேட்கை, உறையூர்ப் புலவரின் உள்ளத்தே ஓர் அழகிய பாட்டாக உருப்பெற்றெழுந்தது; முடமோசியார், இரவலர்க்குத், தேர்பல ஈந்த இனியோனுய ஆய், விண்ணவர் வேந்தனும் பிறரும் முரசு முதலாயின முழங்க, ஆடல் மகளிர் சூழவந்து வரவேற்றுப் பெருமைசெய்ய, ஆண்டு இனிதுவாழும் வாழ்க்கையினைத் தம் அகக்கண்களால் கண்டார்; ஆங்கு அவனை வரவேற்குங்கால் எழுந்த ஆரவாரப் பேரொலியைக் கேட்டும் அசு மிக மகிழ்கிருர்:

" திண்டேர் இரவலர்க்கு ஈத்த தண்தார்
அண்டிரன் வரூஉம் என்ன, ஒண்தொடி
வச்சிரத் தடக்கை நெடியோன் கோயிலுள்
போர்ப்புறு முரசம் கறங்க
ஆர்ப்பெழுந் தன்றால் விசும்பி னானே." (புறம்: உசுக)

முடமோசியார், ஆய் ஆண்டுப்பெறும் இன்ப வாழ்வு கண்டு அகம் மகிழ, குட்டுவன் கீரனர், ஆயை இழந்த புலவர் முதலாம் இரவன்மாக்கள், வறுமையால் வாடி வற்றிய வயிற்றினராய், ஒளிஇழந்த கண்ணராய், ஒட்டிய உடலினராய்த் தம் பெருஞ் சுற்றம் தம்மைப்போன்றே வருந்தித் தம் பின்தொடர்ந்துவரத் தம்மைப் பேணிப் புரக்கும் பிறநாடுகளைத் தேடித்திரியும் அவலநிலையை எண்ணி யெண்ணி இரங்குவார்போல், ஆயின் பிரிவுகண்டு பெரிதும் வருந்துவராயினர்; இவ்வாறு உலகெலாம் வருந்த, மறைந்த ஆயின் மாண்புகழ் வாழ்க வாழ்க என வாழ்த்துவோமாக!

"ஆடுநடைப் புரவியும், களிறும், தேரும்
வாடா யாணர் நாடும், ஊரும்
பாடுநர்க்கு அருகா ஆஅய் அண்டிரன்
..........................................
மேலோர் உலகம் எய்தினன்
..........................................
புல்லென் கண்ணர், புரவலர்க் காணது
கல்லென் சுற்றமொடு கையழிந்து, புலவர்
வாடிய பசியராகிப் பிறர்
நாடுபடு செலவினர் ஆயினர் இனியே." (புறம்: உ௪0)

## ௩. ஓரி

மேற்குத்தொடர்ச்சி மலைக்கண், கொல்லி என்றொரு மலையுண்டு; முதிர்ந்த கனிகளும், முற்றிய தேனும் நிறைந்த அம்மலையின் குடதிசைக்கண் அழகிய பாவை யொன்று உண்டு. அழகெலாம் ஓர் உருக்கொண்டாலன்ன அப் பாவை கடவுளால் ஆக்கப்பட்டது; காற்று மோதி யடித்தாலும் மழை விரைந்து வீசினாலும், இடி சினந்து முழங்கி மோதினாலும், இவைபோலும் பிற ஊறுபாடுகள் ஒருங்குவந்து உறுத்தினாலும், உலகமே உருத்தெழுந்து எதிர்த்தாலும் தன் இயல்பில் இம்மியும் குறையாதது என் றெல்லாம் பாராட்டப்பெறும் பெருமை வாய்ந்தது அப் பாவை:

"கொல்லி, ஒளிறுநீர் அடுக்கத்து வியலகம் பொற்பக்
கடவுள் எழுதிய பாவை."

"கொல்லி,
நிலைபெறு கடவுள் ஆக்கிய
பலர்புகழ் பாவை." (அகம்: ௬௨—௨0௧)

"கொல்லிக்,
கருங்கட் டெய்வம் குடவரை எழுதிய
நல்லியற் பாவை." (குறுந்: ௮௯)

"கொல்லிக் குடவரைப்
பூதம் புணர்த்த புதியியல் பாவை."

"செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லித்
தெய்வங் காக்கும் தீதுதீர் நெடுங்கோட்டு
அவ்வெள் ளருவிக் குடவரை யகத்துக்
கால்பொருது இடிப்பினும் கதழ்உறை கடுகினும்
உருமுடன்று எறியினும் ஊறுபல தோன்றினும்,
பெருநிலங் கிளரினும் திருநில உருவின்
மாயா இயற்கைப் பாவை." (நற்: ௧௯௨—௨0௧)

கொல்லிமலை நாட்டார், உழுதொழில் தவறி உண வின்றி வருந்தும் நிலை வந்துற்ற காலத்தே, காட்டில்

வேட்டையாடிக் கொன்ற யானைகளின் கோடுகளை விலையாகத்தந்து பெற்ற உணவுண்டு உயிர்வாழ்வர் :

"காந்தள் வேலிச் சிறுகுடி பசிப்பின்
கடுங்கண் வேழத்துக் கோடுநொடுத் துண்ணும்
வல்வில் ஓரி கொல்லிக் குடவரை." (குறுந்: க00)

இக் கொல்லி மலையையும், அம் மலையைச் சூழ அமைந்த சிறு நாட்டையும் ஆண்டிருந்தான் ஓரி எனும் பெயருடையானொரு குறுநில மன்னன்; ஓரி விற்போர் வல்லவன்; வில்லேந்தி வேட்டம்புரியும் வகை நன்கறிந்தவன்; அதனால் வல்வில் ஓரி என வழங்கப்பெற்ற சிறப்புடையவன்; இவன் வில்லாற்றல் வன்மையை நேரிற்கண்டு வியந்து பாராட்டினாரும் உளர்; ஓரியின் கைவில்லினின்றும் புறப்படும் ஓர் அம்பு விரைந்துசென்று தொடக்கத்தில் வலிய வேழத்தை வீழ்த்தும்; பின்னர்ப் புலியின் உயிரைப் போக்கும்; ஆண்டுநின்றும் புறம் போந்து மானை மாளச் செய்யும்; பன்றியின் உயிரைப் பறிக்கும்; இறுதியாகப் புற்றில் அடங்கிக் கிடக்கும் உடும்பின் உடலிற் சென்று தைத்துச் செயலறும் எனின் அவன் வில்லாண்மையினை வியவாது நிற்பாரும் உளராமோ!

"வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி
பேழ்வாய் உழுவையைப் பெரும்பிறிது உறீஇப்
புழற்றலைப் புகர்க்கலை உருட்டி, உரற்றலைக்
கேழல் பன்றி வீழ, அயலது
ஆழற் புற்றத்து உடும்பிற் செற்றும்
வல்வில் வேட்டம் வலம்படுத்து இருந்தோன்."
(புறம்: கருஉ)

வில்லாண்மை மிக்க வீரனாக விளங்கிய வல்வில்ஓரி, வரையாது வழங்கும் வண்மையு முடையனாவன்; மாரிபோல் வழங்கும் மனவளம் உடைய ஓரி, தன்னைப் பாடி வரும் பாணர் முதலாயினார்க்குத் தேர் பல உவந்தளிக்கும் தெளிந்த உள்ளமும் உடையனாயினான்; "மாரிவண் மகிழ் ஓரி" என்றும், "திண்டேர்க் கைவள் ஓரி" என்றும்

இவன் வண்மையினை வியந்து பாராட்டுவர் புலவர் ; பாணர், பொருநர், கூத்தர் முதலாம் இரவலர், அவன்பால் பல காலுஞ் சென்று, பரிசிற் பொருளாகத் தேர் பல பெற்று வருவர் ; அவ்வாறு பெற்று மீளும் தேர்களிற் பூண்ட குதிரைகளின் கால்களால் மிதியுண்டு மிதியுண்டு, கொல்லி மலைமேல் ஏறுதற்காம் கல்லிடைச் சிறுநெறி, ஆண்டு வரும் இரவலர் துயர் ஒழித்து இனிது ஏறுதற்கேற்ற செவ்வி யுடைத்தாயிற்று எனக் கூறிப் பாராட்டுமளவு, அக் கொல்லி நகர்க் கோவின் கொடை உயர்ந்து விளங்கிற்று :

"பாணர்,
பரிசில் பெற்ற விரியுளை நன்மான்
கவிகுளம்பு பொருத கன்மிசைச் சிறுநெறி
இரவலர் மெலியாது ஏறும் பொறையன்
உரைசால் உயர்வரைக் கொல்லி." (நற்: கஅ௬)

ஓரி தன்னைப் பாடிவரும் பாணர், பொருநர், கூத்தர் முதலாம் இரவலர் தமக்குப் பொன்னாலாய மலர்களை, மணிகளுக்கிடையிடையே யிட்டு, வெள்ளியாலாய நாரில் தொடுத்து அணிவிப்பன் ; பொன்னும் பொருளும் அளிப் பன் ; ஊர்ந்து செல்லற்காம் களிறுகள் கணக்கில தருவன் ; இதனால் அவர்கள் வறுமையான் வருந்துவ தொழிந்தனர் ; பொருள் வேண்டிப் பிறரைப் பாடவேண்டும் நிலையிலராயி னர் ; ஆகவே, தங்கள் தொழில்களாம் ஆடல் பாடல்களை யும் அறவே மறந்தனர் ; ஓரி அளிக்கும் கொடை அத்துணை உயர்வுடைத்தாம் எனக் கூறிப் பாராட்டுகின்றார் வன் பரணர் :

"எம் கண் ணுளங்கடும்பே,
பனிநீர்ப் பூவா மணிமிடை குவளை
வால்நார்த் தொடுத்த கண்ணியும், கலனும்
யானை இனத்தொடு பெற்றனர் நீங்கிப்
பசியா ராகல் மாறுகொல், விசிபிணிக்
கூடுகொள் இன்னியங் கறங்க
ஆடலும் ஒல்லார் தம் பாடலும் மறந்தே."

(புறம்: கரு௩)

வல்வில் ஓரி வரையாது வழங்கும் வள்ளியோனு வன்; தன்பால் பரிசில் வேண்டி வந்தாரை வறிதே அனுப்பியறியான் அவன்; அவன் அன்னனுகவே, அவன் பால் பொருள் வேண்டிச் சென்றுருள் யாரேனும் எக்கார ணத்தாலோ பொருள் பெருராயின், அவர், அவன்பால் பரிசில் பெறலாகாத் தம் ஆகூழ் இன்மையினைப் பழிப்பரே யல்லாமல், அதுகுறித்து அவனைப் பழித்தறியார் எனக் கூறி, அவன் வண்மையினை வாயார வாழ்த்தியுளார் கழை தின்யானையார் :

> "புள்ளும், பொழுதும் பழித்தல் அல்லதை
> உள்ளிச் சென்றோர்ப் பழியலர்; அதனுல்
> புலவேன் வாழியர் ஓரி! விசும்பின்
> கருவி வானம் போல
> வரையாது சுரக்கும் வள்ளியோய் நின்னே."

(புறம் : உ0ச)

ஓரிபால் மற்றோர் உயர் குணமும் ஒன்றியிருந்து அவன் உயர் புகழிற்குக் காரணமாயது; அறிவு உரு திரு வான் நிறைந்த ஆன்றோர், தம்மைத் தம் முன்னரே பிறர் புகழ்ந்துரைத்தலைப் பொறார்; அவர் புகழ்வன கேட்கப் பெரிதும் உளம் நாணுவர்; இந் நாணமே அவர்க்கு நல்ல தோர் அணிகலமாம்; "சான்றோர், புகழும் முன்னர் நாணுப" (குறுந் : உருஉ); "தம்புகழ் கேட்டார் போல் தலைசாய்த்து மரம்துஞ்ச" (கலி : கககூ) எனக் கூறுதல் காண்க. இச் சிரிய பண்பு வல்வில்ஓரிபாலும் சிறந்து விளங்கிற்று; ஓரியின் வில்லாற்றலை நேரிற் கண்டு களித்த வர் வன்பரணர்; வன்பரணர் நாடு பல சுற்றியவர்; தாம் சென்ற நாடுகளில் யாண்டும், இவனை யொத்த வில்லாளர் இன்மையறிந்த அவர், அவனை வியந்து பாராட்டச் சொல்லெடுத்தார்; அவர் கூறும் புகழுரைகளைக் கேட்க நாணிற்று அவன் உள்ளம்; ஆகவே, அவர் மேலும் சொல் லாடாவாறு இடைபுக்குத் தடுத்து விட்டான்; என்னே! அவன் பண்பு நலம்!

"கோவெனப் பெயரிய காலை, ஆங்கது
தன்பெயயரி ராகலின் நாணி, மற்றுயாம்
நாட்டிடன் நாட்டிடன் வருதும்; ஈங்கோர்
வேட்டுவர் இல்லை நின்னெப் போர்என
வேட்டது மொழியவும் விடாஅன்." (புறம் : கடுஉ)

கடையெழு வள்ளல்களுள் ஒருவனுய்க் குமணனுக்கும் ஓய்மானுட்டு நல்லியக்கோடனுக்கும் முற்பட்டோனுய் வாழ்ந்த வல்வில்ஓரி, தன் பெயரே பூண்ட குதிரைமீது அமர்ந்து அமர் உடற்றும் பெரு வீரனுதலோடு, தன் படையுள், மழவர் என்ற சிறந்த வீரரையும் பெற்றிருந்தான்;

"ஓரிக்குதிரை ஓரி." (சிறுபாண் : கககக)
"மழவர் பெருமகன் மாவள் ஓரி." (நற்றிணை : ருஉ)

தன் நாட்டின் எல்லைக்குட்பட்ட ஒரு மலையையும், அதைச் சூழ உள்ள சிறு நாட்டையும் பிறனெருவன் உரிமை பூண்டு ஆள்வதைப் பொருளுயினன் அக்காலைச் சேர நாட்டரசனுக விளங்கிய தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை; அவன் கொல்லி மலையைத் தனதாக்கிக் கொள்ளத் துணிந்தான்; அவன் கருத்தறிந்தான் அவன் நண்பனுய மலையமான் திருமுடிக்காரி; உடனே கொல்லியை அடைந்து ஓரியொடு போரிட்டு அவனை அழித்தான்; அவ் வெற்றிச்சிறப்புத் தோன்ற, அக்கொல்லி நகர்க்கண் வெற்றித்திருவுலா வந்தான்; வென்ற கொல்லியைச் சேரனுக்கு உரிமையாக்கினன்; ஓரிக்கு உரிமையாய கொல்லி, சேரர்க்கு உரித்தாயிற்று; ஓரியும் உயிர் இழந்து உயர்ந்தோர் உலகம் புகுந்தான்:

"காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
ஓரிக்குதிரை ஓரி." (சிறுபாண் : கக0-கககக)

"முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி
செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்
ஓரிக் கொன்று சேரலர்க் கீத்த
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி."
(அகம் : உ0க)

" பழவிறல்
ஓரிக் கொன்ற ஒருபெருந் தெருவில்
காரி புக்க நேரார் புலம்." (நற் : ௩௨0)

இவ்வாறு ஆற்றலும், அருளும் தோன்ற வாழ்ந்த வல்வில் ஓரியைக் கபிலர், கல்லாடர், கழைதின்யானையார், நல்லூர் நத்தத்தனார், பரணர், பாலத்தனார், பெருஞ்சித்திரனார், வன்பரணர் முதலாம் புலவர் எண்மர் இனிது பாராட்டியுள்ளனர்! வாழ்க அவன் கொற்றம்! வளர்க அவன் கொடை!

## ச. காரி

தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டியர்களாகிய மூவேந்தர் வழிவந்தோர் ஆண்டுகொண்டிருந்த அந்தக் காலத்திலேயே, அவர்களுக்கு அடங்கியும் அடங்காமலும் அதியர், ஆவியர், மலையர், வேளிர்போன்ற வேறு பிற இனத்தரசர்களும் ஆண்டுவந்துள்ளனர்; மூவேந்தர்கள் குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட நாட்டை ஆண்டுவந்தது போன்றே, இக் குறுநில மன்னர்களும் தங்கள் ஆட்சிக்குரிய நிலமாக ஓர் எல்லைக்குட்பட்ட சிறுநாட்டைப் பெற்று விளங்கினர்; அத்தகைய அரச இனங்களுள் ஒன்றாகிய மலையர் அல்லது மலையமான்கள் என்பார், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளதும், பெண்ணையாற்றின் கரைக்கண்ணதாய திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டதும் ஆய சிறு நாடொன்றை ஆண்டுவந்தனர்; அந்நாடு பண்டைக்காலத்தில் மலாடு அல்லது மலைய மானாடு என்று பெயர் பெற்றிருந்தது; அந்நாடு, காடும், மலைகளும் சூழ நடுநாட்டில் இருப்பதால், கடலால் கலக்குறுவதோ பகைவரால் பாழுறுவதோ அற்றது; அந் நாட்டிடையே முள்ளூர் என்ற அழகிய பயன்மிக்க மலையொன்றும் இருந்தது; சந்தன மரங்கள் செறிந்த அம் மலையும், அம் மலையகத்துக் கானகமும் கடிமணம் நாறும் கவின் உடையது; அந்தணர் பலரும் அகமுவந்து வாழ்தற்காம் அத்துணை வளமும் கொண்டது அம் மலாடு :

"துஞ்சா முழவின் கோவற் கோமான்
நெடுந்தேர்க் காரி கொடுங்கான் முன்துறைப்
பெண்ணையம் பேரியாற்று நுண்ணறல்."

(அகம் : ௩௫)

"கடல்கொளப் படாஅது; உடலுநர் ஊக்கார்;
கழல்புனை திருந்தடிக் காரி நின்னாடே:
அழல்புறந் தரூஉம் அந்தண ரதுவே." (புறம்: ௧௨௨)

"பெண்ணையம் படப்பை நாடுகிழ வோயே."

(புறம்: ௧௨௬)

"எஃகு விளங்கு தடக்கை மலையன் கானத்து
ஆரம் நாறும்." (குறுந்: ககூஅ)

"முரண்கொள் துப்பின் செவ்வேல் மலையன்
முள்ளூர்க் கானம் நாற." (குறுந்: ௩௧௨)

கிழக்கே சோணாடும், மேற்கே சேரநாடும் கிடக்க, இடைப்பட்ட இடத்தே கிடந்ததால், மலாடு, அவ்விரு பேரரசுகளின் வெற்றி தோல்விகட்கும் பெரிதும் காரணமாய் விளங்கிற்று. அவ்விருபெரு வேந்தர்கட்கிடையே நிகழும் போரில், மலையமான்கள் யாவர் பக்கம் படைத்துணை நிற்கின்றனரோ, அவர்களே வெற்றிபெறுவர் என்ற பெருமைக்குரியவராயினர்; சேரனும் சோழனும் பகைகொண்டு மேற்கொள்ளும் போர்க்கண், இவ்வெற்றி மலையமான் தந்தது என வெற்றிபெற்றோனும் மலையனையே பாராட்டுவன்; பகைவன், மலையன் படைத்துணை பெற்றிலனேல் யானே வெற்றியுற்றிருப்பன் எனத் தோற்றோனும் மலையமான் மாவலியினையே மன்தாரப் பாராட்டுவன்; இவ்வாறு அக்காலத் தமிழகத்தின் அரசியல்வாழ்வை வகுத்துக் காட்டும் வன்மையுடையராய் விளங்கிய மலையமானுட்டார், அவ்வக்கால அரசியல் நிலைகட்கு ஏற்பச், சிலகால் சேரர்க்கும், சிலகால் சோழர்க்கும் படைத்துணை புரிவாராயினர்.

"கடந்துஅட்டு வென்றோனும் நிற்கூ றும்மே,
'வெலிஇயோன் இவன்' எனக்;
'கழலணிப் பொலிந்த சேவடி நிலங்கவர்பு
விரைந்துவந்து சமந்தாங்கிய
வல்வேல் மலையன் அல்ல னாயின்,
நல்லமர் கடத்தல் எளிதுமன் நமக்கு' எனத்
தோற்றோன் தானும் நிற்கூ றும்மே." (புறம்: கஉ௫)

மலைய மன்னர்களுள், திருமுடிக்காரி என்பவன் சிறந்தவனாவன்; காரி என்ற தன் பெயரே பூண்ட குதிரை மீது ஏறிப் போரிடும் பெருவீரன்; பகைவர் நாட்டுப் பசு நிரைகளைக் கவர்ந்து வருவதில் தன்னை ஒப்பாரும், மிக்

காரும் இல்லா உரவோனவன்; முள்ளூர் மலையினைக் கைப் பற்றவேண்டும் என்ற பேராசை கொண்டு பெரும்படை யுடன் வந்து தங்கிய ஆரிய அரசர்களை அலற அலறத் தாக்கி வென்று துரத்தி வீறெய்தியவன்.

“ காரி ஊர்ந்து பேரமர்க் கடந்த
மாரி ஈகை மறப்போர் மலையன்.” (புறம்: கருஅ)

“ முனையூர்ப்
பல்லா நெடுநிரை வில்லின் ஒய்யும்
தேர்வண் மலையன்.”

“ மாயிரு முள்ளூர் மன்னன் மாவூர்ந்து
எல்லித் தரீஇய இனநிரைப்
பல்லான் கிழவரின் அழிந்த.” (நற்; க00,உகக)

“ ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்ப்
பலருடன் கழித்த ஒள்வாள் மலையனது
ஒருவேற்கு ஓடியாங்கு.” (நற்: கஎ0)

முள்ளூர் மலைநாட்டை மலையமான் திருமுடிக்காரி ஆண்டிருந்த காலத்தே, அதியமான் நெடுமானஞ்சி என்பா னொரு குறுநில மன்னன் சேரநாட்டின் ஒரு பகுதியைக் கைப்பற்றி, இன்று தர்மபுரி என வழங்கும் தகடூர்க்கண் இருந்து ஆண்டுவந்தான்; தன்குலத்தவரும், தன் பகைவரு மாய சேரர்க்குப் படைத்துணை அளிக்கின்றான் மலையன் என்ற காரணத்தாலோ அன்றி வேறு எக்காரணத்தாலோ மலையனொடு பகைகொண்டான் அதியன்; தன் படை கொண்டு மலாடு புக்குத் திருக்கோவலூர்க்குப் பேரழிவும் உண்டாக்கினன்; அவன் ஆண்டுப்பெற்ற வெற்றி பரணரும் பாராட்டுமளவு பெரும் வெற்றியாயிற்று; கோவலூர்க்கண் அதியன் பெற்ற வெற்றியைப் பரணர் பாராட்டினர் எனக் கூறியுள்ளார் அருந்தமிழ் மூதாட்டி ஔவையார் :

“ பரணன் பாடினன் மற்கொல் மற்றுநீ
முரண்மிகு கோவலூர் நூறிநின்
அரண்அடு திகிரி ஏந்திய தோளே.” (புறம்: கக)

அதியன்பால் தோல்விகண்ட மலையன், அவனை எவ் வாறேனும் வெற்றிகோடலை விரும்பினான்; அக்காலைச் சேரநாட்டில் பெருஞ்சேரல் இரும்பொறை என்பானொரு பெருவேந்தன் வாழ்ந்திருந்தான்; அவன் அதியன்பால் பகைகொண்டுள்ளான் என்பதறிந்த மலையமான் அவன் துணைகொண்டு அதியனை அழிக்கத் துணிந்தான்; ஆனால் பெருஞ்சேரல் இரும்பொறையின் எண்ணமெல்லாம் பிறி தோரிடத்தே பிணிப்புண்டிருந்தது; தன் நாட்டில் ஒரு பகுதியை அதியமான் நெடுமான் அஞ்சி கைப்பற்றி ஆண்டு கொண்டிருத்தலைப் போன்றே, மற்றொரு பகுதியாம் கொல்லிமலையை வல்வில் ஓரி எனும் வில்லாண்மை மிக்க வீரன் ஒருவன் கைப்பற்றிக் கொண்டிருந்தான்; அதியமா னுபின், சேரர்குலத் தொடர்புடையவன்; ஓரிக்கு அவ்வுற வொற்றுமையும் இல்லை; ஆகவே, அதியனினும், ஓரி யையே முதற்கண் ஒழித்தல் வேண்டும் என்ற எண்ண முடையனாயினான் பெருஞ்சேரல் இரும்பொறை; இதை அறிந்தான் மலையமான்; அவன்தன் குறை முடித்தல் வேண்டுமாயின், தான் அவன்குறை முடித்தல் இன்றியமை யாததாம் என உணர்ந்தான்; உடனே கொல்லியை நோக்கிப் படையொடு சென்றான்; ஓரியையும் கொன்றான்; கொல்லி யைச் சேரர்க்கு உரிமையாக்கினான்; ஆண்டுத் தான் பெற்ற வெற்றி விளங்கித் தோன்றுமாறு, அக் கொல்லி நகர்த் தெருக்களில், நால்வகைப் படையும் சூழ்ந்துவர, பேரார வாரத்துடன் வலம்வந்து வெற்றிவிழாக் கொண்டாடினான்:

“ முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி
செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்
ஓரிக் கொன்று சேரலர்க்கு ஈத்த
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி.”

209

(அகம்: உ0௯)

“ ஓரிக் கொன்ற ஒருபெருந் தெருவில்
காரிபுக்க நேரார் புலம்போல்
கல்லென் றன்றால் ஊரே.”

320

(நற்: ௩உ0)

ஓரியை வென்று காரி அளித்த கொல்லிமலையைப் பெற்றுப் பெருமகிழ்ச்சி கொண்ட பெருஞ்சேரல் இரும் பொறை, அம்மலையன் உளம் உவக்குறுமாறு தகடூரை முற்றி அதியனை அழித்தான்; தன்னைப் பகைத்த அதியன் அழிவு கண்டு மலையமான் திருமுடிக்காரியும் மனம்மி கமகிழ்ந்தான்.

மூவேந்தர்கள் ஒற்றுமையுடன் உலகாண்டவரல்லர்; அவர் ஒவ்வொருவரும் பிறரை அடக்கி ஆளவேண்டும் என்ற எண்ணமுடையராவர்; ஒருகுடியில், ஒரு காலத்தே ஆற்றல் மிக்க அரசன் ஒருவன் தோன்றி விட்டால், அவன் பிற அரசுகளை யெல்லாம் பணியவைத்துப் பேரரசனாய் வாழவேண்டும் என்று எண்ணுவதும், அவன் ஆற்றலும் செல்வமும் கண்டு மனம் பொறாத ஏனைய அரசர்கள் அனை வரும் ஒன்று கூடி அவனை அழிக்க வழி கோலுவதும் அக் கால வழக்கமாம்; ஒரு குடியிற் பிறந்தார், பிற குடியிற் பிறந்தாரோடு பகைத்து வாழ்தலோடு நின்றாரல்லர்; ஒரு குடியிற் பிறந்தவர்களே ஒருவரோ டொருவர் பகைத்துப் போர் மேற்கொள்வர்: அம்மட்டோ! தந்தை மகனை எதிர்ப் பன்; மகன் தந்தைமேல் போருக்கு எழுவன்; இதுதான் பழைய தமிழகத்தின் அரசியல் நெறி.

மலையமான் திருமுடிக் காரியும், பெருஞ்சேரல் இரும் பொறையும் வாழ்ந்த காலத்தே, சோணாடாண்ட சோழ வேந்தருள் சிறந்து விளங்கினான் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்பான்; மலையமான் தன் பகைவேந்த னாய பெருஞ்சேரல் இரும்பொறைக்குப் படைத்துணை அளிக்கின்றான் என்ற காரணத்தாலோ. அல்லது சோணாட் டில் நடைபெறும் அரசியற் றலைமைப் போராட்டத்தில் தன் தாயத்தார்க்குத் துணை புரிந்தான் அல்லது புரிவான் என்ற காரணத்தாலோ, கிள்ளிவளவன் மலையமான் திரு முடிக்காரிபால், மாற்றொணாச் சினங்கொண்டான்; மலையமா னொடு போரிட்டு வென்று அவன் மக்கள் இருவரையும் கைப்பற்றிக் கொண்டு போய்த் தன் யானையின் காற்கீழிட் டுக் கொல்லவும் துணிந்தான்.

அக்காலே ஆண்டிருந்த கிள்ளிவளவன் அவைக்களப் புலவருள் ஒருவராய கோவூர்கிழார், அவ்வளவனை அணுகி "வளவ! 'உற்ற துயர் ஒழித்து உயர் வாழ்வளிக்க வேண்டுகின்றேன்' என வாய்திறந்து குறைகூறும் வகையற்ற புறாப் போலும் சிற்றுயிர்க்குற்ற துயரையும் போக்கும் உயர்குணமுடையோர் நின்முன்னோர்; நின் யானையால் கொல்லப்படவிருக்கும் இவர்களோ, அறிவுடைப் பெருமக்கள் வறுமையால் வாடுவதஞ்சித் தம்மிடத்துள்ளன எல்லாம் அளித்து வாழும் அருட்குணமுடையோர் வழி வந்தவராவர்; இவ்வாறு அடைக்கலம் புகுந்தாரை ஆதரிக்கும் அருட்குணமுடையோர் வழி வந்த நீ, அண்டியோரை ஆதரிக்கும் அக்குணமே உடையோர் வழிவந்த இவரை அழிக்க எண்ணுதல் அறச்செயலாமோ? மேலும், இவர்கள் நின்னொடு பகைத்துப் போரிடும் பருவமுற்றாரும் அல்லர்; தாம் எங்கேயிருக்கிறோம்? எத்தகைய துயர் நிலை தமக்கு வரப்போகிறது என்பதை அறியாமல், அறிமுகம் இல்லா இடத்தில் வந்துள்ளமையால் வருந்தி பழுது, தம்முன் வந்து நிற்கும் யானையை, அது தம்மைக் கொல்ல வந்து நிற்கிறது என்பதையும் அறியாமல், அதைக் கண்டு களித்து அக் களிப்பால் தம் அழுகையை மறந்து, மறுவலும் தம்மைச் சூழ்ந்து நிற்பாருள் தாமறிந்தார் ஒருவரும் இலாதல் கண்டு அழுகைமேற் கொள்ளும் அத்துணை இளையரன்றோ? இத்துணை இளையரைக் கொல்வது நினக்கு இழுக்கன்றிப் புகழாமோ?" என்று கூறிய அறவுரையால், மலையமான் மக்கள் மட்டும் உயிர் பிழைத்தனர்; தேர்வண் மலையன் என்றும், மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன் என்றும் அழைக்கப் பெற்றாரும், பாரிமகளிரை மணந்தாரும், கோவூர்கிழாரான் உயிர் பிழைத்த மலையமான் திருமுடிக் காரியின் மக்களாவர்.

"நீயே, புறவின் அல்லல் அன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை;
இவரே புலனுழுது உண்மார் புன்கண் அஞ்சித்
தமதுபகுத் துண்ணும் தண்ணிழல் வாழ்நர்;

களிறுகண்டு அழூஉம் அழாஅல் மறந்த
புளதலைச் சிருஅர்; மளறு மருண்டு நோக்கி
விருந்திப் புண்கணோ வுடையர்;
கேட்டனை யாயின்நீ வேட்டது செய்ம்மே.'' (புறம்: சக)

ஆண்மையும், ஆற்றலும் விளங்க வாழ்ந்த மலையமான் திருமுடிக்காரி, தன்நாடு நோக்கிவரும் பாணர், கூத்தர், புலவர் முதலாம் இரவலர்கட் கெல்லாம், களிறும், தேரும் கொடுத்துச் சிறந்த கொடைக் குணமும் உடையனாயினன் காரி, கடையெழுவள்ளல்களுள் ஒருவனவன் எனப் பெருஞ் சித்திரனாரும், இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனாரும் கூறிப் பாராட்டுவர்; கொடையானும், கொற்றத்தானும் சிறந்த காரியின் புகழ்கேட்ட புலவர் கபிலர், அவனைப் பாடிப் பரிசில் பெறுதல் பெருமைக் குரியதாகக் கொண்டார்; உடனே, போராலும், நீராலும் பாழாகா அவன் நாட்டின் சிறப்பு, மூவேந்தர்க்குத் துணைபோகும் அவன் வெற்றிச் சிறப்பு, கற்புநெறிபிறழா மனைவியோடிருந்து நடாத்தும் அவன் இல்லற மாண்பு, ஆகிய இவைகளை விளக்கும் பாட்டொன்றைப் பாடிச் சென்று காரியைக் கண்டார்.

காரியின் அவைக்கண், கபிலரைப் போன்றே, வேறு பல புலவர்களும் வந்து அவனைப் பாடினர்; அவர்கள் பாடல்களைக் கேட்ட காரி, அனைவர்க்கும் பரிசில் அளித்தான்; அவன் அளித்த பரிசிலைக் கபிலர் கண்டார்; பெரும் புலவராய தமக்குத் தம் தகுதி நோக்கிப் பெருமதிப்புத் தாராமல், பிற புலவர்களைப் போன்றே தம்மையும் மதித்துவிட்ட அவன் செயல், அவருக்கு வருத்தத்தைக் கொடுத்தது; தம் தகுதிக்குப் பொருந்தாத பரிசிலைப்பெற அவர் விரும்பவில்லை; வரிசை அறியா அவன் செயல் தமக்கு மட்டுமே யல்லாமல், தம்மைப் போன்றே வரிசைக்கு வருந்தும் பரிசிலராகிய பெரும் புலவர் அனைவர்க்குமே இழிவாம் என்று கருதினர்; உடனே, கபிலர் காரியை அணுகினர்.

"பெருங்கொடை வள்ளலே! யான் கூறுவனவற்றைச் சிறிது அருள்கூர்ந்து கேட்பாயாக; வள்ளல் ஒருவன்

வாழ்ந்தால், அவன்பால் பரிசில் பெறப் பலரும் வருவர்; வந்தவர்க்கெல்லாம் தம்மிடம் உள்ளதை இல்லையென்னது கொடுப்பது எவர்க்கும் எளிது; அதை எவரும் செய்வர்; அதற்கு மனம் ஒன்றே போதும்; ஆனல், பரிசில் பெற வருவோர் அனைவரும் ஒரே தகுதியுடையவரல்லர்; ஆகவே, அவர்களின் தகுதி நோக்கி, இவர் மிகச் சிறந்தார்; இவர் சிறந்தார்; இவர் அத்துணைச் சிறந்தாரல்லர் என அறிந்து அதற்கேற்பப் பரிசில் அளிப்பது எளிதன்று; அதற்கு மனம் ஒன்றேயிருத்தல் போதாது; வரிசை அறியும் அறிவும் தேவை; நின்பால் அவை யிரண்டும் இருக்கும் என எண்ணியே வந்தேன்; ஆனல் வரிசை அறியும் அறிவு நின்பால் இருக்கக் காண்கிலேன்; நீ மனம் ஒன்றே படைத்தவனதலை விரும்பவில்லை; மனத்தோடு வரிசையறியும் அறிவும் பெற்ற மன்னனகவே உன்னைக் காண விரும்புகின்றேன்; பொது நோக்கு நோக்காது, வரிசையா நோக்குதல், என் போல்வார்க்கு மகிழ்ச்சியை அளிப்பதோடு, நும்போல் வார்க்கு ஆக்கமும் தரும்; ஆகவே, வந்தோர் அனைவரையும் ஒன்றென மதியாது, அவர் தகுதி அறிந்து மதித்து, அதற்கேற்பப் பரிசில் கொடுக்கும் வழக்கத்தினை இனியாயினும் மேற்கொள்வாயாக!" என்று அறிவுறுத்தினர்; கபிலரின் புலமைச் சிறப்பும், பிழை கண்டு பொறு அவர் உள்ளத் துயர்வும் உணர்ந்த காரி, அவர் மகிழும் வண்ணம் மேலும் பல பரிசில் அளித்துப் பெருமை செய்தான்.

"ஒருதிசை ஒருவனை உள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசில் மாக்கள்;
வரிசை அறிதலோ அரிதே; பெரிதும்
ஈதல் எளிதே; மாவண் தோன்றல்!
அது நன்கு அறிந்தனை யாயின்,
பொதுநோக்கு ஒழிமதி புலவர் மாட்டே." (புறம்: கஉக)

காரியால் சிறப்புச் செய்யப் பெற்று அவன் அவைக்களத்தே சில நாள் வாழ்ந்த கபிலர், அக்காலத்தே அவன்பால் அருங்குணங்கள் பல அமைந்து கிடக்கக் கண்டார்; அவை அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன; கபிலர்

காலத்தில் வள்ளல்களாக விளங்கியோர் பலர்; அவர்கள் தம்மை நோக்கி வந்தவர்கட் கெல்லாம் தேர் பல கொடுத்துச் சிறப்புச் செய்கின்றனர் என்றாலும், அவர்கள் அவ்வாறு அளிப்பது மதுவுண்டு மகிழ்ந்திருக்கும் காலத்திலேயேயாம்; மதுவுண்ட காரணத்தால், தாம் செய்வது யாது என்பதை அறிய மாட்டா மயக்க நிலையுற்றுவிடுகின்றனர்; அதனால் கொள்வோர் தகுதியும், கொடுக்கும் பொருளின் அருமையும் அறியாது போகின்றனர்; ஆகவே, அந்நிலையில் அவர்கள் பரிசில் அளிப்பது தம் இயற்கையறிவோடிருந்து செய்யும் செயலாகாது; ஆகவே, அது அவர்க்குப் பெருமைக்குரியதுமாகாது; ஆனால், காரி மதுவுண்டு மகிழ்ந்தறியாதவனவன்; ஆகவே, தான் செய்வதன் நன்மை தீமைகளை உணரும் நல்லறிவோடிருப்பவன்; அவன் பரிசில் அளிக்கிறான் என்றால், அது அவன் இயற்கையறிவோடு கூடிய செயல்; கொடுப்போர் தகுதியும், கொடைப் பொருளின் அருமையும் அறிந்து செய்த செயலாம்; அந்நிலையிலிருந்து அவன் கொடுத்த தேர்கள் பல; அவனுக்குரிய முள்ளூர் மலைக்கண் பெய்த மழைத்துளிகளை எண்ணினும் எண்ணலாம்; அவன் பரிசிலாகக் கொடுத்த தேர்களை எண்ணிக் காணல் இயலாது; காரிபால் அமைந்துகிடந்த இவ் வரும்பெரும் சிறப்பினை அறிந்து பாராட்டினார் கபிலர் :

"நாட்கள் உண்டு நாள்மகிழ் மகிழின்
யார்க்கும் எளிதே தேர்ஈ தல்லே;
தொலையா நல்லிசை விளங்கும் மலையன்
மகிழாது ஈத்த இழையணி நெடுந்தேர்
பயன்கெழு முள்ளூர் மீமிசைப்
பட்ட மாரி உறையினும் பலவே." (புறம்: கஉஙு)

மலையமான் திருமுடிக்காரி புலவர் பலரின் பாராட்டைப் பெற்ற பெருமையுடையவன்; அகம், புறம், நற்றிணை, குறுந்தொகை ஆகிய நான்கு நூலினும், பத்துப்பாட்டுள் ஒன்றாகிய சிறுபாணாற்றுப் படையினும் அவன் பாராட்டப் பெற்றுளான்; அம்மூவனார், கபிலர், கல்லாட

ணர், கோவூர் கிழார், நல்லூர் நத்தத்தனார், பரணர், பெருஞ்சித்திரனார், மாறோக்கத்து நப்பசலையார் முதலாம் புலவர் எண்மர் அவன் புகழ் பாடியுள்ளனர்; "கபிலன், உலகில் வாழும் மக்கள் எல்லாரினும் குற்றமற்ற அறிவுடைய அந்தணனாவன்; அத்துணைச் சிறந்த கபிலன் நின்னைப் பாடியுள்ளான்; எப்படிப் பாடியுள்ளான்; உன்பால் வந்து உன் புகழ்பரவி, அதைக் கேட்டு நீ அளிப்பன பெற்று வாழ்வர் இரவலர்; இனி அவர்கள் பிழைப்பதற்கு வழியில்லை; அவர்களால் புகழ்ந்து பாடமுடியாத அளவு கபிலர் நின்னைப் புகழ்ந்து பாடிவிட்டார்; இனி, வேறு யாரும் நின்னைப் புகழ்ந்து பாடமுடியாது; மேற்குக் கடற்கரையின்கண்ணே உள்ள சேரர்க்குரிய துறைமுகங்களுக்குள்ளே, பொன்னை ஏற்றிக்கொண்டு வெளிநாடுகளிலிருந்து வந்த பெரிய கப்பல்கள் வந்து தங்கிவிட்டால், ஏனைய சிறு கப்பல்கள் எவ்வாறு, அத் துறைமுகத்தினுள்ளே நுழைய முடியாதோ அப்படியே என்னைப்போலும் சிறு புலவர்கள் நின் புகழைப் பாடமுடியாத அளவு அவர் நின்புகழ் பாடிவிட்டார்" எனப் பாராட்டும் மாறோக்கத்து நப்பசலையார் பாடல், மலையமான் புகழை மாட்சியுறச் செய்கிறது!

"புலனழுக் கற்ற அந்த ணாளன்
இரந்துசெல் மாக்கட்கு இனியிட னின்றிப்
பரந்திசை நிற்கப் பாடினன்; அதற்கொண்டு
சினமிகு தானை வானவன் குடகடல்
பொலந்தரு நாவாய் ஓட்டிய அவ்வழிப்
பிறர்கலம் செல்கலா தனையேம்." (புறம்; கஉ௬)

## ரு. நள்ளி

தென்னவர்தம் தலைநகராம் மதுரை மாநகர்க்கும் தெற்கே தோட்டி என்ற பெயருடையதொரு மலையிருந்தது; அஃது அடுக்கிய பல குன்றுகள் தன்னைச் சூழ நிற்கும் அழகினையுடையது; நாடு, நலம் பல பெற்று நனி சிறந்து விளங்குதற்கு உறுதுணை புரியும் பெரு மழை, பொய்யாது பெய்யும் மழைதரு மேகங்கள் என்றும் படிந்து கிடத்தற்காம் உயர்வினை யுடையது; பளிங்கைப் பிளந்து கண்டாற் போலும் தெளிந்த நீர்நிலை பலவற்றைக் கொண்டது; அக் குன்றுகளைச் சூழ அடர்ந்த காடுகளும் அமைந்திருந்தன; அக்காடு ஆனேம்பி வாழும் ஆயர்க்கு வாழ்விடமாம் அத்துணை வளம் செறிந்தது; அவ்வாயர் தரு நறுநெய் நாட்டவர் போற்றும் நலமெலாம் கொண்டது; அக் காடு, மணமும், அழகும் மாண்புறக்கொண்ட காந்தள் மலர்கள் உண்மையாலாய உயர்வும் உடையது.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த தோட்டி மலையையும், அதைச் சூழ உள்ள காடுகளையும் காவல் மேற்கொண்டு வாழ்ந்திருந்தான் நள்ளி எனும் நல்லோன்; நள்ளி கண்டீரக்கோ எனவும், கண்டீரக்கோப்பெரு நள்ளி எனவும் அழைக்கப் பெறுவன்; நள்ளி, நெடியபல தேர்ப்படை உடையவன்; விற்போர் வல்ல வீரர் பலரையும் பெற்றிருந்தான் அவன்; விரைந்து செல்லும் குதிரைகளையும் கொண்டிருந்தது அவன் படை; தன்னொடு பகைகொண்டு வந்தாரை வென்று துரத்தும் வாளாண்மையும் அவன்பால் பொருந்தியிருந்தது; இத்துணைப் பேராற்றல் பெற்றிருந்த நள்ளி, வளம் பல பெற்ற நாடும் உடையனாகவே, தன்னைப் பாடிவரும் பாணர் முதலாயினார்தம் வருத்தம் தீரத், தேரும், களிறும், திரண்ட செல்வமும் சிந்தையுவந்தீயும் சிறந்த கொடையாளனுமாயினான்.

நள்ளி நாடாண்டிருந்த தோட்டிக் குன்று, அதைச் சூழ இருந்த இருள் செறிந்த காடு, அவன் கொற்றம்,

கொடை ஆய இவற்றின் சிறப்புக்களை யெல்லாம், அகம் உவந்து பாடியுள்ளனர் புலவர் பல்லோர்.

" இரும்பு புனைந்து இயற்றாப் பெரும்பெயர்த் தோட்டி
அம்மலை காக்கும் அணிநெடும் குன்றின்
பளிங்குவகுத் தன்ன தீநீர்
நளிமலை நாடன் நள்ளி."

(வன்பரணர் : புறம்: கடுO)

" திண்தேர் நள்ளி கானத்து அண்டர்
பல்லா பயந்த நெய்."

(காக்கை பாடினியார் நச்செள்ளையார் : குறுந் : உகO)

" கரவாது
நட்டோர் உவப்ப நடைப் பரிகாரம்
முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத்
துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு
நளிமலை நாடன் நள்ளி."

(இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார், சிறுபாண் : கOஙு-எ)

" வல்வில் இளையர் பெருமகன் நள்ளி
சோலை யடுக்கத்துச் சுரும்புண விரிந்த
கடவுட் காந்தள்."

(பரணர்: அகம்: கடுஉ)

" இரப்போர்க்கு
இழையணி நெடுந்தேர் களிறொடு டென்றும்
மழைசுரந் தன்ன ஈகை வண்மகிழ்க்
கழல்தொடித் தடக்கைக் கலிமான் நள்ளி
நளிமுகை உடைந்த நறுங்கார் அடுக்கத்துப்
போந்தை முழுமுதல் நிலைஇய காந்தள்."

(கபிலர் - அகம்: கஙஅ)

" ஆர்வமுற்று
உள்ளி வருநர் உலவுநனி இரத்
தள்ளாது ஈயும் தகைசால் வண்மைக்
கொள்ளார் ஓட்டிய நள்ளி."

(பெருஞ்சித்திரனார் : புறம்: கருஅ)

ஒரு நாள் நள்ளி, காட்டில் வேட்டையாடிக்கொண்டிருந்தான்; அக்காலை, அவ்வழியே வந்த வன்பரணர், வறுமையாலும், வழிநடை வருத்தத்தாலும் மெலிந்து மரமொன்றின்கீழ் அமர்ந்திருந்தார்; அந்நிலையில், தான் வேட்டையாடிய மானினத்தின் குருதி தோய்ந்து சிவந்த கழல் காலினும், மணி விளங்கும் முடி சென்னியினும் கிடந்து சிறப்பளிக்க ஆண்டுப்போந்த நள்ளி, வன்பரணர் தம் வருத்தம் அனைத்தையும் அறிந்து, தன்னைக் கண்டு எழ முயன்ற அவரைக் கை குவித்து இருக்கச் செய்து, தன்னொடு போந்து காட்டினுள்ளே சென்று வேட்டம் புரியும் தன் வீரர் வந்துவிடின் தன்னை இன்னார் என அறிவித்தலும் கூடும் என அஞ்சி, அவர் வாரா முன்னரே தீக்கடை கோலால் தீமூட்டித் தான் வேட்டையாடிக் கொன்ற விலங்கின் ஊனைச் சுட்டுச் சுவையுடையதாக்கிப் புலவர்க்கு அளித்தான்; அவன் அளித்ததை அமிழ்தென உண்டு மகிழ்ந்த புலவர் மலைச்சாரலில் ஓடும் அருவி நீர் உண்டு, அயர்வு ஒழிந்து, விடைபெற்று அப்பாற் செல்ல விரும்பினர்; அக்காலை நள்ளி, "ஐய! காட்டில் வாழ்கின்றேன்; கையில் ஒன்று மிலேன்" ஆகவே இவற்றை யாயினும் ஏற்றருள்க" என வேண்டித் தன் மார்பிற் பூண்டிருந்த முத்தாரத்தையும், முன்கையில் விளங்கிய கடகத்தையும் அளித்தான்; இவ்வாறு வழியிற் செல்வார்க்கு, வலிதின் வந்து வழங்கும் வள்ளியோனாய அவன் யாவன் என்பதை அறிந்துகொள்ள விரும்பிய வன்பரணர், "வேண்டாத போதே விருந்தேற்றுப் போற்றும் நீ யார்? நின் நாடு யாது?" எனப் பலகால் வினவவும், அவர்க்கு விடையளியாதே வெளியேறினன்; பின்னர், வழிவந்தோரால், அவன் நள்ளி என்பதறிந்து வாயார வாழ்த்தினர் வன்பரணர்.

"கூதிர்ப் பருந்தின் இருஞ்சிற கன்ன
பாறிய சிதாரேன் பலவுமுதற் பொருந்தித்
தன்னும் உள்ளேன் பிறிதுபுலம் படர்ந்தவென்
உயங்குபடர் வருத்தமும் உலைவும் நோக்கி

மான்கணம் தொலைச்சிய குருதியம் கழற்கால்
வான்கதிர்த் திருமணி விளங்கும் சென்னிச்
செல்வத் தோன்றலோர் வல்வில் வேட்டுவன்
தொழுதனென் எழுவேன் கைகவித்து இரீஇ,
இழுதின் அன்ன வால்நிணக் கொழுங்குறை
கானதர் மயங்கிய இளையர் வல்லே
தாம்வந் தெய்தா அளவை ஒய்யெனத்
தான்ஞெலி தீயின் விரைவனன் சுட்டுநின்
இரும்பே ரொக்கலொடு தினமெனத் தருதலின்,
அமிழ்தின் மிசைந்து, காய்பசி நீங்கி
நன்மரன் நளிய நறுந்தண் சாரல்
கன்மிசை அருவி தண்ணெனப் பருகி
விடுத்தல் தொடங்கினே னாக, வல்லே

"பெறுதற் கரிய வீறுசால் நன்கலம்
பிறிதொன் றில்லைக் காட்டுநாட் டே'மென
மார்பிற் பூண்ட வயங்குகா ழாரம்
மடைசெறி முன்கைக் கடகமோ டீத்தனன்;
எந்நா டோ?என நாடும் சொல்லான்;
யாரீ ரோ?எனப் பேரும் சொல்லான்;
பிறர்பிறர் கூற வழிக்கேட் டிசினே
.........................................
நளிமலை நாடன் நள்ளியவன் எனவே." (புறம் : கருO)

பாடிப் பிழைக்கும் தொழில் உடையவர் பாணர்; பொருள் அளித்துப் புரக்க வல்லாரைத் தேடிச்சென்று, அவர் வாயில்முன் நின்று, காலையில் மருதமும், மாலையில் செவ்வழியும் பாடி மகிழ்வித்துப் பொருள்பெற்று வாழ்தல் அவர் குலத்தொழில்; அத்தகைய பாணர்தம் வறுமையெலாம் நீங்குமாறும், மற்றும் பிறர் இடம் சென்று பொருள் வேண்டி நில்லாவாறும் பெரும்பொருள் அளித்து விட்டான் நள்ளி; அதனால், பாடல் தொழில் வல்ல அப் பாணர், தம் தொழிலையே மறந்து விடுவாராயினர்; காலையில் பாடவேண்டுவது மருதப் பண்; மாலையில் பாட வேண்டுவது செவ்வழிப் பண் என்ற பண்ணறி அறிவையும் இழந்து, செவ்வழிப் பண்ணைக் காலையிலும், மருதப்

பண்ணை மாலையிலும் பாடத் தொடங்கிவிட்டனர்: இவ்வாறு, பண்ணிசைக்கும் பாண்குடி வந்தார்தம் பண்ணறிவையும் மறக்குமாறு செய்யவல்லது நள்ளியின் கொடைப் பெருமை என்பதறிந்த வன்பரணர், அவன் வள்ளன்மையினை வியந்து பாராட்டுவாராயினர்:

"நள்ளி வாழியோ! நள்ளி! நள்ளென்
மாலை மருதம் பண்ணிக் காலைக்
கைவழி மருங்கில் செவ்வழி பண்ணி
வரவெமர் மறந்தனர்; அதுநீ
புரவுக்கடன் பூண்ட வண்மை யானே." (புறம்: கசக)

கண்டீரக் கோவின் புகழ் பிறிதொரு வகையானும் விளங்கித் தோன்றுகிறது; கண்டீரக்கோப் பெருநற்கிள்ளிக்கு இளையான் ஒருவன் இருந்தான்: இளங் கண்டீரக்கோ என அழைக்கப்பெறும் அவன், விச்சிக் கோவின் தம்பியாய இளவிச்சிக் கோவுடன் நட்புப் பூண்டிருந்தான்; ஒருநாள் இருவரும் ஒன்றுகூடி, ஓரிடத்தே ஒருங்கிருந்த காலை, ஆண்டு வந்த புலவர் பெருந்தலைச் சாத்தனாரை இருவருமே விரும்பி வரவேற்றனர்; ஆனால் புலவரோ, அவருள் இளங்கண்டீரக்கோவை மட்டும் அன்போடு தழுவிக் கொண்டார்; அதுகண்ட இளவிச்சிக்கோ, "ஐயன்மீர்! என்னைத் தழுவுவதொழிந்த நீவிர், இளங்கண்டீரக்கோவை மட்டும் தழுவிக்கொண்டது ஏனோ?" என அன்புடன் வினவினான். அதற்கு விடையாக, "வேந்தே, இக் கண்டீரக்கோ வண்மையாற் பெற்ற வளமார் புகழ் உடையனாவன்; இவன் நாட்டில், மனைக்குரிய ஆடவன், வினை கருதி வெளிநாடு சென்றிருந்த காலத்தே, அவன் மனைநோக்கிச் சென்ற வழியும், பரிசிலர் பொருள் பெறாது மீளார்; ஆடவன் இன்மையால், அவர் பொருள் இன்றி மீள்வதை விரும்புவாளல்லள் அம் மனைக் கிழத்தி; அவள் தன் அளவிற்கும் ஆற்றலுக்கும் ஏற்றவாறு, சிறிய பிடியானையையாவது பரிசில் அளித்து அனுப்புவள்; அத் துணைக் கொடைவளம் உடையது அவன் நாடு; அவன் நாட்டு வாழ்வார் நல்லியல்பே இஃதாயின், அவன் கொடை

வளத்தினைக் கூறல் வேண்டாவன்றோ? அத்தகையான் குடிவழி வந்தவன் இவ் விளங்கோ ஆதலின், இவனைத் தழுவி நின்றேன்,'' எனக் கூறிய புலவர் பொன்னுரை, அவன் கொடைச் சிறப்பைக் குன்றிலிட்ட விளக்கென விளக்கி நிற்றல் காண்க. வாழ்க நள்ளி! வளர்க அவன் கொடை!

"பண்டும் பண்டும் பாடுநர் உவப்ப
விண்டோய் சிமைய விறல்வரைக் கவாஅன்
கிழவன் சேட்புலம் படரின், இழையணிந்து
புன்தலை மடப்பிடி பரிசி லாகப்
பெண்டிரும் தம்பதம் கொடுக்கும், வண்புகழ்க்
கண்டீ ரக்கோன் ஆகலின் நன்றும்
முயங்க லான்றிசின் யானே."
(புறம் : 151)

## ௨. பாரி

பறம்பு என்ற மலையையும், அம் மலையைச் சூழ இருந்த முந்நூறு ஊர்களைக்கொண்ட சிறு நாட்டையும் உரிமை பூண்டு ஆண்டிருந்தான் பாரி எனும் பெயருடைய வேளிர் குலத்தான் ஒருவன். "பாரியும் பாண்டியன் மண்டலமே" என முடியும் பாண்டி மண்டல சதகச் செய்யுளாலும், மதுரையிலுள்ள பழைய சிறைக்கூடத்து வடபுறச் சுவரில், பறம்பு நாட்டைப்பற்றிக் கூறப்பட்டிருத்தலாலும், பறம்பு நாடு பாண்டி நாட்டைச் சேர்ந்தது என்பது அறியப்படும்; பாண்டி நாட்டுத் திருப்பத்தூர்ச் சிவன் கோயில் கல்வெட்டொன்றில், "புறமலை நாட்டுப் பொன்னமராவதி யூருடையான், திருக்கொடுங் குன்றாருடையான்," என்ற தொடர் காணப்படுகிறது; இப் பக்கத்துக் கொட்டாம்பட்டி மலைப் பகுதியைச் சேர்ந்த கூற்றம் பிரமநாடு என்ற பெயரான் இன்றும் வழங்குகின்றது; ஈண்டுக் கூறிய புறமலை நாட்டைப் பறமலைநாடு என்பதன் மரூஉவாகவும், பிரம நாடு என்பதைப் பறம்பு நாடு என்பதன் திரிபாகவும் கோடல் பொருந்தும்; ஆகவே, இன்று பிரான்மலை என்பதே, பாரிக்குரிய பறம்பு மலையாம் எனக் கொள்வதில் யாதொரு தடையும் இல்லை; மேலும் கொடுங்குன்றம் என வழங்கும் இப் பிரான் மலையில் கோயில் கொண்டிருக்கும் சிவபிரானுக்குப் பாரீசுவர முடையார் என்ற பெயரும் உண்டு எனப் பழைய கல்வெட்டுக்கள் கூறுகின்றன; இதனானும், பிரான் மலையே, பண்டு பறம்பு மலை என்ற பெயரான் வழங்கிவந்தது என்பது உறுதி செய்யப்படும்; பாண்டிநாட்டின் கீழ்ப்பால் அமைந்த இம் மலை, பண்டைச் செய்யுட்களில் கூறியவாறே, வளமும் பெருமையும் வாய்ந்திருத்தலோடு, சிதைவுற்ற பழைய அரணையும், இனிய நீர்ச்சுனைகளையும், நிறைந்த தேனடைகளையும் கொண்டு விளங்குகிறது என்பதும் ஈண்டுக் குறிப்பிடல் தகும்.

நால்வேறு வளனும் நனிமிகக் கொண்டிருந்த பறம்பு நாடாண்டிருந்த பாரி, பண்டு புகழ்பெற்று விளங்கிய

வள்ளல்கள் எழுவருள்ளும் தலைசிறந்தோனுவன்; ஒருநாள் தேர் ஏறிச்சென்ற பாரி, வழியில் தழைத்து வளர்ந்த முல்லைக் கொடியொன்று, படர்சற்குரிய கொழுகொம் பின்றிக் காற்றுல் அலைப்புண்டு வருந்துவதைக் கண்டான்; "அந்தோ! இக் கொடி, நம்மைப்போல் பேசும் ஆற்றலைப் பெற்றுளதாயின், தன் குறைகூறி அழுதிருக்கும்; ஆனல், அஃது அவ் வாற்றலைப் பெருமையாலன்றே அது செய் யாது வருந்துகிறது! எனினும், அதன் தேவை கண்ட நான், அதற்குத் துணை செய்யாது போதல் தகுதியன்று," எனத் துணிந்தான்; உடனே தான் ஊர்ந்துவந்த பொற் றேரை அதன் அருகே நிறுத்திப் பற்றிப் படருமாறு விட்டுச் சென்றான்; பாரியின் இவ்வருள் உள்ளத்தையும், கொடைச் சிறப்பையும் தமிழகம் முழுவதும் பாராட் டிற்று;

"பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பின் பாரி." (புறம் : உ00)

"ஊருடன் இரவலர்க்கு அருளித் தேருடன்
முல்லைக்கு ஈத்த செல்லா நல்லிசைப்
படுமணி யானைப் பறம்பிற் கோமான்
நெடுமாப் பாரி." (புறம் : உ0க)

"சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்குவெள் ளருவி வீழும் சாரல்
பறம்பிற் கோமான் பாரி." (சிறுபாண் : அகூ-கூக)

கொடை வள்ளலுக்கு எடுத்துக் காட்டாக இவனையே கொண்டது உலகம்; "கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினும் கொடுப்பாரிலை" என இவனது வரையா வண்மை சைவசமயாசாரியருள் ஒருவராய சுந்தரமூர்த்தி நாயனாராலும் எடுத்துரைக்கப்பட்டுளது என்றால், இவன் பெருமையினை என்னென்பது! பாரிபால் வந்து பொருள் வேண்டி நிற்போர் பெரும் புலவராக, அருங்குணச் சீலராக இருக்க வேண்டும் என்பதில்லை. வாயில் வந்து நின்றோர்

அறிவிலாச் சிறியோராயினும் அவர்க்கும், அவர் வேண்டுவன அளிப்பன்; பொருள் வேண்டி வந்து நின்றோர் இழிகுணமுடைய கீழோரே ஆயினும், அவர்க்கும் அவர் விரும்புவன அளிப்பன்; ஆகவே, அவன்பால் வந்து வறிதே மீண்டவர் எவரும் இரார் :

" மடவர், மெல்லியர் செல்லினும்
கடவன் பாரி கைவண் மையே." (புறம் : ௧0௬)

பறம்பு நாடு முந்நூறு ஊர்களையுடையது; அம் முந்நூறு ஊர்களையும் தன்பால் பொருள் வேண்டி வந்த இரவலர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் ஊராகக் கொடுத்து அவர் உடைமையாக்கி விட்டான்; அவன் உடைமையாக எஞ்சி நின்றது பறம்புமலை யொன்றே;

" முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நன்னாடு;
முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்." (புறம் : ௧௧0)

பாரியின் கொடைவளம் கண்ட புலவரெல்லாம், கொடைத்திறத்தில் அவனுக்கு நிகர் அவனே; நிலவுலகில் அவனுக்கு நிகராவார் எவரும் இலர் என உணர்ந்தனர்; கைம்மாறு கருதாமல் உலகைப் புரப்பதில் மாரி, பாரிக்கு நிகரே எனினும், வேண்டுவார்க்கு வேண்டும்போது வேண்டும் அளவு பொருள் அளிக்கும் பாரிபோல், மாரி அளிப்பதில்லை; வேண்டும்போது பெய்யாது வேண்டாதபோது பெய்யும்; வேண்டும் அளவு பெய்வதும் இல்லை; ஆகவே, உலகைப் புரப்பதில் பாரிக்கும் மாரிக்கும் ஒப்பு இருப்பக் கண்டும் புலவர்கள் மாரியைப் புகழாது, 'பாரியின் கொடை,' 'பாரியின் வள்ளன்மை,' 'பாரியின் அன்பு,' 'பாரியின் புகழ்' என எங்கும் எப்போதும் பாரி பாரி பாரி என்று பாரி ஒருவனையே புகழ்வாராயினர் :

" பாரி பாரி என்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன் ;
மாரியும் உண்டு, ஈண்டு உலகுபுரப் பதுவே."
(புறம் : ௧0௭)

பாரியின் புகழ் நாள்தோறும் பெருகிற்று; சேய்நாடு களிலும் அது பரவிற்று: தமிழகமெங்கும் உள்ள பாணர், கூத்தர் முதலாய இரவலர்களும், புலவர்களும் பாரியின் புகழன்றிப் பிறர் புகழ் பாடாராயினர்; இவ்வாறு அவன் புகழ் வளர்தல், அப்போது தமிழ் நாடாண்ட மூவேந்தர் உள்ளத்தில் பொறாமைத் தீயை மூட்டிற்று: "பேரரசர் நாமிருக்கப் பாரியின் புகழ் பாரெங்கும் பரவுவதா?" என்று எண்ணினர்; புகழால் அவனைவிட உயர்தல் தம்மால் இய லாது என்பதையும், அவன் உயிரோடுள்ளவரை தம் புகழ் உயரவழியில்லை என்பதையும் உணர்ந்தனர்; ஆகவே, அவனை எவ்வாற்றானும் அழித்துவிட முடிவு செய்தனர்; மூவேந்தரும் ஒன்று கூடினர்; மூவேந்தர் படையும் ஒன்று கூடின; பறம்பு மலையை முற்றி அழிக்க முனைந்தனர்; அவ்வாறே மூவேந்தர் படையும் பறம்பரணை முற்றிக் கொண்டன.

பாரியின் புகழ்கேட்டு அவனைப் பாடிப் பரிசில் பெற வேண்டி வந்து, அவன் அன்பால் பிணைப்புண்டு, அவனை விட்டுப் பிரிய மாட்டாப் பெருநிலையுற்று, அவனோடு அப் பறம்பு மலையிலேயே தங்கிவிட்ட கபிலர், மூவேந்தர் முற்றி யிருப்பது கண்டார்; அவர் செயல் விழலுக்கிறைத்த நீராகுமே யல்லாமல் பயன்தாராது என்பதை அறிந்த கபிலர், அரசர் மூவர்க்கும் அறிவுரை மொழிந்து முற்று கையை ஒழிக்க எண்ணினார்.

முற்றுகையிடுவதால், அரணுள் இருப்போர் வெளி யிலும், வெளியிலிருப்போர் உள்ளும் செல்லாதவாறு தடை செய்யப்படுவர்; அதனால், உள்ளிருப்போர்க்கு வேண்டும் உணவுப் பொருள்கள் வெளியே யிருந்து வருதல் இயலாது போம்; அந்நிலை ஏற்படின், உள்ளிருப்போர் உணவில்லாக் குறையால் வருந்தி, அக்கோட்டையைத் திறந்து, பகை வர்க்குப் பணிந்து போவர்; இதுவே, முற்றுகையின் நோக்கம்; இவ் வெண்ணம் கொண்டே பறம்பரணை மூவேந் தரும் முற்றுகையிட்டனர்; ஆனால், அவர் எண்ணியது தவறு; அவர் போட்ட போர்த்திட்டம் பிழைபட்டது என்பதைக் கபிலர் அறிவார்.

ஆகவே, அதை அவர்க்கு உணர்த்தி முற்றுகை ஒழித்து நீங்குமாறு வேண்ட விரும்பினர்; அரண்விட்டு வெளியே வந்தார்; வேந்தர் மூவரையும் அழைத்தார்; "வேந்தர் பெருமக்களே! பறம்பு மலைக்கோட்டை நீங்கள் நினைப்பதுபோல் அவ்வளவு குறைபாடு உடையதன்று; அவ் வரணைக் கைப்பற்றுவது அத்துணை எளிதில் ஆகாது; பேரரசராய நீவிர் மூவரும் ஒன்று கூடியே முற்றுகை மேற்கொண்டுள்ளீர் எனினும், பறம்பரணைப் பாழ்செய்தல் இயலாது; உள்ளிருப்போர் உங்கட்கு என்றும் பணிய எண்ணர்; பணிந்து போகுமாறு அவர்கள் வாழ்வில் என்றும் குறை ஏற்படாது; காரணம், உழுதொழில் வேண்டாமலே பெறக் கூடிய உணவுப் பொருள்கட்கு ஆங்குக் குறைவில்லை; நெல்விளையும் மூங்கிற் காடுகள் நிறைய உண்டு; அம்மூங்கில் அரிசியே அவர்களுக்கு ஆண்டு முழுமைக்கும் ஆம்; பறம்புமலை எங்கும் பலாமரங்கள் நிறைந்துள்ளன; அப் பலாமரங்கள் ஒவ்வொன்றும் பெரும் பெரும் பழங்கள் பலவுடையன; பூமிக் கடியில் மறைந்து மண்டிக் கிடக்கும் வள்ளிக் கிழங்கு தோண்டிய இடங்களிலெல்லாம் தோன்றும்; அம்மலையில் ஆங்காங்கே தொங்கிக்கொண்டிருக்கும் தேன் கூடுகளினின்றும் தேன் தானகவே வழிந்து பாயும். இதனல், உள்ளிருப்போர்க்கு உணவுக் குறையே உண்டாகாது; இடநெருக்கடி உண்டாகி ஒருவேளை பணிதலும் கூடும் என எண்ணுவீராயின், அதற்கும் வழியில்லை: பறம்பு, வான்போல் பரந்த இடம் உடையது; நீர்க்குறை உண்டாகாதா? நிலைகுலைந்துப் பணியாரா? என்ற வேட்கை உங்கட்கு எழுதல் கூடும்; ஆனல் பறம்பு மலை நீர்ச்சுனை பல நிறைந்தது; வானத்து மீன்களை எண்ணிக் காணல் எவ்வாறு இயலாதோ, அவ்வாறே, அம்மலையில் உள்ள உண்ணு நீர்ச்சுனைகளை எண்ணிக் காணலும் இயலாது; ஆகவே, எவ்வகையாலும் குறையுடையாரல்லர் பறம்பினுள் உள்ளார்; உங்கள் படை பெரியது என்பதை நான் அறிவேன்; காவற் காட்டு மரங்கள் ஒவ்வொன்றினும் ஒவ்வொரு யானை எனக் கட்டிவைத்துள்ளீர்கள். களம் எங்கு நோக்கினும் தேர் வரிசைகளையே காணுகின்

றேன்; என்றாலும், இப்படை பறம்புக்கோட்டையைப் பாழ் செய்துவிடும்; பறம்பு பணிந்துவிடும் என்று எண்ணு தீர்கள்; முயன்று போரிட்டுப் பெறுதல் உங்களாலும் இய லாது; உங்கள் வாள்வலி கண்டு அஞ்சிப் பாரியும் பறம்பி னைத் தாரான்,'' என்று அறிவுரை கூறினார்.

"அளிதோ தானே பாரியது பறம்பே ;
நளிகொள் முரசின் மூவிரும் முற்றினும்
உழவர் உழாதன நான்கு பயன் உடைத்தே ;
ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே ;
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழம்ஊழ்க் கும்மே ;
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்கு வீழ்க்கும்மே ;
நான்கே, அணிநிற ஓரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றம் தேன்சொரி யும்மே ;
வான்கண் அற்றுஅவன் மலையே; வானத்து
மீன்கண் அற்று அதன்சுனையே; ஆங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்,
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும்,
தாளில் கொள்ளலிர்; வாளில் தாரலன்.'' (புறம் : ௧0௯)

பறம்பு கோடற்கு அருமையுடைத்து என்பதை அத் துணைத் தெளிவாக எடுத்துக் கூறியும், மூவேந்தர் முற்று கையைக் கைவிட்டாரல்லர்; கபிலர் பொறுமை இழந்தார்; வேந்தர்களை வெகுண்டு நோக்கினார். "வேந்தர்காள்! பறம்புநாடு, வளமிக்க ஊர்கள் முந்நூறு கொண்டது என்ற வேட்கை மேலிட்டு வந்தீராயின், உங்கள் ஆசையை விட்டொழியுங்கள்; பறம்புநாடு, முந்நூறு ஊர்களை உடைத்து என்பது உண்மையே; எனினும், அவற்றின் மீது பாரிக்கு உரிமையில்லை; தன்னைப் பாடிய இரவலர்க்கு அவ்வூர்களனைத்தையும் பரிசிற் பொருளாக அளித்து ஆண்டுகள் எத்தனையோ ஆகின்றன; ஆகவே, அவற்றின் பால் ஆசைகொண்டு பயன்கோடல் இல்லை; நான் இருக் கின்றேன்; பாரி இருக்கிறான்; பறம்புமலை இருக்கிறது; இவையே எங்கள் உடைமை; பறம்புநாடு இல்லாது போயினும், பறம்பு மலையையாவது கைக்கொண்டு

போவோம் என்று எண்ணுவீராயின், அஃதும் உங்களால் ஆகாது; ஆற்றல்மிக்க பெரும்படை கொண்டு மூவரும் ஒன்றிநின்று கடும்போரிடினும் பறம்பினைப் பற்றல் இயலாது; வேற்படை உங்கட்கு வெற்றியைத் தராது; ஆகவே, முற்றுகை ஒழித்து அகலுங்கள்; அகலாது, 'எவ்வாறு யினும் பறம்பினைப் பற்றுவதே எங்கள் கருத்தாம்' என்பீராயின், அதற்குப் போர் உங்கட்குப் பயன் அளிக்காது; அதைப் பெறக்கூடிய எளிய வழியொன்று உண்டு; பேரரசர், போர்புரிந்து பெறமாட்டா ஒன்றைப் பெண்ணொருத்தி பாடிப் பெற்றுவிடுவாள்; ஆகவே, பறம்பினைப் பெறவேண்டின், யான் கூறுமாறு செய்யுங்கள்; பாரிபால் சென்று பாடிப் பரிசில்பெறும் பாணரைப்போல் வேடந் தாங்கிக்கொள்ளுங்கள்; உங்கள் மனைவிமார்களையும், பாணர்பின் செல்லும் விறலியர்போல் உருமாற்றி விடுங்கள்; அவர்கள் முன்னே ஆடிச்செல்ல, கையில் யாழேந்தி அவர் பின்னே பாடிச்சென்று, பறம்பின் வாயிலில் நின்று பாரியைப் பாடிப் பறம்பினைப் பரிசிலாகக் கேளுங்கள்; பறம்பு, உறுதியாக உங்கள் உடைமையாம்; பாடினால் கிடைக்கும் பறம்பு என்று கூறும் என் மறதியை என்னென்பேன்? பறம்புநாட்டைப் போன்றே, பறம்பு மலையும் பாடினர் உடைமையாகிவிட்டதை மறந்தேபோனேன், பறம்பினை அளிக்கும் உரிமையும் பாரிக்கு இல்லை; ஆகவே, பறம்பினைப் பெறுதற்கும் வழியில்லை; வேண்டுமானால் பாரியைத் தான் பெறமுடியும்; பாரியைப் பெறுதல் அருமையன்று; முன்னே யான் கூறியவாறே சென்று அவனைப் பாராட்டி, "பாரி! நின்னையே வேண்டிவந்தோம் நாங்கள்" என இருகையேந்தி இரந்தால், இரப்போர்க்கு இல்லை என்று கூறா அறமேற்கொண்ட அவன், வாரேன் என்று கூறாது, உங்கள்பால் வந்துநின்று உங்கள் உடைமையாகுவன்; ஆகவே, அவனைப்பெற அம்முறையினை மேற்கொண்டு முற்றுகை ஒழியுங்கள்," என்று கூறினர்.

"முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்;

யாமும் பாரியும் உளமே;
குன்றும் உண்டு நீர் பாடினிர் செலினே." (புறம்

"அளிதோ தானே பேரிருங் குன்றே!
வேலின் வேறல் வேந்தர்க்கோ அரிதே;
நீலத்து இணைமலர் புரையும் உண்கண்
கிணைமகட்கு எளிதால் பாடினன் வரினே." (புறம் : ககக)

"யான்அறி குவன்அது கொள்ளு மாறே;
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி,
விரையொலி கூந்தல்நும் விறலியர் பின்வர
ஆடினிர், பாடினிர் செலினே
நாடுங் குன்றும் ஒருங்கீ யும்மே." (புறம் : க0க)

"பறம்பு பாடினரதுவே; அறம்பூண்டு
பாயும் பரிசிலர் இரப்பின்
வாரேன் என்னுன் அவர்வரை யன்னே." (புறம் : க0அ)

மூவேந்தர்கள், கபிலர் கூறிய அறிவுரையினைக் கேட்க மறுத்தனர்; முற்றுகையினைக் கைவிட்டாரல்லர்; அது மேலும் பலநாள் நீடித்தது; தம் அறிவுரை பயன் தராமை கண்ட கபிலர், அதையே மேலும் மேற்கொள்ளாமல், பறம்பின் அகத்தே வாழ்வார்க்கு வேண்டுவன அளித்து, அவர்க்கு ஊக்கம் குன்றுவாறு காக்கத் துணிந்தார்; பறம்பினுள் வாழ்வார்க்கு உணவுக்குறையில்லை யெனினும், அவர்களுக்கு நெல்லரிசியாலாய உணவு கிடைக்காக் குறையொன்று இருப்பது கண்டார்; அக் குறையினையும் போக்குதல்வேண்டும் என எண்ணினர்; பறம்பிற்குள்ளே நெற்பயிர் விளையும் நன்செய் நிலங்கள் இல்லை; நெல்லரிசி பறம்பிற்கு வெளியேதான் கிடைக்கும்; முற்றுகையைக் கடந்து வெளிச்சென்று நெற்கொணர்தல் இயலாது; ஆகவே, அதற்கும் ஓர் உபாயம் கண்டார்; பறம்புமலைக் கிளிகளை யெல்லாம் பிடித்துப் பழக்கினர்; கோட்டையைக் கடந்து வெளியே வெகுதொலைவு சென்று, ஆங்கே வயல்களில் விளைந்து முற்றிச் சாய்ந்திருக்கும் செந்நெற் கதிர்களைக் கொணரும்வண்ணம் பணித்தார்; அவையும், அவ்)

42201
V21:21:c
K1.2;3
MADURAI UNIVERSITY LIBRAR

வாறே நாள்தோறும் காலையில் கூட்டமாகக் கோட்டையைக் கடந்துசென்று, மாலையில் கதிர்களுடன் மீள்வவாயின; இதனால், அகவாழ்வோர் அரிசி உணவும் பெற்று அக மகிழ்ந்தனர்; அரணைக் காக்கலாம் உரனும், உள்ளமும் உடையராயினர்; உற்றுழி உதவும் கபிலரின் இவ்வரும் பெரும் பணியினைப் போற்றிப் புகழ்ந்தனர் ஔவையாரும் நக்கீரரும்:

"புலங்கந் தாக இரவலர் செலினே,
வரைபுரை களிற்றொடு நன்கலன் ஈயும்
உரைசால் வண்புகழ்ப் பாரி பறம்பின்
நிறைபறைக் குரீஇயினம் காலைப் போகி
முடங்குபுறச் செந்நெல் தரீஇயர் ஓராங்கு
இரைதேர் கொட்பின வாகிப் பொழுதுபடப்
படர்கொள் மாலைப் படர்தந் தாங்கு." (அகம் : ௩0௩)

"உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை
வாய்மொழிக் கபிலன் சூழச், சேய்நின்று
செழும்செய் நெல்லின் விளைகதிர் கொண்டு
தடந்தாள் ஆம்பல் மலரொடு கூட்டி
யாண்டுபல கழிய வேண்டுவயின் விழையாது
தாளிடூஉக் கடந்து, வாளவர் உழக்கி
ஏந்துகோட்டு யானை வேந்தர் ஓட்டிய
கடும்பரிப் புரவிக் கைவண் பாரி." (அகம் : ௭௮)

முற்றுகையிட்டுப் பணியவைத்தல் மூவேந்தரால் இயலாது என்பதைப் பாரி அறிவான் எனினும், மூவேந்தரால், பறம்பு முற்றுகையிடப்பட்டுள்ளது என்ற இழிசொல் கேட்கவும் அஞ்சினான்; ஆகவே, முற்றுகை நாள்பல நீடிப்பதை வெறுத்தான்; பறம்பினின்றும் அவரை வென்று துரத்துதல் வேண்டும் என்று முடிவு செய்தான்; ஒருநாள் வீரர் சூழ வெளியே வந்தான்; வாள்வலி காட்டிப் போரிட்டான்; அவன் தாக்குதல் எதிர்பாராதது; ஆகவே, வேந்தர்படை, வேள் பாரியின் வாள்வீரர் முன் எதிர்த்துநிற்க மாட்டாது நிலைகுலைந்து தோற்றது; பாரி, பேரரசை ஓட்டி வெற்றிப் புகழ்பெற்று விளங்கினான்.

பாரியின் புகழ் இயல்பாகவே எங்கும் பரவியிருந்தது; இம்முற்றுகை அவன் புகழை மேலும் உயர்த்துவதா யிற்று; பாரியின் புகழ் வளர்வதைக்கண்டு பொறாமை கொண்ட மூவேந்தர்கள் அவன்புகழ் மேலும் வளரத் தாமே காரணமாயது கண்டு வெட்கித் தலை குனிந்தனர்; அதனால், அவனை வாழவிடக் கூடாது என்ற எண்ணம் அவர்க்கு முன்னையினும் பன்மடங்கு மிக்கது; ஆனால், பாரியைப் போரில் வெல்வதோ இயலாது; அதை, அவர்கள் நேரிலேயே அறிந்துகொண்டனர்; ஆகவே, அவர்கள் போர் முறையை மேற்கொள்ள விரும்பவில்லை; கபிலர் கூறியன அவர் தம் கவனத்திற்கு வந்தன; பேரரசர்கள் பிழைநெறி செல்லார் என்றே கபிலர் உண்மையினை உரைத்தார்; ஆனால், அப் பேரரசர்களின் பொறாமையுள்ளம், நெறி தவறுவதைத் தடுக்காது போயிற்று; கபிலர் கூறியவாறே பாணர்போல் சென்று, பாரியைப் பாடிப், பரிசிற் பொரு ளாக அவனையே பெற்று உடன்கொண்டு சென்று உயிர்க் கொலை புரிந்துவிட்டனர்.

அந்தோ! மாரியனைய பாரி மறைந்து போயினன்; அவன் மறைவு கேட்ட பாணர் பரிந்தனர்; வயிரியர் வருந்தினர்; இரவலர் ஏங்கினர்; கபிலர் கண்கள் கடல்க ளாயின; பாரி இல்லாவாழ்வு, பாலைநில வாழ்வுபோல் பாழ் என எண்ணினர்; பாரியை இழந்து தனித்து உயிர் வாழ்தலை வெறுத்தார்; ஆனால், பாரி, இறத்தற்குமுன் கபிலரை அருகழைத்து, "ஐய! என் பிரிவினைப் பொறுது உயிர்விடாதிருக்கத் தங்களை வேண்டுகின்றேன்; தாங்கள் இன்னும் சிலநாள் வாழவேண்டும் என்பது என் வேண்டு கோள்" என்று கூறினன்; பாரியின் அன்புக் கட்டளையினை அவரால் மறுத்தல் இயலாதாயிற்று; உயிரோடிருந்து பொருள்கொடுத்துப் புலவரைப் போற்றித் தமிழ்வளர்த்த பாரி, இறந்தும் தமிழ் வளர்த்தான்; அவன் வேண்டா திருப்பின், அவனோடு கபிலரும் இறந்திருப்பர்; அப் போதே இறந்திருப்பின், அதற்குப் பின் பாடிய அவர் பாடல்களைத் தமிழுலகம் பெற்றிராதன்றோ? அப்பாடல்

களைப் பாடினர் கபிலரே எனினும், அவை பாரியின் அன்பளிப்பு; வாழ்க அவன் புகழ்!

கபிலர் உயிர்வாழ்வதற்குப் பாரியின் வேண்டுகோளே யன்றி, வேறுசில கடமைகளும் காரணமாம்; மறைந்த பாரிக்கு மகளிர் இருவர் இருந்தனர்; இளமையும், ஈடிலா அழகும் உடையார்; மணப்பருவம் எய்திய மங்கையர்; தந்தை பிரிவுத்துயர் தாங்கமாட்டா நொந்த உள்ளத்தினர்; ஆதரவு அற்ற அவர்களுக்கு அருந்துணையாய் இருந்து, அவரைத் தக்கவர்க்கு மணஞ் செய்துவைத்தல், அவர் தந்தை தோழனுய தன் கடனே என்று உணர்ந்தார் கபிலர்; அதனல், அவர்க்கு மணஞ்செய்து மகிழும்வரையில் மண்ணுலகவாழ்வை மறுப்பது கூடாது என மனந் துணிந்தார்.

பாரியை இழந்து பாழ்பட்ட பறம்பில் இருந்து வாழ்தல் இனிக்கூடாது என்று எண்ணி, அவன் மகளிரை யும் அழைத்துக்கொண்டு பறம்பு நீங்கிச் செல்வாராயினர்; பறம்பு நீங்கிச் செல்லும் அவர்கள் பறம்பின் பல்வேறு சிறப்புக்களையெல்லாம் எண்ணி, எண்ணி வருந்தி அழுது கொண்டே சென்றனர். முழுநிலா ஒளிவிடும் ஒருநாள், அவர்கள் சிற்றூர் ஒன்றில், ஒரு சிறிய குடிசைத் திண்ணை யில் இருந்து இளைப்பாறிக் கொண்டிருந்தனர்; அப்போது உப்பு வணிகர், உப்புமூட்டை ஏற்றிய தங்கள் வண்டிகளை வரிசையாக ஓட்டிக்கொண்டு அவ்வழியாகச் சென்றனர்; வண்டிகள் வரிசையாகச் செல்லும் ஒழுங்கைக் கண்ட பாரி மகளிர் இருவரும், தம் துயர் மறந்து எழுந்தோடினர்; அவ் வீட்டிற்கு முன்னே இடப்பட்டிருந்த குப்பைமீது ஏறி நின்று அவ்வண்டிகளை ஒன்று, இரண்டு என வரிசையாக எண்ணி மகிழ்வாராயினர்; அக்காட்சியை வீட்டுத் திண்ணை யில் இருந்தவாறே கண்ட கபிலர் கண்கள் நீர் கொண்டன; பறம்பு மலையில் பண்டு தாம் கண்ட காட்சியொன்று அவர் மனக்கண்முன் வந்து நின்று அவர் உள்ளத்தைக் கலக்கிற்று.

மூவேந்தர் முற்றுகை நடைபெற்றுக் கொண்டிருந்த காலம்; பாரி மகளிர் இருவரும், பறம்பின் மிகவுயர்ந்த உச்சியொன்றில் ஏறிநின்று, வெளியே பறம்பரணைச் சூழ இருந்த பகைவர் படையினைக் கண்டனர்; பகைவர் படையின் பெருமை கண்டு பயங்கொள்வதற்குப் பதிலாக நகை கொண்டனர். "நம் தந்தை ஒரு குறுநில மன்னன்; பகைவர்களோ பேரரசர்கள்! பறம்புமலை ஒன்றைக் கைப்பற்ற, மூன்று பேரரசர்களின் பெரும்படை! அவர்கள் படையில் கலந்துவந்துள்ள குதிரைகள்தாம் எத்தனை! ஒன்று, இரண்டு..........அம்மம்ம! எண்ணிக் காணவே இயலாது போலும்!" என்று கூறிக்கூறிச் சிரித்தனர்; அன்று, அக்காட்சியைக் கண்டு களித்த கண்களால், இன்று அவர்கள் குப்பைமேடேறி உப்புவண்டி எண்ணும் இந்தக் காட்சியையும் காண நேர்ந்ததே! என்று எண்ணினார்; துயர் மிகுந்தது; அந்தோ! என்று வாய்திறந்து அழுதுவிட்டார்.

" ஈத்திலைக் குப்பை ஏறி, உமணர்
உப்பொய் ஒழுகை எண்ணுப மாதோ !
நோகோ யானே ; தேய்கமா காலை
.............................................
அண்ணல் நெடுவரை ஏறித் தந்தை
பெரிய நறவின் கூர்வேல் பாரியது
அருமை அறியார், போர்எதிர்ந்து வந்த
வலம்படு தானை வேந்தர்
பொலம்படைக் கலிமா எண்ணு வோரே."

(புறம் : கககூ)

அழுகையொலி கேட்டு ஆங்கு வந்த மகளிர் இருவரும் புலவர் புலம்புவது கண்டனர்: இதுகாறும், அவர் உறு துணையால், தங்கள் துயரை ஒருவாறு மறந்திருந்தனர்; இப்போது, அவர் துயருறுவது காணவே, இவர்களும் துயர் உற்றனர்; தங்கள் தந்தையொடு வாழ்ந்த வளமார் வாழ்வை எண்ணினர். "சென்ற முழுநிலா அன்று, எங்கள் பறம்பில், எங்கள் தந்தையோடிருந்து மகிழ்ந்தோம்; இன்றும் முழுநிலா நாள்தான்; ஆனால் இன்று! எங்கள்

தந்தை எங்களோடில்லை; அவரை இழந்துவிட்டோம் யாங்கள்; எங்கள் குன்றும் பகைவர் கைப்பட்டுவிட்டது; பகைவர்கள் பேரரசர்கள்தாம்; ஆனால், அவர்கள், எங்கள் தந்தையைக் கொன்று பறம்பரணைக் கொண்டது போர் புரிந்து அல்லவே! வஞ்சித்தன்றோ கொண்டனர்?" என்று வாய்விட்டு அழுவாராயினர்;

"அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையும் உடையேம்; எம்குன்றும் பிறர்கொளார்;
இற்றைத் திங்கள், இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தர்! எம்
குன்றும் கொண்டார்; யாம் எந்தையும் இலமே!"
(புறம்: ககஉ)

பாரியை நினைந்து புலம்பிக்கொண்டிருந்த புலவர், அவன் மகளிரின் அழுகை யொலி கேட்டு உணர்வுற்றார்; அம்மகளிர்க்கு அறிவுரைகள் பலகூறித் தேற்றினார்; செல்வ வாழ்வில் சிறக்க வாழ்ந்த இவர்கள் இவ்வாறு தனிமையில் வாழநேரின், அவர் உள்ளம் உறுதுயர்கொள்ளும்; தனிமைத் துயர் வளரத் துணைசெய்யும்; ஆகவே உள்ளத்துயர் தீர்க்கும் உறுதுணையே அவர்களுக்கு இப்போது தேவை; தாய் தந்தையர்க்குப் பின், மகளிர்க்கு உறுதுணையாவார் அவர் கணவரே; ஆதலின் இம்மகளிர்க்கு விரைவில் மணம் முடித்தல் வேண்டும் என்று முடிவுகொண்டார்; உடனே, பாரியின் பெருமைக்கும், இம்மகளிரின் அருமைக்கும் ஏற்ற ஆடவரைத் தேடிக் காணவேண்டிய கடமையினை மேற்கொண்டார் புலவர்.

விச்சி என்ற மலையையும், அதைச்சூழ இருந்த சிறு நாட்டையும் ஆண்டுவந்தனர் விச்சியர் என்ற ஓர் அரச இனத்தார்; அக்காலை அந் நாடாண்டிருந்த விச்சிக்கோ எனும் பெயருடையான் குலத்தாலும், குணத்தாலும், கொடையாலும், கொற்றத்தாலும் சிறந்து விளங்குவது அறிந்த கபிலர், அவன், பாரி மகளிரை மணக்கும் தகுதி யுடையவன் என்று கொண்டார்; உடனே, மகளிரையும் உடனழைத்துக்கொண்டு அவன்பால் சென்றார். "விச்சிக்

கோவே! இவர்கள், முல்லைக்குத் தேரீந்த வள்ளியோன் மகளிர்; நான் ஒரு பரிசிலன்; மேலும் அந்தணன்; இவரை மணந்துகொள்ளத்தக்க மாண்புடையாய் நீ என உணர்ந்தேன்; இவர்களை நான்தர, ஏற்று மணந்து இனிது வாழ்க!" என்று வேண்டினர்.

"விளங்குமணிக் கொடும்பூண் விச்சிக் கோவே!
இவரே, பூத்தலை யறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பின் பாரி மகளிர்;
யானே, பரிசிலன்; மன்னும் அந்தணன்; நீயே
வரிசையில் வணக்கும் வாள்மேம் படுநன்;
நினக்கு யான் கொடுப்பக் கொண்மதி!" (புறம்: ௨௦௦)

ஆனால், கபிலர் வேண்டுகோள் வீணாயிற்று; பேரரசர் மூவர்க்கும் பகைவனாகிய பாரியின் மகளிரை மணந்து கொண்டால், அவ்வரசர் தன்னையும் பகைப்பர் என அஞ்சியோ, அம்மகளிரின் சீரழிந்த செல்வநிலை கண்டு நாணியோ, அம்மகளிரை மணக்க மறுத்துவிட்டான்.

விச்சிக்கோன்பால் விடைபெற்ற கபிலர், பாரிமகளிர் பிறந்த வேளிர் மரபிலே வந்த இருங்கோவேள் என்பான், ஆண்மை, ஆற்றல், அருளுடைமையால் சிறந்து விளங்குவதறிந்து, அவன் நாடு சென்று அவனைக் கண்டார்; "வேளிருள் வேளே! இம் மகளிர் முல்லைக்கு மணித்தேரும், இரவலர்க்கு முந்நூறு ஊரும் கொடுத்துப் புகழ் கொண்ட பறம்பிற் கோமான் பாரியின் மகளிர்; நான் இவர் தந்தை தோழன்; அந்தணன்; புலவன்; அரசரும் கண்டஞ்சும் ஆண்மையும், பாடி வரும் பாணர்க்குப் பொன்னை அள்ளி வழங்கும் அருளும் ஒருங்கே யுடையாய் நீ என்பது உணர்ந்தேன்; ஆகவே, உனக்கு மணம் செய்து கொடுக்க வேண்டி மகளிரொடு வந்துளேன்; இவர்க்கு மகிழ்ச்சியும், எனக்கு மன அமைதியும் உண்டாக இவர்களை ஏற்றுக் கொள்க," என்று வேண்டினர்.

"இவர்யார் என்குவை யாயின், இவரே,
ஊருடன் இரவலர்க் கருளித், தேருடன்,
முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப்
படுமணி யானைப் பறம்பிற் கோமான்
நெடுமாப் பாரி மகளிர் ; யானே
தந்தை தோழன் ; இவர் என் மகளிர் ;
அந்தணன் ; புலவன் ; கொண்டுவந் தனனே ;
..................................................
யான்தர இவரைக் கொண்மதி.' (புறம் : உ0க)

ஆனால், இருங்கோவேளும் கேளாக் காதன் ஆயினான் ; மகளிரை மணக்க அவனும் மறுத்துவிட்டான் ; இரு இடங்களில் தம் சொல் ஏற்கப் படாதது காணக் கபிலர் உள்ளம் நாணிற்று. "தந்தை இருந்தால், தங்களை மணக்க விரும்பித் தங்கள் பறம்பு நோக்கி வரும் இளவரசர் கூட்டத்தைக் கண்டுகளிக்க வேண்டிய இவர்கள், தங்கள் கால்கடுக்கப் பிற அரசர் அவைக்களம் ஏறி அவமானப்பட வந்ததே," என்று வருந்தினார் ; இத்தகைய இழிகுணம் மிக்க இளைஞர்களிடத்தே இனிச் செல்லேன் ; என் சொல், செல்லும் இடமாய், இவர்க்கும் ஏற்ற இடமாய்க் கண்டே செல்வேன் ; அவ்வாறு செல்லும் போதும் யான் மட்டும் தனித்துச் செல்வேனே யல்லாமல், இணக்கம் அறிவிக்கா அரசர் முன் இவரையும் உடனழைத்துச் செல்லேன் என்று முடிவு கொண்டார். அத்தகையான் ஒருவனைத் தேர்ந்து அவன் ஒப்புதல் பெற்று வரும்வரை இவரைத் தக்கார்பால் ஒப்படைத்துச் செல்லுதல் வேண்டும் என்று எண்ணினார் ; மலையமானாட்டுத் திருக்கோவலூர் செந்தண்மை மிக்க அந்தணர் நிறைந்தது என்பதை அவர் முன்னரே அறிவார் ; அவர் மலையமானோடு வாழ்ந்த காலத்தில் அவ்வந்தணருள் சிலரை அறிந்திருந்தார் ; ஆகவே, பாரி மகளிரை அழைத்துக் கொண்டு திருக்கோவலூர் சென்று, ஆங்கே தமக்குத் தெரிந்த பார்ப்பார் சிலரிடத்தில் அவர் அருமை பெருமை கூறி, "அன்புடன் ஓம்புக" என்று ஒப்படைத்து "விரைவில் மீண்டு வருவேன் ; அதுவரை ஆற்றியிருங்கள்" என்று அம் மகளிருக்கும் ஆறுதல் உரைத்து அகன்றார்.

"மகளிரை மணக்க மறுத்தனர் அரசர் இருவர்; அவர்கள் மறுத்தது, மகளிர் மணத்திற்கேற்ற மங்கையர் அல்லர் என்ரு? அன்று; பாரியின் பகைவர் பேரரசர் மூவர் என்ற அச்சமே அவர்கள் மறுத்ததற்குக் காரணம். அவ்வேந்தரைக் கண்டு அஞ்சும் ஆண்மையிலா அரசர் எவரும் இவரை மணக்க இசையார்; ஆகவே, அவரைக் கண்டு அஞ்சா ஆண்மையாளர் யாவர் எனத் தேர்ந்து அவர்பால் செல்வதே நன்று" என்று எண்ணினர்; தமிழ் நாட்டரசர் அனைவருள்ளும், அவ்வேந்தரைக் கண்டு அஞ்சா ஆற்றல் வாய்ந்தவர் மலையமான் நாட்டு அரசர்களே. அவர்கள் அவரைக் கண்டு அஞ்சாமை மட்டும் அன்று; அவர்க்குப் படைத்துணை போகும் அளவு பேராற்றலும் வாய்ந்தவராவர். ஆகவே, இம் மகளிரை மணப்பதால் அவர் பகைப்பரே என்ற அச்சம் மலையர்க்கு உண்டாகாது; மேலும், மலையர் புலவர்க்கு மதிப்புத் தரும் மாண்பினர்; ஆகவே, பாரிமகளிரை மணக்கும் மனமும் மறமும் ஒருங்கே பெற்றவர் மலைய மன்னர்களே எனத் துணிந்தார். அப்போது அந்நாடாண்டிருந்தவர் மலையமான் திருமுடிக் காரியின் மக்கள் இருவர்; மங்கையர் இருவர் இருப்பதற்கேற்ப, மலையமானுக்கும் மக்கள் இருவர் இருப்பது கண்டு மகிழ்ந்தார்; கபிலர் அவர்களைச் சென்று கண்டார்; தந்தை வாழ் காலத்தில் வந்திருந்தபோது கபிலர் பெருமையை அறிந்தவராதலின், அன்புடன் வரவேற்றனர்; அவர்களிடத்தே தம் உள்ள விருப்பத்தை உணர்த்தினர் கபிலர்; புலவர்வேண்டுவன அறிந்து அளித்துப் புரக்கவல்ல அவ்வரசிளங்குமரர்கள், "மணங்கொள்" என மங்கையர் இருவரை அப்புலவர்களே அளிப்பர் எனின், அதை மறுப்பாரோ? மலையர் இருவரும் மணவினைக்கு இசைந்தனர்; நன்னாள் ஒன்றில், மலையர் இருவரை, மகளிர் இருவரும் மணந்தனர்; மகளிர் மண விழாக்கண்டு களித்த கபிலர், அவர் தந்தை பாரியின் பிரிவு எண்ணி இரங்கினர்; தம் கடமை இனிது முடிந்ததால் மகிழ்ந்து, மகளிர்பால் விடைபெற்றுச் சென்று, பெண்ணையாற்றின் தென்கரையடைந்து, பாரியை நினைந்து, வடக்கிருந்து உயிர்விட்டுப் புகழ்பெற்ருர்.

பாரி மகளிர்க்கு மணம் முடித்த பின்னர்க் கபிலர் பெண்ணையாற்றங் கரையில் தீப்புகுந்து உயிர் விட்டார் எனக் கூறிப் புறநானூற்றுச் செய்திகளை ஒரு வகையில் உறுதி செய்யும் கல்வெட்டொன்று திருக்கோவலூர்க்கண் உளது.

"………முத்தமிழ்க் கபிலன்,
மூரிவண் டடக்கைப் பாரிதன் னடைக்கலப்
பெண்ணை மலையற் குதவிப் பெண்ணை
அலைபுன லழுவத் தந்தரிசஞ் செல
மினல் புகும் வீடுபே றெண்ணிக்
கனல் புகுங் கபிலர்க் கல்லது, புனல்வளர்
பேரெட் டான வீரட் டானம்
அனைத்தினும் அநாதி யாயது."

**(S. I. I. Vol. VII, No. 863)**

இனி, 'பார்ப்பார் இல்லத்தில், பாரி மகளிர் வாழ்ந் திருந்தகாலை, ஒரு நாள், பெரு மழை பெய்துகொண்டிருக் கையில், ஔவையார் முற்றும் நனைந்த மேனியராய் அவ் வில்லுள் நுழைந்தார்; வந்தவர் ஔவையார் என்பதை யுணர்ந்த அம் மகளிர், ஔவையாரை அணுகி, நனைந்த அவர் ஆடையை அகற்றினர்; உடுத்துக்கொள்ள அவர்க்கு வேறு ஆடை இன்மை அறிந்து, தங்கள் நீலச் சிற்றாடை கொடுத்து நடுங்கும் அவர் குளிர் போக்கினர்; கொல்லையில் கொழுந்துவிட்டு வளர்ந்திருக்கும் கீரையைப் பறித்துக் கொணர்ந்து, சுவைபடச் சமைத்துச் சூடுடன் அளித்து அவர் பசியையும் போக்கி, அவர் உடற்கும், உள்ளத்திற் கும் ஊக்கம் ஊட்டினர்; "இன்னாது இரக்கப்படுதல் இரந் தவர் இன்முகம் காணும் அளவு" என்ற குறள் உரை யைப் போற்றுது, வந்தவர் இன்முகம் காணும் வரை பொருள்களை வாரி வழங்குவதே வாழ்வின் பயன் எனக் கருதியதாலேயே அவர்கள் தந்தை உயிர் துறந்தான்; அவர்கள் அதை அறிவார்கள்; அறிந்தும்,

"எந்தை நல்கூர்ந்தான் இரப்பார்க்கு ஈந்து என்று அவன்
மைந்தர் தம்ஈகை மறுப்பரோ—பைந்தொடீ!

நின்று பயன்உதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவும் கனி'' (நன்னெறி : களு)

என்பதைப்போல், தந்தையை இழந்து, தனித்துயர் உற்றுத் தவிக்கும் அந்நிலையிலும், தனக்கு ஆடையும் உணவும் அளித்துப் பேணிய அம்மகளிர் செயல், ஔவையார் உளத்தில் அளவிலா மகிழ்ச்சியை உண்டாக்கிற்று ; வெண்பா இரண்டு பாடி, விரும்பிப் பாராட்டினர் :

'' வெய்தாய், நறுவியதாய், வேண்டளவும் தின்பதாய்
நெய்தான் அளாவி, நிறையிட்டுப்—பொய்யே
அடகு என்றுசொல்லி அமுதத்தை இட்டார்
கடகம் செறியாதோ கைக்கு,''

'' பாரி பறித்த பறியும், பழையனூர்க்
காரிஅன்று ஈத்த களிக்கொட்டும்—சேரமான்
வாராய் என அழைத்த வார்த்தையும், இம்மூன்றுஞ்
நீலச்சிற் றுடைக்கு நேர்.''

தம்பால் அன்புகாட்டி ஆதரித்த அம்மகளிர் மணப் பருவம் எய்திய மங்கையராதலின், அவர்க்கு மணம் முடித்து வைத்தலே, தம்முடைய தலையாய கடன் என எண்ணினர் ஔவையார் ; பாரி மகளிரை மணந்துகொள்ளத்தக்க பீடும், பெருமையும், அறிவும், ஆற்றலும், ஆண்மையும், அழகும், ஒழுக்கமும், உயர்வும் உடையான் யாவன் என எண்ணிப் பார்த்து, அத்தனையும் ஒருங்குடையான் திருக்கோவலூர் அரசன் தெய்வீகனே என அறிந்தார் ; அவன்பால் அவ்விரு மகளிரையும் அழைத்துச் சென்று மணம் முடித்துக்கொள்ளுமாறு வேண்டினர் ; புலவர் வேண்டுவனவற்றைக் குறிப்பான் அறிந்து, அவர் அகமும், முகமும் மலர அள்ளி அள்ளிக் கொடுக்கும் அருள் உள்ளத்தனாகிய அவனும், அவர் வேண்டுகோளை ஏற்க மறுத்தான். ஔவையார்க்குச் செய்வதொன்றும் புலப்படவில்லை ; பேரழகும், சீரிளமையும் வாய்ந்தவர் பாரிமகளிர் ; குலத்தாலும், குணத்தாலும் குறையுடையாரல்லர் ; அறிவிலும் அன்பிலும் அணைவரினும் சிறந்தவர். இவ்வளவும் இருந்தும், இவர்களை

மணக்க மன்னர்கள் மறுப்பானேன்? என்று எண்ணி எண்ணிப் பார்த்தனர்; ஒன்றும் விளங்கவில்லை; "மறுப்பது ஏன்?" என்று அவனையே கேட்டார். தெய்வீகன், "புலவர் பெருந்தகையீர்! இவ்விள மங்கையர் இருவரையும் மணந்து கொள்ள மறுக்கும் உள்ளம், எவர்க்கும் எளிதில் உண்டாகாது என்பது உண்மையே; என்றாலும், இவர்களோ பாரியின் மகளிர்; பாரியோ, பேரரசர்களாய சேர, சோழ, பாண்டியர் பகைவன்; நான் இம் மகளிரை மணந்துகொள் வேனாயின், அம் மூவேந்தர் பகையை இருகையேந்தி வர வேற்றவனாவேன்; ஆகவேதான், இவர்களை மணக்க மறுக்கிறேன்" என்று கூறினான்.

பாரி மகளிரை மணக்கப் பாரரசர் மறுத்ததற்கான காரணத்தின் உண்மையினை உணர்ந்த ஔவையார், அதற்கு யாது செய்வது என எண்ணிப் பார்த்தார்; அவர்க்கு ஒரு வழி தோன்றிற்று; வேந்தர் மூவரும் தன்பால் பேரன்புடையவர்; தான் விரும்பும் எதையும் செய்யும் நெஞ்சப் பாங்குடையவர்: அவர்களிடத்தே பாரி மகளிர் நிலை கூறி, அவரை மணக்க விரும்பும் மன்னர்பால், பகை கொள்ளுதல் கூடாது என்று வேண்டின், அவர்கள் மறுக்கமாட்டார்கள்; மனம் ஒப்புவர் ஆதலின், அவர்கள் இசைவினைப் பெற்றுத் தர உறுதிமொழியளித்து, அரசனை, அம் மகளிரை ஏற்கு மாறு செய்தல் வேண்டும் என எண்ணினார்; அரசனும் அதற்கு இசைந்தான்; உடனே ஔவையார், தெய்வீகன் பாரிமகளிரை மணந்துகொள்ள இசைந்ததை அறிவித்து, அம் மண விழாவிற்கு வந்து மணமக்களை வாழ்த்திச் சிறப்பிக்குமாறு, அம் மூவேந்தர்கட்கும் கீழ்வரும் அழைப்புச் செய்யுள்களை அனுப்பினார்:

"சேரலர்கோன் சேரல்! செழும்பூந் திருக்கோவல்
ஊரளவும் தான்வருக! உட்காதே—பாரிமகள்
அங்கவையைக் கொள்ள அரசன் மனம்இயைந்தான்
சங்கவையை யும்கூடத் தான்."

"புகார்மன்னன், பொன்னித் திருநாடன், சோழன்!
தகாதென்று தான்அங்கு இருந்து—நகாதே,

கடுக வருக! கடிக்கோவ லூர்க்கு
விடியப் பதினெட்டாம் நாள்.''

''வையைத் துறைவன், மதுரா புரித்தென்னன்!
செய்யத் தகாதென்று தேம்பாதே,—தையலர்க்கு
வேண்டுவன கொண்டு விடியசு ரொன்பான்நாள்
ஈண்டு வருக இசைந்து.''

அழைப்பு அனுப்பிய ஔவையார், பின்னர்த் திருமணத்திற்கான செலவுகட்கு வேண்டும் பொன்னும், பொருளும் பெருகத் தேவை என்பதை யுணர்ந்து, அவற்றைப் பிற அரசர்பால் இரந்து பெறுவதினும், தம் ஆற்றலால் தாமே தேடல் சிறப்பாம் எனக் கொண்டு வருணனை நோக்கி,

'' கருணையால் இந்தக் கடல் உலகம் காக்கும்
வருணனே! மாமலையன் கோவல்—திருமணத்தில்
மும்மாரி பெய்யும் முதுவாரியை மாற்றிப்
பொன்மாரி யாகப் பொழி''

என்ற பாடலைப் பாடினார்; உடனே, அவ்வூரார்க்கும், அம்மணவினைக்கும் வேண்டுமளவு பொன்மழை பெய்து மக்கள் மனத்தில் மகிழ்ச்சியை விளைத்தது; இனி, மண விழாக் காண வருவார்க்கும் மனம் விரும்பும் ஆடையும், உணவும் அளித்தல் மணமக்கள் கடனாதலின், அவற்றைப் பெறுவதற்காகப்,

'' பொன்மாரி பெய்யும் ஊர், பூம்பருத்தி ஆடையாம்;
அந்நாள் வயலரிசி ஆகும்ஊர்;—எந்நாளும்
தேங்குபுக ழேபடைத்த சேதிமா நாடதனில்
ஓங்கும் திருக்கோவ லூர்,''

'' முத்தெரியும் பெண்ணை முதுநீர் அதுதவிர்த்து
தத்திவரு நெய்பால் தலைப்பெய்து—குத்திச்
செருமலைத் தெய்வீகன் திருக்கோவ லூர்க்கு
வருமளவும் கொண்டோடி வா''

என்ற இரு பாடல்களைப் பாடினார். உடனே, அந் நாட்டில் விளைந்திருக்கும் பருத்திச் செடிகள் எல்லாம், ஆடை

யாகவே காய்த்தன. அந் நாட்டு நன்செய் வயல்களில் வளர்ந் திருக்கும் செந்நெற் பயிர்கள் எல்லாம் அரிசியாகவே விளைந் தன ; அத் திருக்கோவலூரை அடுத்துப் பாயும் பெண்ணை யாற்றில் நீர் ஓடுவது நீங்கி, நெய் ஒருபாலும், பால் ஒரு பாலும் பெருக்கெடுத்து ஓடத் தொடங்கின.

இவ்வாறு திருமணத்திற்கான எல்லாம் இனிது நிறை வேறின ; மண நாளும் வந்துற்றது ; முடியுடை மன்னரும், குறுநில மன்னருமாக எல்லா அரசர்களும் வந்து சேர்ந்த னர் ; மணவிழாத் தொடங்கவேண்டிய அமையத்தில், தெய் வீகனுக்குத் தாம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்று வான் வேண்டி "அங்கவை, சங்கவை ஆகியோரைத் தெய் வீகன் மணம் செய்து கொள்வதைத் தடுக்கவில்லை ; அது குறித்து அவனோடு பகை கொள்ளோம் ; இம் மண விழா எங்கட்கு விருப்பமே" என அறிவிக்குமாறு ஔவையார் மூவேந்தரையும் வேண்டினர் ; அவர்கள், அவரை நோக்கி, "அன்புடையீர் ! இம் மணம் எல்லோராலும் ஏற்கத்தக்க தாயினும், இம் மணப் பந்தலில் யாதேனும் ஓர் அற்புதம் நிகழ்தல் வேண்டும் ; அவ்வாறாயின், இத்திருமணத்திற்கு எங்கள் இசைவினையும் தருவோம், மணமக்களையும் வாழ்த் திப் போற்றுவோம்" என்றனர் ; உடனே, ஔவையார், அம் மணப் பந்தலுக்குக் காலாக நிற்கும் பனந்துண்டு ஒன்றை நோக்கித்,

"திங்கட்குடையுடைச் சேரனும், சோழனும், பாண்டியனும்
மங்கைக்கு அறுகிட வந்துநின் றூர்மணப் பந்தரிலே ;
சங்கொக்க வெண்குருத் தீன்று, பச்சோலை சலசலத்துக்
கொங்கிற் குறத்தி குவிமுலை போலக் குரும்பைவிட்டு
நுங்குக் கண்முற்றி, அடிக்கண் கறுத்து, நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழம் தரவேண்டும் பனந்துண்டமே"

என்ற பாடலைப் பாடினர் ; உடனே, வெட்டுண்டு உலர்ந்து போன அப் பனந்துண்டு, உயிர் பெற்றது ; வெண் குருத்து வெளி வந்தது ; பின்னர்ப் பச்சோலையாக மாறி ஒலித்தது ; ஒருபால் பனங்குலை தோன்றி, நுங்கு முற்றிக் காயாகிக், காய் கனியாகிக் காட்சியளித்தது ; ஔவையாரின் இவ்

வரும் பெருஞ் செயல் கண்ட வேந்தர் மூவரும், அச்சமும் வியப்பும் கொண்டவராய், மணவினைக்கு மேலும் தடையாக இருத்தல் தகாது எனக் கொண்டு மணவிழாவை முன்னின்று முடித்து, மணமக்களை வாழ்த்தி மகிழ்ந்தனர்; பாரி மகளிர் மணவினை கண்டு மன அமைதியுற்றார் ஒளவையாரும்,'' என்ற கதையொன்றும் நாட்டில் வழங்குகிறது.

இவ்வாறு பாரி மகளிர் மணங் குறித்துப் பல்வேறுபட்ட கருத்துக்கள் நாட்டில் நிலவுகின்றன; பாரி மகளிர் மணத்திற்கு முயன்றார் கபிலர் எனக் கூறும் புறநானூற்றுச் சான்றும், அம் மகளிரை மலையற்கு மணம் புரிவித்தார் கபிலர் எனக் கூறும் திருக்கோவலூர்ச் சாஸனச் சான்றும், அவரைத் தெய்வீகனுக்கு மணம் செய்வித்தார் ஒளவையார் எனக் கூறும் தமிழ் நாவலர்ச் சரித்திரச் சான்றினும் வலிவுடையன; ஏற்றுக் கோடத்தக்கன ஆதலின், பாரி மகளிர்க்கு மணஞ் செய்வித்தவர் கபிலரே; ஒளவையாரல்லர் என்று துணிதலே நன்றாம்.

## எ. பேகன்

மதுரை மாவட்டத்தில், பொதினி என்ற பெயருடைய மலையகத்தோரூர் உளது; அஃது ஆவிநன்குடி என்ற பெயரானும் வழங்கிவந்துளது; இப்போது, பழனி என்ற பெயரான் வழங்கும் மலையே அவ்ஆவிநன்குடி; முருகன் உறையும் ஆறு படை வீடுகளுள் ஆவிநன்குடியும் ஒன்று; பழனிமலை முருகனுக்குரியது என்பதற்கேற்ப, பொதினி மலைக்குரியோனாகிய நெடுவேளாவி என்பானின் பேராற்ற லுக்கு, முருகனின் போர்த்திறம் உவமை கூறப்படுவதும், அம்மலை தெய்வக் காப்புடையது எனக் கூறப்படுவதும் காண்க.

"முழவுறழ் திணிதோள் நெடுவேள் ஆவி
பொன்னுடை நெடுநகர்ப் பொதினி."

"முருகன் நற்போர் நெடுவேள் ஆவி
அறுகோட்டு யானைப் பொதினி." (அகம்: சுக, க)

"ஈர்ந்தண் சிலம்பின் இருள்தூங்கு நளிமுழை
அருந்திறல் கடவுள் காக்கும் உயர்சிமைப்
பெருங்கல் நாடன் பேகன்." (புறம்: கரு௮)

ஆவிநன்குடிக்குச் சித்தன் வாழ்வு என்ற பிறிதொரு பெயரும் உண்டு. "இனிச் சித்தன் வாழ்வு என்று சொல்லு கின்றவூர் முற்காலத்து ஆவினன்குடி யென்று பெயர் பெற்றதென்றுமாம்; அது, 'நல்லம்பர் நல்லகுடி யுடைத் துச் சித்தன் வாழ்வு - இல்லந்தொறும் மூன்று எரி யுடைத்து, நல்லரவப், பாட்டுடைத்துச் சோமன் வழிவந்த பாண்டியநின், நாட்டுடைத்து நல்ல தமிழ்,' என்று ஒளவை யார் கூறியதனான் உணர்க. "சித்தன் என்பது பிள்ளையா ருக்குத் திருநாமம்," (திருமுருகாற்றுப் படை: ௧எசு) என நச்சினார்கினியர் கூறுவது காண்க. ஆவினன் குடி, வேளிருள் ஒரு பிரிவினராய ஆவியர் என்ற குறுநில மன்ன ரால் ஆளப்பட்டமையால் வந்த பெயராம். அகநானூற்று அரும்பதவுரைகாரர், "நெடுவேளாவி, குறுநில மன்னன்; பொதினி, ஆவிமலை" என எழுதுவது உணர்க.

இவ்ஆவியர் என்பார் யாவர் என்பது நன்கு புலனாக வில்லை: அகநானூறு அளிக்கும் நெடுவேள்ஆவி என்பவனே, இக்குடி முதல்வனாவன் என்று சிலர் கூறுவர்; ஆவியர், சேர வேந்தர்க்கு மகட்கொடுக்கும் மாண்புடையராவர்; இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், செல்வக் கடுங்கோ வாழியாதன் என்ற இரு சேரப்பெருவேந்தர்க்கும் மனைவியராய் வாழ்க்கைப்பட்டார் இருவரும், வேளாவிக் கோமான் பதுமன் என்ற ஆவியர் வழிவந்தான் மகளிராதல் அறிக. சேரர்க்குரிய தலைநகராய வஞ்சிமாநகரத்தே, இவ்ஆவியர் பெயரால், அழகிய மாளிகையொன்றும் அமைந்திருந்தது எனச் சிலப்பதிகாரத்தால் தெரிகிறோம்:

"பேரிசை வஞ்சி மூதூர்ப் புறத்துத்
தாழ்நீர் வேலித் தண்மலர்ப் பூம்பொழில்
வேளா விக்கோ மாளிகை காட்டி."

(சிலம்பு: நடுகல்: ககசு - அ)

இவ்வாறு சிறப்புற்ற ஆவியர்குடியில் வந்தாருள் பேகனும் ஒருவனாவன்; பேகன் வையாவிக் கோப்பெரும் பேகன் என அழைக்கப்பெறுவதும், ஆவிநன்குடியாகிய பழனியில் உள்ளதொரு குளம் வையாவிக்குளம் என அழைக்கப் பெறுவதும், பேகன் ஆவியர் குடிவந்தவன், அவ்ஆவியர், பொதினிமலைக்கு உரியவர் என்ற உண்மைகளை உறுதி செய்வனவாதல் அறிக. பேகன் கடையெழு வள்ளல்களுள் ஒருவனாவன் என்றும், கொடைவள்ளலாய குமணனுக்கும், சிறுபாணாற்றுப் பாட்டுடைத் தலைவனாய ஒய்மானாட்டு நல்லியக் கோடனுக்கும் காலத்தால் முற்பட்டோன் என்றும் பெருஞ்சித்திரனாரும், இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனாரும் கூறுவர்.

பேகன் பெரிய கொடையாளி; ஒருநாள் சோலையில் உலாவிவரச் சென்ற பேகன், ஆங்கு, குளிர்ந்த வாடை வீசவும், விசும்பில் முகிற்குலம் கறுத்துத் திரண்டு மூடிக் கொள்ளவும் கண்ட மயிலொன்று தன் தோகை விரித்து மகிழ்ந்து ஆடலைக் கண்டான்; அதன் ஆடல் கண்டு

மகிழ்ந்த பேகன், தன்னைப் போன்றே, அதுவும் குளிரால் நடுங்குகிறது; ஆகவேதான் அவ்வாறு ஆடுகிறது என்று எண்ணினான்; உடனே, வாடைக்கு அஞ்சித் தான் அணிந்து வந்திருந்த அழகிய பொன்னாடையை அம் மயில்மீது போர்த்திவிட்டு, வாடைவருத்த வருந்தி அரண்மனை அடைந்தான்; பேகனின் பேரருள்திறமும், பெருங் கொடைச்சிறப்பும் விளங்கத் துணைபுரியும் இவ்வரிய நிகழ்ச்சியைப் புலவர் பலரும் பாராட்டிப் பாடுவாராயினர்.

"உடாஅ; போரா ஆகுதல் அறிந்தும்,
படாஅம் மஞ்ஞைக்கு ஈத்த எங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்!" (புறம்: ௧௪௧)

"மடத்தகை மாமயில் பனிக்கும் என்றருளிப்
படாஅம் ஈத்த கொடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக!" (புறம்: ௧௪௫)

"கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகன்." (சிறுபாண்: ௫-௭

பேகன் கொடைவளத்தைப் பாராட்டிப் பாடினாருள் பரணர் பாடிய பாடல் அவன் கொடைப் பெருமையினைக் குன்றிலிட்ட விளக்கென விளக்கி நிற்கின்றன. "நீரற்று வற்றிய குளத்தினும், வித்தி வான் நோக்கும் வயல்களினும் பெய்து பயனுடையதாகும் மழை, ஒன்றும் விளையாக் களர் நிலத்திலும் பெய்து பயனின்றிக் கழிதலும் உண்டு; இவ்வாறு, பெய்தால் பயனளிக்கும் இடம் இது; ஆகவே ஈண்டுப் பெய்தல் வேண்டும்; பெய்தாலும் பயனுறா இடம் இது; ஆகவே ஈண்டுப் பெய்தல் கூடாது என வரையறுத்துக்கொள்ளாது எல்லா இடத்தினும் பெய்யும் மழையேபோல், பேகனும் இரவலர்தம் தகுதி, தகுதியின்மைகளை அறிந்து நோக்கும் அறிவிலனாய்த் தன்பால் வந்து இரப்பார் யாவரேயாயினும் அவர் அனைவர்க்கும் பொருள்கொடுக்கும் புல்லறிவுடையனாவன்; பேகன், இவ்வாறு கொடைத்தொழிற்கண் அறிவற்றவன் ஆவனோ

யன்றிப் போர்க்களத்தே, போரறிவு அறியாது போரிடுவா னல்லன்; போர்க்களத்தே, பேராண்மை பெறுதாரும், புற முதுகிட்டுப் புண் பெற்றோரும், இளமையும், முதுமையும் உடையராய்ப் போர்த்தகுதி பெறுதாரும் வருவர்; அவரோடெல்லாம் அமர்தொடுத்தல் ஆண்மையோ, அறமோ ஆகாது; ஆண்டாலும், ஆற்றலாலும் தம்மை யொத்தார்மீதே போர்தொடுத்தல் வேண்டும்; இது போர் அறம்; இவ்வறம் அறியாது போரிடும் அறிவிலியாகான் பேகன்; அஃதறிந்து அமர் உடற்றும் ஆண்மையாளன் ஆவன்."

"அறுகுளத்து உகுத்தும், அகல்வயல் பொழிந்தும்,
உறும்இடத்து உதவாது உவர்நிலம் ஊட்டியும்
வரையா மரபின் மாரி போலக்
கடாஅ யானைக் கழற்கால் பேகன்
கொடை மடம் படுதல் அல்லது
படைமடம் படான் பிறர்படை மயக்குறினே."

(புறம் : கசஉ)

பேகன்பால் பரிசில் பெற்று மீளும் ஒரு பாண்மகனை, வழியிடை ஓரிடத்தே, வறுமையே அணிகலனாகக் கொண்ட மற்றொரு பாண்மகன் காண்கிறான்; பரிசில் பெற்ற பாண்மகன், பொற்றாமரைப் பூச்சூடித் திகழ்வதை யும், அவன் உடன்வரும் விறலியர், பொன்னரி மாலையால் மாண்புற்று விளங்குவதையும், அவர்கள் வழியை நடந்து கடக்காது, விரைந்து செல்லும் குதிரைகள் பூட்டிய நெடிய தேர் ஏறி வந்திருப்பதையும், குறையொன்றும் இன்றி நாட்டிடை வாழ்வாரேபோல், காட்டிடையேயும் கவலை யற்று வாழும் அவர் வாழ்க்கையினையும் கண்டான்; அக் காட்சி அவனுக்குப் பெருவியப் பளித்தது; "நம்போலும் பாண்மகன் இவன்; இவனுக்கு ஏது இத்துணைப் பெருஞ் செல்வம்?" என்று எண்ணுவானாயினன்; அவன் அகக் குறிப்பினை முகக் குறிப்பால் அறிந்து கொண்ட பரிசில் பெற்ற பாண்மகன், அவனை நோக்கிக், "காக்கவேண்டும் பெருஞ் சுற்றத்தின் கடும்பசியைப் போக்கத் துடிக்கும்

பாண்மகனே ! வெல்லும் வேலேந்திய பேகனும் பெரு வள்ளலைக் கண்டு பரிசில் பெறுமுன், நின்னினும் வறுமையுடையேன் யானும் ; இந் நிலையினை இன்றுதான் பெற்றேன் ; இது பேகன் அளித்த பெரு வாழ்வு ; பேகன் பெருங் கொடையாளன் ; உடை உடுத்தல் வேண்டும் ; குளிர் போக்கப் போர்வையினை மேற்கோடல் வேண்டும் என அறியும் அறிவற்றது மயில் ; அவ்வியல்பினதாம் மயிலுக்கும் போர்வையளித்துப் புரக்கவல்ல பேருள்ளம் உடையான் அவன் ; வந்தோர்க் கெல்லாம் பொருள்களை வாரி வழங்குதலாம் கொடைப் பயன், மறுமை யுலகில் வந்து மாறுது பயன் தரும் என எண்ணிக் கொடுப்பா னல்லன் ; அவன் கொடை கைம்மாறு கருதி நிகழ்வதன்று ; வந்து வாயிற்கண் நிற்பார் தம் வறுமையின் கொடுமையைக் கண்டே வாரி வழங்கும் வழக்குடையான் அவன் ; அத்தகையானை நீவிரும் சென்று காணுங்கள்,'' என அறிவித்து ஆற்றுப்படுத்தான். இவ்வாறெல்லாம், பேகன் பெருங்கொடையைப் பாராட்டியுள்ளார் பரணர்.

“பாணன் சூடிய பசும்பொன் தாமரை
மாணிழை விறலி மாலையொடு விளங்கக்
கடும்பரி நெடுந்தேர் பூட்டுவிட்டு அசைஇ
ஊரீர் போலச் சுரத்திடை இருந்தனிர்,
யாரீ ரோஎன வினவ லானக்
காரென் ஒக்கல் கடும்பசி இரவல !
வென்வேல் அண்ணல் காணு ஊங்கே,
நின்னினும் புல்லியேம் மன்னே ! இனியே
இன்னேம் ஆயினேம் மன்னே ! என்றும்
உடாஅ ; போரா ஆகுதல் அறிந்தும்
படாஅம் மஞ்ஞைக்கு ஈத்த எங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்
எத்துணை யர்யினும் ஈத்தல் நன்றென
மறுமை நோக்கின்றோ அன்றே;
பிறர், வறுமை நோக்கின்று அவன் கைவண் மையே.”

(புறம் : கசுக)

கொடையாலும், கொற்றத்தாலும் சிறந்த பேகன் பால் தீயொழுக்கம் ஒன்றும் குடிகொண்டிருந்தது; அவன், அழகே உருவென வந்த, காரிகையர்க்குக் கற்பே பொற்புடை அணியாம் எனக் கருதும் கண்ணகி எனும் பெயருடையாளை மனைவியாகப் பெற்றிருந்தும், அவள் உண்ணுதும், உறங்காதும், நல்லன உடாதும் இருந்து ஓயாது அழுது நிற்குமாறு அவளைக் கைவிட்டு, நல்லூரில் வாழ்ந்திருந்த பரத்தை யொருத்தியோடு உறவுகொண்டு அவளோடு ஆங்கு வாழ்வதை மேற்கொண்டான்.

பேகனைப் பாடிப் பொருள்பெற வேண்டும் என்ற பெரு விருப்பினராய கபிலர், அவன் மலை நோக்கிச் செல்வாராயினர்; செல்வார், வழியில் மழையின்றி வருந்திய அவன் நாட்டுக் குறவர்கள், மழை வேண்டிக் கடவுளை வழிபடுவதையும், உடனே பெருமழை பெய்வதையும், தேவைக்கு மேலும் மழைபெய்யக் கண்டு, “மழைபோதும்; நிறுத்தித் துணைபுரிக” என மறுவலும் கடவுளை வேண்ட, மழை மேகம் அவ்விடம் விட்டுப் பெயர்ந்து அப்பாற் செல்வதையும், குறவர், மழை நின்ற மகிழ்ச்சியால் தினையுண்டு களிப்பதையும் கண்டு கொண்டே சென்றார்: கடைசியில், முரசு முழங்குவதுபோல் ஒலித்துக் கொண்டோடும் மலையருவியின் அருகே அமைந்திருந்த பேகன் பெருமனையடைந்தார்; வாயிற்கண் இருந்தவாறே, உள்ளிருப்போர்க்குத் தம் வருகையினை உணர்த்தினார்: சிறிது நேரத்திற்கெல்லாம் ஆண்டு அவர் கண்ட காட்சி, அவர் உள்ளத்தைக் கலக்குவதாயிற்று; பேகனின் மனைவியாம் மாண்புடையளாய கண்ணகி, வாயிற்புறத்தே வந்து நின்று “வருக” என வரவேற்பதற்கு மாறாக, வாய்விட்டு அழுவதையும், அவள் கண்கள் கண்ணீர் உகுத்துக் கலங்குவதையும் கண்டார்; “கலங்குதற்குக் காரணம் யாது!” எனக் கனிவுடன் கேட்டார்; அதற்கு அவள், “பெரியீர்! தலைவர் பேகன், ஈண்டு வாழ்வதை வெறுத்து, நல்லூர்ப் பரத்தை யொருத்தியொடு வாழ்கிறார்; அதனால், என்மனை நோக்கி வருவார்க்கு விருந்தளித்து வாழும் மாண்பு எனக்கு இல்லையாயிற்று” எனக் கூறி வருந்தி நின்றாள்.

பேகன், கொடையும் கொற்றமும் உடையவனே யெனினும் தீயொழுக்கமும் உடையான் என்பது கண்டு அவன்பால் வெறுப்பும், அவன் தீச்செயல் கண்டு வருந் தும் அவன் மனைவி கண்ணகிபால் இரக்கமும் கொண்டார் புலவர்; பேகன் தவறினன் எனினும் திருத்தி நல்வழிப் படுத்தலும் கூடும் என்று நம்பினர்; உடனே பேகன் வாழும் நல்லூர் சென்றார்; பேகனைக் கண்டு, "பேக! நேற்று யானும் என் சுற்றமும் மலைமேல் அமைந்த நின் ஊர் சென்று, நின் மனையின்முன் நின்று, நின்னையும் நின் மலை யையும் வாழ்த்திப் பாடி யிருந்தோம்; அப் பாடல் கேட்டுப் பெண் ஒருத்தி வெளியே வந்தாள்; அப்போது அவளிருந்த கோலம், எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்துவதாய் இருந்தது; கண்களினின்றும் ஒழுகிய நீர், உடலெல்லாம் நனைப்ப அழுது நின்றாள்; அவள் குரல் யாழ்போல் இனிதே ஆக வும், அந்நிலையில் அது, துன்பத்தின் எல்லையைத் தொட்டு நிற்பதுபோல் தோன்றித் துயர் விளைத்தது; நின் மலைவாழ் மக்கள், தங்கட்கு வேண்டிய மழையை வேண்டும்போதெல் லாம் பெற்று மகிழ்ந்து வாழ்கின்றனர் என்றால், நின்மனை வாழ் மகளொருத்தி மட்டும் மாளாத் துயரில் மாழ்குவது மாண்புடைத்தாமோ? நின் மனையில் ஒருத்தி துயருற்று வாழ, நீ ஈண்டு மகிழ்ந்துறைதல் நன்றோ? ஆண்டுச் சென்று அவள் துயர் துடைத்தலன்றோ அன்புடையார் கடன்?" என்றெல்லாம் கூறி அறிவுரை பல தந்தார்:

"மலைவான் கொள்கென உயர்பலி தூஉய்
மாரி யான்று மழைமேக் குயர்கெனக்
கடவுட் பேணிய குறவர் மாக்கள்
பெயல்கண் மாறிய உவகையர், சாரல்
புனத்தினை அயிலும் நாட! சினப்போர்க்
கைவள் ஈகைக் கடுமான் பேக;
யார்கொல் அளியள் தானே! நெருநல்
சுரனுழந்து வருந்திய ஒக்கல் பசித்தெனக்
குணில்பாய் முரசின் இரங்கும் அருவி
நளியிரும் சிலம்பின் சீறூர் ஆங்கண்
வாயில் தோன்றி வாழ்த்தி நின்று

நின்னும் நின்மலையும் பாட, இன்னாது
இகுத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாள்
முலையகம் நனைப்ப விம்மிக்
குழலினை வதுபோல் அழுதனள் பெரிதே." (புறம்: கசந)

பேகனுக்கு அறிவுரை கூறினர் கபிலர் ஒருவரே யல்லர்; பரணர், பெருங்குன்றூர் கிழார், அரிசில் கிழார் முதலாயினரும் அறிவுரை பல அளித்துள்ளனர்; பேகனைக் கண்டு பாராட்ட விரும்பிய பரணர், ஆவிநன்குடி யடைந்து, பேகன் பெருமனைமுன் நின்று, அவனையும், அவன் நாட்டையும் பாடினர்; அப் பாடல் கேட்டு ஆங்கே வந்தாள் பேகன் பெருந்தேவி; வந்தவள் முகத்தைப் பரணர் பார்த்தார்; நீலமலர்போன்ற அவள் கண்களினின்றும் சிந்தும் கண்ணீர், அவள் அணிகளையெல்லாம் நனைப்பதை அறிந்தார்; "பேகன் பேராற்றல் பெற்றவன்; பெருங்கொடையாளன்; ஆகவே அவனுக் குரியார் இன்ப வாழ்வினராத லன்றித் துன்பவாழ்வினராகார்; ஆனல் ஈண்டு நிற்கும் இவளோ ஆருத் துயருடையளாய் விளங்குகிருள்; இதற்கு என்னையோ காரணம்?" என்றெல்லாம் எண்ணங்கொண்ட பரணர், அவளை வணங்கி, "அழகும், இளமையும் அணியெனக் கொண்டீர்! நீவிர், எம்மால் விருப்பம் பெறும் பேகனுக்குரிய பெருங்கிழமை உடையீர் அல்லரோ?" என்று வினவினர்; அது கேட்ட அவள், தன் கண்ணீர் வெள்ளத்தை மலர்போலும் தன் கையால் துடைத்துக் கொண்டே, "ஐய! நான் அவற்கு உரிமையுடையே னல்லேன்; அவன், என்போன்ருள் ஒரு பரத்தையொடு உறவுடையனுய் முல்லைவேலி சூழ் நல்லூர்க்கண் வாழ்கின்ருன்" என்று கூறினள்.

பேகன் பரத்தையரொழுக்கம் உடையான் என்பது கேட்டு அவன்பால் வெறுப்புற்ற பரணர், அவனைத் திருத்தி நல்வழிப்படுத்தல் தம் போன்ருர் கடமையாம் என்று கொண்டார்; உடனே, பேகன்வாழ் நல்லூர் சென்று பேகனை நோக்கி, "பேக! மயில், வாடைகண்டு வருந்தாது மகிழ்ந்து ஆடும் இயல்பினதாகவும், அது வாடி

வருந்தும் என்று கொண்டு அவ் வாட்டம்தீர ஆடை அளித்து அருள்செய்யும் அன்புள்ளம் உடையாய் நீ என்பர்; ஆனால் அவ்வருட்குணம் நின்பால் இருக்கக் காண்கிலேன்; இருக்குமாயின், நின் மனைவி, மனையின்கண் இருந்து வருந்த, நீ ஈண்டு மகிழ்ந்து வாழாய் அன்றே? நின்பால் காணும் இவ்வொழுக்கம் இழிவுடைத்து; யாழ் இசைத்து நின்னைப் பாடுகின்றேன்; அருள்புரிவாயாக என நின்னை வேண்டுகின்றேன்; இவ்வாறெல்லாம் வேண்டுவது என் பசித்துயர் போக்க அன்று; பசியால் வருந்தும் சுற்றமும் எனக்கு இல்லை; ஆகவே, பொருள் வேண்டும் புன்மையுடையேனல்லேன்; உண்மையில், என் பெருமை யறிந்து அளிக்கும் பேருள்ளம் உடையையாயின், உடனே நின் தேரேறிச் சென்று நின் மனையின்கண், நின்னையே நினைந்து நைந்துருகும் நின் மனைவியின் துயர் களைந்து களிப்பூட்டுவாயாக; யான் வேண்டும் பரிசில் அஃது ஒன்றே" என்று கூறினர்.

"அருளா யாகலோ கொடிதே! இருள்வரச்
சீறியாழ் செவ்வழி பண்ணி, யாழநின்
காரெதிர் கானம் பாடினே மாக,
நீனறு நெய்தலிற் பொலிந்த உண்கண்
கலுழ்ந்துவார் அரிப்பனி பூணகம் நனைப்ப
இனைதல் ஆனா ளாக, இளையோய்!
கிளையை மன்எம் கேள்வெய் யோற்கு? என
யாம்தன் தொழுதனம் வினவக், காந்தள்
முகைபுரை விரலிற் கண்ணீர் துடையா
யாமவன் கிளைஞரே மல்லேம்; கேளினி
எம்போல் ஒருத்தி நலன்நயந்து என்றும்
வரூஉம் என்ப வயங்குபுகழ்ப் பேகன்,
ஒல்லென ஒலிக்கும் தேரொடு
முல்லை வேலி நல்லூ ரானே." (புறம்: கசச)

"மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளிப்
படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக!

பசித்தும் வாரேம் ; பாரமும் இலமே ;
களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்
நயம்புரிந்து உறையுநர் நடுங்கப் பண்ணி
அறம்செய் தீமோ அருள்வெய் யோய்! என
இஃதுயாம் இரந்த பரிசில் ; அஃது இருளின்
இனமணி நெடுந்தேர் ஏறி
இன்னா துறைவி அரும்படர் களைமே.''

(புறம் : கசரு)

பேகன் பெருமையுணர்ந்து பாராட்ட விரும்பிய பெருங்குன்றூர் கிழார், மலையிடை வழிகள் பலவற்றைக் கடந்துசென்று அவன் மனையடைந்தார் ; மனை முன்றிலில் பெண்ணொருத்தி தனியே நின்று வருந்தியிருப்பதைக் கண்டார் ; அவளருகே சென்று, "அம்மையே! தனியே அழுது நிற்கும் நீவீர் யாவிரோ ? பேகன் நுமக்கு என்ன உறவினனோ? அழுதற்கு என்னையோ காரணம் ?'' என்றெல்லாம் வினவினர் ; அவள், "பேகன்பால் கிடந்து பழி தரும் பரத்தையர் ஒழுக்கத்தினை உணர்த்தி உறுதுயர் உற்றாள் ; பெருங்கொடையாளன் எனப் போற்றற்குரிய பேகன் பிழையுடையான் என்பதறிந்த புலவர் பெரிதும் வருந்தினர் ; தம் வறுமைதீர அவனளிக்கும் பொருள் பெற்று மீள்வதினும், அவனை நல்வழிப்படுத்தி, அவன் மனைவி நல்லாளோடு வாழச்செய்வதே தம் முன்னிற்கும் பணியாம் எனத் துணிந்தார் ; உடனே பேகன்வாழ் நல்லூர் சென்றார் ; பேகனைக் கண்டு பாராட்டினர் ; பாராட்டிய புலவர்க்குப் பரிசளிக்க முன்வந்தான் பேகன் ; அந்நிலையில், "பேக! எமக்குப் பரிசளிக்க விரும்புவையாயின், யாம் வேண்டும் பரிசிலையே அளித்தல்வேண்டும் ; யாம் வேண்டும் பரிசில் பொன்னோ, பொருளோ அன்று ; நின் பிரிவால் வாடிப் பொலிவுகுன்றி நிற்கும் நின் மனைவி மாணலம் பெறுமாறு நீ இன்னே நின்மனை செல்லுதல் வேண்டும் ; அதுவே யாம் வேண்டும் பரிசில்'' என்று அறிவுரை கூறினர் :

"கன்முழை அருவிப் பன்மலை நீந்திச்
சீறியாழ் செவ்வழி பண்ணி வந்ததைக்

கார்வான் இன்உறை தமியள் கேளா,
நெருநல் ஒருசிறைப் புலம்புகொண் டுறையும்
அரிமதர் மழைக்கண் அம்மா அரிவை
நெய்யொடு துறந்த மையருங் கூந்தல்
மண்ணுறு மணியின் மாசற மண்ணிப்
புதுமலர் கஞல, இன்று பெயரின்,
அதுமன் எம்பரிசில்; ஆவியர் கோவே!" (புறம்: கசஎ)

கபிலரும், பரணரும், பெருங்குன்றூர் கிழாருங்கூடி, அறிவுரை கூறிநிற்கும் அந்நிலையில் ஆண்டுவந்த அரிசில் கிழாரும், பேகனை அடுத்து, "பேக! நின் நாடு நோக்கி வந்து, செவ்வழிப்பண் இசைத்து நின்னையும், நின் நாட்டையும் பாடி நிற்க, அது கேட்டு, நீ மகிழ்ந்து அளிக்கும் பரிசாக, அரிய அணிகலன்களையன்று யான் விரும்புவது: அவற்றை ஏற்றுக்கொள்ளும் சிறுமையுடையேனல்லன்; என்னை உண்மையில் பாராட்டி உள்ளம் உவந்து பரிசளிக்க விரும்புவையாயின், நின் அன்பைப் பெறமாட்டாது மிகமிக வருந்தி வாடித் துயருறும் நின் அரும்பெறல் மனைவி, நின்னை அடையப்பெற்ற மகிழ்ச்சியால், இதுகாறும் சீவி முடிக்காதிருந்த தன் கூந்தற்கு அரிய மணம்ஊட்டி, அழகாகச் சீவிமுடித்து, மலர்சூடி மகிழும்வண்ணம், இன்றே தேர் ஏறி நின்னூர் செல்க. அதுவே நீ மகிழ்ந்தளிக்கும் பரிசாக அமைதல்வேண்டும்" என்று அறிவுரை கூறினர்:

"அன்ன வாகநின் அருங்கல வெறுக்கை;
அவைபெறல் வேண்டேம்; அடுபோர்ப் பேக!
சீறியாழ் செவ்வழி பண்ணி,நின் வன்புல
நன்னாடு பாட, என்னை நயந்து
பரிசில் நல்குவை யாயின், குரிசில்! நீ
நல்கா மையின் நைவரச் சாஅய்,
அருந்துயர் உழக்குநின் திருந்திழை அரிவை
கலிமயில் கலாவம் கால்குவித் தன்ன
ஒலிமென் கூந்தல் கமழ்புகை கொளீஇத்
தண்கமழ் கோதை புனைய
வண்பரி நெடுந்தேர் பூண்கநின் மாவே." (புறம்: க௪௬)

புலவர் பலரும் கூடியுரைத்த அறவுரை அனைத்தையும் அமைதியுறக் கேட்டான் பேகன்; அவ்வாறு அவர் உரைத்தன உளங்கொண்ட பின்னரும், அவர்வழி நடவாது மறுக்கும் மதியிலானல்லன் பேகன்: தேர் ஏறித் தன் வீடடைந்து மனைமாட்சியை மாண்புறச் செய்தான். அறிவிழந்து அல்வழி புக்க தனக்கு அறவழி காட்டிப் பெருநெறி நிறுத்திய புலவர் அனைவர்க்கும் பரிசுபல அளித்துப் புகழ்பெருக வாழ்ந்திருந்தான்.

## அ. ஓய்மான் நல்லியக்கோடன்

தென்னார்க்காடு மாவட்டம் திண்டிவனம் வட்டத்தை யும், செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டத் தென் பகுதியையும் தன்கண் கொண்ட நாடு, தமிழ்ச்சங்க காலத்தே ஓய்மாநாடு என்ற பெயர் பெற்றிருந்தது. அதிய மான் நெடுமானஞ்சி பிறந்த அதியர் குடியும், பேகன் பிறந்த ஆவியர் குடியும்போன்ற பழந்தமிழ்க் குடிகளுள், ஓவியர் எனும் குடியும் ஒன்றும்; அதியர் குடிவந்த நெடுமா னஞ்சி அதியமான் என அழைக்கப் பெறுதலேபோல் ஓவியர் குடிவந்த அரசனும், ஓவியர்மான், ஓவியமான் ஓய்மான் என அழைக்கப்பெறுவன்; அதைப்போன்றே ஓவியர் ஆண்ட நாடும், ஓய்மான் நாடு எனவும், ஓய்மாநாடு எனவும் அழைக்கப்பெறும்.

ஓய்மாநாடு, ஐந்நில வளமும் அமையப்பெற்ற அழகிய நாடு. அந் நாடு, மாவிலங்கை, எயிற்பட்டினம், ஆமூர், வேலூர், கிடங்கில் போன்ற பெரிய நகரங்களைத் தன் னகத்தே கொண்டிருந்தது. இவற்றுள், நாட்டின் தலை நகராம் பெருமையுடையது மாவிலங்கை. மாவிலங்கை நீர்வளமும், நிலவளமும் நிறையக்கொண்ட மருதநிலத்து மாநகராகும்; அவ்வூரையடுத்து ஓடிவரும் ஆறு, தன்கண் புகுந்து நீராடும் மகளிர் பற்றி நீந்தும் புணையாகப் பயன் படத்தக்க சந்தனக் கட்டைகளையும், அகிற்கட்டைகளையும், சுரபுன்னை மரத்தின் நறுமலர்களோடு அடித்துக் கொணர்ந்து ஒதுக்கும். அவ்வூர்வாழ் இளமகளிர், கோரைக்கிழங்கு தேடிப் பன்றி உழுத சேற்றுநிலத்தில் ஆடப்புகுந்து, அந்நிலத்தைக் காலால் கிளறியவிடத்து, ஆண்டு ஆம்பற்கிழங்கும், யாமை முட்டையும் அகப்படக் கண்டு அகமகிழ்வர். நிலத்துட் புகுந்து நெல்லரியும் உழவர் தம் கூரிய அரிவாள் வாய் மழுங்கியவிடத்து விரைந்து தொழிலாற்றுவான்வேண்டித், தம் அருகே கிடக்கும் யாமை யின் வளைந்த முதுகு ஓட்டைத் தீட்டுக் கல்லாக்கொண்டு தீட்டுவர். அத்துணை மிகுவளம் உடையது அம் மாவிலங்கை.

"நறுவீ நாகமும், அகிலும், ஆரமும்
துறையாடு மகளிர்க்குத் தோட்புணை யாகிய
பொருபுனல் தரூஉம் போக்கரு மரபின்
தொன்மா விலங்கைக் கருவொடு பெயரிய
நன்மா விலங்கை." (சிறுபாண் : ககசு, கஉ0)

"ஓரை யாயத்து ஒண்டொடி மகளிர்
கேழல் உழுத இருஞ்சேறு கிளைப்பின்
யாமை ஈன்ற புலவுநாறு முட்டையைத்
தேன்நாறு ஆம்பல் கிழங்கொடு பெறூஉம்
இழுமென ஒலிக்கும் புனலம் புதவின்
பெருமா விலங்கை." (புறம் : கஎசு)

"நெல்லரி தொழுவர் கூர்வாள் மழுங்கின்
பின்னை மறத்தோ டரியக் கல்செத்து
அள்ளல் யாமைக் கூன்புறத்து உரிஞ்சும்
நெல்லமல் புரவின் இலங்கை." (புறம் : ௩எசு)

எயிற்பட்டினம், கடற்கரையை அடுத்துள்ள நெய்தல் நிலத்து நகராகும். மதிலால் பெயர்பெற்ற இம் மாநகர், குளிர்ந்த உண்ணுநீர் நிலங்களையும், நீலமணிபோலும் நீர் நிறைந்த உப்பங்கழிகளையும் உடையது.

"மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய
பனிநீர்ப் படுவின் பட்டினம்." (சிறுபாண் : ௫உ-௩)

கிடங்கில், கிடங்கால் என இக்காலத்து வழங்கப்பெறுகிறது. சிதைந்த அகழியும், இடிந்த கோட்டையும் ஈண்டு இன்றும் உள. மலர் நிறைந்த மரச்சோலைகளால் மாண்புற்றது இக் கிடங்கில். ஒய்மாநாட்டு ஊர்களுள் கிடங்கிலும் ஒன்று எனக் கல்வெட்டுகளும் கூறுகின்றன. (S. I. I. vol III. Part II. Page 201)

"கிளைமலர்ப் படப்பைக் கிடங்கில்." (சிறுபாண் : கசு0)

வேலூர், உப்புவேலூர் என, இன்று அழைக்கப்பெறுகிறது. வேல்போல் வடிவுடைய மலர்கள் மணக்கும் கேணிகளை உடையது இவ்வேலூர் எனப் புலவர் கூறுகிறார்.

"நல்லியக்கோடன் தன் பகை மிகுதிக்கு அஞ்சி முருகனை வழிபட்ட வழி, அவன் 'இக் கேணியிற் பூவை வாங்கிப் பகைவரை எறி' என்று கனவிற்கூறி, அதிற் பூவை வேலாக நிருமித்தான். இதனனே வேலூர் என்று பெயராயிற்று" என்ற, இவ்வூர் பற்றிய கதையொன்றும் வழங்குகிறது.

"திறல்வேல் நுதியிற் பூத்த கேணி
விறல்வேல் வென்றி வேலூர்."

(சிறுபாண்: கஎஉ-ரு)

ஆமூர், அந்தணர் வாழும் வளம் உடையது அரிய காவல் நிறைந்தது ; ஆழ்ந்த அகழியையும் உடையது :

"அந்தணர் அருகா அருங்கடி வியனகர்
அந்தண் கிடங்கின் அவன் ஆமூர்."

(சிறுபாண் : கஅஎ-அ)

ஓய்மாநாட்டை ஆண்ட மன்னர் பல்லோருள்ளும், புலவரும், பிறரும் போற்ற வாழ்ந்தோன் நல்லியக்கோடன் எனும் நல்லோனவன் ; அவன் புலிபோலும் பெருவலி யுடையான் ; பகைவர்தம் முகத்தினும், மார்பினும் அல்லால் புறத்தே புண் உண்டாகாவாறு போர்செய்ய வல்ல வாட்போர் வீரன் ; களிறேறிக் களம்சென்று தழும்பேறிய காலில் கட்டிய வீரக்கழல் உடையான் :

"நன்மா விலங்கை மன்ன ருள்ளும்
மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வாள்
உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன்
களிற்றுத்தழும் பிருந்த கழல்தயங்கு திருந்தடி
.........................................
நல்லியக் கோடன்."

(சிறுபாண் : கஉ0-கூ)

நல்லியக்கோடன், கொடையாற் புகழ்பெற்ற கடையெழு வள்ளல்களுள் ஒருவனல்லன். ஆனல், அவன் அவ் வெழுவரினும் சிறந்தோனவன் ; வள்ளல் எழுவரும் தனித்தனியே மேற்கொண்டிருந்த கொடைத்தொழிலாகிய பெரும்பாரம் அனைத்தையும், தான் ஒருவனுகவே தாங்கி நிற்கும் உரனுடையான் நல்லியக்கோடன்; அம்மட்டோ?

வள்ளன்மையில், வேந்தரும் அவனுக்கு ஈடாகார்; வருவார்க்கு அவன் வழங்கிய பொருள் அளவு இறந்ததாம்; அவன் அளித்த கொடைப்பொருட் பெருமையொடு நோக்கியவழி, குட்டுவர்க்குரிய வஞ்சிநகர்ச் செல்வமும் சிறிதாம்; செழியர்க்குரிய மதுரைமாநகர்த் திருவும் சிறிதாம்; சோழற்குரிய உறந்தையின் உறுபொருளும் சிறிதாம். மாருது பெய்யும் மழைபோல், வரையாது வழங்கும் அவன் கைகள்; பாடிவருவார்க்கு அவன் அளித்த பிடியானைகள் பலவாம்; 'அவன்பால் பரிசில்பெற்ற அந்நாள் முதல் இந்நாள்வரை, பிறர்மனை சென்று பாடிப் பிழைப்பதை மறந்தேன்' எனப் புலவர் ஒருவர் பாராட்டுவர்எனின், அவன் கொடைத்தொழிலை என்னெனப் புகழ்வது!

"வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே;"

"மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே;"

"ஓடாப் பூட்கை உறந்தையும் வறிதே."

"எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்
..........................................................
பிடிக்கணம் சிதறும் பெயன்மழைத் தடக்கைப்
பல்லியக் கோடியர் புரவலன்; பேரிசை
நல்லியக் கோடன்."
(சிறுபாண் : ௫0; ௬௭; ௮௩; ௧௧௩-௧௨௬)

"இரவி ஞனே ஈத்தோன் எந்தை;
அன்றை ஞான்றினொடு இன்றி னூங்கும்
இரப்பச் சிந்தியேன்." (புறம்: ௩௭௬)

கடவுளர் உறையும் மகாமேரு மலை ஒரு கண்ணை விழித்துப் பார்த்தாலொத்த உயர்வுடைய அவன் கோபுர வாயில், பகைவராய் வருவார்க்கு நுழைதற்கரிய காவலை உடையதெனினும், அது, பெருநகர்க்கு அடைக்கப்படாது; புலவர்க்கு அடைக்கப்படாது; அருமறையறிந்த அந்தணர்க்கு அடைக்கப்படாது; நல்லியக்கோடன், தன்னைப் பாடிவரும் பாணர் முதலாயினர்க்கு அளிக்கப் பெரும்

பொருள் வேண்டியக்கால், பகைவர் நாட்டுட் சென்று பெரும்பொருள் கொணருமாறு தன் படைவீரரை அனுப்பு வன்; அவர்களும், அவ்வாறே சென்று, வென்று பெரும் பொருள்பெற்று, ஆண்டுத் தன் அரசன் புகழ்பாடி வந்தார்க்கு வழங்கியனபோக எஞ்சியவற்றைக் கொணர்ந்து கொடுப்பர்; இதனல், நல்லியக்கோடன் கொடைத் தொழில் நாடொறும் நடைபெறுவதாயிற்று:

"பொருநர்க் காயினும், புலவர்க் காயினும்
அருமறை நாவின் அந்தணர்க் காயினும்
கடவுள் மால்வரை கண்விடுத் தன்ன
அடையா வாயில் அவன் அருங் கடை."
(சிறுபாண்: ௨0௩-௬)

"திறல்சால் வென்றியொடு தெவ்வுப்புலம் அகற்றி
விறல்வேல் மன்னர் மன்னெயில் முருக்கி
நயவர், பாணர் புன்கண் தீர்த்தபின்
வயவர் தந்த வான்கேழ் நிதியமொடு
....................................................
தரீஇ, அன்றே விடுக்கும் அவன் பரிசில்."
(சிறுபாண்: ௨௪௬-௬௧)

ஆற்றலும், அருளும் உடையனுய நல்லியக்கோடன், ஆடவர்பால் அமையவேண்டும் அரும்பண்புகள் அத்தனே யும் பெற்றிருந்தான்; நல்லியக்கோடன், செய்ந்நன்றி மறவாச் சிறப்புடையன்; சிற்றினம் சேரான்; இன்முகம் உடையன்; இனிய பண்பினன்; அஞ்சி அடைந்தாரை ஆட் கொள்ளும் அருளுடையான்; ஆறிய சினத்தன்; அணி வகுத்து நிற்கும் ஆற்றல் மறவரை அழித்தொழிக்கும் ஆண்மையாளன்; அழிந்து ஓடிவரும் தன் படையைத் தடுத்து நிறுத்தித் தாங்கவல்ல தாளாளன்; எண்ணிய எண்ணியாங்கு முடிக்கும் திண்ணியன்; கண்டார் விரும்பும் கவினுடையான்; ஒருதலைப்படா உயர்நீதியுடையான்; வரு வது உணரும் வாலறிவுடையான்; பெண்டிர் விரும்ப ஒழுகும் மெல்லிய பண்புடையான்; அறிவன அறிந்த அறி வுடையான்; வாயில் வந்து வருந்தி இரப்பார்தம் வரிசை யறிந்து, வரையாது வழங்கும் வள்ளன்மையான்:

"செய்ந்நன்றி அறிதலும், சிற்றினம் இன்மையும்
இன்முகம் உடைமையும், இனிய ஞதலும்,
செறிந்துவிளங்கு சிறப்பின் அறிந்தோர் ஏத்த
அஞ்சினர்க்கு அளித்தலும், வெஞ்சினம் இன்மையும்,
ஆணணி புகுதலும், அழிபடை தாங்கலும்,
வாள்மீக் கூற்றத்து வயவர் ஏத்தக்
கருதியது முடித்தலும், காமுறப் படுதலும்,
ஒருவழிப் படாமையும், ஓடியது உணர்தலும்
அரியேர் உண்கண் அரிவையர் ஏத்த,
அறிவுமடம் படுதலும், அறிவுநன் குடைமையும்,
வரிசை அறிதலும், வரையாது கொடுத்தலும்
பரிசில் வாழ்க்கைப் பரிசிலர் ஏத்தப்
பன்மீன் நடுவண் பான்மதி போல
இன்னகை ஆயமோடு இருந்தோன்."

(சிறுபாண்: உ0எ-உ0)

நல்லியக்கோடன்பால் அமைந்து கிடந்த பண்பு நலம், அவனைப் பாடிய நல்லூர் நத்தத்தனுரை இந்த அளவோடு நிறுத்தவில்லை: அவர் அவனை மேலும் புகழலானுர்; நல்லியக்கோடன், தாய், தந்தை, தன்முன், ஆசிரியன் போலும் ஆண்டால் முதிர்ந்தோர்க்குக் கூப்பிய கையுடையான் என, அவன்பால் அமைந்த பெரியோரைப் பணியும் பண்புடைமையினைப் பாராட்டினுர்; வீரர்களுக்கல்லாமல், மகளிர் அணைய மலர்ந்த மார்புடையான் என, அவன் காதற் சிறப்பினைப் புகழ்ந்தார்; உழவர், தம் உழுதொழிலினை ஒரு குறையும் இன்றி நன்கு ஆற்றுமாறு நாடாண்டான் என, அவன் நல்லரசின் நன்மையினை நாவார வாழ்த்தினுர்; தேரேறி வந்து போர்புரிவார் தம்மைப் போர்புரிந்து ஒழிக்கவல்ல வேற்படையுடையான் எனப் பகைவர்க்கஞ்சா அவன் பண்பினைப் பாராட்டினுர்; இவ்வாறு நல்லூர் நத்தத்தனுரும், புறத்திணை நன்ஞகனுரும் போற்ற நாடாண்டிருந்தான் நல்லியக் கோடன்.

"முதுவோர்க்கு முகிழ்த்த கையினை எனவும்,
இளையோர்க்கு மலர்ந்த மார்பினை எனவும்,
ஏரோர்க்கு நிழன்ற கோலினை எனவும்,
தேரோர்க்கு அழன்ற வேலினை எனவும்."

(சிறுபாண்: உ௩௧-௪)

## ௬. குமணன்

வள்ளல்கள் எனப் பல்லோர் வாழ்த்த வாழ்ந்த, பாரி, ஓரி, மலையன், எழினி, பேகன், ஆய், நள்ளி என்ற எழுவர்க்கும் காலத்தால் பிற்பட்ட கொடைவள்ளல் குமணன். வள்ளல்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு மலைக்கு உரியராய் வாழ்ந்ததைப் போன்றே, குமணனும், முதிரம் எனும் மலைக்கு உரியனாய் வாழ்ந்தான்; முதிரமலை பழனிமலைத் தொடர்களுள் ஒன்று; இம்மலையடிவாரத்தே குமணமங்கலம் என்னும் சிற்றூர் இன்றும் உளது. உடுமலைப்பேட்டையைத் தன்னகத்தே கொண்டு, பழனிவட்டத்துத் தென் மேலைப் பகுதியையும், உடுமலைப்பேட்டை வட்டத்துத் தென்கீழ்ப் பகுதியையும் கொண்டது குமணன் நாடு.

முதிரம் மலைவளம்மிக்கது; மூங்கிலும், சுரபுன்னையும், ஆசினியும், பலாவும் செறிந்து வளர்ந்து சிறந்துதோன்றும் அம்மலையில், பலாக்கனியைப் பறித்துத் தின்னும் ஆண்குரங்கு, பெண்குரங்கோடு கூடிய தன் இனத்தை அழைக்கும் அழகிய காட்சிகளைக் கொண்டது; தெருக்களில், மக்கள் மதுவுண்டு மகிழ்தற்காம் செல்வ வளமும் சிறக்கப் பெற்றது.

"விசும்புறக்
கழைவளர் சிலம்பின் வழையொடு நீடி
ஆசினிக் கவினிய பலவின் ஆர்வுற்று
முட்புற முதுகனி பெற்ற கடுவன்
துய்த்தலை மந்தியைக் கையிடூஉப் பயிரும்
அதிரா யாணர் முதிரம்."
"மட்டார் மறுகின் முதிரம்."
"பழந் தூங்கு முதிரம்." (புறம்: கருஅ; கசுO; கசுங)

குமணன், சிறந்த கொடைவள்ளல் ஆவன்; வரிசைக்கு வருந்தும் பரிசில் வாழ்க்கையுடையவர் பழந்தமிழ்ப் புலவர்கள்; இயற்றமிழ் வளர்த்த புலவரும், இசைத்தமிழ் வளர்த்த பாணரும், நாடகத்தமிழ் வளர்த்த கூத்தரும்,

தம் வாழ்விற்காம் வளந்தேடி உழலும் வாழ்க்கையின ராகாது, தாம் அறிந்த அவ்வருங் கலைகளை வளர்ப்பதில் ஆழ்ந்த சிந்தையராய் வாழ்ந்தமையினாலேயே அவை வளர்ந்தன; அவற்றை வளர்க்கும் அவ் விரவலர்க்கு, வறுமைத்துயர் வந்து வருந்தாவகை வாரி வழங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர் அக்கால அரசரும், பிற செல்வரும். அன்னார் பெரும்பொருள் அளித்துப் பேணி வந்தமையால், அவ்விரவலரும், தம் வாழ்வுபற்றிய கவலையிலராய், அவ்வருங் கலைகளைக் கருத்தூன்றி வளர்த்தனர்: ஆகவே, ஆடியும், பாடியும் தமிழ் வளர்ப்போர் அவ்விரவலரே எனினும், அவர் அதை வளர்க்கப் பெருந்துணை புரிவோர், அவர்க்குப் பொருள் அளித்துப் பேணும் புரவலரேயாவர். அப்புரவலர் இலரேல், இரவலர் வாழ்வதோ, தமிழ் தழைப்பதோ இயலாது; கடைச்சங்க காலத்தே, அத்தகைய இடர்நிலை ஒருகால் உண்டாயிற்று; வரையாது வழங்கித் தமிழ்வளர்த்த வள்ளல்கள் எழுவரும் இறந்துவிட்டனர்; இரவலரைப் புரப்பார் எவரும் இலராயினர்; தமிழ் வளர்வதும் தடையுற்றது. அந்நிலையில், புலவர்க்கும் பிறர்க்கும் பொருள் அளித்துப் போற்றித் தமிழ்தழைக்க வழிசெய்தான் வள்ளல் ஒருவன்; அந்த வள்ளல், முதிரத்துக் கிழவன் குமணன். இவ்வுண்மை, "அலை ஒலிக்கும் ஆழ்கடலும் குறைபடுமாறு நீரைமுகந்து, விரைந்து விண்படர்ந்து, மலையென மருளும் தோற்றம் உடையவாய், வேண்டும் இடத்தே ஒன்றுகூடிய மேகமும், இடியும், மின்னலும் துணைசெய்யப் பெருமழை பெய்தகாலம் கடந்துபோக, வறுமை வந்துற்ற கோடைக் காலத்தே, உயிர்ப்பன்மைகள் எல்லாம், உண்ணும் நீர் பெற்று உய்யுமாறு, கங்கை வெள்ளம் பெருகி விரைந்தோடி வருவதேபோல், வள்ளல்களைக் காணமாட்டாது, வளம் இழந்து, வறுமையுற்று வாடிய எம்போலும் புலவரும், பிறரும் வாழ்வுபெற்று வளஞ்சிறக்க வந்து தோன்றியவன், கொடைவள்ளல் குமணன்" எனப் புலவர் பெருஞ்சித்திரனார் பாராட்டிப் பாடிய பாட்டால் புலனாதல் அறிக.

"நீண்டொலி அழுவம் குறைபட முகந்துகொண்டு
ஈண்டுசெலல் கொண்மூ, வேண்டுவயின் குழீஇப்
பெருமலை யன்ன தோன்றல, சூன்முதிர்பு
உருமுரறு கருவியொடு பெயல்கடன் இறுத்து
வளமழை மாறிய என்றூழ்க் காலை
மன்பதை யெல்லாம் சென்றுணக் கங்கைக்
கரைபொரு மலிநீர் நிறைந்துதோன்றி யாங்கு
எமக்கும், பிறர்க்கும் செம்மலை யாகலின்."

(புறம் : கசுக)

"எழுவர் மாய்ந்த பின்றை, அழிவரப்
பாடி வருநரும், பிறரும் கூடி
இரந்தோர் அற்றம் தீர்க்குஎன, விரைந்திவண்
உள்ளி வந்தனென் யானே."

(புறம் : கரு௮)

குமணன் கோலோச்சி வாழ்ந்த காலத்திலேயே, வெளிமான் என்றொரு வள்ளலும் வாழ்ந்திருந்தான்; வெளிமான்பால் பரிசில் பெறச் சென்றிருந்தார் புலவர் பெருஞ்சித்திரனர்; அவர் ஆண்டுச் செல்வுழி, அவன் வாழ்நாள் வற்றிவிட்டது; இறக்கும் அந்நிலையிலும், தன் பால் வந்து பரிசில் வேண்டி நிற்கும் புலவரை வறிதே அனுப்ப எண்ணினனல்லன் வெளிமான்; தம்பியை அழைத்துப் புலவர்க்கு வேண்டும் பொருள் அளித்து அனுப்பக் கூறி உயிர் துறந்தான்; ஆனல், இளவெளிமான், வெளிமானளவு வள்ளன்மை வாய்க்கப் பெருதவன்; புலவர்தம் தகுதியறிய மாட்டா அவன், அவர்க்குச் சிறிதே பொருள் அளித்துச் செல்லப் பணித்தான்; புலவர் அதை ஏற்றுக் கொண்டாரல்லர்; அவனுக்குத் தான் யார்? தன்னைப்போலும் புலவர்கள் தகுதி யாது என்பதை உணர்த்த விரும்பினர். உடனே விரைந்து முதிர மலையடைந்தார்; குமணனைக் கண்டார்; "குமண! வறுமை வருத்த, நின் வாயிலடைந்து, நின்னை வாழ்த்தி நின்கும் யான் கூறுவன வற்றைச் சிறிது செவிமடுப்பாயாக! நிற்பாற் பரிசில் பெற லாம் தகுதி என்பால் உளதோ, இன்றோ? அதை யான் அறியேன்; நீயும் அதை நோக்குவது செய்யாது, நின் தகுதிக்கேற்ற பொருள் அளித்துப் போற்றுவாயாக! நீ

இன்று அளிக்கும் பெரும் பொருள் கண்டு, பேரரசர்கள் வெட்கித் தலைகுனிதல் வேண்டும்; அத்துணைப் பெரும் பொருள் நீ அளித்தல் வேண்டும்; நின்பால் யான் வேண்டுவது ஒரு களிறு; பனைபோல் பருத்த கையும், முத்து உதிருமாறு முற்றிய கொம்பும் உடைத்தாதல் வேண்டும்; மலைபோல் உயர்ந்த உருவுடைத்தாதலும் வேண்டும்; அக்களிற்றின் மீது, இருபாலும் தொங்கும் மணியொலிக்கக், கண்டோர் வியக்கச் செம்மாந்து செல்லும் வேட்கையுடையேன் யான்" எனக் கூறினர்; இரவலர் தம் குறிப்பறிந்து அளிக்கும் கொடை வள்ளலாய குமணன், புலவர் விரும்பிய களிற்ருேடு, கணக்கிட்டுக் காணலாகாப் பெரும் பொருளும் அளித்தான்.

"நின், தாள்படு செல்வம் காண்டொறும் மருளப்
பனைமருள் தடக்கையொடு முத்துப்பட முற்றிய
உயர்மருப் பேந்திய வரைமருள் நோன்பகடு
ஒளிதிகழ் ஓடை பொலிய, மருங்கில்
படுமணி இரட்ட ஏறிச் செம்மாந்து
செலல்நசைஇ யுற்றனென், விறன்மிகு குருசில்!
இன்மை துரப்ப, இசைதர வந்துநின்
வண்மையிற் ருெடுத்த என்நயந்தனை கேண்மதி!
வல்லினும், வல்லே னயினும், வல்லே
என்னளந் தறிந்தனை நோக்காது, சிறந்த
நின்னளந் தறிமதி பெரும! என்றும்
வேந்தர் நாணப் பெயர்வேன்." (புறம்: கசுக)

களிறு பெற்ற புலவர், வறுமைத் துயரால் வாடும் தம் மனை நோக்கிச் சென்ருரல்லர்; நேரே வெளிமானூர் சென்ருர்; யானையை அவன் காவன்மரத்தில் கட்டினர்; இளவெளிமானை அழைத்துப் போந்து யானையைக் காட்டினர்; "இளவரசே! இந்த யானை யான் பாடிப் பெற்ற பரிசில்; குமணன் என் புலமை பாராட்டிப் பரிந்தளித்த கொடைப் பொருள்; இரவலரை புரக்கும் இனிய பண்புடையான் அவன்; நீ அப்பண்பற்றவன்; இரவலரைப் புரக்கும் வள்ளல்கள் உலகில் வாழ்விழந்து போய்விடவில்லை; உலகில் இரவலரும் உள்ளனர்; அவ்விரவலரைப் பேணிப் புரக்கும் புரவலரும் உள்ளனர்; இதை, நின்

காவல்மரத்தில் யான் கட்டியுள்ள இவ் யானையைக் கண்ட பிறகேனும் அறிந்து கொள்க! இரவலருக்குக் களிறு அளித்துப் புரக்கும் குமணன் எங்கே! இரவலர்தம் தகுதி யறிந்து ஈயமாட்டா நீ எங்கே! வருகிறேன்" என்று கூறி விடைகொண்டார்.

" இரவலர் புரவலை நீயும் அல்லை;
புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர்;
இரவலர் உண்மையும் காண் இனி; இரவலர்க்கு
ஈவோர் உண்மையும் காண் இனி; நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்துயாம் பிணித்த
நெடுநல் யானை எம் பரிசில்;
கடுமான் தோன்றல்! செல்வல் யானே."

(புறம்: ௧௬௨)

" அவர் (பெருஞ்சித்திரனார்) வெளிமானுழைச் சென்றார்க்கு வெளிமான் துஞ்சுவான் தம்பியைப் பரிசில் கொடுவென, அவன் சிறிது கொடுப்பக் கொள்ளாது 'போய்க் குமணனைப் பாடிக் குமணன் பகடு கொடுப்பக் கொணர்ந்து நின்று வெளிமானூர்க் கடிமரத்து யாத்துச் சென்று அவர் சொல்லியது."

(புறம் : ௧௬௨)

ஆண்டு நின்றும் குமணன் தந்த பெரும் பொருளோடு தம் மனை புகுந்தார் புலவர்; அவன் அளித்த பொருளை யெல்லாம் தம் ஆருயிர் மனைவிமுன் கொட்டினார். "நின்னை விரும்பும் நின் உறவினர்க்கும், நீ விரும்பும் நின் சுற்றத்தினர்க்கும், குணங்களால் நிறைந்த நின் குடி முதல்வர்க்கும், நம் வறுமைச் சுற்றத்தின் வயிற்றுப் பசிதீர முன்னர்ப் பொருள் அளித்துப் புரந்தார்க்கும், இவர்க்குத் தரலாம், இவர்க்குத் தரலாகாது என வரையறை செய்யாதும், என்னைக் கேட்டே அளிக்கவேண்டும் என்று எண்ணுவதும் செய்யாது, இப் பொருளைக்கொண்டு பல்லாண்டு பெருவாழ்வு வாழலாம் என வேட்கையும் கொள்ளாது எல்லோர்க்கும் வாரி வாரி வழங்கி வாழ்வாயாக! இப் பொருள் எல்லாம் குமணன் கொடுத்த கொடைச் செல்வம்!" என்று உள்ளம் துள்ள உவந்து உரைத்தார்.

"வள்ளியோன்" என வாழ்த்த வறுமைபோக வழங்குவ தொன்றே சாலும்! வறுமை ஒழிவதோடு, வளம் பலவும் பெற்று வாழ, வரையாது வழங்குவோன் வள்ளலுள் உயர்ந்த வள்ளலாவன்! அவ்வாறு வழங்கி வாழ்ந்த குமணன் வாழ்க!

"நின்னயந் துறைநர்க்கும், நீநயந் துறைநர்க்கும்,
பன்மாண் கற்பின் நின்கிளை முதலோர்க்கும்,
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்,
இன்னோர்க்கு என்னாது, என்னொடும் சூழாது,
வல்லாங்கு வாழ்தும் என்னாது, நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி, மனைகிழ வோயே!
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்,
திருந்துவேல் குமணன் நல்கிய வளனே."

(புறம்: கசுங)

கொடைவள்ளலாய்ப் புலவர் போற்ற வாழ்ந்த குமணன் ஆட்சிக்கும் கேடுண்டாயிற்று; குமணனுக்கு ஒரு தம்பி யிருந்தான்; இளங்குமணன் என அழைக்கப் பெறும் அவன், குணங்களில் குமணனுக்கு முற்றிலும் மாறுபட்டிருந்தான்; அண்ணனை அழித்துவிட்டு ஆட்சிப் பொறுப்பைத் தானே மேற்கொள்ள ஆசை கொண்டான்; அஃதறிந்தான் குமணன்; கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டினும், கடும்புலி வழங்கும் காடே நன்று என மக்கள் நினைப்பர்; நாடாளும் குமணன், நாட்டில் நல்லோர் வாழ்தல் வேண்டும்; நல்லோரில்லா நாடு, காட்டினும் கேடுடைத்து; நற்பண்பிழந்த தம்பியொடு நாட்டில் வாழ்வதினும் காட்டில் வாழ்தலே நனி நன்று என்று எண்ணினான்; உடனே காடு சென்று வாழ்வானாயினன். இளங் குமணன் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தான். ஆட்சியைக் கைப்பற்றிய பின்னரும் அமைதியுற்றானல்லன்; அண்ணன் உயிரோடு ஆண்டிருக்கும் வரை, நாட்டில் தான் நன்கு வாழ்தல் இயலாது; ஆகும் காலம் வந்ததும், அடங்கியிருப்பதொழித்து, ஆட்சியைக் கைப்பற்ற அவன் வருதலும் கூடும்; அவன் வாராது போயினும் அவன்மாட்டு அன்புடையார், அவன் பொருட்டுத் தன் ஆட்சியை அழித்தலும் கூடும் என

அஞ்சினன்; ஆகவே அண்ணனைக் கொன்று அமைதிபெற எண்ணினன். ஆனால் குமணனோ கொடைவள்ளல்; அருளுடைமையால் அன்புடையார் பலரைப் பெற்றிருந்தான்; அன்னார் அவன் அழிவு காண அடங்கியிரார்; அவனை அழிக்கத் துணியும் தன்னையே அழிப்பர்; மேலும், குமணனைக் கொல்லுதலும் அத்துணை எளிதன்று; குமணன் கொடைவள்ளல் மட்டுமல்லன்; கொற்றமும் உடையான்; பெரும் படையொன்றும் அவன்பால் உளது; அவனையேயன்றி, அவனைச் சூழ வாழும் அத்துணைப் பேரையும் நல்வாழ்வில் நிறுத்தவல்ல பெரும்படை அது. "நாண் முரசு இரங்கும் இடனுடை வரைப்பின்நின் தாள் நிழல் வாழ்நர் காலம் மிகுப்ப வளமார் உழந்த நின் தானை" (புறம்: கசுக) எனப் புலவர்தம் பாராட்டையும் பெற்றுளது அப் படை. அதை வென்று, அவனைக் கொன்று வெற்றிபெறல் இயலாது என்பதை அறிந்தான்; அதனால் படைவலியால் பெறலாகா ஒன்றைப் பிறிதொரு வழியில் பெறத் திட்டமிட்டான். "குமணன் தலையைக் கொணர்வார்க்குக் கோடிப் பொன் கொடுப்பேன்" என நாட்டில் பறைசாற்றினன். சாற்றி நாள் பல ஆயின; ஆயினும் அவன் கனவு நனவாகவேயில்லை.

இந்நிலையில் பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவர் முதிரமலை யடைந்தார்; ஆண்டு அவர் குமணனைக் கண்டாரல்லர்; நிகழ்ந்தன அறிந்தார்; குமணன் காட்டில் வாழ்கின்றான் எனினும், அவனை ஆண்டுச் சென்று கண்டு யாதேனும் பெற்றுச் செல்ல வேண்டும் என விரும்பினர்; அவர் வறுமை அத்துணைக் கொடிது; மேலும் வாழும் இடம் காடேயாயினும், வருவார்க்கு வழங்கத் தவறான் குமணன் என உறுதியாக நம்பினர்; உடனே, அவன் வாழும் காடு சென்றார்; குமணனைக் கண்டார்; தம் வறுமை நிறைந்த வாழ்க்கைக் கொடுமைகளை வகைபெற எடுத்துக் கூறினர்; "நின் நிலை அறிந்தும் நின்பால் பொருள்வேண்டி நிற்கின்றேன்; எனக்கு யாதேனும் ஒன்று கொடுத்தே அனுப்புதல் வேண்டும்" என்று கூறினர்.

"மனையோள் எவ்வம் நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண!
என்னிலை அறிந்தனை யாயின், இந்நிலைத்
தொடுத்தும் கொள்ளாது அமையலென்." (புறம்: கசுசு)

குமணன் புலவர் தம் பெருமை அறிவான்; வறுமையால் வாடும் அவர் வாழ்வின் கொடுமையும் அவனுக்குத் தெரியும்; எனினும், அவர்க்கு அந்நிலையில் ஒன்றும் கொடுக்க இயலவில்லை; அது அவனைப் பெரிதும் வருத்திற்று; நாடிழந்ததனால் தான் பெற்ற துயரினும் பெருந் துயர் உற்றான்; செய்வதறியாது சிந்தித்தான் சிறிது நாழிகை. அந் நிலையில் அவன் உள்ளத்தே உதித்தது ஓர் எண்ணம்; தன் தலையைக் கொணர்வார்க்குத் தம்பி கோடிப் பொன் கொடுப்பன் என்ற செய்தி, அவனுக்கு அளவற்ற மகிழ்ச்சியை அளித்தது: புலவரை அருகழைத்தான்; எவ்வாற்றானும், தம்பியால் யான் தலையிழப்பது உறுதி; என் தலையை யாரோ ஒருவன் கொண்டு சென்று கொடுத்துப் பொருள் பெற்றுப் போவதினும், அப்பொருள் புலவர்க்குக் கிடைப்பதாயின், அவர் வறுமை ஒழியும்; தன் வாழ்வும் உயரும் என்பதை அடைவே எடுத்துக் கூறி, "ஐய! இதோ என் வாள்; இதைக் கொண்டு என் தலையைக் கொய்து சென்று பொருள் பெறுக" என்று கூறி, வாழ்த்திய புலவர் கையில் வாளை வைத்தான், வள்ளல் குமணன்.

வாள் பெற்ற புலவர் வாயினின்றும் உரை எழ மறுத்தது. தன் கொடைச் சிறப்பால், உலகமக்கள் உள்ளத்தே அழியா இடம் பெற்ற அவன், அம் மக்கள் இடையே இருந்தும் வாழ்தல் வேண்டும் என விரும்பிற்று, அவர் உள்ளம். அவனை வாழவைக்கத் துணிந்தார் புலவர். உடனே, வாளோடு விரைந்தார், இளங்குமணன் இருந்த அவை நோக்கி; அவன் அண்ணன் அளித்த வாளை, அவன் முன் வைத்தார்; வாள் வந்த வகையினையும் விளங்கக் கூறினார். நில்லா இயல்புடைத்து இந்நில வுலகம்; நிலையில்லா இவ்வுலகில் நிலைபெற்று வாழும் வகையினை அறிந்தாரும் உளர்; அவரெல்லாம், தம் புகழ் உலகம் உள்ளளவு

வும் நிலத்து வாழ வாழ்ந்து, வாழ்விழந்தனர்; அவருள் ஒருவனை உயர்ந்து விட்டான் உன் உடன் பிறந்தான்; அவ்வுயர் வுள்ளம் இல்லாப் பிறரோ, தம் பொருளைப் பிறர்க்கு அளித்து அதனால் பயனுறாது கொன்னே இறந்தனர்; உலகத்தே, அவர் ஒருவர் வாழ்ந்தார் என்பதையும் உலகம் மறந்து விட்டது; அவருள் ஒருவனை உலவுகின்றனை நீ எனக் கொடுத்துப் புகழ்பெற்ற குமணன் சிறப்பையும், கொடை வள்ளல் குமணனைக் கொன்று வாழ எண்ணும் அவன் கொடுமையையும் அவன் உளங்கொளக் கூறினார். புலவர் தம் பொன்னுரையின் பயன் என்ன என்பதை அறிதற்காம் வாய்ப்பு இல்லை எனினும், இளங் குமணன் உள்ளமும், இளகியிருக்கும்; குமணனும், உயிர் பிழைத்துக் கொடைவளரக் கோலோச்சி யிருப்பன் என்றே, பண்டைப் புலவர் தம் பாடற் சிறப்புணர்ந்தார் பலரும் கொள்வர்.

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே;
துன்னரும் சிறப்பின் உயர்ந்த செல்வர்
இன்மையின் இரப்போர்க்கு ஈயா மையின்,
தொன்மை மாக்களின் தொடர்பறி யலரே;
தாடாழ் படுமணி இரட்டும் பூநுதல்
ஆடியல் யானை பாடுநர்க்கு அருகாக்
கேடில் நல்லிசை வயமான் தோன்றலைப்
பாடி நின்றனெ னாகக், 'கொன்னே
பாடுபெறு பரிசிலன், வாடினன் பெயர்தல், என்
நாடிழந் ததனினும் நனி இன் னாது' என
வாள்தந் தனனே, தலையெனக்கு ஈயத்,
தன்னிற் சிறந்தது பிறிதொன்று இன்மையின்;
ஆடுமலி உவகையொடு வருவல்
ஓடாப் பூட்கைநின் கிழமையோற் கண்டே."

(புறம்: ௧௬௫)

சங்ககால அரசர் வரிசை - ௫

# அகுதை

## முதலிய ௪௪ பேர்கள்

ஆசிரியர் :

புலவர் திரு கா கோவிந்தன் எம் ஏ

கழக வெளியீடு : ௭௬௯

சங்ககால அரசர் வரிசை - ௫

# அகுதை முதலிய ௪௪ பேர்கள்

ஆசிரியர் :

புலவர் கா கோவிந்தன் எம் ஏ

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.,
திருநெல்வேலி-6. சென்னை-1
1963

கா கோவிந்தன் (1917)

© THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,

Ed 1 Dec 1954

Reprint: Dce 1963

V2II,6:67
K3

*

AKUTHAI MUTHALIYA 44 PERKAL
(Sangakala Arasar Varisai-5)

Paari Achakam, Madras-1.

# பதிப்புரை

நம் தமிழகத்துக்குச் சங்ககாலமே பொற்காலமென்ப. அக்காலத்து வாழ்வாங்கு வாழ்ந்த முடியுடை மன்னரும், குறுநில மன்னரும், வள்ளல்களும் புலராவர்.

அவருள், புலவர் நாவிற் பொருந்தப் பாடல்சால் சிறப்புடை மன்னர்கள் 'அகுதை' என்பான் முதலாகத் 'திதியன்' ஈறுக நாற்பத்துநால்வராவர்.

இதனைப் புலத்துறை முற்றிய புலவர் திரு. கா. கோவிந்தன் அவர்கள் தம் ஆய்புலத் துணை கொண்டு ஆக்கி உதவியுள்ளார்கள்.

இவ் வரலாறு கிளத்தும் நூலைச் சங்ககால அரசர் வரிசையில் ஐந்தாவதாக நன்முறையில் பதித்து வெளியிட்டுள்ளோம். இதனையும் இதனையடுத்துவரும் ஏனைய இவ் வரலாறு குறித்த நூல்களையும் செந்தமிழ்நாட்டுத் திருமக்கள் வாங்கிக் கற்றுத் தெளிந்து கலைக்குரிசில்களாக விளங்கி மேம்படுவார்களென நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

## உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| | தோற்றுவாய் | 1 |
| க. | அகுதை | 3 |
| உ. | அக்குரன் | 13 |
| ந. | அதியன் | 15 |
| ச. | அந்துவன்கீரன் | 18 |
| ரு. | அம்பர்கிழான் அருவந்தை | 20 |
| சு. | அருமன் | 22 |
| எ. | அவியன் | 23 |
| அ. | அழிசி | 24 |
| கூ. | அறுகை | 25 |
| க0. | அன்னி | 26 |
| கக. | அன்னிமிஞிலி | 28 |
| கஉ. | ஆட்டனத்தி | 30 |
| கந. | ஆதன் எழினி | 34 |
| கச. | ஆதனுங்கன் | 37 |
| கரு. | ஆமூர் மல்லன் | 39 |
| கசு. | ஆய் எயினன் | 41 |
| கஎ. | ஆரியப்பொருநன் | 46 |
| கஅ. | ஆரிய அரசன் பிரகத்தன் | 47 |
| ககூ. | இருங்கோவேள் | 49 |
| உ0. | இளங்கண்டீரக்கோ | 53 |
| உக. | இளங்குமணன் | 55 |
| உஉ. | இளவிச்சிக்கோ | 58 |

பக்கம்

உங. இளவெளிமான் 60
உச. ஈர்ந்தூர்கிழான் தோயன்மாறன் 62
உரு. எருமையூரன் 64
உசு. எவ்வி 66
உஎ. எழினி 73
உஅ. எழினியாதன் 75
உகூ. ஏறைக்கோன் 77
ஙo. ஒல்லையூர்கிழான்மகன் பெருஞ்சாத்தன் 80
ஙக. ஓய்மான் வில்லியாதன் 81
ஙஉ. கட்டி 84
ஙங. கரும்பனூர்கிழான் 86
ஙச. கழுவுள் 89
ஙரு. கொடுமுடி 92
ஙசு. கொண்கானங்கிழான் 93
ஙஎ. கௌணியன் விண்ணந்தாயன் 96
ஙஅ. சிறுகுடிகிழான் பண்ணன் 97
ஙகூ. சேந்தன் 100
சo. சோழிய ஏனாதி திருக்குட்டுவன் 102
சக. தந்துமாறன் 104
சஉ. தழும்பன் 105
சங. தாமான்தோன்றிக்கோன் 107
சச. திதியன் 109

# அகுதை

---

## தோற்றுவாய்

ஒரு நாட்டின் நல்வாழ்விற்கு நற்றுணை புரிவன வற்றுள், அந் நாடு, பண்டு பெற்றிருந்த பழைய வரலாறும் ஒன்றாம். தம் நாட்டின் உயர்விற்கு ஊக்கம் காட்டி உழைக்க முன்வருவோர் ஒவ்வொருவரும், தம் நாட்டின் பழைய வரலாறுகளை விளங்க உணர்ந்திருத்தல் வேண்டும். எண்ணற்ற இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக்கும் நம் பைந்தமிழ் வரலாறு உரைக்கும் நூல்கள் எனத் தனியாக எடுத்துக்காட்டவல்ல நூல்களைப் பெற்றிருக்கவில்லை. வரலாறு எழுதும் வழக்கமும் பண்டிருந்ததில்லை. பண்டைத் தமிழகத்தின் வரலாறு உணர விரும்புவார்க்கு, அக்காலப் புலவர்கள், தாம் பாடிய பாக்களுக்கு இடையிடையே குறித்துச் சென்ற சிறுசிறு குறிப்புக்களே, உறுதுணை புரிய வல்லவாம்.

தமிழ்நூல்களை, அகத்துறை தழுவிய நூல்கள், புறத்துறை தழுவிய நூல்கள் என இரண்டாகப் பிரிக்கலாம். இவற்றுள் புறத்துறை நூல்களாய, புறநானூறு, பதிற்றுப் பத்து, பத்துப் பாட்டுள் சில; ஆகிய இவைகளை, ஓரளவு வரலாற்று நூல்கள் எனல் பொருந்தும். அகத்துறைப் பாடல்கள், மக்கள் தம் வாழ்க்கையின் வனப்பினைப் பொதுநிலையில் உணர்த்த வந்தனவே எனினும், அவற்றுள்ளும் சில பாக்கள், வரலாற்றுப் பெருமையுடையவாகும்.

அவ்வாறுள்ள பழந்தமிழ் இலக்கியங்களைக் கண்டு அன்று நாடாண்டிருந்த அரசர்கள் வரலாற்றினை உரைக்

கத் தொடங்கி, இதுகாறும், சேரர், சோழர், பாண்டியர், வள்ளல்கள் என்ற பெயருடைய நூல்கள் நான்கினுள் எண்மர் வரலாறு உரைக்கப் பெற்றுள்ளன. அவ்வரிசையுள், ஐந்தாவதாய இந் நூலில், அகுதை முதல் திதியன் ஈருக, நாற்பத்து நால்வர் வரலாறு ஓரளவு வரையப் பெற்றுளது.

---

ஈண்டுக் கூறப்பெறும் நாற்பத்து நால்வரும் அரசர்களாகார். நாடாள் அரசர் சிலர்; ஊராள் தலைவர் சிலர்; வீரர் சிலர்; வள்ளியோர் சிலர்; இவர் அனைவரும் ஓரினத்தாரும் அல்லர்; இவருள், சேரரும் உள்ளனர்; சோழரும் உள்ளனர்; பாண்டியருள்ளும் சிலர் உள்ளனர்; வேளிர் சிலர்; கோசர் சிலர். இவர்கள் அனைவருமே, புலவர்களால் கண்டு பாராட்டப் பெற்றவர்கள் எனக் கூறிவிடல் இயலாது. அவருட் சிலரை, அவர்கள் பார்த்துப் பாராட்டிப் பாடியுள்ளார்கள். சிலரைப் பற்றித் தாம் அறிந்தவற்றை, ஏற்ற இடம் நோக்கி, எடுத்துக் கூறியதனல், அறியப் பெற்ருர் சிலர். இவர்கள் எல்லோரும் தமிழ் நாட்டிலேயே பிறந்தவருமாகார். பிற நாட்டிற் பிறந்து, தமிழ்நாடு போந்து வாழ்ந்தாரும் உள்ளனர்; ஆனல் அவர்கள் அனைவருமே, தமிழ் மொழியைத் தம் தாய்மொழியாகக் கொண்டவர்; தமிழ் வளர்ச்சியில் கருத்துடையவர் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. அன்னர் வரலாற்றினை உரைக்கும் இச் சிறு நூலை எடுத்துப் படித்துப் பயனுறுவோமாக.

---

## க. அகுதை

அகுதை, கூடல் நகரில் வாழ்ந்தவன்; ஊக்கமும், முயற்சியும் ஒருங்கே உடையவன்; பகைவரைப் பலகாலும் வென்று வென்று வீறுகொண்ட வேற்படை உடையவன்; அறவழி நின்று அரும் போர் ஆற்றி அமர் வெல்லும் அரிய படைத்துணை யுடையவன்; அகுதை மேற்கொண்ட போர் ஒன்றில், பகைவர் ஏவிய திகிரிப் படையொன்று இவன் மார்பில் தைத்துப் பெரும் புண் உண்டாக்கிற்று என்ற ஒரு செய்தி நாட்காலையில் ஊரெல்லாம் பரவியிருந்தது; ஆனால் போரெல்லாம் முடிந்த வழி, அச்செய்தி பொய்ச் செய்தியாம் என்பது புலனாயிற்று; அகுதை, தன்னைப் பாடிவரும் பொருநர், கூத்தர் முதலாம் பரிசிலர்க்குப் போரின்கண் தான் கைப்பற்றிய பிடியும், களிறும், பெரும் பொருளும் வழங்கி வள்ளியோனாய் வாழ்ந்திருந்தான்; அவன்பால் பரிசில் வேண்டி வந்து, அவனைப் போற்றிப் புகழும் பொருநர், பறையொலியால் பாடுற்றது அவன் நாளவை. ஒருகால், பாழிநகரில், அப்பாழிக் குரியோனாய நன்னன் என்பானின் ஆருயிர் நண்பனாய ஆய் எயினன், அந்நன்னனைக் காத்தற் பொருட்டு, அவன் பகைவன் மிஞிலியொடு போரிட்டு உயிர் துறந்தான்; அவன் இறந்தது அறிந்த உரிமை மகளிராம் வேண்மகளிர், களம் போந்து கடுந்துயர் உற்றனர்; தன் பொருட்டு உயிர் துறந்து வீழ்ந்தானைக் காணவேண்டும் என்றோ, அவன் மனைவியர் துயரைத் துடைத்தல் வேண்டும் என்றோ கருதானாய், அரணுள்ளேயே அடங்கியிருந்தான் நன்னன். அக்காலை, ஆண்டுப் போந்து, அம்மகளிர் துயர் களைந்தான் அகுதை. ஆய் எயினன் உரிமை மகளிர்க்கு உண்டாய உறுதுயர் போக்கித் துணைபுரிந்த உரமும், உயர்வும் உடையனாய அகுதைக்கு அக் காலத்து அரசர் யாரோ ஒரு சிலரால், உறுதுயர் உண்டாக இருந்தது. அந் நிலையில், அவனை, அரண் அமைந்த இடத்தே வைத்துப் போற்றிக் காத்தார்கள், கோசர் எனும் குலத்தைச் சேர்ந்த வீரர் சிலர். சோழர்

குலத்தில் பிறந்து, அழகும், அணிகலனும் நிறையக் கொண்ட நல்லுடல் உடையளாய பெண்ணொருத்தியும் அகுதை எனும் பெயர் பெற்றிருந்தாள் என அறியப் படுத லால், அகுதை எனும் இப் பெயர் அக்கால ஆடவரும் மக ளிரும் விரும்பி மேற்கொண்ட பெயர்களுள் ஒன்ரும் என்பது புலனும். அகுதை வரலாருக அறியத்தக்கன இத் துணையவே.

"எறிந்திலை முறிந்த கதுவாய் வேலின்
மணநாறு மார்பின் மறப்போர் அகுதை
குண்டுநீர் வரைப்பின் கூடல்;" (புறம்: உ௪எ)

"பொய்யா கியரோ, பொய்யா கியரோ;
பாவடி யானை பரிசிலர்க்கு அருகாச்
சீர்கெழு நோன்தாள் அகுதைகண் தோன்றிய
பொன்புனை திகிரியிற் பொய்யா கியரோ;"
(புறம்:உ௩௩)

"இன்கடுங் கள்ளின் அகுதை பின்றை
வெண்கடைச் சிறுகோல் அகவன் மகளிர்
மடப்பிடிப் பரிசில் மானப்
பிறிதொன்று குறித்தது அவன் நெடும்புற நிலையே."
(குறுந்: உ௯அ)

"இன்கடுங் கள்ளின் அஃதை, களிற்ரெடு
நன்கலன் ஈயும் நாண்மகிழ் இருக்கை
அவைபுகு பொருநர் பறையின் ஆனது." (அகம்: எசு)

"வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்
அளியியல் வாழ்க்கைப் பாழிப் பறந்தலை
இழையணி யானை இயல்தேர் மிஞிலியொடு
நண்பகல் உற்ற செருவில் புண்கூர்ந்து
ஒள்வாள் மயங்கமர் வீழ்ந்தெனப் புள்ளொருங்கு
அங்கண் விசும்பின் விளங்கும் ஞாயிற்று
ஒண்கதிர் தெருமைச் சிறகரிற் கோலி
நிழல் செய்து உழறல் காணேன் யான் எனப்
படுகளம் காண்டல் செல்லான், சினம் சிறந்து

உருவினை நன்னன் அருளான் கரப்பப்
பெருவிதுப் புற்ற பல்வேல் மகளிர்
குரூஉப்பூம் பைந்தார் அருக்கிய பூசல்
வசைவிடக் கடக்கும் வயங்குபெருந் தானை
அகுதை களைதந் தாங்கு;'' (அகம்: உ0அ)

"நன்றல் காலையும் நட்பிற் கோடார்
சென்று வழிப்படூஉம் திரிபில் சூழ்ச்சியில்
புன்தலை மடப்பிடி அகவுநர் பெருமகன்
அமர்வீசு வண்மகிழ் அஃதைப் போற்றிக்
காப்புக்கை நிறுத்த பல்வேற் கோசர்.'' (அகம்: ககரு)

"செம்பொற் சிலம்பின், செறிந்த குறங்கின்
அங்கலுழ் மாமை அஃதை தந்தை
அண்ணல் யானை அடுபோர்ச் சோழர்;'' (அகம்: கசு)

அகுதை, கூடலில் வாழ்ந்தவன் எனக் கூறுகிறார் கபிலர் (புறம் : ருசஎ); கூடலைத் தலைநகராகக்கொண்டு ஆண்ட பாண்டிய மன்னன் நெடுஞ் செழியனால் வெல்லப் பட்ட நீடூரும், மிழலையும், வேள் எவ்விக்குரியன எனக் கூறு கின்றனர் பரணரும், மாங்குடிகிழாரும் :

"யாழிசை மறுகின் நீடூர் கிழவோன்
வாய்வாள் எவ்வி ஏவல் மேவார்
நெடுமிடல் சாய்த்த பசும்பூட் பொருந்தலர்;''
(அகம்: உசுசு)

''ஓம்பா ஈகை மாவேள் எவ்வி
புனலம் புதவின் மிழலையொடு
..........................................
குப்பை நெல்லின் முத்தூறு தந்த
கொற்ற நீள்குடைக் கொடித்தேர்ச் செழிய!''
(புறம்: உச)

''களம் சென்று கடும்போர் ஆற்றிய எவ்வி, முகத்தி னும், மார்பினும் புண்பல பெற்று வீழ்ந்தான்" எனப் போரிடை யிருந்துவந்த செய்தி கேட்ட புலவர் வெள் ளெருக்கிலையார், அச் செய்தி "பகைவர் ஏவிய திகிரிப்

படையில் புண் பெற்றான் அகுதை" என்ற செய்தி பொய்யா றாற் போலப் பொய்யாகுவதாக எனப் பாடியுள்ளார் :

"பொய்யா கியரோ; பொய்யா கியரோ;
பாவடி யானை பரிசிலர்க் கருகாச்
சூர்கெழு நோன்தாள் அகுதைகட் டோன்றிய
பொன்புனை திகிரியிற் பொய்யா கியரோ;
இரும்பாண் ஒக்கற் றலைவன் பெரும்பூட்
போரடு தானை எவ்வி மார்பின்
எஃகுறு விழுப்புண் பலவென
வைகுறு விடியல் இயம்பிய குரலே." (புறம்: உ௩௩)

இவ்வாறு புலவர்கள் கூறும் இவ்வனைத்தையும் கொண்டு, அகுதை பாண்டியர் படையில் பணியாற்றியவன்; தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் படைத் தலைவருள் ஒருவன் ; அப் பாண்டியன் எவ்வியை வென்று அவன் நீடூரையும், மிழலையையும் கைப்பற்ற மேற்கொண்ட போரில் பங்கு கொண்டு, எவ்வியோடு போரிட்டு அவன் உயிரைப் போக்கினான் எனக் கூறுவர் சில ஆராய்ச்சியாளர்.

அகுதை வாழ்ந்த கூடல், பாண்டியர் தலைநகராம் கூடன் மாநகரே என்பதை ஆராய்ச்சியாளர் அனைவரும் ஒப்புக்கொள்வதிலர். "அவனது நாடு கடற்கரைப்பகுதி யைச் சேர்ந்ததென, 'குண்டு நீர் வரைப்பு' என இப் பாட்டினும், 'நெய்தலம் செறுவின் வளங்கெழு நன்னாடு' (அகம் : ௧௧௩) என்று கல்லாடனார் பாட்டினும் கூறப்படுத லால் அறிகின்றோம் ; இவ் வகையில், அகுதையின் கூடல் மேற்கா நாட்டுக் கூடல் (A. R. No. 62 of 1918) என்றும், கூடல் மங்கலம் (S. I. I. Vol. VII. No. 757) என்றும் கூறப் படும் கூடலூராகக் கொள்ளலாம் ; இஃது இப்போது கூடலூர் எனப்படும் பேரூராகும்" (புறம் : ௩௪௭ உரை. கழகப் பதிப்பு) எனக் கூறுவாரும் உளர். ஆதலால், அகுதையைப் பாண்டியர் படைத்தலைவனாகக் கொள்ளுதல் பொருந்தாது. ஆதலானும், அகுதை, எவ்வி தொடர்பு

குறித்துக் கூறும் அப் பாட்டில், அகுதைபால் தோன்றிய திகிரி பொய்யானது போல, எவ்வி மார்பில் புண்ணுற்ற செய்தியும் பொய்யாகும் என உவமையும், பொருளும் தோன்றக் கூறப்பட்டுள்ளதே யல்லாமல், அவ்விருவருக்கும் தொடர்புளதாகக் கூறப்படவில்லை யாதலாலும், "அகுதைக்கண் தோன்றிய திகிரி" என்பதற்கு, "அகுதை யிடத்து உளதாகிய பொன்னாற் செய்யப்பட்ட ஆழி" என்ற பழைய உரையோர், "திகிரியென்றது, திகிரிதைத்த தென்று பிறந்த வார்த்தையை" என்ற விளக்க உரையோ, "பகைவர் ஆழிப்படையால் அகுதை புண் பெற்றான் என்ற வார்த்தை" என்ற பொருள் கொள்ளத் துணை புரிய வில்லை ஆதலாலும், அத் தொடர்க்கு, "இவன்பால் பொற்றிகிரி யுண்டு; ஆதலின், இவனை வெல்வது எவர்க்கும் ஆகாது என்றொரு பெரு மொழி நாடெங்கணும் பரவியிருந்தது; அதனால், பலரும் அவனை அஞ்சி யிருந்தனர்; முடிவில் ஒருகால் போருண்டாகியபோது அகுதை கொல்லப்பட்டான்; பொற்றிகிரி யுண்டென்பது பொய்யாயிற்று" என உரை கூறப்படுதலும் உண்டு ஆதலாலும், பாண்டியர் படைத் தலைவனாய் எவ்வியைக் கொன்றான் அகுதை எனக் கூறல் முடிந்த முடிபன்று எனக் கொள்க.

நன்னன் களையத் தவறிய வேள்மகளிர் பூசலை, அகுதை களைந்தான்; அகுதையை அரண்மிக்க இடத்தே வைத்துக் காத்தனர் கோசர்; அக்கோசரே நன்னன் நறுமாவைக் கொன்றனர்; "நன்னன் நறுமா கொன்று நாட்டிற் போக்கிய ஒன்று மொழிக் கோசர்போல வன்கட் சூழ்ச்சியும் வேண்டும்" (குறுந் : எங) என்ற இந் நிகழ்ச்சிகளால், அகுதையும் கோசரும் நன்னன் பகைவராவர் என்பதில் ஒற்றுமை உடையவராய்க் காணப்படுகின்றனர். ஆதலாலும், அகுதை பணிபுரிந்த இடமாகக் கருதப்படும் பாண்டியன் அவைக்கண் கோசரும் வாழ்ந்தனர்; "கடந்தடு வாய்வாள் இளம்பல் கோசர், இயல்நெறி மரபின் நின் வாய்மொழி கேட்ப" (மதுரைக் காஞ்சி : எஎங - எச) - ஆதலாலும், அகுதை கோசர் குலத்தவனாவன் என்று

கொண்டு அவனுக்கும், நன்னனுக்கும் பகை உண்டானமை குறித்து, "நன்னன் தோட்டம் நறுமாமரங்கள் நிறைந்தது; ஒரு நாள், அத் தோட்டத்து மாங்காய் ஒன்று, அருகே ஓடிய அருவி நீரில் மிதந்து வந்தது; அவ் வருவியில் நீராடச் சென்ற பெண்ணொருத்தி, அக் காய் நன்னன் தோட்டத்துக் காய் என்பதை அறியாது எடுத்துத் தின்று விட்டாள்; அஃதறிந்தான் நன்னன்; அவளைக் கொலை செய்யத் துணிந்தான்; அந் நிலையில், அப் பெண்ணைப் பெற்றோர், அவள் நிறையளவு பொன்னாலாய பாவையும், எண்பத்தொரு யானைகளும் ஈடாகத் தர முன்வந்தும், நன்னன் அவளைக் கொலை செய்தான். இக் கொடுங் கொலையைப் பொறாத கோசர், நன்னன் மாமரமே இக் கொடுங் கொலைக்குக் காரணமாம் என்று கொண்டு, அதனை அழித்தற்கு ஒரு வன்கட்சூழ்ச்சி செய்தனர். அச் சூழ்ச்சியாவது, தங்கள் குலத் தலைவனான அகுதையை, அகவன் மகளிர்க்குப் பெரிய பிடியானைகளைப் பரிசில் தரச் செய்து, அவற்றை அம் மகளிரைக்கொண்டு நன்னன் தோட்டத்து அம் மாமர முதலாகக் கட்டச் செய்தனர்; மாமரத்திற் கட்டிய பிடிகள், தங்கள் தலையில் மண்ணைப் பெய்தற்குத் தரையைப் பறித்த நிலையில், மாமரம் வேரோடு ஆற்றிற் சாய்ந்தது; அதனை நாட்டில் உள்ளாரெல்லாம் விறகிற்கு ஒடித்துப்போக மரமே இல்லையாய் அழிந்தது" என்ற கதையொன்றையும் கட்டிக் கூறி, "அகுதை தந்த, வெண் கடைச் சிறுகோல் அகவன் மகளிர் மடப்பிடிப் பரிசில் மானப் பிறிதொன்று குறித்தது", "நன்னன் நறுமா கொன்று நாட்டிற் போக்கிய ஒன்றுமொழிக் கோசர் போல வன்கட் சூழ்ச்சியும் வேண்டும்" (குறுந்: உகூஅ, எங) என்ற பாக்களையும் காட்டி, "இவற்றுள் கோசர் வன்கட் சூழ்ச்சி இன்னதென்பது, அகுதை மடப்பிடிப் பரிசில் பிறிதொன்று குறித்ததனால் அறியக் கிடப்பது காண்க" என்றும் கூறுவர்.

நன்னன் களையத்தவறிய வேள்மகளிர் பூசலைக் களைந்ததனால் அகுதையும், நன்னன் நறுமாவை கொன்ற

தனுல் சேரரும் நன்னனெடு பகையுடையவராவர் என்பது பெறப்படும் எனக்கூறல் பொருந்தும் எனினும், அதனு லேயே அவ் வகுதையும், கோசரும் தம்முள் உறவுடைய ராதல் வேண்டும் எனக்கூறல் பொருந்துவதன்று; அரசன் ஒருவனெடு, பல அரசர் பகைகொண்டிருத்தல் இயல்பு; அதனுல், அவ்வொருவனெடு பகைகொண்டு வாழ்வார் பலரையும், தம்முள் உறவுடையராகக் கொள்ளுதல் பொருந்தாது. அங்ஙனம் கொள்வதாயின், அந் நன்னனெடு பகையுடையனுய களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலையும், நன்னன் பகைவராய கோசரொடு உறவுடையவன் எனக் கோடல் வேண்டும். நார்முடிச் சேரல், கோசனல்லன்; சேரன் என்பதை அனைவரும் உணர்வர்.

அகுதையை அரண் மிக்க இடத்தே வைத்துக் காத்தனர் கோசர் என்பது உண்மை; அதையே சான்ருகக் கொண்டு, அகுதை கோசன்; ஆகவே, அவர்கள் அவனைக் காத்தனர் எனக் கோடல் பொருந்தாது; அங்ஙனம் கொள்வதாயின், சோழர்குலச் சிற்றரசன் ஒருவனைத் தன் முள்ளூர் மலையகத்தே வைத்துக்காத்த மலையமானைச் சோழன் எனக் கோடல் வேண்டும்; மலையமான் சோழ னல்லன்; தன்னினும் ஆற்றல் வாய்ந்தானெருவன் பகை யைப்பெற்ற ஓர் அரசன், தனக்குத் துணையாக, அப்பகைவ னெடு பகையுடையார் சிலரைத் தேடிப் பெறுதல் அரசியல் அறிவுடைமையாகும்; தனக்குத் துணையில்லை; ஆனுல் தனக்குப் பகைவரோ இருவர்; அந்நிலையில், அவருள் ஒருவரைத் தன் துணைவனுகப் பெற்றுக்கொள்க எனத் திருவள்ளுவர் கூறுவதையும் நோக்குக. "தன் துணை இன்ருல்; பகை இரண்டால்; தான்ஒருவன், இன் துணையாக் கொள்க அவற்றின் ஒன்று." ஆகவே, அதைக்கொண்டே, அப் பேரரசன் பகைவர் அனைவரையும், உறவுடையராகக் கொள்வது பொருந்தாது.

அகுதை, பாண்டியர் படையில் பணியாற்றினவன் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வதிலர்; அப்படியே ஒப்புக்கொள்வதாயினும், கோசரும், அகுதையும் ஓர்

அ.—2

அரசன்கீழ்ப் பணியாற்றியவர் என்ற ஒன்றைக் கொண்டே, அவர்களை உறவுடையராக்க் கோடல் பொருந்தாது; ஒரு பேரரசன் படையில் பல இனத்தவர் பணியாற்றுதல் கூடும். பாண்டியர் படையில் பழையன் மாறன், நாலை கிழவன் நாகன் எனப் பலர் பணியாற்றியிருந்தனர் என அறிகிறோம்; அவர் அனைவரையும் கோசர் என்றோ, ஓர் இனத்தவர் என்றோ கூறிவிடல் பொருந்தாது.

அகுதை "மறப்போர் அகுதை," "சீர்கெழு நோன்றாள் அகுதை," "இன்கடுங் கள்ளின் அகுதை," "வயங்கு பெருந்தானை அகுதை," "அமர்வீசு வண்மகிழ் அகுதை," என்றுதான் கூறப்பட்டுள்ளானே யல்லால், கோசர் என்பதை உணர்த்த வரும் தொடர்கள் எனக் கூறப்பெறும், "ஒன்றுமொழி," "வாய்மொழி," "நன்மொழி," என்ற அடையடுத்து வழங்கப் பெற்றானல்லன் என்பதையும் உணர்க.

நன்றல் காலையும் என்ற பாட்டைப் படித்தார் ஒவ்வொருவரும், நட்பிற் கோடாதவரும், திரிபில் சூழ்ச்சி உடையவரும், அகுதையைக் காத்த வேற்படை யுடையவரும் ஆய கோசர் என்று கோடற்கு இடனுண்டேயல்லால், நட்பிற் கோடாமை, திரிபில் சூழ்ச்சி யுடைமை ஆகிய இரு பண்புகளையும், அகுதைக்கு ஏற்றிக்கூறுதற்கு இடனில்லை என்பதை எளிதில் உணர்வர்; ஆகவே, நட்பிற்கோடாமையும், திரிபில் சூழ்ச்சி உடைமையும் அகுதைக்குக் கூறப்பட்டுள்ளன; அப்பண்புகள் கோசர் பண்புகளாம்; ஆகவே, அகுதை, கோசர் இனத்தவனவன் எனக் கோடற்கு இடமில்லை என்பதையும் உணர்க. மேலும், "அகுதை போற்றிக் காப்புக் கைநிறுத்த பல்வேற் கோசர்" என்ற தொடரை நோக்கியவழி, கோசர் வேறு; அகுதை வேறு; அகுதை, அக் கோசர் வழிவந்தவனல்லன் என்பது இயல்பாகப் புலனாதலையும் உணர்க,

வரையாது வழங்கும் வள்ளல் எனப் புலவர் போற்றும் புகழுடையான் அகுதை; அத்தகையான், இவர்க்கு இது

அளித்தால் இன்னது உண்டாம் என ஒன்றை எதிர் நோக்கி அளிக்கும் அறவிலை வணிகனுவன் என எதிர் பார்த்தல் இயலாது; அகுதை, தன் பகைவனை அழித்தற் பொருட்டே, அவன் மகளிர்க்குப் பிடியானையைப் பரிசில் அளித்தான் எனல் அவன் வண்மைக்கு இழுக்காம்; அவன் அளித்த பரிசில் அந் நோக்கு உடையதாயின், புலவர்கள் அதைப் போற்றிப் புகழ்ந்திரார்; மேலும், அகவன் மகளிர், நன்னன் மாமரத்தில் பிடியானையைப் பிணித்தனர் என்ருல், அவ் வகவன் மகளிர்பால் அன்புடைய நன்னன், தன் மாமரத்தைக் காக்க, அவரைத் துன்புறுத்தல் வேண்டுவ தில்லை; அவர் பிணித்த பிடியானையைக் கட்டவிழ்த்து விட்டால் அஃதொன்றே போதும், தன் மாமரத்தைக் காக்க. மேலும், வரிசைக்கு வருந்தும் பரிசில் வாழ்க்கை யராய அகவன் மகளிர், தம்மாட்டுப் பேரன்புடையனுய்ப் பரிசில் பல அளிக்கும் பேரரசன் ஒருவனுக்கு அழிவு தரும் அரசியல் சூழலில் தலையிடார்; "வரிசைக்கு வருந்தும் இப்பரிசில் வாழ்க்கை பிறர்க்குத் தீதறிந்தன்ருே வின்றே' எனப் பரிசில்மாட்டு அப்பழியில்லை எனக் கோவூர் கிழார் கூறுவதையும் உணர்க. குமணன் பால் தாம் பெற்ற யானையை, இளவெளிமான் காவல் மரத்தில் பிணித்தனரே பெருஞ்சித்திரனுர் எனின், இளவெளிமான் தம் தகுதி யறிந்திலன்; அவனுக்கு அதை அறிவித்தல் வேண்டும் எனத் தம் அகத்தெழுந்த வேட்கையை நிறைவேற்றுவான் வேண்டியே, குமணனைப் பாடிப் பெற்ற யானையை, இள வெளிமான் மரத்தில் கட்டினரேயல்லாமல், அவர் கட்டிய யானை, இளவெளிமானைப் பழிவாங்கற் பொருட்டு அவன் பகைவன் ஒருவன்பால் பெற்றது அன்று; குமணன், இள வெளிமான் பகைவன் எனக் கூறினுர் ஒருவரும் இலர். மேலும், அகுதை ஆற்றல்மிக்க பெருவீரன் என்ப. கோசர் படைத்துணையும் பெற்றவன்; அத்தகையான் நன்னன் கொடுஞ்செயற்கேற்ற தண்டத்தை நன்னனுக்கு அளிக்க விரும்பியிருப்பனேல், நன்னன் கண் எதிரிலேயே, அவன் களையத்தவறிய வேள்மகளிர் பூசலைக் களைந்த அத்துணை

ஆற்றல் உடையனாய அகுதை, அதைத் தன் படைவலி கொண்டே செய்திருப்பன்; இத்தகு சூழ்ச்சிநெறி சென்றிருப்பானல்லன்; அவ்வாறு செல்லற்கு, ஆற்றற்குறையுடையானல்லன் அவன். மேலும் மடப்பிடிப் பரிசில் பிறிதொன்று குறித்தது எனக் கூறும் குறுந்தொகைச் செய்யுட்கண் (உகூஅ) "இன்கடுங் கள்ளின் அகுதை பின்றை" என்ற பாடந்தான் ஏடுகள் பலவற்றினும் உளதேயல்லால், "இன்கடுங் கள்ளின் அகுதை தந்த" என்ற பாடம் இல்லை என்பதையும் நோக்கியவழி, மடப்பிடிப் பரிசில் பிறிதொன்று குறித்த நிகழ்ச்சி யாதாயினும், அது, அகுதை இறந்தபிறகு நிகழ்ந்த நிகழ்ச்சியேயல்லால், அஃது அவன் எண்ணிச் செய்த நிகழ்ச்சியாகாது என்பதும் புலனும். ஆக, இவற்றையெல்லாம் ஒருங்குவைத்து ஊன்றி நோக்குவார்க்கு அகுதை, கோசர் இனத்தவனல்லன் என்பதும், நன்னன் நறுமா குறித்துக் கூறுவது யாரோ சிலர் கட்டிவிட்ட கதையேயல்லாமல், வரலாற்றுண்மை யுடையதன்று; அகுதைக்கு, அவன் மாமர அழிவில் யாதொரு தொடர்பும் இல்லை என்பதும் உறுதியாதல் உணர்க.

## உ. அக்குரன்

அக்குரன், வள்ளல்கள் என வாழ்த்தப்பெற்ற எழுவருள் ஒருவனல்லன் ஆயினும், வள்ளன்மைக்கு எடுத்துக் காட்டாகக் "கொடுக்கிலாதானைப் பாரியே! என்று கூறினும் கொடுப்பாரிலை" எனப் பாரிவள்ளல் காட்டப்படுவதைப்போன்றே, இவனும், "அக்குரன் அனைய கைவண்மை" எனக் காட்டப்படும் பேறுபெற்றோனவன்; அதியமான் நெடுமான் அஞ்சி, வையாவிக்கோப்பெரும் பேகன் ஆக இருபெரும் வள்ளல்களைப் பாடிப் பாராட்டிய அரிசில் கிழாரே, கொடைக் குணத்திற்கு எடுத்துக்காட்டாக இவனைக்கூறுவர் எனின், 'வண்மையுடையவன் இவன்' என ஏனையோர் வாழ்த்துவதில் வியப்புண்டோ? "உலகைக் காக்கும் கடமையுடைய வானம், பெய்யாது பொய்ப்பினும் சேரலாதன் கொடுத்தலைக் கைவிடான்; கொடுப்பதையே கடமையாகக் கொண்டவன் அவன்; அக் கொடைக் குணத்தினின்றும் அவன் உள்ளம் சிறிதும் கோடாது; கொடுக்கும்போதும் குறையக் கொடுப்பானல்லன்; வருந்தி வந்தோர் வயிற்றுப்பசித் தீத்தணியப் பெரும் பொருள் தருகுவன்." "கொடைக்கடன் அமர்ந்த கோடா நெஞ்சினன்; மன்னுயிர் அழிய யாண்டுபல மாறித், தண்ணிய எழிலி தலையா தாயினும், வயிறு பசிகூர ஈயலன்;" "மன்னுடை ஞாலம், புரவெதிர்கொண்ட, தண்ணிய எழிலி தலையாது மாறி, மாரி பொய்க்குவ தாயினும், சேரலாதன் பொய்யலன் நசையே" (பதிற்றுப் : உ௦, க௮) என வியந்து பாராட்டுமளவு வாரி வழங்கும் வள்ளியோனாய் வாழ்ந்த இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்குக் கொடைக்குணத்தில் ஈடாகக் கூறப்படுகிறான் இவ் வக்குரன் எனின், இவன் கொடைக்குணம் எத்துணைச் சிறப்புடைத்து என்பதை உய்த்துணர்ந்துகொள்க. தலையாய வள்ளல்களுள், அக்குரன் எனும் பெயர் உடையான் ஒருவன் உளன் எனினும், இவன் வரலாறு உரைக்கும் அரிசில் கிழார், "அமர் உடற்றுவதில், ஆற்றல் மிக்க நூற்றுவர்க்குத்

துணைவலியாம் துறையில், வழுவாது ஒழுகிய ஆண்மை நிறைந்த அக்குரன்" எனக் கூறுவதை நோக்கின், பாண்டவர் ஐவர்க்கும் முன் பிறந்தோனும், நூற்றுவர்க்கு உயிர்த் துணையாய் வாழ்ந்தோனுமாய கன்னனையே, அக்குரன் என அழைத்துளார் எனத் தோன்றுகிறது.

"போர்தலை மிகுந்த ஈரைம் பதின்மரொடு
துப்புத்துறை போகிய துணிவுடை ஆண்மை
அக்குரன் அனைய கை வண்மையையே"

(பதிற்றுப்: கச)

## ௫. அதியன்

பேரரசாய் வாழ்ந்த பாண்டியர் படையில் பணி யாற்றிய வீரர்களுள் அதியன் என்பானும் ஒருவன்; அதிகன் எனவும் அழைக்கப்பெறுவன்; அதியன், சங்க காலப் பாண்டியருள் தலைசிறந்தோனும், தலையாலங்கானத் துச் செருவென்றோனும், பசும்பூட் பாண்டியன் எனப் பலவிடத்தும் அழைக்கப் பெறுவோனும் ஆய நெடுஞ் செழியன் காலத்தே பாண்டியர்படையில் பணியாற்றினன். அதியன் மலையிடை ஊர் ஒன்றில் வாழ்ந்திருந்தான்; வேங்கையும், பலாவும் நிறைந்து பயன்தரும் மலை, அவன் மலை. அம்மலைக்கண், பாண்டியர் படையும் கொடியும் பாசறைகொண்டிருக்கும் :

"அதியன்,
கோளற வறியாப் பயங்கெழு பலவின்
வேங்கை சேர்ந்த வெற்பகம் பொலிய
வில்கெழு தானைப் பசும்பூட் பாண்டியன்
களிறணி வெல்கொடி." (அகம்: ௧௬௨)

பாண்டியர்க்கு உரிய ஊர்களுள், நெல்வளம் மிக்க நல்லூர் ஒன்றை, நாட்டாசையால் கைப்பற்றி, அள்ளூர் எனத் தன் பெயர்வைத்து ஆண்டுகொண்டிருந்தான் அள்ளன் என்பானொரு கொள்ளைக்கூட்டத் தலைவனா வன்; அள்ளி எனவும் அழைக்கப்பெறும் அவன் செயல் பொருத பசும்பூட் பாண்டியன், அவனை வென்று துரத்தும் பணியைப் படைத்தலைவன் அதியனுக்களித்திருந்தான்; அதியனும், அவ்வாறே சென்று, அவனை வென்று பணி கொண்டான்.

"செறுநீர், களிறுடை அருஞ்சமம் ததைய நூறும்
ஒளிறுவாள் தானைக் கொற்றச் செழியன்
பிண்ட நெல்லின் அள்ளூர்." (அகம்: ௪௬)

"ஆடுநடைப் பொலிந்த புகற்சியின், நாடுகோள்
அள்ளனைப் பணித்த அதியன்." (அகம்: ௩௨௫)

அக்காலத்தே, கொங்கர் எனும் கூட்டத்தார், தமிழ் நாட்டுட் புகுந்து, கேடுவிளைத்து வாழ்ந்துவந்தனர்; அவ ரால், தம் அரச வாழ்விற்கே அழிவுண்டாமோ எனவும் அஞ்சினர் அரசர்கள்; அதனல், அவரைத் தம் நாட்டி னின்றும் ஓட்டுவதைத் தம் தலையாய பணியெனக் கொண் டனர் ; பசும்பூட் பாண்டியனும், அக் கொங்கரை வென்று துரத்தி அவர் கைப்பற்றி ஆண்ட நாடுகள் பலவற்றை மீள வும் பெற்முன் ; பாண்டியன் பெற்ற இவ் வெற்றிக்குப் பெரிதும் துணைபுரிந்தவன் அதியனே.

"கொங்கர் ஓட்டி,
நாடுபல தந்த பசும்பூட் பாண்டியன்." (அகம் : உருங)

இவ்வாறு பாண்டியர்தம் பேரரசின் வாழ்விற்குப் பெருந்துணை புரிந்த அதியன், இறுதியில், வாகை எனும் ஊரிடத்தே நடந்த பெரும் போரில், தன் யானைப்படை யையும் இழந்து, தானும் இறந்தான். பாண்டியநாட்டி னின்றும் தம்மைத் துரத்திய அதியன் இறந்தது கேட்ட கொங்கர் உள்ளக் களிப்பால் உவந்து மகிழ்ந்தனர்.

"கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்
பசும்பூட் பாண்டியன் வினை வல் அதியன்
களிறொடு பட்ட ஞான்றை
ஒளிறுவாட் கொங்கர் ஆர்ப்பினும் பெரிதே."
(குறுந் : ௩௯௩)

இவ்வாகை எனும் ஊர் எயினன் என்பானுக்கு உரியது என மதுரைப் படமங்கமன்னியார் பாட்டால் தெரி வதால்—"வ்ண்கை எயினன் வாகை" (புறம்: ௩௫௧) அதியன், அவ்வெயினனெடு மேற்கொண்ட போரிலேயே உயிர் துறந்தானுதல் வேண்டும். இங்ஙனம், பேராண்மை மிக்க பெருவீரனய் வாழ்ந்த அதியன், பெருங்கொடை வள்ளலாகவும் விளங்கினன்; பரிசில் அளிப்பாரைப் பாரெலாம் அறியப் புகழ்ந்து பாடும் இரவலர் எது வேண்டி வருவரோ அதைத் தவருது அளித்துப் புரந்துவந்தான் அதியன்; அதியன் இறந்தான் எனக் கேட்ட இரவலர்

பாடிப் பரிசில்பெறும் வாழ்வையே மறந்தனர்; அவர் கிணைப்பறை ஒலிக்கப்பெருமலே ஒழிந்தது என மாமூலனர் கூறுவர் எனின், அதியன் கொடைவளத்தை அளவிட்டுக் கூறல் ஒண்ணுமோ ?

"நல்லிசை தரூஉம் இரவலர்க்கு உள்ளிய
நசைபிழைப் பறியாக் கழல்தொடி அதிகன்."

"அதியன் பின்றை
வள்ளுயிர் மாக்கிணை கண்ணவிந் தாங்கு."

(அகம் : கசுஉ, கஉரு)

## ச. அந்துவன் கீரன்

பண்டைத் தமிழகத்தில் பயில வழங்கிய பெயர்களுள் அந்துவன் என்பதும் ஒன்று; நல்லந்துவனார், ஒரு புலவன் பெயர்; அந்துவன் சாத்தன், ஒரு தலைவன் பெயர்; அந்துவஞ்சேரல் இரும்பொறை, ஓர் அரசன் பெயர்; இவ்வாறு பயின்ற வழக்குடைய அந்துவன் என்ற பெயர் பூண்டான் ஒருவன் மகனாய்ப் பிறந்து, கீரன் எனும் இயற் பெயர்கொண்டு வாழ்ந்திருந்தான் ஒரு தலைவன்; அவன் படையானும், பொருளானும் பேரரசரை யொப்பச் சிறந்து விளங்கினான். இத்துணைச் சிறப்புடையனாய அவன், ஆன்றோர் கூறும் அறிவுரையினைக் கேட்டு அதன் வழி நடக்கும் அறிவுச் செல்வமும் உடையனாவன். உலகியல் வாழ்வில் ஊன்றிய உள்ளமும், பெரும்பொருள் காண் பதில் பேரூக்கமும் உடையவனாய அவனை அடைந்து, உலகின் நிலையாமையை எடுத்துக்காட்டியும், ஈதலும், இசைபட வாழ்தலும் ஆய வாழ்வான் வரும் விழுச்சிறப்பை விளங்கக் கூறியும் அவனுக்கு வாழ்க்கை வழிகாட்டியாய் விளங்கினார் பலர்; அவருள் ஒருவராய காவிட்டனார், "பேரரசு பல வென்று, பெருநாடுபெற்றுப் பெருக வாழ்ந்த முடிவேந்தராயினாரும், முடிவில் முதுகாடடைந்து பிடி சாம்பராயினாரே யல்லால், இந்நிலவுகிலேயே நின்று நெடிது வாழ்ந்தாரல்லர்; நினக்கும் அந்நாள், ஒரு நாள் வருதல் உறுதி; நில்லா இவ்வுலகில் நிலைபெற்று நிற்பன இசையும் வசையுமேயாம்; "வசை ஒழிய வாழ்வாரே வாழ் வார்; இசையொழிய வாழ்வாரே வாழாதவர்" என்ப; ஆத லால், வசைநீக்கி இசைநடுதலும், ஒருபாலும் கோடாது முறைவழங்குதலும், வாயில்வந்து நிற்பார்க்குக் களிறும், மாவும், தேரும் பிறவும் வரையாது வழங்குதலும் செய்வா யாக! இவற்றால் நினக்கு உண்டாம் புகழ், நீ இறந்து இவ் வுலகைவிட்டு மறைந்த வழியும், இவ்வுலகில் இறவாது இருந்து நின்னை வாழச்செய்யும்" என்று கூறிய அறவுரை களைக் கேட்டும் அஃகியகன்ற அறிவுடையனாயினான் கீரன்.

"காடு முன்னினரே நாடுகொண் டோரும்;
நினக்கும் வருதல் வைகல் அற்றே;
வசையும் நிற்கும்; இசையும் நிற்கும்;
அதனால், வசைநீக்கி, இசை வேண்டியும்,
நசை வேண்டாது நன்று மொழிந்தும்
நிலவுக்கோட்டுப் பலகளிற்றொடு
பொலம்படைய மாமயங்கிட
இழைகிளர் நெடுந்தேர் இரவலர்க்கு அருகாது,
கொள்ளென விடுவை யாயின், வெள்ளென
ஆண்டுநீ பெயர்ந்த பின்னும்
ஈண்டுநீடு விளங்கும்நீ எய்திய புகழே."

(புறம் : ருகூ)

## ரு. அம்பர்கிழான் அருவந்தை

காவிரி பாயும் சோணுடு, பாக்கள் பல புனைந்த புலவர்களையும், அப் புலவர்க்குப் பொருள் அளித்து, அருந்தமிழ்ப் பாக்கள் தோன்றத் துணைபுரிந்த புரவலர்களையும் பெற்றெடுத்த பெரும் பேறுடையது; அவ்யாற்றின் கரைக்கண் அமைந்து அருந்தமிழ் வளர்த்த ஊர்களுள் அம்பர் என்பதும் ஒன்று; தஞ்சைமா நாட்டில் நன்னிலம் வட்டத்தில் உள்ள அவ்வம்பர், காவிரியிற் பிரிந்து பாயும் ஆறுகளுள் ஒன்ருய அரிசிலாற்றின் கரைக்கண் அமைந்துளது; காவிரியின் கிளைகளுள் ஒன்ருய அரிசிலாற்றைக் காவிரியென்றே கருதினர் போலும் அக்கால மக்கள்; அதனுலேயே, அம்பர், காவிரிக்கரைக்கண் அமைந்த ஓர் ஊர் என்றனர் அவர்கள்.

அம்பர்க்கண், அருவந்தை என்றெரு வள்ளல் வாழ்ந்திருந்தான். அருவந்தை, நூல் பல கற்றும், கேள்வி பல கேட்டும் பெற்ற பேரறிவுடையவன்; ஆடவரும் போற்றும் அறிவுடைப் பெரியோனுய அருவந்தையைப் பெற்றமையால் அம்பரும் புலவர் பாராட்டும் பெருமை யுடையதாயிற்று. "கற்ற நாவினன்; கேட்ட செவியினன்; முற்றவுணர்ந்த மூதறிவாளன்; நாகரிக நாட்டத்து ஆரியன் அருவந்தை", "நாடே, பிறர் நாட்டிற்கு உவமை; ஆறே, காலமறிந்து உதவும் காவிரிதானே; ஆடவர் திலகன் அம்பர் மன்னன், நீடிசைத் தலைவன் அருவந்தை" என அம்பரும் அருவந்தையும் பாராட்டப் பெறுதல் காண்க. கல்வி, கேள்விகளால் நிறைந்தும், முற்றவுணரும் மூதறிவுபெற்றும் புகழ் மிக்கோனுய அருவந்தையைப் பெற்ற அம்பர், பிற் காலத்தே, அம்பர் அருவந்தை யென்றே வழங்கலாயிற்று; திருப்பழனத்துக் கல்வெட்டொன்று, "உய்யக்கொண்டார் வளநாட்டு, அம்பர் நாட்டு அம்பர் அருவந்தை, (A. R. No. 175 of 1927-28) எனக் கூறுவது காண்க. வடார்க்காடு மாவட்டம் வந்தவாசி வட்டம் பொன்னூர்க் கல்வெட்டொன்று," பொன்னூரான அழகிய

சோழநல்லூர் அருவந்தை ஆண்டான் திருச் சோற்றுத் துறையுடையான் (S. I. I. Vol. XII No. 220) எனவருதலை நோக்கின், அருவந்தையின் குடிப்பிறந்தார் பிற்காலத்தே தொண்டை நாட்டிலும் இருந்தனர் என்பது புலனும்.

அருவந்தை அருள் உள்ளம் நிறைந்த பெரு வள்ளலாவன்; இரவலர், அவன் மனையடைந்து பாட வேண்டுவதும் இன்று; பிறர் மனை நின்று பரிசில் வேண்டி நிற்பாரையும், தன்மனை அழைத்து, அவர் வேண்டுவ அளித்து அனுப்பும் அருட்கொடையாளன் அருவந்தை. வடநாடு வறுமையுறவே வாழ்விழந்து தென்னடு போந்த கல்லாடனர், அம்பர் அடைந்து, அங்நகர்ச் செல்வன் ஒருவன் மனைமுன் நின்று, தடாரிப்பறை யொலித்துப் பாடிப் பரிசில் வேண்டி நின்றார்; அப்பாடலை, அம் மனைக்கு அண்மையில் உள்ள மனைக்கண் வாழ்ந்த அருவந்தை கேட்டான்; அருள் நிறைவுள்ளம் உடைய அருவந்தை, உடனே அவரைத் தன்பால் அழைத்து, அழுக்கேறிப் பீறிக்கிடந்த அவர் ஆடையை அகற்றி, வேறு வெள்ளாடை கொடுத்தும், அறுசுவை மிக்க அமிழ்து நிகர் உணவு அளித்தும் உறுதுணை புரிந்தான்; வலியவந் துதவிய அருவந்தையின் அருட்குணம் அறிந்த அவரும், அவன் நெடிது வாழ வாழ்த்திப் பாராட்டினர்:

"வெள்ளி தோன்றப் புள்ளுக்குரல் இயம்பப்,
புலரி விடியல் பகடுபல வாழ்த்தித்
தன்கடைத் தோன்றிற்று மிலனே; பிறன்கடை
அகன்கண் தடாரிப் பாடுகேட் டருளி,
வறனியான் நீங்கல் வேண்டி, என்னரை
நிலந் தினச் சிதைந்த சிதாஅர் களைந்து
வெளியது உடீஇஎன் பசிகளைந் தோனே
காவிரி யணையும் தாழ்நீர்ப் படப்பை
நெல்விளை கழனி அம்பர் கிழவோன்
நல்லரு வந்தை."

(புறம் : ௩அரு

## கூ. அருமன்

அருமன், சிறுகுடி எனும் ஊரில் வாழ்ந்த ஒரு சிறுடைச் செல்வனுவன்; காவிரியின் வடபால், சிறுகுடி எனும் ஓர் ஊர் உளது; அது, பண்ணன் என்பானுக்கு உரியது என்ப. அருமனுக்குரிய சிறுகுடி, அதுவோ, வேறோ அறிதற் கியலவில்லை. அருமன் சிறுகுடி, பழம் பெரும் பெருமை வாய்ந்தது; அவன் ஊர், பனைமரங்களால் சூழப் பெற்றது; அவ்வூர் வாழ் மக்கள், பனங்கள்ளொடு, இனிய பனநுங்கும் உண்டு பசி மறந்து வாழ்வர்; அத்துணை வளம் மிகு அவ்வூர் வாழ் அருமன், பெரிய கொடையாளனுவன்; குறிய கால் நாட்டிக் கட்டிய அவன் சிறிய மனை, குறையா நிறை வுணவு உண்மையாலாய பெருமை யுடையது; நெய் யிற் பொரித் தெடுத்த கருணைக்கிழங்கோடு செந்நெல் அரிசியாலாய வெண்சோற்றுத் திரளை நாள்தோறும் தெய்வம் பேணிப் பலியிட்டு, வருவார்க்கு வழங்கி வாழும் விழுமிய வாழ்வுடையன் அருமன்; அவ்வழி, ஆண்டுச் சிந் தும் அவ்வுணவை உண்ணுவான் வேண்டி, இளமையான் பறக்க இயலாது நடுங்கும் தம் பார்ப்புக்களோடு, அவண் வந்து கூடும் காக்கைகள் தம் இனத்தையும் கூவி அழைத்து ஒன்றுகூடி, அருமன் மனையின் மோட்டிடத்தே வீற்றி ருக்கும் காட்சி, கண் கொள்ளாக் காட்சியாம்; அருமன், அருமை யறிந்த புலவர்கள் கள்ளிலாத்திரையனும், நக் கீரரும், அவன் புகழைத் தம் பாவிடை வைத்துப் பாராட்டி யுள்ளனர்:

"கள்ளிற் கேளிற் ஆத்திரை, உள்ளூர்ப்
பாளை தந்த பஞ்சியங் குறுங்காய்
ஓங்கிரும் பெண்ணை நுங்கொடு பெயரும்
ஆதி அருமன் மூதூர்." (குறுந்: உகூ)

"கொடுங்கட் காக்கைக் கூர்வாய்ப் பேடை
நடுங்குசிறைப் பிள்ளை தழீஇக், கிளைபயிர்ந்து
கருங்கட் கருனைச் செந்நெல் வெண்சோறு
சூருடைப் பலியொடு கவரிய, குறுங்கால்
கூழுடை நன்மனை குழுவின இருக்கும்
மூதில் அருமன் பேரிசைச் சிறிகுடி." (நற்: நகஎ)

0

## எ. அவியன்

(திருமுனைப்பாடி நாட்டில், அவியனூர் என்றோர் ஊர் பண்டு இருந்தது என்றும், அவ்வூர், அவியனூர் நாட்டுத் தலைநகராம் பெருமையுற்றும் திகழ்ந்தது என்றும் திருவதிகைக் கல்வெட்டொன்று கூறுகிறது: (A. R. No. 419 of 1921). அந் நாடும், ஊரும் அப் பெயர் பெறுதற்குக் காரணமாயவன், அவியன் எனும் பெயர் பூண்ட காட்டுநாட்டுத் தலைவனாவன்.) அவன் நாடு, மலையும் காடும் மயங்கிய ஒருபெரு நாடு; தம் தாயிடத்துப் பால் உண்ண வேண்டி அத் தாயை விடாது சுற்றித் திரியும் ஆட்டுக்குட்டிகள் நரைத்த முகத்தினவாய குரங்குக்குட்டிகளைக் கண்டவுடனே, பால் உண்ணலையும் மறந்து, அக் குரங்குக் குட்டிகளோடு கூடி ஆடி மகிழும் காடுகளை இடையிடையே கொண்டது அவன் நாடு; மழைமிகு மேகங்கள் என்றும் இடையறாது இயங்குவதால், பழம்நிறை மரங்களும், வளம் மிகு மூங்கில்களும் வளர்ந்து வனப்புற்றது அவன் நாட்டகத்து மலைகள். அத்தகு வளநாடாண்ட அவியன், தன் மனைவிமாட்டு மட்டிலாப் பேரன்புடைய பெரியோனாவன்; அவளும், இயற்கையழகும், செயற்கையழகும் இணையறக் கொண்டு, கற்பெனும் பொற்பும் உடைய காரிகையாவள்; அத்தகையாளை மனையாளாகப்பெற்ற அவியன், தன் நாடு நோக்கிவரும் பாணர் முதலாம் பரிசிலர் தமக்கு வறுமை போக வழங்கி வாழ்வளிக்கும் வள்ளியோனாய் வாழ்ந்திருந்தான். இவ்வாறு, அவியன் மனைவாழ்க்கையின் மாண்பும், மாரிபோல் வழங்கும் வள்ளன்மைச் சிறப்பும் உணர்ந்த காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனாரும், மாறோக்கத்து நப்பசலையாரும் அவனைப் பாடிப் பாராட்டியுள்ளனர்.

"களிமலி கள்ளில் நற்றேர் அவியன்
ஆடியல் இளமழை சூடித் தோன்றும்
பழந் தூங்கு விடரகம்." (அகம் : உஎக)

"குறுமுலைக்கு அலமரும் பாலார் வெண்மறி
நரைமுக ஊகமொடு உகளும் வரையமல்
.......................................
கான்கெழு நாடன் கடுந்தேர் அவியன்."

"கற்புடை மடந்தை தற்புறம் புல்ல
மெல்லணைக் கிடந்தோன்." (புறம் : ந அங)

# ௮. அழிசி

அழிசி, ஆர்க்காட்டில் வாழ்ந்தவன்; இடையிடையே நெய்தல் மலரும் நெற்கழனிகளைக்கொண்டது அவன் ஆர்க்காடு. அவ்வூரையடுத்துள்ள காடு, நெல்லிமரங்களை நிறையக்கொண்டது. அழிசி, கள்ளுண்டு களித்துக் காட்டுட் புகுந்து வேட்டையாடி வாழ்வோரும், வாட் போரில் வந்துற்ற பகைவரை, வானுலகு அனுப்பவல்லாரு மாகிய வீரர் நிறைந்த படையுடையவன். அழிசிக்குச் சேந்தன் என்ற பெயருடையானொரு மகன் இருந்தான்; அவன் கடத்தற்கு அரிய எனக் கருதும் பகைவர் தம் பேரரண் பலவற்றை அழித்த வேற்படையுடையவன். வருவார்க்கு வரையாது வழங்கும் வள்ளன்மையும் உடையவன்; ஒருகால், காவிரியாற்றில், பலரும் நீராடும் பெருந்துறையாகிய மருதத்துறையில், நீராடுவோர்க்குத் துன்பம் செய்திருந்த யானையை அடக்கி, ஆண்டுள்ளதொரு மருத மரத்தில் பிணித்தான்; இத்துணைப் பேராண்மையுடையானை மகனாகப்பெற்றமையால், அழிசியைக் கூறும்போதெல்லாம் அவன் மகன் பெயரையும், அவன் பெயரோடு இணைத்து "சேந்தன் - தந்தை அழிசி" என அழைப்பாராயினர் அக்கால மக்கள். அழிசி, சோழர் பெயரோடு இணைத்து வழங்கப்பெறுதலாலும், அவன் மகன், காவிரிக் கரையில் யானையை அடக்கினன் என அறியப்படுதலாலும் ஆர்க்காட்டு அழிசி சோணாட்டினனாவன் எனக் கொள்க.

"வெல்போர்ச் சோழர் அழிசியம் பெருங்காட்டு
நெல்லியம் புளிச்சுவை." (நற் : ௮௭)

"மேவார்
ஆரரண் கடந்த மாரி வண்மகிழ்த்
திதலை எஃகின் சேந்தன் தந்தை
தேங்கமழ் விரிதார் இயல்தேர் அழிசி
வண்டுமூசு நெய்தல் நெல்லிடை மலரும்
அரியலங் கழனி ஆர்க்காடு." (நற் : ௧௯௦)

"காவிரிப், பலராடு பெருந்துறை மருதொடு பிணித்த
ஏந்துகோட்டு யானைச் சேந்தன் தந்தை
அரியலம் புகவின் அந்தோட்டு வேட்டை
நிறைய ஒள்வாள் இளையர் பெருமகன்
அழிசி ஆர்க்காடு." (குறுந் : ௨௫௮)

## கூ. அறுகை

சேரன் செங்குட்டுவனுடைய சிறந்த நண்பர்களுள் ஒருவன் அறுகை. அறுகை, பகைவர் நாடுகள்மீது படையெடுத்துச்சென்று வென்று மீளும் வல்லமையுடையவன்; அத்தகையான் ஒருகால், பழையன் என்பானுக்குரிய மோகூரைத் தாக்கினான்; பழையன் பெரும்படையுடையவன்; போராற்றல் வாய்ந்தவன்; அதனால், அவனை வெல்லுதல் அறுகையால் இயலாதுபோயிற்று. பழையன், அவனை வென்று துரத்தினான். மோகூரில் தோல்விகண்ட அறுகை, தனக்கு அறிந்தாரைக் காணவும் நாணினான்! அத்துணை நாணுடையான் அவன்; அதனால், தன் நாட்டைப் பிரிந்து சேணாடு சென்று வாழலாயினன். இதையறிந்தான், அறுகை நண்பன் செங்குட்டுவன்; நண்பனுக்கு உண்டான இழிவு, தனக்கு உண்டான இழிவு எனக் கருதினான்; உடனே பெரும்படையோடு சென்று மோகூரைத் தாக்கினான்; பழையனும் பணிந்தான்; அவன் காவன் மரமாம் வேம்பை வெட்டி வீழ்த்தி, முரசு செய்தற்காம் சிறுசிறு துண்டுகளாக்கித் தன்னூர்க்குக் கொண்டு சென்று, நண்பனுக்குண்டாய பழிதுடைத்தான் செங்குட்டுவன். இவ்வாறு செங்குட்டுவனும் விரும்பும் சிறந்த பண்புடையனாய் வாழ்ந்தான் அறுகை.

"நுண்கொடி உழிஞை, வெல்போர் அறுகை
சேணன் ஆயினும் கேள்என மொழிந்து,
புலம்பெயர்ந்து ஒளித்த களையாப் பூசற்கு
அரண்கடா வுறீஇ அணங்குநிகழ்ந் தன்ன
மோகூர் மன்னன் முரசங் கொண்டு
நெடுமொழி பணித்து, அவன் வேம்புமுதல் தடிந்து
முரசுசெய முரச்சிக் களிறுபல பூட்டி
ஒழுகை உய்த்தோய்!" (பதிற்றுப்பத்து : சச)

## கo. அன்னி

நீடூரில் வாழ்ந்த எவ்வி என்ற வேளிர் தலைவனுடைய நண்பன் அன்னி. அன்னி, திதியன் என்பானொடு பகை கொண்டிருந்தான்; அதனால், அத் திதியனுக்குரிய காவல் மரமாகிய புன்னையை அழித்து வெற்றிகாண ஆசை கொண்டான்; அன்னி கொண்ட ஆசை அடாதது; அவனுக்கே அழிவு தருவது என்பதை உணர்ந்த எவ்வி அன்னிக்கு எவ்வளவோ கூறித், திதியனொடு கொண்ட பகையொழியுமாறு வேண்டினன். ஆனால், அவன் அறிவுரையை அன்னி கேட்டானல்லன்; திதியனொடு போருக்குச் சென்றான்; அவன் புன்னையை வெட்டி வீழ்த்தி அழித்தான்; அதனால் சினங்கொண்ட திதியன், அன்னியைக் குறுக்கை எனும் இடத்தே எதிர்த்துக் கடும்போரிட்டு அழித்தான். நண்பன் கூறிய அறிவுரை கேளாத அன்னி அழிவுற்றான்; அவன் செயலைப் புலவர் பலரும் பழித்துப் பாட்டியற்றினர்.

இனி, அன்னி வேளிர் வழிவந்தவன் என்றும், புன்னை அன்னியின் காவல் மரமே யென்றும், அப் புன்னைபால் கொண்ட ஆசை காரணமாகவே, எவ்வி தடுக்கவும் கேளாது, அதை அழிக்கவந்த திதியனொடு போரிட்டு இறந்தான் என்றும் கூறுவர் சிலர். அன்னியைப் பற்றிய வரலாறு அறிவிப்பார் எவரும், அவன் வேள் என்பதை யாண்டும் கூறினரல்லர்; அவனுக்கு அறிவுரை கூறிய எவ்வி, வேளிர் வழிவந்தவன்; ஆகவே அன்னியும் வேளாதல் வேண்டும் எனக் கூறல் பொருந்தாது. சேணாட்டினைய பகைவன் ஒருவன், தன் நாட்டின்மீது படையெடுத்துப் போந்து தன் காவல் மரத்தை அழிக்கும்போது, "அவ்வாறு அழிப்பானை எதிர்த்து அழித்தல் வேண்டும்; அதுவே ஆண்மைக்கு அழகு" என்று கூறாது, "அழிப்பான் அழிக்கட்டும்; அவனொடு போரிடப் போகற்க" என்று கூறித் தடுத்தல் அறமாகாது; அது நன்மொழியும் ஆகாது: அவ்வாறு கூறித் தடுப்பார் உளராயினும், அவர் உரை

கேட்டு அடங்கி விடாது, போரிட்டு உயிர் துறப்பானை உலகம் போற்றுமே யல்லால், "கேளாது போய் இறந் தான்" எனப் பழிக்காது. பிறன் ஒருவனுக்குரிய காவல் மரத்தை வலியச் சென்று அழிப்பானை, அவ்வாறு அழிக்க ஆசை கோடல் அறமாகாது எனக் கூறல் அறிவுடைமையும் ஆம்; நன்மொழியுமாம்; அவ்வாறு அடக்கவும் அடங்காது சென்று அழித்து உயிர் துறந்தானை உலகம் தூற்றல் உறுதியாம். ஆகவே, ஈண்டுக் கூறிய புன்னை திதியனுக்கு உரியது; அதை அழிக்க ஆசை கொண்டான் அன்னி; அவ்வாசை அறமன்று என நன்மொழி கூறித் தடுத்தான் எவ்வி; அதைக் கேளாது போய் இறந்தான் அன்னி; ஆகவே அவன் செயலைப் பழித்தனர் புலவர்கள் எனக் கூறலே பொருந்தும்.

"அன்னியும் பெரியன்; அவனும் விழுமியன்;
இருபெரு வேந்தர் பொருகளத்து ஒழித்த
புன்னை விழுமம் போல
என்னொடு கழியும்இவ் விருவரது இகலே." (நற்: கஅ0)

"அன்னி குறுக்கைப் பறந்தலைத் திதியன்
தொன்னிலை முழுமுதல் துமியப் பண்ணிப்
புன்னை குறைத்த ஞான்றை வயிரியர்
இன்னிசை ஆர்ப்பினும் பெரிதே." (அகம்: சரு)

"எவ்வி, நயம்புரி நன்மொழி அடக்கவும் அடங்கான்
பொன்னிணர் நறுமலர்ப் புன்னை வெஃகித்
திதியனொடு பொருத அன்னிபோல
விளிகுவை." (அகம்: கஉசு)

"பெருஞ்சீர், அன்னி, குறுக்கைப் பறந்தலைத் திதியன்
தொன்னிலை முழுமுதல் துமியப் பண்ணிய
நன்னர் மெல்லிணர்ப் புன்னை போலக்
கடுநவைப் படீஇயர்." (அகம்: கசரு)

# கக. அன்னி மிஞிலி

அன்னி என்பது ஒரு வீரன் பெயர்; மிஞிலி என்பது மற்ருெரு வீரன் பெயர்; இவ்விரு பெருவீரர்கட் குரிய பெயர்களைத் தாங்கி நின்ருள் அன்னி மிஞிலி எனும் பெயருடை இந் நல்லாள். அன்னி மிஞிலியின் வரலாறு உணர்ந்தார். அவளோர் உயர்குணக் குலக்கொடியாளாவள் என்பதை உணர்வர். தனக்குத் தவறு செய்தாரைத் தண்டிக்கத் தவருத தறுகண்மை யுடையாள் அன்னி மிஞிலி. நாடோடி வாழ்க்கையினராய கோசர், நிலைத்த வாழ்க்கையினராய் வாழத்தொடங்கிக், காடுகளை அழித்துப் பண்படுத்தி, உழுது பயறு விளைத்திருந்தனர். அந் நிலத்தை அடுத்து மேய்ந்திருந்த அன்னி மிஞிலியின் தந்தை பசுக்கள், அந் நிலத்தில் புகுந்துவிட்டன. அச்சிறு குற்றத்திற்காக அன்னி மிஞிலியின் தந்தை கண்களை அழித்துச் சிறுமை செய்தனர்; கோசர் கொடுஞ்செயலைக் கண்டு சினங்கொண்டாள் அன்னி மிஞிலி; "என் தந்தையின் கண்களைப் போக்கிய அக் கோசரை அழித்துப் பழி வாங்குமுன், கலத்தும் உண்ணேன், தூய ஆடையும் உடேன்" என வஞ்சினம் உரைத்தாள்; அக் கோசரை அழிக்க வல்லான் யாவன் என எண்ணிப் பார்த்து, அத் தகையான் அழுந்தூர்க்குடையோனுய திதியனே என்பதறிந்தாள். உடனே அவன்பால் சென்று தன்குறை கூறிஞள். அவன் அவள் பொருட்டு, அத்தவற்றுக்குக் காரணமாய் இருந்தாரைக் கொன்ருன்; அவர் அழிவு கண்டு அன்னி மிஞிலி அகமகிழ்ந்தாள்; முன்னியது முடித்தேன் எனும் மிடுக்குடையளாயினள்.

"முதைபடு பசுங்காட் டரிற்பவர் மயக்கிப்
பகடுபல பூண்ட உழவுறு செஞ்செய்
இடுமுறை நிரம்பி ஆகுவினைக் கலித்துப்
பாசிலை யமன்ற பயறுஆ புக்கென
வாய்மொழித் தந்தையைக் கண்களைந்து அருளாது
ஊர்முது கோசர் நவைத்த சிறுமையிற்

"கலத்தும் உண்ணாள்; வாலிதும் உடாஅள்;
சினத்திற் கொண்ட படிவம் மாறாள்;
மறங்கெழு தானைக் கொற்றக் குறும்பியன்
செருவியல் நன்மான் திதியற்கு உரைத்து, அவர்
இன்னுயிர் செகுப்பக் கண்டு சினமாறிய
அன்னி மிஞிலி போல மெய்ம்மலிந்து
ஆனா உவகையேம் ஆயினெம்." (அகம்: உசஉ)

தந்தை, கண்கவின் அழித்ததன் தப்பல் தெறுவர
ஒன்றுமொழிக் கோசர்க் கொன்றுமுரண் போகிய
கடுந்தேர்த் திதியன் அழுந்தைக் கொடுங்குழை
அன்னி மிஞிலியின் இயலும்." (அகம்: ககசு)

## ௧௨. ஆட்டனத்தி

கரிகாற் பெருவளத்தான், சோணாடாண்டிருந்த காலத்தே அத்தி எனும் இயற்பெயர் உடையானொரு ஆண்டகை வாழ்ந்திருந்தான்; ஆற்றுப் புதுப்புனல் வருங் கால், அதிற் பாய்ந்து ஆடவல்லனாதல் அறிந்த அக்கால மக்கள், அவனை ஆட்டனத்தி எனப் பெயரிட்டுப் பாராட் டினர்; கச்சும், கழலும் கட்டி, இடையில் ஒலிக்கும் பாண் டில் மணியும், மார்பில் மணம்நாறும் மாலையும் அணிந்து, தழைத்து வளர்ந்த தலைமயிரும், பருத்து உயர்ந்த தோளும் உடையனாய் ஏறுபோன்ற எழில்மிகு நடையும், பேரழகும் கொண்டு பெருமிதம் தோன்றநிற்கும் ஆட்டனத்தியையும் அவன் புனலில் புகுந்துஆடும் ஆற்றலையும் கண்டு அக்கால மக்களும், அரசரும் ஒருங்கே மகிழ்வர். இவ்வாறு அழகும் ஆண்மையும் உடையனாய ஆட்டனத்தி, வெள்ளிவீதியார் என்ற பெண்பாற் புலவரும் பாராட்டும் பெரும் புலமை உடையராய ஆதிமந்தியாரை, ஆருயிர் மனைவியாப்பெற்ற மாண்பும் உடையனாவன்.

காவிரி ஆற்றில் கழார்ப் பெருந்துறைக்கண், ஆண்டு தோறும் புதுப்புனல் வருங்கால் பெருவிழா நிகழும்; ஆற்றுப் புனலில் குதித்து ஆடவல்ல அந்நாட்டு இளைஞர் அன்று ஒருங்கே சேர்ந்து ஆடித்திரிவர்; அவ்வாடல்காணச் சோணாட்டு மக்களும், மன்னனும் ஆண்டுவந்து மகிழ்வர்; ஓராண்டு நடைபெற்ற விழாவின்போது, கரிகாற் பெரு வளத்தானுடன், ஆதிமந்தியும், ஆட்டனத்தியும் வந்திருந் தனர்; விழாக்கண்டு அகமகிழ்ந்திருந்தான் ஆட்டனத்தி; அவனும் ஆடவல்லவன்; ஆடவல்ல அவனால், பிறர் ஆடு வதைப் பார்த்திருக்க இயலவில்லைபோலும்; அவனும் ஆட விரும்பினான்; உடனே புனலாட்டிற்கேற்ற புதுமுறை ஆடையணிந்து ஆற்றில் பாய்ந்து ஆடத் தொடங்கிவிட் டான்; அவன் ஆடல்கண்டு அனைவரும் அகம் மகிழ்ந்தனர்; அவன் ஆடல் அத்துணைச் சிறந்திருந்தது; ஆயினும், அவன் அவ்வூரினன் அல்லன்; வேற்றூரினின்று வந்தவன்;

அவ்யாறு, அவனுக்குப் புதிது; அதில், அதற்குமுன் ஆடியறியான் அவன்; அதனால், ஆற்றின் ஆற்றலும் இயல்பும் அறிந்து ஆடல் அவனால் இயலாது போயிற்று; ஆகவே, ஆடிக்கொண்டிருந்த அவன், ஆற்றுப் புனலால் அடித்துக் கொண்டு போகப்பட்டான்.

அவன் ஆடல் சிறப்பால் செம்மாந்திருந்த ஆதிமந்தியாரும் பிறரும் பெருங்கவலையுற்றனர்; அவனை ஆற்றிடமெல்லாம் தேடித்திரிந்தனர்; ஆற்றின் கரைக்கண் உள்ள ஆடிடம்தோறும் அலைந்து தேடினர்; ஆனால், அவன் அகப்பட்டிலன்; அவன் மனைவி ஆதிமந்தியார், அவன் மறைவு கண்டு மாறாத் துயர் கொண்டார்; அவர் அறிவும் பிறிதயிற்று; வழியில் வருவார் அனைவரிடத்தும், அவன் உருவும், திருவும் உணரக்கூறி, “அவனைக் கடல்கொண்டது; புனல் ஒளித்தது; சுரியலம் பொருநனைக் கண்டீரோ? ஆட்டனத்தியை அறியீரோ?” என வினவிக்கொண்டே, வீதிதோறும் ஊர்தோறும், நாடுதோறும் அலைந்து திரிந்து ஆற்றொணாத் துயருற்றார்.

பனிவார் கண்ணளாய்ப் பலவாறு புலந்து அலைந்து திரியும் ஆதிமந்தியார், காவிரி கடலோடு கலக்கும்வரையிலும் காணாது கலங்கிக் கண்ணீர் விட்டு அலைவாராயினர்; இறுதியில், ஆற்றுப் புனலில் அலைப்புண்டதால் அயர்ந்து அந்நீர்வழிச் செல்வானை, ஆங்குக் கரைக்கண் இருந்த மருதி என்பாள் கண்டு கடலில் புகுந்து, அரிதின் முயன்று கரைசேர்த்து ஆதிமந்தியார்பால் ஒப்படைத்தாள்; ஆனால், அந்தோ! அவனைக் கரைசேர்க்கும் முயற்சியால், மருதி கடல்வாய்ப்பட்டு மறைந்து மாண்புற்றாள். ஆட்டனத்தி, ஆதிமந்தி வரலாற்றினை அகநானூற்றுப் பாக்கள் ஐந்தில் வைத்துப் போற்றிப் பாராட்டியுள்ளார் பரணர்:

“கச்சினன், கழலினன், தேந்தார் மார்பினன்,
வகையமைப் பொலிந்த வனப்பமை தெரியல்
சுரியலம் பொருநனைக் காண்டிரோ? என
ஆதி மந்தி பேதுற்று இனையச்
சிறைபறைந்து உரைஇச் செங்குணக்கு ஒழுகும்

அந்தண் காவிரி போலக்
கொண்டுகை வலித்தல் சூழ்ந்திசின் யானே."
(அகம்: எசு)

"முழவுமுகம் புலராக் கலிகொள் ஆங்கண்
கழாஅர்ப் பெருந்துறை விழவின் ஆடும்
ஈட்டெழில் பொலிந்த ஏந்துகுவவு மொய்ம்பின்
ஆட்ட னத்தி நலன்நயந்து உரைஇத்
தாழிருங் கதுப்பின் காவிரி வவ்வலின்,
மாதிரம் துழைஇ மதிமருண்டு அலந்த
ஆதி மந்தி காதலற் காட்டிப்
படுகடல் புக்க பாடல்சால் சிறப்பின்
மருதியன்ன மாண்புகழ் பெறீஇயர்." (அகம்: உஉஉ)

"ஏற்றியல் எழில்நடைப் பொலிந்த மொய்ம்பின்
தோட்டிரும் தரியல் மணந்த பித்தை
ஆட்ட னத்தியைக் காணீ ரோஎன
நாட்டின் நாட்டின், ஊரின் ஊரின்
கடல்கொண் டன்று எனப் புனல்ஒளித் தன்றுஎனக்
கலுழ்ந்த கண்ணள், காதலற் கெடுத்த
ஆதிமந்தி." (அகம்: உ௩சு)

"ஒலிகதிர்க் கழனிக் கழாஅர் முன்துறைக்
கலிகொள் சுற்றமொடு கரிகால் காணத்
தண்பதம் கொண்டு தவிர்ந்த இன்னிசை
ஒண்பொறிப் புனைகழல் சேவடிப் புரளக்
கருங்கச்சு யாத்த காண்பின் அவ்வயிற்று
இரும்பொலம் பாண்டில் மணியொடு தெளிர்ப்பப்
புனல்நயந் தாடும் அத்தி அணிநயந்து
காவிரி கொண்டொளித் தாங்கு." (அகம்: ௩எசு)

"மந்தி,
பனிவார் கண்ணள் பலபுலந்து உறையக்
கடுந்திறல் அத்தி ஆடணி நசைஇ
நெடுநீர்க் காவிரி கொண்டொளித் தாங்கு."
(அகம்: ௩சுசு

இவ்வாறு பாக்கள் பலபாடிப் பரணர் பாட்டிற்கேற்ற பெரும்புகழ் உடையனுய ஆட்டனத்தி சேரவேந்தன் என்றும், அவன் மனைவியாம் மாண்புடைய புலவர் ஆதி மந்தியார், கரிகாற்பெருவளத்தான் மகளாவர் என்றும் சிலப்பதிகாரம் கூறுகிறது:

"மன்னன் கரிகால் வளவன்மகள், வஞ்சிக்கோன்
தன்னைப் புனல்கொள்ளத், தான்புனலின் பின்சென்று
கன்னவில் தோளாயோ! என்னக் கடல்வந்து
முன்னிறுத்திக் காட்ட, அவனைத் தழீஇக் கொண்டு
பொன்னங் கொடிபோலப் போதந்தாள்."

(சிலம்பு : உக : கக - கரு)

## கரு ஆதன் எழினி

சோணாட்டில், கிழக்குக் கடற்கரையை அடுத்துள்ள பட்டினங்களுள் செல்லூர் என்பதும் ஒன்று; அச்செல்லூர், மன்னர்குலம் மண்கொள முயன்ற மழுவாள் நெடியோனாய பரசுராமன் வேள்விசெய்த விழுச் சிறப்புடையது என்றும், வேள்வித்தீயான் விழுப்புகழ்பெற்ற அப்பேரூர், அருந்திறற் கடவுளர் நின்று காக்கும் அருமையும் உடைத்து என்றும் கூறுவர் மதுரை மருதன் இளநாகனார். அச்செல்லூர்க்கும் கிழக்கே, கடல் அலை ஒலிக்கும் நியமம் எனும் நகர் ஒன்று உண்டு; அந்நியமம், கோசர் என்பார்க்கு உரித்து; நியமத்தை வாழிடமாகக் கொண்ட கோசருள், இளையராயினார், செல்லூர்க்கு அணித்தே வந்து, ஒன்று கூடிக், கடலாடு மகளிர் கொய்து தந்த புலிநகக் கொன்றையினையும், கழனியுழவர் பறித்துப்போட்ட குவளையினையும், காவற்காட்டில் மலர்ந்த முல்லையொடு கலந்து கட்டிய கண்ணியணிந்து ஆடி மகிழ்வர் என்று கூறுவர், ஐயூர் முடவனார். அவ்வூரை உரிமைபூண்டு ஆண்டிருந்தான் ஆதன் எழினி என்பானொரு பெருவீரன்; அதியமான் எழினி, கண்ணன் எழினி, தலையாலங்கானத்துத் துஞ்சிய எழினி, வாட்டாற்று எழினி ஆதன் என, எழினி எனும் பெயருடையார், தமிழகத்தே பலராவர். ஆதலின், அவர் தம் வரலாற்றினை அறிதற்கண் ஆராய்ச்சியாளர் பெரிதும் விழிப்புடையராதல் வேண்டும். செல்லூர் ஆதன் எழினி, யானைப்போர் வல்லவன்; களிற்றின்மீது வேல் எறியும் வீரம் மிக்கோன்; அவன் எறிந்த வேலேற்ற களிறுகள், கடுந்துயர் உற்றுக் கலங்கி அழியும். ஆதன் எழினி குறித்து அறியத்தக்கன இத்துணையவே.

"கெடாஅத் தீயின் உருகெழு செல்லூர்க்
கடாஅ யானைக் குழூஉச்சமந் ததைய
மன்மருங் கறுத்த மழுவாள் நெடியோன்
முன்முயன்று அரிதினின் முடித்த வேள்வி."

(அகம்: உஉ0)

"அருந்திறற் கடவுள் செல்லூர்க் குணஅது
பெருங்கடல் முழக்கிற் ருகி, யாணர்
இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
கடுங்கண் கோசர் நியமம்." (அகம்: கூ0)

"கடலாடு மகளிர் கொய்த ஞாழலும்,
கழனி உழவர் குற்ற குவளையும்,
கடிமிளைப் புறவில் பூத்த முல்லையொடு
பல்இளங் கோசர் கண்ணி அயரும்
மல்லல் யாணர்ச் செல்லிக் கோமான்
எறிவிடத்து உலையாச் செறிசுரை வெள்வேல்
ஆதன் எழினி அருநிறத்து அழுத்திய
பெருங் களிற்று எவ்வம்." (அகம்: உகசு)

ஆதன் எழினி பற்றியும், அவன் செல்லூர் பற்றியும் அறியத் துணை புரிவன அகநானூற்றுப் பாக்களாய இம் மூன்றே; இவற்றையே துணையாகக் கொண்டு ஆதன் எழினி, கோசர் இனத்தவனுவன் என்பர் சிலர்; ஆதன் எழினி, கோசன் அல்லன்; அவன், அவர் பகைவனுவன்; அவன், செல்லூர்க்குக் கிழக்கே, அக் கோசரோடு போரிட்டு, வேல் மார்பில் தைக்கப்பெற்று இறந்தான் என்பர் மற்றும் சிலர். இவ்வாறு கொள்வற்குரிய சான்று எதுவும், அப் பாக்கள் ஒன்றினும் காணப்பெறவில்லை என்பதை, அப்பாக்களை ஒருமுறை படித்தாரும் உணர்வர். செல்லூர், நியமம் இரண்டையும் எடுத்துக்கூறி, இவற்றுள் நியமம் கோசர்க்கு உரித்து; அது, செல்லூர்க்கு அணித்தே உளது எனக் கூறுவதினுலேயே, செல்லூர், கோசர்க்கு உரித்தன்று என்பது தானே போதரும். இளங்கோசர் செல்லூர்க்கண் ஆடி மகிழ்வர் என்பதால், செல்லூரைக் கோசர்க்கு, உரித்து எனக் கூறுவதாயின், எழினி ஆதன் என்பானுக்குரிய வாட்டாற்றிலும் கோசர் வாழ்ந்தனர் என மாங்குடிகிழார், புறநானூற்றில் (நகூசு) கூறுவதைக் கொண்டு, வாட்டாற்று எழினியாதனும் கோசனுவன் எனக் கூறல்வேண்டும்; ஆனுல் அவன் கோசன் அல்லன்; வேளிர்வழி வந்தவன் என அப் பாட்டே அறிவிக்கிறது.

ஆகவே, செல்லூர்க்கண், இளங்கோசர் ஆடி மகிழ்கின்றனர் என்பது ஒன்றைக்கொண்டே, செல்லூர்த் தலைவனைக் கோசன் எனக் கோடல் சிறிதும் பொருந்தாது. மேலும், கோசர் வழிவந்தாரைக் குறிக்க வருவது எனப்படும், "வாய்மொழி" என்பதுபோலும் அடை எதுவும் ஆதன் எழினிக்கு இல்லை என்பதையும் நோக்குதல் வேண்டும். வேண்டுமாயின் செல்லூர்க்கு அண்மையில் வாழ்ந்த கோசர், ஆதன் எழினியின் அவைக்கள வீரராக விளங்கினர் என, ஒருவாறு பொருந்துமேல் கொள்க.

# கச. ஆதனுங்கன்

ஆதனுங்கன் ஒரு குறுநில மன்னன்; வேங்கடமலையும் அதைச் சூழ உள்ள நாடும் இவனுக்கு உரியது; சேரர்க்கு உரியது என ஓதப்பெறும். ஆதன் என்பதை இவன் தன் பெயரோடு கொண்டுள்ளமையால், சேரரோடு யாதோ ஒரு வகையில் தொடர்புடையன் எனக் கருதற்கும் இடம் உண்டு. ஆதனுங்கன், இரவலர் இன்மை தீர்க்கும் இனிய உள்ளம் உடையவன். கள்ளில் ஆத்திரையனார் எனும் தொண்டை நாட்டுப் புலவர் ஒருவர் இளைஞராய் இருந்த காலத்தே இவனைச் சென்று கண்டார்; தன்பால் வந்த புலவரை, ஆதனுங்கன் அன்புடன் வரவேற்று, அருகில் இருத்தி, "ஐய! கோடைமுற்றி வற்கடம் உற்ற வறுமை மிகு காலத்தே, உறுபொருள் அளித்து உற்றதுயர் தீர்ப்பாருள் ஒருவனாக அடியேனையும் உள்ளுவாயாக!" என வேண்டி, வேண்டும் பொருள் அளித்துப் போற்றினன்.

"நீர் நுங்கின் கண் வலிப்பக்
கான வேம்பின் காய் திரங்கக்
கயங்களியும் கோடை யாயினும்
ஏலா வெண்பொன் போகுறு காலை
எம்மும் உள்ளுமோ, பிள்ளையம் பொருந!
என்று ஈத்தனனே இசைசால் நெடுந்தகை."

(புறம்: ௩௮௯)

ஆதனுங்கன் அத்தகு பேரன்பினனாதல் அறிந்த ஆத்திரையனார்க்கும் அவன்பால் பேரன்பு பிறந்தது; அவனைத் தம் உள்ளத்தே வைத்துப் போற்றுவாராயினர்; அவனை மறப்பதும் அவர்க்கு அரிதாயிற்று; அவன் மறத்தற்கரியன் என்பதை அவனுக்கே அறிவித்தார்; "அன்ப! ஆதனுங்க! என் உள்ளத்தைத் திறந்து உட்புகுந்து காண வல்லார் உளராயின், ஆண்டு, நீ குடிகொண்டிருப்பதை அவர்கள் உறுதியாகக் காண்பர்; நின்னை யான் மறவேன்; நின்னை மறக்கும் காலமும் எனக்கு உண்டாம் எனின்

அக்காலம், என்னை யான் மறக்கும் காலமாகும்; அக்காலம் என் உயிர், என் உடலை விட்டுப் பிரியும் காலமாம்; அந்தக் காலத்தில்தான் நின்னை யான் மறத்தல் கூடும்'' என்று கூறினர்; ஆதனுங்கனும், ஆத்திரையனும் கொண்டிருந்த அன்பின் பெருமைதான் என்னே!

"எந்தை! வாழி! ஆதனுங்க! என்
நெஞ்சம் திறப்போர் நிற்காண் குவரே!
நின்னியான் மறப்பின், மறக்கும் காலை
என்உயிர் யாக்கையிற் பிரியும்பொழுதும்
என்னியான் மறப்பின், மறக்குவென்.'' (புறம்: கஎ௫)

ஆண்டு பல கழிந்தன; ஆதனுங்கனும் இறந்து விட்டான்; அஃதறிந்து ஆண்டுவந்த ஆத்திரையனர், அவன் நாட்டை, அவன் வழிவந்த முதியன் என்பான் ஆண்டிருத்தலைக் கண்டார்; அவன்பால், தாம் இளைஞராய் இருந்த காலத்தே ஆங்கு வந்ததையும், அக்காலை ஆதனுங்கன் காட்டிய அன்புடைமையினையும் எடுத்துக் கூறினர்; தம் வறுமைச் சுற்றத்தின் வாட்டம் அகல வரையாது வழங்கும் ஆதனுங்கனேபோல் வழங்குக என வேண்டினர்; ஆதனுங்கன் இறக்க ஆண்டெழும் சாப்பறை ஒலி கேட்டு வருந்தினர்; அவ்வொலி மீண்டும் எழா தொழிக என வாழ்த்தினர்; இவ்வாறு இறந்தும் இறவா, நிலைபெற்ற ஆதனுங்கன் அன்பும், அருளும், அருந்தமிழ்ப், பற்றும் அவனியெலாம் வாழ்க, வாழ்க என வாழ்த்துவோமாக!

"ஆத னுங்கன் போல நீயும்
பசித்த ஒக்கல் பழங்கண் வீட
வீறுசால் நன்கலம் நல்குமதி! பெரும'' (புறம்: ௩அ௯)

# கரு. ஆமூர் மல்லன்

தொண்டை நாட்டின் உட்பிரிவுகளாகிய இருபத்து நான்கு கோட்டங்களுள் ஆமூர்க் கோட்டமும் ஒன்று. அவ் வாமூர் நாட்டில், ஆமூர் என்றோர் ஊர் இருந்தது; அவ்வூர், அந்தணர் நிறைந்தது; ஆழ்ந்த அகழியையும், அரிய காவலையும் உடையது எனக் கூறிப் பாராட்டுவர், இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனர்:

"அந்தணர் அருகா. அருங்கடி வியன்நகர்,
அந்தண் கிடங்கின் அவன் ஆமூர்."

(சிறுபாண்: கஅஎ-அஅ)

ஆமூர்நாடு, முக்காவல் நாடு எனவும் அழைக்கப் பெறும். அந் நாட்டில் உளதாகிய ஆமூரில் வாழ்ந்திருந் தமையால் இம் மல்லன், முக்காவல் நாட்டு ஆமூர் மல்லன் என அழைக்கப்பெற்றுளான்: ஆமூர் மல்லன், மற்போரில் வல்லவனய்த் தன்னூரில் வாழ்ந்திருந்தான்; அக்காலை, தன் நாட்டைப் பகையரசன் பற்றிக்கொள்ள, வருந்தி வந்த போரவைக் கோப்பெருநற்கிள்ளி என்ற சோழர் குலச் சிற்றரசன், அவ் வாமூரில் வந்து வாழலாயினன்: போரவைக்கோ, பேராண்மையுடையவன் எனப் பலரா லும் பாராட்டப்பெறுவதைப் பொருத ஆமூர் மல்லன், அவனெடு போரிட்டு அவனையும் வென்று வீறுபெற விழைந்தான். அவ்வாறே, அவ் விருவரும் மற்போர் புரியத் தொடங்கினர்; போரவைக்கோ, ஆமூர் மல்லனி னும் ஆற்றல் மிக்கவனயினன்; அதனல், அவன், மல்லன் மார்பின் ஒரு காலை மண்டியிட்டு ஊன்றி அவன் ஆற்றல் குன்றச் செய்தான்; மல்லன், அவனை அழிக்கச்செய்யும் செயல்களை யெல்லாம் சிதறடித்து, ஒரு காலை அவன் முதுகில் இட்டு வளைத்துக் கொண்டான்; இதனல் செய லற்றவனய மல்லன், இறுதியில் காலும் தலையும் முறியக் களத்திலேயே உயிர் துறந்தான்.

"இன்கடுங் கள்ளின் ஆமூர் ஆங்கண்
மைந்துடை மல்லன் மதவலி முருக்கி,
ஒருகால் மார்பு ஒதுங்கின்றே; ஒருகால்
வருதார் தாங்கிப் பின்ஒதுங்கின்றே;
நல்கினும், நல்கா ளாயினும், வெல்போர்ப்
போரருந் தித்தன் காண்கதில் அம்ம!
பசித்துப்பணை முயலும் யானைபோல
இருதலை ஒசிய எற்றிக்
களம்புகு மல்லற் கடந்தடு நிலையே," (புறம்: ௮௦)

# கசு. ஆய் எயினன்

சேரனும், சோழனும், பாண்டியனும் செங்கோல் ஓச்சிய தமிழகத்தில், அவர்கள் ஆட்சி செலுத்திய அக் காலத்திலேயே, வேளிர் என்ற வகுப்பினரும், ஆங்காங்கே யிருந்து ஆட்சிபுரிந்து வந்தனர்; அவருள் ஒரு சாரார், "வானவரம்பன் வெளியம்," (அகம்: நடுகூ) எனக் கூறப் பெறுவதால், சேரர்க்குரியதாய்ச் சேரனாட்டகத்ததாய வெளியம் எனும் நகர்க்கண் வாழ்ந்துவந்தனர்; அவர்கள், சேர வேந்தர்க்கு மகள் கொடுக்கும் விழுமிய குடியின ராவர். பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் மனைவியாம் மாண்புடையளாய நல்லினி என்ற நல்லாள், வெளியத்தில் வாழ்ந்த வேளிர் மகளாவள் எனப் பதிற்றுப் பத்து, இரண் டாம் பத்துப் பதிகம் கூறுவது உணர்க. அவ் வெளியத் தில் வாழ்ந்த வேளிர்கள், வெளியன் வேண்மான் என்றே அழைக்கப் பெறுவாராயினர். அவ் வெளியத்தில் வாழ்ந்த வேளிர்வழி வந்தாருள், ஆய் எயினன் என்பானும் ஒருவன்; அது, அவன், வெளியன் "வேண்மான் ஆய் எயினன்," என அழைக்கப் பெறுதலால் உறுதியாதல் உணர்க.

ஆய் எயினன், தன்னைப்போன்றே வேளிர் வழி வந்தோனும், பாழி, பாரம், ஏழில் முதலாய மலைகளையும், அம் மலையடுத்த ஊர்களையும் கொண்ட கொண்கான நாட்டை ஆண்டிருந்தோனும் ஆய நன்னனெடு நட்புப் பூண் டிருந்தான். இருவரும் உயிர் ஒத்த நண்பர்களாய் ஒன்று கலந்து வாழ்ந்தனர். ஆய் எயினன்பால் கொண்ட அள விறந்த அன்பால், நன்னன் தனக்குரிய பிரம்பு எனும் மலைக்கு, "ஆய் பிரம்பு," எனவும் பெயரிட்டு வழங்கினான்; (அகம்: ருகூ) அரசர் ஒவ்வொருவரும், அவரவர் விரும் பும் மரம் ஒன்றைத் தம் காவல் மரமாகக் கொண்டிருந்த தைப்போன்றே, வாகை மரத்தைக் காவல் மரமாகக் கொண்ட நன்னன், அம் மரத்தின் பெயரால் வாகை எனும் ஊர் ஒன்று கண்டு, அவ்வூர் ஆட்சியைத் தன் நண்பன் ஆய் எயினன்பால் ஒப்படைத்தான். கூகை

என்ற பெயரும் உடையான் எனப் பரணரால் கூறப்படும் நன்னனுக்கு உரித்து என உரிமை பாராட்டப்பெறும் வாகை, ஆய் எயினனுக்கும் உரிமை யுடையதாகக் கூறப் படுவதால் இஃது உண்மையாம் என வுணர்க:

''கூகைக் கோழி வாகைப் பறந்தலை.'' (குறுந்: ௩௯௩)

''வண்கை எயினன் வாகை.'' (புறம்: ௩௫௧)

ஆய் எயினன், வாகையை ஆண்டிருந்த காலத்தே, பசும்பூண் பாண்டியன் படைத் தலைவனும், கொங்கர் எனும் குறும்பரைக் குடகடல்வரை ஓட்டி, அவர் வென்று ஆண்டிருந்த நாடுகளைக் கைப்பற்றியவனும் ஆய அதியன் என்பான், தன் படைச் செருக்கால், வாகையை வளைத்துப் போர் புரியலாயினன்; பாண்டியர் படைத்தலைவன் செயல் பொறுத ஆய் எயினன், தன் ஆற்றல் முழுதும் காட்டி அரிய போர் செய்து, அதியனையும், அவன் உடன்வந்த யானைப் படையையும், அவன் பகைவராய கொங்கர் மகிழு மாறு, கொன்று களம் வென்று வாழ்ந்திருந்தான்:

''கூகைக் கோழி வாகைப் பறந்தலை
பசும்பூட் பாண்டியன் வினைவல் அதிகன்
களிறொடு பட்ட ஞான்றை
ஒளிறுவாள் கொங்கர் ஆர்ப்பினும் பெரிதே.''
(குறுந் : ௩௯௩)

அதியனை வென்ற வெற்றிச் சிறப்போடு, வாகையில் வாழ்ந்திருந்தான் ஆய் எயினன். அக்காலை, புன்னாடு எனும் பெயருடைய நாட்டரசன், ஆய் எயினன் ஆருயிர் நண்பனாய நன்னனைப் பகைத்தெழுந்தான். அச்செய்தியை ஆய் எயினனுக்கு அறிவித்து, ''அந் நாட்டை எவ்வாற் றானும் வென்று அடக்குதல் வேண்டும்; ஆனால், யான் படையொடு ஆண்டுச் சென்றிருக்குங்கால், பாழியையும், பாழிக்கண் உள்ள பெரும் பொருளையும் காப்பார் யார் என்றே கலங்குகின்றேன்,'' என்றும் கூறினான். அது கேட்ட ஆய் எயினன், 'அவற்றின் காவலை யான் மேற் கொள்கின்றேன்; அஞ்சற்க,'' என்று உறுதி யளித்தான்.

இந் நிலையில், மிஞிலி என்பான், பாழியைத் தாக்கினான்; அஃது அறிந்தான் ஆய் எயினன்; "அஞ்சல்," என நன்னனுக்கு அன்றளித்த அவ் வார்த்தை பொய்யாகா வண்ணம், விரைந்துசென்று மிஞிலியை எதிர்த்தான்; மிஞிலி, எயினன் ஆற்றலை அறிந்தவன்; தன் படைத் துணையோடு, பேய் முதலாம் தெய்வத் துணையும் இருந்தாலன்றி அவனை வெல்லுதல் இயலாது என அறிந்தான்; அதனால், "எயினனோடு இன்று யான் மேற்கொள்ளும் போரில் எனக்கு வெற்றி தேடித் தருவையெனின், நினக்குப் பெரும்பலி தருவன்," என்று பாழிநகர்ப் பேயைப் பரவிப் போர்க்களம் புகுந்தான். ஆய் எயினனும் ஆற்றல் கொண்டு அரும்போர் உடற்றினான். எனினும், தன்னினும் படைப்பெருமையுடைய மிஞிலியை வெல்லுதல் அவனால் இயலாததாயிற்று; மேலும், பாழிக்குரிய நன்னன், பகைவர் படைப்பெருமை கண்டு அஞ்சி, அமர்க்களம் வாராமலே நின்றுவிட்டான்; அதனால், ஆய் எயினன் அமரிடை வீழ்ந்தான்.

ஆய் எயினன் பறவைகள்மாட்டுப் பேரன்புடையவன்; அவற்றிற்கு ஊறு நேராவண்ணம் நின்று காத்துவந்தான்; அதனால், அப்பறவைகளும் அவன் மாட்டு நீங்கா அன்புடையவாயின. அமரிடை வீழ்ந்தான் ஆய் எயினன் என்ற செய்தியை எவ்வாறோ அறிந்துகொண்ட அப்பறவைகள் எல்லாம், ஒன்றுகூடிக் களம் சேர்ந்தன; அவன்பால் நின்று அமர் வெல்லத் துணைபுரிதல் தம்மால் இயலாது போயினும், வீழ்ந்தான் உடல்மீது வெய்யில் வீழாவாறு, தம் சிறகுகளை விரித்து வட்டமிட்டுப் பறந்து வாடித் துயர் உற்றன.

தன் நாட்டைத் தாக்கிய மிஞிலியொடு தானே போரிடுதல் ஒழித்து, நண்பனைப் போர்க்களம் அனுப்பிய அறமாகாச் செயல் குறித்து நாணியோ, எயினன் இறந்தானாகப் படைத்துணையும் இழந்து நிற்கும் அந் நிலையில் களம் சேர்தல் தனக்கு ஏதம் வருதற்கு ஏதுவும் ஆம் என அஞ்சியோ நன்னன், களம் சென்று நண்பனைக் காணவும்

செய்திலன்; அவன் உரிமை மகளிர் உறுதுயரையும் துடைத்திலன்.

"நன்னன் பாழி
ஊட்டரு மரபின் அஞ்சுவரு பேஎய்க்கு
ஊட்டெதிர் கொண்ட வாய்மொழி மிஞிலி,
புள்ளிற்கு ஏம மாகிய பெரும்பெயர்
வெள்ளத் தானை அதியற் கொன்றுஉவந்து
ஒள்வாள் அமலை ஆடிய ஞாட்பு."

"கடும்பரிக் குதிரை ஆஅய் எயினன்
நெடுந்தேர் மிஞிலியொடு பொருதுகளம் பட்டெனக்
காணிய செல்லாக் கூகை நாணிக்
கடும்பகல் வழங்கா தாஅங்கு."

"ஓம்பரண் கடந்த வீங்குபெருந் தானை
அடுபோர் மிஞிலி செருவிற்கு உடைஇ
முருகுறழ் முன்பொடு பொருதுகளம் சிவப்ப
ஆஅய் எயினன் வீழ்ந்தென, ஞாயிற்று
ஒண்கதிர் உருப்பம் புதைய ஓராங்கு
வம்பப் புள்ளின் கம்பலைப் பெருந்தோடு
விசும்பிடை தூர ஆடி."

"வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்
அளியியல் வாழ்க்கைப் பாழிப் பறந்தலை
இழையணி யானை இயல்தேர் மிஞிலியொடு
நண்பகல் உற்ற செருவில் புண்கூர்ந்து
ஒள்வாள் மயங்கமர் வீழ்ந்தெனப், புள்ஒருங்கு
அங்கண் விசும்பின் விளங்கும் ஞாயிற்று
ஒண்கதிர் தெறுமைச் சிறகரில் கோலி
நிழல்செய்து உழறல் காணேன் யான்எனப்
படுகளம் காண்டல் செல்லான், சினம்சிறந்து
உருவினை நன்னன் அருளான் கரப்ப."

"பொலம்பூண் நன்னன், புன்றுடு கடிந்தென
யாழிசை மறுகின் பாழி ஆங்கண்
அஞ்சல் என்ற ஆஅய் எயினன்

இகலடு கற்பின் மிஞிலியொடு தாக்கித்
தன்னுயிர் கொடுத்தன்ன, சொல்லியது அமையாது,"
(அகம்: கசஉ, கசஅ, கஅக, உ0அ. ௩கக)

பறவைகள் மாட்டும் பேரருள் சுரக்கும் ஆய்எயினன், பரிசிலர் மாட்டும் பேரன்புடையனாய் வாழ்ந்தான்: நெடிய தன் மாளிகையின் தலைவாயிலில் நின்று, தேன் வளம் சிறந்த தன் மலையைப் பாடி மகிழ்வூட்டும் இரவலர், நள்ளிரவில் வந்து வேண்டினும், வெள்ளிய கோடுகளைக் கொண்ட தலைசிறந்த யானைகளைக் கொடுக்கும் கொடை வள்ளல் ஆய்எயினன்.

"யாம இரவின் நெடுங்கடை நின்று
தேமுதிர் சிமையக் குன்றம் பாடும்
நுண்கோல் அகவுநர் வேண்டின், வெண்கோட்டு
அண்ணல் யானை ஈயும், வண்மகிழ்
வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்."
(அகம்: உ0அ)

## கஎ. ஆரியப் பொருநன்

ஆரியப் பொருநன், வடநாட்டினின்றும், தமிழ் நாடு போந்து வாழ்ந்திருந்த மற்போர் வல்ல மல்லன்; சேரர் படைத்தலைவருள் ஒருவனாய கணையன் என்பானை அடுத்து, அவன் மதிக்க வாழ்ந்திருந்தான். கணையனும், தன்னைச் சேர்ந்த ஆரியப் பொருநன், ஆற்றல் உடையவன்; மற்போரில் அவனை வெல்வார் அரியர் என்று கூறி, அவனைப் பாராட்டிக் கொண்டிருந்தான்; அதைக் கேட்டான் பாணன் என்பவன்; பாணனும் வட நாட்டிலிருந்து வந்தவனே; அவன் உறையூர்த் தித்தனை வெல்லக் கருதி, ஆண்டுச் சென்று, அவன் நாளவையில் எழும் பாணர் பேரிசைச் சிறப்பைக் கேட்டே அஞ்சி, அவனோடு போர் புரியாதே ஓடிவந்த சுட்டி என்பானின் ஆருயிர் நண்பன்; சுட்டியொடு உறையூர்க்குச் சென்றிருந்தவன்; அப் பாணன் ஆரியப் பொருநனே, மற்போரில் வல்லவன் எனக் கணையன் கூறுவதைக் கேட்கப் பொறாது, அவனோடு போரிட முன் வந்தான்; மற்போர் தொடங்கி விட்டது; ஆரியப் பொருநனே வெற்றி பெறுவன் எனக் கூறிக்கொண்டிருந்தான் கணையன்; ஆரியப் பொருநன் தோள்களைப் பாணன், தன் மார்போடு அணைத்து இறுகப் பிடித்துக்கொண்டான்; அப் பிடியினின்றும் தன்னை விடுவித்துக்கொள்ளும் பொருட்டு ஆரியப் பொருநன் தன் ஆற்றல் முழுதும் காட்டி முயன்றான்; பாணன் பிடித்த பிடி விடாததனால், பொருநன் தோள்கள் இரண்டும் பாணன் கையிலேயே கிடக்க, அவற்றை இழந்த பொருநன் உடல்மட்டும் வெளிப்போந்து வீழ்ந்தது; ஆரியப் பொருநன் உயிர் அழிந்தது. தன்னோடு ஒருங்கு பணியாற்றும் சுட்டியின் நண்பன் வெல்லத், தன் நண்பன் தோற்றமை கண்டு நாணினான் கணையன்:

> "பாணன்
> மல்லடு மார்பின் வலியுற வருந்தி
> எதிர்தலைக் கொண்ட ஆரியப் பொருநன்
> நிறைத்திரண் முழவுத்தோள் கையகத் தொழிந்த
> திறன்வேறு கிடக்கை நோக்கி, நற்போர்க்
> கணையன் நாணியாங்கு, (அகம்: ௩அசு)

## கசு. ஆரிய அரசன் பிரகத்தன்

ஆரியரையும், அவர் பழக்க வழக்கங்களையும் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே, தமிழர்கள் அறிந்திருந் தனர். பிடியானை பழக்கும் ஆரியரையும், கழைக் கயிற் றின் மேல் நின்று ஆடும் ஆரியக் கூத்தரையும் தமிழ்ப் புலவர்கள் பார்த்துப் பாராட்டியுள்ளனர். ஆரியப் பொரு நன் என்பவன், தமிழகத்தே வந்து, தமிழரசர்களால் பெருவீரன் என மதிக்கப் பெற்று விளங்கிய வரலாற்றி னைப் பரணர் பாக்களில் பார்க்கிறோம். ஆரியம், தமிழகத் தில் கால்கொள்ளத் தொடங்கிய அடிச்சுவடுகளில் ஒரு சில இவை.

வட நாட்டை வாழ்விடமாகக் கொண்ட ஆரியர் தமிழகத்தின் தனிச் சிறப்புணர்ந்து, ஆங்கே, தங்கள் நிலையை உறுதியுடையதாக்கி உயர்த்திக்கொள்ளப் பெரி தும் முயன்றுள்ளனர். அதனால், அவ் வாரிய அரசர் களுக்கும், தமிழ் அரசர்களுக்கும் இடையில் போர் பல நடைபெற்றுள்ளன. ஆரிய அரசர்களை வென்ற ஆண் மைச் சிறப்பைத் தம் பெயர்களோடு இணைத்துப் பெருமைகொண்ட அரசர்களும் உளர். ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் என்ற பாண்டிய அரசன் பெய ரைக் காண்க. தமிழ் அரசர்கள், ஆரிய அரசர்களோடு போராடிப் பெற்ற வெற்றியைப் புலவர்களும் பாராட்டி யுள்ளனர். சேர வேந்தன் ஒருவன், ஆரியரை அலறத் தாக்கி அவர் இமயத்தில் தன் விற்கொடியைப் பொறித் தான் என்று பரணர் பாடியுள்ளார். "ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசை, தொன்றுமுதிர் வடவரை வணங்கு விற் பொறித்து, வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்." தஞ்சை மாவட்டம் வல்லத்தின் அருகே, ஓர் ஆரியப் படை போரிட்டு அழிந்தது என்று புலவர் ஒருவர் கூறியுள்ளார். "சோழர் வில்லீண்டு குறும்பின் வல்லத்துப் புறமிளை ஆரி யர் படையின் உடைக." இமய வரம்பன் நெடுஞ் சேரலா தன், ஆரியரை வணக்கி வெற்றிகொண்டான் என்று கூறு

கிறது, பதிற்றுப் பத்தில் இரண்டாம் பத்துப் பதிகம். தண்டகாரணியத்து ஆரியர் கவர்ந்து சென்ற ஆடுகளை, அவரை வென்று மீட்டுக் கொணர்ந்தான், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்று ஆறும் பத்துப்பதிகம் கூறுகிறது. காரியின் முள்ளூர் மலையை முற்றுகையிட்ட ஆரியர்களை வேற்படை கொண்டு வென்று துரத்தினன் காரி. இவற்றையெல்லாம் உணர்ந்தார் கபிலர்; ஆரிய அரசர் சிலர், தமிழ் நாட்டிற்கு அண்மையில் எங்கோ வாழந்திருக்கின்றனர்; அவர்கள், தமிழ், தமிழர் இவர்களின் தகுதி திறமைகளை அறியாத காரணத்தினலேயே, தமிழ்நாட்டின் மீது போர் தொடுக்கின்றனர்; அவர்கள் தமிழர்களின் உண்மை உயர்வினை உணர்வராயின், அவ்வாறு போரிடத் துணியார் என்று எண்ணினர்; அவர்களுக்குத் தமிழின் அருமை பெருமைகளை அறிவித்து நாட்டில் போர் நிகழ்வதைத் தடுத்தல் வேண்டும் என்று விரும்பினர். உடனே அவ்வாரியர் வாழிடத்தை அறிந்துசென்று, அவர்கள் அரசன் பிரகத்தனைக் கண்டார். அவனுக்குத் தமிழின் அருமையை அறிவிக்க, தமிழ் நாட்டு மக்களின் இயல்பினை ஒருவாறு உணர்த்த வல்ல கருத்துக்கள் அடங்கிய குறிஞ்சிப் பாட்டு என்ற நீண்ட பாடலைப் பாடிக் காட்டினர். அது கேட்டறிந்த அவ் வாரிய அரசன் பிரகத்தன், தமிழ் அறிவு பெற்றுத் தமிழரோடு அன்புறவுகொண்டு வாழ்ந்தான்.

## கக. இருங்கோவேள்

சிற்றரையம் பேரரையம் என்ற இருபெரும் பகுதி களைக்கொண்ட அரையம் என்ற பேரூரில் இருந்து அரசாண்ட வேளிர் தலைவன் இருங்கோவேள் அவன் நாடும், ஊரும், காடும், மலையும், மணியும், பொன்னும்மண்டிக் கிடக்கும் மாண்புடையன ; ஓடும் கடமாவின் கால் கிளர, மணியும், பொன்னும் சிதறிவிழும் சிறப்புடையது அவன் மலையகத்துச் சாரல் ; இருங்கோவேள், பகைவர் அஞ்சத் தக்க பெரும் படையும் பெற்றிருந்தான்.

"பொன்படு மால்வரைக் கிழவ! வென்வேல்
உடலுநர் உட்கும் தானைக்
கெடலருங் குரைய நாடுகிழ வோயே!"

"கடமா நல்லேறு
கடறுமணிகிளரச் சிதறுபொன் மிளிரக்
கடிய கதழும் நெடுவரைப் படப்பை
வென்றிநிலைஇய விழுப்புகழ் ஒன்றி
இருபாற் பெயரிய உருகெழு மூதூர்க்
கோடிபல அடுக்கிய பொருள் நுமக்கு உதவிய
நீடுநிலை அரையம்." (புறம்: உ0க, உ0உ)

இருங்கோவேள், வடநாட்டில் ஒரு முனிவன் செய்த வேள்வியில் தோன்றி அகத்தியனார் தமிழ்நாடு போந்த காலை, அவர் அழைக்க, அவருடன் வந்த பதினெண்வகை வேளிருள் ஒருவனும், துவாரபதி எனவும், துவார சமுத்திரம் எனவும் பெயருடையதாய், மைசூருக்கு வடமேற்கே ஐம்பது கல் தொலைவில் உள்ள துவரையில் இருந்து அரசாண்டோனுமாய வேளிர் வழிவந்தான் ஒருவன் மரபில், நாற்பத்தொன்பதாம் தலைமுறையில் பிறந்தவனுவன் :

"நீயே, வடபால் முனிவன் தடவினுள் தோன்றிச்
செம்புபுனைந் தியற்றிய சேண்நெடும் புரிசை

உவரா ஈகைத் துவரை யாண்டு
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே.'' (புறம்:உ0க)

இருங்கோவேள், புலிகடிமால் என்ற பிறிதொரு பெயரானும் அழைக்கப்பெறுவன் என்பதைக்கொண்டு, "வேள்குல அரசருள் சளன் என்ற பெயருடையான் ஒருவன் இருந்தான்; அவன் ஒருநாள் காட்டில் வேட்டையாடிக் கொண்டிருந்தான்; அப்போது ஆங்கே தவம் செய்துகொண்டிருந்த ஒரு முனிவரைப் புலி யொன்று தாக்க நெருங்கியது; அதுகண்டு அஞ்சிய முனிவர், அருகே, வேட்டையாடிக் கொண்டிருந்த சளனைக் கூவி அழைத்துப், "புலியைக் கொல் சள!" என்ற பொருள்படுமாறு, "பொய் சள!" பொய் சள!" என்று கூறினர்; அவனும் அக்கணமே அம்பெய்து அப் புலியைக் கொன்றான்; அவன் செயல்கண்டு மகிழ்ந்த முனிவர், "அரசே நின் வெற்றி கண்டு மகிழ்ந்தேன்; இவ வெற்றிப்புகழ் என்றும் நின்று விளங்க, இன்று முதல் நின் மரபு பொய்சள மரபெனப் பெயர் பெறுக" என்று வாழ்த்தி அனுப்பினர். அப் பொய் சள மரபோடு தொடர் புடைய வேளிர் மரபில் வந்தவனாதலின், இருங்கோ வேட்குப் புலிகடிமால் என்பதும் ஒரு பெயராயிற்று" என்ற வரலாறு உரைப்பாரும் உளர். இருங்கோவேள் வழிவந்தார் சிலர், இருக்குவேளிர் என்ற பெயருடைய ராய்ப் புதுக்கோட்டைப் பகுதியில் வாழ்ந்திருந்தனர் எனக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

இருங்கோவேள் அரையத்திருந்து ஆண்டிருந்த காலத்தே பாரி இறக்க, அவன் மகளிர்க்கு மணம்செய்து வைக்கும் மாண்புமிகு முயற்சியுடையராய கபிலர், அம் மகளிர் இருவரோடும் ஆண்டு வந்து அவனைக் கண்டார்; பாரி மகளிரை மணக்கும் தகுதிபெற்றவனே இருங்கோ வேள் என்பது உணர்ந்த கபிலர், அம் மகளிர் பெருமை யெலாம் கூறி அவரை மணந்துகொள்ளுமாறு அவனை வேண்டினர்; ஆனால் அவர் வேண்டுகோள் வீணாயிற்று;

பேரரசர் மூவர்க்கும் பகைவனுய பாரியின் மகளிரை மணந்துகொண்டால், அவ்வரசர் பகைப்பர் என அஞ்சியோ அரசிழந்து நிற்கும் அம் மகளிரின் அவலநிலை கண்டு நாணியோ, இருங்கோவேள் அம் மகளிரை மணக்க மறுத்துவிட்டான். மன்னன் மறுத்தது கண்டு சினங் கொண்ட கபிலர், "இருங்கோவேளே! ஆற்றலும், அருளும் உடையாய்நீ என்பதுகொண்டு உணர்விழந்தேன். பழி யொடு படர்ந்தது நின் குடி என்பதை நான் மறந்தே போனேன்; புலவர்கள் பொன்னுரையினைப் புல்லென மதிக்கும் புன்மைக்குணம் உன்குடிக்கு இயல்பு என்பதை யும் மறந்தேன்; எம்போலும் புலவராலும் போற்றப்படும் புலமைவாய்ந்த கழாத் தலையாரை, உன்போலும் அறிவு படைத்த உங்கள் முன்னேன் ஒருவன் இகழ, அதுகண்டு, அவர் சினந்து நோக்க, அதனல் அழிந்தது உங்கள் அரையப் பேரூர் என்பதையும் மறந்தேன். அவன் வழி வந்த உன்னிடம்மட்டும் உயர்ந்தோர்க்குரிய ஒழுக்கம் எவ்வாறிருக்கும்? நின்னைப் பழித்துப் பயனென்! அது நின் குலப்பண்பு! அஃதுணராது, நின்னை வந்து கண்டு வேண்டிநின்ற யானே அறிவிலி; வருகிறேன்; வேளே! வாழ்கநீ ஊழி! வெல்கநின் கொற்றம்!" என உளம் துடிக் கப் பேசி வெளியேறினர்.

"நீடுநிலை அரையத்துக் கேடும் கேளினி
நுந்தை தாயம் நிறைவுற எய்திய
ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்!
நும்போல் அறிவின், நுமருள் ஒருவன்
புகழ்ந்த செய்யுட் கழாஅத் தலையை
இகழ்ந்ததன் பயனே, இயல்தேர் அண்ணல்!
எவ்வி தொல்குடிப் படீஇயர், மற்றிவர்
கை வண் பாரி மகளிர் என்றஎன்
தேற்ருப் புன்சொல் நோற்றிசின் பெரும!
விடுத்தனென் வெலீஇயர்நின் வேலே." (புறம்: ௨0௨)

கரிகாற் பெருவளத்தாணல் வெற்றிகொள்ளப்பட் டோருள், இருங்கோவேள் என்பானும் ஒருவன் எனக்

கடியலூர் உருத்திரங் கண்ணனர் கூறுகிருர்; பாண்டியன் நெடுஞ்செழியனெடு தலையாலங்கானத்தே போரிட்டோருள், இருங்கோவேண்மான் என்பானும் ஒருவன் என நக்கீரர் கூறுகிருர்; அவரெல்லாம் ஒருவரோ, பலரோ அறிகிலம்:

"இருங்கோவேள் மருங்குசாய" (பட்டினப்: உஅஉ)
"இருங்கோ வேண்மான், இயல்தேர்ப் பொருநன்."
(அகம்: ருசு)

## ௨௦. இளங்கண்டீரக்கோ

மதுரை மாநகர்க்குத் தெற்கே, தோட்டி என்ற பெயருடையதொரு மலை இருந்தது. அடுக்கிய பல குன்றுகள் தன்னைச்சூழ நிற்கும் அழகினையுடையது அக்குன்று. நாடு நலமெலாம் பெற்று நனிசிறந்து விளங்குதற்குப் பெருந்துணை புரியவல்லது மழை; அம் மழை பொய்யாது பெய்யும நீர்நிறை மேகங்கள் என்றும் படிந்துகிடத்தற்காம் உயர்வினை உடையது. பளிங்கினைப் பிளந்து கண்டாற்போலும் தெளிந்த நீர்நிலைகள் பலவற்றைக் கொண்டது; அக் குன்று, தன்னைச்சூழ அடர்ந்த பெரிய காடுகளையும் பெற்றிருந்தது. அக் காடு ஆனோம்பி வாழும் ஆயர்க்கு வாழ்விடமாகவல்ல வளம்பல செறிந்தது. அவ் வாயர் தரும் நறுநெய்யை நாட்டவரெல்லாம் போற்றுவர். மணமும், அழகும் மாண்புறக்கொண்ட காந்தள் மலர்களால் கவின்பெற்றது அக்காடு.

இத்துணைச் சிறப்புவாய்ந்த தோட்டி மலையையும், அதைச் சூழ இருந்த காடுகளையும், காவல் மேற்கொண்டு வாழ்ந்திருந்தான் நள்ளி எனும் நல்லோன். நள்ளி, கண்டீரக்கோ எனவும், கண்டீரக் கோப்பெரு நள்ளி எனவும் அழைக்கப்பெறுவன். நள்ளி, நெடியபல தேர்களைப் பெற்றிருந்தான்; விற்போர் வல்ல வீரர் பலரையும் பெற்றிருந்தான்; விரைந்து செல்லும் குதிரைகளைக் கொண்டிருந்தது அவன் படை. தன்னொடு பகைகொண்டு வந்தாரை வென்று துரத்தும் வாளாண்மையும் அவன்பால் பொருந்தியிருந்தது. இத்துணைப்பேராற்றல் பெற்று, புலவர்போற்ற வாழ்ந்த நள்ளி, தன்னைப் பாடிவரும் பாணர் முதலாயினர் தம் வருத்தம் தீரத் தேரும் களிறும், திரண்ட செல்வமும் சிந்தையுவந்து ஈயும் சிறந்த கொடையாளனுமாகி விளங்கினன்.

இத்துணைச் சிறப்புவாய்ந்த குடியில், நாட்டவர் போற்ற வாழ்ந்த நள்ளிக்குத் தம்பியாக வந்து பிறந்தவன், இவ் விளங்கண்டீரக்கோ, விச்சிக்கோன் தம்பியாய இளவிச்சிக்கோவுடன் நட்புப்பூண்டிருந்தான். சிற்றரசர் இரு

வரும் ஒன்றிய அன்பினராய் உவந்து வாழ்ந்திருந்தனர்; ஒரு நாள் இருவரும் ஒன்றுகூடி ஓரிடத்தே ஒருங்கிருந்தனர். அக்காலை, ஆண்டுவந்தார், பெருந்தலைச் சாத்தனுர் எனும் புலவர் பெருந்தகையார்; புலவர் வரக்கண்ட இருவரும் எழுந்து எதிர்சென்று, விரும்பி வரவேற்றனர். ஆனல், வந்த புலவர், அவருள் இளங்கண்டீரக்கோவை மட்டும் அன்போடு தழுவிக்கொண்டார்; அச்செயல் இளவிச்சிக் கோவிற்குப் பெருந்துயர் தந்தது; புலவரை அணுகி "ஐயன்மீர்! இளங்கண்டீரக்கோவைத் தழுவி அன்பு காட்டிய நீவிர், என்னைத் தழுவாதொழிந்தது ஏனே' என்று வினவினன்; அதற்கு விடையாக "விச்சிக்கோவே! இக்கண்டீரக்கோ, வண்மையால் பெற்ற வளமார் புகழ் உடையவன்; இவனேயல்லாமல், இவன் நாடும் அத்தகு புகழ் உடையது; இவன் நாட்டில் மனைக்குரிய ஆடவன், வினைக்குரியவனுகி, வெளிநாடு சென்றிருந்தகாலையும், அவன் மனைநோக்கிச் செல்லும் பரிசிலர் வறிதே மீள்வாரல்லர்; ஆடவன் இன்மையால், அவர்கள் பொருள் இன்றி மீள்வதை விரும்புவாளல்லள் அம் மனைக்கிழத்தி. தன் அளவிற்கும், ஆற்றற்கும் ஏற்றவாறு சிறிய பிடியானையை யாவது பரிசில் அளித்தே அனுப்புவள். அத்துணைக் கொடை வளம் உடையது அவன் நாடு. அவன் நாட்டு வாழ்வார் நல்லியல்பே இஃதாயின், அவன் கொடை வளத்தினைக் கூறல்வேணடா வன்றே? ஆகவே, இவனைத் தழுவி நின்றேன்," எனக் கூறிய புலவர் பொன்னுரை, இளங்கண்டீரக் கோவின் குடிவளமும், கோல் வளமும், குன்று மனவளமும் எத்துணை மாண்புடையன என உணர்த்தி நிற்றல் உணர்க!

"பண்டும் பண்டும் பாடுநர் உவப்ப,
விண்டோய் சிமைய விறல்வரைக் கவாஅன்
கிழவன் சேட்புலம் படரின், இழையணிந்து
புன்தலை மடப்பிடி பரிசி லாகப்
பெண்டிரும் தம்பதம் கொடுக்கும் வண்புகழ்க்
கண்டீ ரக்கோன் ஆதலின், நன்றும்
முயங்க லான்றிசின் யானே."

(புறம்: கருக)

## உக. இளங்குமணன்

நெல்லுக்கிடையே புல்லுண்டாதல் உலகியல். கொடை வள்ளலாய்ப் புலவர் போற்ற வாழ்ந்த குமணன் குடிப் புகழ் குன்ற வந்து தோன்றினன் இளங்குமணன்; நாட்டவர் போற்றும் நல்லோனாய்க் குமணன் நாடாள்வதைப் பொறானாயினன் இவன்; அண்ணனை அழித்துவிட்டு, ஆட்சிப்பொறுப்பைத் தானே மேற்கொள்ள ஆசை கொண்டான். அஃதறிந்தான் குமணன். நற்பண்பிழந்த தம்பியொடு நாட்டில் வாழ்வதினும், காடு சென்று வாழ்தலே நன்று என எண்ணினான்; அவ்வாறே காட்டிற்கும் போய்விட்டான். ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தான் இளங் குமணன். அதன் பின்னரும் அவன் அமைதியுற்றான் அல்லன்; அண்ணன் உயிரோடு உள்ளவரை, உள்ள அமைதியோடு ஊராள்வது தன்னால் இயலாது என எண்ணினான். ஆகவே, அண்ணனைக் கொன்று அமைதி பெற எண்ணினான்; ஆனால், குமணனைப் போரிட்டுக் கொல்லவல்ல ஆற்றல் இழந்த அவன், அதைப் படைத் துணையால் பெற எண்ணினானல்லன்; படை வலியால் பெறலாகா அதைப் பிறிதொரு வழியால் பெறத் திட்ட மிட்டான்; "அண்ணன் தலையைக் கொணர்வார்க்கு ஆயிரம் பொன் தருவேன்," என நாட்டில் பறைசாற்றி வைத்தான்; என்னே அவன் கொடுமை!

பறை சாற்றி நாள் பல ஆகியும், அவன் எண்ணியதைப் பெற்றானல்லன்; அவன்போலும் கொடியார், குமணன் நாட்டில் வாழ்ந்திலர்போலும். ஆண்டு பல ஆயின. ஒருநாள், பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவர், இளங்குமணன் இருந்து ஆளும் ஊருக்கு வந்தார். ஆண்டுக் குமணனைக் கண்டாரல்லர்; நிகழ்ந்தன அறிந்தார்; வாழும் இடம் காடே ஆயினும், வருவார்க்கு வழங்கத் தவறான் குமணன் என்பதை அறிந்த புலவர், குமணன் வாழும் காடு சென்று கண்டு, அவனைப் பாடிப் பரிசில் வேண்டி நின்றார். புலவர் பெருமை யறிந்த புரவலன்,

அவர்க்கு அந்நிலையில் ஒன்றும் கொடுக்க இயலாமை எண்ணி வருந்திஞன்; நாடிழந்து உற்ற துயரினும் பெருந் துயர் உற்ருன்; அந் நிலையில் தன் தலையைக் கொணர் வார்க்குத் தம்பி ஆயிரம் பொன் அளிப்பன் என்ற செய்தி அவன் நினைவில் வந்து நின்றது; மட்டற்ற மகிழ்ச்சி யுற்ருன்; புலவரை அருகழைத்தான்; "ஐய! எவ்வாற் ருனும் யான் தம்பியால் தலையிழப்பது உறுதி; அதை யாரோ ஒருவன் கொண்டுசென்று, பொருள் பெற்றுப் போவதினும், அப் பொருள் நுமக்குக் கிடைப்பதாயின், நும் வறுமை ஒழியும்; என் வாழ்வும் உயரும்; ஆகவே, ஐய! இதோ என் வாள்; இதைக்கொண்டு என் தலை யைக் கொய்து சென்று பொருள் பெற்றுப் போவீராக!" என்று கூறி வாளை அவர் கையிற் கொடுத்தான்.

தன் கொடைச் சிறப்பால், உலக மக்கள் உள்ளத்தே அழியா இடம்பெற்ற குமணன், அம் மக்கள் இடையே, இருந்தும் வாழ்தல்வேண்டும் என விரும்பிஞர் புலவர்; உடனே, வாளோடு விரைந்தார் இளங்குமணன் இருந்த அவை நோக்கி. அவன் அண்ணன் அளித்த வாளை அவன் முன் வைத்தார்; வாள் வந்த வகையினையும் விளங்கக் கூறிஞர்; "நிலையில்லா இவ்வுலகில் நிலைபெற்று வாழும் வகையினை அறிந்தாரும் சிலர் உளர்; அவரெல்லாம், தம் புகழ் உலகம் உள்ளளவும் நிலைத்து வாழ வாழ்ந்து, வாழ் விழந்தனர்; அன்னருள் ஒருவனுய் உயர்ந்துவிட்டான் உன் உடன் பிறந்தான். அவ் வுயர்வுள்ளம் இல்லாப பிறரோ, தம் பொருளைப் பிறர்க்களித்துப் பயனுருது கொன்னே இறந்தனர்; அவர் ஒருவர் வாழ்ந்திருந்தார் என்பதையும் உலகம் மறந்துவிட்டது; அவருள் ஒருவ னுய் உலவுகின்றனை நீ," என அவன் கொடுஞ் செயல், அவன் உள்ளத்தை உறுத்துமாறு உணர்த்திச் சென்ருர். புலவர்தம் பொன்னுரையின் பயன் என்ன என்பதை அறிதற்காம் வாய்ப்பு இல்லை எனினும், பண்டைப் புலவர் தம் பாடற் சிறப்புணர்ந்த பலரும், இளங்குமணன் உள்ள மும் இளகியிருக்கும்; கொடைவளரக் கோலோச்சி

வாழுமாறு குமணனைக் கோணக்கி யிருப்பன் என்றே எண்ணுகின்றனர்.

''மன்னு உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே;
துன்னரும் சிறப்பின் உயர்ந்த செல்வர்,
இன்மையின் இரப்போர்க்கு ஈஇ யாமையின்,
தொன்மை மாக்களின் தொடர்பறி யலரே;
தாள்தாழ் படுமணி இரட்டும் பூநுதல்
ஆடியல் யானை பாடுநர்க்கு அருகாக்
கேடில் நல்லிசை வயமான் தோன்றலைப்
பாடி நின்றனெ ஞகக், 'கொன்னே
பாடுபெறு பரிசிலன், வாடினன் பெயர்தல், என்
நாடிழந் ததனினும் நனி இன்னுது' என
வாள்தந் தனனே, தலையெனக்கு ஈயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன்று இன்மையின்;
ஆடுமலி உவகையொடு வருவல்
ஓடாப் பூட்கை நின்கிழமையோற் கண்டே.''

(புறம்: கசுரு)

## ௨௨. இளவிச்சிக்கோ

விச்சி என்றொரு மலை உண்டு; அதைச் சூழ இருந்த நாடு விச்சி நாடு எனப்படும்; மலையில் வளர்ந்த பலாவின் பழத்தைக் கவர்ந்து சென்றுண்ட கடுவன், தன் செம்முக மந்தியோடு சென்று, சேய்மைக்கண் நின்றார்க்கும் தோன்றுவதும், மழை முகிலும் காணலாகா உயர்வுடையது மாய மலைக்கண் வளர்ந்திருக்கும் மூங்கில்மீது ஏறித் துயில் கொள்ளும் வளம் உடையது அம்மலை; வணங்காத மன்னரையும், தன் வளத்தால் வணங்கவைக்கும் சிறப்புடையது அந் நாடு.

"பனிவரை நிவந்த பாசிலைப் பலவின்
கனிகவர்ந் துண்ட கருவிரல் கடுவன்;
செம்முக மந்தியொடு, சிறந்துசேண் விளங்கி
மழைமிசை அறியா மால்வரை அடுக்கத்துக்
கழைமிசைத் துஞ்சும் கல்லக வெற்ப
.............................................
அடங்கா மன்னரை அடக்கும்
மடங்கா விளையுள் நாடு." (புறம் : ௨00)

விச்சி நாட்டில் குறும்பூர் என்றோர் ஊர் உண்டு; அவ் விச்சி நாடாண்ட அரசர், சேர, சோழ, பாண்டியராய வேந்தர்களையும் வெல்ல வல்லவராவர். அவர்கள், அவ் வேந்தரை ஒருகால் வென்றாராகக் குறும்பூரில் வெற்றி விழாக் கொண்டாடப் பட்டது என்று கூறுகிறார் பரணர்; வேந்தரை வென்ற விச்சியர், ஒரு காலத்தே, இளஞ்சேரல் இரும்பொறையால் வெல்லப்பட்டனர் எனக் கூறுகிறது பதிற்றுப் பத்துப் பதிகம்.

"வில்கெழு தானை விச்சியர் பெருமகன்
வேந்தரொடு பொருத ஞான்றைப் பாணர்
புலிநோக்கு உறழ்நிலை கண்ட
கலிகெழு குறும்பூர் ஆர்ப்பினும் பெரிதே."
(குறுந் : ௩௨அ)

"இருபெரு வேந்தரும், விச்சியும் வீழ."
(பதிற்று : பதிகம் : ௯)

இவ்வாறு வளம் நிறைந்த நாடும், வன்மை நிறைந்த படையும் உடைய விச்சியர்குடியில் விச்சிக்கோ எனும்

அரசன் ஒருவன் இருந்தான்; பாரிமகளிரை மணத்தற்காம் மாண்புடையான் எனக் கபிலரால் கருதத்தக்க பெருஞ் சிறப்புடையனாய அவன் தம்பியே இவ் விளவிச்சிக்கோ. இளவிச்சிக்கோ, கண்டீரக்கோப் பெருநள்ளி எனும் வள்ளல் ஒருவனின் தம்பியாய இளங்கண்டீரக்கோவுடன் நட்புப் பூண்டிருந்தான். ஒரு நாள் இளவரசர் இருவரும் ஒன்று கூடி ஓரிடத்தே இருந்தாராக அங்கிலையில் ஆண்டு வந்த புலவர், பெருந்தலைச் சாத்தனார், இளங் கண்டீரக்கோவை மட்டும் அன்போடு தழுவிக்கொண்டார்; அந் நிகழ்ச்சி இளவிச்சிக்கோவிற்கும் பெருந் துயர் தந்தது; வருந்திய உள்ளமுடையனாய்ப் புலவரை அணுகித் தன்பால் அன்பின்றி ஒழுகினமைக்குக் காரணம் யாதோ எனப் பணிவுடன் வினவினான். விச்சிக்கோவின் வாடியமுகம் கண்டு வருந்திய புலவர் "இளவரசே! நீ, நனி மிக நல்லவன்; எம்போலும் புலவரால் போற்றத்தக்கவன்; ஆனால், நீ பிறந்த குடி, பழியுடையது; பெண்கொலை புரிந்த நன்னன் வழி வந்தது நின்குடி; நின் மலை நோக்கி வந்து, வாழ்த்தி நின்ற புலவரை வரவேற்று, வேண்டுவ அளித்து அனுப்பாது அவர்க்கு வாயில் அடைத்தான் நின்குடி முதல்வன் ஒருவன். இவ்வாறு பழியுடையது நின் குடி என உணர்ந்த புலவர்கள் நின் நாட்டைப் பாடுவ தொழிந்தனர்; அதனாலேயே, யானும் நின்னைத் தழுவிக்கொள்ளேனாயினேன்; நீ நல்லவன், ஆகவே அது குறித்து வருந்தற்க!" என்று கூறி ஆறுதல் அளித்தார். பழி நிறைந்த குடி வந்தும், புகழ் நிறைந்த பெரியாரோடு பழகும் பண்புடையான் இவ்விளவிச்சிக்கோ.

"பொலந்தேர்,
நன்னன் மருகன்; அன்றியும், நீயும்
முயங்கற்கு ஒத்தனை மன்னே; வயங்குமொழிப்
பாடுநர்க் கடைத்த கதவின் ஆடுமழை
அணங்குசால் அடுக்கம் பொழியும் நும்
மணங்கமழ் மால்வரை வரைந்தனர் எமரே."

(புறம்: கறி

## உரு. இளவெளிமான்

குமணன் கோலோச்சி வாழ்ந்திருந்த காலத்திலேயே வெளிமான் என்றொரு வள்ளலும் வாழ்ந்திருந்தான்; அவனுக்கு, இளவெளிமான் என்ற பெயருடையானொரு இளவல் இருந்தான்; அவன் குமணன் இளவல் போலும் அத்துணைக் கொடியனல்லனேனும், தன் அண்ணனைப் போலும் அருள் நிரம்பிய உள்ளம் உடையானல்லன்; அண்ணன் அள்ளி அள்ளிக் கொடுக்கும் வள்ளியோனாக, இவன் எண்ணி, எண்ணிக் கொடுக்கும் இழிந்த குணமுடையனானவன். வெளிமான்பால் பரிசில் வேண்டிச் சென்றிருந்தார் புலவர் பெருஞ்சித்திரனார்; ஆனால், அந்தோ, அவர் ஆண்டு வாழ்ந்திருந்த அக்காலம், அவன் இறக்கும் நிலையடைந்த இறுதிக் காலம்; அதனால், அவனால், அவர்க்கு வேண்டும் பொருள் அளித்தல் இயலாதாயிற்று; தன் அருகிருக்கும் இளவெளிமானை அழைத்து, "புலவர்க்குப் பொருள் அளித்து அனுப்புக!" என்று கூறினான்; கொடுத்துப் பழகியறியா அவன், அவருக்குச் சிறிதே பொருள் அளித்தான்; அது தன் தகுதிக்குத் தக்க பொருள் ஆகாமை உணர்ந்த புலவர், அதைப் பெற்றுக்கொண்டார் அல்லர்; இளவெளிமானுக்குத் தான் யார்? தன்னைப் போலும் புலவர்கள் தகுதி யாது என்பதை உணர்த்த விரும்பினார்; உடனே ஆண்டு நின்றும் சென்று குமணனைக் கண்டார்; தனக்கொரு பெருங்களிறு தேவை என வேண்டிப் பெற்றார்; பெற்ற பெரு யானையை, வெளிமானூர்க்குக் கொண்டு சென்று, இளவெளிமானுக்குரிய காவல்மரத்தில் கட்டினார்; அரண்மனையுட் சென்று இளவெளிமானை அழைத்துப் போந்து அவனுக்கு யானையைக் காட்டினார்; "இளவரசே! இந்த யானை, யான் பாடிப் பெற்ற பரிசில்; என் புலமையைப் பாராட்டிக் குமணன் கொடுத்த கொடைச் செல்வம் இரவலரைப் புரக்கும் இனிய பண்புடையான் அவன்; நீ அப் பண்பற்றவன்; இரவலரைப் புரக்கும் வள்ளல்கள் உலகில் வாழ்விழந்து போய்விடவில்லை;

உலகில் இரவலரும் உள்ளனர்; அவ்விரவலரைப் பேணிப் புரக்கும் புரவலரும் உள்ளனர்; அதை நின் காவல் மரத்தில் யான் கட்டிய இவ் யானையைக் கண்டேனும் அறிந்து கொள்க! இரவலர்க்குக் களிறளித்துப் புரக்கும் குமணன் எங்கே! இரவலர் தம் தகுதி யறிந்து ஈயமாட்டா நீ எங்கே!'' என்று கூறி விடை கொண்டார்.

வள்ளியோர் வாழும் உலகில், வற்றிய உள்ளம் உடையோரும் வாழ்கின்றனர் என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்கியவன் இவ் விளவெளிமான் :

"இரவலர் புரவலை நீயும் அல்லை;
புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர்;
இரவலர் உண்மையும் காண்இனி; இரவலர்க்கு,
ஈவோர் உண்மையும் காண்இனி; நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்து யாம் பிணித்த
நெடுநல் யானை எம்பரிசில்;
கடுமான் தோன்றல்! செல்வல் யானே.''

(புறம்: கசுஉ)

## உச, ஈர்ந்தூர் கிழான் தோயன் மாறன்

கொங்குநாட்டில், ஈஞ்சூர் என இன்று வழங்கும் ஊர், பண்டு ஈர்ந்தூர் எனும் பெயருடையதாம்; அவ்வூரை உரிமைகொண்டு வாழ்ந்திருந்தான் வீரன் ஒருவன்; தோயன் மாறன் என்பது அவன் பெயர்; சில ஏடுகளில் அவன் பெயர் கோயமான் எனவும் காணப்படுகிறது; பேரரசர் படையில் பணியாற்றும் போர்த்தொழில் மேற்கொண்டிருந்தான் அவன்; தன்னைப் பணிகொண்ட பேரரசர்க்குப் போர்க்களத்தே கேடுண்டாகாவண்ணம் நின்று காக்கும் நீடுபுகழ் உடையான். பகைவர், தன் அரசர்மீது ஏவும் படைக்கலங்கள் அனைத்தையும் தன் மேலேற்றுத் தடுக்கும் தறுகணாளன்; அவ்வாறு தடுப்பதாலாய புண் பட்ட வடு, அவன் உடலெலாம் கிடந்து, அவன் ஆண்மைச்சிறப்பினை உலகறியத் தூற்றும். இவ்வாறு மாபெரும் வீரனாய் விளங்கிய மாறன், வரையாது வழங்கும் வள்ளியோனாகவும் வாழ்ந்தான்; அவன் பெருஞ்செல்வன் அல்லன்; ஆகவே, நாடோறும் தவறாது வழங்குவது அவனால் இயலாது; ஆயினும், அவன் தன்பால் வந்து இரப்பார்க்கு இல்லை எனக்கூறி வறிதே அனுப்பும் இழிவுடையானல்லன்; இரவலர் சென்று அவனை இரப்பாராயின், உடனே அவன் அவ்விரவலரை யெல்லாம் உடன் அழைத்துக் கொண்டு, அவ்வூர்க் கொல்லன் மனைமுன் நின்று, வறுமையால் வாடி வற்றி உலர்ந்த அவ்விரவலர் தம் வயிற்றினைக் கொல்லற்குக் காட்டி, "இவர்கள் வறுமை நீங்கி வாழ்தல் வேண்டும்; அதற்கு வேண்டும் பொருளை வென்று வரல் வேண்டுமாயின், போருக்காம் படைக்கலங்களை நீ இன்னே ஆக்கித்தரல் வேண்டுகின்றேன்" என்று வேண்டி நிற்பன்; அவ்வாறே, அவன் தரு படைக்கலத் துணைகொண்டு பகைவரை அழித்துப் பெரும்பொருள் கொணர்ந்து பரிசிலர்க்கு உதவுவன்; அத்தகு உயர்ந்த கொடையாளன் அவன், ஈர்ந்தூர்கிழான் தோயன் மாறன் அத்தகையான் என்பதை அறிந்தவராய கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்

குமரனார், வறுமையால் வாடித் தன் எதிர்வரும் பாணன் ஒருவனை அழைத்து "பாண! நம் போலும் பாணர் தம் பசிபோக்கிப் பாண்பசிப் பகைஞன் எனப் பெயர் பூண்டான் ஒருவன் ஈர்ந்தையில் உள்ளான்; அவன், வருவார்க்கு வாரி வாரி வழங்கவல்ல பெருவளமுடையனல்லன்; ஆயினும், வருவார்க்கு இல்லெனக்கூறி வறிதே அனுப்பும் சிறுமையும் உடையனல்லன்; நின்வறுமை கெடவேண்டுமாயின், என்னோடு வருக! அவண் செல்வோம்" என அழைத்துச் செல்வராயின் அவன் தரு கொடைப்பொருளின் பால் அக்காலப் புலவர்கள் எத்துணைப் பெருமதிப்புக் கொண்டிருந்தனர் என்பது புலனாதல் அறிக! வாழ்க அவன் கொற்றம்! வாழ்க அவன் கொடை!

"நிரப்பாது கொடுக்கும் செல்வமும் இலனே;
இல்லென மறுக்கும் சிறுமையும் இலனே;
இறையுறு விழுமம் தாங்கி, அமரகத்து
இரும்பு சுவைகொண்ட விழுப்புண் நோய்தீர்ந்து
மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்று வடிந்த யாக்கையன்; கொடை எதிர்ந்து,
ஈர்ந்தை யோனே பாண்பசிப் பகைஞன்;
இன்மை தீர வேண்டின், எம்மொடு
நீயும் வம்மோ முதுவாய் இரவல!
யாம் தன் இரக்கும் காலைத் தான்எம்
உண்ணா மருங்குல் காட்டித் தன்னூர்க்
கருங்கைக் கொல்லனை இரக்கும்
திருந்திலை நெடுவேல் வடித்திசின் எனவே."

(புறம் : ௧௮௦)

## உரு. எருமையூரன்

மைசூர் நாடும், அதன் தலைநகர் மைசூர் நகரமும் பண்டைநாளில் எருமைநாடு எனவும், எருமையூர் எனவும் முறையே பெயர் பெற்றிருந்தன. அவ்வூரில் வாழ்ந்திருந்தான் வீரன் ஒருவன்; அவனை எருமையூரன் என்றே பெயரிட்டு அழைத்தனர் அக்காலப் புலவர்கள். எருமையூரன், எவரும் இயங்குதற்கு அஞ்சும் நள்ளிரவிலே சென்று, தன் நாட்டைச் சூழஉள்ள பகைவர்களின் காவற் படைகளைப் பாழ்செய்துவிட்டு, அவ்வூர்ப்புறத்தே வாழும் ஆனிரைகளையும், அந்நாட்டுத் தொழுவங்களில் கிடக்கும் ஆனிரைகளையும் அவற்றின் கன்றுகளோடு ஓட்டிக் கொணர்ந்து, தன்னாட்டு மன்றுகளை நிறைவிக்கும் பேராற்றல் வாய்ந்தவன்; அவன் ஆட்சி, வடுகர் வாழும் வேங்கடம் வரையிலும், குடநாடு வரையிலும் பரவியிருந்தது; நால்வேறு வளங்களையும் நனிமிகக் கொண்ட அவன் நாடு, அயிரி எனும் ஆறுடைமையாலும் அழகுற்று விளங்கிற்று. இவ்வாறு பெருநாடும், பேராண்மையும் உடையனாய் வாழ்ந்த எருமையூரன், பாண்டிநாட்டுப் பெருவேந்தனாய் வாழ்ந்த நெடுஞ்செழியன் பகைவர்களாய சேரன், சோழன், திதியன், எழினி, இருங்கோவேண்மான், பொருநன் முதலாயினாருடன் ஒன்று சேர்ந்து, அச்செழியனை எதிர்த்துத் தலையாலங்கானம் எனும் இடத்தே கடும்போர் ஆற்றி, அவனால், அவ்வறுவரோடும் தோற்றுத் துயருழந்தான்.

"ஆரிருள் நடுநாள் ஏரா ஒய்யப்
பகைவினை யறுத்துப் பல்லினம் சாஅய்
..........................................
துறுகாழ் வல்சியர் தொழுவறை வௌவிக்
கன்றுடைப் பெருநிரை மன்றுநிறை தரூஉம்
நேரா வன்றோள் வடுகர் பெருமகன்
பேரிசை எருமை நன்னாட் டுள்ளதை
அயிரி யாறு.''

(அகம்: உருங)

"நுண்பூண் எருமை குடநாடு."

(அகம் : ககரு)

"செழியன்,
ஆலங் கானத்து அகன்தலை சிவப்பச்
சேரல், செம்பியன், சினங்கெழு திதியன்,
போர்வல் யானைப் பொலம்பூண் எழினி,
நாரரி நறவின் எருமை யூரன்,
தேங்கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின்
இருங்கோ வேண்மான், இயல்தேர்ப் பொருநன் என்று
எழுவர் நல்வலம் அடங்க, ஒருபகல்
முரசொடு வெண்குடை அகப்படுத்து உரைசெலக்
கொன்றுகளம் வேட்ட ஞான்றை." (அகம்: நசு)

## உகூ. எவ்வி

வேளிர் வழிவந்து சிறந்து விளங்கியோருள், எவ்வி என்பானும் ஒருவனாவன்; அவன் பெயரையே கொண்ட வேளிர்குடி ஒன்றும் பண்டைத் தமிழகத்தே பெருமை யுற்று விளங்கிற்று எனின், அவன் பெருமையினை என்னென்பது; பாரி மகளிரை மணத்தற்காம் மாண்புடை யான் எனக் கபிலரால் கருதப்பெற்ற பெரும் பேறுடை யானாய இருங்கோவேள் இவ் வெவ்விகுடியிற் பிறந்தோ னாவன்; "எவ்வி தொல்குடிப் படீஇயர்" (புறம் : உ0உ) எனக் கபிலர் கூறுதல் காண்க. மிழலை எனப் பெயருடைய தொரு சிறுநாடும், அந் நாட்டகத்து மிழலை, நீடூர், உறத்தூர் ஆய ஊர்களும் எவ்வியின் ஆட்சிக்குட்பட்டன வாம்; மிழலை, நால்வேறு வளங்களை நனிமிகக் கொண்டது; நெல்லரியும் தொழில் மேற்கொண்ட அந் நாட்டு உழவர், ஞாயிற்றின் வெப்பம் தாங்க ஒண்ணாத காலத்தே, கடலிற் புகுந்தாடி வெப்பம் ஒழிந்து களிப்புறுவர்; வலிய மீன் படகேறிக் கடலிடையே சென்று தொழிலாற்றிக் கரை யடைந்த பரதவர், கள்ளுண்டு களிப்பதும், குரவையாடி மகிழ்வதும்ஆய மனநிறை வாழ்வினராவர். கடல்அலை அளிக்கும் நீர்த் துவலையினாலேயே தழைத்து வளர்ந்த புன்னை மலரானாய கண்ணி சூடிய மைந்தர், வளையணிந்து வனப்புடையராய மகளிரொடு கைகோத்து, ஆடிமகிழ்வர் கடல்முள்ளிப் பூவாலாகிய மாலையணிந்த மகளிர், பனைநுங்கி னின்றும் பெற்ற இனிய நீரையும், கரும்பைப் பிழிந் தெடுத்த இனிய சாற்றையும், தெங்கின் இனிய இள நீரையும் ஒன்று கலந்து உண்டு, கடல்புக்கு ஆடி மகிழ்வர். இத்தகு வளமெலாம் நிறையக் கொண்ட ஊர்களால் நிறைந்த உயர்வுடையது மிழலைச் சிறுநாடு.

"நெல்லரியும் இருந்தொழுவர்
செஞ்ஞாயிற்று வெயில் முனையின்,
தெண்கடல் திரைமிசைப் பாயுந்து;
திண் திமில் வன்பரதவர்,

வெப்புடைய மட்டுண்டு
தண்குரவைச் சீர்தூங்குந்து:
தூவற் கலித்த தேம்பாய் புன்னை
மெல்லிணர்க் கண்ணி மிலைந்த மைந்தர்
எல்வளை மகளிர் தலைக்கை தரூஉந்து;
வண்டுபட மலர்ந்த தண்ணறுங் கானல்
முண்டகக் கோதை ஒண்டொடி மகளிர்
இரும்பனையின் குரும்பை நீரும்,
பூங்கரும்பின் தீஞ்சாறும்,
ஓங்குமணல் குவவுத் தாழைத்
தீநீரோடு உடன் விராஅய்,
முந்நீர் உண்டு, முந்நீர்ப் பாயும்
தாங்கா உறையுள் நல்லூர் கெழீஇய
ஓம்பா ஈகை மாவேள் எவ்வி
புனலம் புதவின் மிழலை.'' (புறம்: ௨௪)

''மிழலைநாட்டு மிழலையே, வெண்ணிநாட்டு மிழலையே'' என வரும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தான், மிழலை எனப் பெயருடையதொரு சிறு நாட்டகத்தே, அப் பெயரே உடையதொரு சிற்றூர் உண்டு என்பது புலனும்; மிழலை நாடு, சோணாட்டின் கடற்கரைப் பகுதியை ஒட்டிய நாடாம் என்ப; திருப்பெருந்துறையைச் சார்ந்த பகுதி, மிழலைக் கூற்றத்தைச் சேர்ந்ததாகத் திருவாலவாயுடையார் புராணம் கூறுவதால், மிழலைச் சிறுநாடு, பாண்டிநாட்டின் சில பகுதியையும் பண்டு பெற்றிருந்தது என்பது பெறப் படும். மிழலைக்கூற்றம், சோணாட்டகத்தது என்பது பெறப்படவே, அந் நாட்டகத்தது எனக் கூறப்பெறும் மிழலையும், நீடூரும், அச் சோணாட்டின் பாடல் பெற்ற நகரங்களாகிய திருவீழிமிழலையும், திருநீடூருமே ஆம் எனக் கொள்க. இன்று நீடாமங்கலம் என வழங்கும் இடமே நீடூராதலும் கூடும்; மிழலைக் கூற்றத்தைச் சேர்ந்ததாகக் கூறப்படும் உறத்தூர், நீடாமங்கலத்தை அடுத்திருப்பது, இவ் வுண்மையை உறுதி செய்தலும் காண்க.

நிற்க, எவ்விக்கு உரிய ஊராக, நீழல் என்பதும் ஒன்று உண்டு. அந் நீழற்கண், மருதமரங்கள் செழிக்க வளர்ந்து சிறந்து தோன்றும் களத்தே, தாட்போரைப் பிரித்துக் கடாவிட்ட உழவர், பின்னர்க் கடாக்களைக் கட்டவிழ்த்து விடுத்து, கடுங்காற்று எறியக் கண்டு நெல்லினைத் தூற்றினராக, காற்றிற் பரந்துசென்ற துரும்புகள் எல்லாம், அக் களத்தே அடுத்துள்ள உப்பளங்களில் சென்று படிந்துவிடவே, அதனால், தம் உப்பளம் உறுபயன் அழிந்தமை கண்ட பரதவர், சினங்கொண்டு சென்று, கீழே கிடக்கும் சேற்றுக் குழம்பினை வாரி உழவர்மீது எறிந்து செய்யும் போரை, நரை திரையோடு நல்லறிவும் நயம் வரப்பெற்ற அந் நாட்டு முதியோர் முன்னின்று போக்கிப் பரதவர்க்குத் தேறல் அளித்துச் சினம் ஒழிந்து போகச் செய்வர் என்றும் கூறுவர் குடவாயிற் கீரத்தனார். நீழல் என்பது வேறன்று; நிழல் என்பதன் திரிபே நீழல் என்று கூறுவர் ஆராய்ச்சியாளர்.

"தாழ்சினை மருதம் தகைபெறக் கவினிய
நீர்சூழ் வியன்களம் பொலியப் போர்பு அழித்துக்
கள்ளார் களமர் பகடுதளை மாற்றிக்
கடுங்காற் றெறியப். போகிய துரும்பு உடன்
காயல் சிறுதடி கண்கெடப் பாய்தலின்,
இருநீர்ப் பரப்பின் பனித்துறைப் பரதவர்
தீம்பொழி வெள்ளுப்புச் சிதைத்தலின் சினைஇக்
கழனி உழவரொடு மாறெதிர்ந்து மயங்கி
இருஞ்சேற் றள்ளல் எறிசெருக் கண்டு,
நரைமூ தாளர் கைபிணி விடுத்து
நனைமுதிர் தேறல் நுளையர்க்கு ஈயும்
பொலம் பூண் எவ்வி நீழல்." (அகம் : ௩௬௬)

எவ்வி, "பல்வேல் எவ்வி," (அகம் : ௧௨௬) எனவும், "வாய்வாள் எவ்வி," (அகம்: ௧௧௫, ௨௬௬) எனவும் அழைக்கப்பெறுதலை நோக்கின், அவன் விற்போரும் வாட்போரும் வல்லனவன் என்பது பெறப்படும்; எவ்வி, இவ்வாறு பெரும் படையுடையனேயாயினும், தன் படைப்

பெருமையால், அறிவிழந்து, மாற்றூர் படைப்பெருமை மதியா மாண்பிலானுகான். எவ்விக்கு அன்னி என்பானெரு ஆருயிர் நண்பன் இருந்தான். அவ் வன்னி, திதியன் என்பானெடு பகை கொண்டான்; அத் திதியன் காவல் மரமாம் புன்னையை அழிக்கவும் விரும்பினுன்; இஃதறிந்தான் எவ்வி; திதியன் ஆற்றலை அறிவான் அவன் ஆகவே, அன்னியின் செயல் அடாது; அதனுல் அவனுக்கே அழிவுண்டாம் என உணர்ந்தான்; அவ் வினையை மேற்கொள்ளாவண்ணம் அன்னிக்குப் பலப்பல கூறித் தடுத்தான். ஆனுல், அன்னி, அவன் உரையைக் கேளானுயினுன்; அதன்பயன், திதியனுல் அழிவுண்டான். இது நிகழும் என அறிந்து அறிவுரை கூறிய எவ்வியின் அறிவு நுட்பம், அனைவரும் பாராட்டும் அருமையுடைத்தன்ருே?

''பயங்கெழு வைப்பின் பல்வேல் எவ்வி,
நயம்புரி நன்மொழி அடக்கவும் அடங்கான்
பொன்னிணர் நறுமலர்ப் புன்னை வெஃகித்
திதியனெடு பொருத அன்னி போல
விளிகுவை கொல்.'' (அகம்: கஉ௬)

ஆற்றலும், அறிவும் உடைய உயர்ந்தோனுய் விளங்கிய எவ்வி, கொடைக்குணம் குறைவறப்பெற்ற கோனுகவும் விளங்கினுன். தனக்கென ஒரு பொருளையும் உரிமை கொள்ளாது, உடைமை அனைத்தையும் பாடி வருவார்க்கே பரிசளிக்கும் பேருள்ளம் உடையான் எவ்வி என மாங்குடி கிழாரும், பாணர் குடும்பம் பல, அவனை அண்டி வாழ்ந்தன; அவன் அவர் அனைவரையும் புரக்கும் தலைவனுயினன் என வெள்ளெருக்கிலையாரும் அவனைப் பாராட்டினர்:

''ஓம்பா ஈகை மாவேள் எவ்வி.'' (புறம்: உ௪)
''இரும்பாண் ஒக்கல் தலைவன், பெரும்பூண்
போரடு தானை எவ்வி.'' (புறம்: உ௩௩)

எவ்வி இவ்வாறு இறப்ப உயர்ந்து வாழ்தலை அக்காலப் பேரரசர் பொருராயினுர்; மேலும், அவன் மிழலை

நாட்டு வளம், அவர் உள்ளத்தே ஆசைக்கனலை மூட்டிற்று; எவ்வி, அரசாண்டிருந்த காலத்தே, பாண்டிநாட்டு அரியணையில், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் வீற்றிருந்தான். இயல்பாகவே போர் வெறி கொண்டவன் அவன்; எவ்வியின் புகழையும், மிழலை வளத்தையும் அறிந்த அவன், எவ்வியை அழித்து, மிழலையைக் கைப்பற்றத் துணிந்தான். இளமையிலேயே ஏழரசரை வென்ற வீறுடையானாய பாண்டியன் படையை அழிக்கும் ஆற்றல், எவ்வி படைக்கு இல்லாது போயிற்று. எவ்வியும் இறந்தான்; அவன் மிழலையும் பாண்டியன் கைப்பட்டது.

> "யாழிசை மறுகின் நீடூர் கிழவோன்
> வாய்வாள் எவ்வி ஏவல் மேவார்
> நெடுமிடல் சாய்த்த பசும்பூட் பொருந்தலர்."
>
> (அகம் : உசசு)

> "ஓம்பா ஈகை மாவேள் எவ்வி
> புனலம் புதவின் மிழலையொடு......
> ..........................................
> குப்பை நெல்லின் முத்தூறு தந்த
> கொற்ற நீள்குடைக் கொடித்தேர்ச் செழிய!"
>
> (புறம்: உச)

எவ்வி இறந்தான் என்பதைக் கேட்டனர் பாணர். தம்மைப் புரந்த பெருவள்ளல் இறந்தானாகவே, தம் இன்ப வாழ்வு அழிந்தது எனக் கொண்டனர்; தம் தலையில் மலர்சூடி வாழும் மகிழ்ச்சியை மறந்தனர்; தம்மைப் புரப்போன் இறந்தானாகவே, தம் பாடல் தொழில் இனிப் பயனுறாது என்பதை உணர்ந்த அப் பாணர், தம் கையாழால் இனிப் பயன் இல்லை எனக் கொண்டனர்; பயனற்ற யாழைக் கைக்கொண்டிருப்பதினும், அதை அழித்துவிடுவதே அறிவுடைமையாம் என எண்ணினர்; உடனே அதை ஒன்றிரண்டாக ஒடித்துப்போட்டுப் புலம்பிச் சென்றனர்.

"எவ்வி இழந்த வறுமையாழ்ப் பாணர்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்று." (குறுந்: ௧௯)

"எவ்வி வீழ்ந்த செருவில் பாணர்
கைதொழு மரபின் முன் பரித்திடூஉப் பழிச்சிய
வள்ளுயிர் வணர்மருப்பு." (அகம்: ௧௧௫)

எவ்வியின் பிரிவாற்றாது வருந்திய புலவர்களுள், வெள்ளெருக்கிலையாரும் ஒருவர்; "களம் சென்று கடும் போர் ஆற்றிய எவ்வி, முகத்தினும், மார்பினும் புண் பல பெற்று வீழ்ந்தான்," எனப் போரிடை யிருந்துவந்த செய்தியை வெள்ளெருக்கிலையார் விடியற்காலத்தே கேட்டார்; வேள் எவ்வியின், வில்லாண்மையும், வாள் வன்மையும் உணர்ந்தவர் வெள்ளெருக்கிலையார். ஆகவே, அச் செய்தியை உண்மையென உட்கொள்ள மறுத்தது அவர் உள்ளம். ஆயினும், அவர் மனம் அமைதி கொள்ளவில்லை; கேட்ட இச் செய்தி பொய்யாக வேண்டும், பொய்யாக வேண்டும் என விழைந்தது அவர் உள்ளம்; அவ் வேட்கை உந்தக் களம் சென்றார்; ஆனால், அந்தோ! ஆங்கு அவர் கண்ட காட்சி, அவர் உள்ளத்தே உறுதுயர் அளித்தது; கணவன் இறக்கக் கைம்மை நோன்பு நோற்கும் அவன் மனைவி, அவன் கிடந்து உயிர் நீத்த இடத்தை மெழுகிப் புல்லைப்பரப்பி அதன்மீது பிண்டம் வைத்துப் படைத்து வழிபடுவதைக் கண்டார்; எவ்வி உயிரோடு வாழ்ந்த காலத்தே, உலகமே ஒருங்குதிரண்டு வந்தாற்போல் வருவார் அனைவர்க்கும், திறந்த வாயிலை உடையனாய் வழங்கிப் பலரோடு இருந்து உண்ட காட்சியைக் கண்டுகண்டு மகிழ்ந்தவர் வெள்ளெருக்கிலையார்; அக் கண்களால், இக் காட்சியையும் காண நேர்ந்ததே எனக் கண்ணீர்விட்டார்; அதைக் கண்டு, வருந்தி வாழ்வதினும், மாண்டு மறைந்து போதலே நன்றாம் என்று எண்ணி அப்பாற் சென்றார். என்னே அவர் அன்பு! அவர் அன்பைக்கவர்ந்த எவ்வியின் செவ்விய பண்பே பண்பு!

"பொய்யா கியரோ! பொய்யா கியரோ!

..................................................

இரும்பாண் ஒக்கல் தலைவன், பெரும்பூண்
போரடு தானை எவ்வி மார்பின்
எஃகுறு விழுப்புண் பலவென
வைகுறு விடியல் இயம்பிய குரலே.''

“நோகோ யானே ! தேய்கமா காலை !
பிடியடி யன்ன சிறுவழி மெழுகித்
தன்னமர் காதலி புன்மேல் வைத்த
இன்சிறு பிண்டம் யாங்குண் டனன்கொல்
உலகுபுகத் திறந்த வாயில்
பலரோடு உண்டல் மரீஇ யோனே.''

(புறம் : உருரு, உருசஅ)

## உஎ. எழினி

எழினி எனும் பெயருடையார் பலராவர்; தகடூர் ஆண்ட அதியமான் நெடுமானஞ்சியும் எழினி என அழைக்கப் பெறுவன்; அவன் மகனும் எழினி என அழைக்கப் பெறுவன்; அதனால், இவன், அவ் வதியர்குடியோடு தொடர்புடையனுவன் என்பது புலப்படும்; இவ் வெழினியைப் பாடிய மாமூலனார், இவனுக்குக் கண்ணன் எழினி எனப் பெயர் கொடுத்து அழைப்பர்; இவன், திருமுதுகுன்றத்தைத் தன் ஆட்சியிடமாகக்கொண்டு வாழ்ந்திருந்தான்; எழினி, தன்னை எதிர்த்துவந்தாரை வென்று துரத்தும் வீறுடையனுவன். மத்தி என்பானோடு சோழ அரசின்கீழ்ப் பணியாற்றிய எழினி, அச் சோழ அரசன் மேற்கொண்ட யானை வேட்டை ஒன்றிற்கு வந்து துணை செய்யாது போயினான்; அதனால் சினங்கொண்ட சோழ வேந்தன், மத்தியை ஏவ, அவன் சென்று, எழினியைப் போரில் வென்று கைப்பற்றி, அவன் பல்லைப் பறித்து வந்து, வெண்மணி எனும் ஊரின் வாயிற்கதவிற் பதித்தான். பின்பொருகால், பாண்டியன் நெடுஞ்செழியனைப் பகைத்துச் சென்ற சேரனோடும், சோழனோடும், திதியன், எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன் எனும் நால்வரோடும் தானும் சென்று, அச்செழியனைத் தலையாலங்கானத்தே எதிர்த்துப் போரிட்டு, அவ்வறுவரோடும் அழிந்தான்.

"முனையெழ
முன்னுவர் ஓட்டிய முரண்மிகு திருவின்,
மறமிகு தானைக் கண்ணன் எழினி
தேமுது குன்றம்." (அகம்: கசுஎ)

"குழியிடைக் கொண்ட கன்றுடைப் பெருநிரை
பிடிப்டு பூசலின் எய்தா தொழியக்
கடுஞ்சின வேந்தன் ஏவலின் எய்தி,
நெடுஞ்சே ணாட்டில் தலைத்தார்ப் பட்ட

கல்லா எழினி பல்லெறிந் தழுத்திய
வன்கட் கதவின் வெண்மணி வாயில்
மத்தி.''

(அகம்: உகக)

"கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
ஆலங் கானத்து அகன்தலை சிவப்பச்
சேரல், செம்பியன், சினங்கெழு திதியன்
போர்வல் யானைப் பொலம்பூண் எழினி

.................................................

எழுவர் நல்வலம் அடங்க, ஒருபகல்
முரசொடு வெண்குடை அகப்படுத்து உரைசெலக்
கொன்று களம் வேட்ட ஞான்று.''

(அகம்: நகூ)

## உஅ. எழினியாதன்

எழினியாதன், வாட்டாறு எனும் ஊரில் வாழ்ந்த வேளிர் தலைவனாவன்; எழினியாதன், வேளிர்வழி வந்தவன்; வேளிர், பாண்டிநாட்டிலேயே யல்லால், ஏனைச் சேர, சோழ நாடுகளிலும் வாழ்ந்துள்ளனராதலாலும், வாட்டாற்றை அடுத்து வாழ்ந்தோராகக் கூறப்பெறும் கோசர், பாண்டியர் படையில் பணியாற்றியுள்ளனராயினும், அன்னார், தென் பாண்டி நாட்டிலும் வாழ்ந்தனர் என்பதை நாட்டவல்ல சான்று எதுவும் கிடைத்திலது ஆதலாலும், வாட்டாறு எனும் பெயர் கொண்ட ஊர்கள், சோணாட்டிலும், தென் பாண்டி நாட்டிலும் உள்ளன எனினும், எழினி ஆதன் வாழ்ந்த வாட்டாறு, சோணாட்டு வாட்டாறே எனக் கொள்வர் ஆராய்ச்சியாளர். இவ் வாட்டாறு, தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டத்தில் உளது என்றும், இப்போது, வாட்டாற்றுக் கோட்டை, வாட்டாத்திக் கோட்டை என மருவி வழங்குகிறது என்றும் கூறுப.

வளம் நிறைந்த பேரூர், வாட்டாறு; அந்நாட்டு நீர் நிலைகளின் கீழிடமெல்லாம் மீன்களாலும், மேலிட மெல்லாம் மலர்களாலும் நிறைந்துகிடக்கும்; வடிகால் களால் சூழப்பெற்ற அந்நாட்டு நெல்விளை நன்செய்கள், பறையறைந்து ஓட்டும் அளவு பறவைகள் கூட்டமாகக் கூடுகட்டி வாழும் வளம் உடையன; கடற்கரைக்கண், இரைதேர்ந்துண்ணும் இனப்பறவைகள் எழுந்தோடுமாறு, சிறுமணல்களை அள்ளித் தூவும் ஆங்கு வீசும் கடற் காற்று; அவ்வூர்வாழ் கோசர் முதலாம் மக்கள், மட்டுண்டு மகிழ்ந்து, குரவை முதலாம் கூத்தாடி இன்புறுவர்.

இத்தகு வளஞ்சால் பெருநகரைப் பெற்று ஆளும் எழினியாதன், ஊக்கம் அற்றார்க்கு உறுதுணையாய் நின்று காக்கும் உரனும், அறிவுரையளித்து ஆகும் வழிகாட்டும் ஆருயிர் நண்பரை இல்லாரை, ஆருயிர் நண்பனாய் அமைந்து காக்கும் அறிவுத்திறனும் உடையனாவன; இவ்வாறு ஆண்மையும், அறிவும் உடையனாய், அறிஞர் போற்ற வாழும் வேளிர் வழிவந்த எழினியாதன், தன்னைப் பாடி வருவார்க்கு வரையாது வழங்கும் வள்ளியோனும்

ஆயினன்; "பரிசில் வேண்டி, வாட்டாறு நோக்கி வந்தார்க்குக் கொழுத்த இறைச்சியைச் சுட்டுச் சுவையுடைய தாக்கி அளித்தும், வடித்தெடுத்த மதுவழங்கியும் வழிபாடு செய்வன்; நெய்யும் முயற்கறியும் நிறையப் பெய்து ஆக்கிய அறுசுவை உணவளிப்பன்; திறந்தது திறந்தவாறே, என்றும் அடையாப் பெருவாயில் உடையதாக விளங்கும் தன் நெற்கரிசையினின்றும் நெல்லை விரும்பிய விரும்பி யாங்கே வாரிவாரித் தருவன்" என்றெலாம் எழினியாதன் புகழ்தோன்றப் பாடிப் பாராட்டியுள்ளார், மாங்குடி கிழார் எனும் மாபெரும் புலவர்:

"கீழ்நீரான் மீன் வழங்குந்து;
மீநீரால் கண்ணன்ன மலர் பூக்குந்து,
கழிசுற்றிய விளைகழனி,
அரிப்பறையால் புள்ளோப்புந்து;
நெடுநீர் தொகூஉ மணல் தண்கால்
மென்பறையால் புள்ளிரியுந்து
நனைக்கள்ளின் மனைக்கோசர்
திந்தேறல் நறவு மகிழ்ந்து.
தீங்குரவைக் கொளைத்தாங்குந்து:
உள்ளி லோர்க்கு வலியாகுவன்:
கேளி லோர்க்குக் கேளாகுவன்:
கழுமிய வென்வேல் வேளே;
வளநீர் வாட்டாற்று எழினி யாதன்
கிணையேம் பெரும!
கொழுந்தடிய சூடென்கோ!
வளநனையின் மட்டென்கோ!
குறுமுயலின் நிணம்பெய்தந்த
நறுநெய்ய சோறென்கோ!
திறந்து மறந்த கூட்டுமுதல்
முகந்து கொள்ளும் உணவென்கோ
அன்னவை பலபல......வருந்திய
இரும் பேரொக்கல் அருந்தெஞ்சிய
அளித்துவப்ப ஈத்தோன்."

(புறம்: ௩௯௬)

## உகூ. ஏறைக்கோன்

தமிழகம், நிலத்தின் இயல்பு, நிலத்துவாழ் மக்கள் இயல்புகளுக்கேற்ப, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை எனப் பல பிரிவாகப் பிரிந்து கிடந்தது; தமிழகம் அனைத்தையும், சேர, சோழ, பாண்டியராகிய பேரரசர் மூவர் ஆண்டு வந்தனர் எனினும், அவர்கள் காலத்திலேயே, அவர்கட்கு அடங்கியும், அடங்காமலும், மேற்கூறிய நிலங்களில், அவ்வந் நிலங்கட்குரிய மக்கள் தலைவர் சிலர் இருந்தும் ஆண்டு வந்தனர்; காடும், காடு சார்ந்த நிலமும் ஆய குறிஞ்சி நிலத்தை, அந் நிலத்து வாழ் குறவர் தலைவனாய் ஆண்டு வந்தாருள் ஏறை என்பானும் ஒருவன். ஏறைக்குரிய நாடு, நீருண்டு செல்லும் மேகங்களை நின்று தடுக்கும் உயர்வுடைப் பெருமலைகளைக் கொண்டது; அம் மலைகள், மானும், புலியும் வாழ்தற்கேற்ற மரச்செறிவுடையன; மேய்ந்து, மாலைக் காலத்தே தம் இருக்கை நோக்கிச் செல்லும் மான் கூட்டத்தில் தான் விரும்பும் பெண்மான் காணப்பெறாமை கண்டு கலங்கிய கலைமான், வழி தவறிய அப் பெண்மானை அழைத்தற்பொருட்டுக் குரல் எழுப்பின, அக் குரல் ஒலி, யாண்டிருந்து வருகிறது என்பதை, இரை தேடிப் புறப்படும் புலி, தான் வாழும் மலைமுழையினின்றே கூர்ந்து கேட்கும் கொடுமை யுடையது அக் காடு. அக் கானகநாட்டுத் தலைவனாகிய ஏறை, தான் கையேந்திய வில்லைக் கடைகொள வலித்துப் பயில்வதால் அகன்ற மார்புடையவன்: வில்லோடு, பகையைத் தப்பாது கொல்லவல்ல வேலும் உடையவன்; காந்தட் பூக் கண்ணி அணிந்து காண்பார்க்கு மகிழ்வூட்டும் கவினும் உடையவன்; இவையே யல்லால், போற்றற்குரிய பண்புகள் பலவும் அவன்பால் பொருந்திக் கிடந்தன.

நம்மோடு நட்புக்கொண்டு நெடுநாள் பழகி வாழ்பவர், ஒரோ வழித் தவறுசெய்துவிட்டால், அவர் தவறுசெய்துவிட்டனரே என்று வெகுண்டு, அவரோடு அன்றுவரை

கொண்டிருந்த தொடர்பை மறந்து, அவரைப் பகைத்துக் கொண்டு, அவர்க்குத் துயர் தருதல் கூடாது; அது சான்றோர் செயலும் அன்று; "அழிவந்த செய்யினும் அன் பறார் அன்பின், வழிவந்த கேண்மை யவர்."

இரப்பாரைக் கண்டு எள்ளி நகைத்தலேயும், பிறர் வறுமை கண்டு வாட்டம் கொள்ளாது, அதைத் தன் வாழ் வின் உயர்விற்குப் பயன்படுத்திக் கொள்வதையுமே இன் றைய உலகில் யாண்டும் காண்கிறோம். இந்நிலை இருப்ப தாலேயே, உலகம் அமைதி இழந்து அல்லல் உறுகிறது; "நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை" என்ற உண்மையை உணர்ந்து தன்னைப்போன்றே, உலகோர் அனை வரும் உயர்ந்து வாழ வேண்டும் என்று விரும்பி, அதற் காக உழைப்பதே தனக்கும் பிறர்க்கும் நலம் தரு பெருஞ் செயலாம் என்பதை உணர்ந்தவர் மட்டுமே வாட்டம் ஒரு பாலும், ஆட்டம் ஒருபாலும், வறுமை ஒருபாலும், வளமை ஒருபாலும், தாழ்வு ஒருபாலும், வாழ்வு ஒரு பாலும் இருப் பது காண, உளம் நடுங்குவார்; அந் நடுங்கும் உள்ளம், எல்லா மக்கட்கும் உண்டாயின், உலகம் அன்றே உய்வு பெற்று உயர்ந்துவிடும்.

"எப்படியாவது வெற்றிபெற வேண்டும்; எம் முறை யைக் கையாண்டாவது வெற்றி காண வேண்டும்" என எண்ணுவது பேடிச் செயல்; இன்றைய உலகப் போர்த் தலைவர்கள், இதையே போர்த் தந்திரம் எனப் போற்றுகின் றனர்; உண்மை வீரன, வெற்றிதரும் வழி, பழி தரும் வழியாக இருத்தல் கூடாது என்பதில் கருத்துடையனுவன்; "கான முயல் எய்த அம்பினில் யானை, பிழைத்த வேல் ஏந்தல் இனிது" என்ற எண்ணம் அவன் உள்ளத்தே தோன்றுதல் வேண்டும்; "அழியுநர் புறக்கொடை அயில் வேலோச்சாக் கழிதறு கண்மை"யைக் காதலிக்க வேண்டும் அவன். அதுவே உண்மை வீரனுக்கு அழகாம்.

இம் முப்பெருங் குணங்களால் சிறந்தார் ஒருவர் எவர்க்கும் அஞ்ச வேண்டுவதில்லை; எவர்க்கும் பணிந்து

போக வேண்டுவதும் இல்லை; எங்கும் அவர் பெருமித மாகவே வாழலாம்; அரசரும் அறிஞரும் கூடிய அவையி லும் அவர் நிலை உயர்ந்தே திகழும்; அரசரும் மதிக்க வாழும் பெரு வாழ்வு அவர்க்கே உண்டாம்.

ஏறைக்கோன்பால், முன்னர்க் கூறிய முக்குணங்களும் நிறைந்து நின்றன ஆகவே, அவன் அரசவை கண்டும் அஞ் சாது வாழும் வாழ்வுடையனாயினன்; ஏறைக்கோன் சிறப் பையும், அவன் கானக நாட்டின் நல்லியல்பையும், அவன் குடியிற் பிறந்த பெண்பாற் புலவராய குறமகள் இளஎயினி யார், தாம் பாடிய பாட்டொன்றில் வைத்துப் பாராட்டி யுள்ளார் :

"தமர்தம் தப்பின் அதுநோன் றல்லும்,
பிறர் கையறவு தான் நாணுதலும்,
படைப்பழி தாரா மைந்தினன் ஆகலும்,
வேந்துடை அவையத்து ஓங்குபு நடத்தலும்
நும் மோர்க்குந் தகுவன அல்ல; எம்மோன்
சிலசெல மலர்ந்த மார்பின், கொலைவேல்,
கோடல் கண்ணிக், குறவர் பெருமகன்,
ஆடுமழை தவிர்க்கும் பயங்கெழு மீமிசை
எற்படு பொழுதின் இனந்தலை மயங்கிக்
கட்சி காணாக் கடமான் நல்லேறு
மடமான் நாகுபிணை பயிரின், விடர்முழை
இரும்புலிப் புகர்ப்போத்து ஓர்க்கும்
பெருங்கல் நாடன் எம் ஏறைக்குத் தகுமே."

(புறம்: கரு௫)

## ௯௦. ஒல்லையூர்கிழான் மகன் பெருஞ்சாத்தன்

புதுக்கோட்டைத் தனியரசின் கீழிருந்த ஊர்களுள் ஒல்லையூர் என்பதும் ஒன்று; இப்போது, அது ஒலிய மங்கலம் என்ற பெயரால் வழங்குகிறது. சோணாட்டிற்கும், பாண்டிநாட்டிற்கும் எல்லையாக ஓடும் வெள்ளாற்றின் தென்கரை நாடுகள் தென்கோனாடு எனவும் வடகரை நாடுகள் வடகோனாடு எனவும் வழங்கப் பெறும். தென்கோனாட்டின் மேலைப்பகுதியே ஒல்லையூர் நாடாம். அவ்வொல்லையூரில் வாழ்ந்திருந்தான் வீரன் ஒருவன்; ஒல்லையூர் கிழான்மகன் பெருஞ்சாத்தன் என அழைக்கப்பெற்ற அவ் வீரன், தன் ஆண்மை தோன்ற, ஆடவர் பலரை வென்றவன்; அவ் வெற்றிக்குத் துணைபுரிந்த வேற்படையுடையான்; வீரர் பலர் சூழ வாழ்ந்த அப் பெருஞ்சாத்தன், பேரன்புடையராய மகளிர் பலரை மணந்தும் இருந்தான்; தன்னைப் பாடிவரும் பாணர்க்குப் பரிசில்பல நல்கும் பேருள்ளம் உடையான்; இவ்வாறு பெருஞ்சாத்தன், பல்லாற்றானும் சிறந்து விளங்கவே, அவன் நாட்டு வாழ் மக்களும், அவன் நாடு நோக்கி வருவார் பிறரும், அவன் நாட்டில் மலர்ந்து மணங்கமழும் முல்லை மலர் சூடி மகிழ்ந்து வாழ்ந்தனர்; அத்தகு வாழ்வால் வனப்புற்று விளங்கிய அவ் வொல்லையூர்க்கும் தொல்லை வந்துற்றது; பெருஞ்சாத்தன், பிறவாப் பெருநிலை பெற்றுவிட்டான்; அவன் பிரிவினைப் பொறாத, அவன் வீரரும் பிறரும் மகிழ்ச்சி இழந்தனர்; மலர்சூடி வாழும் மனம் நிறை வாழ்வை வெறுத்தனர்; அந்நிலையிலும், தன் இயல்பிற் குன்றாது பூத்துக் கமழும் முல்லையைக் கண்ட புலவர் ஒருவர், "அந்தோ! முல்லையே! அணிவாரைப் பெறமாட்டாத நீ, ஒல்லையூர் நாட்டில் ஏனோ மலர்கின்றனை?" என்று கூறி முல்லைக்கு வருந்துவார் போல், ஒல்லையூர்கிழான்மகன் பெருஞ்சாத்தனுக்கு வருந்தியுள்ளார்:

"இளையோர் சூடார்; வளையோர் கொய்யார்;
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான்; பாடினி அணியாள்;
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே."

(புறம்: உ௪உ)

## ௬௧. ஓய்மான் வில்லியாதன்

தென்னார்க்காடு மாவட்டம் திண்டிவனம் வட்டத்தை யும், செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டத் தென் பகுதியையும் தன்கண்கொண்ட நாடு, தமிழ்ச்சங்ககாலத்தே ஓய்மானாடு என்ற பெயர் பெற்றிருந்தது: அதியமான் நெடுமானஞ்சி பிறந்த அதியர் குடியும், பேகன் பிறந்த ஆவியர் குடியும்போன்ற பழந்தமிழ்க் குடிகளுள் ஓவியர் எனும் குடியும் ஒன்றும்; அதியர் குடிவந்த நெடுமானஞ்சி, அதியமான் என அழைக்கப் பெறுதலேபோல், ஓவியர் குடிவந்த அரசனும் ஓவியர்மான், ஓவியமான், ஓய்மான் என அழைக்கப்பெறுவன். அதைப்போன்றே ஓவியர் இருந் தாண்ட நாடும், ஓய்மான்நாடு எனவும் ஓய்மானாடு எனவும் அழைக்கப்பெறும்.

ஓய்மானாடு, ஐந்நில வளமும் அமையப்பெற்ற அழகிய நாடு; அந் நாடு, மாவிலங்கை, எயிற்பட்டினம், கிடங்கில், வேலூர், ஆமூர்போன்ற பெரிய நகரங்களைத் தன்னகத்தே கொண்டிருந்தது; இவற்றுள் நாட்டின் தலைநகராம் சிறப் புடையது மாவிலங்கை. மாவிலங்கை, நீர்வளமும், நில வளமும் நிறையக்கொண்ட மருதநிலத்து மாநகரமாகும்; அவ்வூரை யடுத்து ஓடிவரும் ஆறு, தன்கண் புகுந்து நீராடும் மகளிர், பற்றி நீந்தும் புணையாகப் பயன்படுமாறு சந்தனக் கட்டைகளையும், அகிற்கட்டைகளையும், சுரபுன்னை யின் நறுமலர்களோடு அடித்துக் கொணர்ந்து ஒதுக்கும். அவ்வூர்வாழ் இளமகளிர், கோரைக்கிழங்கு தேடிப் பன்றி உழுத சேற்று நிலத்தில் ஆடப்புகுந்து, அந் நிலத்தைக் காலால் கிளறியவிடத்து, ஆண்டு ஆம்பற்கிழங்கும், யாமை முட்டையும் அகப்படக் கண்டு அகமகிழ்வர். விளைநிலத் துட் புகுந்து நெல்லரியும் வயல் உழவர், தம் கூரிய அரி வாள், அரிந்து அரிந்து வாய் மழுங்கியவிடத்து, மேலும் விரைந்து தொழிலாற்றுவான் வேண்டி, தம் அருகே கிடக்கும் யாமையின் வளைந்த முதுகோட்டைத் தீட்டுக் கல்லாகக்கொண்டு தீட்டுவர்: அத்துணை மிகுவளம் உடை யது மாவிலங்கை.

"நறுவீ நாகமும், அகிலும், ஆரமும்,
துறையாடு மகளிர்க்குத் தோட்புணை யாகிய
பொருபுனல் தரூஉம் போக்கரு மரபின்
தொன்மா விலங்கைக் கருவொடு பெயரிய
நன்மா விலங்கை." (சிறுபாண் : ககசு-கஉ0)

"ஓரை யாயத்து ஒண்டொடி மகளிர்
கேழல் உழுத இருஞ்சேறு கிளைப்பின்
யாமை ஈன்ற புலவுநாறு முட்டையைத்
தேன்நாறு ஆம்பல் கிழங்கொடு பெறூஉம்
இழுமென ஒலிக்கும் புனலம் புதவின்
பெருமா விலங்கை." (புறம் : களசு)

"நெல்லரி தொழுவர் கூர்வாள் மழுங்கின்
பின்னை மறத்தோ டரியக் கல்செத்து
அள்ளல் யாமைக் கூன்புறத்து உரிஞ்சும்
நெல்லமல் புரவின் இலங்கை." (புறம் : ௩எசு)

எயிற் பட்டினம், கடற்கரையை அடுத்துள்ள நெய்தல் நிலத்து நகராம்; மதிலால் பெயர்பெற்ற இம் மாநகர், குளிர்ந்த உண்ணுநீர்நிலைகளையும், நீலமணிபோலும் நீர் நிறைந்த உப்பங்கழிகளையும் உடையது; கிடங்கில், கிடங்கால் என இக்காலத்து வழங்கப் பெறுகிறது. சிதைந்த அகழியும், இடிந்த கோட்டையும், ஈண்டு இன்றும் உள. மலர் நிறைந்த மரச்சோலைகளால் மாண்புற்றது இக் கிடங்கில்; ஓய்மாநாட்டு ஊர்களுள் கிடங்கிலும் ஒன்று எனக் கல்வெட்டுக்களும் கூறுகின்றன; (S. I. I. Vol. III; Part II; Page 201). உப்பு வேலூர் என இன்று அழைக்கப்பெறும் வேலூர், வேல்போலும் வடிவுடைய மலர்கள் மணக்கும் கேணிகளை உடையது எனக் கூறுவர் புலவர். ஓய்மாநாடாண்ட அரசர்களுள் ஒருவனாய நல்லியக் கோடன், தன் பகை மிகுதிகொண்டு அஞ்சி முருகனை வழிபட்டவழி, அவன், 'இக் கேணியிற் பூவை வாங்கிப் பகைவரை எறி,' என்று கனவிற் கூறி, அதிற் பூவை வேலாக நிருமித்தான்; இதனானே, வேலூர் என்று பெயராயிற்று," என்ற இவ்வூர் பற்றிய பழங்கதை யொன்

றும் வழங்குகிறது; ஆமூர், அந்தணர் வாழும் வளம் உடையது; அரிய காவல் நிறைந்தது; ஆழ்ந்த அகழியை யும் உடையது.

"மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய
பனிநீர்ப் படுவின் பட்டினம்."
"கிளைமலர்ப் படப்பைக் கிடங்கில்."
"திறல்வேல் நுதியிற் பூத்த கேணி
விறல்வேல் வென்றி வேலூர்."
"அந்தணர் அருகா, அருங்கடி வியனகர்
அந்தண் கிடங்கின் அவன் ஆமூர்."
(சிறுபாண் : கடுஉ-௩; கசூ0; களஉ-௩; கஅள-அஅ)

ஓய்மானுண்ட அரசர்களுள் வில்லியாதனும் ஒருவ னுவன். வில்லியாதன் வரையாது வழங்கும் வள்ளலாய் வாழ்ந்தவன். அவன் தன் நாடுநோக்கி வருவார்க்கெல் லாம், நெய்யிற் பொரித்தெடுத்த ஊன் துண்டுகளை, நல்ல அரிசிச் சோற்றோடும் கலந்து நாட்காலையில் அளிக்கும் அருள் நிரம்பிய உள்ளம் உடையனுவன்; அவனைப் பாடிய புலவர் புறத்திணை நன்னுகனார், "அவன் அவை யடைந்து, அவன் அருள்பெற்று வாழும் பெருவாழ்வே எனக்கு உண்டாகுக," என்றும், "என் நாவிடை எழும் பாட்டு ஒவ்வொன்றும், அவன் புகழ் பரவும் பாட்டுக்களே ஆகுக!" என்றும் கூறுவராயின், அவன் பெருமை யினை என்னெனப் பகர்வது!

"யானே பெறுக, அவன் தாள்நிழல் வாழ்க்கை
அவனே பெறுக, என்நாவிசை நுவறல்!

..........................................................

வில்லி யாதன் கிணையேம் பெரும
குறுந்தா ளேற்றைக் கொழுங்கண் நல்விளர்
நறுநெய் யுருக்கி நாட்சோறு ஈயா
வல்லன் எந்தை,பசி தீர்த்தல்." (புறம் : ௩௭௬)

## ௯௨. கட்டி

தமிழகத்தின் வடவெல்லைக்கண் வாழ்ந்த வீரர்களுள் கட்டி என்பானும் ஒருவன்; வேற்றுமொழி வழங்கும் வடுகநாட்டை அடுத்து வாழ்ந்திருந்த அவன் வேற்படையால் வீறு பெற்றவன்; வெல்லும் போர் வல்லவன்; இத்துணை வல்லனாய அவன், ஒருகால், பாணன் எனும் வடநாட்டு மற்போர் வல்லானொடுகூடி, உறையூரிலிருந்து ஆட்சி புரிந்த தித்தன் வெளியனொடு போரிடுவான் வேண்டி, உறையூர்க்கண் வந்திருந்தான். ஒருநாள், தித்தன் நாளவைக்கண், பரிசில் வேண்டி வந்திருக்கும் புலவர், பொருநர், பாணர், கூத்தர், முதலாயினார் பறையொலித்தும், பாக்கள் புனைந்தும் வாழ்த்தும் வாழ்த்தொலியைக் கேட்டான்; பலரும் போற்றப் பெருவாழ்வு வாழும் தித்தனொடு போரிட்டு வெல்லுதல் இயலாது என்பதை உணர்ந்தான்; உடனே, ஒருவரும் அறியாவாறு உறையூரைவிட்டே ஓடிவிட்டான்; பாணனொடு கூடிப் பகை வெல்லுதல் இயலாது என்பதறிந்த கட்டி, தன் நாட்டை அடுத்துப் பேரரசாய் வாழ்ந்த சேரன் படையிற் சேர்ந்து பணியாற்றினான்; அக்காலை, சேரனும், சோழனும், பகைகொண்டு கழுமலம் எனுமிடத்தே படையொடு இருந்தனர். சேரன் படைத்தலைவர்களாகப் பணியாற்றிய நன்னன், ஏற்றை, அத்தி, கங்கன், புன்றுறை, கணையன் முதலியோர்க்குத் துணையாகக் கட்டியும் அவண் கூடியிருந்தான்: ஆனால், அந்தோ! ஆண்டும் அவன் தோல்வியே கண்டான்; சோழர் படைத்தலைவனாய்ப் பணியாற்றிய பழையன் எனும் பெருவீரன், அக் கழுமலக் களத்தைப் பிணக்களமாக்கிப் பருந்துக்கு விருந்திட்டான்; கணையன் ஒருவன் ஒழிய ஏனைய வீரர் அனைவரும் ஒருங்கே அழிந்தனர்; அவ்வாறு அழிந்தாருள் கட்டியும் ஒருவனாவன் எனல் கூறவேண்டாவன்றே!

> "குல்லைக் கண்ணி வடுகர் முனையது
> பல்வேல் கட்டி நன்னாட் டும்பர்,
> மொழிபெயர் தேயம்".
>
> (குறுந் : ௧௧)

"வலிமிகு முன்பின் பாணனொடு, மலிதார்த்
தித்தன் வெளியன் உறந்தை நாளவைப்
பாடின் தெண்கிணைப் பாடுகேட் டஞ்சிப்
போரடு தானைக் கட்டி
பொராஅது ஓடிய ஆர்ப்பினும் பெரிதே."

(அகம்: உஉசு)

"நன்னன், ஏற்றை, நறும்பூண் அத்தி,
துன்னரும் கடுந்திறல் கங்கன், கட்டி,
பொன்னணி வல்வில் புன்றுறை என்றாங்கு
அன்றவர் குழீஇய அளப்பருங் கட்டூர்ப்
பருந்துபடப் பண்ணிப் பழையன் பட்டெனக்
கண்டது நோனான் ஆகித் திண்டேர்க்
கணையன் அகப்படக் கழுமலம் தந்த
பிணையலம் கண்ணிப் பெரும்பூட் சென்னி."

(அகம் : சச)

## ௫௫. கரும்பனூர் கிழான்

தொண்டை நாட்டில், வேங்கட மலையை அடுத்துள்ள பகுதிகள், திருவேங்கடக் கோட்டம் என்ற பெயரான் வழங்கப்பெறும்; அக் கோட்டத்து ஊர்களுள் கரும்பனூரும் ஒன்று என அக் கோட்டகத்தைச் சேர்ந்த திருக்கழுக்குன்றத்துக் கல்வெட்டொன்று கூறுகிறது; (A. R. No. 176 of 1932 - 3.) கரும்பனூர், என அன்று வழங்கிய அவ்வூர், இன்று கரும்பூர் என வழங்குகிறது. கரும்பனூர், நன்செய், புன்செய் ஆய இரு நிலவளங்களானும் சிறந்தது; மருதநிலத்து நன்செய்களில் மீன் தேர்ந்துண்டு, தம் இனத்தோடு வஞ்சிமரக் கிளைகளில் வாழும் நாரைகள், வயல்களில் வளர்ந்துநிற்கும், முற்றிய கரும்பின் வெண் பூவினைக் கொழுதி மகிழும்; புன்செய்களில், வரகின் அரிகாற்கீழ் வாழும் எலிகளைப் பிடித்துண்ணும் குறும்பூழ்ப் பறவைகள் செய்யும் ஆரவாரங் கேட்டு அஞ்சும் குறுமுயல்கள் குதித்தோடுவதால், இருப்பை மரத்தின் இனிய பூக்கள் உதிர்ந்து எங்கும் பரந்துகிடக்கும்; கரும்பனூர், இத்தகு வளமுடையதாகவே, விழாவற்ற வறுங்காலத்தும், அவ்வூர் வாழ் உழவர், கள்ளுண்டு களித்தலிற் றவறார்:

"மென்பாலான், உடன் அணைஇ
வஞ்சிக்கோட்டு உறங்கும் நாரை
அறைக்கரும்பின் பூவருந்தும்;
வன்பாலான், கருங்கால் வரகின்
அரிகாற் கருப்பை அலைக்கும் பூழின்
அங்கட் குறுமுயல் வெருவ, அயல
கருங்கோட் டிருப்பைப் பூவுறைக் குந்து;
விழவின் றாயினும் உழவர் மண்டை
இருங்கெடிற்று மிசையொடு பூங்கள் வைகுந்து;
கரும்பனூர்." (புறம் : ௩௮௪)

அக் கரும்பனூரில், வருவார்க்கு விருந்தளித்துப் போற்றுவதே வாழ்வின் பயன் எனக் கருதும் வள்ளல்

ஒருவன் வாழ்ந்திருந்தான்: அவ்வூர்க்கண் வாழ்வார் பலரா யினும், அவ்வூர் பெருமை பெறுவது, அவன் ஒருவனு லேயே என்பதறிந்த அக்கால மக்கள், அவ்வூர் அவ னுக்கே உரித்து எனக் கொண்டு, அவனைக் கரும்பனூர் கிழான் என்ற அழைப்பாராயினர். மிகப் பரந்தது என்ற புகழை உடையது இந் நிலவுலகம் என்ப; அந் நிலத் தின் பரப்பும் சிறிதாம், கரும்பனூரன் புகழின் பெருமை யொடு நோக்க என்று உலகோர் கூறுவதற்கேற்ற உறு புகழ் விரும்பும் உள்ளத்தன் கரும்பனூர்கிழான்; அவ் வாறு இசைபட வாழவிருமபும் அவன், அதைப் பெறுதல் ஈதலாலேயே உண்டாம் என உணர்ந்து, தன்பால் வரு வார்க்குப் பெருஞ்சோறு அளித்துப் புரப்பன்; அவ்வாறு அளிக்கும் சோற்றுணவில், நீரினும் மிகுதியாக நெய் வார்த்து வழங்குவன்; தானளிக்கும் உணவுண்டு தன் மனை வந்து வாழும் பாணர் முதலாம் பரிசில் மாக்கள் ஊனொடு கலந்த உணவினைப் பலகாலம் உண்டமையான் தெவிட்டி வெறுப்பராயின், அவர் மகிழ்ந்துண்ணும் இனிய உணவாகப் பால்கலந்து செய்வனவும், வெல்லப் பாகுகொண்டு செய்த னவுமாய பண்ணியங்களைப் பதமாகச் செய்து அளித்துப் பேணுவன்.

"நிணம்பெருத்த கொழுஞ் சோற்றிடை
மண்நாணப் புகழ் வேட்டு
நீர்நாண நெய் வழங்கிப்
புரந்தோன் எந்தை." (புறம்: ௩அச)

"ஊனும் ஊணும் முனையின் இனிதெனப்
பாலிற் பெய்தலும் பாகிற் கொண்டவும்
அளவுபு கலந்து மெல்லிது பருகி
விருந்துறுத்து ஆற்றி இருந்தனென்." (புறம்: ௩அக)

கரும்பனூரன் விரும்பி அளிக்கும் உணவுண்டும், உண்ணுங்கால் பற்களினிடையே சிக்கிக்கொண்ட ஊனைத் தோண்டி எடுத்தும் உளம் மகிழ்ந்துவாழும் நாளை அறித லல்லால், அவ்வாறு உண்டு கழிந்த நாட்கள் எத்தனை என்பதையும் அறியமாட்டாது வாழ்ந்தனர். ஆகவே

அவன் மனைவாழ் பாணர்கள், நாட்டின் வறுமை, வாழ்வு களுக்குக் காரணமாய வெள்ளியின் நிலை குறித்துக் கவலை கொள்வதிலர்; அவன் அளிக்கும் அறுசுவை உணவுண்டு மகிழ்ந்த ஒரு பாணன்,

"அன்னேனே உடையேம் என்ப, இனி வறட்கு
யாண்டு நிற்க வெள்ளி! மாண்தக
உண்ட நன்கலம் பெய்து துடக்கவும்,
தின்ற நண்பல் ஊஉன் தோண்டவும்
வந்த வைகல் அல்லது
சென்ற எல்லைச் செலவு அறியேனே." (புறம்: ௱அ௪)

எனக் கூறுவது காண்க. பாணர் முதலாம் பரிசிலர், தன் மனையகத்தே பன்னாள் வாழ்வதைக் கரும்பனூரான் வெறுப் பானல்லன்; மாறாக, அன்னார் தன் வாழ்நாள் முழுவதும் தன்னொடு வாழ்தலையே விரும்புவன்; அவர்கள், தம் ஊரில் விழாக்காணலை விரும்பியோ, அன்றி வேறு காரணம் குறித்தோ, அவனைப் பிரிந்துசெல்ல விரும்புவராயின், அவன் அது பொறான்; போகும் அவரை, "ஐய! உலகம் வறண்டு உறுபசி வருத்தும் காலத்தும், உமக்கு உண வளித்துப் புரத்தலை உவந்து மேற்கொள்வேன்; செல்லும் நீவிர், அத்தகையதொரு காலம் வந்துற்ற வழி, ஈயா மன்னரைத் தேடியலையாது, யாண்டிருப்பினும் ஈண்டுவந்து சேர்தலை இரந்து வேண்டுகிறேன்" எனக்கூறி வழியனுப்பு வன்; என்னே அவன் கொடைவளம்!

"இருநிலம் கூலம் பாறக், கோடை
வருமழை முழக்கிசைக் கோடிய பின்றைச்
சேயை ஆயினும், இவணை ஆயினும்
இதற்கொண் டறிநை வாழியோ! கிணைவா!
சிறுநனி, ஒருவழிப் படர்க!" (புறம்: ௱அக)

## ௯௪. கழுவுள்

தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டியராகிய பேரரசர் ஆண்டிருந்த காலத்திலேயே, அவர்கள் நாட்டின் ஒருசில பகுதிகளில், அவர்க்கு அடங்கியும், அடங்காமலும், ஆயர், எயினர், பரதவர், வேளிர்போலும் இனத்தவர் சிலர் அரசமைத்து வாழ்ந்துவந்தனர். அன்னார் ஆட்சி, ஒரோவழிப் பேரரசுகளுக்கு அரணாய் அமையும்; ஒரோவழி அழிவு தருவனவாகும்; அவற்றால் தம் ஆட்சிக்கு அழிவன்றி ஆக்கம் இல்லை என உணர்ந்த பேரரசர்கள் படையெடுத்துச் சென்று அவர்களை அழித்து மீள்வர். அவ்வாறு அரசமைத்து வாழ்ந்தாருள் கழுவுள் என்பானும் ஒருவன்; கழுவுள் சேர ஆட்சிக்குட்பட்ட நிலத்தின் ஒரு பகுதிக்கண், அரசமைத்து வாழ்ந்த இடையர்குலத் தலைவனாவன். அவன் இருந்து அரசாண்ட ஊர் காமூர்; காவூர் எனவும் வழங்கப்பெறும். கழுவுள் வேற்படை வல்லவன்; வள்ளன்மையும் உடையான் என்றும், அவன் காமூர்க்கண், பூதத்தின் அருளால் வந்ததொரு வேங்கைமரம் உண்டு என்றும் மதுரை மருதன் இளநாகனார் என்பார் கூறுவர்:

"வென்வேல்
மாவண் கழுவுள் காமூர் ஆங்கண்
பூதம் தந்த பொரியரை வேங்கை." (அகம்: ௩௬௫)

தனக்குரிய நாட்டின் ஒரு பகுதிக்கண் இருந்து கழுவுள் ஆட்சிபுரிதலை விரும்பாத தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, காமூரை அழித்துக் கழுவுளை அடக்கக் கருதினான்; அவ்வாறே அவன் பெரும்படையொன்று சென்று காமூரை முற்றிக்கொண்டது; அவ்வூரகத்தே வாழும் ஆயர், தம் ஆனிரைகளை மேய்நிலங்கட்குக் கொண்டு செல்வதோ, தமக்கு வேண்டும் உணவு முதலாம் பொருள்களை ஊருட்கொணர்வதோ செய்யமாட்டாது வருந்தினர்; ஆயர் படும் துயரை அறிந்தும், அவர் தலைவனும் தகுதியுடைய கழுவுள், சேர்படையைப்

போரிட்டுத் துரத்த எண்ணுது, அவ்வூரகத்தே அடங்கி யிருத்தலையே மேற்கொண்டான். அவனுல் தம் துயர் துடைத்தல் இயலாது என்பதை உணர்ந்த ஆயர், அவன் அறியாவாறே புறம்போந்து, சேரர் படைத் தலைவர்க்கு ஆவும், ஆனேறும் திறையாகத்தந்து பணிந்தனர்; படைத் தலைவர்களும் அவர் அளித்தன ஏற்று முற்றுகை ஒழித் தனர்; தன் ஊர்வாழ் ஆயர்செயல் அறிந்தான் கழுவுள்; இனியும் பணியாது இருத்தல் பயன்தராது என்பதை உணர்ந்தான்; ஆயினும் பலர் காணப் பணிதலை நாணிற்று அவன் உள்ளம்; ஆகவே, ஊரவர் எவரும் எழுந்து தொழில் தொடங்குதற்கு முன்னரே, ஊரில் தயிர்கடை யொலியும் எழுதற்கு முன்னரே, ஒருவரும் உணராவாறு, இருளிலேயே சென்று படைத்தலைவரைப் பணிந்து பகை யொழிந்து வாழ்ந்தான் :

"ஏறுடு
கன்றுடை யாயம் தரீஇப் புகல்சிறந்து
புலவுவில் இளையர் அங்கை விடுப்ப
மத்துக் கயிறுஆடா வைகற்பொழுது நினையூஉ
ஆன்பயம் வாழ்நர் கழுவுள் தலைமடங்க.''

(பதிற்றுப்:எக)

தன்னைக் கேளாதே, தன்கீழ் வாழ்வார் பகைவரைப் பணிந்தமையான், தானும் பணியவேண்டிய நிலை வந்துற் றதை எண்ணி எண்ணி வருந்தினன் கழுவுள்; அப்பழியை எவ்வாற்ருனும் துடைத்தல் வேண்டும்; சேர அரசனின் ஆணைக்கு அடங்காப் பெருவாழ்வு வாழவேண்டும் என்று துடித்தது அவன் உள்ளம்; அதற்கு ஏற்றதொரு காலத்தை யும் எதிர்நோக்கி யிருந்தான்; அதற்கு ஏற்ப, சேரநாட்டு அரசியலிலும் மாறுதல் உண்டாயிற்று; தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை இறந்துவிட்டான்; இளஞ் சேரல் இரும்பொறை என்பான் அரியணை ஏறினன்; இவ் வரிய வாய்ப்பை நழுவவிடாது, கழுவுள் தன் தனியாட்சி உரிமையை நிலைநாட்டிக் கொண்டான்; ஆனல், அது நெடிதுநாள் நிற்கவில்லை; தகடூர் எறிந்தானைப் போன்றே,

இளஞ்சேரல் இரும்பொறையும் கழுவுள் போர்க்குணம் கண்டு பொருளுயினன். உடனே படையொடு சென்று போரிட்டுக் கழுவுளைப் புறங்கண்டான்; கழுவுளும் காணுயினன் :

"பொருமுரண் எய்திய கழுவுள் புறம்பெற்று."

(பதிற்றுப்: அஅ)

இடைக்குலத் தலைவனும் கழுவுளால் இன்னல் பல உறுவது உணர்ந்த வேளிர் பதினல்வர் ஒன்றுகூடி எதிர்த்து அவன் காமூரை ஒருகால் அழித்தனர் என்றும் பரணர் கூறுகிருர் :

"ஈரெழு வேளிர் இயைந்தொருங் கெறிந்த
கழுவுள் காமூர்." (அகம்: கடுரு)

## ௫௫. கொடுமுடி

தொண்டைநாட்டு உட்பிரிவுகளாய இருபத்துநான்கு கோட்டங்களுள், ஆமூர்க் கோட்டமும் ஒன்று; அவ்வாமூர்க் கோட்டத்திற்குத் தலைநகராயது ஆமூர். ஆமூர் தென்னார்க்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டத்தையும் செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டத்தையும் கொண்ட ஓய்மாநாடு எனப் பெயர்பெற்ற நாட்டில் உளது. ஆமூர், அந்தணர் வாழ்வது; அரிய காவலையுடையது; ஆழ்ந்த அகழியால் சூழப்பெற்றது என்றெல்லாம் கூறுவர் இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார். ஏப்புழை நிறைந்து, நெடுந்தொலைக்கண் நின்ற வழியும் நிலைபெறத் தோன்றும் உயர்ந்த மதில்களால் ஆய அரண் அமையப்பெற்றது ஆமூர் என்று கூறுவர் அவ்வூரிற் பிறந்த பெரும்புலவர், கவுதமன் சாதேவனார். அவ்வாமூரில் இருந்து அரசாண்டவன் இக் கொடுமுடி. பேரரசர்களையும் வென்று வீறுகொள்ளும் பேராண்மையுடையவன் அக் கொடுமுடி. வெற்றியல்லது, தோல்வி கண்டறியாத் தறுகண்மை யுடையவனும், வில்லேந்திப் போர் புரியவல்ல வீரர்களை உடையவனும் ஆய சேரன் ஒருவன், ஆமூரைத் தாக்கினான் ஒருகாலத்தே. தன் ஊரைத் தாக்கிய அவ் வானவனுடைய யானைப் படையையும் அழித்து, அவனையும் வென்று துரத்தி, அவனால், தன் தலைநகர்க்கு வர இருந்த அழிவு அகற்றிக் காத்த பெருமையுடையான் இக் கொடுமுடி.

"வில்கெழு தடக்கை, வெல்போர் வானவன்,
மிஞிறுமூசு கவுள சிறுகண் யானைத்
தொடியுடைத் தடமருப்பு ஒடிய நூறிக்
கொடு முடி காக்கும், குரூஉக்கண் நெடுமதில்
சேண் விளங்கு சிறப்பின் ஆமூர்." (அகம்: ௧௫௯)

# ௬௯. கொண்கானங் கிழான்

மைசூர்நாட்டின் தென்பகுதியையும், சேலம், கோவை மாவட்டங்களையும் கொண்டநாடு, பண்டு கொண்கானம் என்ற பெயருடையதொரு நாடாய்த் திகழ்ந்தது; கொண்கானம், பின்னர்க் கொங்கணம் என மருவி வழங்கலாயிற்று; கொண்காணம் எனும் பெயருடையதொரு மலையைத் தன்னகத்தே பெற்றிருந்தமையால், அந்நாடு அப் பெயர் பெற்றது; கொண்கானம், பொன்னுடைமையான் பொலிவுற்றது எனப் போற்றுவர் புலவர்; "பொன் படு கொண்கானம்" (நற்:௩௯௧) எனப் பாலைபாடிய பெருங்கடுங்கோவும், விண்ணைத் தொடும் கொடுமுடிகளையும், பொன்படு பாறைகளையும் உடையது எனும் பொருள் தோன்ற, "விண்பொரு நெடுவரைக் கவாஅன் பொன்படு மருங்கின் மலை" (அகம்: ௧௭௩) என முள்ளியூர்ப்பூதியாரும் பாராட்டுதல் உணர்க. பொன் அளிக்கும் பெருமை மிக்க கொண்கானம், இயற்கை வளத்தினும் எழில் பெற்றுத் திகழ்ந்தது; தூய வெள்ளாடையை விரித்து வைத்தாற்போல் வீழ்ந்தோடும் அருவிகளை யுடையது கொண்கானம் என, அதன் இயற்கையழகினை இனி தெடுத்துப் பாராட்டுவர் புலவர்.

"அறுவைத்
தூவிரி கடுப்பத் துவன்றி மீமிசைத்
தண்பல இழிதரும் அருவிநின்
கொண்பெருங் கானம்." (புறம்: ௧௫௪)

இக்கொண்கான நாட்டில், கொடையும், கொற்றமும் உடையானொரு தலைவன் இருந்தான்; அவனைக் கொண் கானங்கிழான் என்றே மக்கள் அழைத்தனர்; அவன் வண்மையும், ஆண்மையும் விளங்க, புலவர் மோசிகீரனார் பாடிய பாக்கள் பலவாம்.

"உலகில் எத்தனையோ அரசர்கள் உள்ளனர்; அவர்கட்கு உரிமையாக எத்தனையோ மலைகளும் உள்ளன; அம்

மலைகள் அனைத்தும், கொற்றம், கொடை ஆகிய இரண்டனுள் ஒன்றையே பெற்றிருக்கும்; கொடையால் சிறப்புற்ற மலை, கொற்றத்தால் சிறப்புறுவதில்லை; கொற்றத்தால் சிறப்புற்ற மலை, கொடையால் சிறப்புறுதல் இல்லை; ஆனால் கோண்கான நாடோ, கொடை, கொற்றம் இரண்டாலும் சிறப்புடையதாம்; கோண்கான மலையைப் பாடிச்செல்லும் பரிசிலர், பரிசில் பெறுதல் உறுதியாம், ஆகவே அவர்க்கு முன் தாம் கொடுத்த கடனைப்பெற்றுச் செல்வதற்காம் காலமும் இதுவே என எண்ணியவராய், அப் பரிசிலரைத் தொடர்ந்து வந்த அவன் கடன்காரர்களாலும், அக்கோண்கானங் கிழானைப் பணிந்து திறைசெலுத்தி மீளும் அரசகளாலும் சூழப்பெற்றிருக்கும் கோண்பெருங்கான எனின், அதன் கொடைக்கும், கொற்றத்திற்கும் வேறு சான்று வேண்டாவன்றோ?'' எனவும்,

"ஒன்று நன்குடைய பிறர்குன்றம்; என்றும்
இரண்டு நன்குஉடைத்தே கோண் பெருங்கானம்;
நச்சிச் சென்ற இரவலர்ச் சுட்டித்
தொடுத்துணக் கிடப்பினும் கிடக்கும்; அஃதான்று;
நிறையருந் தானை வேந்தரைத்
திறைகொண்டு பெயர்க்கும் செம்மலும் உடைத்தே.''
(புறம்: கருசு)

ஞாயிறு எத்திசைச் செலினும், அத்திசையே நோக்கும் இயல்பினவாய நெருஞ்சிப் பூக்களைப் போல், வறுமையால் வாடும் யாழ்ப்பாணர்கள், தம் கையில் ஏந்தி நிற்கும் ஏற்கும்மண்டை கோண்பெருங்கிழானின் மார்பையே நோக்கிக் கிடக்கும், தன் மார்வலிகொண்டு போருடற்றிப் பெறும் பொருளையே எதிர்நோக்கிக் கிடக்கும்'' எனவும்,

"பாழூர் நெருஞ்சிப் பசலை வான்பூ
ஏர்தரு சுடரின் எதிர்கொண் டாஅங்கு
இலம்படு புலவர் மண்டை, விளங்குபுகழ்க்
கோண்பெருங் கானத்துக் கிழவன்
தண்தார் அகலம் நோக்கின மலர்ந்தே.'' (புறம் கருடு)

"மக்கள், அலையொலிக்கும் பெருங் கடலின் கரையருகே இருந்த போதும், நீர்வேட்கை உற்றக்கால், அக் கடல்நீர் உப்பாதலின், அதை உண்ண எண்ணாராய், 'உண்ணும் நீர் யாண்டேனும் ஈண்டு உண்டோ? உண்ணும் நீர் யாண்டேனும் ஈண்டு உண்டோ? என எதிர் வருவாரையெல்லாம் கேட்டுக்கொண்டே, அந்நீர் உள்ள இடம் தேடிச் செல்வர்; அதைப்போலவே, புலவர்களும், பேரரசர் அவையருகே வாழினும், அவ் வரசர்பால் கொடைக்குணம் இன்றுதல் அறிந்து, அவரைப் பாராட்ட எண்ணாது, குற்றம் தீர்ந்த கொடைக்குணம் உடையார், உலகில் யாண்டு உண்டேனும், அவரையே தேடிச் சென்று, செய்யுள் பாடிச் சிறப்பித்துப் பரிசில் பெற்றுப் பிழைப்பர்; அப் புலவர் வழி வந்த யானும், என் வறுமை போக்க வழங்குவோன் நீ ஒருவனே என அறிந்து நின் நாடடைந்து நின்னைப் பாடினேன்" எனவும் கூறும் புலவர் பாராட்டுரைகள், அக் கொண்கானங்கிழானின் பெருமையினைப் புலப்படுத்தி நிற்றல் காண்க.

"திரை பொரு முந்நீர்க் கரைநணிச் செலினும்,
அறியுநர்க் காணின் வேட்கை நீக்கும்
சின்னீர் வினவுவர் மாந்தர்; அதுபோல்
அரசர் உழைய ராகவும், புரைதபு
வள்ளியோர்ப் படர்குவர் புலவர்; அதனால்
யானும், பெற்ற தூதியம் பேறியா தென்னேன்;
உற்றெனன் ஆதலின் உள்ளிவந் தனனே."

(புறம்: கடுச)

## ௬எ. கௌணியன் விண்ணந்தாயன்

சோழநாட்டில், முடிகொண்டா ஞற்றங்கரையில் உள்ள பூஞ்சாற்றூர் என்ற ஊரில் கௌணியப் பார்ப்பனர் குடியில் வந்த அந்தணர், இவ் விண்ணந்தாயனர்; இவ் வரலாறெல்லாம் விளங்க, இவர், சோணுட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன் என வழங்கப்பெறுவர். விண்ணந்தாயனரின் முன்னோர், 'வேதியர்க்கழகு வேதமோதுதல்' என்ற கொள்கையினராய், வேத நூற் பொருளுணர்ந்து, அப் பொருளைப் பிற சமயத்தவரும் ஏற்கும் வகை எடுத்தியம்பவல்ல அறிவுத் தெளிவினராய் வாழ்ந்தனர். அவர் வழி வந்த விண்ணந்தாயனும், தன் குலவொழுக்கத்திற்கு மாறுதலின்றி, மனைவிமார் ஏவல் செய்ய வேதநூல் முறைப்படி வேள்வி பல செய்தான்; வேள்வி முடிவில் வந்திருந்தார் அனைவர்க்கும் விருந்தளித்துப் போற்றினன்; அவன் ஆற்றிய வேள்வி ஒன்றிற்கு வந்து, விருந்துண்டு மகிழ்ந்த புலவர் ஆவூர் மூலங்கிழார், "இமயம் போல் என்றும் நிலைபெற்று நெடிது வாழ்க" என, வாழ்த்திச் சென்ருர் :

"நீர் நாண, நெய் வழங்கியும்,
எண் நாணப் பலவேட்டும்,
மண் நாணப் புகழ் பரப்பியும்
அருங்கடிப் பெருங்காலை
விருந்துற்றநின் திருந்தேந்து நிலை
என்றும், காண்கதில் அம்ம யாமே."

(புறம்: ௧௬௬)

## ௩௮. சிறுகுடிகிழான் பண்ணன்

காவிரியின் வடகரைக்கண் சிறுகுடி என்றோர் ஊர் உளது. சோணாட்டில் திருவீழி மிழலைக்கு அண்மையில் உள்ளதும், ஞானசம்பந்தர் பாடலைப் பெற்ற பெருமையுடையதுமாய சிறுகுடியே, இச்சிறுகுடியாம் என்ப; அச் சிறுகுடி, நெல்லி, பாதிரி, மாப்போலும் பயன்தரு மரங்கள் நிறைந்த மலர்ச்சோலையுண்மையால் மாண்புற்றது; இச் சிறுகுடியும், ஆண்டுள அம் மரங்களும் புலவர் பாராட்டும் பெருமையுடையன. இச் சிறுகுடிக்கண், பண்ணன் எனும் பெயர் பூண்டோன் ஒருவன் வாழ்ந்திருந்தான்; வேளாண்மைத் தொழில் மேற்கொண்டு வாழ்ந்தோனாய அப் பண்ணன், பகைவர் தம் பெரும் படையைப் பாழாக்க வல்ல பேராற்றலும் பெற்றிருந்தான். பகைவர் யானைப் படை பலவற்றை அழித்து வெற்றிபெற்ற அவன் வேற்படை, அவ் யானைகளின் குருதிக்கறை படிந்து சிவந்து தோன்றும். இவ்வாறு களம் பல வென்ற வீறுடையனாகவே, வீரக்கழல் புனைந்த காலுடையனாய்க் காட்சி தருவன் பண்ணன். பண்ணன்பால் பாராட்டற்குரிய பிறிதொரு பண்பும் பொருந்தி யிருந்தது. உலகியல் ஒழுங்காக நடைபெறுவது, தம் நலம் கருதாது, பிறர் நலமே பேணும் பெரியோர்கள் வாழ்வதினாலேயே என்றும் கூறுவர் உலகியல் உணர்ந்தோர். இவ்வாறு எதையும் தமக்கெனப் பேணிக்கொள்ளாது, பிறர்க்கே அளித்து உலக வாழ்விற்கு உறுதுணை புரியும் உயர்ந்தோர்களுள் பண்ணனும் ஒருவனாவன். பண்ணனும் தனக்கென வாழாது பிறர்க்குப் பயன்படவே வாழும் விழுமிய வாழ்வுடையனாவன்.

"வென்வேல்
இலைநிறம் பெயர ஒச்சி, மாற்றோர்
மலைமருள் யானை மண்டமர் ஒழித்த
கழற்கால் பண்ணன் காவிரி வடவயின்
நிழற்கயம் தழீஇய நெடுங்கால் மா." (அகம்: ௧௭௭)

"கைவள் ஈகைப் பண்ணன் சிறுகுடிப்
பாதிரி கமழும் ஓதி.' (புறம்: ௭0)

"தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்
பண்ணன் சிறுகுடிப் படப்பை நுண்ணிலைப்
புன்காழ் நெல்லிப் பைங்காய்." (அகம்: ருச)

பண்ணனைப் பாடிப் பரிசில் பெற்றோர் பலராவர்; அவன்பால் பரிசில் பெற்ற புலவர்கள், அவனைப் பாடிப் பரவுவதைத் தம் கடமையாகக் கொண்டனர்; சோணுட்டானைய பண்ணன் அளித்த பரிசில் பெற்ற பாண்டி நாட்டுப் புலவராய மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார், "பண்ணனையும், அப் பண்ணன் மேற்கொள்ளும் உழவுத் தொழிற்கு உறுதுணையாய எருதுகளையும், ஏற்றத்தையும் நாள்தோறும் பாடக் கடவேனாகுக! அங்ஙனம் பாடேனாயின், பெரு நன்றி கொன்ற பழியுடையேனாய என்னையும், என் சுற்றத்தினரையும் பொருள் அளித்துப் புரத்தலைப் புரியாது, வறுமை வாட்டப் புறத்தே போக விடுக, எங்கள் நாட்டு வேந்தனாய வழுதி" என்று கூறுகின்றனர் என்றால், பண்ணன் பெருமையினை என்னெனப் பகர்வது!

"பண்ணன்,
வினைப்பகடு ஏற்றம் எழீஇக் கிணைதொடா
நாடொறும் பாடே னாயின், ஆனா
மணிகிளர் முன்றில் தென்னவன் மருகன்
பிணிமுர சிரங்கும் பீடுகெழு தானை
அண்ணல் யானை வழுதி
கண்மா றலீஇயர்என் பெருங்கிளைப் புரவே."
(புறம்: ௩அஅ)

பாம்பறியும் பாம்பின்கால் என்ப; வள்ளல் ஒருவன் சிறப்பினை அவன் பால் பரிசில் பெறும் புலவர்கள் பாராட்டுவதில் சிறப்பொன்று மில்லை; வள்ளல் ஒருவனை, அவனைப் போலும் பிறிதொரு பெருவள்ளல் பாராட்டுதல் வேண்டும்: அதுவே உண்மைப் பாராட்டாம்; அத்தகு பெருஞ் சிறப்பு பண்ணற்கு உண்டு; பெருங்கொடை வள்ளலாய குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், பண்ணன் பெருங்கொடையைப் பாராட்டியுள்ளான்; புலவர் பதின்மர் பாராட்டைப் பெறும் பெரும் பேறுடையனாய கிள்ளிவளவனே பண்ண

லேப் பாராட்டினுன் எனில், இவன் பெருமைக்கோர் எல்லே யுண்டோமோ?

பண்ணன்பால் பரிசில் பெறக் கருதிய பாணன் ஒருவன், அவன் சிறுகுடியை நோக்கிச் செல்கிருன்; பண்ணன் பால் பரிசில் பெற்ற இளேஞரும் முதியருமாய பாணர்கள் வேறுவேறு திசை நோக்கி வரிசைவரிசையாகச் செல்கின்ற காட்சியினேயும் காண்கிருன்; பழுமரம் ஒன்றில் பழம் உண்ணவந்து கூடி நிற்கும் பறவைகள் எழுப்பும் பேரொலிபோல், பண்ணன் அறச்சாலேயில் உணவு பெறுவார் எழுப்பும் ஓசையும் கேட்கலாயிற்று; அவன் சிறுகுடி, அண்மையில் உளது என்பதை இவை உணர்த்துகின்றன; ஆயினும், பாணன் பசிக்கொடுமை இதை யுணர்ந்த பின்னரும், வழியில் எதிர்ப்படுவார் ஒவ்வொருவரையும் 'பண்ணன் சிறுகுடி யாண்டுளது? பண்ணன் சிறுகுடி யாண்டுளது?'' என, மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டிற்று. பரிசில் பெற்று மீளும் பாணர் சிலரை அண்மி "ஐய! பசிப்பிணி மருத்துவனும் பண்ணன் இல்லம் யாண்டுளது? அண்மைக் கண் உளதா? சேய்மைக்கண் உளதா?'' என்று கேட்கலாயினன்; இந்தக் காட்சியைக் கவினுறப் பாடிக் காட்டிய கிள்ளிவளவன, பண்ணன், தன் வாழ்நாள்வரையும் வாழ்ந்து, வாழ்க்கைத்துணேவனுதலும் வேண்டும் என்று விரும்புகின்ருன்; என்னே பண்ணன் பெருமை!

''யான்வாழும் நாளும் பண்ணன் வாழிய
பாணர் காண்க இவன் கடும்பினது இடும்பை;
யாணர்ப் பழுமரம் புள்ளிமிழ்ந் தன்ன
ஊண் ஒலி அரவம் தானும் கேட்கும்;
பொய்யா எழிலி பெய்விடம் நோக்கி
முட்டை கொண்டு வற்புலம் சேரும்
சிறுநுண் எறும்பின் சில்லொழுக் கேய்ப்பச்
சோறுடைக் கையர், வீறுவீ றியங்கும்
இருங்கிளேச் சிருஅர்க் காண்டும்; கண்டும்
மற்றும் மற்றும் வினவுதும் தெற்றெனப்,
பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ? சேய்த்தோ? கூறுமின் எமக்கே.''

(புறம்: கஎந

## ௫௧. சேந்தன்

பண்டைத் தமிழ்நாட்டுப் பேரூர்களில் ஆர்க்காடும் ஒன்று; ஆர்க்காடு, இடையிடையே நெய்தல் மலரும் நெற் கழனிகளைக்கொண்டது; அவ்வூரை அடுத்துள்ள காடு, நெல்லி மரங்களை நிறையக் கொண்டது; அவ்வூரை, உரிமை கொண்டு ஆண்டிருந்தான் அழிசி என்பான்; அவன் கள் ளுண்டு களித்துக் காடு புகுந்து வேட்டையாடவும், வாட் போரில் வந்தெதிர்த்த பகைவர்களை வானுலகு அனுப்பவும் வல்ல வீரர்களைப் பெற்ற படையுடையவன். அவ் வழிசியின் மகனாய்ப் பிறந்தவன் சேந்தன்; "மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை, என்நோற்றான் கொல் எனும் சொல்" என்ற நல்லுரைக்கேற்ப, நாட்டவர் எல்லாம், இவன் தந்தை அழிசியைக் குறிப்பிடுந்தோறும், இவன் பெயரை யும் இணைத்து, இவன் தந்தை அவன் எனப் பாராட்டும் நிலையில், "சேந்தன் தந்தை அழிசி" எனக் கூறும் வண் ணம், பெருஞ் செயலும், அருந்திறலும் உடையனாய் வாழ்ந் தான். கடத்தற்கு அரியன எனக் கருதப்பெறும் பகைவர் தம் பேரரண்களை யெல்லாம் பாழ் செய்த பேராற்றல் உடைய சேந்தன் ஒருகால் காவிரியாற்றில், பலரும் நீரா டும் பெருந்துறையாகிய மருதத்துறையில், நீராடுவோர்க் குத் துன்பம் செய்து உலாவிய யானையை அடக்கி, ஆண் டுள்ளதொரு மருத மரத்தில் பிணித்தான். அத்துணைப் பேராற்றல் உடைய சேந்தன், தன்பால் பரிசில் வேண்டி வருவார்க்கு வரையாது வழங்கும் வள்ளியோனாகவும் வாழ்ந்திருந்தான். சேந்தன், யானையை அடக்கியது காவி ரிக் கரையில் ஆதலாலும், அவன் தந்தை அழிசியின் பெயர், சோழர் பெயரோடு இணைத்து வழங்கப் பெறுதலா லும், சேந்தன், சோணாட்டினனாவன் எனத் தெரிகிறது.

"காவிரிப்
பலராடு பெருந்துறை மருதொடு பிணித்த
ஏந்து கோட்டு யானைச் சேந்தன் தந்தை
அரியலம் புகவின், அந்தோட்டு வேட்டை

நிரைய ஒள்வாள் இளையர் பெருமகன்
அழிசி ஆர்க்காடு." (குறுந்: உருஅ)

"வெல்போர்ச் சோழர் அழிசியம் பெருங்காட்டு
நெல்லியம் புளிச்சுவை"

"மேவார்,
ஆரரண் கடந்த, மாரி வண்மகிழ்த்
திதலை எஃகின் சேந்தன் தந்தை
தேங்கமழ் விரிதார், இயல்தேர் அழிசி
வண்டுமூசு நெய்தல் நெல்லிடை மலரும்
அரியலம் கழனி ஆர்க்காடு." (நற்: அஎ; கசூO)

குட்டுவர், குடவர், பொறையர் எனச் சேரர், குடி வகையால் பலராவர்; அவருள் குட்டுவர்குடியுள் வந்தவன் திருக்குட்டுவன்: திருக்குட்டுவன் தந்தை, சேரநாட்டு அரசியலில் பேரரசனாய் வாழ்ந்திருந்தான்; உலகெலாம் முழங்கும் முரசினையும், வலிதின் இயன்ற தேரினையும் பெற்றிருந்தான் அவன்; வஞ்சிமாநகரில் இருந்து அரசாண்டிருந்தான்; அவ்வாறு பேரரசாய் வாழ்ந்திருந்த குட்டுவர்குடி, எவ்வாறோ வலிகுன்றிவிட்டது. அது வலி குன்றிய காலத்தே வந்து தோன்றினான் திருக்குட்டுவன். அதனால், அந்நாட்டு அரசியலில் இடம்பெறமாட்டா அவன், தான் பிறந்த குட்டுவர்குடியோடு உறவுடைய சோணாடு சென்று, அக்காலை அந்நாடாண்டிருந்த சோழன் படையில் பணிமேற்கொண்டான். அதனால், மக்கள் அவனைச் சோழிய ஏனாதி திருக்குட்டுவன் என அழைத்தனர். படைத்தலைவனாய்ப் பணியாற்றுவதற்கேற்ற பேராற்றல் அவன்பால் பொருந்தியிருந்தது. விற்போர் பயின்று பயின்று விரிந்த மார்பும், வலிபொருந்திய பெரிய கையும், பகைவரைத் தப்பாது தடியவல்ல வாளும் உடையான் திருக்குட்டுவன். படையில் பணியாற்றி ஓய்வுபெற்ற குட்டுவன், தன்னாட்டகத்ததாய வெண்குடை என்ற வயல்வளம் நிறைந்த ஊரில் வாழத் தொடங்கினான். அவ் வெண்குடை இன்று வெங்குடி என வழங்குகிறது.

வெண்குடைவாழ், சோழிய ஏனாதி திருக்குட்டுவன், வள்ளியோன் என வையகம் புகழ்வது கேட்ட மாடலன் மதுரைக்குமரனார் என்ற புலவர், அவன்பால் பரிசில் பெறுவான் வேண்டி, வெண்குடை வந்து, திருக்குட்டுவன் தந்தை புகழைப் பாடி நின்றார். அவர் புகழ்ந்தன கேட்டு மகிழ்ந்த திருக்குட்டுவன், அவருக்கு, ஆற்றல்மிக்க ஆண் யானை ஒன்றைப் பரிசு அளித்தான்; யானையைக்கொண்டு போதற்கு அஞ்சிய அப் புலவர், அதை அவன்பாலே திருப்பி அனுப்பிவிட்டார்; தான் கொடுத்த பொருளைப் புலவர் தன்பாலே அனுப்பியது கண்ட திருக்குட்டுவன்

"புலவர் பரிசிற் பொருள் சிறிது என எண்ணிவிட்டார் போலும்" என்று எண்ணி, மற்றுமோர் யானையைப் பரிசளித்தான். திருக்குட்டுவன் அளித்த இரு யானைகளாலும் தம் வறுமை ஒழிந்துவிட்டமையால், அவன்பால் மீண்டும் சென்று பொருள்வேண்டி நிற்கும் இழிநிலை ஒழியக்கண்டு மகிழ்ந்த புலவர், அம்மகிழ்ச்சியால், புலவர்காள்! குட்டுவன்பால் சென்று பொருள் வேண்டி நின்ற எனக்கு, அணுகுதற்குரிய யானைகளைப் பரிசாக அளித்தான்; அது கொண்டு, அவன்பால் செல்லின், அணுகுதற்கரிய பொருள்களையே பரிசளிப்பன் என அஞ்சி, அவன்பால் செல்வதொழிந்தேன்; உலகம் அவனை வள்ளியோன் என வாழ்த்தினும், நீவிர் அவன் பால் செல்வதைக் கைவிடுவீராக!" என அவனைப் பழிப்பார்போல் புகழ்ந்து பாராட்டினர்.

"சிலையுலாய் நிமிர்ந்த சாந்துபடு மார்பின்
ஒலிபுனற் கழனி, வெண்குடைக் கிழவோன்,
வலிதுஞ்சு தடக்கை வாய்வாள் குட்டுவன்,
வள்ளிய னாதல் வையகம் புகழினும்,
உள்ளல் ஓம்புமின்; உயர்மொழிப் புலவீர்!
யானும், இருள்நிலாக் கழிந்த பகல்செய் வைகறை
ஒருகண் மாக்கிணை தெளிர்ப்ப ஒற்றிப்
பாடிமிழ் முரசின் இயல்தேர்த் தந்தை
வாடா வஞ்சி பாடினே னாக,
அகமலி உவகையொடு அணுகல் வேண்டிக்
கொன்று சினம் தணியாப் புலவுநாறு மருப்பின்,
வெஞ்சின வேழம் நல்கினன்; அஞ்சி
யானது பெயர்த்தனெ னாகத், தான் அது
சிறிதுஎன உணர்ந்தமை நாணிப், பிறிதுமோர்
பெருங்களிறு நல்கியோனே; அதற்கொண்டு
இரும்பேர் ஒக்கல் பெரும்புலம் புறினும்,
துன்னரும் பரிசில் தரும் என
என்றும் செல்லேன் அவன் குன்றுகெழு நாட்டே."

(புறம்: ௩௯௪)

## சக. தந்து மாறன்

தந்து மாறன், தமிழ்வளர்த்த பாண்டியர் பேரரசின் கீழ்ப் பணியாற்றிய பெருமை யுடையோனுவன். மாறன் எனும் பெயர், பாண்டியரைக் குறிக்க வழங்கும் பெயர் களுள் ஒன்று; இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன், கூடகாரத்துத் துஞ்சிய மாறன்வழுதி என்ற பெயர்களைக் காண்க. ஒரு பேரரசின் கீழ்ப் பணியாற்றும் பிறரும், அப் பேரரசர் மேற்கொள்ளும் பெயர்களைத் தாமும் மேற் கொள்வர். அவ்வாறு பணிசெய்து, அப் பாண்டியர் பெயரை மேற்கொண்டாருள் தந்துமாறனும் ஒருவன். தந்துமாறன், சான்றோர் போற்றும் சால்புடையவனுவன் செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்பு அவன்பால் பொருந்தியிருந்தது. "சிற்றுணவும், சிறு சினமும் சில சொல்லும் உடையவராய்க் கேள்விபல கேட்டுப் பெற்ற பேரறிவும் பெற்றுப் பெருங்கொடை வள்ளலாய் வாழ்ந்து வருவார்க்குத் தேனும் தெவிட்டா உணவும் வரையாது வழங்கிப் பணிவும், பணித்த மொழியும் உடையராய்ப் பாராண்ட பெரியோர் சிலரேயாவர்; அவ்வாறு ஆள அறி யாரே மிகப்பலர்; அவர் செல்வம் நில்லாது நிற்றலோ அரிது; அதனுல், தந்துமாற! ஓதிய ஒழுக்கத்தில் ஒரு நாளும் குன்றற்க! வருவார்க்கு வழங்கி வாழ்க!" எனச் சங்க வருணரென்னும் நாகரையர் எனும் நல்லாசிரியர் கூறிய அறவுரையினைச் செவிமடுத்த சிறப்புடையனுதல் அறிக.

"பெரிது ஆராச், சிறிது சினத்தர்;
சிலசொல்லால், பல கேள்வியர்;
நுண் உணர்வினுல், பெருங் கொடையர்;
கலுழ் நனையால், தண் தேறலர்;
கனிகுய்யால், கொழுந்துவையர்;
தாழ்உவந்து, தழூஉ மொழியர்;
பயன் உறுப்பப் பலர்க்காற்றி
ஏம மாக இந்நிலம் ஆண்டோர்
சிலரே; பெரும! கேளினி, நாளும்
பலரே தெய்ய அஃது அறியா தோரே;
அன்னோர் செல்வமும், மன்னி நில்லாது;
இன்னும் மற்றதன் பண்பே, அதனுல்
நிச்சமும் ஒழுக்கம் முட்டிலை; பரிசில்
நச்சுவர நிரப்பல் ஓம்புமதி."

(புறம்: நகூ0)

## ௪௨. தழும்பன்

வாணிப வளத்தாற் சிறந்த கடற்கரைப் பட்டின மாகிய மருங்கூர்ப் பட்டினத்தை அடுத்து ஊணூர் என்றோர் ஊர் உண்டு; ஊணூர் நீர்வளமும், நிலவளமும் நிறையக்கொண்டது; வெண்ணெல் அரிபவர், அரியப்புகு முன்னர், அந் நெல் வயலில் கூடுகட்டி வாழும் புள்ளினங் களை ஊறுசெய்யாது ஓட்டக் கருதித் தண்ணுமை முழக் குவர்; அவ்வயலருகே, வானுற ஓங்கி வளர்ந்திருக்கும் தெங்கு முதலாம் மரங்களின் மடல்களில் கூடுகட்டி வாழும் தேனீக்கள், அத் தண்ணுமையொலி கேட்டஞ்சித் தம் கூடுவிட்டு ஓடும்; தேனீக்கள் அற்ற தேன்கூடு பற்றற்கு எளிதாதல் அறிந்த அவ்வூர்வாழ் குயவர், அத் தேன்கூ டழித்துத் தேன் கொள்வர். அவவூர்ச் சேரிவாழ் பாணர், சிறுவலை கொண்டு சிறுமீன் பிடித்துண்டு மகிழ்ந்து வாழ்வர். இத்துணை வளம்செறிந்த ஊணூர், சூழ அமைந்த பெரிய மதில் உடைமையால் பெற்ற அரிய காவலை யும் உடைத்து.

"வெண்ணெல் அரிஞர் தண்ணுமை வெரீஇக்
கண்மடற் கொண்ட தீந்தேன் இரியக்
கள்ளரிக்கும் குயம்; சிறுசின்
மீன்சீவும் பாண்சேரி
வாய்மொழித் தழும்பன் ஊணூர்." (புறம்: ௩௪௮)

ஊணூர்க்கண், கொடையும், கொற்றமும் குறைவறப் பெற்ற குருசில் ஒருவன் வாழ்ந்திருந்தான்; வாட்போர் வல்லுநய அவ்வீரன், தான் மேற்கொண்ட போர் ஒன்றில், பெண் யானையால் மிதியுண்டு பெரும்புண் பெற்றான்; அப் புண் தந்த தழும்பு, பெரிய வழுதுணங்காய் அளவு பெரி தாதல் கண்ட மக்கள், அவனை வழுதுணைத்தழும்பன் என்று பெயரிட்டுப் பாராட்டினர்; தழும்பன், வாட்போர் வல்லவன்; வாய்மையே வழங்கும் வழக்குடையான்; தன்னைப் பாடிவரும் பாணர் முதலியோர்க்கு வரையாது வழங்கும்

நாளோலக்கச் சிறப்புடையான்; வாட்போர் வன்மையானும், வரையாது வழங்கும் வண்மையானும, வாய்மையுடைமை யானும் அவன் பெற்ற புகழ், தமிழ்நாடு முழுதும் சென்று பரந்தது; அவன் அத்தகு பெரும்புகழ் உடையனுதலை அறிந்த புலவர்கள் பல்லோர் அவனைப் பாராட்டியுள்ள னர்; தூங்கலோரியார் என்ற பழம்பெரும் புலவர் ஒருவரும் அவனைப்பாடிப் பெருமை செய்துள்ளார்; இவ்வாறு புகழ் பரவ வாழ்ந்த தழும்பன் சிறப்புக்கள் அனைத்தையும், பெரும் புலவர்களாய பரணரும், நக்கீரரும் தாம் பாடிய அகப்புறப் பாக்களிடையே வைத்துப் பாராட்டியுள்ளனர்:

"நெய்வார்ந் தன்ன துய்யடங்கு நரம்பின்
இருபாண் ஒக்கல் தலைவன், பெரும்பூண்
ஏஎர் தழும்பன் ஊணூர் ஆங்கண்
பிச்சைசூழ் பெருங்களிறு." (நற்: ௩௦௦)

"வாய்வாள்,
தமிழகப் படுத்த இமிழ்இசை முரசின்
வருநர் வரையாப் பெருநாள் இருக்கைத்
தூங்கல் பாடிய ஓங்குபெரு நல்லிசைப்
பிடிமதி வழுதுணைப் பெரும்பெயர்த் தழும்பன்
கடிமதில் வரைப்பின் ஊணூர் உம்பர்
விரிநிதி துஞ்சும் வீறுபெறு திருநகர்
இருங்கழிப் படப்பை மருங்கூர்ப் பட்டினத்து
எல்லுமிழ் ஆவணம்." (அகம்: உஉஎ)

## சரு. தாமான் தோன்றிக்கோன்

தாமான் எனும் இயற்பெயர் பூண்டு, தோன்றி எனும் மலைக்குரியோனுய் வள்ளல் ஒருவன் வாழ்ந்திருந்தான்; தமிழ்நாட்டில், தோன்றி எனும் பெயருடைய மலைகள் இரண்டு உள்ளன; ஒன்று, பாண்டியநாட்டில், திண்டுக் கல்லுக்கு மேற்கே, பதினைந்து கல்லில் உளது; தான்றிக் குடி யென்றொரு மலையிடை ஊரும் ஆண்டே யுளது; மற்றொன்று கருவூர்க்கு அண்மையில் உளது; அது, தான் தோன்றி மலையென வழங்குகிறது; தாமான் தோன்றிக் கோனைப் பாடிய புலவர் ஐயூர் முடவனர், உறையூர்க்கண் அரசு வீற்றிருக்கும் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனைப் பாடிப் பரிசில் பெறுவான் வேண்டிச் செல்லுங் கால், இடைவழியில் தோன்றிக்கோவைப் பாடினர் எனப் பாட்டு அறிவிப்பதாலும், அப் புலவர் பிறந்த ஐயூர், திருச் சிராப்பள்ளிக்குத் தெற்கே, குளத்தூரை அடுத்துள்ள சிற்றையூராம் என ஆராய்ச்சியாளர் கருதுவதாலும், தான் தோன்றி என்பது, தாமான் தோன்றி என்பதன் திரிபா தல் கூடும் ஆதலாலும், தாமானுக்குரிய தோன்றிமலை, கருவூர்க்கு அண்மையில் உள்ள தான்தோன்றிமலையே யாம். தோன்றிமலை, 'ஓ,' வென ஒலித்து ஓடிவரும் அருவி களையும், வானுற ஓங்கிய உயர்வினையும் உடைத்து எனப் புலவர் பாராட்டுவர்.

தோன்றிக் கோ, தன் காலத்தே, சோணுடாண்ட பேரரசனுய குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனோடு ஒத்த பெருமை யுடையனுவன்; 'கிள்ளிவளவனை யல்லால் பிறர்பால் செல்லேன்; அவனையல்லால் பிறர் முகமும் பாரேன்,' எனச் சூளுரைத்து வாழ்ந்த பெரும்புலவர் ஐயூர் முடவனர்; அவரே, இவனைப் பார்த்துப் பாராட்டிப் பரிசில் பெற்றுர் என்றுல், இவன் பெருமையினை என் னெனப் புகழ்வது! தோன்றிக் கோ, அறவருட் சிறந்த அறவோனுவன்; வீரருட் சிறந்த வீரனுவன்; உழவருட்

சிறந்த உழவனுவன்; தொல்லோர் வழிவந்த தொல்புகழ் உடையான் எனப் புலவர் அவனைப் பாராட்டியுள்ளார்:

"அறவர் அறவன்; மறவர் மறவன்;
மள்ளர் மள்ளன்; தொல்லோர் மருகன்."

ஐயூர் முடவனார், கிள்ளிவளவனைக் காணச் சென்றார்; அவரோ முடவர்; நடந்து சேறல் அவரான் இயலாது; ஏறுபூண்ட தேர் ஏறிச் சென்றார்; சென்ற நாடோ சோணாடு; நீர்வளம் மிக்கது; அதனால் செல்லும் வழியெல்லாம் சேறுன் நிறைந்தது; அச் சேற்று நிலத்தில் நடந்து நடந்து, மேல்நடக்கமாட்டாது தளர்ந்துவிட்டது எருது; உறையூர் அவை யடைதல் எவ்வாறு என அறிய மாட்டாது வருந்தியிருந்தார்; வழிவந்தார் சிலர், அண்மையில் வாழும் தோன்றிக் கோவின் பெருமையினைப் பகரக் கேட்டார்; விரைந்து சென்று அவனைக் கண்டார்; புலவர் தம் உள்ளக் குறிப்புணர்ந்த தோன்றிக் கோ, அவர் உள்ளம் உவக்கும்வண்ணம், வானத்து மீன்போல் எண்ணத்தொலையா ஆனிரையும், அவை ஈர்த்துச் செல்லற் கேற்ற ஊர்தியும் உவந்தளித்து அனுப்பினான்:

"கடுந்தேர் அள்ளற்கு அசாவா நோன்சுவல்
பகடே யத்தையான் வேண்டிவந் ததுவென
ஒன்றியான் பெட்டா அளவை, அன்றே
ஆன்று விட்டனன் அத்தை, விசும்பின்,
மீன்பூத் தன்ன உருவப் பன்னிரை
ஊர்தியொடு நல்கி யோனே, சீர்கொள
இழும் என இழிதரும் அருவி
வான்தோய் உயர்சிமைத் தோன்றிக் கோவே."

(புறம்: ௩௯௯)

## சச. திதியன்

திதியன் எனும் பெயருடையார் மூவர் வாழ்ந்திருந்தனராக, வரலாறு உரைக்கும் சங்க நூல்கள் கூறுகின்றன. நாடோடி வாழ்க்கையினராய கோசர், நிலைத்த வாழ்க்கையினராய் வாழத்தொடங்கி, நாடுகளை அழித்துப் பண் படுத்தி, உழுது பயறு விளைத்திருந்தனர். அன்னி மிஞிலி எனும் பெயருடையா ளொருத்தியின் தந்தை, அந் நிலத்தை அடுத்துள்ள இடங்களில் தன் பசுக்களை மேய விட்டிருந்தார்; அப் பசுக்களுள் சில, கோசர்க்குரிய நிலத்தில் புகுந்துவிட்டன. அச் சிறு குற்றத்திற்காக அன்னி மிஞிலியின் தந்தை கண்களை அழித்துச் சிறுமை செய்தனர் கோசர். கோசர் கொடுஞ்செயல் கண்டு சினங் கொண்ட அன்னிமிஞிலி, "என் தந்தையின் கண்களைப் போக்கிய அக் கோசர் உயிரைப் போக்காது உண்ணலும் உண்ணேன்; உடுத்தலும் செய்யேன்," என வஞ்சினம் உரைத்து, அவரை அழிக்கவல்லான் அழுந்தைவாழ் திதியனே என அறிந்து அவன்பாற் சென்று தன் குறை கூறினாள். திதியனும், அவள்பொருட்டு அத் தவறு செய் தாரைக் கொன்று முரண் போக்கினான்; அவர் அழிவு கண்ட அன்னிமிஞிலி அகமகிழ்ந்தாள். இவ்வாறு அன்னி மிஞிலிக்காகக் கோசரைக் கொன்ற அழுந்தைத் திதியன் ஒருவன். இவன் வரலாறு விளங்கத் துணைபுரிந்தவர் பரணர் :

"பயறு ஆபுக் கென,
வாய்மொழித் தந்தையைக் கண்களைந்து அருளாது,
ஊர்முது கோசர் நவைத்த சிறுமையிற்
கலத்தும் உண்ணாள்; வாலிதும் உடாஅள்;
சினத்திற் கொண்ட படிவம் மாறாள்;
மறங்கெழு தானைக் கொற்றக் குறும்பியன்
செருவில் நன்மான் திதியற்கு உரைத்து, அவர்
இன்னுயிர் செகுப்பக் கண்டுசினம் மாறிய
அன்னி மிஞிலி."

"தந்தை, கண்கவின் அழித்ததன் தப்பல் தெறவர
ஒன்றுமொழிக் கோசர்க் கொன்று முரண்போக்கிய
கடுந்தேர்த் திதியன் அழுந்தைக் கொடுங்குழை,
அன்னி மிஞிலியின் இயலும்." (அகம்: உகூஉ, ககூகூ)

அன்னி என்பானெருவன், எவ்வி, எனும் வேளிர் தலைவனுடன் நட்புப்பூண்டு வாழ்ந்திருந்தான். அவ் வன்னிக்குத் திதியன் என்பானுடைய காவல் மரமாய புன்னையை அழித்து வெற்றிபெற ஆசை உண்டாயிற்று; அஃதறிந்த எவ்வி, அன்னிகொண்ட ஆசை அடாதது; அவனுக்கே அழிவு தருவது என்றெல்லாம் கூறித் தடுத்தான். அவன் அறிவுரையை ஏற்றுக்கொள்ளாத அன்னி, திதியன் புன்னையை வெட்டி வீழ்த்தி அழித்தான்; அதனுல் சினங்கொண்ட திதியன், அன்னியைக் குறுக்கை எனும் இடத்தே எதிர்த்துக் கடும்போரிட்டுக் கொன்ருன். நண்பன் கூறிய அறிவுரையைக் கேளாது அழிவுற்ற அன்னியைப் புலவர் பலரும் பழித்தனர்.

இனி, ஈண்டுக் கூறிய புன்னை, திதியனுக்குரிய தன்று; அது, அன்னியின் காவல் மரமேயாம்; அப் புன்னையை அழிக்க வந்தான் திதியன்; அப்புன்னைபால் தான் கொண்ட ஆசையால், திதியனெடு போரிட்டு உயிர் துறந்தான் அன்னி என்றும் சிலர் கூறுவர். சோணுட்டினனுய பகைவன் ஒருவன், தன் நாட்டின்மீது படையெடுத்துப் போந்து, தன் காவல் மரத்தை அழிக்கும்பொழுது, "அவ்வாறு அழிப்பானை எதிர்த்து அழித்தல்வேண்டும்; அதுவே ஆண்மைக்கு அழகு," என்று கூறி ஊக்காது, "அழிப்பான் அழிக்கட்டும்; அவனெடு போரிடப் போகற்க," என்று கூறி அடக்குதல் அறமாகாது; அது நன்மொழியும் ஆகாது. அவ்வாறு கூறித் தடுப்பார் உளராயினும், அவர் உரை கேட்டு அடங்கிவிடாது, போரிட்டு உயிர் துறப்பானை உலகம் போற்றுமே யல்லால், "கேளாது போய்க் கெட்டான்," எனப் பழிக்காது. மாருக, பிறன் ஒருவனுக்குரிய காவல்மரத்தை வலியச் சென்று அழிப்பானுக்கு, "அவ்வாறு அழிக்க ஆசை

கோடல் அறமாகாது; ஆக்கமும் ஆகாது;'' எனக்கூறித் தடுத்தலும், அவ்வாறு அடக்கவும் அடங்காது, சென்று அழித்து, அதனால் உயிர் துறந்தானைப் பழித்தலும் உலகின் இயற்கையாகும். ஆகவே, ஈண்டுக் கூறிய புன்னை, அன்னிக் குரியதன்று; திதியனுக்கே உரியது; அதை அழிக்க ஆசை கொண்டான் அன்னி; அவ்வாசை அறமன்று எனத் தடுத்தான் எவ்வி; அதைக் கேளாது போய் அழித்து அழிந்தான் அன்னி; ஆகவே அவன் செயலைப் பழித்தனர் புலவர்கள் எனக் கோடலே பொருந்தும் நெறியாம். இவ்வாறு புன்னையை அழித்த அன்னியைக் கொன்றோன் ஒரு திதியன். இவன் வரலாறு உணரத் துணைபுரிந்தவர்கள், நக்கீரர், வெள்ளிவீதியார், கயமனார் முதலிய மூவராவர்.

> "எவ்வி, நயம்புரி நன்மொழி அடக்கவும் அடங்கான்,
> பொன்னிணர் நறுமலர்ப் புன்னை வெஃகித்
> திதியனொடு பொருத அன்னி போல
> விளிகுவை.''
>
> "அன்னி குறுக்கைப் பறந்தலைத் திதியன்
> தொன்னிலை முழுமுதல் துமியப் பண்ணிப்
> புன்னை குறைத்த ஞான்றை, வயிரியர்
> இன்னிசை ஆர்ப்பினும் பெரிதே.''
>
> "அன்னி குறுக்கைப் பறந்தலைத் திதியன்
> தொன்னிலை முழுமுதல் துமியப் பண்ணிய
> நன்னர் மெல்லிணர்ப் புன்னை.''

(அகம்: கஉசு; சரு; (கசரு)

வேளிரொடு பகைகொண்டு, வாட்போர் புரிந்தவனும், பாணர் முதலாம் பரிசிலர், பொருள் பல பெற்று மகிழும் வண்ணம் நாளவை இருந்த நனிமிக நல்கும் கொடைக்குணம் உடையானுமாய திதியன் ஒருவன். இவன் வரலாறு உரைத்தார் மாமூலனார்:

> "பாணர் ஆர்ப்பப் பலகலம் உதவி
> நாளவை இருந்த நனைமகிழ் திதியன்

வேளிரொடு பொரீஇய கழித்த
வாய்வாள் அன்ன வறுஞ்சுரம்.'' (அகம்: ௩௩௧)

இம்மூவரே யல்லாமல், பகைவர்தம் பேராண்மையைத் தன் வில்லாண்மையாலும், அவர் தம் யானைப் படையைத் தன் வேற்படையாலும் அழிக்க வல்லவனும், பொன்னலாய பெரிய தேர் பல உடையவனும், பொதியிலை ஆண்டிருந்தோனுமாய திதியன் ஒருவனும், பாண்டியன் நெடுஞ்செழியனை, அவன் பகைவரோடு சேர்ந்துகொண்டு, தலையாலங் கானத்தே எதிர்த்துப் போரிட்டு அழிந்த திதியன் ஒருவனும் உள்ளனன். இவருள், பொதியிற் றிதியன் வரலாற்றினைப் பரணரும், ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியனும், நெடுஞ்செழியன் பகைவனாய திதியன் வரலாற்றினை நக்கீரரும் உரைத்துள்ளவர்.

''பொருநர், செல்சமம் கடந்த வில்கெழு தடக்கைப்
பொதியிற் செல்வன், பொலந்தேர்த் திதியன்''
''களிறுகண் கூடிய வாள்மயங்கு ஞாட்பின்
ஒளிறு வேல்தானைக் கடுந்தேர்த் திதியன்''
..............................................
புகலரும் பொதியில்''
''கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்,
ஆலங் கானத்து அகன்றலை சிவப்பச்
சேரல், செம்பியன், சினங்கெழு திதியன்,
போர்வல் யானைப் பொலம்பூண் எழினி,
நாரரி நறவின் எருமை யூரன்
தேங்கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின்
இருங்கோ வேண்மான், இயல்தேர்ப் பொருநன் என்று
எழுவர் நல்வலம் அடங்க.'' (அகம்: ௨௫, ௩௨௨; ௩௬)

அன்னிமிஞிலியின் துயர் போக்கக் கோசரைக் கொன்ற அழுந்தைத் திதியன் வரலாறு உரைக்கும் பாணரே, பொதியில் திதியன் வரலாற்றினையும் கூறுதலானும், கோசரைக் கொன்ற அழுந்தைத் திதியனைச் ''செருவியல் நன்மான் திதியன்'' (அகம்: ௨௬௨), ''கடுந்தேர்த்

திதியன்" (அகம்: ககசு") எனச் சிறப்பித்துக் கூறும் பரணரே, பொதியில் திதியனுக்கும் அதே சிறப்புக்களை ஏற்றி, "ஒளிறுவேல் தானைக் கடுந்தேர்த் திதியன்" (அகம்: நஉஉ) எனக் கூறுதலாலும், கோசரைக் கொன்று அழுந்தையில் வாழ்வோனும், பொதியிலில் வாழ்வோனும் ஒருவனே எனல் பொருந்தும்.

அன்னியோடு போரிட்டுப் புன்னையை இழந்த திதியனைப் பாடிய நக்கீரரே, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனோடு பகைகொண்டு போரிட்டாருள் திதியனும் ஒருவன் எனக் கூறுதலால், அன்னியொடு பகை கொண்டோனும் பாண்டியன் நெடுஞ்செழியனோடு பகை கொண்டோனும் ஒருவனே எனலும் பொருந்தும்.

திதியன் பகைவன் அன்னி; அன்னியின் நண்பன் எவ்வி; எவ்வி வேளிர் வழிவந்தவன்; ஆகவே, அன்னியும், வேளிர் குலத்தானாதல் வேண்டும்; அதனால், அன்னியின் பகைவனாய திதியன், அவ்வேளிர்க்குப் பகைவனாதல் வேண்டும்; வேளிர் பகைவர் கோசர்; ஆகவே, வேளிர் பகைவனாய திதியன் கோசர் வழிவந்தவனாவன்.

பொதியில் பாண்டியர்க்கு உரித்து; அப்பொதியிலில் வாழ்ந்தான் எனக் கூறப்படுகிறான் ஒரு திதியன்; பாண்டியர் படையில் கோசரும் பணியாற்றினர் என அறிகிறோம். "திருந்திலை நெடுவேல் தென்னவன் பொதியில்' (புறம்: அகம்: கஙஅ) என்பதால் தென்னவராய பாண்டியர்க்கு உரித்து என அறியப்பட்ட பொதியில், வேளிர் வழி வந்த ஆய் அண்டிரனுக்கு உரித்து என்கிறார் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்: "கழல்தொடி ஆஅய் மழை தவழ் பொதியில்" (புறம்: கஉஅ). இதனால், தென்னவர்க்குரிய பொதியிலைக் கைப்பற்றி ஆண்டிருந்தான் ஆஅய் எனத் தெரிகிறது. பாண்டியர் பொருட்டு வேள் ஆயை வென்று, பொதியிலைப் பாண்டியர் உடைமையாக்கினான் திதியன்; அதனால், பொதியில் திதியன் எனவும் சிறப்பிக்கப் பெற்றான்; ஆகவே, பொதியில் திதியன், பாண்டியர்

துணைவனாய கோசர் குலத்தானவன். அன்னியாகிய வேளோடு ஒரு முறையும், ஆய் அண்டிரனாய வேளோடு ஒருமுறையும் போரிட்டமையான், திதியன், வேளிரோடு போரிட்டு வென்ற வாளுடையான் என வாழ்த்தப் பெற்றுளான்.

நன்னனுக்குரிய பாழி நகரில், வேண்மான் ஆஅய் எயினனோடு போரிட்டுக்கொன்ற மிஞிலி, கோசர் குலத்தவன்; அவன் பெயரை உடைமையால், அன்னி மிஞிலி, கோசர் குலத்தவளாவள். அவள் தந்தையின் கண் களைந்தவரும் கோசர்; ஆகவே, அது ஓரினத்திற்குள்ளேயே நேர்ந்த முரண்பாடாம்; அம் முரண்பாட்டைப் போக்க முன் வந்து, அப்பிழை புரிந்தாரைக் கொன்று முரண் போக்கல், அவ்வினத்தானல்லாத பிறன் ஒருவனால் இயலாது; அவ்வினத்தாருள் தலைவனாயினான் ஒருவனாலேயே ஆகும். ஆகவே, பிழை புரிந்த கோசர் உயிரைப் போக்கி, அன்னி மிஞிலியின் துயர் துடைத்த திதியன் கோசனே ஆவன்.

கோசர், பாண்டியர் படையில் பணியாற்றுபவர்; அவரோடு நண்பராய் வாழ்பவர்; ஆகவே, தலையாலங்கானத்தே, பாண்டியன் நெடுஞ்செழியனோடு போரிட்டு உயிர் துறந்த திதியன், கோசன் அல்லன்; கோசர் பகைவராய வேளிர் வழிவந்தவனாவன். ஆகத் திதியன் எனும் பெயருடையார் இருவராவர். அன்னியோடு போரிட்டோனும், அன்னி மிஞிலியின் துயர் துடைத்தோனும், பொதியிலில் வாழ்ந்தோனும், வேளிரோடு போரிட்டோனுமாய கோசனாய திதியன் ஒருவன்; பாண்டியன் நெடுஞ்செழியனோடு பகைத்துப் போரிட்டு உயிர்துறந்த வேளாகிய திதியன் மற்றொருவன். இவ்வாறு முடிவுகட்டிக் கூறுவர் சில ஆராய்ச்சியாளர்.

எவ்வி, எவ்வி வேள் என்பது உண்மையே; அவன் வேள் என்பதினாலேயே, அவன் நண்பனாய அன்னியும் வேளாதல் வேண்டும் எனல் பொருந்தாது. கடல்சூழ்

இலங்கைக் கயவாகு வேந்தனும், கங்கைக்கரைவாழ் நூற்றுவர் கன்னரும், சேரன் செங்குட்டுவன் நண்பர்களாவர்; அவர்களை யெல்லாம், அவன் நண்பர் என்ற காரணத்தால் சேரர்குலத்தைச் சேர்ந்தவர் என்று கூறுவார் எவரும் இலர். வேறுவேறு இனத்தவராய மலையமான்களும், சோழரும், நட்புடையராக விளங்கியதைப் புலவர்கள் கூறக் கேட்டிருக்கிறோம்; வேறு வேறு குலத்தவராய, சேரமான் மாரி வெண்கோவும், பாண்டியன் உக்கிரப் பெருவழுதியும், சோழன் இராசசூயம் வேட்டபெருநற்கிள்ளியும் ஒன்றுகலந்து ஓரிடத்தே வாழக்கண்டு வாழ்த்தியுள்ளார் ஔவையார். அவரெல்லாம் ஓரினத்தவர் என ஒருவரும் கூறார். ஆகவே, நட்புடைமை ஒன்றையே கொண்டு ஓரினம் எனக் கோடல் பொருந்தாது. மேலும், வேள் அல்லன் எனவே கோசனாவன்; கோசன் அல்லன் எனவே வேளாவன் எனக் கொள்வதாயின், தமிழகத்தில், கோசரும், வேளிருமாய இரண்டு இனமே உண்டு; வேறு இனத்தவர் இல்லை எனக் கோடல்வேண்டும்; அவ்வாறு கோடல் பொருந்தாது. தமிழகத்தில, அவ்விரு இனமேயல்லால், வேறுபல இனங்களும் இடம் பெற்றிருந்தன; அதியமான்களையும், மலையமான்களையும், திரையர்களையும், தொண்டையர்களையும், ஓவியர்களையும், இவர்போலும் பல்லினத்தவர்களையும் பழைய தமிழகத்தில் காண்கிறோம். ஆகவே, எவ்வி, வேள்; ஆகவே, அவன் நண்பன் அன்னியும் வேளாவன்; அவ்வன்னியின் பகைவன் திதியன்; ஆகவே அவன் வேளாகான்; வேளிர் பகைவனாய கோசனாவன் எனக் கோடல் பொருந்ாது.

பாண்டியர்க்குரியது பொதியில்; ஆய் அண்டிரனுக்குரியது பொதியில்; திதியனுக்குரியது பொதியில் எனக் கூறுவதேபோல், சோழர்க்குரியது ஆர்க்காடு (நற்: உஉஎ); அழிசிக்கு உரியது ஆர்க்காடு (நற்: ககூ0) என்றும், பாண்டியர்க்கு உரியது கூடல் (அகம்: ககசு); அகுதைக்கு உரியது கூடல் (புறம்: ௩௪எ) என்றும், அருவந்தைக்குரியது அம்பர் (புறம்: ௩அ௫); கிள்ளிக்குரியது அம்பர்

(நற்: கசக) என்றும், ஓர் ஊரையே இருவர்க்கு உரியதாகக் கூறுவதுண்டு. அவ்வாறு கூறுவதினலேயே, அவ்வூர்களை, ஒருவரை அழித்து ஒருவர் கைக்கொண்டனர் எனக் கொள்வதில்லை. மேலும், ஆய் அண்டிரன், பாண்டியனெடு பகை கொண்டிருந்தான் எனக் கொள்ளத்தக்க அகச் சான்று எதுவும் இல்லை; ஆனல், திதியன் ஒருவன் பாண்டியன் நெடுஞ்செழியனெடு போரிட்டான் எனக் கூறுகிறது (அகம்: ந௬). இவற்றை யெல்லாம் புறக் கணித்துவிட்டு, திதியன் கோசன் என்பதை நாட்டவல்ல நல்ல சான்று எதுவும் இல்லையாகவும், அவனைக் கோசனுகக் கொண்டு, பாண்டியர் அவையில் கோசர் வாழ்ந்தமையால், அக் கோசர் இனத்தானுய திதியன் பாண்டியன் நண்பனுவன்; அவன், பாண்டியர்க்குரிய பொதியிலைக் கைப்பற்றி ஆண்டிருந்த ஆய் அண்டிரனை வென்று,பொதியிலை மீண்டும் பாண்டியர்க்கே உரிமையாக்கினன் ஆகவே பொதியில் திதியன் எனவும் சிறப்பிக்கப்பெற்ருன் என்று நிகழாததை நிகழ்ந்தது என நாட்டி, பகைகொண்டு போரிட்ட திதியனை நண்பனுகவும், பகையுடையான் எனக் கூறுவாரற்ற ஆயைப் பகைவனுகவும் மாற்றிக் கூறல் பொருந்தாதாம்.

ஞிமிலி கோசன்; அன்னி மிஞிலி, அவன் பெயரைக் கொண்டுள்ளாள்; ஆகவே, அவள் கோசர் குலத்தவள் என்று முடிவுகொள்பவர், கொள்வார் கூற்றுப்படியே, அன்னி எள்பான் வேளிர்வழி வந்தவன்; அவன் பெயரைத் தன் பெயரின் முதற்கண் மேற்கோண்டுள்ளாள் அன்னி மிஞிலி; ஆகவே, அவள் வேளிர் வழிவந்தவளாவள் எனக் கூறுவார்க்கு யாது கூறுவாரோ அறியோம். ஒரே பெயர், பல்வேறு இனமக்கட்குப் பெயராக வழங்குதல் உண்டு; பழையன் எனும் பெயர், பாண்டியர் படைத்தலைவன் ஒருவனுக்கும், சோழர் படைத்தலைவன் ஒருவனுக்கும் பெயராய் அமைந்திருத்தல் காண்க. வேளிரொடு பொருத வாளுடைமையான் வேளிர் அல்லாதான் ஒருவனும் திதியன் எனும் பெயர்கொண்டிருந்தான்; வேளிரொடு கூடிப் பாண்டியனெடு போரிட்ட வேள் ஒருவனும் திதியன்

எனும் பெயர் கொண்டிருந்தான் என, அவ்வாராய்ச்சி யாளரே கூறுவதையும் நோக்குக. ஆக, பகைத்து நிற்கும் இருவேறு குலத்தாரும், தம் பெயர்களாக, ஒரு பெயரையே கொள்வது இயல்பே என்பது பெறப்படவும், ஒரு பெயர் ஒருகுலத்தார்க்கே உரித்து என்பதுபட மிஞிலி, கோசன்; அன்னிமிஞிலி, அவன் பெயரைக் கொண்டுள்ளாள்; ஆகவே அவளும் கோசர் குலத்தவள் எனல் பொருந்தாது. ஆகவே, அன்னிமிஞிலி, கோசர் குலத்தவள் எனக் கொண்டு, அதுவே காரணத்தால், கோசரைக் கொன்று முரண்போக்கிய திதியனைக் கோசன் எனக் கோடலும் பொருந்தாது.

மேலும், "கோசர்க் கொன்று முரண்போக்கிய கடுந் தேர்த் திதியன்" என்ற தொடரை ஒருமுறை நோக்கினும், கோசர் வேறு; அவரைக் கொன்று முரண்போக்கிய திதியன் வேறு என்பதுதானே பெறப்படுதலையும் உணர்க. வேளிரொடு போரிட்ட வாள்உடையான் ஒரு திதியன் என்பதைக் கொண்டே, அத் திதியன் வேளாகான் என வரையறுத்துக் கூறுவோர், கோசரைக் கொன்று முரண் போக்கினன் ஒரு திதியன் என்பதைக் கொண்டு, அவன் கோசனாகான் எனக் கொள்வதன்றோ நியதி. அதை விடுத்து, கோசரைக் கொன்றோன், கோசனன்றி வேறு கான் எனல் எவ்வாறு பொருந்துமோ?

ஆகவே, அன்னியொடு போரிட்டோனும், அன்னி மிஞிலியின் துயர் துடைத்தோனும், பொதியில் உடையோ னும், வேளிரொடு பொருதோனும் கோசனாகான் என உணர்க. அவன் வேள் அல்லன் என்பதை அவரே கூறி விட்டனர்.

தலையாலங் கானத்தே, பாண்டியனொடு போரிட்ட திதியன், வேளிர் வழிவந்தவனல்லன்; அவன் வேளாயின், அவனோடு சேர்ந்து பாண்டியனை எதிர்த்த இருங்கோ வேண்மான் என்பானை மட்டும், அப் பாட்டைப் பாடிய புலவர், வேள் என வேறுபிரித்து வழங்கியிருக்க மாட்டார்;

அவர் அவ்வாறு கூறியுள்ளமையால், ஆண்டு எதிர்த்த ஏனையோரெல்லாம் வேளிர் அல்லர் என்பதே அவர் கருத்தாதல் அறிக. ஆகவே, அத் திதியன் வேள் ஆகான், நிற்க. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பகைவனாய திதியனைப் பாடிய நக்கீரரே, அன்னியொடு புன்னை காரணமாகப் போரிட்ட திதியனையும் பாடியுள்ளமையால், அவ்விரு திதியர்களும் ஒருவனே ஆவர்; ஆகவே, அத்திதியனும் வேள் அல்லன்; அவன் கோசன் அல்லன் என்பது முன்னரே கூறப்பட்டது.

திதியன் எனும் பெயருடையார், இருவரோ, மூவரோ அல்லர்; அப்பெயருடையான் ஒருவனே; அவனைப் பாடிய புலவர்கள் அனைவரும், அவன் செயல் அனைத்தையும் எடுத்துக்கூறுாது. அவற்றுள், தாம் தாம் விரும்பும் சிலவற்றை மட்டுமே எடுத்துக்கூறிப் பாராட்டியுள்ளனர்; ஒருவர் பாராட்டிய பண்பை ஒருவர் பாராட்டாராயினர். ஒருவர் ஒன்றைப் பாராட்டினர்; ஒருவர் பிறிதொன்றைப் பாராட்டினர். ஆகவே, அன்னியொடு போரிட்டோனும், அன்னிமிஞிலியின் துயர் களைந்தோனும், பாண்டியனைப் பகைத்தோனும், வேளிரொடு வாட்போர் புரிந்தோனும், அழுந்தைக்குரியோனும், பொதியிலில் வாழ்ந்தோனும் ஒருவனே; அவன், கோசனும் அல்லன்; வேளும் ஆகான்; அழிசி, அறுகை, குமணன், கொடுமுடி, தழும்பன், திரையன், நாஞ்சில்வள்ளுவன், நாலைகிழவன் என்பாரைப்போல், அவ்விரு இனங்களினும் வேறுபட்ட இனத்தவனாவன் எனக் கொள்க.

இவ்வாறு கொள்ளும் முடிபினை ஏற்றுக்கொள்ளத் தடையாக நிற்பது, திதியன் ஊர் அழுந்தையாம் என ஓர் இடத்தும், குறுக்கைப் பறந்தலையாம் என மற்றோர் இடத்தும், பொதியிலாம் எனப் பிறிதோரிடத்தும் கூறப்படுதலேயாம். சங்க இலக்கியங்களால் அறியப்படும் பண்டைத் தமிழகத்துப் பேரூர்கள் இன்னின்ன; அவை உள்ள இடங்கள், இன்னின்ன என வரையறுத்துக்கூறுதற்கேற்ற சான்றுகள் கிடைக்கப் பெறவில்லை; ஆகவே, அக்

கால அரசர்க்கு உரியனவாகக் கூறப்பெறும் ஊர்கள், அவ்வரசர் தம் வரலாறுகளை வரையறுக்கும் சிறந்த சான்றுகளாகாமை யுணர்க.

இதனுல் அன்னியை அழிக்கவும், கோசரைக் கொல்லவும், பாண்டியனைப் பகைக்கவும், வேளிரை வீழ்த்தவும் வல்ல பேராண்மை யுடையவனுய்ப் புலவர் போற்ற வாழ்ந்திருந்தான் திதியன் என்பது புலனுதல் அறிக.

கழக வெளியீடு : எசரு

சங்ககால அரசர் வரிசை - க.

# சேரர்

ஆசிரியர்

புலவர் கா கோவிந்தன் எம் ஏ

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.

திருநெல்வேலி-6 சென்னை-1.

1961

காங்கேய முதலியார் கோவிந்தன் (1917)

© THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.

Ed 1 Nov 1954
Reprint Feb 1961

V212, C.C5
K1

'விநோதன்' அச்சகம், 33, ஜோன்ஸ் தெரு, சென்னை-1—C. 800

# பதிப்புரை

வடவேங்கடம் தென்குமரி இடைப்பட்ட எல்லையமைந்த நம் தமிழகத்தை ஆட்சிசெய்த முடியுடைவேந்தர் மூவராவர். அவர் சேர சோழ பாண்டியர் எனப் பெறுவர். இவருள் முதற்கண் வைத்துப் பண்டுதொட்டே வழங்குதற்குரியோர் சேர வேந்தர் ஆவர்.

இச் சேரர் கல்தோன்றி மண்தோன்ருக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்த வீரக்குடியினராவர். இவர் அறமும் மானமும் ஆட்சித்திறலும் கல்வி கேள்விகளும் ஒருங்கே அமைந்த ஒண்மையராவர்; இவர்தம் பெருமையை மிக்கெடுத்துக் கூறுவன சங்ககாலத் தமிழ் நூல்கள்.

செல்வப் பெருக்கம், வீரப்பெருக்கம், கல்விப் பெருக்கத்தில் முன்னணியில் விளங்கும் இப்பெருவேந்தர்கள், அந்துவஞ்சேரல் இரும்பொறை' முதலாக 'வஞ்சன்' ஈருக இருபத்தைவராவர். இவர்தம் அரிய வரலாற்றைப் பழந்தமிழ் நூல்களின் துணை கொண்டும், கல்வெட்டுக்கள், பேரறிஞர்கள் ஆய்வுநூல்களின் அகச்சான்றுகள் கொண்டும், தம் கூர்த்த மதிநலத்தால் திரு. புலவர், கா. கோவிந்தன் எம். ஏ. அவர்கள் ஆக்கித் தந்துள் ளார்கள்.

ஏற்கெனவே, சங்கத் தமிழ்ப்புலவர் வரிசை க முதல் கசு வரை அவர்கள் எழுதித்தந்து அவைகளைத் தனித்தனி நூல் களாகவும், இரண்டு மூன்று சேர்ந்த தொகுப்பு நூல்களாகவும் செப்பஞ்செய்து அழகியதாகக் கட்டடங்கட்டி நூலுருவாக்கி வெளிப்படுத்தியுள்ளோம்.

இதுகாலை அம்முறையில் 'சங்ககால அரசர் வரிசை' என்று துவங்கி, முடியுடை வேந்தர்களான சேர சோழ பாண்டியர் வரலாறுகளையும், ஏனைய குறுநில மன்னர்கள் வரலாறுகளையும் தனித்தனி ஆறு நூல்களாக வெளியிட எண்ணிச், சங்ககால அரசர் வரிசையில் முதலாவதாகச் 'சேரர்' என்னும் பெயரமைத்து இந்நூலை வெளியிட்டுள்ளோம். இதனை அடுத்து அடுத்துச் சோழர், பாண்டியர், குறுநில மன்னர் வரலாறுகளும் வெளியிடப்பெறும்.

அருங்கலைச் செல்வரும், ஆய்புலஅறிஞரும், கவிஞரும், கணக்காயரும், மாணவரும், தமிழ்நலம் பேணும் தகைமையாளரும், பிறரும் வாங்கிக் கற்றுப் பழந்தமிழ் மன்னர்கள் மாண்பையும், அவர்தம் அரும்பெறல், ஆற்றல்களையும் அறிந்து இன்புற்று 'எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே' என, நம் தமிழகத்தை வாழ்த்தி வளம்பெற்றேருங்க வேண்டுகின்ருேம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| | தோற்றுவாய் | 1 |
| க. | அந்துவஞ்சேரல் இரும்பொறை | 6 |
| உ. | ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் | 8 |
| ௩. | இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் | 14 |
| ச. | இளங்குட்டுவன் | 25 |
| ரு. | இளஞ்சேரல் இரும்பொறை | 26 |
| சு. | உதியன் சேரலாதன் | 33 |
| எ. | கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் | 39 |
| அ. | கணைக்கால் இரும்பொறை | 50 |
| கூ. | கருவூர் ஏறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை | 54 |
| க0. | கருவூர்ச் சாத்தன் | 57 |
| கக. | களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் | 59 |
| கஉ. | குட்டுவன் கோதை | 64 |
| க௩. | கோக்கோதை மார்பன் | 65 |
| கச. | கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை | 67 |
| கரு. | செல்வக் கடுங்கோ வாழியாதன் | 69 |
| கசு. | தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை | 74 |
| கஎ. | நம்பி குட்டுவனார் | 86 |
| கஅ. | பல்யானைச் செல்கெழு குட்டுவன் | 88 |
| ககூ. | பாலைபாடிய இளங்கடுங்கோ | 97 |
| உ0. | மருதம்பாடிய இளங்கடுங்கோ | 102 |
| உக. | மாந்தரம் பொறையன் கடுங்கோ | 105 |
| உஉ. | மாரிவெண்கோ | 107 |
| உ௩. | முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன் | 110 |
| ௨ச. | யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை | 112 |
| உரு. | வஞ்சன் | 118 |

# சேரர்

## தோற்றுவாய்

உலக அரங்கில், தமிழ்நாடு உயர்ந்து விளங்கிய காலம் ஒன்று இருந்தது; உலகத்தார்க்கெல்லாம், அறுசுவை உணவளித்து அவர் உடலை ஓம்பியும், ஆன்ற அறிவளித்து, அவர் உயிரை ஓம்பியும் உயர்வுற்ற காலம் அது. உலக நாடுகள் அனைத்தினும் அறிவில், ஆற்றலில், செல்வத்தில், செழுமையில், பொன்னில், பொருளில், நாகரிக நற்பண்பில் நனி சிறந்தது எங்கள் நாடு என்று, இன்று பெருமைகொள்ளும் நாடுகள், உலகமக்கள், தங்கள் உணர்வாலும் உணரலாகா அத்துணை இருள்செறிந்து விளங்கிய அக்காலத்தில், நாகரிகத்தின் நடுநாயகமாய், நல்லாட்சிக்கோர் எடுத்துக்காட்டாய், அறிவொளி வீசும் பெருநாடாய்ப் பெருமையுற்றிருந்தது நம் தமிழ்நாடு.

தமிழகம், இமயம்முதல் குமரிவரையுள்ள பெருநிலப் பரப்பினைக் கொண்ட பெருநாடாய் விளங்கிய காலமும் உண்டு:

> "தென்குமரி வடபெருங்கல்
> குணகுட கடலா எல்லை," (மதுரைக்காஞ்சி : ௭0-௧)
> "வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
> தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
> குணாஅது கரைபொரு தொடுகடல் குணக்கும்
> குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்"
> (புறம் : ௬)

என, மாங்குடி மருதனாரும், இளங்கோவடிகளும் கூறுவன அறிக. வடவெல்லை, விந்தியமாகக் குறைந்தது பின்னர்;

இறுதியாக, வேங்கடமும், குமரியும் வடதென் எல்லைகளாக விளங்கி வருகின்றன பலநூறு ஆண்டுகளாக. தொல்காப்பியர் காலத்திலேயே இந்நிலை உண்டாகி விட்டது என்ப.

"வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்." (தொல் : பாயிரம்)

தமிழ்நாடு, மிகப் பழைய காலமாகவே, சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது; இந்நாட்டை மூவேந்தர் நாடு எனப் பெயரிட்டு அழைப்பர், ஆசிரியர் தொல்காப்பியனார்; "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு" (பொருள் : செய்யுள் : எகூ.) என்பது தொல்காப்பியம். மூவேந்தர் ஆட்சி, மேற்கே நிலவிய உரோமானியப் பேரரசைப்போலவும், கிழக்கே நிலவிய சீனப்பேரரசைப் போலவும் பழைமையும், பெருமையும் வாய்ந்த பேரரசாய்த் திகழ்ந்தது; இவ்வரசுகளை அமைத்த முதல்வர் இன்னர் என்பதை எண்ணத்தால் எண்ணிக்காணலும் ஒண்ணுதாய் உளது. இவர் தம் பழைமைபற்றிப் பேசவந்த பெரியோரெல்லாம், "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்தகுடி" என்றும், "படைப்புக் காலம் தொட்டு மேம்பட்டு வரும்குடிகள்" என்றுமே கூறி அமைந்தனர். இரண்டாயிரத்து இருநூறு ஆண்டுகட்கு முற்பட்ட காலத்தே, இந்தியப் பெருநிலப் பரப்பனைத்தையும் தன் ஒருகுடைக்கீழ் வைத்து உலகாண்ட மௌரியப் பேரரசனும் அசோகனே, சேர சோழ பாண்டியப் பேரரசுகள், என் ஆட்சிக்கடங்காப் பேரரசுகளாம் எனக் கூறுவனாயின், இந்நாடுகளின் பழைமையும், பெருமையும் கூறத்தக்கன ஆமோ? வடமொழியின் முதற்பெருங் காவியமாகிய வான்மீக இராமாயணமும், பாரதமும், மூவேந்தர் நாட்டின் தனி சிறப்புக்களையும் அவ்வரசர்களின் ஆற்றற் பெருமையையும் பாராட்டிக் கூறுகின்றன; என்னே தமிழ் நாட்டின் தொன்மை! என்னே தமிழரசர் தம் பெருமை!

மூவேந்தர் நாடுகள் முறையே, குடபுலம், குணபுலம், தென்புலம் என வழங்கப் பெறும். செந்தமிழ் மொழி வழங்கும் நாடுகளாகப் பண்டு விளங்கிய பன்னிரண்டு நாடுகளுள், குட்டம், குடம், கற்கா, பூழி, மலாடு என்ற ஐந்து நாடுகளையும் உள்ளடக்கிய நிலமே, குடபுலம் என்ற பெயரால் வழங்கிய சேரநாடாகும். சேலம், கோவை மாவட்டங்களைக் கொண்ட கொங்குநாடும், அச்சேர நாட்டின் உள் நாடுகளுள் ஒன்று, அயிரை, கொல்லி, பாயல், நன்று, நேரி முதலாய மலைகள், சேர நாட்டிற்குச் சிறப்பளித்து நிற்கும் மலைகளாம்; அந்நாட்டின் வளம் பெருக ஓடும் ஆறுகள், ஆன்பொருநை, காஞ்சியாறு, குடவனாறு, காரியாறு, பேரியாறு, முதலாயினவாம். கன்னிக்காவிரியின் தோற்றமும், இளமையும் ஈண்டே. பொன்கொழிக்கும் புறநாட்டு வாணிப நிலையங்களாகவும், வளங்கொழிக்கும் உள்நாட்டு ஊர்களாகவும், அரசியற்றலைமை நிலையங்களாகவும் சிறப்பளிக்கும் சேர நாட்டுச் செல்வப் பேரூர்கள், கருவூர், தொண்டி, நறவு, மரந்தை, மாந்தை, வஞ்சி முதலாயினவாம். சேரநாடு பல்வேறு வளங்களையும் ஒருங்கு கொண்ட நாடே ஆயினும், அவ்வளங்களுள் குறிப்பிடத் தக்க பெருவளம், வேழம் முதலாம் மலைபடுபொருள்களே; "வேழம் உடைத்து மலைநாடு" எனக் கூறுவதும் அறிக; வேழங்கள் நிறைந்து விளங்கும் நாடொன்றும் அதன்பால் உண்டு: அது, வேழக்காடு, அல்லது உம்பற்காடு என்ற பெயரான் வழங்கப்பெறும்.

செந்தமிழ் வேந்தர் மூவருள், சேரர் சிறந்தவராவர் என்ற கொள்கை, பழங்கால மக்களிடையேயும், அக்காலப் புலவர்களிடையேயும் நிலவியிருந்தது; சேரர், சோழர், பாண்டியர் என, அவர்கள் வழக்கின்கண் முதற்கண் வைத்து வழங்கப் பெறுதலேபோல், "போந்தை, வேம்பே, ஆர் என வரூஉம் மாபெருந் தானையர்" (தொல். பொருள். புறத்திணை : ரு) என அவர்கள் மாலை, முதற்கண்வைத்துச் செய்யுட்கண் வழங்கப் பெறுதல் அறிக. சேர வேந்தர் சேரர், சேரலர், ஆதன், கோதை, குட்டுவன், குடவர்

பொறையன், இரும்பொறை என்ற பெயர்களான் அழைக்கப் பெறுவர்.

சேரநாட்டை ஆண்ட சேரவேந்தர், இருகிளையினராகக் காணப்படுகின்றனர்; ஒருவர், உதியன் சேரலாதன் வழி வந்தவர்; மற்றொருவர், இரும்பொறை என்ற பெயரால் அழைக்கப்படுவோர். இவருள் முன்னவர், வஞ்சியைத் தலைநகராக் கொண்ட உள்நாட்டுப் பகுதியினையும், பின்னவர் தொண்டியைத் தலைநகராக் கொண்ட கடற்கரைப் பகுதியினையும் ஆண்டவராவர். இவ்வாறு ஆண்ட இருதிறச் சேரவேந்தருள் இருபத்தைவர் வரலாறு சங்க இலக்கியங்களால் உரைக்கப் பெறும்; அவ்வாறு அவர் வரலாறு உரைக்கும் நூல்களுள் பதிற்றுப்பத்தும், அவற்றின் பதிகங்களும் சிறப்புடையனவாம். இவ்வேந்தர்களின் வரலாறு உணரத் துணைபுரிந்தார் அரிசில்கிழார், இளங்கீரனார், இளங்கோவடிகள், உறையூர் ஏணிச்சேரிமுடமோசியார், ஒளவையார், கபிலர், கல்லாடனார், காக்கைபாடினியார், நச்செள்ளையார், காப்பியாற்றுக் காப்பியனார், குமட்டூர்க் கண்ணனார், குறுங்கோழியூர் கிழார், குன்றுகண்பாலியாதனார், கூடலூர் கிழார், கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை, கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரனார், திருத்தாமனார், நக்கீரர், நரிவெரூஉத் தலையார், பரணர், பாலைக் கௌதமனார், பெருங்குன்றூர் கிழார், பேய்மகள் இளவெயினி, பொய்கையார், பொருந்தில் இளங்கீரனார், மாமூலனார், முரஞ்சியூர் முடிநாகனார், மோசிகீரனார் முதலாய இருபத்தேழு புலவர்கள் ஆவர்.

ஈண்டுக் கூறப்பெறும் சேர வேந்தர்களுள், அந்துவஞ் சேரல் இரும்பொறை, இளஞ்சேரல் இரும்பொறை, கணைக்கால் இரும்பொறை, கருவூர் ஏறிய ஒள்வாட் கோப் பெருஞ்சேரல் இரும்பொறை, செல்வக் கடுங்கோவாழியாதன், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, மாந்தரம் பொறையன் கடுங்கோ, யானைக்கண்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை ஆகிய எண்மரும் இரும்பொறை மரபினர் ஆவர்; ஏனையோர் உதியஞ் சேரல் வழிவந்தவ

ராவர்; இவ்விரு திறத்து அரசருள்ளும், இளங்குட்டுவன், கணைக்கால் இரும்பொறை, கருவூர்ச் சாத்தன், கோட்டம் பலத்துத் துஞ்சிய மாக்கோதை, நம்பிகுட்டுவனார், பாலை பாடிய பெருங்கடுங்கோ, மருதம் பாடிய இளங்கடுங்கோ, முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன் முதலாய எண்மரும் நாடாண்டு நற்புகழ் பெற்றதோடு, புலமையுற்றுப் புகழ் பெற்றவரும் ஆவர்; இவர் பாடிய பாக்கள் பலவும், எட்டுத் தொகை பத்துப்பாட்டு முதலாம் பழந்தமிழ் நூல்களில் இடம் பெற்றுள்ளன.

இவ்வேந்தருட் சிலர், இவன், இன்னார் மகன்; இவன், இன்னாரைப் பெற்றவன்; இவன், இன்னாரோடு உடன்பிறந் தவன் என்ற வரலாறு உணரத்தக்க நிலையில் உள்ளனர் எனினும், அவருள் பலரைப் பற்றிய இவ்வுறவுமுறை விளங்கவில்லை ஆதலாலும், முறைவிளங்க நிற்பார் எவரும், இன்னார்பின் இன்னார் ஆண்டனர் எனத் துணிந்து கூறுதற் கில்லை ஆதலாலும், இவரை அவர்தம் பெயர்காட்டும் அகர வரிசைப்படி வகைப்படுத்தியுள்ளோம்.

## க. அந்துவஞ்சேரல் இரும்பொறை

அந்துவஞ் சேரல் இரும்பொறை, சேரருள் ஒரு பிரி வினராய இரும்பொறை மரபில் வந்தவனுவன்; செல்வக் கடுங்கோ வாழியாதன் தந்தையாம் எனக் கருதப்படு வோன் இவனே; அந்துவன் என்பது இவன் இயற்பெயர்; அந்துவன் என்னும் இப்பெயர், அக்கால ஆண் பெண் மக் கள் இருவரானும் விரும்பி மேற்கொள்ளப்பட்ட பெயர் களுள் ஒன்றும்: நல்லந்துவனர், அந்துவன்கீரன், அந்து வன் சாத்தன், அந்துவஞ்செள்ளை என்ற பெயர்களை நோக்குக.

அந்துவஞ் சேரலிரும்பொறை, கருவூரிலிருந்து ஆட்சி புரிந்தவனுவன்; உறையூர் ஏணிச்சேரி முடமோசி யார்பால் பெருநட்புடையவன்; முடித்தலைக் கோப்பெரு நற்கிள்ளி என்னும் சோழ அரசன் இவனேடு பகைபூண்டு, இவன் அரசிருக்கையாம் கருவூரை முற்றி யிருந்தான்; முற்றுகை நிகழ்ந்திருக்கும் காலத்தே ஒருநாள், அந்துவஞ் சேரலிரும் பொறையும், உறையூர் ஏணிச்சேரி முடமோசி யாரும், கருவூர் வேண்மாடத்து மேலிருந்தவாறே, சேரர் படை வரிசையினைப் பார்த்துக்கொண்டிருந்தனர். அக் காலை, களிறு ஒன்று, பாகர் அடக்கவும் அடங்காது தன் படையின் இடையே புகுந்து இடர்விளைப்பதைக் கண் ணுற்றுன் அந்துவஞ் சேரல்; உடனே அக்களிறு யாருடை யது? அக்களிற்று மேலோன் யாவன் எனத் தன் உடனி ருக்கும் புலவரைச் சினம்மிக்கு வினவினன்; களிற்று மேலோன் முடித்தலைக் கோப்பெருநற் கிள்ளியாம் என் பதையும், அவன் களிறு மதம்பட்டுளது என்பதையும் அறிந்த புலவர், பகைவர் படை நடுவே, மதம்கொண்ட களிறு கொணரத் தனிவந்துள்ள அவனுக்கு ஊறு நேரின், தன்னிலை தளர்ந்து தனியே வந்தானைக் கொன் றுன் எனும் பழி, அந்துவஞ்சேரற்கு வந்துறுமே என வருந்தினர்; உடனே, அந்துவஞ்சேரலை அணுகி, "அரசே! களிற்றுமேலோன் சோணுட்டினன்; நின் பகைவன்; ஆயி

னும், இவ்வருகை நின்படை அழிவுகருதி வந்த வரவன்று; அவன் களிறு மதம்பட்டுளது; ஆகவே, அது பாகர் அடக்கவும் அடங்காது, தன் படையின் நீங்கி நம் படையுட் புகுந்துளது; இந்நிலையில் அவனுக்கு இடையூறு உண்டாதல், நமக்கே இழிவாம்; ஆகவே, அவன் ஊறின்றி ஊர் திரும்ப, உற்றது மேற்கோடல், உரன்மிகு நின்கடனும்" என உரைத்தார். "போராண்மை என்ப தறுகண், ஒன்று உற்றக்கால் ஊராண்மை மற்றதன் எஃகு" என்பதை உணர்ந்த தமிழர் வழிவந்த அவன், புலவர் வேண்டியவாறே விரைந்து செயலாற்றியிருப்பன் என்பது உறுதி; ஆனல் அதை அறியும் வாய்ப்பு நமக்கு இல்லாது போயிற்று.

"இவன்யார் என்குவை யாயின், இவனே,
புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய
எய்கணை கிழித்த பகட்டெழில் மார்பின்
மறலி யன்ன களிற்றுமிசை யோனே;
களிறே, முந்நீர் வழங்கும் நாவாய் போலவும்,
பன்மீன் நாப்பண் திங்கள் போலவும்
சுறவினத் தன்ன வாளோர் மொய்ப்ப
மரீஇயோர் அறியாது மைந்துபட் டன்றே;
நோயில ளுகிப் பெயர்தில்! அம்ம!" (புறம் : கங)

## உ. ஆடுகோட் பாட்டுச் சேரலாதன்.

சேரர்குடியில் சிறக்க வாழ்ந்த அரசர்களுள், இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன் என்பானும் ஒருவன். அவனுக்கு மனைவியர் இருவர்; ஒருத்தி, சோழன் மணக்கிள்ளியின் மகளாகிய நற்சோணை: மற்றொருத்தி, வேளாவிக் கோமான் பதுமன் எனும் வேளிர் குலத்தலைவன் மகள்; வேளிர் குடியிலே வந்த இப்பதுமன் மகளுக்கும், நெடுஞ் சேரலாதனுக்கும் பிறந்த ஆண்மக்கள் இருவர்; ஒருவன், களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் எனும் பெயருடையான்; மற்றொருவன், நச்செள்ளையாரால் பாராட்டப்பெற்ற ஆடுகோட் பாட்டுச் சேரலாதனவான்.

ஆடுகோட் பாட்டுச் சேரலாதன், மாறுவிளையுளும் குன்றுவளமும் கொண்டதும், விற்போரஞ்சா வன்கணாளரையும் வருத்தி வாட்டும் குளிர்மிகு காற்றடிக்கப் பெறுவதுமாய நறவு எனும் கடற்கரை நகரைத் தலைநகராக் கொண்டு, சேரநாட்டின் வடமேற்குப் பகுதியை ஆண்டு வந்தான். மேலைக் கடற்கரை நகர்களுள் ஒன்றாக, மேனாட்டு நிலநூல் ஆசிரியர்களால் குறிப்பிடப்பெறும் நௌரா எனும் நகர், இந்நறவே.

> "மாறா அ விளையுள், அறாஅ யாணர்த்,
> தொடைமடி களைந்த சிலையுடை மறவர்
> பொங்குபிசிர்ப் புணரி மங்குலொடு மயங்கி,
> வருங்கடல் ஊதையிற் பனிக்கும்
> துவ்வா நறவின் சாயினத் தானே." (பதிற்றுப் ; ௬0)

ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் ஆற்றல்மிக்க பேரரசனவன்; அவனை எதிர்த்தார் அழிந்தே போவர்; போர்க் களத்தே அவன் கண்வலைப்பட்டுப் பிழைத்தார் எவரும் இலர்; எமன் விரித்த வலையில் வீழ்ந்தார் எவ்வாறு பிழைத்தல் அரிதாமோ, அவ்வாறே, இவன் பார்வையிற் பட்டவரும் பிழையார். களத்தில் இவன் பார்வை ஒருவர்மீது வீழ்ந்தது என்றால், அவர்மீது எமன் வலைவீசிவிட்டான்

என்றே பொருள்; அத்துணைக் கொடியான் ஆடுகோட் பாட்டுச் சேரலாதன்.

"மாற்றரும் சீற்றத்து மாயிரும் கூற்றம்
வலைவிரித் தன்ன நோக்கலை,
கடியையால் நெடுந்தகை! செருவத் தானே."
(பதிற்றுப் : ருக)

சேரலாதன் ஆற்றல் அறியாது சினந்து வந்தாரும் சிலர் உளர்; தன்னைப் பகைத்தாரும் உளர் என அறிந்த அவன், முரசொலிக்க, வாளேந்திச் சென்று, வெகுண்டு வெம்போர் ஆற்றி, அவரை அழித்து, வெற்றி விழாக் கொண்டாடி மகிழ்ந்தான்; இவ்வாறு அவனால் அழிவுற்றாரில் மழவரும், ஏனைக் குறுநில மன்னர் சிலருமாவர். ஆடுகோட் பாட்டுச் சேரலாதனேயன்றி அவன் படை வீரரும் போராண்மை நிறைந்த பெருவீரராவர்; போர் வந்தது எனப் போர் முரசு கொட்டியவுடனே, தமக்குக் கவசம் வேண்டும் என்ற எண்ணமும் கொள்ளாமல், வேலேந்தி விரைந்து செல்லும் வேட்கை உடையவர் அவன் வீரர்; களம்பல கண்டவர் அவர்; வீரப்புண்களால் விழுச் சிறப்புற்றன அவர் உடல்கள். களம் நோக்கிச் செல்லும் அவர், "இன்று இனிது உண்டு மகிழ்ந்தனம்; நாளை, பகைவர் மதிலைப் பாழ்செய்து வென்ற பின்னல்லது விருந்துண்ணல் செய்யேம்" என வஞ்சினம் உரைத்துச் சென்று, அவ்வாறே வென்று வீறுகொள்ளும் நல்லாண்மை உடையவர்.

"மெய்புதை அரணம் எண்ணாது, எஃகுசுமந்து
முன்சமத்து எழுதரும் வன்க ணாடவர்." (பதிற்: ருஉ)
"இன்றுஇனிது நுகர்ந்தனம்; ஆயின், நாளை
மண்புனை இஞ்சி மதில்கடந் தல்லது
உண்குவம் அல்லேம் புகா எனக் கூறிக்
கண்ணி கண்ணிய வயவர் பெருமகன்." (பதிற் : ருஅ)

ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் ஆண்டிருந்த நாட்டின் வடவெல்லையில் தண்டாரணியம் என்ற பெயருடையதொரு பெருங்காடு இருந்தது. கோதாவிரியாறு பாயப்

பெறுவதும், நாசிக் எனும் நகரைத் தன்னகத்தே கொண்டிருப்பதும், இன்று மகாராஷ்டிர மொழிவழங்கும் மக்கள் தம் வாழ்விடமாவதும் ஆய நாடே பண்டு தண்டாரணியம் எனும் பெயருடையதாம்; தண்டகன் ஆட்சிக்கு உட்பட்டதால், அஃது அப்பெயர் பெற்றது என்ப; விந்திய மலையைக் கடந்துவந்த ஆரியர் முதலில் தங்கிய இடம் இத்தண்டாரணியமேயாம்; அகத்திய முனிவர் வாழிடத்தை அடுத்து இருந்தது எனக் கூறப்படும் இராமன், தம்பியொடும், தன் மனைவியொடும் தங்கிய பஞ்சவடி எனும் இடமும், இத்தண்டாரணியத்ததே; ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் ஆண்டுகொண்டிருந்த காலத்தில், அக்காட்டுள் வாழ்ந்திருந்தார் சிலர், இவன் நாட்டினுள் புகுந்து, ஆங்குள்ள ஆட்டு மந்தைகளைக் கைப்பற்றிக்கொண்டு காட்டுள் மறைந்துவிட்டனர்; அஃதறிந்த சேரலாதன், உடனே பெரும் படையுடன் அக்காட்டுள் புகுந்து, அக்காட்டு நாட்டாரை வென்று, அவ் வாட்டுமந்தைகளை மீட்டுக் கொணர்ந்து தொண்டி நகருள் கொண்டு உரியவர்பால் ஒப்படைத்தான். ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் ஆற்றிய அரும் போர் பலவற்றுள்ளும் ஆட்டுமந்தைகளை மீட்டுத்தந்த இச் செயலே, அனைவரும் போற்றும் அருமை உடைத்தாகவே, அச் சிறப்பினை அவன் பெயரோடு, அமைத்துப் போற்றுவாராயினர் அவன்வழி வந்தார்.

"குடக்கோ நெடுஞ்சேரலாதற்கு வேளள்
ஆவிக் கோமான் தேவி ஈன்ற மகன்;
தண்டாரணியத்துக் கோட்பட்ட வருடையைத்
தொண்டியுட் டந்து கொடுப்பித்துப், பார்ப்பார்க்குக்
கபிலையொடு குடநாட்டு ஓர்ஊர் ஈத்து,
வானவரம்பன் எனப் பேரினிது விளக்கி,
ஏனை மழவரைச் செருவிற் சுருக்கி,
மன்னரை ஓட்டிக்,
குழவி கொள்வாரிற் குடிபுறந் தந்து,
நாடல் சான்ற நயனுடை நெஞ்சின்
ஆடுகோட் பாட்டுச் சேரலாதன்."

(பதிற்றுப்: பதிகம்: சு)

போராண்மை கொண்டு, போர் வெறியுடையனைக் காட்சியளிக்கும் ஆடுகோட் பாட்டுச் சேரலாதன், அன்பும், அருளும், அறனும் நிறைந்த அழகிய உள்ளமும் உடையனவன்; மனைவியும், மக்களும் சூழ, மனம் விரும்பும் இடங்கட்குச் சென்று, ஆடல் பாடலைக் கண்டும் கேட்டும் களிக்கும் கவின்மிகு உள்ளம் அவன் உள்ளம்; தன் மனைவியை மனையரசியாகவே மதிக்கும் மாண்புடையான் அவன். ஆடவரும் மகளிரும் கைகோத்து ஆடும் துணங்கை என்ற ஆட்டத்தை ஆடிமகிழ்வர் அக்கால மக்கள்; அத்தகைய ஆட்டம் ஒன்றில், ஒரு பெண்ணிற்குக் கை கொடுத்தான் சேரலாதன்; இதையறிந்தாள் அரசமாதேவி; சினங்கொண்டாள்; கையிற் பிடித்திருந்த குவளை மலரை அவன் மீது எறிய ஓங்கினள்; உடனே, சேரலாதன், அவளை அணுகி, "மலரை வீசி எறியாதே; வாடிவிடும்; என்கையிற் கொடுத்துவிடு" என்று இருகை விரித்துக் கேட்டான்; ஆனல், அவளோ, அதை அவனிடத்தே கொடுக்க மறுத்து, "நீ யாரோ; நான் யாரோ; என்மாட்டு அன்பற்ற நின்னிடத்தே என் மலரைத் தாரேன்" என்று கூறி அப்பாற் சென்று விட்டாள்; சேரலாதன் செய்வதொன்றும் அறியாது அவள் சென்ற திக்கையே நோக்கித் திகைத்து நின்றான்; அந்நிலையில், ஆண்டுவந்து அவனைக் கண்டார் சிலர், அவனை நையாண்டி செய்வாராயினர்:

"சேரலாத! உன்னுடைய கை, நின்னிடத்து வந்து, பொருள் வேண்டி இரந்து நிற்பார்க்கு, அவர் விரும்பும் பொருளைக் கொடுக்கக் குவிந்து கவிழுமே யல்லாது, பிறர்பாற் சென்று இரப்பதற்காக என்றும் மலர்ந்து விரியாது என்றெல்லாம் பிறர்கூறக் கேட்டிருக்கின்றோம்; அவர் கூறியன எல்லாம் பொய்யே என்பதை இன்று அறிந்தேம்; இருகை விரித்துப் பிறர்பால் இரந்து நிற்பதை இதோ காண்கின்றேம்;" என்று எள்ளி நகையாடினர்; அம்மட்டோடு நின்றாரல்லர்; சேரலாதனை சிறந்த வீரன்; பகைவர் கோட்டைகளைப் பாழ்செய்து பற்றிக்கொள்ளும் பேராற்றல் வாய்ந்தவன் என்று புகழ்கிறார்கள் நின்னை, அதையும்

யாம் நம்புதல் செய்யேம்; நின் மனைவிபால் இருகையேந்திக் கேட்கின்றனை அம்மலரை; அவள் மறுத்துவிட்டு, "யாரை யோ நீ" என்று இகழ்ந்து கூறிவிட்டுச் செல்கிறாள்; நின் மனைவியின் கையில் உளது அக்குவளைமலர்; அதை நீ கேட் கின்றனை; அவள் மறுக்கிறாள்; அதைக் கைப்பற்ற உன்னால் முடியவில்லை; மனைவியின் கையில் உளதைக் கைப்பற்ற முடியாத நீ, பகைவர் தம் பெருங்கோட்டைகளை எவ்வாறு கைப்பற்றவல்லாய்?" என்றும் கூறி எள்ளி நகைத்தனர். அவர் நகைமொழி, அவன் அன்புள்ளத்தை அறியத் துணை புரிந்து நிற்றல் காண்க.

"முழாவிமிழ் துணங்கைக்குத் தழூஉப்புணை யாகச்
சிலைப்புவல் லேற்றின் தலைக்கை தந்துநீ
நளிந்தனை வருதல் உடன்றன ளாகி,
..............................................
நின், எறியர் ஓக்கிய சிறுசெங் குவளை
ஈயென இரப்பவும் ஒல்லாள், நீஎமக்கு
யாரையோ? எனப் பெயர்வோள் கையதைக்
கதுமென உருத்த நோக்கமோடு, அதுநீ
பாஅல் வல்லா யாயினை பாஅல்
யாங்குவல் லுநையோ...வேந்தர்தம் எயிலே"

(பதிற்றுப் : ௰௨)

ஈத்து உவக்கும் இன்பமே இன்பம்; ஈதல் இசைபட வாழ்தலே வாழ்வு எனும் வளமார் உளம் உடையவன் ஆடு கோட்பாட்டுச் சேரலாதன்; இரவலர் தம் வறுமை வாழ்வு, அவன் உள்ளத்தை வாட்டும்; தன் மனைவி, தன் பிரிவுத் துயர் பொறாது புலந்துவிடும் கண்ணீரினும், இரவலர் வறுமைத்துயரால் வருந்திவிடும் கண்ணீரே அவன் உள் ளத்தை உறுதுயர்க்கு உள்ளாக்கும்; மனைவியின் கண்ணீ ரைக் காணினும் காண்பன்; இரவலர் முதலாம் வறுமை யால் வாடுவார் வருந்திவிடும் கண்ணீரைக் காணப்பொறாது அவன் உள்ளம். இரவலர்க்குப் பொருள் அளித்துப் போற் றுவதை நாள்தோறும் மேற்கொள்ள விரும்புவன் அவன். அவர் ஒரு நாள் வாராராயின், அவர் இருக்கும் இடம்தேடிச்

சென்று, அவரைத் தேரேற்றிக் கொணர்ந்து, அவர் வேண்டும் அளவு பெரும்பொருள் தந்து போற்றி அனுப்பும் அத்துணை அருள் உள்ளம் உடையவன்.

"ஒண்ணுதல் மகளிர் துனித்த கண்ணினும்
இரவலர் புன்கண் அஞ்சும்
புரவெதிர் கொள்வனை," (பதிற்றுப் : ருஎ)

"வாரா ராயினும் இரவலர் வேண்டித்
தேரிற் றந்து அவர்க்கு ஆர்பதன் நல்கும்
நசைசால் வாய்மொழி இசைசால் தோன்றல்."
(பதிற்றுப் : ருரு)

புலவரைப் பேணும் பேருள்ளமும், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்பால் அமைந்துகிடக்கக் காண்கிறோம். சேரலாதன்பால் நாம் காணும் இப் பண்புகள் எல்லாம், காக்கை பாடினியார் நச்செள்ளையார், அவன்பால் கண்டு பாராட்டிய பண்புகளாம்; தன் பெருமையெலாம் தோன்றப் பதிற்றுப்பத்தின்கண் வந்துள்ள, ஆறும்பத்துப் பாடல்கள் பத்தினும் பாடிப் பாராட்டிய நல்லிசைப் புலமை மெல்லியலாராகிய நச்செள்ளையார்க்கு நூறு ஆயிரங்காணப் பொருளும், அணிபல ஆக்கிப் புனைந்துகொள்க என, ஒன்பது துலாம் நிறையுள்ள பொன்னும் அளித்துப் பெருமை செய்தான். புலவர்மாட்டு அவன் கொண்டிருந்த பெருமதிப்பைப் பாராட்டுவோமாக. இவ்வாறு பெருமைசால் வேந்தனாய் விளங்கிய ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் முப்பத்தெட்டு யாண்டு வீறுதோன்ற வீற்றிருந்தான்.

## ரு. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

சேர வேந்தருட் சிறந்தோனாகிய செங்குட்டுவனையும், சிறந்த பெரும் புலவராய, நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தை ஆக்கித் தந்தருளிய இளங்கோவடிகளையும் பெற்றெடுத்த பெருமைசால் பேரரசன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். நெடுஞ்சேரலாதன் எனவும், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் எனவும், குடவர் கோமான் நெடுஞ்சேரலாதன் எனவும், குடக்கோ நெடுஞ்சேரலாதன் எனவும் அழைக்கப் பெறும் இவ்வேந்தன், பாரதப் பெரும் போர் வீரர்க்கு, அப்போர் முடியுங்காறும் சோறளித்துப் புரந்தான் எனப் போற்றப்படும் உதியஞ்சேரலாதன் மகனாவன்; இவன் தாய், வெளியன் வேண்மான் எனும் வேளிர் குலத் தலைவன் மகளாய நல்லினி என்பவளாவள்.

"மன்னிய பெரும்புகழ் மறுவில் வாய்மொழி
இன்னிசை முரசின் உதியஞ் சேரற்கு
வெளியன் வேண்மாள் நல்லினி ஈன்றமகன்,
..........................................................
இமய வரம்பன் நெடுஞ் சேரலாதன்."

(பதிற்றுப்பத்து : இரண்டாம்பத்து, பதிகம்)

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கு மனைவியர் இருவர்; ஒருத்தி சோழன் மணக்கிள்ளியின் மகளாகிய நற்சோணை, மற்றொருத்தி, வேளாவிக் கோமானான பதுமன் என்பான் மகள்; முன்னவள் வழியாகச் செங்குட்டுவன், இளங்கோவடிகள் ஆகிய இருமக்களும், பின்னவள் வழியாகக் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல், ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் ஆகிய இருமக்களும் பிறந்தனர். இமயவரம்பனுக்குத் தம்பியாம் தனிச் சிறப்புடையோன், பல்யானைச் செல்கெழு குட்டுவன் :

"வடவர் உட்கும் வான்தோய் வெல்கொடிக்
குடவர் கோமான் நெடுஞ்சேர லாதற்குச்
சோழன் மணக்கிள்ளி ஈன்ற மகன்

..................................................
கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன்."
(பதிற்றுப் பத்து, பதிகம் : ரு)

"ஆராத் திருவின் சேரலாதற்கு
வேளாவிக் கோமான்
பதுமன் தேவி ஈன்ற மகன்
...........................................
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்."
(பதிற்றுப் பத்து, பதிகம் : ச)

"குடக்கோ நெடுஞ்சேர லாதற்கு வேளள்
ஆவிக் கோமான் தேவி ஈன்ற மகன்
.....................................................
ஆடுகோட் பாட்டுச் சேரலாதன்."
(பதிற்றுப் பத்து, பதிகம் : கூ)

இமய வரம்பன் தம்பி......
....................................
பல்யானைச் செல்கெழு குட்டுவன்."
(பதிற்றுப் பத்து, பதிகம் : உ)

"குமரியொடு வடவிமயத்து ஒருமொழி வைத்து உலகாண்ட சேரலாதற்குத் திகழொளி ஞாயிற்றுச்சோழன் மகள் ஈன்ற மைந்தன்......செங்குட்டுவன்."
(சிலம்பு, வாழ்த்து : உரைப்பாட்டு மடை)

"குமரியொடு வடவிமயத்து ஒருமொழி வைத்து உலகாண்ட சேரலாதற்குத் திகழொளி ஞாயிற்று ஏழ்பரி நெடுந் தேர்ச் சோழன் தன் மகள் நற்சோணை ஈன்ற மகன் இருவர்."
(சிலம்பு, பதிகம் : உரை)

நெடுஞ்சேரலாதன், இமயமும், குமரியும் இருபால் எல்லைகளாகப் பெருநிலம் முழுதாண்ட பேரரசனாவன்; படையுடன் வடநாடு சென்று, அங்குத் தன்னை எதிர்த்துப் போரிட்ட ஆரிய அரசர்களை வென்று, வணங்கச்செய்து, அவ்வெற்றிக் கறிகுறியாக, அவ்வாரியர்க் குரிய இமயமலை

மீது தன் அரச இலாஞ்சனையாகிய வில்லைப் பொறித்து மீண்டான். சேரலாதனின் இவ்வெற்றிச் சிறப்பு, அவன் பெயரோடு இணைத்தும் பாராட்டப் பெற்றுளது.

"அமைவரல் அருவி இமயம் விற்பொறித்து
இமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்கத்
தன்கோல் நிறீஇத் தகைசால் சிறப்பொடு
பேரிசை மரபின் ஆரியர் வணக்கி."

(பதிற்றுப் பத்து, பதிகம் : உ)

"இமயத்து
முன்னோர் மருள வணங்குவிற் பொறித்து."

(அகம் : கஉஎ)

"ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசைத்
தொன்றுமுதிர் வடவரை வணங்குவிற் பொறித்து
வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்," (அகம்: நகூசு)

"குமரியொடு வடஇமயத்து ஒருமொழி வைத்து உலகாண்ட சேரலாதன்."

(சிலம்பு, வாழ்த்து : உரைப் பாட்டு)

இமயத்தே விற்பொறித்த விறல் மிக்கோனுய நெடுஞ் சேரலாதன், ஆண்டுத் தனக்குப் பணியாது நின்ற யவன அரசர்களைப் போரில் வென்று கைப்பற்றி, அக்கால வழக் கப்படி, அவர் தலையில் நெய்யைப் பெய்தும், அவர் கைகளைப் பின்கட்டாகக் கட்டியும் இழிவு செய்ததோடு, அவரிடத்தி னின்றும், விலைமதிக்கொணு அணிகளையும், வயிரங்களையும் தண்டமாக வாரிக்கொணர்ந்து, அவற்றைத் தன் நாட்டுப் பேரூர்களில் வாழும் பாணர், கூத்தர் முதலாம் பரிசில் மாக்கட்கு வழங்கிச் சிறப்புற்ருன்.

"பேரிசை மரபின் ஆரியர் வணக்கி,
நெய்தலைப் பெய்து, கைபிற் கொளீஇ,
அருவிலை நன்கலம் வயிரமொடு கொண்டு
பெருவிறன் மூதூர்த் தந்துபிறர்க் குதவி."

(பதிற்றுப் பத்து, பதிகம் : உ)

"நன்னகர் மாந்தை முற்றத்து ஒன்னார்
பணிதிறை தந்த பாடுசால் நன்கலம்
பொன்செய் பாவை வயிரமொடு ஆம்பல்
ஒன்றுவாய் நிறையக் குவைஇ அன்று அவன்
நிலந்தினத் துறந்த நிதியம்." (அகம் : கஉஎ)

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் பெற்ற வெற்றிகளுள் புலவர் பலரானும் போற்றப்படும் பெருமை வாய்ந்தது, கடலிடையேயுள்ள தீவொன்றைத் தம் வாழிடமாக் கொண்டிருந்த பகைவர்மீது கப்பற் படையின் துணை கொண்டு சென்று, அவரையும் வென்று, அவர் காவல் மரமாம் கடம்பையும் வெட்டி வீழ்த்தி, அக்கடம்பால் முரசு செய்து முழக்கியதேயாம்; இப் பகைவர், கடம்பைத் தம் குலமரமாக்கொண்டு, மைசூர்நாட்டின் மேற்பகுதியினை ஆண்டிருந்த கதம்பவேந்தராவர் என ஆராய்ச்சியாளர் கருதுவர்.

"சால்பெருந் தானைச் சேர லாதன்
மால்கடல் ஓட்டிக் கடம்பறுத்து இயற்றிய
பண்ணமை முரசு." (அகம்: ௩௪எ)

"வலம்படு முரசிற் சேரலாதன்
முந்நீ ரோட்டிக் கடம் பறுத்து." (அகம்: கஉஎ)

சேரலாதன் கடம்பெறிந்த வெற்றிச் சிறப்பினை விளங்கப் பாராட்ட முன்வந்த புலவர் குமட்டூர்க் கண்ணனார், அக்கடம்பினுக் குரியராய சேரலாதன் பகைவர், தம்முடன் போர்செய்வார் தோற்று மண்மிசை மடிந்து விழுமாறு வாளாற் பொருது, அவர் தம் நாட்டைக் கவர்ந்து கொள்ளும் பேராற்றல் வாய்ந்த பெருவீரராவர்; அத்தகைய வீரர் பலர் கூடிக் காக்கும் கடிய காவலையுடையது அக் கடம்பு என, அவன் பகைவர் தம் ஆற்றலையும், அவர்க்குரிய கடம்பின் அருமையினையும் எடுத்துக் கூறிப் பாராட்டி, அத்தகைய பெருவீரரை வென்று, அவர் காவன் மரத்தை அழித்து, அம்மரத்தால் ஆய முரசு முழங்க வாழ்ந்தான் என்றும், கடலிடைச் சென்று, ஆண்டுவாழ் பகைவரை

வென்று, அவர்க்குரிய கடம்பினைக் கொன்ற நெடுஞ்சேரலாதன், பிறர்க்குத் துயர் தருதலே தம் பிறவித் தொழிலாம் எனக் கொண்ட அவுணர்க்கு அரணாய் நின்று காத்த சூரபன்மா, இறுதிக் காலத்தே, கடலிடை யுள்ளதொரு தீவிடைச் சென்று மாமரமாகி மறைந்து நின்றானாக, ஆண்டும் விடாது சென்று, அம்மரத்தினை வேரோடும் வெட்டி வீழ்த்தி வெற்றிகொண்ட நெடுவேட்கு நிகராவன் என்றும் பாராட்டிப் பரவியுள்ளார் :

"வயவர் வீழ வாள்அரில் மயக்கி
இடங்கவர் கடும்பின் அரசு தலை பனிப்பக்
கடம்புமுதல் தடிந்த கடுஞ்சின வேந்தே,"

"துளங்கு பிசிர்உடைய மாக்கடல் நீக்கிக்
கடம்பறுத்து இயற்றிய வலம்படு வியன்பணை,"

"நளியிரும் பரப்பின் மாக்கடல் முன்னி,
அணங்குடை அவுணர் ஏமம் புணர்க்கும்
சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல்வேள் களிறுஊர்ந் தாங்கு.
..................................................
பலர் மொசிந்து ஓம்பிய அலர்பூங் கடம்பின்
கடியுடை முழுமுதல் துமிய ஏஎய்,
வென்றெறி முழங்குபணை செய்த வெல்போர்
நாரரி நறவின் ஆர மார்பின்
போரடு தானைச் சேர லாத." (பதிற்றுப்: கஉ, கஎ, ௩௬)

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் வெற்றிச் சிறப்புக்களை விளங்கப் பாடிய புலவர்கள், பரணர், மாமூலனார், குமட்டூர்க்கண்ணனார் ஆய முப்பெரும் புலவராவர்; இவருள், குமட்டூர்க்கண்ணனார், அவன் பெற்ற வெற்றிகளை வரிசையாக எடுத்துக் கூறுவதோடு அமைதியுறாது, அவ்வெற்றிக்குக் காரணமாய அவன் பேராண்மைப் பெருஞ்சிறப்பைப் பொதுவகையாலும் பாராட்டியுள்ளார். அரசன் ஒருவன், தன் பேராண்மையால் பேரரசனாயவழி, அவனைச் சூழப் பகை பல வளருதல் உலகியல். அதைப்போன்றே,

சேரலாதனுக்கும் பகைவர் பலராயினர்; ஆயினும், அப் பகைவர் பன்மை, அவன் ஆண்மைமுன் நிற்கவும் அஞ் சிற்று. ஆண்மையும், ஆற்றலும் அற்றார் எழுபது கோடிய ராயினும், ஆண்மையும் ஆற்றலும் உற்றான் ஒருவன்முன் நிற்றலும் ஆற்றார்; காக்கை பல கூடிக் கரையினும், ஒரு கல் லின்முன் நிற்கவல்லுமோ? "ஒலித்தக்கால் என்னும் உவரி எலிப்பகை, நாகம் உயிர்ப்பக் கெடும்" என்பர் வள்ளுவப் பெருந்தகையார். இக்கருத்தினை உளத்தினுட் கொண்டவ ராய புலவர், பிற விலங்குகள் தாம் பெரும்பெருங் கூட்ட மாய வழியும், ஆண்சிங்கம் ஒன்றுவாழும் மலைச்சாரலில் நடக்கவும் நெஞ்சு நடுங்கும்; அதைப் போன்றே, நெடுஞ் சேரலாதன் பகைவர், முரசு முழங்கும் அரண்மனை வாழ் வினராகவும், அவன் ஆற்றலை எண்ணி, உள்ளம் அஞ்ச, உறக்கம் ஒழிந்து, உறுதுயர்கொண்டு வாடுவர் என உவமை காட்டி, அவன் ஆண்மைச் சிறப்பை அணிபெறப் பாராட்டி யுள்ளார் :

'அரிமான் வழங்கும் சாரல், பிறமான்
தோடுகொள் இனநிரை நெஞ்சதிர்ந் தாங்கு
முரசு முழங்கு நெடுநகர் அரசுதுயில் ஈயாது
மாதிரம் பனிக்கும் மறம்வீங்கு பல்புகழ்.' (பதிற்றுப்: கஉ)

பேராண்மையும், பேராற்றலும் உடையான் நெடுஞ் சேரலாதன் என்பதறியாது அவனோடு பகைத்துப் போரிட்டு, தம் நாடழிய நலிவுற்றார் பலராவர்; அவர் நாடுற்ற கேடு அம்மம்ம! கொடிது! கொடிது! பகைவர் நாடு வளம் பல செறிந்தது; அவர் நாட்டு நீர் நிலைதோறும், அந் தணர் ஓம்பும் செந்தழல் போலும் செந்நிறத்தாமரை அல்லி யொடு மலர்ந்து அணிபெறத் தோன்றும்; நெல்விளையும் நன்செய்களில் நெய்தல் மலரும்; விளைந்த நெல்லை, அரியுங் கால், அரிநர் அரிவாள் கூர்மழுங்கும்; கரும்பினை ஆட்டிச் சாறுபிழியும் எந்திரம், சாறு வடிக்கும் தன் வாய்வளையும்; அந்நாடுகள் பெற்ற இத்தகு பெருவளம், இன்று நேற்று உற்றதன்று; தொன்றுதொட்டு வந்த வளம் அது; இத்தகு வளமிகு நாடு, சேரலாதன் சினத்துட் பட்டமையால்,

பாழுறலாயின; அவன் படையால் பாழுறற்கு அஞ்சிய அந் நாட்டு வாழ்மக்கள், நாட்டை விட்டே அகன்று போயினர்; தம்மைப் புரப்பார் அகலவே, அந்நாட்டு ஆனினங்களும், கூட்டங் கூட்டமாய், வேறு வேறு திசைநோக்கி விரைந் தோடிவிட்டன; உழுவாரையும், உழும் எருதுகளையும் இழந்து விட்டமையால், நிலங்கள் விளைநலம் கெட்டு வீணு யின; இவ்வாறு, வாழ்வதற்கு ஆகாது வளனற்று வாடின அந்நாடுகள், இன்று அழிந்து இவ்விழிநிலை உற்றனவே! என்னே கொடுமை!" எனக் காண்பாரும் கலங்கும் கழி பெருந் துயர் உற்றன அந்நாடுகள் :

"இனந்தோ டகல, ஊருடன் எழுந்து,
நிலங்கண் வாட, நாஞ்சில் கடிந்துநீ
வாழ்தல் ஈயா வளனறு பைதிரம்
அன்ன ஆயின, பழனந் தோறும்
அழன்மலி தாமரை ஆம்பலொடு மலர்ந்து,
நெல்லின் செறுவில் நெய்தல் பூப்ப,
அரிநர் கொய்வாள் மடங்க, அறைநர்
தீம்பிழி எந்திரம் பத்தல் வருந்த
இன்றோ அன்றோ தொன்றோர் காலை
நல்லமன் அளிய தாமெனச் சொல்லிக்
காணுநர் கைபுடைத்து இரங்க
மாணு மாட்சிய மாண்டன பலவே." (பதிற்றுப்: கக)

பகைவர் நாட்டைப் பாழ்செய்து மகிழும் கொடி யோனுகிய நெடுஞ்சேரலாதன், தன்னுட்டு மக்கள், தன் னேரில்லாப் பெருவாழ்வு வாழ்வதற்கு வகைசெய்யும் நல் லோனுவன். "இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட, பெயலும் விளையுளுந் தொக்கு" என்ப. சேரலா தன், நெறிநின்று காக்கும் நல்லாட்சியுடையனுதலின், மழை, கோள்களின் நிலையால் பொய்த்தல் அறியாது, அவன் நாட்டு மக்கள், எங்கு, எக்காலத்தில், எவ்வளவு வேண்டுகின்றனரோ, அங்கு, அக்காலத்தில், அவ்வளவே பெய்யும்; இதனுல் வளம் செறிந்து விளங்குவதால், அவன் நாட்டு மக்கள், அவரவர்க்கு ஓதிய தொழிலில் பிறழ்வ

தின்றி அறவழி நிற்பர்; அவன் நாட்டுக் காடுகள், கொடு விலங்குகளின் வாழ்விடமாகா, அறம்புரியும் துறவிகளின் உறைவிடமாம்; முல்லைபடர்ந்த அவன் நாட்டுக் கொல்லை களில், மள்ளரும், மகளிரும் கூடி மகிழ்ந்தாடும் விழாக்கள் நீங்காது நிகழும்; அந்நாட்டு வழிகளும், ஆறலைகள்வரைப் பெறாமல் அன்பு உறையும் இடமாகி இன்பம் தரும். அவன் நாட்டில் எண்வகையாம் கூலங்களைப் பகரும் வணிகர், தளர்ந்த தம் குடிகளைத் தாங்கும் பண்பினராவர். தம் உழுதொழிலால் உலகைப் புரக்கும் உழவர்க்கு உறு துணையாய் நிற்கும் அவன் ஆட்சி; இதனால் அவன் நாட்டில் பசியும் பிணியும் பறந்தோடி மறைந்தன. அவன் நாட்டு மக்கள் அரசனாலோ, அவன் சுற்றத்தாராலோ, அவன் பகைவராலோ துயருறுவது இலர். அவர் வாழ்க்கை பல்லாற்றானும் நிறைந்த நிறைவுடைய வாழ்க்கை யாம்; அவர் என்றும் உண்மையே உரைப்பர்; ஐம்புலனும் அடக்கிய அறிவுடையராவர்; நிரயம் எய்தா நீர்மையின தாம் நல்வினைபால் சென்ற நெஞ்சினராவர்; ஒரு குடும் பத்தில், தலைமையாயினார் கருதுவதே கருதுவர் பிறரும்; தாம் பிறந்து வாழ்ந்த பெருமைசால் அவ்வூரை விட்டு வேற்றூர் செல்ல அவர் மறந்தும் எண்ணார்; நெடுஞ்சேர லாதன் நாட்டுச் சிறப்பும், அவன் நாட்டு மக்கள் நலமும் என்னே!

> "காடே, கடவுள் மேன; புறவே,
> ஒள்ளிழை மகளிரொடு மள்ளர் மேன;
> ஆறே, அவ்வனைத்து; அன்றியும், ஞாலத்துக்
> கூலம் பகர்நர் குடிபுறம் தராஅக்,
> குடிபுறந் தருநர் பாரம் ஓம்பி,
> அழல்சென்ற மருங்கின் வெள்ளி ஓடாது,
> மழைவேண்டு புலத்து மாரி நிற்ப,
> நோயொடு பசிஇகந்து ஒரீஇப்
> பூத்தன்று பெரும! நீ காத்த நாடே,"

> "வெய்துறவு அறியாது, நந்திய வாழ்க்கைச்
> செய்த மேவல் அமர்ந்த சுற்றமொடு

ஒன்றுமொழிந்து, அடங்கிய கொள்கை, என்றும்
பதிபிழைப்பு அறியாது. துய்த்தல் எய்தி
நிரையம் ஒரீஇய வேட்கைப் புரையோர்
மேயினர் உறையும் பலர்புகழ் பண்பின்
நீபுறந் தருதலின் நோயிகந்து ஒரீஇய
யாணர் நன்னடு.'' (பதிற்றுப்: கக, கரு)

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் இவ்வாறு எவ்வழி நோக்கினும், செவ்வியோனதற்கு அவன்பால் காணலாம் ஆற்றற் சிறப்பும், ஆட்சி நலனுமே காரணங்களாகா. அவன் பால் அமைந்து கிடக்கும் அருங்குணங்களும் காரணமாம்; நெடுஞ்சேரலாதன் நல்ல பல பண்புகளின் நிலைக்களமாய் விளங்கினன்.

அரசராவார், அறிவும் ஆற்றலும் உடையரேனும், தம் மினும் சிறந்த சான்றோர் சூழத் தாழ்தலைத் தம் தலையாய கடமையாகக் கொள்ளுதல் வேண்டும்; நெடுஞ்சேரலாதன் பால் இப்பண்பு நின்று நிலைபெற்றிருந்தது. அறம் கூறும் ஆன்றோர்களை, அவன் என்றும் பிரியான். செல்வுழிச் செல்வுழிச் செல்லும் மெய்க்நிழல்போல், அவர் தன்னை விட்டுப் பிரியாமையினைப் பெரிதும் விரும்புவன்;

"அமர்பு மெய்யார்த்த சுற்றமொடு
நுகர்தற் கினிதுநின் பெருங்கலி மகிழ்வே.''
(பதிற்றுப்: கஉ)

பகைவரைப் பாழ்செய்து பணியவைக்கும் பேராற்றல் வாய்ந்தார்க்கு அப்பகைவர், தம் பகைமையொழிந்து பணிந் தக்கால், பாதுகாத்தல் புகழ்தரும் பெருஞ்செயலாம்; பணிந்தார்தம் பிழைபொறுத்துப் பேணது, மேலும் பழி வாங்க எண்ணுதல் பழியொடு மிடைந்ததாம்; இதையும் உணர்வான் நெடுஞ்சேரலாதன். அவன் பகைவர் பொறுத் தலாகாப் பெரும்பிழை புரிந்தாரேயாயினும், அன்னர் பணிந்து திறை தந்தக்கால், அவர் பிழையினை மறந்து. அவர் கொடுத்தன கொண்டு அருள்புரியும் அறவுள்ளம் உடையனவன்:

"பெரிய தப்புந ராயினும், பகைவர்
பணிந்து திறைபகரக் கொள்ளுநை." (பதிற்றுப்: கஎ)

ஒருவர், அறிவு, ஆற்றல், ஒழுக்கம், உயர்குணம் இவை உடைமையால் எத்துணைதான் புகழுறினும், அவர் தம்பால் வந்து இரந்தார்க்குப் பொருள் கொடுத்துப் பெறும் கொடைக் குணத்தால் உண்டாம் புகழுடையார்போல் போற்றப்படுவதிலர். அறிவு முதலாயினவற்றான் வருவது உண்மைப் புகழாகாது; கொடுத்துப் பெறும் புகழே புகழாம். "ஈதல், இசைபட வாழ்தல்" என்றன்றோ வள்ளுவர் கூறுகின்றனர். சேரலாதன்பால், ஏனைய புகழ்களோடும் இப்புகழும் இணைந்து இருந்தது. உலகைக் காக்கும் கடமைபூண்ட வானம், பெய்யாது பொய்ப்பினும், சேரலாதன் கொடுத்தலைக் கைவிடான்; கொடுப்பதையே கடமையாகக் கொண்டவன் அவன். அக் கொடைக் குணத்தினின்றும் அவன் உள்ளம் சிறிதும் கோடாது: கொடுக்கும்போதும் குறையக் கொடுப்பான் அல்லன். வருந்திவந்தோர் வயிற்றுப் பசித்தீத் தணியப் பெரும் பொருள் தந்து பேணுவான்:

"மண்ணுடை ஞாலம் புரவெதிர் கொண்ட
தன்னியல் எழிலி தலையாது மாறி
மாரி பொய்க்குவ தாயினும்
சேர லாதன் பொய்யலன் நசையே,"

"கொடைக்கடன் அமர்ந்த கோடா நெஞ்சினன்,
மன்னுயிர் அறிய யாண்டுபல மாறித்
தண்ணியல் எழிலி தலையா தாயினும்
வயிறுபசி கூர ஈயலன்." (பதிற்றுப்: கஅ, உ0)

வறியராய் வந்து, தன் வாயில்முன் நிற்பார்க்கு அவர் வறுமைபோக வழங்கும் வள்ளியோனாய இமயவரம்பன், தன் புகழெலாம் தோன்றப் பாடிய புலவர் பெருமக்கட்குப் பெரும்பொருள் வழங்கிப் பெருமை செய்துள்ளான். தன்னைப் பாடிய புலவர் குமட்டூர்க் கண்ணனார்க்குத் தன் ஆட்சிக்குட்பட்ட உம்பற்காடு எனும் வளம்நிறை பகுதியில்

உள்ள ஐந்நூறு ஊர்களைப் பிரமதாயமாகக் கொடுத்த தோடு, தென்னாட்டினின்றும் வரும் வருவாயில் ஒரு பாகத்தை முப்பத்தெட்டு யாண்டுவரை பெற்றுக்கொள்ளும் உரிமையும் கொடுத்துச் சிறப்பித்தான். இவ்வாறு புலவர்ப் போற்றும் புகழ்நிறை வாழ்வினனாய இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன் ஐம்பத்தெட்டியாண்டு வீற்றெய்தி வாழ்ந்தான் என்ப.

இனி, திருப்போர்ப்புறம் எனும் இடத்தே, சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியொடு போரிட்டு, அவனோடு ஒருங்கே உயிரிழந்த சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன் என்பானொரு சேரவேந்தன், புறநானூற்றில் கூறப்பட்டுள்ளான். அவர் இருவரும் இறந்து கிடந்த காட்சியைக் கண்டு, கண்ணீர்விட்டுக் கலங்கியுள்ள னர் பரணரும், கழாத்தலையாரும் (புறம்: சுஉ, சுங, கூசுஅ.) இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குறிக்க வழங்கும் பெயர்களுள், "குடக்கோ நெடுஞ்சேரலாதன்" என்பதும் ஒன்று எனப் பதிற்றுப்பத்தின் ஆறும் பத்துப்பதிகம் கூறுகிறது. ஆதலாலும், சோழன் வேற்பஃறடக்கைப் பெரு விறற்கிள்ளியோடு பொருது வீழ்ந்தான் பெயரும் "குடக்கோ நெடுஞ்சேரலாதன்" என்றே கூறப்பட் டுளது: ஆதலாலும், குடக்கோ நெடுஞ்சேரலாதனும், வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியும் இறந்து வீழ்ந்தது கண்டு இரங்கிப் பாடிய புலவர்களுள் ஒருவராய பரணர், "ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசைத் தொன்றுமுதிர் வடவரை வணங்குவிற் பொறித்து, வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்" (அகம்: ஙசுசு) என இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனையும் பாடியுள்ளார் ஆதலாலும், வேற் பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியொடு போரிட்டு உயிர் துறந்தான் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனே எனக் கோடல் பொருந்தும்.

# ச. இளங்குட்டுவன்

சேர அரசர்கள் குட்டநாட்டிற்கு உரிமை பூண்டிருந்த சிறப்பால், தம் பொருள்களுள் ஒன்றாகக் குட்டுவன் என்பதையும் மேற்கொண்டிருந்தனர். பல்யானைச் செல்கெழு குட்டுவன், கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன், குட்டுவஞ்சேரல், நம்பிகுட்டுவன் என்ற பெயர்களை நோக்குக. அச் சேரர் மரபிலே வந்த இவன், நனி இளையனாய காலத்தில், அறிவு ஆற்றல்களில் சிறந்து விளங்கினமையால், இளங் குட்டுவன் என அழைக்கப் பெற்றுள்ளான்; இளங் குட்டுவன், இருந்து ஆண்ட நாடு எது? அவன் காலத்தே வாழ்ந்த பிற அரசர்கள் யாவர்? அவன் ஆட்சி நலன் எத் தகைத்து என்பன அறிந்து கோடற்கு இல்லை; இளங் குட்டுவனை அரசனாய் அறிந்துகொள்வதற்கில்லை; அக் காலப் பெரும் புலவருள் இவனும் ஒருவன் என்ற ஒன்று மட்டுமே உணரக் கிடக்கிறது; இவன் பாடிய பாட்டொன்று, நெடுந்தொகை என வழங்கப்பெறும் அகநானூற்றில் காணப்படுகிறது.

அன்பும் ஆர்வமும் காட்டித் தாய் வளர்க்க வளர்ந்த பெண் ஒருத்தி, மணப்பருவம் எய்திய உடனே, அத் தாயையும் மறந்து, தான் விரும்பும் ஆண்மகன் ஒருவன் பின் சென்றுவிடுவள்; அந் நிலையில் அவள் தன் தாய் வீட்டுச் செல்வ வாழ்வையும் மறந்து விடுவள்; தன் உடன் ஆடும் தோழியரையும் மறந்துவிடுவள்; தான் அன்பு காட்டும் அவன் வறுமை வாழ்வினன் என்பதையும் எண்ணாள் எனக் காதற் சிறப்பினைக் கவினுறக் காட்டியுள்ளார்.

“அந்தீங் கிளவி ஆயமொடு கெழீஇப்
பந்துவழிப் படர்குவ ளாயினும், நொந்துநனி
வெம்புமன்; அளியள் தானே; இனியே,
வன்கணாளன் மார்புற வளைஇ
இன்சொல் பிணிப்ப நம்பி, நங்கண்
உறுதரு விழுமம் உள்ளாள்.” (அகம்: ௧௫௩)

## ரு. இளஞ்சேரல் இரும்பொறை

பெருங்குன்றூர் கிழார் பாராட்டிய பேரரசர்களுள், இளஞ் சேரல் இரும்பொறை என்பானும் ஒருவன்; இவன் குடக்கோச் சேரல் இரும்பொறை எனவும் அழைக்கப் பெறுவன்; இவனைப் பாராட்டும் ஒன்பதாம் பத்துப் பதிகம், இவன் தந்தை பெயர் குட்டுவன் இரும்பொறை; இவன் தாய் பெயர், வேண்மாள் அந்துவஞ் செள்ளை என அறிவிக்கிறது; ஈண்டுக் கூறிய குட்டுவன் இரும் பொறை, தகடூர் எறிந்த பெருஞ் சேரல் இரும்பொறையே என ஆராய்ச்சியாளர் கூறுவர்.

இளஞ்சேரல் இரும்பொறை, கடம்பெறிந்த இமய வரம்பன் நெடுஞ் சேரலாதன், கடல் பிறக்கோட்டிய செங் குட்டுவன், அண்டர் தலைவன் கழுவுளை வென்ற தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, நன்னனைக் கொன்ற களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல், கபிலர்க்கு நன்றா என்னும் குன்றேறி நின்று தன் கண்ணிற் கண்ட நாடெல் லாம் காட்டிக்கொடுத்த செல்வக் கடுங்கோ வாழியாதன் ஆய இவர்க்குக் காலத்தாற் பிற்பட்டோனுவன்; இது, கடம்பின் முழுமுதல் தடிந்தும் கழுவுள், புறம் பெற்றும், அண்டர் ஓட்டியும், நன்னற் றேய்த்தும் கொற்றம் எய்திய வேந்தர் வழிவந்தவன் சேரல் இரும்பொறை என வும், இளஞ்சேரல் இரும்பொறைக்குத் தோற்ற சோழ வேந்தனின் வீரர் களத்திட்ட வேல்கள், கபிலன் பெற்ற ஊரினும் பலவாம் எனவும் பெருங்குன்றூர் கிழார் கூறுவ தால் விளங்கும்.

"அணங்குடைக் கடம்பின் முழுமுதல் தடிந்து
பொருமுரண் எய்திய கழுவுள் புறம்பெற்று,
நாம மன்னர் துணிய நூறிக்
கால்வல் புரவி அண்டர் ஓட்டிச்
சுடர்வீ வாகை நன்னற் றேய்த்துக்
.........................................
கொற்றம் எய்திய பெரியோர் மருக!"

"ஒன்னாப் பூட்கைச் சென்னியர் பெருமான்
இட்ட வெள்வேல்.........................
..............................................
கபிலன் பெற்ற ஊரினும் பலவே."
(பதிற்றுப்: அஅ, அ௯)

இளஞ்சேரல் இரும்பொறையின் புகழ் பாடவந்த செய்யுள்கள் பன்னிரண்டு உளவாகவும், அவற்றுள் ஒன்றும், அவன் வெற்றி முதலாம் வரலாறு உரைக்க முன்வருவார்க்குத் துணைபுரிவன அல்ல; இளஞ்சேரல் இரும்பொறையின், யானை முதலாம் நாற்படைகள் கொடி நுடங்கச் செல்லும் காட்சி, காண்பார் கண்ணிற்கு விருந்தளிக்கும் கவினுடையவெனினும், அவன் பகையரசர் பாசறை வாழ்வார்க்குப் பெரிதும் இன்னாதாம் என்றும். பகைவர் மதிலை வென்று கைக்கொளற்காம் காலம் வருந் துணையும், காட்டு விறகில் கைக்குளிர் போக்கிக் காத்திருக்கும் அவன் கூதிர்ப் பாசறை வாழ்வு, பன்னாள் நீண்ட பெருவாழ்வாம் எனவும் அவன் போர்நிகழ்ச்சிகளைப் பொதுநிலையிலேயே கூறிச் செல்லுகின்றன அப் பாக்கள்.

"கொல் களிறு மிடைந்த பல்தோல் தொழுதியோடு
நெடுந்தேர் நுடங்கு கொடி அவிர்வரப் பொலிந்து
செலவு பெரிதினிது நிற்காணு மோர்க்கே;
இன்னா தம்ம அது தானே....................
..............................................
மாறுகொள் வேந்தர் பாசறை யோர்க்கே,"

"மறவர் மறல, மாப்படை யறுப்பத்
தேர்கொடி நுடங்கத், தோல்புடை யார்ப்பக்
காடுகை காய்த்திய நீடுநாள் இருக்கை
இன்ன வைகல் பன்னா ளாக." (பதிற்றுப்: அக, அ௨)

இளஞ்சேரல் இரும்பொறை, தன்னைப் பகைத்தான் சோழவேந்தன் ஒருவன் எனச் சினந்து, தன் படைத் தலைவரை விளித்து, "சோழன் நாட்டையும் கைப்பற்றி, அவனையும் என்முன் கொணர்ந்து நிறுத்துக" எனப் பணித்தானாக, அவன் படைத்தலைவரும், அவ் வேவல்

ஏற்றுச் சோணாடு நோக்கிப் படையொடு செல்ல, அது கண்ட சோழன், அஞ்சிப் பணிய, அவன் படைவீரரும், தம் வேல் முதலாம் படைக்கலங்களைக் களத்தில் கைந் நெகிழவிட்டுப் பணிந்து நின்றனர் என்ற செய்தியைத் தருகிறது ஒரு பாட்டு; அதுவும் இளஞ்சேரல் இரும் பொறையைப் பகைத்த சோழவேந்தன் இன்னான் என் பதை விளங்க உரைத்திலது.

> "ஒன்னாப் பூட்கைச் சென்னியர் பெருமான்
> இட்ட வெள்வேல் முத்தைத் தம்மென
> ..............................................
> கபிலன் பெற்ற ஊரினும் பலவே.'' (பதிற்றுப் : அரு)

கொங்குநாடு, குட்டநாடு, பூழிநாடு முதலாய நாடுகள் சேரநாட்டின் உள் நாடுகளேயாயினும், சிற்சில காலத்தே இவை வேற்று வேந்தரால் வெல்லப்பட்டு அவர் ஆட்சி யின்கீழ் அடங்கிவிடுதலும் உண்டு; இளஞ்சேரல் இரும் பொறை இந் நாடுகள் அனைத்தினும், தன் ஆணையே நிலவ ஆண்ட பேரரசனாவன்; இது, பெருங்குன்றூர்கிழார் அவனைக் கொங்கு, குட்டம் பூழி முதலாம் நாடுகளுக்கு உரிமை யுடையோனாகப் பாராட்டியிருத்தலால் புலனாம்:

> "கட்டிப் புழுக்கிற் கொங்கர் கோவே!
> மட்டப் புகாவின் குட்டுவர் ஏறே!
> எழாஅத் துணைத்தோட் பூழியர் மெய்ம்மறை!''
> (பதிற்றுப்: கூ௦)

சேர வேந்தர்தம் வரலாறுகளை உணரப் பெருந் துணை யாய் நிற்கும் பதிற்றுப்பத்துப் பதிகங்களுள், இளஞ்சேரல் இரும்பொறைக்குரிய ஒன்பதாம் பத்துப் பதிகம், இவன், பெரும் படையொடு சென்று, சோழனும், பாண்டியனு மாய இருபெரு வேந்தரையும், விச்சிமலையையும், அதைச் சூழ உள்ள நாட்டையும் ஆண்ட குறுநில மன்னன் ஒருவ னையும் வென்று, அவர்க்கு அரண் அளித்துநின்ற கல்லும் மலையும் காவற்காடும் சூழஇருந்த ஐந்து பெருங் கோட்டை களையும் அழித்தான்; பொத்தியாண்ட சோழர் குலப் பேரரசன் ஒருவனையும், வித்தை யாண்ட இளம் பழையன்

மாறன் எனும் குறுநில மன்னன் ஒருவனையும் வஞ்சினம் கூறிப் பொருது வென்றான்; மையூர் கிழானைப் புரோசு மயக்கினான்; சதுக்கப் பூதரைத் தந்து நிறுவினான் எனத் தெளிவில்லா நிகழ்ச்சிகள் சில பலவற்றை நிரலே எடுத்து உரைத்துளது.

"குட்டுவன் இரும்பொறைக்கு மையூர் கிழான்
வேண்மான் அந்துவஞ்செள்ளை ஈன்ற மகன்,
வெருவரு தானையொடு வெய்துறச் செய்து சென்று
இருபெரு வேந்தரும் விச்சியும் வீழ,
அருமிளைக் கல்லகத்து ஐந்துஎயில் எறிந்து,
பொத்தி யாண்ட பெருஞ்சோ ழனையும்
வித்தையாண்ட இளம்பழையன் மாறனையும்
வைத்த வஞ்சினம் வாய்ப்ப வென்று,
வஞ்சி மூதூர்த் தந்து பிறர்க்கு உதவி
மந்திர மரபிற் றெய்வம் பேணி
மெய்யூர் அமைச்சியல் மையூர் கிழானைப்
புரையறு கேள்விப் புரோசு மயக்கி
.........................................
ஆய்ந்த மரபிற் சாந்தி வேட்டு
மன்னுயிர் காத்த மறுவில் செங்கோல்
இன்னிசை முரசின் இளஞ்சேரல் இரும்பொறை."
(பதிற்றுப்பத்து, பதிகம்: க)

ஈண்டு, பொத்தியாண்ட பெருஞ்சோழன் எனப் படுவான், பிசிராந்தையாரையும், பொத்தியாரையும் பிரிவரிய நண்பராக்கொண்ட கோப்பெருஞ்சோழனே என எண்ணற்கும் இடமுண்டாதல் அறிக.

இளஞ்சேரல் இரும்பொறை, தன்வாயில் வந்து வாழ்த்துரைத்து நிற்கும் புலவர் பெருமக்கட்குப் பொருள் அளித்துப் போற்றும் பெருஞ்செயல் வியந்து பாராட்டற் குரித்தாம்; இளஞ்சேரல் இரும்பொறையைப் பாடிய புலவர் பெருங்குன்றூர்கிழாராவர்; பெருங்குன்றூர்கிழார் பொருளற்ற வறியராவர்; அவர் வீட்டு எலிகள், உண்ணு தற்காம் பொருளைக் காணவேண்டி, அவ்வீட்டின் பல்வேறு

இடங்களையும் மாறி மாறி அகழ்ந்தும் ஒன்றும் கிடைக்காமையால் மடிந்து வீழ்ந்திருக்கும்; அவர் இளைய மகன், பாலுண்ணவேண்டி அவன் தாயிடத்தே பலகாலும் செல்லவும், உணவுண்டு பல நாளாகிய காரணத்தால் பால் சுரத்தல் நின்ற அவளிடத்தில், பால் இன்மையறிந்து, பாலுண் வேட்கையினையே மறந்துவிட்டான்; இவ்வாறு வறுமையில் வாடிப் பலநாள் வாழமுடியாது; யாண்டேனும் சென்று பொருள் பெற்று வருதல் வேண்டும் என்று முடிவு கொண்டார் பெருங்குன்றூர்கிழார்; உடனே தாம் வேண்டும் பெரும்பொருள் கொடுக்க வல்லோன் சேர நாடாள் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையே என உணர்ந்து, ஆண்டடைந்து இரும்பொறையைக் கண்டார்; "முரசெழுந் திரங்கும் தானையொடு தலைச்சென்று அரைசுபடக் கடக்கும் உரைசால் தோன்றல்!" என்றெல்லாம் பாராட்டிப் பாடி நின்றார்; இரும்பொறையும் அவர் பாடற் பொருளுணர்ந்து வியந்து இன்புற்றான்; பெருங்குன்றூர் கிழார், அவன் சிறந்த பரிசில் அளித்து விடுப்பன் என எண்ணியிருந்தார்; அவனும், அதற்கேற்றாற்போல், பரிசில் நல்குவான் போலும் செயல்கள் சில மேற்கொண்டான்; நாள் பல கழிந்தன; ஆனால், அவன் பரிசில் ஒன்றும் அளித்தானல்லன்; புலவர், ஏமாற்றமும் வருத்தமும் கொண்டார்; வருந்திய அவர் உள்ளத்தினின்றும் வெடித்தன சில சொற்கள்:

"அரசே! நீ தரும் பரிசில் பெறும் விருப்பால் வந்தோருள் யானும் ஒருவன்; வள்ளன்மைக் குணம் வாய்க்கப்பெற்றோன் நீ எனக் கருதியே, புலவர்க்குப் பரிசில் தர மறுக்கும் பழியுடையோர் செயலை நின்பால் உரைத்தேன்; கொடுப்போன் போல் காட்டிக் கொடாது ஏமாற்றிவிட்டனை! பாடிய புலவன் வறுமையால் வாடுகின்றனனே என்ற நாணம் நினக்கு உண்டாகவில்லை; யானோ, நீ நாணுமாறு பல முறை பாராட்டினேன் நின்னை; என் பாடல் கேட்டு மகிழும் நின்னை வணங்கி விடை பெறுமுன் ஒன்று கூறுகின்றேன் கேள், வாயில் வந்து நிற்போர்க்கும்,

புகழ்பாடி வருவார்க்கும் வாரி வழங்கும் வள்ளியோர் வாழ்வதினாலேயே, இரவலரும், புலவரும் இறவாது வாழ்கின்றனர் இவ்வுலகில்; அரசர்கள்பால், அவ்வருட் குணம் இல்லாது போயின், இரவலர் இல்லாது அழிவர்; ஆதலின், இரப்பார்க்கு ஒன்று ஈவதைக் கடப்பாடாகக் கொள்வது காவலர்க்கழகு; ஆனால், அரசரெல்லாம் நின்னைப் போல்வராயின், என்னைப் போலும் புலவர்கள் இவண் பிறவாது ஒழிவாராக" என்று கூறிப் பழித்து வெளியேறினர்:

"உள்ளி வந்த ஓங்குநிலைப் பரிசிலென்
வள்ளியை யாதலின் வணங்குவன் இவனெனக்
கொள்ளா மாந்தர் கொடுமை கூறநின்
உள்ளியது முடித்தோய் மன்ற; முன்னாள்
கையுள் ளதுபோற் காட்டி, வழிநாள்
பொய்யொடு நின்ற புறநிலை வருத்தம்
நாணு யாயினும் நாணக் கூறிஎன
நுணங்கு செந்நா வணங்க ஏந்திப்
பாடப் பாடப் பாடுபுகழ் கொண்டநின்
ஆடுகொள் வியன்மார்பு தொழுதனென் பழிச்சிச்
செல்வலத்தை யானே,"

"அன்புகண் மாறிய அறனில் காட்சியோடு
நும்ம னோரும்மற் றினைய ராயின்,
எம்ம னோர் இவண் பிறவலர் மாதோ!"

(புறம்: ௨௧௧, ௨௧0)

உளம் வருந்த வெளியேறிய புலவர் பெருங்குன்றூர் கிழார் மனையில், மக்களும் மனைவியும் வறுமையால் வாடுவரே! அவர்க்கு வழியென்ன செய்வேன் என்ற எண்ணமுடையராய் வழி நடந்து சென்றார்; ஊருள் நுழைந்து, தம் இல் இருக்கும் இடம் சென்று நோக்கினர்; ஆங்கு முன்னிருந்த சிறு குடிசைக்குப் பதிலாகப் பெருமனை ஒன்றிருக்கக் கண்டார்; நம் வீடு இருப்பது ஈண்டன்று போலும் என எண்ணி, அப்பாற் செல்வாராயினர்; அந்நிலையில், அப்பெருமனையுள்ளிருந்த அவர் மனைவியார் அழைக்குங் குரல் கேட்டுத் திரும்பி அவ்வீட்டினுள்

சென்றார்; ஆங்குப் பொன்னும் பொருளும், நெல்லும் மணி யும் மண்டிக்கிடப்பக் கண்டு ஒன்றும் புரியாராய் நின்றார்; அப்போது அவர் மனைவியார், "இவையெல்லாம் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையின் கொடைப் பொருள்களாம்; அவன் நினக்கு ஒன்றும் அறியான்போல் காட்டி, நீ அறியா வாறு முப்பத்தீராயிரம் காணமும் கொடுத்து, ஊரும் மனை யும் வளமிகப் படைத்து, ஏரும் இன்பமும் இயல்வரப் பரப்பி, எண்ணற்காகா அருங்கல வெறுக்கையும் அளித்துள்ளான்" என்று அறிவித்தார்.

இளஞ்சேரலின் பெருஞ்செயல் அறிந்த புலவர் பெருங் குன்றூர்கிழார், அவனை நேரிற் கண்டு பாராட்ட விரும்பி னார்; விரைந்து சேர நாடடைந்தார்; அவன் பீடும் பெருமை யும், பாருளோர் எல்லாம் அறியும் வண்ணம் பாக்கள் பல பாடிப் பாராட்டினார்; வெற்றியும், கொடையும் விளங்கப் பாடினார்; அன்பும், அறிவும், ஆற்றலும் விளங்க வாழ்த்தி வணங்கினார்.

> "நல்லிசை நிலைஇய நனந்தலை உலகத்து
> இல்லோர் புன்கண் தீர நல்கும்
> நாடல் சான்ற நயனுடை நெஞ்சின்
> பாடுநர் புரவலன்" (பதிற்றுப்: அசு)

என, அவன் கொடைச் சிறப்பினையும்,

> "ஈரம் உடைமையின் நீரோர் அனையை;
> அளப்பரு மையின், இருவிசும்பு அனையை;
> கொளக்குறை படாமையின் முந்நீர் அனையை;
> பன்மீன் நாப்பண் திங்கள் போலப்
> பூத்த சுற்றமொடு பொலிந்து தோன்றலை"
> (பதிற்றுப்: கூ0)

என, அவன் அன்பு, அறிவு, அருள், சுற்றம் போற்றலாம் பண்பு ஆகியவற்றையும் பாராட்டிப் பரவினார்; இவ்வாறு புலவர் போற்றும் புகழுடையோனாய இளஞ்சேரல் இரும் பொறை, பதினாறாண்டு பாருளோர் போற்ற வீற்றிருந்து விழுப்புகழ் பெற்றான்.

## சு. உதியன் சேரலாதன்

சங்ககாலச் சேர வேந்தர்களுள், வரலாறு விளங்க வாழ்ந்த முதற் சேர வேந்தன் உதியஞ் சேரலாதனுவன். உதியஞ்சேரலாதன் தலைச்சங்கப் புலவர்களுள் ஒருவராவர் என மதிக்கப்பெறும் முரஞ்சியூர் முடிநாகராயரால் பாராட்டப்பெறும் பழமை வாய்ந்தவனுவன்; இவன், பெருஞ்சோற்றுதியன் சேரலாதன், உதியன் சேரலாதன், உதியஞ்சேரல், உதியன் சேரலாதன் என்றெல்லாம் அழைக்கப்பெறுவன். முரஞ்சியூர் முடிநாகராயரும், மாமூலனுரும், இளங்கீரனுரும், கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமானும், இளங்கோவடிகளும் இவனைப் பாராட்டிய பெரும் புலவர்களாவர்; சேரர் குல வரலாற்று நூலாகிய பதிற்றுப்பத்தின், இரண்டாவது, மூன்ருவது பத்துப்பதிகங்களால், வெளியன் வேண்மான் எனும் வேளிர்குலத் தலைவன் மகளாய நல்லினி என்பார், உதியஞ் சேரலின் மனைவியாம் மாண்புடையராவர் என்பதும், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும், பல்யானைச் செல் கெழு குட்டுவனும் இவன் மக்களாவர் என்பதும் புலனும்:

"மன்னிய பெரும்புகழ் மறுவில் வாய்மொழி
இன்னிசை முரசின் உதியஞ் சேரற்கு
வெளியன் வேண்மாள் நல்லினி ஈன்ற மகன்
........................................
இமையவரம்பன் நெடுஞ் சேரலாதன்"
"இமையவரம்பன் தம்பி அமைவர
........................................
பல்யானைச் செல்கெழு குட்டுவன்."

(பதிற்றுப், பதிகம்: உ, ங)

உதியன் சேரலாதன், தன் வாழ்நாளில் ஆற்றிய அரிய செயல்களுள், அவன் தன் நாட்டு எல்லையை விரி வாக்கியது, பாணர் முதலாம் இரவலர் தமக்குப் பெரும்

பொருள் அளித்துப் பேணியது, பெருஞ்சோறளித்தது ஆகிய நிகழ்ச்சிகள் புலவர் பாராட்டிற்குரியவாயின.

தலைவன், நின்னை உடன்கொண்டு சென்று மணக்கத் துணிந்தனன். ஆகவே, இனி, நீ வருந்துவதொழிந்து, பிறர் நாட்டினை வென்று தன் நாட்டினை விரிவாக்கிய உதியஞ்சேரலாதனைப் பாடிச் செல்லும் பரிசிலர் பொருள் பெற்று மகிழுமாறு மகிழ்வாயாக என, அவன் நாட்டை விரிவாக்கிய நிகழ்ச்சியையும், பரிசிலர்க்குப் பொருள் அளிக்கும் சிறப்பையும் பாராட்டியுள்ளமை உணர்க.

"நாடுகண் அகற்றிய உதியஞ் சேரற்
பாடிச் சென்ற பரிசிலர் போல
உவவினி வாழி!" (அகம்: சுரு)

உதியன் பெருஞ்சோறு அளித்த நிகழ்ச்சியைப் பாராட்டிய புலவர்கள், முரஞ்சியூர் முடிநாகராயரும், இளங்கோவடிகளும், மாமூலனாரும், கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமானுமாவர். இவருள் முன்னையர் இருவரும் உதியன் சேரலாதன், பாண்டவர் ஐவரும் கௌரவர் நூற்றுவரும் மேற்கொண்ட பாரதப் போரில், அப்போர் முடியுங்காறும் இருதிறப் படையினர்க்கும் சோறளித்துப் புரந்தான் எனக் கூறுகின்றனர்; இறந்து துறக்கம்புக்க, பெரும்புகழ் நிறைந்த தன் முன்னோரை வழிபடல் கருதிய உதியஞ் சேரலாதன் அவர்க்குப் பெருஞ்சோறு படைத்த காலத்தே அவன் இடும் அப்பலிச் சோற்றை உண்ணவேண்டி ஆண்டுக்கூடிய பேய்கள் எண்ணற்றனவாம் என்று மாமூலனாரும், கொடுத்தல் தன் பிறவிக்கடன் என்ற நல் உள்ளம் வாய்க்கப்பெற்ற உதியன், வருவார்க்கு வழங்கல் குறித்து, பல்லான்குன்று எனும் மலையிடத்து நிழலைச் சேர்ந்து வாழும் ஆனிரை பல நிறைந்த குழூஉர் என்னுமிடத்தே, சோறு ஆக்க எடுத்த அட்டிற்சாலையில், மலையினின்றும் விழும் அருவியொலிபோலும் பேரொலி நிலவும் என்று கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமானும் கூறியுள்ளனர்.

"அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத்து ஒழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்."
(முரஞ்சியூர் முடிநாகராயர், புறம்: ௨)

"ஓர் ஐவர், ஈரைம் பதின்ம ருடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றுது தானளித்த
சேரன்."
(இளங்கோவடிகள், சிலம்பு: ௨௯, ஊசல் வரி)

"துறக்கம் எய்திய தொய்யா நல்லிசை
முதியர்ப் பேணிய உதியஞ் சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை, இரும்பல்
கூளிச் சுற்றம் குழீஇஇருந் தாங்கு."
(மாமூலனார், அகம்: ௨௩௩)

"பல்லான் குன்றில் படுநிழல் சேர்ந்த
நல்லான் பரப்பின் குழுமூர் ஆங்கண்
கொடைக்கடன் ஏன்ற கோடா நெஞ்சின்
உதியன் அட்டில் போல ஒலியெழுந்து
அருவி யார்க்கும் பெருவரை."
(கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான், அகம்: ௧௬௮)

சோறளித்த சேரலாதன் செயலை ஏற்றுக்கொள்வாரும், மறுப்பாருமாக இருதிறப்படுவர் ஆராய்ச்சியாளர். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தந்தையாகிய உதியஞ்சேரல், கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவனாதல் வேண்டும்; அவன், பாரதப்போர் வீரர்க்குச் சோறு அளித்தான் எனல் பொருந்தாது; ஆகவே, பெருஞ்சோறளித்த உதியன் செயல், பாரதக் காலத்தே வாழ்ந்து, அப் பாரத வீரர்க்குச் சோறளித்துப் புரந்த அவன் முன்னோன் செயலை, அவனுக்கு ஏற்றிக்கூறியதாதல் வேண்டும் என்று கருதுவர் சிலர்; பாரத நிகழ்ச்சியை நாடகமாக்கி, ஆண்டுதோறும் நடித்துக் கொண்டாடுவதும், அவ்விழாவின் இறுதி நாளன்று, விழாக்காண வரு

வார்க்குச் சோறளித்துப் பேணுவதும் இங்நாட்டு வழக்க மாம்; உதியன் செயலும், இவ்வாறு நடைபெற்ற விழா நிகழ்ச்சியைக் குறிப்பதே என்பர் மற்றும் சிலர்; உதியன் சேரலாதனுக்கும் பாரதப்போர் நிகழ்ச்சிக்கும் யாதொரு தொடர்பும் இருந்ததில்லை; உதியன் பெருஞ்சோறளித்தல், இறந்த தன் முன்னோரைக் குறித்து ஆண்டுதோறும் நிகழ்த்தும் நினைவு விழா நிகழ்ச்சியைக் குறிப்பதேயன்றிப் பிறிதில்லை எனக் கருதுவர் வேறு சிலர். செல்வக்கடுங்கோ வாழியாதன் எனும் மற்றொரு சேரவேந்தன், இறந்த தன் முன்னோர்க்கு அவர் தம் மக்களைக்கொண்டு, ஆற்றவேண்டிய கடனாற்றிப் பேணினான் எனக் கூறும் கபிலர் கூற்றுள், முதியாரைப் பேணும் சேரர் செயல், இறந்தார்க்குச் செய்யும் கடனேயன்றிப் பிறிதன்று என்பது உறுதியாதல் உணர்க:

"இளந்துணைப் புதல்வரின் முதியர்ப் பேணித்
தொல் கடன் இறுத்த வெல்போர் அண்ணல்!"

(பதிற்றுப்: எ0)

பேரரசர்பால் அமையலாம் பண்புகள் எல்லாம் ஒருங்கே அமையப்பெற்றவன் பெருஞ்சோற்றுதியன் சேரலாதன்; அவன் பிழைபொறுக்கும் பண்புடையவன்; வினையொன்று ஆற்றத் தொடங்குவனாயின், எண்ண வேண்டுவன எல்லாம் எஞ்சாது எண்ணும் அஃகி அகன்ற அறிவுடையவன்; எதிர்த்தார் எவரையும் தாங்கி நிற்க வல்ல பேராற்றலும், பெருந்திறனும் உடையவன்; அழித்தற்குரியாரை அடியற அழிக்கும் ஆற்றல் உடையவன்; அடைந்தார் தம் துயர் போக்கி ஆட்கொள்ளும் அருட்குண முடையவன்; இப்பண்புகள் வேறு எவர்மாட்டும் அமைய லாகா அளவு அவன்பால் அமைந்திருக்கக் கண்ட புலவர் முரஞ்சியூர் முடிநாகராயர், பொறுமை, அகலம், ஆற்றல், அழித்தல், அருளல் ஆகிய பண்புகளின் நிலைக்களங்களாகிய நிலம், ஆகாயம், காற்று, தீ, நீர் ஆகியவற்றோடு அவன் ஒத்தவனாவன் என்று கூறி, ஐம்பெரும் பூதத்தியற்கை யினையும், அவை ஒவ்வொன்றும் முறையே பெற்றுள்ள

அப்பண்புகள் அனைத்தினையும் ஒருவனேபெற்று விளங்கும் அவன் பெருமையினையும் ஒருங்கே பாராட்டிப் பாடியுள்ளார்.

"மண் திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத் தியற்கை போலப்
போற்றார்ப் பொறுத்தலும், சூழ்ச்சியது அகலமும்
வலியும், தெறலும், அளியும் உடையோய்!"

(புறம் : உ)

உதியன் சேரலாதன், தமிழகம் முழுமையும் தன் ஒரு குடைக்கீழ் வைத்து உலகாண்ட பேரரசனாவன்; கிழக்கு, மேற்கு ஆகிய இருபெருங் கடல்களை எல்லையாகக் கொண்ட நாடு முழுதும் உதியன் அரசே நடைபெற்றது என்பதை அறிவிக்கும் புலவர் முரஞ்சியூரர், "அரசே! கீழ்க்கடலும் நினதே; மேலைக்கடலும் நினதே ஆதலின், ஞாயிறு தோன்றுவதும் நின்கடலிலேயே; அவன் மறைவதும் நின் கடலிலேயே" எனக் கூறிப் பாராட்டியுள்ளார்.

"நின்கடற் பிறந்த ஞாயிறு, பெயர்த்தும்நின்
வெண்தலைப் புணரிக் குடகடற் குளிக்கும்" (புறம் : உ)

இனி, சோழன் கரிகாற் பெருவளத்தானுடன் போருடற்றிப் பெற்ற புறப்புண் நாணி வடக்கிருந்து உயிர்விட்ட சேரமான் பெருஞ்சேரலாதன் என்பானைப் பாராட்டிக், கழாத்தலையாரும், வெண்ணிக்குயத்தியாரும் பாடிய இரண்டு பாடல்கள் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளன, (புறம், சுரு, சுசு). இதே நிகழ்ச்சியை மாமூலனாரும் அகநானூற்றில் குறிப்பிட்டுள்ளார்; வெண்ணியில் நடந்த போரில், கரிகால் வளவனொடு போரிட்டுப் புறப்புண் பெற்றான் சேரலாதன்; அவன் தான் பெற்ற புறப்புண் நாணி வடக்கிருந்து உயிர்விட்டானாக, அவன் பிரிவினைப்

பொருத சான்றோர் பலரும் அவனோடு உயிர் நீத்தனர் எனக் கூறுகிறார் அப்பாட்டில்:

"கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
பொருதுபுண் நாணிய சேரலாதன்
அழிகள மருங்கின் வாள்வடக் கிருந்தென
இன்னா இன்னுரை கேட்ட சான்றோர்
அரும்பெறல் உலகத்து அவனொடு செலீஇயர்
பெரும்பிறி தாகி யாங்கு." (அகம்: ருரு)

உதியஞ்சேரல், தன் நாடுகண் அகற்றியதையும், அவன் பரிசில் தரும் பெருமையினையும், அவன் அளிக்கும் பெருஞ்சோற்று விழாவினையும் எடுத்துக் கூறிப் பாராட்டிய மாமூலனாரே, வெண்ணியில் தோற்ற சேரலாதனையும் குறிப்பிட்டுள்ளார். ஆதலின், கரிகாலனொடு போரிட்டுத் தோற்று வடக்கிருந்த சேரவேந்தன், உதியஞ் சேரலாதனே எனக் கோடல் ஏற்புடைத்தாமா என்பதை அறிஞர் பெருமக்கள் ஆராய்ந்து துணிவார்களாக. சங்க கால அரசர்களின் கால நிலையினைக் கணக்கிட்டு நோக்குவார், உதியஞ்சேரலாதனும் கரிகாற் பெருவளத்தானும் ஒருகாலத்தவரேயாவர் என்பதை அறிவர் என்பதையும் ஆராய்ச்சியாளர் நினைவிற் கொள்வார்களாக.

## எ. கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், சோழன் மணக்கிள்ளி நல்கிய நற்சோணையை மணந்து பெற்ற மக்கள் இருவராவர். அவருள் மூத்தோன் தென் தமிழரைத் தீதுரைத்த வடவாரியரை வணக்குவித்த செங்குட்டுவனுவன். இளையோன், நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தை ஆக்கித்தந்த ஆசிரியப் பெருந்தகை இளங்கோவடிகளாவர். செங்குட்டுவனைப் பெற்றெடுக்கப் பெருந்தவம் கிடந்தான் இமயவரம்பன் என்றும், இறுதியில் ஆனேறூர்ந்தோன் அருளால் பிறந்தான் என்றும் கூறுகிறார், அண்ணன் வரலாறு உரைக்கும் அடிகளார்:

"செஞ்சடை வானவன் அருளினில் விளங்க
வஞ்சித் தோன்றிய வானவ!"
"ஆனே று ஊர்ந்தோன் அருளிற் றேன்றி
மாநிலம் விளக்கிய மன்னவன்."

(சிலம்பு, உகூ : கூஅ-கூ ; ௩0 : கசக-உ)

பதிற்றுப்பத்துப் பதிகங்களைப் படித்துப் பார்ப்பார்க்கு, செங்குட்டுவன் தந்தையைப் பெற்ற பாட்டன், பெருஞ்சோற்றுதியன் சேரலாதன்; பாட்டி, வெளியன் வேண்மாள் நல்லினி; தந்தை, இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன்; தாய், சோழன் மணக்கிள்ளி மகள் நற்சோணை; மனைவி, இளங்கோ வேண்மாள்; மகன், குட்டுவஞ்சேரல்; சிறிய தந்தை, பல்யானைச் செல்கெழுகுட்டுவன்; மாற்றுந் தாய், வேளாவிக்கோமான் பதுமன் மகள்; மாற்றுந்தாய் வயிற்றுவந்த மக்கள், களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலும், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும் என்ற இவ் வுறவுமுறை இனிது விளங்கும்.

செங்குட்டுவன் மனைவியாம் சிறப்புடையளாய, இளங்கோ வேண்மாள், அறிவு, திரு, அழகு, அமைதி முதலாம் அருங்குணங்கள் ஒருங்கே வாய்க்கப்பெற்ற பெண்ணரசியாவள். செங்குட்டுவன், கண்ணகி தேவி

யார்க்குக் கல்லெடுத்து விழாக்கொண்டாடக் காரண மாயது, "நம் அகனடு அடைந்த இப் பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்" என, இவள் கூறிய கூற்றே எனின், அவள் மாண்பினை மதிப்பிடல் கூடுமோ! கணவன் கல் கொண்டுவருவான் வேண்டி வடநாடு சென்றிருந்த முப்பத்திரண்டு திங்களும், ஊணும் உறக்கமும் ஒழித்து, அழகிய ஆடையும் அணியும் அகற்றி வாழ்ந்த வனப்பினை வாயாரப் பாராட்டியுள்ளார் அடிகளார். இத்தாய் வயிற் றுதித்த தகுதியுடையோனைய குட்டுவஞ்சேரலைச் செங்குட் டுவன் தன் உள்ளம் விரும்பும் உயர்பெரும் புலவராய பரணர்பால் ஒப்படைத்து உயர்பேரறிவாளனுக்கினன்.

செங்குட்டுவன் அரியணை ஏறுதற்குக் காரணமாய நிகழ்ச்சி, அவன் தம்பியார் இளங்கோவடிகளின் இனிமைப் பண்பே! இது உலகறிந்ததொன்றே மக்கள் இருவரும் மன் னர் பலரும் சூழப் பேரத்தாணிக்கண் இருந்த நெடுஞ்சேர லாதன் முன், ஒருநாள் நிமித்திகன் ஒருவன் தோன்றி, "மன்னர் மன்னவ! நினக்குப்பின் நின் அரியணை இருந்து ஆட்சிபுரியும் ஆகூழ் உடையோன் இவ்விளையோனே" என் றனன். அதைச் செவிமடுத்த மூத்தோன், உரைத்தானை உருத்து நோக்கினன்; இளையோன் அவன் அகத்துயர் அறிந்தான்; மூத்தோன் இருக்க இளையோன் அரசனுதல் அறமன்று; நிமித்திகன் உரைத்தது முறையன்று என்ப தையும் உணர்ந்தான். மூத்தோன் துயர்தீர, முறைவாழத் துறந்து குணவாயிற்கோட்டம் புகுந்து அறவாழ்வு மேற் கொண்டான்; என்னே அவன் தியாகம்!

செங்குட்டுவன் அரியணை ஏறிய பின்னர் மேற் கொண்ட போர்களும், பெற்ற வெற்றிகளும் பலவாம். வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியோடு போரிட்டு இறந்த தன் தந்தையைத் தொடர்ந்து உயிர்நீத்துப் புகழ் பெற்ற தன் தாய் நற்சோணையின் படிமத்தைக் கங்கையில் நீராட்டக் கருதி வடநாடு சென்றான். கங்கைக் கரையில் ஆரிய அரசர் பலர் ஒன்றுகூடி எதிர்த்தனர். அப் பேராற் றங்கரையில் எதிர்த்தார் அனைவரையும் செங்குட்டுவன்

தான் ஒருவனாகவே நின்று போராடி வெற்றிகொண்டான். இவ்வெற்றி விளங்கப்பாடியுள்ளார் இளங்கோவடிகளார்:

“கங்கைப் பேரியாற்றுக் கடும்புனல் நீத்தம்
எங்கோ மகளை ஆட்டிய அந்நாள்,
ஆரிய மன்னர் ஈரைஞ் ஞாற்றுவர்க்கு
ஒருநீ யாகிய செருவெங் கோலம்
கண்விழித்துக் கண்டது கடுங்கட் கூற்றம்.”

(சிலம்பு, உரு : ககூ0-௬)

சேரநாட்டின் ஒரு பகுதியாகக் கொடுகூர் என்ற நாடொன்று இருந்தது; அஃது இன்றைய மைசூர் நாட்டின் தென் பகுதியாகிய புன்னாடு விஷயத்தின் ஒரு பிரிவாம். அந்நாட்டைக் கொங்கர் என்பார் ஆண்டு வந்தனர். அண்டை நாடுகளின் அமைதியைக் குலைப்பதே அவர்கள் தொழில். அத்தகையார், தன் அண்மையில் இருப்பதும் கூடாது எனக்கொண்டான் குட்டுவன்; கொங்குநாட்டுக் கொடு கூர்மீது படையுடன் சென்றான்; கொங்கர், சோழனையும் பாண்டியனையும் படைத்துணையாகப் பெற்றுச் செங்குட்டு வனை எதிர்த்தனர். ஆனால், இறுதியில் படையும் கொடியும் இழந்து தோற்றனர்; கொடுகூர் நாட்டுத் தலைநகராகிய கொடுகூரும் குட்டுவனால் அழிவுற்றது:

“நும்போல் வேந்தர் நும்மோடு இகலிக்
கொங்கர்செங் களத்துக் கொடுவரிக் கயற்கொடி
பகைப்புறத்துத் தந்தன ராயினும், ஆங்கவை
திசைமுக வேழத்தின் செவியகம் புக்கன.”

(சிலம்பு, உரு : கரு௨-௩)

கடல்நீரை அரணாகக்கொண்டு, அக் கடலிடையே வாழ்ந்துவந்த சிலர், சேரர்குலப் பகைவராய் விளங்குவது கண்ட செங்குட்டுவன், கப்பற் படையுடன் சென்று அவர் களை அறவே அழித்து வெற்றிபெற்றான். குலப்பகை ஒழித்துக் குடிவிளங்கச்செய்த செங்குட்டுவனை நாடு வாழ்த்திற்று. மக்கள், கடலோட்டிய வேல்கெழு குட்டு

வன், கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன், கடலோட்டிய வெல்புகழ்க் குட்டுவன் என்றெல்லாம் பெயரிட்டுப் பாராட்டினர். செங்குட்டுவன் பெற்ற கடற்போர் வெற்றியை, அவனைப் பாடிய பெரும்புலவராய பரணர் விளங்கக் கூறிப் பாராட்டியுள்ளார்: "ஓயாது ஒலிக்கும் அலைகளையுடைய கடல்நீர், காற்றால் அலைப்புண்டு சிறுசிறு திவலைகளாக மாறியுடையுமாறு பெரும்போரிட்ட தாள்கள் அவன் தாள்கள்" எனவும், "ஒவென முழங்கும் அலைகளோடு கூடிய குளிர்ந்த கடலிடையே மணிபோல் ஒளிவிட்டு மின்னும் வேற்படை கொண்டுசென்று, எதிர்த்த பகைவரை ஆற்றல் தோன்ற அழித்து வென்ற அரசர், குட்டுவ! நின் முன்னோரிலும் ஒருவரும் இலர்; அவ்வாற்றல் உடையார் இனிப் பிறத்தலும் அரிதே" எனவும், "உயர எழுந்து ஓய்ந்து அடங்கும் அலைகளையுடைய நீர்ப் பரப்பாகிய ஒலிக்கும் கடலை அரணாகக்கொண்டு வாழ்ந்த பகைவரைச் சங்குகள் ஒலிக்கும் அக்கடலும் கலங்குமாறு வேற்படை கொண்டுசென்று, வென்று ஓட்டிய வெற்றியால் விளங்கும் புகழ்பெற்ற குட்டுவன்" எனவும், "கடலிடையே சென்று, அக்கடலை அரணாகக்கொண்டு ஆங்கு வாழ்ந்திருந்த கடற் பகைவரோடு அரிய போர் ஆற்றிய, குளிர்ந்த கடற்கரைத் தலைவ" எனவும், "தன்னோடு எதிர்த்துப் போரிடத்தக்க பெரும்பகை எதையும், இந்நிலவுலகில் காணமாட்டாமையால் செங்குட்டுவன் தோள்கள் தினவு கொள்ளலாயின. ஆகவே, அவன் தன் தோள் பூரிக்கப் போர்புரியும் வேட்கையே காரணமாகக் கடலை வளைத்துப் போரிட்டான். உயர்ந்து எழுந்து விழும் அலைகளையுடைய அக் கடல்நீர், அவன் ஆற்றலுக்குத் தோற்றுப் பின்னிடுமாறு ஓட்டிப் பெருமையுற்றது அவன் கைவேல்" எனவும் பாராட்டும் பரணர் பாராட்டுரைகள் பதிற்றுப் பத்திலும் அகநானூற்றிலும் இடம் பெற்றுள்ளன.

"கால்உளைக் கடும்பிசிர் உடைய, வால்உளைக்
கடும்பரிப் புரவி ஊர்ந்த நின்
படுதிரைப் பனிக்கடல் உழந்த தாளே."

"இனி,யா ருளரோ? நின் முன்னும் இல்லை;
மழைகொளக் குறையாது, புனல்புக நிறையாது,
விலங்குவளி கடவும் துளங்கிரும் கமஞ்சூல்
வயங்குமணி இமைப்பின் வேலிடுபு
முழங்குதிரைப் பனிக்கடல் மறுத்திசி னோரே."

"கோடுநரல் பௌவம் கலங்க வேலிட்டு
உடைதிரைப் பரப்பிற் படுகடல் ஓட்டிய
வெல்புகழ்க் குட்டுவன்."

"கடலொ டுழந்த பனித்துறைப் பரதவ."

(பதிற்றுப்பத்து: சக, சரு, சசு, சஅ)

"குட்டுவன்.
பொரு முரண் பெறாஅது விலங்குசினம் சிறந்து
செருச்செய் முன்பொடு முந்நீர் முற்றி
ஓங்குதிரைப் பௌவம் நீங்க ஓட்டிய
நீர்மாண் எஃகம்."

(அகம்: உகஉ)

மோகூரில் பழையன் என்பானொருவன் பெருவீரனாய் விளங்கி யிருந்தான்; பழையன், மோகூர் என ஊர்ப் பெயரானும் அழைக்கப் பெறுவான்; அவன் மோகூர் அரிய வளம் பல வாய்ந்தது; இப் பழையனோடு பகை கொண்டாருள் அறுகை என்பானும் ஒருவன்; சேரநாட்டிற்குச் சேய்மைக்கண் சிறக்க வாழ்ந்திருந்தவன் அவன்; வெல்லும் போர் பல கண்டவன்; அச் செருக்கால், மோகூர்ப் பழையனையும் பகைத்துப் போரிட்டான்; ஆனால் தோற்றான்; தோற்ற பழியஞ்சி எங்கோ ஓடி ஒளிந்து வாழலாயினன்; இச் செய்தி யறிந்தான் செங்குட்டுவன்; அறுகை செங்குட்டுவனின் அரிய நண்பருள் ஒருவனாவன்; சேய் நாட்டில் வாழ்ந்தமையால், சேர்ந்து வாழும் வாய்ப்பிழந்திருந்தான்; செங்குட்டுவனோ, "புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான், நட்பாம் கிழமை தரும்" என்ற உண்மையறிந்து ஒழுகும் உணர்வுடையனாவன்; அதனால், "அறுகை சேய் நாட்டினனாயினும், என் சிறந்த நண்பனாவன்; அவனுக்கு நேர்ந்த இவ் விழிவு, எனக்கு நேர்ந்த

இழிவாம்; ஆகவே, அது களைதல் என் கடன்" எனக் கொண்டான்; மோகூர்மீது படையொடு சென்றான்: கொங்கர் செங்களத்தே, சேரர் படைக்குத் தோற்றுப் பின்னிட்ட சோழனும், பாண்டியனும் பழையன் படைத் துணைவராயினர்; பேரரசர்கள் இவர்களேயல்லாமல் குறுநில மன்னர்களான வேளிர் பலரும், அவனுக்குத் துணை நின்றனர்; வேந்தரும், வேளிரும் ஒன்று கூடித் துணை புரியவே, பழையன் பெருஞ் செருக்குற்றான்; பேராற்றல் கொண்டு போரிட்டான்; ஆயினும், அவன் ஆற்றல் செங்குட்டுவன் முன் அழிந்தது; குட்டுவன், துணை வந்தோரைத் துரத்திவிட்டுப் பழையனைப் பணிய வைத்தான்; பட்டொழிந்த பழையன் படைவீரர் தம் உடலினின்றும் ஒழுகிய செந்நீர், மழை நாட் புனல்போல், பள்ளம் நோக்கிப் பாயுமாறு பாழ் பல செய்தும் செங்குட்டுவன் அமைதி கொண்டானல்லன்; போர் முரசு ஒலிப்பக், களத்தின் நடுவே வாளேந்தி நின்று, அவன் நாட்டு வளத்தையும் அழித்து, வாழவேண்டியவர் பலரையும் வாழாவகை வீழ்த்தினன்; பழையன் காவல் மரமாம் வேம்பை வெட்டி, அதை முரசு செய்தற்காம் சிறுசிறு துண்டுகளாக்கி, அவற்றைப் பழையன் மனைவியர் தம் மயிரைத் திரித்துப்பெற்ற கயிற்றால் கட்டி, அவன் யானைகளைக் கொண்டே இழுத்துச் சென்று, நண்பன் இழிவு துடைத்துத் தானும் புகழ் பெற்றான். செங்குட்டுவன் செய்த போர்களுள், மோகூர்ப் பழையனோடு அவன் ஆற்றிய இப்போரே, புலவர் பலரானும் பெரிதும் பாராட்டிப் பாடப்பெற்றுளது.

"வெல்போர் அறுகை
சேணனாயினும் கேள்என மொழிந்து
புலம்பெயர்ந் தொளித்த களையாப் பூசற்கு
அரண்கள் தாவுறீஇ, அணங்குநிகழ்ந் தன்ன
மோகூர் மன்னன் முரசம் கொண்டு
நெடுமொழி பணித்து, அவன் வேம்புமுதல் தடிந்து
முரசுசெய முரச்சிக் களிறுபல பூட்டி
ஒழுகை உய்த்தோய்."

“வெல்போர் வேந்தரும், வேளிரும் ஒன்றுமொழிந்து
மொய்வளம் செருக்கி, மொசிந்துவரு மோகூர்
வலம்படு குழூஉநிலை அதிர மண்டி
நெய்த்தோர் தொட்ட செங்கை மறவர்
நிறம்படு குருதி நிலம்படர்ந் தோடி
மழைநாட் புனலின் அவல்பரந் தொழுகப்
படுபிணம் பிறங்கப் பாழ்பல செய்து
படுகண் முரசம் நடுவண் சிலைப்ப
வளனற நிகழ்ந்து வாழுநர் பலர்படக்
கருஞ்சினை விறல்வேம் பறுத்த
பெருஞ் சினக் குட்டுவன்.” (பதிற்றுப் : சச, சகூ)

“பழையன் காக்கும் கருஞ்சினை வேம்பின்
முழாரை முழுமுதல் துமியப் பண்ணி
வாலிழை கழித்த நறும்பல் பெண்டிர்
பல்லிருங் கூந்தல் முரற்சியாற்
குஞ்சர ஒழுகை பூட்டி.” (பதிற்றுப், பதிகம் : ரு)

“பழையன் காக்கும் குழைபயில் நெடுங்கோட்டு
வேம்பு முதல் தடிந்த ஏந்துவாள் வலத்துப்
போந்தைக் கண்ணிப் பொறைய.”
(சிலம்பு, உஎ : கஉச-கூ)

இவ் வெற்றிகளே அல்லாமல், கடற்கரைக்கண் அமைந்து, “வயலை வேலி வியலூர்,” “விரிநீர் வியலூர்” என்றெல்லாம் புகழப்பெறும் வியலூரிலும் செங்குட்டுவன் ஒரு வெற்றி பெற்றான்; வியலூர் அவனால் அழிவுற்றது; கொல்லும் புலியொத்த போர் வீரர் பலர் ஆங்கே, அவனால் அழிந்தனர்.

“கறிவளர் சிலம்பிற் றுஞ்சும் யானையின்
சிறுகுரல் நெய்தல் வியலூர் எறிந்தபின்.”
(சிலம்பு, உஅ : ககச-ரு)

“உறுபுலி யன்ன வயவர் வீழச்
சிறுகுரல் நெய்தல் வியலூர் நூறி.”
(பதிற்றுப், பதிகம் : ரு)

வியலூரில் வெற்றி கண்ட செங்குட்டுவனுக்கு வேறு பணிகள் காத்துக் கிடந்தன; சோழ நாட்டில், தன் அம்மான் இறந்த பின்னர், அவன் இளைய மகன் ஆட்சித் தலைமை ஏற்பதைப் பொறாது, சோழர் குலத்து வந்த அரசர் ஒன்பதின்மர், நாட்டில் அமைதி குலைத்துப் பெருங் கலகம் விளைவிப்பாராயினர்: செங்குட்டுவன், அவ்வொன் பதின்மரையும், உறையூர்க்குத் தென்பால் உள்ள நேரி வாயில் என்னுமிடத்தே எதிர்த்துப் போரிட்டு ஒரு நாட் பொழுதிலேயே, அவர் அனைவரையும் அழித்து நாட்டில் அமைதியை நிலைநாட்டி, தம் அம்மான் சேயையும் அரியணை ஏற்றிவைத்து அகமகிழ்ந்தான்:

"ஆர்புனை தெரியல் ஒன்பது மன்னரை
நேரி வாயில் நிலைச்செரு வென்று."

(சிலம்பு, உஅ: ககசு-எ)

"மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
ஒத்த பண்பினர் ஒன்பது மன்னர்
இளவரசு பொறாஅர், ஏவல் கேளார்
வளநா டழிக்கும் மாண்பின ராதலின்,
ஒன்பது குடையும் ஒருபகல் ஒழித்து, அவன்
பொன்புனை திகிரி ஒருவழிப் படுத்தோய்."

(சிலம்பு, உஎ: ககஅ-உங)

"ஆராச் செருவிற் சோழர் குடிக்கு உரியோர்
ஒன்பதின்மர் வீழ வாயிற்புறத் திறுத்து."

(பதிற்றுப், பதிகம்: ரு)

நேரிவாயிற் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து, சோழ நாட்டில் தேவாரம் பெற்ற திருநகராகிய இடும்பா வனம் எனப்படும் இருப்பாத வனத்திலும், செங்குட்டுவன் ஒரு வெற்றிக்கு உரியனாயினான்; பெரும்படையோடு சென்று, கடும்போர் ஆற்ற வேண்டிய அப்போரில், செங் குட்டுவன் பகைவராயினார் இன்னார் என்பது இனிது புலப் படவில்லை:

"நெடுந்தேர்த் தானையொடு இடும்பிற் புறத்திறுத்துக்
கொடும்போர் கடந்து." (சிலம்பு, உஅ: ககஅ-கூ)

இவை யெல்லாவற்றினும், செங்குட்டுவனை உலகறியச் செய்த நிகழ்ச்சி, அவனைச் சேரருட் சிறந்தோனாக்கிய நிகழ்ச்சி. கண்ணகி தேவியார்க்குக் கல்லெடுக்க வடநாடு சென்று, தென் தமிழர் திறம் அறியாது, ஆணவத்தால் அறிவிழந்து இழித்துப் பேசிய வடவாரிய அரசர் கனக விசயரைக் கங்கைக்கரைக்கண் வென்று, அவர் தலைமீதே அக் கல்லையும் ஏற்றிக் கொணர்ந்து, கோயில் கட்டிக், கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும், நூற்றுவர் கன்னரும் வந்து வழிபட விழாவெடுத்த சிறப்பேயாம்; இச் சிறப்பெல்லாம், சிலப்பதிகாரத்தே, குன்றக்குரவை முதலாக, வரந்தரு காதை ஈறாக உள்ள ஏழு காதைகளினும் விளங்க உரைக்கப்பட்டுள்ளன; அவற்றின் விரிவையெல்லாம் ஆண்டு உணர்க.

செங்குட்டுவன், செருப் பலகடந்த சிறப்புடையனாதலேயன்றி, கொடுத்து மகிழும் குணச்சிறப்பும் உடையவனுவன்; மழை பெய்யாது போதலினால், நாட்டில் மூங்கில் கருகவும், வளங்குன்றாப் பெருங்குன்றுகள் வாடவும், அருவிகள் நீர் அற்று அழகிழப்பவும் பெரும்பஞ்சம் தோன்றிய காலத்தில், சேரநாட்டுப் பேராறு, கரைகளை அழித்து ஓடி, பொன்னேர் பூட்டும் உழவர் உள்ளமெல்லாம் பூரிக்கச்செய்யுமாறு பெருமழை பெய்து பெரு வெள்ளம் பெருகச்செய்யும் வானத்தைப் போன்ற கொடைக்குணம் உடையான் குட்டுவன்.

செங்குட்டுவன், பேரத்தாணிக்கண் அமர்ந்து, பொருள்பெறு நசையால் தன்னைப் பாடியடையும் புலவர் பெருமக்களை விரும்பி ஏற்று, அவர் ஆர உண்ணுமாறு அருகிருந்து ஊட்டுவன்; ஆடல் பாடல்களால் தன் அகம் மகிழச்செய்யும் பாணர், கூத்தர் முதலியோர்க்குப் பொற் கலன் அளித்துப் போற்றுவன்; கையிற்றாங்கிய யாழினின்றும் எழும் இசையொடு இயைய இன்குரல் எழுப்பிப் பாடும் விறலியர்க்குப் பிடியானை பல தந்து பேணி மகிழ்வன்; வெற்றிமேல் வெற்றியே வேட்கையாகக் கொண்டு பகைவேந்தர் உள்ளம் பதைபதைக்குமாறு, அவர் நாட்டிற்

புகுந்து போரிட்டுப் பொருள்பல கவர்ந்துவரும், ஆண்மை நிறைந்த ஆற்றல் மறவர்க்குக் கொல்லும் யானைகளைக் கொடுத்துக் கொற்றம் போற்றுவன்; கையில் கோலேந்தி, மன்றினும், மறுகினும் மன்னன் புகழை மகிழ்ந்து பாடும் பாணர்தமக்குப் பரிசாகப் பரிபல அளித்துப் பாராட்டுவன்; இவற்றாலெல்லாம் செங்குட்டுவன் புகழ், குன்றிலிட்ட விளக்கென, உலகெலாம் பரவி ஒளிவிடல் கண்டு, அவன் பகைவர் பொறாமை கொள்வர் எனினும், அவன் புகழ் அவன் உள்ளத்தே அடங்கி மறைந்துபோக மாண்புடையதாகவே, அப்பகைவரும் தம்மை மறந்து, அவர் புகழ் பாராட்டுவர் :

“ இரும்பனை திரங்கப், பெரும்பெயல் ஒளிப்பக்
குன்றுவறங் கூரச் சுடர்சினம் திகழ
அருவியற்ற பெருவறற் காலையும்
அருஞ்செலற் பேராற்று இருங்கரை உடைத்துக்
கடியேர் பூட்டுநர் கடுக்கை மலைய
வரைவில் அதிர்சிலை முழங்கிப் பெயல்சிறந்து
ஆர்கலி வானம் தளிசொரிந் தாஅங்கு,
உறுவர் ஆர, ஓம்பாது உண்டு,
நகைவர் ஆர நன்கலம் சிதறி,
ஆடுசிறை அறுத்த நரம்புசேர் இன்குரல்
பாடு விறலியர் பல்பிடி பெறுக;
துய்வீ வாகை நுண்கொடி உழிஞை
வென்றி மேவல் உருகெழு சிறப்பின்,
கொண்டி மள்ளர், கொல்களிறு பெறுக;
மன்றம் படர்ந்து, மறுகுசிறைப் புக்குக்
கண்டி நுண்கோல் கொண்டுகளம் வாழ்த்தும்
அகவலன் பெறுக மாவே என்றும்
இகல்வினை மேவலை யாகலின், பகைவரும்
தாங்காது புகழ்ந்த தூங்குகொளை முழவின்
தொலையாக் கற்ப.” (பதிற்றுப் : சரு)

ஆற்றல்மிக்க அரசனாகவும், ஏற்றோர் இன்முகம் கண்டு உவக்கும் உயர் கொடையாளனாகவும் விளங்கிய

செங்குட்டுவன், கடவுள் அன்புகொண்ட காவலனுகவும் விளங்கினுன். கண்ணகிக்குக் கற்கொணர்வான் வேண்டி, வடநாடு நோக்கிச் செல்வோன்முன், ஆடகமாடம் என்னும் கோயிலில் அறிதுயில் அமர்ந்தருளும் திருமாலின் பிரசாதத்துடன் வந்து சிலர் அரசன்முன் நிற்க, சிவபிரான் திருவடிகளேச் சென்னியிற் ருங்கி யிருக்கும் செங்குட்டுவன் திருமால் பிரசாதத்தை வாங்கித் தன் மணிப்புயத்துத் தாங்கினுன் என இளங்கோவடிகள் கூறுவர்:

> "ஆடக மாடத்து அறிதுயில் அமர்ந்தோன்
> சேடம் கொண்டு சிலர் நின்று ஏத்தத்
> தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
> வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்,
> ஆங்கது வாங்கி அணிமணிப் புயத்துத்
> தாங்கினன்." (சிலம்பு, உ௬: ௬௨-எ)

இவ்வாறு பல்லாற்ருனும் பாருளோர் போற்றவாழ்ந்த செங்குட்டுவன், முதுபெரும் புலவராய பரணர் தம் பாடல் கேட்டு, அவர்தம் அருமையும், பெருமையும் அறிந்து, அவர்க்குத் தன் நாட்டின் ஒரு பகுதியாக விளங்கிய உம்பற்காட்டின் வருவாயினே வழங்கியதோடு, அவர்பால் தன் அருமை மகன் குட்டுவன் சேரலேயும் ஒப்படைத்து, அவனே அறிவுத்துறை போய பெரியோனுக்குமாறு வேண்டினுன். புலவர்பால் அவன் காட்டும் பெருமதிப்பினேப் பாராட்டி மகிழ்வோமாக.

# அ. கணைக்கால் இரும்பொறை

மேலைக் கடற்கரைப் பட்டினங்களாகிய தொண்டி, மாந்தை, நறவு என்ற பேரூர்களைத் தலைநகர்களாகக் கொண்டு நாடாண்டிருந்த இரும்பொறை மரபில் வந்த அரசர்களுள், கணைக்கால் இரும்பொறையும் ஒருவனாவன்; கணைக்காலிரும்பொறை வெற்றியன்றித் தோற்றலையறியாத வேற்படை மிக்க பெரிய படைக்கு உரியவன்; படைவலியோடு சிறந்த உடல்வலியும் உடையவன். ஒருகால், பாசறைக்கண் இருந்தபோது, தன் படையைச் சேர்ந்த யானையொன்று, மதம்மிக்கு, அழிவுபல செய்து திரியலாயிற்று; அதனை அடக்கலாற்றாது, அவன் படை மறவர் அனைவரும் அஞ்சி நடுங்கினர்; அந்நிலையில், அவ்யானையை அடக்கி, அவ்வூராரெல்லாம் அச்சம் நீங்கி இனிது கண்ணுறங்குமாறு செய்த பேராண்மையுடையவன் நம் கணைக்காலிரும்பொறையே. கணைக்காலிரும்பொறை காலத்தே சிறந்த கொடைப்புகழ் கொண்ட, மூவன் எனும் பெருவீரன் ஒருவன் இருந்தான்; அவனுக்கும், கணைக்காலிரும்பொறைக்கும் இடையில், ஏனோ பகை வளர்ந்துவிட்டது; இரும்பொறை அவனைப் போரில் வென்று அகப்படுத்தியதோடு, அவன் பற்களையும் பிடுங்கி, தன் வெற்றிச் சிறப்பினை ஏனைப் பகை வேந்தரெல்லாம் அறிந்து அஞ்சுமாறு, அவற்றைத் தொண்டி நகர்க்கண் உள்ள தன் கோட்டை வாயிற் கதவில் அழுத்தி வைத்தான்; இரும்பொறையின் இப் பேராண்மைகளையெல்லாம், அவன் அரிய நண்பரும், அவன் அவைக்களப் புலவருமாய பொய்கையார், தாம் பாடிய நற்றிணைச் செய்யுளொன்றில் வைத்துப் பாராட்டியுள்ளார்;

"மூவன்
முழுவலி முள்ளெயிறு அழுத்திய கதவின்
கானலந் தொண்டிப் பொருநன்; வென்வேல்
தெறலருந் தானைப் பொறையன்; பாசறை
நெஞ்சம் நடுக்குறூஉம் துஞ்சா மறவர்
திரைதபு கடலின் இனிதுகண் படுப்பக்
கடாஅம் கழீஇய கதனடங்கு யானை." (நற் : ௧௮)

கணைக்காலிரும்பொறை காலத்தே, சோணாட்டில் செங்கணான் எனும் பேரரசன் ஒருவன் அரியணையேறி யிருந்தான்; சேரமான் கணைக்காலிரும்பொறையும், சோழன் செங்கணானும் பகைகொண்டனர்; கழுமலம் என்ற நகரை அடுத்துள்ள திருப்போர்ப்புறம் எனுமிடத்தே கடும்போர் நிகழ்ந்தது. 'யானைக்கும் அடிசறுக்கும்' என்ப. பெரும் படையும் பேராண்மையும் உடையவனாகிய கணைக்காலிரும் பொறை, செங்கணானின் பெரிய யானைப்படையினை வெல்லமாட்டாது தோற்றான்; தோற்ற சேரனைக் கைப் பற்றிக்கொண்டுபோய்ச் சோழன் குடவாயிற் கோட்டத்தின் கண்ணேயுள்ள சிறையில் காவல்வைத்தான்.

பகைவன் பின் சென்று, பணிந்து, பல்லைக் காட்டி வாழ்வதினும், அந்நிலையுற்ற அக்கணமே, உலக வாழ்வை மறந்து உயிரைத் துறந்துவிடுதல், உயர்ந்தோர் போற்றும் உரனுடையார் செயலாம்; தம் நிலை தளரும் காலம் வந்துற்றக்கால், மானத்தை இழந்து, உயிர்வாழ எண்ணாது, உயிரை இழந்து மானத்தைக் காக்கும் மாண்புடையாரை, மாநிலம் அனைத்தும் மண்டியிட்டு வணங்கும்; இவ்வுர னுடை யுள்ளம் உடையவன் கணைக்கா லிரும்பொறை ஆதலின், பகைவன், சிறையக வாழ்வே பழிதரு செயலாம் என எண்ணி வருந்தினான்; அவன் உள்ளத் துயரை உயர்நிலைக்குக் கொண்டுசெல்லும் நிகழ்ச்சி யொன்று நிகழ்ந்துவிட்டது.

ஆங்கே, சிறையில் இருந்த சேரன், ஒருநாள் சிறைக் காவலரை, உண்ணீர், தர வேண்டினான். அவர்கள் அவனும் ஒரு சிறைக் கைதியே என்ற எண்ணமுடையராய், ஏனைக் கைதிகள்பால் நடந்துகொள்வதேபோல், அவன் கேட்ட போதே நீர் தாராது காலம் தாழ்த்தித் தந்தனர்; தரும் போதும், அரசன் என்ற மதிப்பின்றித் தந்தும் இழிவு செய்தனர்; காவலர்தம் இவ் விழிசெயல் கண்டு, காவலன் உள்ளம் பொறாதாயிற்று; அவர் தந்த அந்நீரை உண்ணாது ஒருபால் வைத்துவிட்டான்; ஆழ்ந்த சிந்தனையுள் ஆழ்ந்து விட்டான் அரசன்.

"போர்க்களம் புக்குப் போரிட்டு, வாள்வடுப் பெற்ற வர்க்கே துறக்கத்தில் இடமுண்டு என்ப ; இறந்து பிறந்த குழந்தையும், உருவின்றிப் பிறந்த ஊன்தடியும், அத்தகு வாள் வடுப்பெறும் வாய்ப்பினைப் பெறுவதில ; ஆதலின் அவை துறக்கம் புகா ; ஆனால், அவற்றையும் துறக்கம் புகுத்தும் நல் உள்ளத்தவராய் நாடாள்வார், அவற்றைத் தருப்பைப் புல்மீது கிடத்தி, 'வெற்றிவீரர் சென்றவழியே இவையும் செல்க,' என, வாழ்த்தி வாளால் வெட்டிப் புதைப்பர் ; இஃது அரசர்கள் பண்பு. அத்தகைய அரசர் கள் மரபிலே வந்த யான், சங்கிலியால் பிணிக்கப்பெற்று, இழுத்துச் செல்லப்படும் நாய்களேபோல், பகைவரான் தளைசெய்யப் பெற்று, அவர் அடைத்த சிறையகத்தே வாழ்கின்றனனே ! அந்தோ ! என்னே என்நிலை ! அவர்கள் அளிக்கும் உணவினை உண்ணேன் என்ற உறுதிப்பாடு அற்று வயிற்றுப் பசித்தீயை அடக்குவதற்காக, அவரே தாராத நிலையில், நானே இரந்து வேண்டி, அவர் இகழ்ந்து அளித்த நீரை உண்ணும் இழிநிலையுடைய கீழ் மகனோ யான்? என்னைப்போலும் கீழ்மகன் எவனும், இவ்வுலகின் என்றும் பிறவான்," என்றெல்லாம் எண்ணி எண்ணி ஏங்கிற்று அவன் உள்ளம்; எண்ணிய தன் எண்ணத்தை ஓர் ஏட்டில் எழுத்துருவாக்கி அண்மையில் இருத்தி உறங்கி விட்டான் :

"குழவி இறப்பினும், ஊன் தடி பிறப்பினும்
'ஆளன்று' என்று வாளின் தப்பார் :
தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை இன்றி வயிற்றுத் தீத் தணியத்
தாம் இரந்து உண்ணும் அளவை
ஈன்மரோ? இவ்வுலகத் தானே," (புறம் : எசு)

சேரமான் கணைக்கா லிரும்பொறையின் அவைக் களத்தே இருந்து அவன் வெற்றிச் சிறப்பினையும், மற னிழுக்கா மானம் நிறைந்த அவன் பண்பாட்டுப் பெருமை யினையும் பாடி மகிழும் புலவராய பொய்கையார், தம் அரச

னுக்கு நேர்ந்த கதியினைக் கண்டார்; கண்ணீர் விட்டுக் கலங்கினர்; சேரனைச் சிறைவீடுசெய்து சிறப்பித்தல், அவன் ஆருயிர் நண்பராய தம் கடனே என உணர்ந்தார்; சோழன் செங்கணன், சேரனைச் சிறைசெய்த கொடியோன் எனினும், புலவர்பாலும், அவர் தம் பாக்கள்பாலும் பெரு மதிப்புடையான் என்பதை அவர் அறிவாராதலின், உடனே அவன் அரசவையினை விரைந்து அடைந்தார்; நாற்பது வெண்பாக்களைக் கொண்ட, "களவழி நாற்பது" என்ற கவின்மிகு நூலைப் பாடிப் பாராட்டினர்; அதில், சோழன் செங்கணன், சேரமான் கணைக்கா லிரும்பொறையோடு கழுமலத்திடத்தே நடத்திய போரின் சிறப்பினையும், அப் போரில் செங்கணன் பெற்ற வெற்றிச் சிறப்பினையும் விளங்க உரைத்துப் பாராட்டினர்; அந் நூலின் பாடற் பொருளையும் அதன் பெருமையையும் உணர்ந்தான் செங் கணன்; புலவர் உளம் உவக்கும்வண்ணம், அவர் அன்பு காட்டும் அரசனுய சேரமானைச் சிறையினின்றும் விடுத்து அவர்பால் ஒப்படைத்து மகிழ்ந்தான்.

"களவழிக் கவிதை பொய்கை உரைசெய்ய, உதியன்
கால்வழித் தளையை வெட்டி அரசிட்ட பரிசும்."

(கலிங்கத்துப் பரணி)

"இன்னருளின்,
மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப்
பாதத் தளைவிட்ட பார்த்திபனும்."

(விக்கிரம சோழனுலா)

இனி, சேரமான் கணைக்கால் இரும்பொறை, பொய் கையார் கவி பாடிச் சிறைவீடுசெய்யும்வரை, உயிர் காத்து நின்றானல்லன், தன் உள்ள எண்ணத்தை உருவாக்கும் எழுத்தோவியத்தை ஏட்டில் தீட்டியதும் இறந்து இறவா நெறி பெற்றுவிட்டான் என்றே அறிஞர் பலரும் கருதுவர். 'மானம் இழந்தபின் வாழாமை முன்னினிதே' என்ற மறைப்பொருட்கு வழிகாட்டிய மன்னவன் வாழ்க!

## கூ. கருவூர் ஏறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை

கருவூர் ஏறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை, சேரருள் இரும்பொறை என்ற மரபில் வந்தோனுவன்; தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்பானும் ஒருவன் இருத்தலின், அவனின் வேறு அறிதற்கு, இவன், கருவூர் ஏறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை எனப்பட்டான்; இரும்பொறை மரபினர், தொண்டி, மாந்தைபோன்ற ஊர்களால் சிறப்புற்ற கடற்கரை நாட்டினை ஆண்டிருந்தவராவர்; அவர் வழிவந்த இவன், தனக்குரிய நாட்டோடு அமையானுய்க் கொங்குநாட்டில் உள்ளதும், சேரருள் மற்றொரு கிளையினர்க்கு உரியதுமாய கருவூரையும் கைப்பற்றி, அந் நகர்க்கண்ணே அரசுகட்டில் ஏறி, முடி சூடிக்கொண்ட சிறப்புடையோனுவன்; வாட்போரில் வல்லவன்; பெருஞ்சேரல் எனப் பெருமை செய்யப்பெற்றான்.

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே" என்ப; தம்மைக் காண்பார்தம் தீமை போக்கி நன்மை பெருகச்செய்யும் ஆற்றல் நல்லார்க்கு உண்டு; கருவூர் ஏறிய ஒள்வாட் கோப் பெருஞ்சேரல் இரும்பொறைபால் அத்தகைய நல் பண்பு அமைந்து கிடந்தது; தன்னைக் காண்பார்பால் அமைந்துகிடக்கும் வெறுக்கத்தக்க பண்புகளையே யல்லாமல், அவர்தம் வெறுக்கத்தக்க உடலமைப்புக்களையும் மாற்றவல்ல தோற்றப் பொலிவுடையான் பெருஞ்சேரல் இரும்பொறை; அவன் காலத்தே நரிவெரூஉத் தலையார் என்ற புலவர் பெருந்தகையார் ஒருவர் இருந்தார்; அவர் உடல் நலமும், தோற்றமும் யாது காரணத்தாலோ வேறுபட்டுத் தோன்றின; அவ்வாறு வேறுபட்ட அவர் தோற்றம், எவ்வுருவைக் கண்டும் அச்சம்கொள்ளா இயல்பினதாய நரிக்கும் அச்சம் தரும் அத்துணைக் கொடிதாய் அமைந்திருந்தது; பெருஞ்சேரல் இரும்பொறையின் காட்சி நலச் சிறப்பினையும், நரிவெரூஉத் தலையாரின் உடல்

நலக் குறைவினையும் உணர்ந்தார் சிலர், நரிவெரூஉத் தலையார்பால், "பெருஞ்சேரல் இரும்பொறையைக் காணின், நின் உடற்குறை தீரும்" எனக் கூறி, அவன் யாண்டுளன்? அவன் இயல் யாது? என்பனவற்றையும் அறிவிக்கத் தொடங்கி, "எருமைகளுக்கு இடையிடையே கலந்து மேயும் ஆனிரைகளேபோல், கரிய பாறைகளுக்கு இடையிடையே உலாவும் யானைகள் நிறைந்த காட்டுநாட்டில் வாழ்கின்றான் அவன்" என்றும் கூறினர்; நரிவெரூஉத் தலையாரும், அவர்கள் கூறியவாறே சென்று, பெருஞ்சேரல் இரும்பொறையைக் கண்டார்; கண்டவுடனே, அவர் நோய் நீங்கிற்று; கண்டவர் மகிழும் கவின்மிகு வடிவுற்றார்.

நரிவெரூஉத் தலையார், நல்ல அறிவுணர்வுடைய ஆன்றோராவர்; நன்றி மறவா நன்மாண்புடையராவர்; தாம் பெற்றிருந்த பழியுடல் நீங்கிப் புகழுடல் பெறுதற்குக் காரணமாகிய சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாட் கோப் பெருஞ்சேரல் இரும்பொறை நல்வாழ்வு வாழ விரும்பினர்; பிறர்பால் உள்ள பெருந்துயர் போக்கும் பெருமையுடையோனாகிய பெருஞ்சேரல் இரும்பொறை, பல்லாண்டு வாழ்ந்து பல்லோர் பிணிபோக்கித் துணைபுரிதல் வேண்டும் எனவும், அதற்காம் அரசாள் பண்பு அவனிடத்தே அமைதல் வேண்டும் எனவும் விரும்பினர்.

ஆளும் அரசனிடத்தில் அன்பும் அருளும் நீங்காது நிறைவுற்றிருத்தல் வேண்டும்; அவை, அவன்மாட்டு இல்லாயின், அவன் ஆட்சி நெடுநாள் நிலைபெற்றிராது; அன்பையும், அருளையும் அடிப்படையாகக் கொண்ட ஆட்சியினையே எவரும் விரும்புவர்; அவை இரண்டும் இல்லார், அறநெறி நில்லார்; ஆதலின், அவர் ஆட்சி அழிவதோடு, அவரும் பழி பாவங்கள் உடையராய் மீளாத்துயர் உறுவர் என்ற உண்மைகளை உணர்ந்த நரிவெரூஉத் தலையார் தாம் நல்லுடல் பெற்று உயர்வதற்கு உறுதுணை புரிந்த ஓர் அரசன், அவ்வாறு அன்பும், அருளும் இலனாய்ப், பழிபாவங்கள் நிறைந்த பாழ்பட்ட வாழ்வுடையனாதலை விரும்பினரல்லர்; ஒரு நாட்டு மக்கள், தங்கள்

அரசன் தீயனல்லன் என்ற ஒன்றினாலேயே, உயர்நிலை பெறுவதோ, பெருமை கொள்வதோ இலர்; அவன் தீய னல்லன் என்பதோடு, நல்லனுமாவன் என்பதையே விரும் புவர்; அரசன் குடிகளின் குறையறிந்து ஆளுதல்வேண்டும்; குடிகள் தம் குறையினைத் தன் முன் வந்து நின்று கூறக் கேட்ட பின்னர், அவர்க்குக் குறையுண்டு என உணர்ந்து தீர்ப்போன் நல்லரசனாகான்; அவர் குறைகளைக் குறிப்பா லறிந்து போக்குதல் வேண்டும்; குழந்தை பால் உண்ணும் நேரம் இது என்பதை நினைத்திருந்து ஊட்டி வளர்ப்பவளே உண்மைத் தாய்; தாய் எனக் கூறத்தக்காள் அவளே; அரசனும், குடிகளிடத்தில் அத்தகைய தாயன்பு காட்டி ஆளுதல் வேண்டும்; நல்லாட்சியின் இப்பண்பையும் உணர்ந்த நரிவெரூஉத் தலையார், பெருஞ்சேரல் இரும் பொறையும், அத்தகைய உத்தம அரசனாதலை விரும்பினர்; அவ்வேட்கையுடையராய அவர், பெருஞ்சேரலை நோக்கி, “பெரும! நின்பால் பெருஞ்செல்வம் உளது; அச்செல் வத்தோடு, இப்பண்புகளையும் உடையையாயின், நின்நிலை மேலும் சிறக்கும்; அச்சிறந்த நிலையினை எவரும் எளிதில் எய்துதல் இயலாது; அதை நீ, போற்றிக் காப்பாயாக!” என்று கூறி வாழ்த்தினர்; நரிவெரூஉத் தலையார்க்கு நல்லுடல் அளித்த பெருஞ்சேரல் இரும்பொறை, அவர் பால் நல்லுரை பெற்று நன்னிலை உற்றான்.

“எருமை யன்ன கருங்கல் இடைதோறு
ஆனிற் பரக்கும் யானைய, முன்பின்
கானக நாடனை நீயோ பெரும!
நீயோ ராகலின், நின்னொன்று மொழிவல்;
அருளும், அன்பும் நீக்கி, நீங்கா
நிரயம் கொள்பவரொடு ஒன்றாது, காவல்
குழவி கொள்பவரின் ஓம்புமதி!
அளிதோ தானே; அது பெறலருங் குரைத்தே.”

(புறம்: ரு)

## ௬௦. கருவூர்ச் சாத்தன்

ஐயனார்க்குரிய சாத்தனார் எனும் பெயரைத் தன் இயற்பெயராகக் கொண்ட இவர், கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட சேர அரசர்களுள் ஒருவராவர். இவர் வரலாறாக நாம் அறியத்தக்கன இத்துணையவே; இவர் ஒரு புலவர் நாடாளும் அரசராய் அமர்ந்து, அறிவு சான்ற புலவர் பெருமக்கட்குப் பரிசு அளித்துப் பெருமை செய்வதால் தமிழ் வளரத் துணைபுரிதலோடு, அத்தமிழைத் தாமும் அறிந்து பாக்கள் பல பாடித் தமிழ் வளர்த்தாருள் கருவூர்ச் சாத்தனும் ஒருவர்.

தலைமகள் ஒருத்தியைக் கண்டு காதல் கொண்டான் ஒரு தலைமகன்; தம் காதல் ஒழுக்கத்தைச் சின்னாள்வரை எவரும் அறியாவாறு மறைத்து மேற்கொள்ள விரும்பினான்; அத்தகைய களவொழுக்கத்தில் பேரின்பம் இருப்பதுணர்ந்த தலைவியும் அதற்குத் தடை செய்திலள்; இதனால், அவன் இரவில், கடத்தற்கரிய கொடிய வழி பல கடந்து வரவேண்டியதாயிற்று; இவ்வொழுக்கத்தைத் தலைமகள் விரும்புகிறாள் எனினும், அவன் வரும் காலக் கொடுமையும், வழியின் ஏதமும் அவளுக்கு அச்சத்தை அளித்தன. தலைமகள் அன்பையும், அச்சத்தையும் ஒருங்குணர்ந்த அவள் தோழி, அதற்கொரு மருந்தினைத் தேடலாயினள்; தலைவனை இன்றி வாழ்வதோ தலைவிக்கு இயலாது; அவன் வரும் வழியோ கொடுமை நிறைந்தது; இதற்கு வழி, அவன் அத்தகைய கொடிய வழியில் வரவேண்டுவதின்றி அவளோடு பிரியாதிருத்தலே ஆகும். அவள் அவனை மணந்து கொள்வதே எனத் துணிந்தாள்; இதை, அவனுக்கு நேரிற் கூறாது, இவ்வெண்ணம் அவன் உளத்தே தோன்றுமாறு கூற எண்ணினாள்; ஒரு நாள், தலைவன் நள்ளிரவில் வந்து வீட்டின் புறத்தே நின்றுகொண்டிருந்தான்; இதை அறிந்துகொண்ட தோழி, அவன் வருகையினை அறியாதாள் போன்று, அவன் கேட்குமாறு, தலைவியை நோக்கி, "தோழி! தலைவனும்,

நீயும் கொண்டுள்ள அன்பின் உண்மைநிலையினை உணர்ந்த வளாதலின், வந்த தலைவரைக், 'காலம் மிகுதியும் கழிந்து விட்டது: வழியில் ஏதம் மிகும் முன்னரே செல்வது நன்று; செல்கின்றீர்களா?' எனக் கூறி விரைந்து அனுப்பவும் வாய் வந்திலது; வழியில் ஏதம் பல உண்டு என அறிவேன் ஆதலின், அவ்வழியே அவனை வரக் கூறுதல் நன்றன்று; எனவே, நாளையும் வருகின்றீர்களா?' எனக் கேட்டு வரவேற்கவும் வாய் வந்திலது; இவ்வாறு, அவனையின்றி வருந்தும் நின் அன்பு கண்டு அஞ்சுவதா? படமெடுத்தாடும் பாம்பையும் அழிக்கும் இடியேறு முழங் கும் நள்ளிரவில் வருகின்றனரே என அவர் வரும் வழி அறிந்திலேன்; என் செய்வேன்?" என்று கூறினாள். தோழி கூறும் இச்சொற்கள், தலைவியின் நிலையினைத் தலை மகனுக்குத் தெளிய உணர்த்தி, இக்களவொழுக்கத்தினைத் தொடர்ந்து மேற்கோடல் நன்றன்று; விரைந்து வரைந்து கோடலே நன்றாம் என்ற முடிவினை, அவனைக் கொள்ளு மாறு செய்யத் துணைபுரியும் தோழியின் கூற்றமைய வந்த இப்பாட்டு ஒன்றே, தலைமகள், தலைவன், தோழி இவர்கள் தம் அன்பு உள்ளங்களைத் தெள்ளத் தெளிய உணர்த்தி நிற்கிறது; இத்துணைக் கருத்துக்களும் புலப் படப் பாடத்தக்க பெரும் புலவராய்க் காட்சி அளிக்கிறார், கருவூர்ச் சாத்தனார்,

"சேறிரோ? எனச் செப்பலும் ஆற்றாம்;
வருவிரோ? என வினவலும் வினவாம்;
யாங்குச் செய்வாம் கொல்? தோழி! பாம்பின்
பையுடை இருந்தலை துமிக்கும் ஏற்றொடு
நடுநாள் என்னார் வந்து
நெடுமென் பணைத்தோள் அடைந்திசி னோரே."

(குறுந்: உகூஅ)

## கக. களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல்

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மக்கள் நால்வருள், களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலும் ஒருவன். களங் காய்க்கண்ணி நார்முடிச்சேரல், இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன் இளைய மனைவி, வேளாவிக்கோமான் பதுமன் மகள் வயிற்றிற் பிறந்தோனவன். இவன் ஒரு தாய் வயிற் றுதித்த உடன்பிறந்தோன் ஆடுகோட்பாட்டுச் சேரலாத னவன். களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் எனும் இப் பெயர், இவன் களங்காயாற் கண்ணியும், நாரால் முடியும் செய்து அணிந்து கொண்டிருந்தமைபற்றி வந்த காரணப் பெயராம். பதிற்றுப்பத்தின் பழைய உரையாசிரியர் "தான் முடி சூடுகின்ற காலத்து ஒரு காரணத்தால் முடித் தற்குத் தக்க கண்ணியும், முடியும் உதவாமையின், களங் காயாற் கண்ணியும், நாரால் முடியும் செய்துகொள்ளப் பட்டன" எனக் காரணம் கூறுவர். இவன் இளையனாய் அரசு எய்துகின்ற காலத்தே, ஒருசிலர், நன்னன் என்பான் துணைபெற்று, சேரநாட்டின் ஒரு பகுதியைக் கைப்பற்றி ஆண்டுகொண்டிருந்தாராக, "அந்நாட்டையும் வென்று, சேர அரசிற்குரிய அனைத்து நாட்டையும் ஆளும் அந்நாள் வரை, அச்சேரர்க்குரிய கண்ணியும் முடியும் புனையேன்" எனச் சூளுரைத்து, அவற்றிற்கு ஈடாகக் களங்காய்க் கண்ணியும், நார்முடியும் புனைந்து நின்றமையால் இவனுக்கு இப்பெயர் வந்தது எனக் கூறல் பொருந்தும் என்பாரும் உளர். இவனைப் பாடிய புலவர் காப்பியாற்றுக் காப்பியனார், இவன் அணிந்திருந்த அந் நார்முடியினை அணி பெறப் புனைந்து பாராட்டியுள்ளார் :

விளிம்பிலே மணிகள் கோக்கப்பெற்ற ஒரு பொற்கூடு; நார்கொண்டு பின்னப்பட்டுள்ளது அதன் மேற்புறம்; இழைத்து வைத்தாற்போலும் புள்ளிகள் நிறைந்த கழுத் தினையும், சிறிய முதுகினையும் உடைய அழகிய புறாக்கள், தங்களைப் பிடிக்கக் கருதும் வேடர் விரித்த வலையோ என அஞ்சுமாறு, உலர்ந்து இலைகள் உதிர்ந்து நிற்கும் வேல மரத்தின் கிளைகளில், சிலந்தி தன் வாய் நீரால் பின்னிய

வலையை நினைப்பூட்டும், அப்பொற் கூட்டின் மேற்புறம் மறையுமாறு பின்னிக்கிடக்கும் அந்நாரின் தோற்றம். நாரின் செம்மையற்ற காட்சி மறையுமாறு, விளங்கிய நூலால் கோக்கப்பெற்று ஒளிகாலும் முத்துவடங்கள் கிடந்து அணிதந்து நிற்கும் அம்முடிக்கு நார்முடி அளிக்கும் நற்சான்று இது:

"வாலிதின், நூலின் இழையா, நுண்மயிர் இழைய
பொறித்த போலும் புள்ளி எருத்தின்
புன்புறப் புறவின் கணநிரை அலற
அலந்தலை வேலத்து உலவை அஞ்சினைச்
சிலம்பி கோலிய அலங்கல் போர்வையின்
இலங்குமணி மிடைந்த பசும்பொன் படலத்து
அவிர்இழை தைஇ, மின் உமிழ்பு இலங்கச்
சீர்மிகு முத்தம் தைஇய
நார் முடி.''
(பதிற்றுப்: ௩௯)

களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலோடு பகைத்து நின்றோர் நன்னனும், நெடுமிடலஞ்சியுமாவார்; நன்னன், நார்முடிச்சேரல் நனி இளையனாய் இருந்த காலத்தே, அவனுக்குரிய பூழிநாட்டைக் கவர்ந்துகொண்டான்; நார்முடிச் சேரல், சேரர் அரியணை ஏறியதும், நன்னன் ஆண்டிருந்த பூழிநாட்டின்மீது படையெடுத்துச் சென்று, கடம்பின் பெருவாயில், வாகைப் பெருந்துறை என்னும் இடங்களில் கடும்போர் ஆற்றி, அந்நன்னனுக்குரிய காவல் மரமாகிய வாகைமரத்தை வெட்டி வீழ்த்தி, அவனையும் வென்று, பண்டுதான் இழந்த நாட்டைப் பெற்று மீண்டான்; சேரல் பெற்ற இச்சிறப்புடை வெற்றியைக் கல்லாடனாரும், காப்பியாற்றுக் காப்பியனாரும் கவினுறப் பாடியுள்ளார்:

"இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவில்
பொலம்பூண் நன்னன் பொருது களத்துஒழிய
வலம்படு கொற்றம் தந்த வாய்வாள்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
இழந்தநாடு தந்தன்ன வளம்.''
(கல்லாடனார், அகம்: ௧௯௯)

"பொன்னங் கண்ணிப் பொலந்தேர் நன்னன்
சுடர்வீ வாகைக் கடிமுதல் தடிந்த
தார்மிகு மைந்தின் நார்முடிச் சேரல்."
(காப்பியாற்றுக் காப்பியனார் : பதிற்றுப் : ௪0)

அதியமான் நெடுமான் அஞ்சியின் குலத்துவந் தோனாய நெடுமிடல் என்பான், வளம் செறிந்த மருத நிலத்தூர்களை ஆண்டிருந்தான்; நாரைகள், தமக்கு வேண்டும் உணவுகளைத் தேர்ந்து உண்ணற்காம் மீன்களால் நிறைந்தது அவன் நாட்டு நன்செய்; அந்நன்செய்களில், மூங்கில்போல் வளர்ந்து விளங்கும் நெற்பயிர்களில், கதிர்கள் கனத்தால் தலைசாய்ந்து கிடக்கும்; இவ்வாறு வளங் கொழிக்கும் நாடுடைமையால், நெடுமிடல் செருக்குற்றிருந்தான்; நார்முடிச் சேரல், அவன்மிடல் கெடுமாறு, படையொடு அவன் நாட்டுட் புகுந்து, தன் யானைப்படையால், அவன் நாட்டுவளத்தையும் அழித்து, அவனையும் அழித்தான் :

"நெடுமிடல் சாயக் கொடுமிடல் துமியப்
பெருமலை யானையொடு புலங்கெட இறுத்துத்
தடந்தாள் நாரை படிந்து இரைகவரும்
முடந்தை நெல்லின் கழையமல் கழனிப்
பிழையா விளையுள் நாடகப் படுத்து." (பதிற்றுப்: ௩௨)

நார்முடிச் சேரல், சேரர்க்கு உரியதாய்ப் பயன்மிகத் தந்து விளங்கும் நேரிமலைக்குச் சென்று, ஆண்டுள நீர்வீழ் காட்சிகளைக் கண்டு களித்து வாழும் வாழ்க்கையிலும் கருத்துடையனாவன் :

"நீரிமிழ் சிலம்பின் நேரி யோனே." (பதிற்றுப்: ௪0)

களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலின் நலமெலாம் தோன்றப் பாடிய புலவர் காப்பியாற்றுக் காப்பியனார், நார்முடிச் சேரல், வண்டன் என்னும் வள்ளல்போல் வற்றாத செல்வமும், விளங்கிய புகழும் பெருகப்பெற்றவன்; தளர்ந்த தம் குடியினர் தம் தளர்ச்சி போக்கும் தாளாளன்; கல்வி கேள்விகளால் நிறைந்தவன்; பணி

வுடைமையைப் பண்பாகப் பெற்றவன்; ஐம்புலனும் அடக்கிய ஆற்றல் உடையான்; இவை உண்டற்கு இனியன என உரைத்தவழியும், அவற்றைத் தனித்திருந்து தானே உண்ணும் உள்ளம் அற்று, அவற்றைப் பலர்க்கும் பகுத்து ஊட்டி உண்ணும் பண்புடையன்; போர்மேற் கொண்டு பகைவர் நாட்டகத்தே வாழும் நாட்களிலும், பெருஞ் சினம் கொள்ளாது பொறையேபூணும் பொற்புடையவன்; பகைவர் தம் பெருவலிகெடப் பொரும் அக்காலையும், தோற்று ஓடும் அப்பகைவர் புறத்தே அம்பேவ எண்ணு ஆற்றல்நிறை படைமறவரையே பெற்றவன்; இவ்வாறு எவ்வழி நோக்கினும், அவன் இறப்ப உயர்ந்து விளங்குவதால், அவன் புகழின் அளவை இத்துணைத்தென எண்ணிக் காண எண்ணுவார், எண்ணிக் காணமாட்டாது இடையே தடையுற்றுப் போவர் என அவன் புகழைப் போற்றிப் போற்றிப் புகழ்ந்துள்ளார் :

"வண்புகழ் நிறுத்த வகைசால் செல்வத்து
வண்டன் அனையைமன் நீயே." (பதிற்றுப் : ௬௧)

"ஆன்றவிந் தடங்கிய செயிர்தீர் செம்மால்!
வான்தோய் நல்லிசை உலகமொடுயிர்ப்பத்
துளங்குகுடி திருத்திய வலம்படு வென்றியும்."
(பதிற்றுப் : ௬௭)

"இனியவை பெறினே தனிதனி நுகர்கேம் ;
தருக எனவிழையாத் தாவில் நெஞ்சத்துப்
பகுத்தூண் தொகுத்த ஆண்மைப்
பிறர்க்கென வாழ்தி நீ ஆகன்மாறே." (பதிற்றுப்: ௬௮)

"பகைவர் தேஎத் தாயினும்
சினவா யாகுதல்இறும்பூதாற்பெரிதே." (பதிற்றுப்: ௬௨)

"ஓடுங்காத் தெவ்வர் ஊக்கறக் கடைஇப்
புறக்கொடை எறியார் நின்மறப்படை கொள்ளுநர்."
(பதிற்றுப் : ௬௧)

"எல்லாம் எண்ணின் இடுகழங்கு தபுந !
கொன்னொன்று மருண்டனென் அடுபோர்க்கொற்றவ."
(பதிற்றுப் : ௬௨)

இவ்வாறு, புலவர் காப்பியாற்றுக் காப்பியனார் தன் புகழெலாம் பாடக்கேட்டு, இருபத்தைந்து யாண்டுகள் அரசோச்சிய களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல், புலவர்க்கு நாற்பது நூறாயிரம் பொன் கொடுத்ததோடு அமையாது தன் அரசியல் வருவாயில் பாகமும் கொடுத்துப் பெருமையுற்றான் :

"ஆராத் திருவின் சேரலா தற்கு
வேளாவிக் கோமான்
பதுமன்தேவி ஈன்ற மகன்முனை
பனிப்பப் பிறந்து பல்புகழ் வளர்த்து
ஊழி னாகிய உயர்பெருஞ் சிறப்பின்
பூழி நாட்டைப் படையெடுத்துத் தழீஇ
உருள்பூங் கடம்பின் பெருவாயில் நன்னனை
நிலைச் செருவி னாற்றலை யறுத்து அவன்
பொன்படு வாகை முழுமுதல் தடிந்து
குருதிச் செம்புனல் குஞ்சரம் ஈர்ப்பச்
செருப்பல செய்து செங்களம் வேட்டுத்
துளங்குகுடி திருத்திய வளம்படு வென்றிக்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்."

(பதிற்றுப்பத்து, பதிகம் : ௪)

# கஉ. குட்டுவன் கோதை

சேரவேந்தர், குட்டுவர், குடவர், பொறையர் எனக் குடிவகையாற் பலராவர். சேரநாட்டின் ஒரு பகுதியாகிய குட்டநாட்டை ஆண்டவர், குட்டுவர் என அழைக்கப் பெறுவர். அக்குட்டுவர் குடியில் கோதை என்பான் ஒரு கோ, கோலோச்சியிருந்தான். கோதை எனும் பெயர், ஆதன் என்பதைப் போன்ற சேரரைக் குறிக்க வழங்கும் பெயர்களுள் ஒன்றாகும். புலவர்களை விரும்பி வரவேற்று வாரி வழங்கும் வள்ளியோனாய குட்டுவன் கோதை, பகைவர்க்குப் புலிபோலும் பேராற்றல் உடையனாவன். ஒரு நாட்டிற்குரிய அரசன், அந்நாட்டுள், தன்னை எதிர்நின்று தடுப்பார் எவரும் இல்லாமையால், எவரையும் கேளாதே மாறாக எல்லோரும் எதிர்வந்து போற்ற, இறுமாந்து தன் தலைதூக்கிச் சென்று அரசவை புகுவதேபோல், குட்டுவன் கோதையின் அரசவையுள் சென்று இருத்தல் புலவர் களுக்கு மிகமிக எளிது ஆனால், அவனோடு பகைகொண்டு வாழ்வார், புலிவாழும் காட்டினுள் ஆட்டிடையர் புகவும் அஞ்சுவதேபோல், அவன் நாட்டுள் புகவும் அஞ்சுவர்; அத்துணை ஆற்றல் உடையவன். இவ்வாறு கொடை கொற்றம் ஆகிய இரண்டானும் சிறந்த அவன் புகழ் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரனார் போலும் புலவர்களாலும் பாராட்டப்பெற்றுள்ளது.

"எங்கோன் இருந்த கம்பலை மூதூர்
உடையோர் போல இடையின்று குறுகிச்
செம்மல் நாளவை அண்ணாந்து புகுதல்
எம்மன வாழ்க்கை இரவலர்க்கு எளிதே;
இரவலர்க்கு எண்மையல்லாது, புரவெதிர்ந்து
வானம் நாண வரையாது சென்றோர்க்கு
ஆனாது ஈயும் கவிகை வண்மைக்
கடுமான் கோதை துப்பெதிர்ந் தெழுந்த
நெடுமொழி மன்னர் நினைக்குங் காலைப்
பாசிலைத் தொடுத்த உவலைக் கண்ணி
மாசுண் உடுக்கை மடிவாய் இடையன்
சிறுதலை யாயமொடு குறுகல் செல்லாப்
புலிதுஞ்சு வியன்புலத் தற்றே
வலிதுஞ்சு தடக்கை அவனுடை நாடே." (புறம்: ருச)

## கரு. கோக்கோதை மார்பன்

கோக்கோதை மார்பன், தொண்டி எனும் கடற்கரை நகரைத் தலைநகராக்கொண்டு ஆண்ட ஒரு சேர வேந்தனுவன். கோதை மார்பன், பாண்டியரோடு பகைகொண்டு வாழ்ந்தான்; கிள்ளிவளவன் எனும் சோழ அரசன் வெள்ளம்போலும் பெரும்படையுடன் பாண்டியர்க்குரிய கூடல் நகரை அடைந்து, ஆங்கு வாழ்ந்திருந்த பாண்டியர் படைத் தலைவனாய பழையனை வென்று, களிறும் புரவியும் கணக்கில கைப்பற்றிக்கொண்டான் எனக்கேட்டு மகிழ்ந்தான், கோக்கோதை மார்பன்.

"நெடுந்தேர்
இழையணி யானைப் பழையன் மாறன்
மாடமலி மறுகிற் கூடல் ஆங்கண்
வெள்ளத் தானையொடு வேறுபுலத் திறுத்த
கிள்ளி வளவன் நல்லமர் சாஅய்க்
கடும்பரிப் புரவியொடு களிறுபல வவ்வி
ஏதில் மன்னர் ஊர்கொளக்
கோதை மார்பன் உவகையிற் பெரிதே." (அகம்; நசசு)

கோக்கோதை மார்பன் ஆட்சிக்குரிய நாடு, மலையும் மலைசார்ந்த இடங்களும் பெற்றுக் குறிஞ்சி வளமும், வயலும் வயல் சார்ந்த இடங்களும் பெற்று மருத வளமும், கடலும் கடல் சார்ந்த இடங்களும் பெற்று நெய்தல் வளமும் விளங்கும் பெருநாடாம். கோதை மார்பனைப் பாராட்டிய புலவர்களுள் ஒருவராய பொய்கையார், அவன் நாடு, பல்வேறு வளமும் பெற்று விளங்கும் பெருநாடாதல் அறிந்து, "கோதையைக் குறிஞ்சிநிலத் தலைவனுக்குரிய பெயராகிய நாடன் என்ற பெயரிட்டு அழைப்பனோ? மருதநிலத் தலைவனை அழைக்க ஆளும் ஊரன் என்ற பெயரிட்டு அழைப்பனோ? நெய்தல்நிலத் தலைவனுக்கு உரிய சேர்ப்பன் என்ற பெயரிட்டு அழைப்பனோ?" என்ற ஐயவாய்பாடு தோன்றப் பாராட்டியதோடு, "அவன் நாட்டில்

குறிஞ்சிநிலத்துக் குறமகளிர், தம் புனத்துத் தினையினை உண்ணவரும் பறவைகளைத் துரத்தத் தம் கையில் உள்ள தட்டை என்ற கிளிகடி கருவியைத் தட்டி ஒலி எழுப்பினராக, அவ்வொலி கேட்டுக் கதிர்கள் முற்றித் தலை சாய்ந்துகிடக்கும் கழனிகளில் வாழும் பறவைகளும், கடலைச் சார்ந்த கழிகளில் வாழும் பறவைகளும் அஞ்சிப் பறந்து அப்பாற் செல்லும்" என்றும் கூறியுள்ளார். இத் துணை வளம் விளங்க ஆண்ட அவன் ஆட்சியின் நலனை நாவார வாழ்த்துவோமாக!

"நாடன் என்கோ? ஊரன் என்கோ?
பாடிமிழ் பனிக்கடல் சேர்ப்பன் என்கோ?
யாங்ஙனம் மொழிகோ? ஓங்குவாள் கோதையைப்
புனவர் தட்டை புடைப்பின், அயலது
இறங்குகதிர் அலமரும் கழனியும்
பிறங்குநீர்ச் சேர்ப்பினும் புள்ஒருங் கெழுமே."

(புறம்: ௪௯)

## ௧௪ கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை

சேரநாட்டில் கோட்டம்பலம் என்றோர் ஊர் உண்டு. அஃது இப்போது அம்பலப்புழை என அழைக்கப்பெறு கிறது. அந்த அம்பலப்புழை இன்றும் பழங்காலச் சிறப்பு வாய்ந்துளது. இதையடுத்து மாக்கோதை மங்கலம் என்ற பெயருடைய ஓர் ஊரும் காணப்படுகிறது. மாக்கோதை எனும் இயற்பெயருடைய இச் சேரவேந்தன், தன் வாழ் நாளின் இறுதிக்காலத்தே இக்கோட்டம்பலத்தே வாழ்ந்து உயிர்விட்டானாதலின், கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக் கோதை என அழைக்கப்பெற்றுள்ளான். இவன் பெயர் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதையன்று; கூத் தம்பலத்துத் துஞ்சிய மாக்கோதையாம் என்பர் சிலர். சேரநாடு கூத்துக்களுக்குப் பெயர்போனது; கூத்து நடை பெறும் கூத்தம்பலங்கள் பல, அந்நாட்டின் பல பகுதி யிலும் காணப்படும். மாக்கோதை மன்னன், இத்தகைய கூத்தம்பலத்தேயிருந்து, ஆங்கு நடைபெற்ற கூத்தொன் றைக் கண்டு களித்திருந்தவழி உயிர் துறந்தானாதலின், கூத்தம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை என அழைக்கப் பெற்றான்; இவ்வாறு கூறுவாரும் உளர்.

மாக்கோதை தான் பிறந்த சேரர்குடியிடத்தும், அக் குடிவந்த தன் முன்னோர் இடத்தும் பெரும்பற்று உடையவ னவன். மலைச்சாரலில் யானைக்கன்றை உறங்கவைக்கும் அருவியொலியைக் குறிப்பிடுங்கால், அது தன் குடி முன்னோனை பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் என் பான் அளிக்கும் சோற்றுப் பரிசிலை, அவன் அறச்சாலை அடைந்து பெற்று உண்ணவருவார் ஆண்டுச் செய்யும் பேரொலிபோலும் என உவமை கூறித் தன் குடிப்பற்றுக் குன்றிலிட்ட விளக்கென விளங்கவைத்துள்ளார்.

"கொடைக்கடன் ஏன்ற கோடா நெஞ்சின்
உதியன் அட்டில் போல ஒலியெழுந்து
அருவி யார்க்கும் பெருவரைச் சிலம்பு." (அகம்:௧௬௮)

தம் முன்னோர்பால் அன்புகாட்டும் மாக்கோதை, தம் மனைவிபாலும் பேரன்புடையவராவர். அரசமாதேவி யார் இறந்துவிட்டார்; இறந்தார் உடலை ஈமத்தீயிடை இட்டுவிட்டனர்; எரிகின்றது அவர் உடல்; அதைக்கண்டு நிற்கும் மாக்கோதையார் உள்ளம் கழிந்தகாலக் காதல் வாழ்வை எண்ணித் துயர் உற்றது. "பிரியேன்: பிரியின் உயிர்தரியேன்; காதல்; காதல் இன்றேல் சாதல்" என்று அன்று வழங்கிய அன்பொடுகலந்த வன்புரைகளை எண்ணினர்; ஒருவரைப் பிரிந்து ஒருவர் வாழல் இயலாது என எண்ணி வாழ்ந்ததை எண்ணினர்; நாணிற்று அவர் உள்ளம்; "இன்று அவள் இறந்துவிட்டாள்; அவள் உடல் இதோ என் கண்முன்னரேயே பற்றி எரிகிறது; பார்த்துக் கொண்டிருக்கிறேன் யானும்; என் உயிர் போய்விடவில்லை; அவளை இழந்தும் வாழ்கிறது அவ்வுயிர்; பிரிவுத்துயர் பெரிதாயின், அஃது என் உயிரை இவ்வளவில் கொண்டு சென்றிருத்தல் வேண்டும்; ஆனல் அது அதைச் செய்ய வில்லை. உயிரைக் கொண்டுபோகும் ஆற்றல், அவள் பிரிவுத்துயர்க்கு இல்லை என்றால், இஃது உண்மைத் துயர் அன்று; இறந்த மனைவியை எண்ணி உண்மைத் துயர்உறாத யான், அவள்பால் கொண்ட காதலும், உண்மைக் காத லன்று போலும்!" என்றெல்லாம் கூறி அரற்றி அழுதார்; என்னே அவர் தம் மனையற மாண்பு!

"யாங்குப்பெரி தாயினும் நோயளவு எனைத்தே?
உயிர்செகுக் கல்லா மதுகைத்து அன்மையின்,
கள்ளி போகிய களரியம் பறந்தலை,
வெள்ளிடைப் பொத்திய விளைவிற கீமத்து
ஒள்ளழற் பள்ளிப் பாயல் சேர்த்தி
ஞாங்கர் மாய்ந்தனள் மடந்தை;
இன்னும் வாழ்வல்; என்இதன் பண்பே!" (புறம்: உசரு)

## கரு. செல்வக் கடுங்கோ வாழியாதன்

தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை எனும் தவமகனைப் பெற்ற பெறற்கரும் பேறுடையான் செல்வக் கடுங்கோ வாழியாதன்; செல்வக் கடுங்கோ வாழியாதனைத் தந்த தந்தையார்? தாயார்? என்பதை அறிதல் அருமை யுடைத்தாம்; அவன் தந்தை இன்னன், தாய் இன்னள் என்பதை அறிவிக்கும் பதிற்றுப்பத்து ஏழாம் பத்தின் பதிகம் தெளிவின்றியுளது; செல்வக் கடுங்கோ வாழியா தன், இமய வரம்பன் நெடுஞ் சேரலாதன் இளைய மனைவி யோடு உடன்பிறந்தாளும், வேளாவிக் கோமான் பதுமன் என்பான் மகளும் ஆய ஒருத்தியை மனைவியாகப் பெற்று மாண்புற்றான்; செல்வக் கடுங்கோவைப் பாடிய புலவர்கள் கபிலரும், குன்றுகண்பாலியாதனருமாவர்; இவர்கள் இரு வரும், செல்வக்கடுங்கோவின்பால் தாம்கண்ட அருங்குணங் கள் பலவற்றோடு, அவன் வெற்றிச் செயல்களையும் பொது வகையாற் கூறியுள்ளனரேயல்லால், அவற்றை விளங்க உரைத்தாரல்லர்.

செல்வக் கடுங்கோ வாழியாதன் அரியணை ஏறிய காலத்தே, அவன் ஆட்சிக்குட்பட்ட நாடு, அளவில் சுருங்கி யிருந்தது; சுருங்கிய அந்நாட்டை ஆள, அவன் உள்ளம் நாணிற்று; "இந்நாடு அனைவர்க்கும் பொது" என்ற சொல் எட்டியெனக் கசந்தது அவனுக்கு; உலக அரசர் எல்லாம் தன் ஏவல் வழி நிற்கவேண்டும்; உலகனைத்தும் தன் ஒரு குடைக்கீழ் வரல்வேண்டும் என விரும்பினான்; விரும்பியதோடு நின்றானல்லன்; "உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து, வள்ளியம் என்னும் செருக்கு" எனும் உண்மையை அறிவான் அவன்; இடம் சிறிது, இடம் சிறிது என்ற எண்ணம் அவன் உள்ளிருந்து ஊக்கிக் கொண்டே யிருந்தது; அதனால், எண்ணியது எண்ணி யாங்கு முடிக்கும் திண்ணியனாயினான் கடுங்கோ வாழியா தன். கடுங்கோவின்பால் தாம் கண்ட இப் பண்புகளைப் புலவர் கபிலர், கவினுறப் பாடிக் காட்டியுள்ளார்:

"வையங் காவலர் வழிமொழிந்து ஒழுகப்
போகம் வேண்டிப் பொதுச்சொல் பொறுஅது
ஓடுங்கா உள்ளத்து, ஓம்பா ஈகைக்
கடந்தடு தாளைச் சேர லாதன்."
(புறம்: அ)

செல்வக் கடுங்கோ வாழியாதனைப் போன்றே, அவன் படை மறவரும் வீரமும், மானமும் ஒருங்கே உடையவராவர்; "போர்க்குறிக்காயமே புகழின் காயம்; அது புண் எனப் பழித்தற்குரியதன்று; புகழின் கண் எனப் போற்றற்குரியது" என்ற எண்ணம் உடையவர்; "பகைவர் கோட்டையைப் பாழ் செய்யாமுன் உண்ணேம்" என வஞ்சினம் உரைத்து, நாள்பல ஆயினும், உண்ணுதிருந்தே உள்ளியது முடிக்கும் உரனுடையார்; பகையரசர் ஊர்ந்து செல்லும் உரன்மிகு களிறுகளைக் கொன்று, கொண்ட கொம்புகளை விலையாகக் கொடுத்துப்பெற்ற கள்ளையே உண்ணும் உறுதியுடையவர். இத்தகைய வீரம் மிக்க பெரும் படையினைப் பெற்றிருந்த காரணத்தால், ஒரே களத்தில், சோழனும், பாண்டியனுமாகிய இரு பெரு வேந்தரை வென்று சிறந்தான் செல்வக் கடுங்கோ. பிற அரசர்களை வென்று வீறுபெற்ற பெரு வீரரெல்லாம், இவனுடன் போரிட்டுத் தோற்று, "இனி, நின் படையிற் சேர்ந்து நின் ஆணைவழி நிற்போம் யாங்களும்" என உறுதியுரைத்துப் பணிந்து வாழ்ந்தனர்.

"வாள்முகம் பொறித்த மாண்வரி யாக்கையர்."
(பதிற்றுப்: சுஎ)

"வெவ்வரி நிலைஇய எயில்எறிந் தல்லது
உண்ணுது அடுக்கிய பொழுதுபல கழிய
நெஞ்சுபுகல் ஊக்கத்தர், மெய்தயங் குயக்கத்து,
இன்னுர் உறையுள் தாம்பெறி னல்லது
வேந்தூர் யானை வெண்கோடு கொண்டு
கட்கொடி நுடங்கும் ஆவணம் புக்குடன்
அருங்கள் நொடைமை தீர்ந்து."
(பதிற்றுப்: சுஅ)

"ஒருமுற்று இருவர் ஓட்டிய ஒள்வாள்
செருமிகு தானை வெல்போ ரோயே !
ஆடுபெற் றறிந்த மள்ளர் மாறி
நீகண் டனையேம் என்றனர்." (பதிற்றுப்: ௬௩)

கடுங்கோ வாழியாதன் ஒரு குணக்குன்று; பாராட்டற்குரிய பண்புபல நிறைந்தவன் அவன்; விளையாட்டே வினையாம்; ஆகவே, குற்றம் எதையும் விளையாட்டாகவும் செய்தல் கூடாது; "நகையுள்ளும் இன்னாது": "நகையேயும் வேண்டற்பாற்றன்று" என்பர் வள்ளுவர்; வாழியாதன் விளையாட்டாகவும் பொய்கூறியறியான். புறங்கூறுவோன், பூமிக்குப் பாரமாவன்; அவனை உலகில் வாழவிடல் கூடாது; ஆனால், பொறுமையிற் சிறந்தது பூமி; பொறுப்பது பூமிக்கு அறம்; ஆகவே, அவ்வறம் கருதியே பூமி அவனைப் பொறுக்கிறது எனப் புறங்கூறுவான் கொடுமையை விளக்குவர் வள்ளுவர். ஆகவே, புறங்கூறப் பார்த்திருத்தல் பண்புடையார்க்கு அழகன்று; அதிலும் பகைவன் புறங் கூறுகிறான் என்றால், அவனை வாழவிடுதல் கூடவே கூடாது; ஆனால், செல்வக் கடுங்கோ, பகைவர் புறங்கூறக் கண்டும் பொறுத்திருப்பன்; "அவர் என்னைப் பற்றிக் கூறுவதெதையும் என் எதிரில் கூறல் வேண்டும்; என் புறத்தே கூறுகின்றனர்: அதற்கு, அவர்க்கு என்பால் உள்ள அச்சமே காரணம்; என்னைக் கண்டு அஞ்சும் அவர் ஆண்மையற்றவராவர்; ஆண்மையற்ற அறிவிலிகள் கூறுவன எதையும் மனத்துட் கொள்ளேன்" என, அமைதி காணும் ஆன்றவிந்த அறிவுடையான் அவன்.

"நகையினும் பொய்யா வாய்மைப், பகைவர்
புறஞ்சொல் கேளாப் புரைதீர் ஒண்மை." (பதிற்றுப்:௭௦)

பகைவரைப் பணிந்தறியாப் பேராற்றல் உடையனாய செல்வக் கடுங்கோ, பார்ப்பார் போலும் பெரியாரைப் பணிந்தொழுகும் பண்புடையனுமவன்; அஞ்சாமை நிறைந்தது அவன் உள்ளம் ஆயினும், 'அஞ்சுவது அஞ்சாமை பேதைமை' என்பதை அறிந்தவனாதலின், நண்பர் அறிவுரை கண்டு அஞ்சும் அறநெறியுடையனுமவன்; உலகமே

நிலைமாறி அழிவதுபோலும் அழிவுவந்துற்ற காலத்தும், அவ்வழிவினை அகற்றுதற் பொருட்டு, முன்னர்க் கூறிய தொன்றைப் பின்னர் மறுத்து, அவ்வாறு கூறினேனல் லேன் எனப் பொய்கூறி மறுக்கும் மாண்பிலான் அல்லன் செல்வக் கடுங்கோ.

"பார்ப்பார்க் கல்லது பணிபு அறியலையே;
பணியா உள்ளமொடு அணிவரக் கெழீஇ
நட்டோர்க் கல்லது கண்ணஞ் சலையே;
............................................
நிலம்திறம் பெயரும் காலை யாயினும்
கிளந்த சொல்நீ பொய்ப்பு அறியலையே."

(பதிற்றுப்: சுஉ)

செல்வக் கடுங்கோ சிறந்த கொடையாளனுவன்; "கொடுக்கிலா தானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பா ரிலை" எனச் சுந்தரரால், கொடையிற் சிறந்தோனுகப் பாராட்டப்பெறும் பாரியின் பெரு நண்பராய கபிலரே, செல்வக் கடுங்கோ, அந்தணர்க்கு அருங்கலங்களை அளிக் குங்கால், அப் பொருளோடு வார்த்த நீர் ஓடியே அவன் அரண்மனை முற்றம் சேறுபடும்; தன்னைப் பாடிவரும் பாணர் முதலியோர்க்குப் பகையரசர் திறையாகத் தந்த யானைகளை அளிப்பதோடு, அளக்கும் மரக்காலின் வாயும் தேய்ந்துபோகுமாறு நிறைய அளந்த நெற்குவியல் பல வற்றையும் அளிப்பான்; வந்தோர்க்கு எல்லாம் வழங்கும் வள்ளலாய செல்வக் கடுங்கோ, வாரி வாரி வழங்கிவிட் டோமே என வருந்தான்; பொருள் கொடுக்கக் கொடுக்கப் புகழ் பெருகுவது கண்டு, மகிழ்ந்து மனச்செருக்கு அடையா மாண்பினன்; வழங்கவழங்க அவன் வள்ளன்மை வளர்ந்தே தோன்றும்; தன் புகழ் பாடிவரும் கூத்தர் முதலியோர்க்கு, தன் ஏவலரை விளித்து, 'அவர்க்குக் குதிரைகளையும், தேர்களையும், அணி பல அணிவித்து அளித்து அனுப்புக' என ஆணையிடும் அருள் உள்ளம் உடையவன் எனப் பலப்பல கூறிப் பாராட்டுவாராயின், அவன் கொடைப்பெருமையினைக் கூறவும் ஒண்ணுமோ!

"அந்தணர் அருங்கலம் ஏற்ப நீர்பட்டு
இருஞ்சேறு ஆடிய மணல்மலி முற்றம்." (பதிற்றுப் ; கூச)

"தொன்று திறைதந்த களிற்றொடு, நெல்லின்
அம்பண அளவை விரிந்து உறைபோகிய
ஆர்பதம் நல்கும்." (பதிற்றுப் : கூரு)

"ஈத்தது இரங்கான் ; ஈத்தொறும் மகிழான் ;
ஈத்தொறும் மாவள்ளியன் என நுவலும் நின்
நல்லிசை." (பதிற்றுப் : கூக)

"புறஞ்சிறை வயிரியர்க் காணின் வல்லே,
எஃகுபடை அறுத்த கொய்சுவற் புரவி,
அலங்கும் பாண்டில் இழையணிந்து ஈம்என
ஆனக் கொள்கையை ஆதலின்." (பதிற்றுப் : கூச)

இவ்வாறு, தன் கொற்றம், குணம், கொடை ஆகிய பண்பெலாம் தோன்றப் பாராட்டிய புலவர் பாக்களைக் கேட்டு மகிழ்ந்தான் செல்வக் கடுங்கோ. புலவர்க்குப் பெரியதொரு பரிசில் அளிக்க விரும்பினன் ; சிறு பரிசாக நூறாயிரம் காணம் அளித்தான் ; அம்மட்டோடு நின்றானல்லன் ; கபிலரையும் உடன்கொண்டு நன்று எனும் குன்றின் மீது ஏறி நின்றான் ; ஆண்டிருந்து காண்பார் கண்ணிற்குப் புலப்படும் நாடுகள் எவ்வளவுண்டோ, அவ்வளவையும் அவர்க்கே அளித்தான். என்னே அவன் கொடைக்குணம் !

## கசு. தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை

தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, சேரருள் ஒரு பிரிவினராய இரும்பொறை மரபினருள், கபிலர் பாடும் பெருமைமிக்க செல்வக்கடுங்கோவாழியா தன் பெற்றெடுத்த பெருமைசால் மகனவன்; இவன் தாய், இமயவரம்பனின் இளைய மனைவியின் உடன்பிறந்தவளாவள்; வேளாவிக்கோமான் பதுமன் எனும் வேளிர் குலத்தலைவன் மகளாவள். பெருஞ்சேரல் இரும்பொறை போர்பல வென்ற பேராண்மை உடையவன்; அவ்வெற்றிகளுள், அவன் தகடூர்க்கண் பெற்ற வெற்றியே பெருவெற்றியாம்.

இக்காலத்தில், தர்மபுரி என வழங்கும் தகடூரைத் தலைநகராகக்கொண்டு அதியர் எனும் இனத்தார் ஆண்டு வந்தனர்; தகடூர் நாடு, சேரநாட்டின் ஒரு பகுதியாகவே விளங்கிற்று; சேரர்க்குரிய கண்ணியும், தாருமே அதியர்க்கும் உரியவாகும். இதனால், அதியர் யாதோ ஒரு வகையான் சேரரோடு உறவுடையராவர் என்பது புலனும்; பெருஞ்சேரலிரும்பொறை, சேரநாட்டிற் சிறந்து விளங்கிய காலத்தே, அதியர்க்குரிய தகடூரில் அரசோச்சியிருந்தோன், அஞ்சி என்போனவன்; அஞ்சி, அதியர் குலத்து வந்தாருள் சிறந்தவனவன்; ஔவைக்கு, அரிய நெல்லிக்கனி நல்கிய நல்லோன் இந்த அஞ்சியே; மக்கள் வாழ்க்கைக்கு வேண்டும் வளங்கள் முற்றும் பொருந்திய ஊர்களால் நிறைந்தது அவன் தகடூர்நாடு; நினைத்த பகைவர் நெஞ்சமும் நடுங்கும் அரிய அரண்பல கொண்டது அவன் தகடூர்; வெற்றியல்லது தோல்விகண்டறியா ஆண்மை நிறைந்த வீரர், கைம்மாறாகக் கொள்ளும் கூலியைக் கருதாராய், வெற்றிப் புகழ் ஒன்றையே விரும்பிக் காத்து நிற்கும் காவற் காடுகளால் சூழப்பெற்றது அத்தகடூர்க்கோட்டை. இவை அனைத்திற்கும் மேலாகப் பெரும்பாக்கன் எனும் படைமறவன் தலைமை, அக்கோட்டைக்கு மேலும் அரணளித்து நின்றது.

அதியமான் நெடுமானஞ்சிமீது, பெருஞ்சேரலாதனுக்கு ஏனோ பகை வளர்ந்துவிட்டது; பெருஞ்சேரல் இரும்பொறை படையுடன் தகடூர் சென்று, அவ்வூர்க் கோட்டையை முற்றி நின்று அழிக்கலாயினன்; அதியமானுக்குத் துணையாகச் சோழ, பாண்டியராகிய இருபெருவேந்தரும், சில வேளிர்களும் வந்திருந்தனர்; தகடூர்ப் போர் பலநாள் நடைபெற்ற பெரும் போராம்; தகடூர்க் கோட்டை எளிதில் வீழ்ந்துவிடவில்லை; அக்கோட்டையைச் சூழஉள்ள காவற்காடுகளை அழித்துக் கைப்பற்றுவதற்கே, பெருஞ்சேரல், தன் படையின் பெரும் பகுதியை இழக்க வேண்டியாகிவிட்டது: தன் படையின் அழிவு அவனுக்கு உள்ளத் தளர்ச்சியையும் உண்டாக்கிவிட்டது; அந்நிலையில், ஆங்கு அவனோடு உடன் இருந்த அரிசில் கிழாரும், பொன்முடியாரும், "மிளைபோயின்று; நாளை நாமே, உரும் இசை கொண்ட மயிர்க்கண் திருமுரசு இரங்க ஊர்கொள்குவம்" (தகடூர் யாத்திரை) எனக் கூறி அவனை ஊக்கினர். இறுதியில், பெருஞ்சேரல் இரும்பொறையின் பெரும் படையை எதிர்த்து நிற்கும் ஆற்றல் அற்று அழிவுற்றது அக்கோட்டை; அதியமானும் இறந்துவிட்டான். தகடூரில், பெருஞ்சேரல் இரும்பொறை பெற்ற வெற்றியை, அரிசில் கிழார், பொன்முடியார்போலும் புலவர் பெருமக்கள் பலரும், பாராட்டிப் பாக்கள் பல புனைந்தனர்; பெருஞ்சேரலும், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை எனச் சிறப்பிக்கப்பெற்றான்.

" வேந்தரும், வேளிரும் பிறரும் கீழ்ப்பணிந்து
நின்வழிப் படாஅ ராயின்........................
..................................................
நாடுஉடன் ஆடல் யாவணது அவர்க்கே."
(பதிற்றுப் : எரு)

" பல்பயன் நிலைஇய கடலுடை வைப்பின்
வெல்போர் ஆடவர், மறம்புரிந்து காக்கும்
வில்பயில் இறும்பின் தகடூர் நூறி." (பதிற்றுப் : எஅ)

" பல்வேல் தானை அதிகமா னோடு
இருபெரு வேந்தரையும் உடனிலை வென்று

முரசும், குடையும், கலனும் கொண்டு
உரைசால் சிறப்பின் அடுகளம் வேட்டுத்
துகள்தீர் மகளிர் இரங்கத் துப்பறுத்துத்
தகடூர் எறிந்து நொச்சி தந்து எய்திய
அருந்திறல் ஒள்ளிசைப் பெருஞ்சேரல் இரும்பொறை."
(பதிற்றுப்பத்து, பதிகம் : அ)

பெருஞ்சேரல் பெற்ற வெற்றிகளுள், புலவர் பாராட்டும் பெருமைவாய்ந்த மற்றொரு வெற்றி, அவன், கழுவுள் என்பானைப் பணியவைத்ததே; கழுவுள் என்பான் ஓர் ஆயர் குலத் தலைவன்; அரிய அரண் ஒன்றும் உடையான்; பேரரசரோடு பகைகொண்டு போருடற்றும் இயல்பினன்; அவன் ஆணவம் அறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, தன் படைவீரரைக்கொண்டு அவனைப் பணியவைக்க விரும்பினான்; இவன் படைவீரரும், அவ்வாறே அவன் அரணைத் தாக்கி, அவன் நாட்டு ஆயர் பலர்க்கும் உரிய ஆனிரைகள் பலவற்றைக் கைப்பற்றிக் கொண்டனர்; கழுவுள், பெருஞ்சேரிரும்பொறையின் படைவீரரை எதிர்த்து நிற்கலாற்றானாய், அஞ்சி ஓடி, அரணுட் புக்கு அடங்கி வாழலாயினன்; தம் தலைவன், தம் ஆனிரைகளை மீட்டுத்தாரான் என அறிந்த ஆயர், கன்றோடுகூடிய பசுக்கள் பலவற்றைப் பெருஞ்சேரல் படைத்தலைவர்க்கு அளித்துப் பணிந்து நின்றனர். படைத்தலைவரும் அவர் அளித்தன ஏற்று, அவர்தம் ஆனிரைகளை அவர்பால் ஒப்படைத்தனர்; தன் நாட்டு ஆயர்செய்தன அறிந்த கழுவுள், "இனி வேறு செய்வதற்கில்லை; தானும் பணிந்துபோதலே தக்கதாம்" என உணர்ந்தான்; ஆயினும் பலர் அறியச் சென்று பணிந்து நிற்றலை நாணிற்று அவன் உள்ளம்; ஆகவே, எவரும் அறியா வண்ணம், விடியற்காலத்தே பால் கடையுங்கால் தோன்றும் ஒலி, ஊரில் எழுதற்கு முன்பே, மறைந்து சென்று பணிந்து நின்றான்.

"குண்டுகண் அகழிய குறுந்தாள் ஞாயில்
ஆரெயில் தோட்டி வௌவினை; ஏறொடு
கன்றுடை ஆயம் தரீஇப் புகல்சிறந்து

புலவுவில் இளையர் அங்கை விடுப்ப,
மத்துக்கயிறு ஆடா வைகற்பொழுது நினையூஉ
ஆன்பயம் வாழ்நர் கழுவுள் தலைமடங்க."

(பதிற்றுப் : எக)

"பொருமுரண் எய்திய கழுவுள் புறம்பெற்று."

(பதிற்றுப் : அஅ)

தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் ஆட்சி, சேரநாட்டுப் பகுதிகளாய பூழி, கொல்லி முதலாய நாடுகளோடு நின்றுவிடாது, காவிரி பாய்ந்து கவின் மிகும் சோணாடுவரையிலும் பரவி இருந்தது; புகார் நகரும் அவன் ஆட்சிக்கு அடங்கிய நகரம் எனக் கூறுகின்றார் புலவர் அரிசில் கிழார் :

"காவிரி மண்டிய சேய்விரி வனப்பின்
புகாஅர்ச் செல்வ! பூழியர் மெய்ம்மறை!
கழைவிரிந்து எழுதரும் மழைதவழ் நெடுங்கோட்டுக்
கொல்லிப் பொருந! கொடித்தேர்ப் பொறைய!"

(பதிற்றுப்: எங)

பெருஞ்சேரல் இரும்பொறை, இவ்வாறு வெற்றிமேல் வெற்றி எய்துதற்கு, அவன் பெற்றிருந்த படைப்பெருமையே காரணமாம்; அவன் படை, எத்துணைப் பெருமையுடையது என்பதை அவனைப் பாராட்டிய புலவர் அரிசில் கிழார் அணிபெறக் கூறியுள்ளார். சேரலாதன் படையில் உள்ள தேர் எத்தனை? குதிரை எத்தனை? வீரர் எத்தனை? எனக் கேட்பீராயின், அவற்றை எண்ணிக் கணக்கிட்டுக் கூறல் எவர்க்கும் இயலாது; ஆதலின், அவற்றை யானும் எண்ணிப் பார்த்தேனல்லேன்; ஆயினும் ஒன்றைக் கூறுகின்றேன்; அதைக்கொண்டு அவன் படையின் பெருமையினை ஒருவாறு உணர்ந்துகொள்ளுதல் கூடும்; அவன் நாட்டில், மாடு மேய்த்தல் தொழில் மேற்கொண்ட கொங்கர் என்பார் ஓர் இனத்தார் உளர்; அவர்களிடத்தில் பெருந்திரளான ஆனிரைகள் பல உள; அக்கொங்கர் பலரும் தங்கள் ஆனிரைகளை ஒன்றுசேர்த்து மேயவிடுதல் வழக்கம்; அக்காலை அம்மாடுகளின் எண்ணிக்கையினை

எண்ணிக்காண எவர்க்கும் இயலாது; பெருஞ்சேரல் இரும்பொறையின் படைகள் நான்கும் ஒன்றன்பின் ஒன்ருகச் செல்லுங்கால், அவற்றின் இடையே செல்லும் யானைப்படையினை நோக்கினர்க்கு அக்காட்சி, அவன் நாட்டுக் கொங்கர்களின் ஆனிரைக் காட்சியினையே நினைப்பூட்டும்; அவ்வளவு பெருந்திரளாகச் செல்லும் அவன் படையைச் சேர்ந்த யானைகள்; யானைப்படையே இத்துணைப் பெரிதாயின், அவன் தேர் குதிரை வீரர் படைகளின் பெருமை, எத்துணைப் பெரிதாம் என்பதை நீங்களே உய்த்துணர்ந்து கொள்வீர்களாக!" என அவர் கூறுவன அறிக.

"எனைப்பெரும் படையனே சினப்போர்ப் பொறையன்
என்றனி ராயின், ஆறுசெல் வம்பலீர்!
..........................................
பண்ணமை தேரும், மாவும் மாக்களும்
எண்ணற் கருமையின், எண்ணின்றோவிலனே;
கந்துகோள் ஈயாது, காழ்பல முருக்கி
உகக்கும் பருந்தின் நிலத்துநிழல் சாடிச்
சேண்பரன் முரம்பின், ஈர்ம்படைக் கொங்கர்
ஆபரந் தன்னபல் செலவின்,
யானை காண்பல் அவன் தானை யானே." (பதிற்றுப்: எஎ)

தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, கொடை, கொற்றம், குணம் ஆகிய எல்லாத் துறையானும் சிறந்த நல்லோனவன்; அவர் உயரிய பண்புகளைப் பலர் உரைக்க உணர்ந்த புலவர் அரிசில் கிழார், அவன் அவை யடைந்து, அவன் புகழெலாம் தோன்றப் பாக்கள் பல பாடிப் பாராட்டி வாழ்த்தியுள்ளார்.

கல்வி கரையில; கற்பவர் நாள்சில; மெல்ல நினைக்கின் பிணிபல; ஆதலின், கற்கத் தொடங்குவார் எல்லா நூல்களையும் கற்றல் இயலாது; ஆராய்ந்து அமைவுடையனவற்றையே கற்றல் வேண்டும்; இதனல், ஒவ்வொருவர், ஒவ்வொரு துறையிலேயே வல்லராதல் இயலும். ஆகவே, ஒருவர் இயன்ற அளவு கற்பதோடு, ஒவ்வொரு துறையில்

வல்லார், அவ்வத்துறையில் தாம் அறிந்த அரிய உண்மைகளை உரைக்க, அவற்றைக் கேட்பதைக் கடமையாக மேற்கோடல் வேண்டும்; "கற்றிலனாயினும் கேட்க," "கற்றலிற் கேட்டலே நன்று;" "செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்," எனப் பெரியோர்கள் கூறுவன உணர்க. ஒருவர், இவ்வாறு கற்பதாலும், கேட்பதாலுமே அவர் கடமை தீர்ந்துவிடாது; கற்றவழியிலும், கேட்டவழியிலும் ஒழுகுதல் வேண்டும்; அவை கூறிய கடமைகளை மேற்கொண்டு செயலாற்றுதல் வேண்டும்; இதுவே உயர்ந்தோர் பண்பு என உரைக்கப் பெறும்; கற்றபின் நிற்க அதற்குத்தக," என்றன்றோ வள்ளுவரும் கூறிச் சென்றுளார்; பெருஞ்சேரல் இரும்பொறைபால் இப்பண்பு பொருந்தி யிருக்கக் கண்டு பாராட்டியுள்ளார் புலவர்:

"கேள்வி கேட்டுப் படிவம் ஒடியாது
வேள்வி வேட்டனை உயர்ந்தோர் உவப்ப." (பதிற்றுப் : எச)

"சுடர் விளக்காயினும் நன்றாய் விளக்கிடத் தூண்டுகோல் ஒன்று வேண்டும்" என்ப. நற்குடிப் பிறப்பும், நாடாள் அறிவும் நன்கு வாய்க்கப்பெற்று, அரசர்க்கு என்றும் நல்லனவே எண்ணும் பண்பும் கொண்டு விளங்கும் எனின், அவ்வமைச்சர்பால் அமைந்திருக்கும் அருங்குணங்கள் அனைத்தும், அவ்வரசனிடத்திலேயே அமைந்துவிடின், அவ்வரசின் பெருமை அளவிடற்கரியதாம்; பெருஞ்சேரல் இரும்பொறை, அரசர்க்கு என்றும் நல்லனவே எண்ணும் நல்உள்ளம் கொண்ட உயர்ந்த அமைச்சர்பால் அமைந்த பண்புகளைத் தானும் பெற்றுப் பேரரசராய்த் திகழ்ந்தான்:

"நின், முன்திணை முதல்வர்க்கு ஓம்பினர் உறைந்து
மன்பதை காப்ப அறிவு வலியுறுத்து
நன்றறி உள்ளத்துச் சான்றோர் அன்னநின் பண்பு."
(பதிற்றுப் : எஉ)

வந்தார்க்கு இலையும், வருவார்க்கு உலையும்வைத்து வழங்கும் வண்மை நிறைந்த தமிழகத்தே பிறந்த பெருஞ்சேரல் இரும்பொறைபால், கொடைக்குணம் குடிகொண்டிருந்தது எனல் கூறவேண்டாவன்றே; தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, தன்பால் வந்து பொருள் வேண்டி இரந்து நிற்பார்க்குப் போரில் கைப்பற்றிய யானைகளை, அவை போரிற் பெற்ற புண்களுக்கு மருந்திட்டுப் போக்கிப் பரிசாக அளிப்பன்; மேலும் வந்து இரப்பாரை எதிர்நோக்கி, அவர் வேண்டுமளவு கொடுப்பதற்காகக் குதிரைகள் எண்ணற்றனவற்றை ஈட்டி வைத்திருப்பன்:

"புண் ஒரீஇப்
பெருங்கைத் தொழுதியின் வன்துயர் கழிப்பி
இரந்தோர் வாழ நல்கி, இரப்போர்க்கு
ஈதல் தண்டா மாசித் திருக்கை
கண்டனென் செல்கு வந்தனென்." (பதிற்றுப் : எசு)

மக்கட்பேறு பெறாதாரும், சிறப்பிலா மக்களைப் பெற்றாரும், பிறபேறுகளை எத்துணைச் சிறக்கப் பெற்றிருப்பினும், அப்பேறுகளால் பயன் இன்றாம்; ஆதலின், மக்கட் பேற்றினையும், அம்மக்கள் மாண்புடையராதலையும், பெறற்கரிய பேறுகள் அனைத்தினும் சிறந்த பேறுகளாக மதிப்பர்; "பெறுமவற்றுள் யாமறிவ தில்லை, அறிவறிந்த மக்கட்பேறல்ல பிற"; "எழு பிறப்பும் தீயவை தீண்டா, பழிபிறங்காப் பண்புடை மக்கட் பெறின்" என மக்கட் பேற்றின் மாண்பினைப் பாராட்டுவர் பெரியோர். பெருஞ்சேரல் இரும்பொறை இதிலும் குறையுடையானல்லன்; இயற்கையறிவோடு கூடிய செயற்கை அறிவும், சால்பு, செம்மை எனச் சான்றோர்பால் இருக்கவேண்டிய நற்பண்பும் நிறைந்து, நாடாளும் நல்லறிவும் நன்கு வாய்க்கப்பெற்ற நன்மகனைப் பெற்ற நற்பேறுடையான் பெருஞ்சேரல் இரும்பொறை:

"ஈரறிவு புரிந்து
சால்பும், செம்மையும் உளப்படப் பிறவும்
காவற் கமைந்த அரசு துறை போகிய
வீறுசால் புதல்வற் பெற்றனை." (பதிற்றுப் : எச)

ஒருவர் திருந்திய வாழ்வுடையராதல் சிறந்தது; அத்தகு வாழ்க்கையினைத் தாம் மேற்கொண்டு வாழ்வதோடு, பிறரையும் அவ்வாழ்வு மேற்கொள்ளச் செய்தல் அதனினும் சிறந்தது; பெருஞ்சேரல் இரும்பொறை, இத்தகைய சிறந்த வாழ்வுடையான் என்பது மட்டுமன்று; இவற்றினும் மேலாயதொரு சிறப்பு அவன்பால் பொருந்தியிருந்தது; அவன் அரசவையில், அறமுரைக்கும் நல்லோன் ஒருவன் இருந்தான்; அரசற்கு அறமுரைத்தோனும் அவனே; நரை, திரை தோன்றுமளவு ஆண்டாலும் நிறைந்தவன்; இவ்வாறு அறிவாலும், ஆண்டாலும் நிறைந்திருந்தும், உலக வாழ்வில் ஒரு சிறிதும் பற்றுக்குறையானாய், உலகின்பமே உயர்ந்த இன்பம் எனக் கொண்டு வாழ்ந்திருந்தான். ஆசிரியன் செயல், தகாது என உணர்ந்தான்; தகடூர் எறிந்தான்; அறவோன் உலகில், கொடை, புகழ், செல்வம், மகப்பேறு இவற்றால் உண்டாம் இன்பத்தில் திளைத்து, இவற்றினின்றும் செல்லமாட்டா உள்ளத்தனாய் விளங்குகிறான் ஆசிரியன்; ஆதலினாலேயே, துறந்து செல்லும் துணிவு தோன்றவில்லை அவனுக்கு என உணர்ந்து, ஆசிரியனை அணுகி, "ஆசிரியப் பெருந்தகையீர்! கொடை, புகழ் இவற்றால் உண்டாம் இன்பம் நிறைந்த வாழ்வே சிறப்புடைத்து என எண்ணி மயங்கும் நும் அறியாமையினை என்னென்பேன்! உலகிற்குச் சிறப்பளிக்கும், கொடை, புகழ் எல்லாம், தவம் வல்லார்க்கு எளிதில் வந்தெய்தும்; அஃதுடையார்க்கே இவையெல்லாம் உண்டாம் என்ற இவ்வுண்மையினை, எல்லாம் அறிந்த நீவிர் அறிய மறந்தது ஏனோ?" எனத் தவத்தின் அருமையினை எடுத்துக்கூறி அறிவூட்டி, அவன் துறவறம் மேற்கொள்ளத் துணை புரிந்தான். இவ்வாறு தனக்கு அறிவூட்டிய தன் ஆசிரியன் அறியாமையைப் போக்கவல்ல அறிவுத் தெளிவுடையான் பெருஞ்சேரல் இரும்பொறை எனப் பாராட்டும் பெருமையுடைத்தாமன்றோ!

"முழுதுணர்ந் தொழுக்கும் நரைமூ தாளனை
'வண்மையும், மாண்பும், வளனும், எச்சமும்

தெய்வமும் யாவதும் தவம் உடையோர்க்கு' என
வேறுபடு நனந்தலைப் பெயரக்
கூறினை பெரும! நின் படிமை யானே."

(பதிற்றுப் : எச)

பெருஞ்சேரல் இரும்பொறை, இவ்வாறு அறிவாலும், கொடையாலும் சிறந்து விளங்குவதைக் கண்ட புலவர் அரிசில்கிழார், உலகில், அறிவுடையாரையும், கொடைத் தொழிலில், இவர்க்கு இது கொடுக்கலாம், இவர்க்கு இது கொடுக்கலாகாது என எண்ணிப்பார்க்கும் அறிவின்றி, எவர்க்கும், எதையும் கொடுக்கும் அறிவுமடம்பட்ட கொடைத்தொழில் உடையாரையும் நோக்கிய வழி, அத் தகையார்க்கு உவமையாகப் பெருஞ்சேரல் இரும்பொறையை எடுத்துக் காட்டிக் கூறலாமேயன்றி, இவனுக்கு நிகராகக் கூறவல்லார் உலகில் ஒருவரும் இலர் எனக் கூறி அவன் அறிவும், கொடையும் ஒருங்கே தோன்றப் பாடிப் புகழ்ந்துள்ளார் :

"உரவோர் எண்ணினும், மடவோர் எண்ணினும்
பிறர்க்கு நீவாயி னல்லது, நினக்குப்
பிறர்உவமம் ஆகா ஒருபெரு வேந்தே!" (பதிற்றுப்: எக)

பெருஞ்சேரல் இரும்பொறைபால் யாம் கண்ட பண்புகள் அனைத்தினும், அவன் புலவர்மாட்டுக் கொண்டுள்ள பேரன்பும், பெருமதிப்பும் பல்லாற்றானும் பாராட்டற்குரியனவாம். பாக்கள் பல புனைந்து தன் புகழ் பாடிய புலவர் அரிசில்கிழாரின் அறிவுநலம் கண்டு வியந்த பெருஞ்சேரல் இரும்பொறை, அவர்க்கு ஒன்பது நூறாயிரம் காணம் நல்கியதோடு அமையாது, அரசமாதேவியாரோடும் அரண்மனை விட்டு வெளியேறி நின்று, புலவரை அழைத்து, "இவ்வரண்மனையும், ஆட்சிப் பொறுப்பும் இனி, நின்னுடைமையாம் ஏற்றருள்க" என வேண்டி நின்றான்; அரசன் அன்புள்ளத்தை அறிந்த புலவர் பெருந்தகையாரும் அவன் விரும்பியாங்கே, அவற்றை ஏற்றுக் கொண்டு அடுத்த கணமே, "அரசே! என் உடைமையாகிய இவ்வாட்சியினை நினக்கு யான் அளிக்கின்றேன்; ஏற்றருள்க" என வேண்டியளித்து அமைச்சுப்பூண்டு

அகமகிழ்ந்தார்; அரசனும், புலவனும் வளர்த்த அன்புத் தொடர்பின் சிறப்பே சிறப்பு!

தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் காலத்தே, மோசிகீரனார் எனும் பெயருடைப் புலவர் ஒருவர் இருந்தார்; பெருஞ்சேரல் இரும்பொறை அரிசில்கிழாராலும் பாராட்டப்பெறும் பெரும் பேறுடையான் என்பதறிந்த புலவர், அவன் அரசவை நோக்கிச் சென்றார்; அவர் சென்றபோது, அரசன் ஆண்டு இலன்; அவனைக் காணாத புலவர், அவ்வரண் மனையினைச் சுற்றி வருவாராயினர்; ஆங்கு, அழகிய கட்டில் ஒன்று, ஒருபால் இருக்கக் கண்டார்; அது, அரசனின் வெற்றிமுரசு வைத்தற்குரிய கட்டிலாம்; முரசு நீராடி வருவதற்குக் கொண்டுசொல்லப் பட்டுள்ளமையால், அக்கட்டில் வறிதே கிடந்தது; அவ்வழகிய கட்டிலையும், அதன்மீது விரிக்கப்பெற்றிருக்கும் மெல்லிய மலர்களால் ஆகிய படுக்கையினையும் கண்டார் புலவர். அவர்க்கு, அது முரசுகட்டில் என்பது தெரியாது; மேலும், வழிநடை வருத்தமும் உடையராவர்; அதனால், அதன்மீது கிடந்து நன்கு உறங்கிவிட்டார்; சிறிது நேரத்தில் ஆண்டு வந்த பெருஞ்சேரல் இரும்பொறை, தன் முரசுகட்டில்மீது யாரோ ஒருவர் படுத்துறங்கக் கண்டான்; முரசு, அரசனின் வேறன்று; முரசிற்குச் செய்யும் சிறப்பு, அரசர்க்குச் செய்யும் சிறப்பு; அதற்கு உண்டாம்பழி, அரசர்க்கு உண்டாம்பழி என்பது பழங்காலப் பண்பு; ஆதலின். முரசுகட்டிலில் படுத்து உறங்குவது, அரசுகட்டிலில் படுத்து உறங்குவதுபோலும் பெருங்குற்றமாம்; அக் குற்றம் புரிந்தார்க்குக் கொலையே தண்டமாம்; ஆயினும், தன் முரசுகட்டிலில் படுத்து உறங்குவார், ஒரு பெரும் புலவராவர் என்பதை அரசன் அறிவான்; புலவர், நாடாளும் தன்னினும் உயர்ந்தவராவர் என்பதை உணர்வான் அவன்; ஆதலில், அவர் ஆண்டு உறங்குவதால் குற்றம் இன்று என எண்ணினன்; ஆகவே, பிறர் யாரேனும் படுத்து உறங்கக் காணின், வாளெடுத்துத் தலை வாங்க

வேண்டிய அவன், வெண்சாமரையினை எடுத்து, அவர், வழிநடை வருத்தத்தால் உண்டாம் வெப்பம் ஒழிந்து இனிது உறங்குமாறு, அவர் எழும்வரை தானே வீசி நின்றான்; உறங்கி எழுந்த புலவர், தாம் செய்த பெரும் பிழையினையும், அதுகண்டு ஒறுக்க வேண்டிய அரசன், அன்புகொண்டு கவரி வீசி நிற்பதையும் கண்டார்; அரசன் பால் அவர்க்குப் பெருமதிப்பு உண்டாயிற்று; அரசனின் தமிழ்ப்பற்று அவர்க்குப் புலனாயிற்று; உடனே "அரசே! நின் முரசுகட்டில் ஏறிய என்னை இருதுண்டங்களாக வெட்டி வீழ்த்தாதுவிட்ட அச்செயல் ஒன்றே சாலும் நின் தமிழ்ப்பற்றினை விளக்க; நீ அம்மட்டோடு நின்றாயல்லை' யான் உறங்கி எழுங்காறும் கவரிகொண்டன்றோ வீசி நின் றனை; நின் பெருமையினை என்னெனப் புகழ்வேன்! என்னே நின் தமிழ்ப்பற்று! இவ்வுலகத்தே, புகழ் தரும் செயல் புரிந்தார்க்கல்லது, உயர்நிலை உலகமாம் உம்பர் உலகத்தே இடம் கிடைத்தல் இல்லை எனச் சான்றோர் கூறுவன கேட்டதன் பயனே; செயற்கரும் இச்செயற்குக் காரணம்!" என வியந்து பாராட்டி மகிழ்ந்தார்.

ஒரு புலவர்க்கு அரசுகட்டிலும், மற்றொரு புலவர்க்கு முரசுகட்டிலும் உரிமையாக்கி உயர்ந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் பெருமைதான் என்னே!

"மாசற விசித்த வார்புறு வள்பின்
மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை
ஒலி நெடும் பீலி ஒண்பொறி மணித்தார்
பொலங்குழை உழிஞையொடு பொலியச் சூட்டி
குருதி வேட்கை உருகெழு முரசம்
மண்ணி வாரா அளவை எண்ணெய்
நுரை முகந்தன்ன மென்பூஞ் சேக்கை
அறியா தேறிய என்னைத் தெறுவர
இருபாற் படுக்கும் நின் வாள்வாய் ஒழித்ததை
அதூஉம் சாலும் நல்தமிழ் முழுது அறிதல்;
அதனொடும் அமையாது, அணுக வந்துநின்
மதனுடை முழவுத்தோள் ஓச்சித் தண்ணென

வீசியோயே ? வியலிடங் கமழ,
இவண் இசை உடையோர்க் கல்லது அவணது
உயர்நிலை உலகத்து உறையுள் இன்மை
விளங்கக் கேட்ட மாறுகொல்
வலம்படு குருசில் ! நீ ஈங்கிது செயலே." (புறம் ; ௫0)

இவ்வாறு பண்பு பலபெற்று, பாடல்சால் புகழொடு விளங்கிய தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை பதினேழேயாண்டு, பெருவாழ்வு வாழ்ந்து வீறெய்தி விளங்கினன்.

## கஎ. நம்பிகுட்டுவனர்

குடம், குட்டம், கொங்கு, பூழி முதலிய நாடுகள், சேரநாட்டின் உள்நாடுகளாம். செந்தமிழ் நிலத்தைச் சார்ந்து நின்ற பன்னிரண்டு கொடுந்தமிழ் நாடுகளுள் குட்டநாடும் ஒன்று; அது மேலைக் கடற்கரையினைச் சேர்ந்து நிலவிய நாடு; "குட்டநாட்டார், தாயைத் தள்ளை என அழைப்பர்" எனவும், அந்நாடு, தமிழ்நாட்டின் சிறிது வேறுபாடுடையது எனவும் கூறுவர் உரையாசிரியர்கள். இக் குட்டநாட்டினை ஆளும் உரிமையுள்ள காரணத்தால், சேர வேந்தர்கள் குட்டுவர் என அழைக்கப்பெறுவர்; பெண் பாலாரிற் சிறந்தாளை நங்கை எனலும், ஆடவரிற் சிறந் தானை நம்பி எனலும் புலவர்வழக்கு; இவர் சேரர் குடியிற் பிறந்தாருள் சிறந்தவராவர் என்பது புலனும்; வேந்தர் பண்பு விளங்காவகையில் வாழ்ந்தாருள், நம்பிகுட்டுவ னரும் ஒருவர்; அவர் கூறும் ஓர் அறிவுரையின் அருமை, அவர் அரசியல் வாழ்வை உணரலாகாமையால் உண்டாம் குறையினைக் குன்றச் செய்துவிட்டது.

தங்கள் மணத்திற்காம் பொருளைத் தானே தேடிப் பெறல்வேண்டும் என்ற பேருள்ளம்கொண்டு பொருள் வயிற் பிரியக்கருதும் தலைமகன், தலைவிபால் சென்று "மணத்திற்கு வேண்டும் மாநிதிபெற்று விரைந்துவந்து வரைந்து கொள்வேன்; சற்றே ஆற்றியிரு" எனக் கூறிய வழி, "தலைவ! உள நம்பிக்கை என்ற ஒன்று அடிப்படை யாக இருப்பதனலேயே, உலகம் அழியாது இயங்குகிறது; அந்நம்பிக்கை அற்றுப்போமாயின்,- உலகம் இயங்குவது இல்லையாம்: ஆகவே, அந்நம்பிக்கை நீங்காது நிற்க ஆவன மேற்கோடல் ஆன்றோர் கடமையாம்; 'பிரியேன்; பிரியின் உயிர்தரியேன்; அறனல்லன செய்தேனும் ஆவேன்' என்று அன்று நீ கூறிய தெளிவுரைகளை நம்பியே நின் பால் அன்புகொண்டேன்; ஆனல் இன்று பிரிகின்றேன் என்றாலும் விரைந்து வந்துவிடுவேன் என்கின்றனை; பிரியேன் என்று அன்று சொன்ன சொல்லை அழித்து

விட்டனை; இதனல் நின் உறுதிமொழியின்பால் யான் கொண்டிருந்த நம்பிக்கையை இழக்கச்செய்து விட்டனை; இன்று மீண்டும் ஓர் உறுதிமொழி கூறுகின்றனை; இதை யான் எவ்வாறு நம்புவது? நீயோ அருள் உள்ளத்தவன்; பெரிய நட்புக் குணமுடையவன்; அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற குணங்களால் நிறைந்த சான்றோன்; நீதியில் வழுவா நடுநிலைநெறியாளன் என்றெல்லாம் கூறத்தக்க பெரியோனவை; இத்துணைப் பெரியோனகிய நின்னையே நம்புதற்கில்லை எனின், இனி இவ்வுலகில் நம்பிக்கை நிலவுவதே அரிதாகிவிடும்; மக்கள் இனி, நம்பிக்கை இழந்து நலிவார்களாக" எனக் கூறினள்.

இத்தலைவியின் உரைகளை, ஒரு பாட்டில் உருவாக்கிய புலவர் நம்பிகுட்டுவனர், நம்பிக்கை, நாட்டிற்கு எத்துணை இன்றியமையாது வேண்டப்படுகிறது என்பதை விளக்கியுள்ளார்.

" .....................................என்றும்
அளிய பெரிய கேண்மை நும்போல்
சால்பெதிர் கொண்ட செம்மை யோரும்
தேரு நெஞ்சம் கையறுபு வாட
நீடின்றி விரும்பா ராயின்
வாழ்தல் மற்றெவனே? தேய்கமா தெளிவே."

(நற் : நஅ௯)

## கஅ. பல்யானைச் செல்கெழு குட்டுவன்

பல்யானைச் செல்கெழுகுட்டுவன், பாரதப் போரில் இருதிறப் பெரும்படைக்கும், அப்போர் முடியுங்காறும் உணவளித்துப் புகழ்பெற்றான் எனப் போற்றப்படும் பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் மகனாவன்; வெளியன் வேண்மான் எனும் வேளிர்குலத் தலைவன் மகளாய நல்லினி என்பாள் இவன் தாய். இமயத்தே விற்பொறித்து, இமய வரம்பன் எனப் புகழ்மிகு பெயர்பெற்ற நெடுஞ்சேரலாதன் இவன் உடன் பிறந்தான்; இச்செய்திகள் பதிற்றுப்பத்து, இரண்டு, மூன்று பத்துக்களின் பதிகங்களான் தெளிவாம். போர்க்களத்தே அஞ்சாது முன்சென்று, அரும்போர் ஆற்றி, பகைவர்தம் பற்றற்கரிய அரண்களை அழித்து வெற்றி தரும் விறல்மிக்க யானைகள்பல கொண்ட பெரும் படை உடையாமல், இச் சேரன், பல்யானைச் செல்கெழு குட்டுவன் எனப்பட்டான்.

> "அமர்கோள் நேர்இகந்து ஆர்எயில் கடக்கும்
> பெரும்பல் யானைக் குட்டுவன்." (பதிற்றுப் : உக)

பல்யானைச் செல்கெழு குட்டுவன், போர்க்களம் பல வென்றவனாவன்; கடன் மலைநாட்டில் உம்பற்காடு என்றொரு சிறு நாடு இருந்தது; அதனை வேழக்காடு எனவும் வழங்குவர்; யானைகளை மிகுதியாகக்கொண்டது. சூல் கொண்டு உணவு ஒழித்துக்கிடந்த பெண்புலி விரும்பி உண்ணும் உணவினைத் தருவான் விரும்பி, நீண்ட பெருங் கோடுகளையுடைய யானையொன்றைக் கொன்று வீழ்த்தி, அகன்ற பாறைகள் எல்லாம் அதன் இரத்தக்கறை படியு மாறு ஈர்த்துச் சென்றளித்து, அவ்வெற்றிக் களிப்பால், புற்றரையில் வீழ்ந்து புரண்டெழும் ஆண்புலி வழங்கும் கொடுமையுடையது எனக்கண்ட யானைகள், அக்காட்டு வாழ்வை வெறுத்து, வழியில் கிடக்கும் பலாக்கனிகளைத் தின்றுகொண்டே வெளியேறும் காடு, அவ்வும்பற்காடு என எருக்காட்டூர்த் தாயங் கண்ணனார் கூறுவதும் அறிக.

(அகம் : ௩௯௬,) உம்பற்காடு ஐந்நூறு சிற்றூர்களைக் கொண்டதொரு சிறுநாடு; தன்னைப் பாடிய குமட்டூர்க் கண்ணனார்க்கு இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனால் பிரமதாயமாக வழங்கப்பெற்ற வளம் நிறைந்தது; செங்குட்டுவனிடம், இவ்வும்பற்காட்டின் வருவாயினைப் பரணர் பரிசிலாகப் பின்னொரு காலத்தே பெற்றார்; உம்பற்காடு, இவ்வாறு யாவரும் விரும்பும் வளங்கொழிக்கும் நாடாதல் அறிந்து, அங்கே தன் அரசு நிலவச்செய்தான் பல்யானைச் செல் கெழுகுட்டுவன்.

தன் பகைவர்க்கு அரண் அளிக்கும் அகப்பா என்றோர் அரண் இருப்பதை அறிந்தான் பல்யானைச் செல் கெழுகுட்டுவன். அகப்பா, அரிய அரண்பல அமையப் பெற்றது; இருதிறப் படைகளும் எதிர்த்துப் போரிடுதற்கு வேண்டிய பரந்தகன்ற செண்டுவெளியினைக் கொண்டது; கணையமரம் செறிக்கப்பெற்ற வாயில்களையுடையது; ஐயவித்துலாம்போலும் அரிய இயந்திரப் படைகளைக் கொண்டது; காவற்காட்டினையும், ஆழ்ந்தகன்ற கிடங்கினையும், நெடிய மதில்களையும் உடையது; பகைவர் அணுகுவதற்கியலா அருமையுடையது; அகப்பா அரணின் அருமையினையும், அது பகைவர்க்குப் பாதுகாப்பளித்து நிற்பதையும் அறிந்த பல்யானைச் செல்கெழுகுட்டுவன், நாற்படையுடன் சென்று அழித்துக் கைக்கொண்டான்; இவ்வெற்றிச் சிறப்பினை இவனைப் பாராட்டிய பாலைக் கௌதமனாரும் இவன் வழிவந்த ஆசிரியர் இளங்கோவடிகளும் எடுத்துக்கூறிப் பாராட்டியுள்ளனர் :

"துஞ்சுமரம் துவன்றிய மலரகன் பறந்தலை,
ஓங்கு நிலைவாயில், தூங்குபு தகைத்த
வில்விசை மாட்டிய விழுச்சீர் ஐயவிக்
கடிமிளைக், குண்டு கிடங்கின்
நெடுமதில், நிரைப் பதணத்து
அண்ணலம் பெருங்கோட்டு அகப்பா எறிந்த
பொன்புனை உழிஞை வெல்போர்க் குட்டுவ !"

(பதிற்றுப் : ௨௨)

"மிகப்பெருந் தானையோ டிருஞ்செரு வோட்டி
அகப்பா எறிந்த அருந்திறல்."

(சிலம்பு, உஅ : கசரு-௬)

தம்முள் ஒற்றுமைகொண்டு ஊராண்டு வாழ்வதற்கு மாறாக ஒருவரோடொருவர் பகைகொண்டு வாழும் இயல்பினராய தமிழ்வேந்தர் மூவரும், தம்மினும் ஆற்றல் மிக்க அரசன் ஒருவன் ஒருகுடியில் தோன்றிவிட்டால், அவனை அழிக்கச் செய்யும் போரில் மட்டும் ஏனைய இரு அரசர்களும் ஒன்று கூடுவதையும், தமக்குத் துணையாகப் பிற குறுநில மன்னர்களையும் இணைத்துக் கொள்வதையும் வழக்கமாகக் கொண்டு விளங்கினர். பல்யானைச் செல்கெழு குட்டுவன் ஆற்றலும் ஆண்மையும் அறிந்து, அக்காலத்தே சோழநாட்டையும் பாண்டி நாட்டையும் ஆண்டிருந்த இருபெருவேந்தர்களும், சில வேளிர்களைத் துணையாகக்கொண்டு குட்டுவனை எதிர்த்தனர்; குட்டுவன் அவர்களையும் அழித்து, அவர்களுக்கு அரணாக அமைந்திருந்த கடலரணையும், காட்டரணையும் அழித்தான். அழிக்கலாகா அவன் ஆற்றல் அறிந்த அரசர்கள், அவனுக்கு அஞ்சி வாழலாயினர்:

"பணிகெழு வேந்தரும், வேளிரும் ஒன்றுமொழிந்து
கடலவும், காட்டவும் அரண்வலியார் நடுங்க."

(பதிற்றுப் : ௩௦)

பழைய தமிழகத்தில், பூழியர், மழவர், கொங்கர் என்ற மறவர் மரபினர் பலர் வாழ்ந்திருந்தனர்; பகைவர் நாடுகளைவென்று கைக்கொள்வதே தொழிலாகக்கொண்டு விளங்கிய பல்யானைச் செல்கெழு குட்டுவன், தன்படையின் வன்மையை மிகுத்தற்பொருட்டு, அவ்வீரர்களை வென்று தன்படையில் தொழிலாற்றுமாறு செய்தான்; அவருள் பூழியர் என்பார், பூழிநாட்டில் வாழ்ந்திருந்த ஆயர் ஆவர்; இவர்கள் மிகப் பெரிய ஆனிரைகளையும், பலப்பல யானைகளையும் கொண்டிருந்தனர்; செருப்பு என்ற பெயருடையதொரு மலையினையும் உரிமையுடையதாகப் பெற்றிருந்தனர்; இவர்கள், முல்லைப் பூவாலாய கண்ணி

யணிந்து, ஆனிரைகளைப் புல் நிறைந்த பரந்த வெளிகளில் மேயவிட்டுவிட்டு, காட்டில் வீழ்ந்துகிடக்கும் மணிகளைப் பொறுக்கிக் கொண்டு வருவர் :

> "முல்லைக் கண்ணிப் பல்லான் கோவலர்
> புல்லுடை வியன்புலம் பல்லா பரப்பிக்
> கல்லுயர் கடத்திடைக் கதிர்மணி பெறூஉம்
> மிதியற் செருப்பின் பூழியர் கோவே." (பதிற்றுப் : உக)

பூழியர், மழவர், கொங்கர் ஆகிய மூவருள்ளும், மிகப் பேராற்றல் வாய்ந்தவர் மழவராவர்; மழவர் சிறந்த குதி ரைப் படை உடையவர்; விற்போரில் வல்லவர்; எத்துணை நெடிய நாடுகளுக்கும் விரைவிற் சென்று வென்று மீளும் இயல்பினர்; அருள் உள்ளம் சிறிதும் இன்றி, ஆறலைத்துத் துயர் விளைப்பர்; இம்மழவர்களால் அழிவுற்ற நாடுகள் பல; இதனால், இவர்களை வென்று, இவர்கள் ஆற்றலை அடக்கிய அரசரும் பலராவர்; மழவர் இன்னராதல் அறிந்த பல் யானைச் செல்கெழு குட்டுவன், அவர்களைத் தன் துணைவ ராய்க் கொண்டான்; அவர்களும், உடலைக்காக்கத் துணை புரியும் கவசம் போலிருந்து, அவனுக்குத் துணைபுரிந்தனர் எனக் கூறுகிறார் புலவர் பாலைக் கௌதமனார் :

> "குவியற் கண்ணி மழவர் மெய்ம்மறை." (பதிற்றுப் : உக)

கொங்கர் என்பார், கொங்குநாட்டில் வாழ்ந்தவர்; கொங்கர், படை வன்மைவாய்ந்தவர்; இருவரும், பூழிநாட்டா ரைப் போன்றே ஆனிரை வளர்ப்பவராவர்; கொங்குநாடு, சேரநாட்டைச் சேர்ந்து விளங்கிய நாடாதலின், சேர வேந்தர் பலரும் அந்நாட்டில் தம் அரசுநிலவுவதைப் பெரி தும் விரும்பியுள்ளனர்; கொங்குநாடு, மேட்டுநிலமாதலின், ஆங்கு ஆனிரைகளுக்கு வேண்டும் நீர் கிடைத்தல் அரிது; கொங்கர்கள் கூரிய இரும்புக் கோடாரிகளைக்கொண்டு நிலத்தை உடைத்து மிக ஆழமாய கிணறுகளைத் தோண்டி அவற்றுள் நீண்ட கயிறுகளில் சிறிய நீர்முகவைகளைக் கட்டிவிட்டுக் கொண்ட நீரைத் தம் ஆனிரைகளுக்கு அளிப் பர்; ஆக்கள் மிக்கு ஆப்பயனால் சிறந்த கொங்குநாட்டைப்

பல்யானைச் செல்கெழுகுட்டுவனும் கைக்கொண்டு ஆண் டிருந்தான் :

"பொன்செய் கணிச்சித் திண்பிணி உடைத்துச்
சிரறுசில ஊறிய நீர்வாய்ப் பத்தல்
கயிறுகுறு முகவை மூயின மொய்க்கும்
ஆகெழு கொங்கர் நாடகப் படுத்த
வேல்கெழு தானை வெருவரு தோன்றல்." (பதிற்றுப் : உஉ)

உள்நாட்டுப் போர்கொண்ட நாடு, உலகில் உயர்ந்து தோன்றுவது இல்லை ; தம் நாடு, உலக நாடுகளுள் உயர்ந்து தோன்றுவதை விரும்புவார், முதற்கண் தம் நாடு, உள் நாட்டுக் குழப்பத்திற்குள்ளாவதினின்றும் தடுத்தல் வேண்டும்; பல்யானைச் செல்கெழுகுட்டுவன் இவ்வுண் மையை உணர்வான் ; ஆகவே, அவன் பிற அரசர்களை வெல் லத் தொடங்குவதற்குமுன், தன் சேரர் குடியில் தன்னோடு பிறந்தாரிடையே பகையெழாமையினை எண்ணி மேற் கொண்டான் ; சேரநாட்டில், தன்குடிவந்த பிறர்க்கு உரிய பகுதியை அவர்பால் ஒப்படைத்து உள்நாட்டில் அமைதி நிலவ வழிசெய்தான்; பல்யானைச் செல்கெழு குட்டுவன், பின்னர்ப் பேரரசனாய்ப் பலப் பல வெற்றிகளை எய்துதற்கு, அவன் தன் ஆட்சித்தொடக்கக் காலத்தே அறிவோடு செய்த இச்செயலே காரணமாயது.

வெற்றிபல பெற்று விளங்கிய பல்யானைச் செல்கெழு குட்டுவன், தன் வெற்றிச்சிறப்பினை உலகம் வியக்கும் வகை விளக்கிக் காட்ட விரும்பினான் ; அதற்கு ஏற்ற வழி யாது என எண்ணிப்பார்த்து, இறுதியில், தன் யானைகளை, மேற்குக் கடலுக்கும், கிழக்குக் கடலுக்கும் ஒரே காலத் தில் கூட்டமாக அனுப்பி, அவ்விருகடல்நீரும் ஒருபகலி லேயே வருமாறு செய்து, அவ்வாறு அவை கொணர்ந்த அந்நீரிற் படிந்தாடிப் பெருமையுற்றான் ; இருகடல்நீரும் ஒருபகல் ஆடிய பல்யானைச் செல்கெழு குட்டுவன், தன் நாட்டுக் கொற்றவையாகிய அயிரைக்கடவுளை வணங்கி னான் ; சேரநாட்டில் அயிரை என்றோர் அழகிய மலையுண்டு;

அம்மலைமீது கொற்றவை என்ற பெயருடைய வெற்றிக் கடவுள் உண்டு: சேரநாட்டுச் சிறந்த வீரர்கள், தம் விழுப் புண்ணிற் சொரியும் குருதிகலந்த சோற்றைப் படைத்து இக்கொற்றவையை வழிபடுவதை வழக்கமாகக் கொண் டிருந்தனர்; பல்யானைச் செல்கெழு குட்டுவன் தானும் ஒரு பெருவீரனாதலின், அயிரைமலை சென்று, ஆண்டுறை கொற்றவையைப் பணிந்து மகிழ்ந்தான். கடல்நீராடிக் கடவுளைப் பேணிய குட்டுவன்செயலை இளங்கோவடிகளும் பாராட்டியுள்ளார்.

"உருகெழு மரபின் அயிரை மண்ணி
இருகடல் நீரும் ஆடினேன்." (சிலம்பு, உஅ : கசடு-சு)

பல்யானைச் செல்கெழு குட்டுவன் வெற்றியும், விழுச் சிறப்பும் விளங்கப் பாடிய புலவர் பாலைக் கௌதமனார், அவன் நல்லோர் போற்றும் நற்பண்புடையனாய் வாழ வேண்டும் என்னும் நல்லெண்ணம் உடையராயினர்; உடனே அவன் அருகிருந்து, அவன் முன்னோர் நாடாண்ட முறை யினை நன்கு எடுத்துக் காட்டினார்; அவர் உயர்ந்தோர் போற்றும் உயர்வினரானமைக்கு அவர்பால் அமைந்திருந்த அருங்குணங்கள் இன்ன இன்ன என எடுத்துக் கூறினார்; நல்லரசைப் பல்லோர் பழிக்கும் வல்லரசாக ஆக்குதல், அவ் வரசுடையான் கொள்ளும் சினமும், காமமும், கைமி கந்த கண்ணோட்டமும், அச்சமும், பொய்யும், அளவிற்கு மீறிய அன்புடைமையும், கையிகந்த தண்டமுமாம். இந்த உண்மையை முதற்கண் எடுத்துரைத்தார்; தீச்செயலை நின் மனத்தானும் நினையற்க! நல்லறவினைகளை நாடோறும் செய்க! நாட்டுமக்கள். ஒருவரையொருவர் துன்புறுத்தாம லும், பிறர்பொருளைக் கவரவிரும்பாமலும் வாழுமாறு, கடலும், கானலும் பயன்பல ஈனுமாறு நல்லாட்சி நடாத் துக! குற்றமறக் கற்றுத் துறைபோய அறிவுடையார் அற நெறி நிற்பாயாக! நின்னால் அன்பு செய்யப்பட்ட நின் மனைவியரோடு மகிழ்ந்து பிரிவின்றி இயன்ற பெருவாழ் வுடையனாகுக! உள்ள பொருளை ஊராரோடு இருந்து உண்டு மகிழ்க! எனப் பல அறவுரைகள் கூறினார்:

"சினனே, காமம் கழிகண் ணோட்டம்,
அச்சம், பொய்ச்சொல், அன்புமிக வுடைமை,
தெறல் கடுமையொடு பிறவும், இவ் வுலகத்து
அறந்தெரி திகிரிக்கு வழியடை யாகும்;
தீதுசேண் இகந்து, நன்றுமிகப் புரிந்து,
கடலும், கானமும் பல்பயம் உதவப்,
பிறர்பிறர் நலியாது, வேற்றுப்பொருள் வெஃகாது;
மையில் அறிவினர் செவ்விதின் நடந்து; தம்
அமர்துணைப் பிரியாது, பாத்துண்டு, மாக்கள்
மூத்த யாக்கையொடு பிணியின்று கழிய,
ஊழி உய்த்த உரவோர் உம்பல்!" (பதிற்றுப் : உஉ)

இவ்வாறு அறிவுரை பல வழங்கியும், குட்டுவன் மறக் குணம் மாருமையினைக் கண்டார் புலவர். ஒருவர் எவ்வளவு நூல்கற்று எத்துணை அறிவு பெற்றாராயினும், அவர் இவ்வுலகம் நிலையற்றது, வாழ்வு நிலையற்றது, இவ்வுலக இன்பம் அழியும் இயல்பினது என்ற இந்த அறிவினைப் பெருராயின், அவர் நல்வழிப்படுதல் இல்லை; இந்த உண்மை யுணர்ந்த புலவர், சேரமான் உளத்தே நிலையாமை எண்ணம் நின்று நிலவத் துணைபுரிதல், தம் கடன் எனக் கொண்டார்; உடனே, அரசனை அணுகி, "அறவோன்மகனே" என அவன் உள்ளத்தே அறவுணர்வு தோன்ற விளித்து, "நின் ஆற்றற் பெருமையைப் பகைவர் அறியின், அதனுல் அவர் ஆக்கம் மிகுமாதலின், அதை அவர் அறியாவண்ணம் மறைத்தும் குறைவேண்டியும் முறைவேண்டியும் நின்பால் வந்து கூறுவார் கூற்றுக்களின் உண்மைகளை உள்ளவாறுணர்ந்தும், பகற்காலத்தே பகைப்புலம் சென்று போரிடும் நின் படையாளர்க்குத் துணைபுரிந்தும், இரவுக் காலத்தே அமைச்சர், சான்றோர் உள்ளிட்டாரோடிருந்து மேல் செய்யக்கடவனவற்றை ஆராய்ந்து நோக்கியும் வாழும் அரசியல் மேற்கொண்டிருக்கும் நினக்கு, ஒன்று கூறவிரும்புகின்றேன்; அருள்கூர்ந்து கேட்பாயாக! தம்மையொத்த அரசர் உலகில் யாண்டும் இலர் என்று பெருமை தோன்றப் பேரரசு மேற்கொண்டு வாழ்ந்த அரசர்களும், இவ்வுலகில்

அவர் புகழ் ஒன்று மட்டுமே நிற்க, இறந்து மறைந்தே போயினர்; நின்நாட்டில் உள்ள சோலைகள்தோறும் நிகழும் வெறியாட்டயர் களத்தில், இனி இடமில்லை எனக் கூறுமாறு நெருங்க நிற்கும் ஆடுகள் அனைத்தும் அழிந்து போவது உறுதியாதலைப் போன்றே, உலகில் வாழும் உயிர்கள் அனைத்தும் ஒருநாள் அழிந்துபோவது உறுதியாம்; ஆதலின், அரசே! உலகவாழ்வு நிலையற்றது என்பதை நினைவில் இருத்தி, நல்லது ஆற்றி நெடிது வாழ்வாயாக!" என்று கூறி வாழ்த்தினர் :

"ஒருதா மாகிய பெருமை யோரும்,
தம்புகழ் நிறீஇச் சென்றுமாய்ந் தனரே ;
அதனால், அறவோர் மகனே! மறவோர் செம்மால்!
நின்னொன்று உரைப்பக் கேண்மதி!
..............................................
காவுதோ றிழைத்த வெறியயர் களத்தின்
இடங்கெடத் தொகுத்த விடையின்
மடங்கல் உண்மை மாயமோ அன்றே." (புறம்: ௩௬௬)

பாடிப் பரிசில் பெறுவதே தம் தொழிலாம் எனக் கொள்ளாது, தன் புகழைப் பாடியதோடு, தான் நல்வாழ்வு வாழ்தற்காம் நல்லுரை பல நல்கிய புலவர்பால் பேரன்பு கொண்ட பல்யானைச் செல்கெழு குட்டுவன், அவரை அன்புடன் நோக்கி, "ஆன்றீர்! நீவிர் என்பால் வேண்டுவன யாவை?" என விரும்பிக் கேட்டான்; புலவர், "யானும், என் மனைவியும் சுவர்க்கம் புகல் வேண்டும்; அஃதே எம் விருப்பம்" எனக் கூறினர்; உடனே குட்டுவன், அந்தணர் கூறிய அறவழி நின்று, பத்துப் பெருவேள்வி செய்து, அவ்விருவரையும், பிறவாப் பெரு நெறியில் இருத்தினன்.[1]

---

1. பல்யானைச் செல்கெழு குட்டுவனுக்கும் பெருமையளித்து நிற்கும் இச்செயலை அவன் வழிவந்த ஆசிரியர் இளங்கோவடிகளும் எடுத்துக் கூறிப் பாராட்டியுள்ளார் :

"நான்மறை யாளன் செய்யுள் கொண்டு
மேனிலை யுலகம் விடுத்தோன்."

(சிலம்பு உஅ : ௧௩௭-அ)

இவ்வாறு வாழ்வாங்கு வாழ்ந்து, புலவர் தம் பாராட்டுரையும் பெற்றுச் சிறப்புற்ற சேர வேந்தன், இருபத்தைந்து ஆண்டுகள் ஆட்சியில் இருந்து, இறுதியில், நிறைந்த புகழும், உயர்ந்த கேள்வியும் உடைய நெடும் பாரதாயனார் என்னும் பெயருடைய தன் பேராசிரியர் அறிவுறுத்தத் துறவுள்ளம் உடையனாய் அவரைப் பின் தொடர்ந்து, நாடு விட்டுக் காடு சென்று நோற்று வீடு பேறடைந்தான் :

"இமைய வரம்பன் தம்பி, அமைவர
உம்பற் காட்டைத் தன்கோல் நிறீஇ,
அகப்பா எறிந்து பகல்தீ வேட்டு
மதியுறழ் மரபின் முதியரைத் தழீஇக்
கண்ணகன் வைப்பின் மண்வகுத்து ஈத்துக்
கருங்களிற்று யானைப் புணர்நிரை நீட்டி
இருகடல் நீரும் ஒருபகல் ஆடி,
அயிரை பரைஇ, ஆற்றல்சால் முன்போடு
ஒடுங்கா நல்லிசை, உயர்ந்த கேள்வி
நெடும்பார தாயனார் முந்துறக் காடுபோந்த
பல்யானைச் செல்கெழு குட்டுவன்."

(பதிற்றுப்பத்து. பதிகம் : ௩)

## கக. பாலை பாடிய பெருங்கடுங்கோ

பாலை பாடிய பெருங்கடுங்கோ, ஆன் பொருநையாறு சூழ அமைந்த அரணுடைய வஞ்சி நகர்க்கண் இருந்து அரசோச்சிய சேர வேந்தனாவன். பெருங்கடுங்கோ, வெல்லற்கு அரியன எனப் பெருமை பாராட்டும் பகைவர்தம் அரண்கள் பலவற்றை அழித்து, ஆற்றல் மிக்க அவ்வரசுகளைப் பணிகொண்ட பேராண்மை வாய்ந்தவனாவன். தன் வெற்றிப்புகழை விளங்கப் பாடும் பாண்மகட்குப் பல கழஞ்சு நிறையுள்ள பொன்னரி மாலையையும், அப்பாண்மகள் பின்னின்று இசை பாடும் பாண்மகற்கு வெள்ளியாலாய நாரிற்றொடுத்த பொற்றாமரை மலரையும் பரிசளித்துப் போற்றும் பெருங்கொடையாளனுமாவான்; இச்சிறப்புக்கள் எல்லாம் பெருங்கடுங்கோவின்பால் பொருந்தியிருக்கக் கண்ட பேய்மகள் இளவெயினி எனும் நல்லிசைப் புலமை மெல்லியலார், அவன் புலவர் பாராட்டும் பெருமையுடையோனாவன் எனப் பாராட்டிப் பாடியுள்ளார்:

“தண்பொருநைப் புனல்பாயும்
விண்பொருபுகழ் விறல்வஞ்சிப்
பாடல்சான்ற விறல்வேந்தனும்மே!
வெப்புடைய அரண்கடந்து
துப்புறுவர் புறம்பெற்றிசினே;
புறம்பெற்ற வயவேந்தன்
மறம் பாடிய பாடினியும்மே,
ஏருடைய விழுக்கழஞ்சின்
சீருடைய இழைபெற்றிசினே;
இழைபெற்ற பாடினிக்குக்
குரல்புணர்சீர்க் கொளைவல் பாண்மகனும்மே
எனவாங்கு,
ஒள்ளழல் புரிந்த தாமரை
வெள்ளி நாரால் பூப்பெற் றிசினே.” (புறம்: கக)

பாலை பாடிய பெருங்கடுங்கோ, பேராற்றலும், பேராண்மையும் கொண்டு பகைவரைப் பணியவைக்கும்

பெரு வீரனவன் என்பதைப் பேய்மகள் இளவெயினியார் பாட்டேயன்றி, பெருங்கடுங்கோ பாடிய பாட்டொன்றும் விளங்க உணர்த்துகிறது. பாய்ந்து வரும் பகைவர் படையினை எதிர்த்துப் போரிட்டுத் துரத்தி வெற்றி பெற்றான் ஒரு வீரன்; ஆனால் மேற்கொண்ட போரில், பகைவர் எறிந்த வேல்களும் வாள்களும் பாய்ந்தமையால், அவன் உடல், கண்ணிற்கும் புலனாகாவாறு சிதைந்து அழிந்து விட்டது; அவனும் இறந்து விட்டான்; இத்தகைய பெரு வீரனைக் "கடன் முடித்த காளை" எனப் பாராட்டிய தோடு, பெரும்புகழ் பாரிலே நிற்க, அவன் புலவர் வாய்ப் பாவிலே சென்று மறைந்துவிட்டான் என்றும் பாடிய பெருங்கடுங்கோ பாடல், அவரும் ஒரு பெருவீரராவர் என்பதை உணர்த்திநிற்றல் உணர்க:

"எஃகு உளம்கழிய, இருநில மருங்கின்
அருங்கடன் இறுத்த பெருஞ்செ யாளனை
யாண்டுள னோஎன வினவுதி யாயின்,
..............................................
சேண்விளங்கு நல்லிசை நிறீஇ
நாநவில் புலவர் வாயு ளானே." (புறம் - உஅஉ)

பெருங்கடுங்கோ, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்திணைகளுள் பாலைத்திணைக்குரிய, முதல், கரு, உரிப்பொருள்களை ஊன்றி யுணர்ந்து, உயர்ந்தோர் போற்றப் பாடியுள்ள சிறப்பால், பாலை பாடிய பெருங் கடுங்கோ எனப் பாராட்டப் பெற்றுளார்.

பாலை பாடிய பெருங்கடுங்கோ ஒரு பேரரசர் மரபிலே வந்தவர்; தாமும் ஓர் அரசராய் நாடாண்டு நலம்பல கண்டவர்; அதனல், அக்கால அரசர் இயல்புகளை நன்கு அறிந்தவராவர்; அவ்வாறு தாம் அறிந்த அரசியல் நுட்பங் களைத் தாம் பாடிய பாக்கள் இடையிடையே, ஏற்ற இடந் தேடிக் கூறிச் சென்றுளார்.

"பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர் எழுபது கோடி யுறும்" என்ப. ஒரு நாட்டு ஆட்சியின்

தன்மை, அந் நாட்டு அரசனினும், அந்நாட்டு அமைச்சனைப் பொறுத்தே அமையும்; அமைச்சன் நல்லனாயின், அரசனும் நல்லனாம்; ஆட்சியும் நன்றாம்; அவன் தீயனாயின், நல்லரசும் தீதாம்; அந் நாட்டுக் குடிகள் அழ அழப் பொருள் பறிக்கப்படுவர்; அதனால், "கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டில், கடும்புலி வாழும் காடு நன்றே" என்ற எண்ணமுடையராகி, நல்லிடம் தேடிச் சென்று விடுவர்; அத்தகைய நாட்டினுள், பகையரசர் படை எளிதிற் புகுந்து வென்றிகொண்டு வெறியாட்டம் ஆடும். இந்த உண்மைகளை உணர்ந்து கூறிய பாலை பாடிய பெருங்கடுங்கோ, பாரோர் போற்றும் பேரரசு மேற்கொண்டோராவர் என்பதில் சிறிதும் ஐயம் இராதன்றோ!

"நடுவிகந்து ஒரீஇ நயனிலான் வினைவாங்கக்
கொடிது ஓர்த்த மன்னவன் கோல்போல, ஞாயிறு
கடுகுபு கதிர்மூட்டிக் காய்சினம் தெறுதலின்." (கலி: அ)

"அலவுற்றுக் குடிகூவ ஆறின்றிப் பொருள் வெஃகிக்
கொலையஞ்சா வினைவரால் கோல்கோடி யவன்நிழல்
உலகுபோல் உலறிய உயர்மர வெஞ்சுரம்." (கலி : க0)

"ஆள்பவர் கலக்குற அலைபெற்ற நாடுபோல்
பாழ்பட்ட முகத்தோடு பைதல்கொண்டு அமைவளோ."
(கலி : ங)

"பேதையோன் வினைவாங்கப் பீடிலா அரசன் நாட்டு
எதிலான் படைபோல இறுத்தந்தது." (கலி : உஎ)

ஆட்சிநெறி உண்டாதற்கே காரணமாவதும், அவ் ஆட்சிநிலை அவ்வப்போது மாறுதற்குக் காரணமாவதும், உலக வாழ்விற்கே உயிர் அளிப்பதும் பொருள். ஆகவே, அரசராவார், அப்பொருளின் இயல்புகளை உள்ளவாறு உணர்ந்தவராதல் வேண்டும். பேரரசராய பாலைபாடிய பெருங்கடுங்கோவும், பொருளின் உண்மை இயல்புகளை உணர்ந்து உணர்த்தியுள்ளார்.

ஒருவர், தீ நெறியிற் செல்லாது, நன்னெறியில் நின்று வாழும் நல்வாழ்வையும், பிறர் மனைமுன் நின்று பிச்சையேற்று வாழாப் பெருவாழ்வையும் வேண்டுவராயின்,

அதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது பொருளே எனப் பொருட்சிறப்பினையும், பொருட்பயனை நுகர விரும்புவார் ஒவ்வொருவரும், அப்பொருளைத் தாமே ஈட்டுதல் வேண்டும்; அவரே ஆள்வினையுடையவராவர். இதற்கு மாறாகத் தாம் ஒரு தொழிலும் செய்யாது, தம் முன்னோர் ஈட்டிவைத்துள்ள செல்வத்தை அழித்து அதன் பயனை உண்டு வாழ்வார், உண்மையில் உயிருடையார் எனக் கருதவும்படார்; அவர் வாழ்வு இரந்துண்போன் வாழ்வினும் இழிவுடைத்தாம் எனப் பொருளீட்டற் சிறப்பினையும், பொருள் தேடுவார் எவ்வகையாலும் பொருள் சேர்த்தலே எம் குறிக்கோள் என்று எண்ணிவிடுதல் கூடாது. பொருள் ஈட்டத் தாம் மேற்கொள்ளும் செயல் தீமையுடைத்து, அறநெறியற்றது என்ற எண்ணமின்றிப் பொருளை ஈட்டின், அவர்கள் அப்பொருளால் ஆன்ற இன்பம் அடையார்; மாறாக, இம்மை மறுமை ஆகிய இரு நிலையினும் அவர்க்கு அப்பொருளே தாங்கலாகத் துன்பங்களைத் தேடித்தரும் என அறநெறி நின்று பொருள் தேட வேண்டியதன் இன்றியமையாமையினையும், ஈத்து உவக்கப் பயன்படும் செல்வமே செல்வம்; இரந்தார்க்கு ஈயாது ஈட்டிய செல்வம் இழிவுடைச் செல்வமாம் எனப் பொருட் பயன் இஃது என்பதையும், இவர் உயர்ந்த பண்புடையார், ஆகவே இவர்பாற் செல்லுதல் வேண்டும்; இவர் அப் பண்பிலார், ஆகவே இவரை அகன்று வாழல் வேண்டும் என எண்ணுவதின்றிச் செல்வம், செய்தவப் பயனுக்கேற்ப எவரிடத்தும் சென்று சேரும் என, அதன் இயல்பினையும், செல்வம் சேருங்கால் சிறப்பளித்துப் பிரியுங்கால் தம்மைப் பெற்றிருந்தார், தம்மைப் பெறுதற்கு முன் தாம் பெற்றிருந்த சிறப்பையும் அழித்துவிட்டு, பிறர் பெரிதும் எள்ள இழிவு செய்தே பிரியும் என, அதன் நிலையாமையினையும் நன்கு உணர்ந்து உணர்த்தியுள்ளார்.

"அறன்கடைப் படாஅ வாழ்க்கையும், என்றும்
பிறன்கடைச் செலாஅச் செல்வமும், இரண்டும்
பொருளின் ஆகும்."

(அகம் : கஙரு)

"உள்ளது சிதைப்போர் உளர்எனப் படார்
இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு." (குறுந் : உஅங)

"செம்மையின் இகந்துஒரீஇப் பொருள் செய்வார்க்கு அப்பொருள்
இம்மையும் மறுமையும் பகையாவது அறியாயோ."
(கலி : கச)

"ஈதலிற் குறைகாட்டாது, அறன்அறிந்து ஒழுகிய
தீதிலான் செல்வம்போல் தீங்கரை மரம்நந்த."

"சிறியவன் செல்வம்போல் சேர்ந்தார்க்கு நிழல்இன்றி."
(கலி : உஎ, கO)

"கிழவர் இன்னோர் என்னாது, பொருள்தான்
பழவினை மருங்கிற் பெயர்பு பெயர்பு உறையும்."
(கலி : உக)

"மரீஇத்தாம் கொண்டாரைக் கொண்டக்கால் போலாது
பிரியுங்கால் பிறர் எள்ளப் பீடின்றிப் புறமாறும்
திருவினும் நிலையிலாப் பொருள்." (கலி : அ)

நாடாளும் தமக்கு, நாட்டார்க்கு நல்லறிவு கொளுத்தும் பணி வேண்டுவதின்று என அடங்கிவிடாது அரிய உண்மைகளை அள்ளித்தரும் அழகிய பாக்களைப் பாடிய பாலைபாடிய பெருங்கடுங்கோ போலும் பேரரசரை இந்நாடு பெற்று எடுப்பது எந்நாளோ?

## உ०. மருதம் பாடிய இளங்கடுங்கோ

பெருங்கடுங்கோ எனும் சேர வேந்தர் ஒருவர், பாலைத் திணையைப் பாடிப், பாலைபாடிய பெருங்கடுங்கோ எனப் பெயர் பூண்டதேபோல், இளங்கடுங்கோ என அழைக்கப் பெறும் இவரும், மருதத் திணையைப் பாடிய சிறப்பால் மருதம் பாடிய இளங்கடுங்கோ என அழைக்கப்பெற்று ளார். பெருங்கடுங்கோ எனவும், இளங்கடுங்கோ எனவும் அழைக்கப்பெறுவது ஒன்றையே கொண்டு இவர்கள் இரு வரும் அண்ணனும் தம்பியுமாவர் என முறை கற்பித்துக் கூறல் அத்துணைப் பொருத்தமுடைத்தன்று. இளங் கடுங்கோ ஒரு சிறந்த புலவராவர் என்பதல்லது வேறு உணர்தற்கில்லை. அவர்பால் அமைந்துள்ள அரசப் பண்பு கள் யாவை என்பது அறியக்கூடவில்லை.

இளங்கடுங்கோ தம் காலத்தே நிகழ்ந்த பருவூர்ப் பறந்தலைப்போர் ஒன்றையும் அப்போரில் தன்னை எதிர்த்த சேர பாண்டியர் இருவரையும், சோழன் தான் ஒருவ னுகவே நின்று வென்றிகொண்ட சிறப்பையும் கூறி, வரலாற்றிற்கு ஒரு சிறிது துணைபுரிந்துள்ளார் :

'அண்ணல் யானை அடுபோர்ச் சோழர்
வெண்ணெல் வைப்பின் பருவூர்ப் பறந்தலை
இருபெரு வேந்தரும் பொருதுகளத்து ஒழிய
ஒளிறுவாள் நல்லமர்க் கடந்த ஞான்றைக்
களிறுகவர் கம்பலை.''
(அகம் : கூகூ)

வரலாறு உணர ஓரளவு துணைபுரிந்த இளங்கடுங்கோ, மக்களைப் பெற்று மனையறங்காக்கும் மனைவியர் தம் மாண்பு எத்தகைத்து என்பதை உணரவும் துணைபுரிந்துள்ளார்.

தன் மனைவி புதல்வனைப் பெற்றுப் பேணி வளர்த்துக் கொண்டு பெருமனைக் கிழத்தியாய் நெல்வளம் நிறைந்த நெடிய தன் மனையில் வாழ்ந்திருக்க, பரத்தை வீடு சென்று வாழ்தலை விரும்பினன் ஓர் ஆண்மகன். பரத்தையொடு

வாழ்ந்திருந்த அவன், ஒருநாள் அவளைச் சிறிதே பிரிந்து எங்கோ சென்றிருந்தான். உடனே அப் பரத்தைக்கு அவன்பால் சினம் பிறந்துவிட்டது; கண்ணில் தீட்டிய மையும் கரைந்துபோமாறு கண்ணீர்விட்டுக் கலங்கினாள்; கைகளை முறித்துக்கொண்டாள்; பற்களை நெறுநெறெனக் கடித்துக் கொண்டாள்; அம்மட்டோ! ஊரெல்லாம் உணருமாறு அவனைத் தேடிப் புறப்பட்டுவிட்டாள். இச் செய்தியைத் தலைமகளின் தோழி அறிந்தாள்; சின்னாள் கழித்துத் தலைவன், தன் மனைவந்து சேர்ந்தான். வந்தானை வரவேற்காது, வாயிற்கண்ணே நிறுத்திவைத்தே, "தலைவ! தாங்கள் எங்களைப் பிரிந்து பலநாள் ஆகவும், மக்களைப்பெற்று மனையறம் காக்கும் கடமையுணர்ச்சி யுண்மையால், நின் பிரிவைப் பொருட்படுத்தாமல் பொறுத்து வாழ்கிறோம். ஆனால், நின் காதற் பரத்தையோ நீ சிறிதுபொழுது பிரிந்தாய் என்பதற்கே ஊரெல்லாம் உணர அலர் தூற்றி விட்டாள். இல்லத்தே இருந்துவாழக் கடமை பூண்டுள்ளோம் நாங்கள்; ஆகவே பன்னாள் பிரிந்து வாழினும், அதுகுறித்து எவரிடமும் எவ்விதக் குறையும்கூறி வருந்தாமல், மக்களைப் பேணலும், மனையறங் காத்தலுமாகிய கடமையைக் கருதி அமைந்துவிடுகிறோம். தாங்கள் விரும்பும் அப் பரத்தைக்கும் அத்தகைய கடமையுண்டு என எண்ணிவிட்டனை போலும்! அவளுக்கு அத்தகைய கடமையில்லை; அதனாலன்றோ சிறிது பிரிந்ததையே பொறாது அலர் தூற்றிவிட்டாள். பெருமனைக் கிழத்தியர்க்கும், பரத்தையர்க்கும் உள்ள இவ்வேறுபாட்டினை உணர்ந்தனையாயின், பரத்தையர் ஒழுக்கம் மேற்கொள்ளாய்" என்றெல்லாம் இடித்துக் கூறினாள் தோழி.

தோழியின் இவ் அறிவுரை அமைந்த பாடல் ஒன்றைப் பாடியுள்ளார் புலவர். "தாய்போல் கழறித் தழீஇக்கோடல் ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்து" எனக் கூறுவர் தொல்காப்பியனார். மனைவியோடிருந்து இல்லறம் ஆற்றிப் பெருமை பெறவேண்டிய கணவன், தகாவொழுக்கம் மேற்கொண்டவழி, அவன் பகைவரும் போற்றும் பண்

புடையாளன்; செறுநரும் விழையும் செம்மலோன் என்றெல்லாம் பாராமல், அவன் மனைவியே அல்லாமல், அவள் தோழியாய்த் துணைபுரியும் பிறபெண்களும் அவனை நடுத் தெருவில் நிறுத்தி வைத்தே, "தகா ஒழுக்கம் மேற்கொள்ளும் நின்னைக் கேட்பார் எவரும் இலர்கொல்?" என்றும், "நாணமும், நற்பண்பும் இழந்த நாடன் நீ" என்றும் கூறிப் பழித்துரைப்பர் எனக் கூறிக் கணவர்பால் தவறுகண்டவழி, ஒறுத்துத் திருத்தும் உயர் தமிழ் ஒழுக்க நெறியினை உணரத் துணைபுரிந்துள்ளார் புலவர். அரசராய் இருந்து தம் ஆட்சிப் பெருமையால், அறநெறி நிற்கச் செய்வதிலும், அறிவுசான்ற புலவனாய் அமர்ந்து, அன்பு நிறை உரையால், அவ் அறநெறி வாழச்செய்தலே ஆன்ற பயன்தரும் என்பதை உணர்ந்தவர்போலும் நம் இளங் கடுங்கோ!

"மாணிழை முன்கைக்
குறுந்தொடி துடக்கிய நெடுந்தொடர் விடுத்தது
உடன்றனள் போலும் நின்காதலி, எம்போல்
புல்லுளைக் குடுமிப் புதல்வற் பயந்து
நெல்லுடை நெடுநகர் நின்இன்று உறைய
என்ன கடத்தளோ மற்றே; தன்முகத்து
எழுதுஎழில் சிதைய அழுதனள் ஏங்கி
வடித்தென உருத்த தித்திப் பல்காழ்
நொடுத்தெனச் சிவந்த மெல்விரல் திருகுபு
கூர் நுனை மழுகிய எயிற்றள்
ஊர்முழுதும் நுவலும்நிற் காணிய சென்மே."

(அகம்: கஎசு)

## உக. மாந்தரம் பொறையன் கடுங்கோ

மாந்தரன், மாந்தரன் பொறையன் கடுங்கோ என்றெல்லாம் அழைக்கப்பெறும் இவன், சேரருள், இரும்பொறை மரபில் வந்தவனுதல் வேண்டும்: மாந்தரம் பொறையன் கடுங்கோவே, இரும்பொறை மரபினரின் முதல்வனுதல் வேண்டும் என ஆராய்ச்சியாளர் கருதுவர். இளஞ்சேரல் இரும்பொறையைப் பாடிய பெருங்குன்றூர் கிழார், அவனே, மாந்தரன் வழிவந்தவன் எனக் கூறிய தொன்றன்றி வேறு சான்று அவர்க்கு இல்லை. இளஞ்சேரல் இரும்பொறைக்கு முன் அரசாண்ட இரும்பொறை மரபினர் பலராதலின், அத்தொடர், அவ்வாறு ஆண்டாருள், மாந்தரனும் ஒருவனுவன் எனப் பொருள்படத் துணை புரியுமேயன்றி, அவனே, அவ்வின முதல்வனுவன் எனப் பொருள்கொள்ளத் துணைபுரியாது; மாந்தரனே, இளஞ்சேரல் இரும்பொறைக்கு முற்பட்டோன் எனக் கோடல் கூடுமேயன்றி, இரும்பொறை மரபில் வந்தார் அனைவர்க்குமே முற்பட்டவனுவன் எனக்கோடல் பொருந்தாது.

மாந்தரன் ஆண்ட நாடு, அவன் காலத்தே வாழ்ந்த பிற அரசர், அவன் பெற்ற வெற்றிகள், இன்ன பிற வரலாறுகள் எதையும் அறியும் சான்றுகள் கிடைத்தில.

மாந்தரன், வையகம் போற்ற வாழ்வாங்கு வாழ்ந்த வேந்தனுவன்; அவன் ஆட்சி, அறனெடு பட்ட நல்லாட்சியாம்; அதனுல், அவன் ஆட்சிக்காலத்தே, கோள்களும், அவ்வவற்றிற்குரிய இடத்திலேயே இயங்கின; மழையும் தப்பாது பெய்தது; அவன் நாட்டுமக்களும் அச்சம் அற்று வாழ்ந்தனர்; துன்பவாழ்வில் துயர் உருது, இன்ப வாழ்வினை இடையருது பெற்றனர்! மாந்தரன், அரசர்க்கு ஓதிய கல்வியை ஒன்றுவிடாது கற்றுச் சிறந்தான்; ஆற்றல் மறவர்தம் அரும்போர் கண்டு அஞ்சா வாட்போர் வல்ல வேந்தர்கள், பணிந்து தந்த பல்லணியும், பலகளிறும் பெற்று மகிழும் பேராண்மையுடையவனுயினுன்; உலகில், உள்ளமும், உரையும், உடல்புரி செயலும், ஒரு நாளும்

நடுவுநிலை திரியா நன்னெறியுடையான்; இவற்றுலெல்லாம் அவன் அழியாப் புகழ், உலகெலாம் சென்று பரவிற்று; வாளின் வன்மையும், கோலின் செம்மையும் விளங்க ஆண்ட அவனை, அறனறிந்து மூத்த அறிவுடையார் அனைவரும் மகிழ்ந்து வாழ்த்தினர் எனக் கூறுவர் பெருங்குன்றூர் கிழார் எனும் புலவர் பெருந்தகையார்:

"மீன்வயின் நிற்ப, வானம் வாய்ப்ப,
அச்சற்று ஏமமாகி, இருள் தீர்ந்து,
இன்பம் பெருகத் தோன்றித், தம்துணைத்
துறையின் எஞ்சாமை நிறையக் கற்றுக்,
கழிந்தோர் உடற்றுங் கடுந்தூ வஞ்சா
ஒளிறு வாள் வயவேந்தர்,
களிறொடு கலம் தந்து,
தொன்று மொழிந்து தொழில் கேட்ப,
அகல் வையத்துப் பகலாற்றி,
மாயாப் பல்புகழ் வியல்விசும்பு ஊர்தர
வாள்வலி அறுத்துச், செம்மை பூஉண்டு,
அறன் வாழ்த்த நற்காண்ட
விரல் மாந்தரன்." (பதிற்றுப்: ௯0)

மாந்தரன் பொறையன் கடுங்கோ, கொடுத்துப் பழகிய கையுடையான்; அவனைப் பாடிச்செல்லும் பாணர், கூத்தர், பொருநர் முதலாம் இரவலர், தம் வறுமை தீரப் பெரும்பொருள் பெற்றன்றி மீளார்; அவன், பகைவரான் தடுத்து நிறுத்தப்படாப் பெரும்படையும், போர் வெல்லும் பேராண்மையும் பெற்றவன் என்றெல்லாம் பாராட்டி மகிழ்வர், முதுபெரும் புலவராய பரணர்:

"இலமல ரன்ன அஞ்செந் நாவின்
புலமீக் கூறும் புரையோர் ஏத்தப்
பலர்மேந் தோன்றிய கவிகை வள்ளல்;
நிறையருந் தானை வெல்போர் மாந்தரம்
பொறையன் கடுங்கோப் பாடிச் சென்ற
குறையோர் கொள்கலம் போல நன்றும்
உவவினி வாழிய நெஞ்சே." (அகம்: ௧௪௨)

## ௨௨. மாரிவெண்கோ

பாண்டிய நாட்டில், கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதியும், சோழநாட்டில், இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் அரசோச்சிய காலத்தே, சேரநாட்டு அரியணையில் அமர்ந்து ஆட்சி மேற்கொண்டிருந்தோன், இம் மாரிவெண்கோ. இவன் மாவெண்கோ எனவும் அழைக்கப்பெறுவன்; மாரிவெண்கோவின் வீரம், வெற்றி, வண்மை முதலாம் பண்புகளை அறிந்து கோடற்கு வழியில்லை எனினும், இவன், குமரி முதல் இமயம் வரை ஒரு மொழி வைத்து உலகாண்ட வேந்தர்கள் மாட்டும் அமையலாகா அருங்குணம் ஒன்று உடையான் என்பது மட்டும் உணரக் கிடக்கிறது; மாரிவெண்கோ, மாவீரராய் மாநிலம் ஆண்ட மன்னர்கள் அனைவரினும் சிறந்த மாண்புடையனுவன்; இவன்பால் அமைந்து கிடந்த அம்மாண்பினை, ஆர்வம் வழி யப் பாடிப் பாராட்டியுள்ளார் ஔவையார்.

தமிழகம், தன்னேரில்லா அரசுபெற்றுத் தழைத் திருந்த காலம், மூவேந்தர் அரசோச்சிய காலமாம் என்ற பாராட்டுரைகளுக்கிடையே, தன்னேரில்லா அரசோச்சிய அத்தமிழகம், தாழ்ந்தமைக்கும், அம்மூவேந்தர்களும், அவர்கள் காலத்தே தமிழ்நாட்டின் சிறுசிறு பகுதிகளை ஆங்காங்கே ஆண்டுகொண்டிருந்த குறுநில மன்னர்களுமே காரணமாம் என்ற பழியுரைகளையும் எழுதவேண்டிய நிலையி லேயே அன்றைய தமிழ்நாட்டு அரசியல்நிலை அமைந் திருந்தது.

தமிழரசர் மூவரும் ஒற்றுமைகொண்டு ஊராண்டவ ரல்லர்; அவர் ஒவ்வொருவரும் பிறரை அடக்கி ஆள வேண்டும் என்ற எண்ணமுடையராவர்; ஒரு குடியில், ஒருகாலத்தே ஆற்றல் மிக்க அரசனொருவன் தோன்றி விட்டால், அவன் பிற அரசுகளையெல்லாம் பணியவைத்துப் பேரரசனுய் வாழவேண்டும் என்று எண்ணுவதும், அவன் ஆற்றலும் செல்வமும் கண்டு மனம் பொறுத ஏனைய

அரசர்கள் அனைவரும் ஒன்றுகூடி, அவனை அழிக்க வழி கோலுவதும் அக்கால வழக்கமாம். ஒரு குடியிற் பிறந்தார், பிறகுடியிற் பிறந்தாரோடு பகைத்து வாழ்தலோடு நின்றாரல்லர்; ஒருகுடியிற் பிறந்தவர்களே, ஒருவரோடொருவர் பகைத்துப் போர் மேற்கொள்வர்; அம்மட்டோ! தந்தை மகனை எதிர்ப்பன்; மகன், தந்தைமேல் போருக்கு எழுவன்; இதுதான் பழைய தமிழகத்தின் அரசியல் நெறி.

இவ்வரசியல் முறையால், தமிழகம் முழுதும் அழிந்து மண்ணோடு மண்ணாய் மறைந்துபோகாமல், தமிழகம் என்ற பெயரால் இன்னும் ஒரு நாடு உளது என்ற இந்நிலைக்குப், பாடிப் பிழைப்பதே தம் தொழில் என அடங்கியிருந்து விடாமல், அவ்வரசர்கள் நெறி தவறுந்தோறும், அஞ்சாது முன்வந்து, ஏற்ற வகையான் இடித்துக் கூறித் திருத்தி வாழ்ந்த புலவர்களே அல்லாமல், மாரிவெண்கோ போலும் மன்னர்களும் காரணமாம்.

மாரிவெண்கோ, அக்காலத் தமிழ் வேந்தரைப் போலல்லாமல், தன் காலத்தே வாழ்ந்த, ஏனைய தமிழ்வேந்தரோடு தலையாய நட்புப்பூண்டு நல்லோர் போற்ற வாழ்ந்தான்; பாண்டியன் கானப்பேரெயில்கடந்த உக்கிரப் பெருவழுதியோடும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியோடும் பிரியாப் பெரு நட்புடையனாய் விளங்கினான்; அந்நிலையைக் கண்டார் ஔவையார்; மூவேந்தர் முரண் கொண்டு நிற்கும்போதெல்லாம், அவர்தம் பகைபோக்கி ஒற்றுமைகாண உளமாற உழைக்கும் ஔவையார்க்கு, இவர்களிடையே நிலவும் ஒற்றுமையுணர்வு, உண்மை மகிழ்ச்சியை அளித்தது; அந்நிலைகண்டு மகிழும் அவர்க்கு அந்நிலை அழியாது வாழவேண்டும்; இந்நிலையினைக் காணும் பிறரும், கருத்தொருமித்து வாழவேண்டும் என்ற வேட்கை எழுந்தது; அவர் வேட்கை அழகிய ஒரு பாட்டாகவும் அமைந்துவிட்டது:

“தம் ஆட்சிக்குரிய நாடு, நாகலோகமோ என எண்ணுமாறு நால்வேறு வளங்களையும் நனிமிகப்பெற்ற நாடேயாயி

னும், அந்நாடுடையார் இறந்துபோங்கால், அஃது அவ ரோடு செல்லுவதில்லை; அந் நாட்டோடு, அதுகாறும் ஒரு சிறிதும் தொடர்பிலாதார்க்கு உரிமையாகிவிடுகிறது; ஆகவே, இவ்வாட்சி அழிவுடையது, நிலையற்றது என்பதை அறிந்து நினைவில் இருத்துவீராக. இறந்துபோவார்க்கு நற்றுணையாய் அவரோடு உடன்செல்வது, அவர் செய்த நல்வினை ஒன்றே; ஆகவே, வருவார்க்கு வளம்பலவும் வழங்கி வாழும் நல்வாழ்வு உடையீராகுக! உங்கட்குக் கூறத்தக்க உண்மை இஃது ஒன்றே; நீவிர் மூவரும் ஒருங்கு கூடியிருக்கும் இக் காட்சி, அந்தணர் ஓம்பும் செந்தழற் காட்சியையே என் கண்முன் கொணர்ந்து காட்டுகிறது; அந்தணர் ஓம்பும் செந்தழல், ஆகவனீயம், காருகபத்தியம், தென்திசையங்கி என மூன்றும்; அவற்றுள் ஒன்று குறை யினும் வேள்வி நிகழாது, சிறக்காது என்ப. அதைப் போன்றே, நீவிர் மூவரும் ஒன்றுகூடி உலகாளின், உலகில் இன்பம் உண்டாம்; நும்முள் ஒருவர் பகைகொண்டு பிரி யினும், அது பாழுறும்; ஆதலின், இன்றேபோல் என்றும் ஒருமனப்பட்டு உலகாள்வீராக! உங்கள் வாழ்நாளும் வற்றாது வளர்ந்து தோன்றுமாக!" இஃது ஔவையார் உள்ளம்.

"நாகத் தன்ன பாகார் மண்டிலம்
தமவே யாயினும் தம்மொடு செல்லா;
வேற்றோ ராயினும் நோற்றோர்க்கு ஒழியும்;
..........................................
இரவலர்க்கு அருங்கலம் அருகாது வீசி
வாழ்தல் வேண்டும்இவண் வரைந்த வைகல்;
வாழச் செய்த நல்வினை யல்லது
ஆழுங் காலைப் புணைபிறிது இல்லை;
ஒன்றுபுரிந்து அடங்கிய இருபிறப் பாளர்
முத்தீப் புரையக் காண்டக இருந்த
கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர்!
யானறி அளவையோ இதுவே." (புறம்: ௩௬௭)

## ௨௩. முடங்கிக்கிடந்த நெடுஞ்சேரலாதன்

பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் வழிவந்த சேர வேந்தருள், முடங்கிக்கிடந்த நெடுஞ்சேரலாதனும் ஒருவன். இயற்பெயர்க்கு முன்னர், அப்பெயருடையார்க்குப் பெருமை யளித்தற்பொருட்டு உயர்வுப் பொருள்தரும் நெடு என்ற அடைகொடுத்து வழங்குவது வழக்கமாம்; நெடியோன், நெடுங்கிள்ளி, நெடுஞ்செழியன், நெடுமாவளவன், நெடுமானஞ்சி, நெடுவேள் என்ற பெயர்களைக் காண்க. இவ்வாறு வந்த பெயர்களுள், நெடுஞ்சேரலாதன் என்பதும் ஒன்று. சேரவேந்தருள், அப்பெயர் உடையார் பலராவர்; குடக்கோ நெடுஞ்சேரலாதன், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்பதை நோக்க. அவரின் வேறு அறிதற்கு, இவன் முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன் என அழைக்கப்பெற்றுள்ளான். இவன் பெயர்க்கு முன்வரும் முடங்கிக் கிடந்த என்ற அடை வருதற்காம் காரணம் இஃது என்பது புலப்படவில்லை. முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன், பழந்தமிழ்ப் புலவருள் ஒருவனவன் என்பதே அறியக் கிடக்கிறது; அவன் அரசியல் வாழ்வு குறித்து எதையும் கூறுதற்கில்லை.

நெடுஞ்சேரலாதன் பாடிய நெய்தற்றிணை தழுவிய பாட்டொன்று மிகவும் நயம் செறிந்து காணப்படுகிறது; சிறுசிறு கண்களைக் கொண்ட பெரிய வலையினைப் படுத்து நீண்ட கயிற்றோடு பிணைத்துக்கொண்டு, கடலிடையே சென்று கடல் வளமெல்லாம் சுருங்கிற்றோ என எண்ணுமாறு, அக்கடல் மீன்கள் எல்லாம் ஒருங்ககப்படுமாறு வீசிவிட்டு, மாலையில் கரைசேர்ந்த வலைஞர், தம் வரவினைக் கவலையோடு எதிர்நோக்கிக் காத்து நிற்கும் தம் மனைவியரைக் கண்டு மகிழ்ந்து, ஊக்கம் மிக்கு, இளையரும் முதியருமாகிய எல்லோரும் ஒன்றுசேர்ந்து, அவ்வலையினைப் பேராரவாரத்திற்கிடையே வருந்தி இழுத்துக் கரைசேர்த்து வலையில் அகப்பட்டுக் கிடக்கும் மீன்களைப் பிரித்தெடுத்துக் கரையில் குவித்து, ஆங்குவந்து குழுமிநிற்கும் இரவலர்க்கு

அவர் கலம்நிறைய வழங்கி, எஞ்சியவற்றைச் சிறியதும் பெரியதுமாய பல கூறுகளாக்கி விலை கூறி விற்றுத் தொழில் முடித்த மகிழ்ச்சியாலும், பகலெல்லாம் உழைத்த உடற் றளர்ச்சியாலும், கரைக்கண் குவிந்த மணல்மீது கிடந்து உறங்குவர் என வலைஞர்தம் அன்றாட வாழ்க்கையினை விளங்க உரைத்துள்ளார்.

இந்த ஒரு பாட்டிலேயே, பெரிய வலையினை வருந்தி வலிக்கும் வலைஞர் தொழிலுக்கு, உப்புப் பொதியினை ஏற்றிய வண்டி, கடத்தற்கரிய மணல்செறிந்த நிலத்துட் புக்க வழி, அவ்வண்டியினை மண்டியிட்டு இழுத்துச் செல்லும் எருதுகளின் தொழிலையும், பெற்ற மீன்களை இரவலர்க்கு வழங்கும் வலைஞர் கொடைத்தொழிற்குக் களத்தில் அடித்துக் குவித்த நெற்குவியலைக் களம்பாடிவரும் இரவலர்க்குப் பரிசிலாக அளிக்கும் உழவர் செயலையும் உவமை கூறி, நாட்டுத் தொழில் கலைகளை நன்குணர்ந்த நல்லரசன்தான் என்பதை நன்கு உணர்த்தியுள்ளார்.

"நெடுங்கயிறு வலந்த குறுங்கண் அவ்வலைக்
கடல்பாடழிய இனமீன் முகந்து
துணைபுணர் உவகையர் பரத மாக்கள்
இளையரும் முதியரும் கிளையுடன் துவன்றி
உப்போய் உமணர் அருந்துறை போக்கும்
ஒழுகை நோன்பக டொப்பக் குழீஇ,
அயிர்திணி அடைகரை ஒலிப்ப வாங்கிப்
பெருங்களம் தொகுத்த உழவர் போல
இரந்தோர் வறுங்கலம் மல்க வீசிப்
பாடுபல அமைத்துக் கொள்ளை சாற்றிக்
கோடுயர் திணிமணல் துஞ்சும் துறை."

(அகம் : ௩0)

## உச. யானைக்கட் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை

மாந்தரன் எனும் இயற்பெயர் பூண்டு, சேரருள் இரும்பொறை மரபினருள் வந்தோனுய இவன், யானையின் கண் போலும் கண் பெற்றிருந்தமையான், யானைக்கட்சேய் மாந்தருஞ்சேரல் இரும்பொறை என அழைக்கப்பெற்றுளான், "வேழ நோக்கின் விறல் வெஞ் சேஎய்" எனவும், "மாந்தரஞ்சேரல் இரும்பொறை" எனவும் இவன் இயற்பெயர், காரணப் பெயர் ஆகிய இரு பெயரானும் அழைப்பர் குறுங்கோழியூர் கிழார். தொண்டிநகர்க்கண் அமர்ந்து நாடாண்ட யானைக்கட்சேய், பேராற்றலும், பேராண்மையும் வாய்ந்தவனுவன்; தன் நாட்டு மக்கள், பகைவர் படையெடுப்பால் பாழுருவண்ணம் பாகாண்ட பேரரசனுவான்; அவன் நாட்டு மக்கள், சோறுக்க மூட்டிய தீயாலும், ஞாயிற்றின் ஒளியாலும் உண்டாம் வெப்பத்தை அறிவரேயன்றி, பகைவர், தம் நாட்டைப் பற்றியக்கால் வைத்த தீயாலாம் வெப்பத்தை அறியார்; அவர்கள் வானவில்லைக் கண்டு களிப்பரே அல்லாமல், தம்மை அழிக்க எடுத்த பகைவர் கைவில்லைக் கண்டறியார்; தம் நிலங்களை உழுதற்கு உறுதுணையாம் நாஞ்சிற் படையினையல்லாது, தம் நாட்டின்மீது பகைத்து வருவார் ஏந்திய படையினைப் பார்த்தறியார் எனக், குறுங்கோழியூர்கிழார் அவன் பேராற்றலைப் பாராட்டியுள்ளார்:

"சோறு படுக்கும் தீயொடு
செஞ்ஞாயிற்றுத் தெறலலல்லது,
பிறிதுதெறல் அறியார்நின் நிழல்வாழ் வோரே;
திருவில் அல்லது கொலைவில் அறியார்
நாஞ்சில் அல்லது படையும் அறியார்." (புறம்: ௨0)

ஒரு காலத்தே, கடலன் என்பானுக்கு உரிமை பூண்டிருந்ததும், முற்றி முதிர்ந்த சிப்பிகளும், முத்துக்களும் மண்டிக் கிடக்கும் மணல் வெளியில், மணி மாளிகை வாழ்

வினராய மாண்பு நிறை மகளிர் கூடிக் கை கோத்துக் குரவை ஆடி மகிழும் மாண்புடையதுமாய விளங்கில் என்ற விழுப்புகழ் நிறைந்த நகர்க்குப் பகைவரான் வந்த கேட்டினைப் போக்கிக் காத்த பெருமையுடையான் நம் மாந்தரஞ்சேரல்இரும்பொறை :

"முதிர்வார் இப்பி முத்த வார்மணல்
கதிர்விடு மணியின் கண்பொரு மாடத்து
இலங்குவளை மகளிர் தெற்றி ஆடும்
விளங்குசீர் விளங்கில் விழுமம் கொன்ற
களங்கொள் யானைக் கடுமான் பொறைய."

(புறம் : ருங)

பாண்டிய மன்னர்களுள், தலையாலங்கானத்துச்செரு வென்ற நெடுஞ்செழியன் பேராற்றல் வாய்ந்தவனுவன்; அவனைப் பகைத்தார் எவரும் அழியாது உயிர்பிழைத் தாரல்லர்; அத்துணை ஆற்றல் உடையான் அவன்; தலை யாலங்கானப் போரில், அவனால் வெற்றிகொள்ளப்பட்டோ ருள் சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும் பொறையும் ஒருவனுவன்; எனினும், அவனின் ஏனைப் பகைவர்களைப் போல் இவன், அவனால் அழிவுற்றானல்லன்; அழிவுறாது உயிர் பிழைத்தது மட்டுமன்று; தன்னைப் பிடிப்பார் அகழ்ந்த குழியிலே விழுந்த களிறு, தன் கோட் டால் அக் குழியைக் குத்தித் தூர்த்துக் கரையேறித் தன் இனத்தோடு சேர்ந்து இன்புற்றாற்போல், இரும்பொறையும், அவன் தன்னை அடைத்து வைத்திருந்த சிறையினின்றும் தன் ஆற்றலால் தப்பி வெளிப்போந்து தன் அரசு கட்டில் ஏறினான் எனின், இவன் பேராற்றல் வாய்ந்தவன் என் பதில் பிழையுண்டோ ?

"மாப்பயம்பின் பொறை போற்றாது,
நீடுகுழி அகப்பட்ட
பீடுடைய எறும்முன்பின்
கோடுமுற்றிய கொல்களிறு
நிலைகலங்கக் குழிகொன்று
கிளைபுகலத் தலைக்கூடியாங்கு

நீபட்ட அருமுன்பின்
பெருந்தளர்ச்சி பலர்உவப்பப்
பிறிதுசென்று மலர்தாயத்துப்
பலர் நாப்பண் மீக்கூறலின்." (புறம்: கஎ)

யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, மற்றொருகால், இராசசூயம் வேட்டபெருநற்கிள்ளியோடு போரிட்டான்; இராசசூயம் வேட்டபெருநற்கிள்ளியும், பேரரசர் பலரை வெற்றிகொண்ட பேராற்றல் வாய்ந்தவனே எனினும் அவனைப், பெருஞ்சேரல் இரும்பொறை எளிதில் வெற்றிகொண்டிருப்பன்; ஆனால், பெருநற்கிள்ளி தன் படைத் துணையாகப் பெருவீரன் ஒருவனைப் பெற்று விட்டான்; தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளதும், திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டதுமான நாட்டை, மலையர் அல்லது மலையமான்கள் என்பார் ஆண்டு வந்தனர்; அவருள் திருமுடிக்காரி என்பவன் சிறந்தவனவன்; தேர்வண் மலையன் எனவும் அழைக்கப் பெறும் இவன் பேராற்றல் வாய்ந்தவனவன்; தனக்குரிய முள்ளூர் மலையினைக் கைப்பற்றக் கருதி வந்த ஆரியப்படையை அலறத் தாக்கி அழித்துத் துரத்திய ஆண்மையாளன்; கொல்லி மலைக்குரிய வல்வில் ஓரியை வென்ற வீரம் செறிந்தவன்; பகைவர் நாட்டுப் பசுநிரைகளைக் கவர்ந்து வருவதில் தனக்கு ஒப்பாரும், மிக்காரும் இல்லா உரனுடையவன்; பேரரசர் மூவர்க்கும் படைத்துணைபோகும் பெரும்படை வலியுடையான்; இத்தகைய யானைப்படையைத் துணையாகக் கொள்வதில், இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி முந்திக்கொண்டான்; அவன் பகைவர் பக்கம் படைத்துணையாகிவிடவே, மாந்தரஞ்சேரல் இரும்பொறையால் சோழனை வெற்றிகோடல் இயலாது போயிற்று; தோற்றுவிட்டான்; காலில் கழல் ஒலிக்கக் களம் புகுந்து கடும்போர் ஆற்றி வெற்றிகொண்ட தேர்வண்மலையன், சோழனுக்குத் துணை வாராதிருந்தால், அச் சோழனை வெற்றிகோடல் எளிதில் முடிந்திருக்கும்; வென்றோன் சோழன் அல்லன்; "தேர்வண்மலையனே" என மாந்தரஞ்

சேரல் இரும்பொறை கூறுவதைப் போன்றே, "வென்றேன் யான் அல்லன்; தேர்வண்மலையனே" என வெற்றி கொண்ட பெருநற்கிள்ளியும் கூறுகின்றான் எனின், இப் போரில், இரும்பொறை பெற்ற தோல்வி, உண்மைத் தோல்வியாகாதன்றோ!

"குன்றத் தன்ன களிறு பெயரக்
கடந்து அட்டு வென்றோனும், நிற்கூறும்மே,
'வெலிஇயோன் இவன்' எனக்;
'கழலணிப் பொலிந்த சேவடி நிலங்கவர்பு
விரைந்து வந்து சமந்தாங்கிய
வல்வேல் மலையன் அல்ல னாயின்
நல்லமர் கடத்தல் எளிதுமன் நமக்கு'எனத்
தோற்றோன் தானும் நிற்கூறும்மே,
'தொலைஇயோன் இவன்' என." (புறம் : ௧௨௫)

மாந்தரஞ்சேரல் இரும்பொறை, மாவீரர் மரபில் வந்தோனாதலின், இத் தோல்வியாலாய துயர் அவன் உளத்தை உறுத்திக்கொண்டேயிருந்தது; விரைந்து வினையாற்றியிருந்தால், அதற்கேற்ற சூழ்நிலையும் வாய்த்திருக்குமாயின், வெற்றி வேந்தனாக வாழ்ந்திருக்கலாம்; தேர்வண்மலையன் நம்பால் நின்று போர் உடற்றியிருப்பின், நமக்கேயன்றோ வெற்றி! அவன் துணை நமக்குக் கிடைக்காமற் போயிற்றே! இவ்வேளை, கபிலர் ஈண்டு இருந்திருப்பின், அவன் துணை நமக்கேயன்றோ கிடைத்திருக்கும்! கபிலர்பால் பெருமதிப்புடையான் தேர்வண்மலையன்; அவர் சொற்கு மறுசொல் கூறியிரான்; அவர் நம்பாலும் அன்புடையவராவர்; ஆதலின், அவன் துணை நமக்கே எய்துமாறு கூறியிருப்பர்; அவனும், அவர் உரையேற்று நமக்கே துணை வந்திருப்பான்; வெற்றி நமக்கே உண்டாகியிருக்கும்; ஆனால், அந்தோ! அவர் இவ்வேளை இல்லாமற் போயினரே; அவர் இருந்திருப்பின் எத்துணை நன்றாம்!" என்றெல்லாம் எண்ணி எண்ணி வருந்தினான்; என்னே அவன் உள்ளம்!

"செறுத்த செய்யுள் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்
இன்று உளனாயின் நன்றுமன்." (புறம் : ருங)

இவ்வாறு, ஆண்மையும், அறிவுடைப் பெருமக்கள் பால் கொள்ளும் பெருமதிப்பும் அவன்பால் பொருந்தி யிருப்பதால், அவன்புகழ் பெரிதாயிற்று; கடலாழமும், ஞாலத்தகலமும், திசைகளும், வானமும் அளந்து காணற்கு அரிய என்ப; அவற்றை அளந்தறிதலும் ஒரு காற்கூடும். மாந்தரஞ்சேர லிரும்பொறைபால் அமைந்து கிடக்கும் அன்பு, அருள், அறிவு ஆகிய இப்பண்புகளையும், இப்பண்புகளால் அவனுக்கு உண்டாம் புகழையும் அளந்து காணல் இயலாது, அவன்புகழ் பாடற்கும் அடங்காது விரிவதாயிற்று; விரித்து உரைக்கப் புகின், உரைக்க உரைக்க விரிந்து கொண்டே போவதாயிற்று; தொகுத்து உரைக்கப்புகின், அத்தொகுப்பினுள் அடங்குவதும் அரிதாயிற்று; இதனால், அவன்புகழ் பாடமாட்டாது வருந்தினர் புலவரெல்லாம், என்னே அவன் புகழ்!

"இருமுந்நீர்க் குட்டமும்,
வியன் ஞாலத்து அகலமும்,
வளிவழங்கு திசையும்
வறிது நிலைஇய காயமும், என்றாங்கு
அவைஅளந் தறியினும், அளத்தற் கரியை
அறிவும், ஈரமும், பெருங்கண் ணோட்டமும்."
(புறம் : உ0)

"விரிப்பின் அகலும்; தொகுப்பின் எஞ்சும்;
மம்மர் நெஞ்சத்து எம்மனோர்க்கு ஒருதலை
கைம்முற் றலநின் புகழே." (புறம் : ருங)

இவ்வாறு பெருவாழ்வு வாழ்ந்த மாந்தரஞ்சேரல் இரும்பொறைபால் மாறா அன்புகொண்டு வாழ்ந்த புலவர் பலராவர்; அவருள், குறுங்கோழியூர்கிழார், கூடலூர் கிழார், பொருந்தில் இளங்கீரனார் முதலிய மூவரும் குறிப் பிடத் தக்கவராவர்; இவருள், கூடலூர் கிழார், ஐங்குறு

நூறு தொகுக்கத் தன்னோடு துணைநின்றான் மாந்தரன் என்பதால் அவர் அனைவரினும், அவன்பால் பேரன்பு கொண்டு வாழ்ந்தார்; ஒருநாள், விண்மீண் ஒன்று, வானின் நீங்கி வீழ்வதைக் கண்டார்; கூடலூர் கிழார் வானநூல் வல்லவர்; அன்றைய வீழ்ச்சியால், நாடாளும் நல்லரசன் ஒருவன் அன்றைக்கு ஏழாம்நாள் இறந்துவிடுவன் என்பதை அறிந்தார்; மாந்தரஞ்சேரல் இரும்பொறைக்கு என்ன தீங்குநேருமோ என அஞ்சினர்; அவன் நோயின்றி வாழ விரும்பினர்; ஆனல், அந்தோ! ஏழாம்நாள் அன்று, அரசன் இறந்தே போனன்; பிரிவுத்துயர் பொறாது, புலவர்கள் புலம்பி அழுதனர்:

"ஒருமீன் விழுந்தன்றால் விசும்பினானே,
அதுகண்டு, யாமும், பிறரும் பல்வேறு இரவலர்
பறையிசை அருவி நன்னாட்டுப் பொருநன்,
நோயிலனாயின் நன்றுமன் தில்லென
அழிந்த நெஞ்சம் மடியுளம் பரப்ப
அஞ்சினம்; எழுநாள் வந்தன்று; இன்றே.
..........................................
மேலோர் உலகம் எய்தினன்." (புறம்: உ௨௯)

## உரு. வஞ்சன்

சேரவேந்தர் வழிவந்தாருள் வஞ்சனும் ஒருவன்; இவன் பெயர் அஞ்சன் எனவும் அழைக்கப் பெறும்; வஞ்சன், பாயல் நாடு ஆண்ட பேரரசனவன்; பண்டு பாயல் நாடு எனப் பெயர்பூண்டிருந்த நாடு, பின்னர் வயநாடு என்று ஆகி, இப்போது வைநாடு என வழங்குகிறது; வைநாடு தாலுக்காவில், அஞ்சுகுன்னு என்ற பெயருடையதொரு மலையுளது. பாயல் மலைப்பகுதியில், வஞ்சனுக்கு உரியதாய், அஞ்சன்குன்று எனப் பெயர்பூண்டிருந்ததே இக்காலை அஞ்சுகுன்னு எனத் திரிந்து வழங்குகிறது என்ப. இதனால், வஞ்சனுக்கு உரிய பாயல்நாடு, வடக்கே வயனடு வட்டத்திலிருந்து, தெற்கே அஞ்சனடு முடியப் பரவியிருந்தது என்பது புலனும். இனி, குடகுநாட்டுக் கல்வெட்டொன்று "அஞ்சனகிரி மாளிகை" என்ற ஒரு பெயரைக் குறிப்பிடுகிறது பாயல் நாடாகிய வயனடு, சென்ற நூற்ருண்டின் இறுதிவரை, குடகுநாட்டோடே சேர்ந்திருந்தது எனக் கூறுவர் வரலாற்றுநூல் வல்லார். இப்போதுள்ள நீலகிரி மாவட்டமும், வயனட்டோடு சேர்ந்திருந்து கி. பி. 1887இல் தான் பிரிந்தது; இதனல், இன்று நீலகிரி என வழங்கும் மலை, பண்டைய அஞ்சனமலையே எனல் பெறப்படும்; இதை ஏற்றுக்கொள்வதாயின், வஞ்சன் ஆட்சி நடந்த இடம், இன்றைய நீலகிரி மாவட்டத்தையும் உள்ளடக்கிய பகுதியாம் என்பது துணியப்படும் (ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை: புறநானூறு: பகுதி: 2: பக்கம்: 458, 461.)

வஞ்சன், கொடையும் கொற்றமும் ஒருங்கே உடையவன்; வஞ்சன், தன் மூதூர் மன்றத்தே, பரிசிலரை வரவேற்க அமைத்த, அழகிய மணநாறும் பந்தர்க்கீழ் இருந்து, வருவார் தம் வரிசையறிந்து வழங்கும் வள்ளியோனவன்; அவனுடைய மூதூர், அரிய அரண்பல அமையப் பெற்றது; அவ்வரண், அவன் பகைவர்க்குப் புலிகள் கிடந்து உறங்கும் கன்முழைஞ்சுகளே போல், பேரச்சம்

விளைவிக்கும் பேராற்றல் உடையது; பகைவர் புக அஞ்சும் அவ்வரணுள், ஆடியும், பாடியும், நகையூட்டும் நல்லியல்புடையராய பாணர் முதலாம் இரவலர் எளிதிற் புகுவர். வஞ்சன்பால் காணலாம் இப்பண்புகளைத் திருத்தாமனார் என்ற புலவர் எடுத்துக்கூறிப் பாராட்டி மகிழ்ந்துள்ளார்; அவரே, வஞ்சனுக்குரிய பாயல், பறைபோல் முழங்கும் பல அருவிகளையுடையது எனவும் கூறிப் பாராட்டியுள்ளார்:

"இரவுப் புறம்பெற்ற ஏம வைகறைப்
பரிசிலர் வரையா விரைசெய் பந்தர்
வரிசையின் நிறுத்த வாய்மொழி வஞ்சன்
நகைவர் குறுகி னல்லது, பகைவர்க்குப்
புலியினம் மடிந்த கல்லளை போலத்,
துன்னல் போகிய பெரும்பெயர் மூதூர்
........................................
பறையிசை அருவிப் பாயற் கோவே." (புறம்: ௩௯அ)

MADURAI UNIVERSITY LIBRARY
25 NOV 1969
MADURAI.

விலை ரூ. 5.00.